திருவானைக்கா புராணம்

1909

@23:38
21192.T

67677

# திருவானைக்காப் . .

# புராணம்

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்
ஸ்ரீரங்கம்

526
1909/III

N09

67677

15 SEP
MADRAS.

# PREFACE.

THIS is a classic Tamil Purana held in great esteem by all Tamil scholars. The author is an eminent scholar who lived in the latter half of the eighteenth century and a perusal of his life-sketch which appears in this volume will show the great esteem in which he was held by his contemporaries. He was a voluminous author and has written several poems, especialy Puranams. This Purana speaks of the greatness of Tiruvanaikoil, otherwise known as Jambukesvaram, one of the greatest of Siva temples in Southern India. The diety in this temple is known as the *Aplinga* or the *linga* of water, on account of the tradition that the goddess there formed the *lingam* out of water. Even now we find water ever surrounding the diety. The origin of the temple, its greatness and its legends are all described in full in this Purana and the prose summary given in the begining would supply a deal of interesting information. This temple was in a much neglected state and Mr. S. R. M. C. T. Ramaswamy Chettiar, a prominent Nattukkottai Chettiar, exerted his best to resuscitate it. The estimated cost of rebuilding the temple was about twenty lakhs of Rupees but Mr. Ramaswamy Chettiar and his father worked hard without in any way being discouraged. The Chetty community responded with their usual generosity in the matter of building temples, but still the brunt of the burden lay on the shoulders of the father and son who nobly and cheerfully undertook it. The old dilapidated buildings were completety demolished and in their place rose a most lovely edifice with sufficient light and air. The dieties were left undisturbed and the

Sanctum Sanctorum was built as of old. The Kumbhabhishekam was celebrated in a very grand style at a cost of over a lakh of Rupees and His Holiness Sri Sankaracharya of Sringeri graced the occasion by his presence. His Holiness Sri Sankaracharya of Kumbakonam also was there. The presence of such holy personages added a halo of sanctity to the occasion. Mr. Ramaswamy Chettiar, as a member of his community built the grand temple; as a very pious person himself invited these holy personages for the Kumbhabhishekam and had it celebrated in the most religious style; and as a lover of literature himself suggested the printing and publication of this Purana. The pictures that appear in this volume were all taken after the Kumbhabhishekam and hence represent the new buildings. In conclusion I am specially indebted to Pandit M. V. Ramanujachariar of Kumbhakonam for his excellent summary of the work in prose given herein.

T. K. Balasubrahmanyam

3

## விஷயஸூசிகை.


| | | | |
|---|---|---|---|
| கச்சியப்பமுனிவர் சரித்திரம் | ... | ... | I |
| திருவானைக்காமான்மியம் | ... | ... | i |
| திருவானைக்காப்புராணம்: | | | |
| கடவுள்வாழ்த்து | ... | ... | 1 |
| அவையடக்கம் | ... | ... | 4 |
| திருநாட்டுச்சிறப்பு | ... | ... | 5 |
| திருநகரச்சிறப்பு | ... | ... | 20 |
| நைமிசப்படலம் | ... | ... | 35 |
| புராணவரலாற்றுப்படலம் | ... | ... | 39 |
| ஸ்தலவிசேஷப்படலம் | ... | ... | 45 |
| தீர்த்தவிசேஷப்படலம் | ... | ... | 51 |
| ஸ்நானவிதிப்படலம் | ... | ... | 59 |
| மூர்த்திவிசேஷப்படலம் | ... | ... | 65 |
| சம்புமுனிதவம்புரிபடலம் | ... | ... | 69 |
| அகிலாண்டநாயகியாராதனைப்படலம் | | ... | 76 |
| வரங்கொள்படலம் | ... | ... | 89 |
| ஞானோபதேசப்படலம் | ... | ... | 92 |
| திருவிழாப்படலம் | ... | ... | 97 |
| நீலவிண்டுவீச்சரப்படலம் | ... | ... | 102 |
| பராசரன்வழிபடுபடலம் | ... | ... | 109 |
| திருமால்வழிபடுபடலம் | ... | ... | 115 |
| ஹாரஞ்சாத்துபடலம் | ... | ... | 120 |
| கஜாரண்யப்படலம் | ... | ... | 127 |
| கோச்செங்கணார்வழிபடுபடலம் | ... | ... | 135 |
| கௌதமப்படலம் | ... | ... | 167 |
| குபேரன்வழிபடுபடலம் | ... | ... | 180 |
| திருநீற்றுத்திருமதிற்படலம் | ... | ... | 183 |
| அமுதலிங்கேசருண்முறைசெய்தபடலம் | | ... | 186 |
| செய்யுள் அகராதி | ... | ... | 189 |

# கச்சியப்ப முனிவர் சரித்திரம்.

15 SEP 1909

இந்நூலாசிரியர் பெயர் கச்சியப்ப முனிவர். சான்றோருடைத்தாய தொண்டைமண்டலத்திலே சிவபெருமான்றன் மூர்த்தி விசேடத்தால் மேன்மையெய்திய தணிகைத் திருப்பதியிலே காஞ்சிபுரத்துப்பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே அபிஷிக்தர்மரபிலேதோன்றி இம்மஹான்நம்தமிழ் மொழிக்குச் சிறப்பினைத் தந்தனர். சிறுவயதிற்றானே கல்வி நலந்தெரிந்து பின்னர் உலக நடவடிக்கையும் இயற்கையந்தேவியின் சீருமுணர்ந்த பின்னரே உண்மையான கல்வியுடையவராவோம் என்ற எண்ணத்தினால் பல ஸ்தலங்களையுங் கண்டு தமிழ்மகள் தங்கி வசிக்கும் ஸ்ரீ கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தை யடைந்து அங்கே ஞானபானுவாய்ச் சிறப்புற்றோங்கிய ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளைத் தரிசித்து அவர் தம் அருளையடைந்ததனோடும், அப்பொழுது சின்னப்பட்டத்தி லெழுந்தருளியிருந்தபின் வேலப்பதேசிகரை யடுத்தனர் நம் ஆசிரியர். இவரிடத்திற்றானே 'சைவஸந்யாஸமும் சிவதீக்ஷையும் பெற்றனர்.

தீக்ஷா குரவரின் ஆஞ்ஞையைச் சிரசாவகித்து முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்றுப்பின்னர்ச் சிவஞானசுவாமிகள் என்ற பெயர்விளக்கங்கொண்ட சித்தாந்தசைவ [illegible] திராவிட மஹாபாஷிய கர்த்தராய் எழுந்தருளியிராநின்றவரிடம் தமிழ்க்கலைபயின்ற மஹானுபாவர் இவர். உரையாசிரியருள் தலைநின்ற நச்சினார்க்கினியர், பரிமேலழகராதியரோடு ஒருங்கு எண்ணத்தக்க பெருமைவாய்ந்த சிவஞான முனிவரிடம் தமிழ் பயின்றவர் என்றதனானே நம் ஆசிரியரின் கல்வித் திறமையை விளம்புதலும் வேண்டுமோ?

மேலும் இவருடன் கல்விபயின்ற இலக்கணம் சிதம்பரநாத முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய தேசிகர், இராமநாதபுரம் சோமசுந்தரக்கவிராயர் ஆகியவருடைய பெயரைக்கேட்டவுடனே இவரது கல்வியறிவு எத்துணைத்து என்று வியப்புறவேண்டியதே. நம் ஆசிரியர் உடன் பயின்ற மாணாக்கருள் மணியென விளங்கினமையினன்றே ஆராய்ச்சியுணர்வுடைய ஆசிரியர் சிவஞானமுனிவர் தாமியற்றிய காஞ்சிபுராணக் கடவுள் வாழ்த்தினைப் பற்றி நடந்த விவாதத்தையடக்க வாண்டு அனுப்பினர். ஆசிரியரும் தம் சொல்வன்மையினாலும் புத்திக் கூர்மையினாலும் வாழ்த்துப்பாடல்களின் நிலைப்பற்றிச் சித்தாந்தஞ் செய்தருளினார்.

— "நா நலமென்னு நலனுடைமை யந்நலம்
யா நலத்துள்ளதூ மன்று" என்றும்

"உய்த்துணர்ந்துஞ்—சொல், வன்மையின்றெனி னென்னுமலைதுடைத்தேற்,பொன்மலர்நாற்றமுடைத்து" என்றுஞ் சிறப்பித்தோதிய பாக்களுக்கு இவர் ஒருமேன்மையான இலக்கியமாகத் திகழ்ந்தனர். இவரது வாக்குவல்லபத்தையும் பிரசங்க சாதுரியத்தையும் புகழாதார் எவருமிலர். இவர் செய்த நூல்களை யாராயுநர் செய்யுளியற்றுவதிற் கைதேர்ந்தவர் என்றும் விரைவிற்பாடுஞ் சக்தியுடையவரென்றுமுணர்வார். காலம் இடங்கட்குத் தக்கபடி நவீனமான யுக்திகள் தாமாகவே இவரது செய்யுள்களிலமைந்து கிடக்கும். இவர் முதற்கணியற்றிய திருவானைக்காப் புராணம் தமிழிலக்கியங்களுட்டலைநின்ற சிலவற்றுளொன்றெனற்கு யாம் பின்னிடைய வேண்டியதில்லை.

தற்காலத்திற் றன்னயமே பாராட்டிப் பிறர்க்குச் சிறிதும் பயன்படாமலிருக்கும் சிலவித்துவான்களைப்போலாது நம்தமிழ்மொழியை விளக்கஞ்செய்த விசாகப் பெருமாளையர் சரவணப் பெருமாளையர் ஆகிய இருவர்க்கும் பிதாவாகிய கந்தப்பையர்க்கு ஆசிரியராவர் நம் முனிவர். [illegible]ாமணி, சிலப்பதிகாரம் முதலிய புறச்சமயிகளா லியற்றப்பட்ட காவியங்களையே போதிக்கவேண்டிவருகிறதேயென்று வருந்திப் பஞ்சகாவியங்களினைப் போன்ற சிறப்புவாய்ந்த திருத்தணிகைப்புராணத்தைத் தம் மாணாக்கர்வேண்டுகோளிற் கிணங்கி இயற்றித் தந்தனர். இத்தணிகைப் புராணம் சிந்தாமணிக்கு ஒத்த பெருமை வாய்ந்ததெனப் பின் வரும் பாடலாற்றெளியலாகும்.





"கருவினின் மழவிற் கற்குங் காலையிற் பருவ மாதிற்
பெருகிய பொழுதி னோயிற் பிரிவினிற் பகையி னீட்டம்
பொருள் வயின் வேட்ட தெய்தாப் புன்மையின் முதுமைதன்னின்
மருவிய திழப்பிற் சாவின் வன்றுயர் மனிதர்க்குண்டோ."

என்றுந் தொடக்கத்த மூன்று நான்கு பாடல்களில் சிந்தாமணி முத்தியிலம்பகம்,

"பொன்னும் வெள்ளியும் புணர்ந்தென வயிற்றகம் பொருந்தி
மின்னு மொக்குளு மென நனி வீயினும் வீயும்
பின்னை வெண்ணெயிற் றிரண்டபின் பிழைக்கவும் பெறுமே"

என்றற் றொடக்கத்திய ஏழு பாடல்களின் சாதுரிய மமைந்திருக்கின்றமை வியப்புறத்தக்கதே. மற்றும் சீவகசிந்தாமணியின் சந்தமும் வனப்பும் அமைத்துத் தணிகைப்புராணத்தை யியற்றினார். நம் ஆசிரியர் தன் மாணாக்கரிடம் மிகவும் அன்புடையவர் என்பதைத்தெரிந்துகொள்ளும் வண்ணம் கந்தப்பையர் குன்மநோயிற் றுன்பப்பட்டபொழுது தணிகையாற்றுப் படையைப்பாடி அவர்நோயை நீக்கினார். பாடலினால் நோயொழிதல் என்பது சிறந்த மேலையோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய தென்பதை ஆய்ந்துணர்ந்து அறியலாம்.

நம் ஆசிரியர் சென்னையைச் சார்ந்தபொழுது விநாயகபுராணம் பாடினார். அதனையரங்கேற்றுகையில் ஐயாப்பிள்ளை என்ற ஒரு மஹான் தாம் பாடிய புராணத்தை இதென்ன இராமாயணமாவென் றிகழ்ந்து பேசியதற்காகக் கம்பராமாயணத்தின் முதலாறு செய்யுளில் நூறு குற்றம் ஏற்றினார். இதைக் கண்ட பிரபுவுந் தலைகுனிந்து நம் புலவர் பெருமானுக்கு பரிசிலுமளித்துச் சென்றனர். இவர் தம் கல்வியாற்றலே யாற்றல்.


நம் புலவரது காலம், இவர் ஆசிரியர் சிவஞான சுவாமிகள்காலம் என்பதிற் சந்தேகமில்லை. சிவஞான சுவாமிகள் கி.பி. 1783-ஆம் ஆண்டு விசுவாவசு வருடத்தில் தேகவியோகமாயினர். ஆகவே நம் ஆசிரியர் இருந்தகாலம் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பதிலோர் ஐயப்பாடுமில்லை. சாலிவாகன சகாப்தம் 1712க்குச் சரியான சாதாரண வருஷம் சித்திரைமாசத்தில் கச்சியப்பமுனிவர் பரிபூரணதசையை யடைந்ததாகவுந் தெரியவருகிறது.

நம்புலவர்பெருமான் இயற்றிய நூல்களாவன:—

1. திருவானைக்காப்புராணம்.
2. பூவாளூர்ப்புராணம்.
3. பேரூர்ப்புராணம்.
4. திருத்தணிகைப்புராணம்.
5. தணிகையாற்றுப்படை.
6. திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி.
7. விநாயகபுராணம்.
8. காஞ்சிபுராணம் (இரண்டாங்காண்டம்).
9. கச்சி யானந்தருத்திரேசர் வண்டுவிடு தூது.
10. கச்சி யானந்தருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதி.
11. பஞ்சாக்கரவந்தாதி.
12. சென்னைவிநாயகர்பிள்ளைத் தமிழ்.

இவர் செய்த பாடல்களின் நாமங்கள் பின்வரும் பாட்டானும் விளங்கும்.

"வேற்கரச் செவ்வேண் மருவுந்தணிகை மான்மியந் தமிழில் விளங்கச்செய்தான்
பாற்கவ புராண மெழிற் றிருவானைக்கா வேறுஞ் சீர்பதிப் புராணம்
நாற்கயிலை சூழ் பேரூர்ப் புராணமொடு திருக்காஞ்சி நகர்ப்புராணம்
ஏற்க வடமொழி பெயர்த்த கச்சியப்ப முனிவனிருங்கவிஞரேறே."



ஸ்ரீ அகிலாண்டேச்வரிகோவில் விமானம்.

15 SEP 1909
MADRAS

உ

பரமபதிதுணை.

# திருவாணைக்கா மான்மியம்.

நைமிசப்படலம்.

திருவிளங்கிய உலகத்திலுள்ளவர்க்கெல்லாம் இன்றியமையாத மேகங்களைத் தருதற்குக் காரணமாகிய யாகமே வடிவமாக விளங்குவது நைமிசாரணியமென்னும் புண்ணிய க்ஷேத்திரம். அங்கேயுள்ள மகரிஷிகள் சரீரமுழுதும் வெண்மையான விபூதியணிந்து விளங்குகின்ற தோற்றமானது, அவர்கள் வேள்வியின்கண் தேவர்களுக்கு அவிர்ப்பாகத்தைக் கொடுத்தலாலுண்டாகிற பெரும்புகழானது தம்மையும் சூழ்ந்துகொண்டு பிரகாசிக்கிற அழகை விளக்குகின்றது. அவர்கள், ஆத்திமாலையணிந்த பரசிவனுடைய கண்மணியையே அணியாகத் தரித்துக்கொண்டிருந்ததானது, அவர்களுக்கு உலகத்தில் வேறு பற்றில்லாதிருந்ததை விளக்கியது. அவ்விடத்தில் சிங்கம், யானை, மான், புலி முதலிய விலங்கினங்கள் தம் பகை நீங்கி இடங்கடோறும் தங்கியிருப்பது, எம்பிரானுடைய திருவடி நீழலைத் தாங்களும் அடையவேண்டி ஐம்பொறிகளையடக்கித் தவஞ்செய்வனபோல் விளங்கியது. பரமசிவனுக்கு அர்ச்சனை செய்து நீக்கப்பட்ட நிர்மாலியங்கள் வெயிலின்கண் வாடிக்கிடந்ததானது, மன்மதனால் விடுக்கப்பெற்ற ஐங்கணைகள் அவ்விடத்து வசிக்கும் மாதவரிடத்தில் அணுகுதற்கஞ்சித் துன்பத்தோடு வருந்துஞ் செயலை ஒத்தது. சில தவசிகள் மான்குட்டிகளைத் தம் கையினால்

கடவிப் பசும்புல்கொடுத்து ஆதரிக்கும் தன்மையானது, மானேந்திய பரமசிவனுடைய சாரூப்பியத்தைத் தாங்களடையும்போது, தம் கையிலே ஏந்தப்படுமென்று எண்ணி அன்புபாராட்டி வளர்த்ததை ஒத்தது. சொல்லியதைச் சொல்லியபடியே சொல்லும் கிளிப் பிள்ளைகள்போலப் பிராமணச்சிறுவர் ஆசிரியர் சொல்லியதைச் சொல்லியபடியே வேதாத்தியயனம் செய்கின்ற சப்தமானது ஒரு பக்கம் நிரம்பியிருந்தது. அந்தணர்கள் வேத மந்திரங்களைச் சொல்லிச் சிறந்த வேள்விகளை வளர்த்தல் ஓர் சார் நிகழும். சிவபூசையை விதிப்படியாற்றி, அக்கினிகாரியங்களைச் செய்து, மிக்க அன்போடு செய்யப்படும் அதிதிபூசை மற்றோர்பால் நிகழும். இவ்வ தன்மையை யுடையதான நைமிசாரணியத்தின்கண் பரமசிவனுடைய திருவடிகளைத்தொழும் அன்புடையவரும் பதினெண்புராணங்களையும் ஐயந்திரிபில்லாமல் உணர்ந்தவருமான சூதமாமுனிவர் எழுந்தருளினார். அவர் அவ்வனத்தின் வனப்பைக்கண்டு மனத்தின்கண் வியப்படைந்தனர். அங்கு வசித்த தபோதனரெல்லாம் அவர் வருகையையறிந்து எதிர்சென்று, "தேவரீர் இங்கு எழுந்தருளப்பெற்றமையால் நாங்கள் உய்ந்தோம், உய்ந்தோம்," என்று கூறி, மிக்க செல்வத்தைக்கண்ட தரித்திரரைப்போல ஆவலோடு செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து, ஆசனம் அளித்து அதன்கண் இருக்கச்செய்து, குற்றமில்லாத நட்போடு பொருந்திய சில வார்த்தைகள் சொல்வாராயினர். "முனிசிரேஷ்டரே! கற்பகவிருக்ஷமும், காமதேனுவும், சிந்தாமணியும், சங்கநிதி, பதுமநிதிகளுமாகிய ஐந்தும் வறியவரிடத்தில் தாமே எளிதில் வந்தாற்போலத் தேவரீர் அன்போடு இங்கு எழுந்தருளினமையின் கடவுளது அருளானது அடியேங்களிடத்திற் சார்வதற்குச் சந்தேகமில்லை, பாவங்களையெல்லாம் போக்கும் பதினெண்புராணங்களையும் குற்றமறத் தெளிந்த தேவரீருக்கு அடைவதற்கு அருமையானது யாது? தேவரீரிடத்து ஒன்று கேட்கவேண்டுமென்ற ஆசையையுடையோம். எங்களுடைய வாஞ்சை முற்றும்படி தேவரீர் அருளோடு விடையளித்தல்வேண்டும். எங்களுடைய விருப்பத்தைச் சொல்லுகிறோம், கேட்டருள்வீராக. இப்பூலோகத்தில் தீர்த்தங்களுள் புண்ணியமான தீர்த்தமும், மூர்த்திகளுள் உத்தமமாகியமூர்த்தியும், க்ஷேத்திரங்களுள் சிறந்ததாகிய க்ஷேத்திரமும், எவ்விடத்திலேனும் ஒருங்கு சேர்ந்திருக்குமாயின் அதை உரைத்தருளவேண்டும்," என்று சொல்லி வணங்கினர். தவவலிமை மிக்க சௌனகாதி முனிவர்கள், இங்ஙனம் கேட்டலும், சூதமாமுனிவர், சிவபெருமா



னுடைய திருவடிகளைத் தியானித்துச் சித்தசுத்தி யடைந்து உலகமுய்யும்படி சொல்லத்தொடங்கினர். "தேவர்களும்விரும்பும்படியான தவத்திற்சிறந்த முனிசிரேஷ்டர்களே! நீங்கள் என்னை வினவியதாகிய தலம் தீர்த்தம், மூர்த்தி மூன்றிலும் சிறந்ததாகிய திவ்யக்ஷேத்திரம், திருவானைக்காவென்று சொல்லப்படுவது. பூலோகத்தில் அதினிலும் சிறந்த தலம் வேறொன்றில்லை. இதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோலச் சந்தேகமில்லாமல் நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் அருந்தவப்பேறு வாய்ந்த அந்தணர்களாகையாலே, திருவானைக்காவினது மேன்மையை உங்களுக்குச் சொல்லுகிறேன். இது பரமசிவன் உமாதேவியாருக்கும் நந்தியெம்பெருமானுக்கும் திருவாய்மலர்ந்தருளியதாகும்" என்று கூற, அதைக்கேட்ட அறிவிற்சிறந்த முனிவர்கள், அச்சூதமாமுனிவருடைய திருவடிகளில்மீட்டும் நமஸ்கரித்து, "பரமசிவன் பார்வதிதேவியாருக்கும் திருநந்திதேவருக்கும் திருவாய்மலர்ந்தருளியபடி, தேவரீர் அடியேங்களுக்கு அருளிச் செய்யவேண்டு" மென்று பிரார்த்தித்தார்கள். சூதமாமுனிவர் இத்தன்மையையுடையதான புண்ணிய தலத்தின் மான்மியத்தைச் சொல்லத்தொடங்கினர்.

"அஞ்ஞானத்தைப்போக்கும் இவ்விஷயமானது, பாத்மபுராணத்தின் மத்தியிற் சொல்லப்பட்டிருக்கிறது. நான் இதனை வரன்முறையாக உமக்குச் சொல்வேன் நீங்கள் மனம்பொருந்திக் கேட்பீராக" வென்று சூதபுராணிகர் பக்தியோடு தமது குருவினுடைய திருவடிகளைத் தியானித்துச் சொல்லத்தொடங்கினர்.

புராணவரலாறு.

உலகம் யாவையும் ஒடுங்கும் அவ்வூழிக்காலத்தும் தனக்கோரழிவின்றி நிலைபெற்று விளங்குவதான கைலையங்கிரியானது, தன்னை வணங்கினவர்களுக்கு இந்திரன் முதலிய தேவர்கள் பதங்களையும் திருமால் பிரமனாதியோர் பதங்களையும், மற்றை யெல்லா வளங்களையும் அளிப்பது. அந்த வெள்ளியங்கிரியினது மகிமையைச் சொல்லுவது எளிதன்று. இப்படிப்பட்டதான கைலாசகிரியின்கண் இரத்தின மயமான ஆயிரம் கால்களையுடைய அழகிய மண்டபம் ஒன்றுண்டு. அதன்முன் சூரியன், தன்முன் மின்மினியை ஒப்பான். அம்மண்டபத்தின்கண் பைம்பொன்மாலரியணையொன்று விளங்கியது. அதன்மீது கண்ணுதற்பெருமான் உமாதேவியாரோடு திருவோலக்கமாக எழுந்தருளியிருந்தனர். இருமருங்கிலும் வெண்சாமரங்கள் சுழற்றப்பட்டன. சாந்தாற்றிகள்

குளிர்மென்காற்றை எழுப்பின. வெண்சங்கங்கள் முழங்கின. முழுமதிபோன்ற வெண்கொற்றக்குடைகள் உயர்த்தப்பெற்றன. பண்ணிசைப்போர் பல இனிய கீதங்களைப்பாடினர். கின்னரர்களும் நாரதாதியரும் வீணையிற் பண்களை வாசித்தனர். மெல்லிய இடையினையுடைய பெண்கள் சதிமுறை பிறழாது நடித்தனர். வானவர் பூமழை பெய்தனர். அடியவர் மொழிந்த தோத்திரங்கள் முழங்கின. திருமால், பிரமன், இந்திரன், விண்ணோர் முனிவராகிய யாவரும் தோத்திரங்களைச் செய்து, தாங்கள் வேண்டியவரங்களை வேண்டியபடியே பெற்று மீண்டனர். இப்படி யாவருக்கும் அனுக்கிரகஞ்செய்து எழுந்தருளியிருக்கிற காலத்து, ஒரு நாள், சிவபெருமான் விநாயகமூர்த்தியோடும் குமாரக்கடவுளோடும் விளையாடிக்கொண்டு சந்தோஷமாக எழுந்தருளியிருந்தனர். அப்பொழுது நந்தியெம்பெருமான் இறைவனது சரணகமலங்களில் பணிந்தெழுந்து கைகுவித்து நின்று,

"பண்ணவர்க் கரியாய் போற்றி பக்தருக் கெளியாய் போற்றி
தண்ணிய மதியும் பாம்புந் தரித்தரு டலைவா போற்றி
கண்ணிய வடியா ருள்ளக் கருத்தினை முடிப்பாய் போற்றி
புண்ணிய முதலே போற்றி பூரணப் பொருளே போற்றி."

என்று நாவாரத் துதித்து, "வேண்டியவர் வேண்டியபடியே யாவையும் அடையும்படி அருள் சுரந்தளிக்கும் முக்கட்பெருமானே? என்னைக் குழந்தையைப்போலக் காத்தருளும் புண்ணிய மூர்த்தி? தேவரீரிடத்து ஒன்றுகேட்க விரும்பினேன். அது யாதெனில், தேவரீர் உமாதேவியாரோடு மிக மகிழ்ந்து உறையுந்தலங்களுள் மேலான தலமும், மேம்பட்டு விளங்கும் தீர்த்தமும், மேலான மூர்த்தியும் ஒருங்குவாய்ந்த சிறந்த தலம் பூவுலகின்கண் எங்கேயுள்ளது; அதைக் கேட்க விரும்பினேன்; திருவாய் மலர்ந்தருளவேண்டும்; இறைவனே! அதுவும், இன்றுகாறும் ஒருவருக்கும் சொல்லப்படாததாகிய பரம இரகசியமுள்ளதாகவும் இருத்தல்வேண்டும்" என்று இரந்து பல நயமொழிகள் கூறி மீட்டு மலரடியில் வணங்கினார். இங்ஙனம் நிகழுங்காலத்தில் அகில லோகங்களையும் ஈன்றளித்த தாயாகிய பார்வதிதேவியும், மேகலாபரணங்கள் சத்திக்கவும், பாதங்களில் அணிந்த சிலம்புகள் ஒலிக்கவும், மென்மலர்ப் பூமாலைகளையணிந்த கூந்தலிலுள்ள சுரும்புகள் ஆரவாரிக்கவும், விரைவிலெழுந்து, நாயகர் அடியிற்றாழ்ந்து, புன்முறுவலோடு இனிமையாகச் சில வசனங்களைக் கூறுவாளாயினள். "உலகிலுள்ள பொருள்களெல்லாம் தன் வயப்



படுதலன்றித்தான் ஒரு பொருளினும் வயப்படுதலில்லையென்பதை யாவரும் தெளியும்படி அழல்கின்ற விடத்தைக் கையிலேந்தி யுண்டு கறைக்கண்டனான பரமனே! பூரணனே! புராண! போற்றி, போற்றி; எம்பெருமானே! உலகமுய்யும்படி நந்தீசர் வினாவிய பொருளை அடியேனும் அறிந்துகொள்ள மிக விரும்பினேன்; இதுவுமன்றி, அடியேனுள்ளத்தில் ஓர் ஐயம் நிகழ்கின்றது. அதைக்கேட்டருளும்; பரந்த உலகங்களையெல்லாம் படைத்தளித்து அழிப்பவரும் தேவரீரே; தேவர்கள் முனிவர்கள் முதலிய யாவரும் யாகாதிகளைச் செய்து வழிபட்டு வரங்களைத் தந்தருளவேண்டுமென்று யாசிக்கும் பெருமையுடையீரும் தேவரீரே; பஞ்சபூதங்களும் அவற்றின் குணங்களுமாகியும், விரும்பினோர் விரும்பிய பலனாகியும், ஆருயிராகியும், உயிர்க்குயிராகியும் விளங்கும் இறைவனும் தேவரீரே" யென்று பலமுறைகளும் முறையிட்டுப் புகழும் விமலனே! உமக்கு வேறு தலைவனுமில்லை; நீர் விரும்பி யடையும் பயனுமில்லை; இங்ஙனமாக, தேவரீர் யோகத்தைச்செய்யுமஃது என்ன வியப்பு; இந்த இரண்டு விஷயங்களையும் தேவரீர் எங்களுக்கு நிச்சயமாகத் திருவாய் மலர்ந்தருளல்வேண்டு" மென்று பிரார்த்தித்தாள். இங்ஙனம் யாசித்த உமாதேவியாரையும் திருநந்திதேவரையும் நோக்கிப் பெருங்கருணைத் திறத்தினால் புன்னகைசெய்து, நீங்கள் விரும்பிக்கேட்ட குற்றமற்ற விஷயங்களைச் சொல்லுவோம்; நீங்கள் சாவதானத்துடன் கேளுங்கள்" என்று சொல்லத் தொடங்கினார்.

"பரம இரகசியமான தலமும் தீர்த்தமும் இம்மை மறுமை வீடுகளைத்தந்தருளும் மூர்த்தியுமாகிய மூன்றும் சிறந்ததான ஒரு க்ஷேத்திரம் அளவிடக்கூடாத வளங்களையுடைய சோழநாட்டில் காவிரியின் கரையிலுள்ளது. அத்தலம், அழகாகவும் மிகமேலானதாகவும் விளங்கும். அத்தலத்திற்கு ஞான க்ஷேத்திரமென்று ஒரு பெயருண்டு. இதனை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். மெல்லிய இடையினையுடையவளே! நீ அத்தலத்தை யடைந்து அருந்தவத்தைச் செய்வாய். யாம் அவ்விடத்து வந்து பல அரிய விஷயங்களைச் சொல்லுவோம்" என்றனர். பரமசிவன் இங்ஙனங்கூற, அதைக்கேட்ட அவ்விருவர்களும், எம்பெருமானே! யாங்கள் எளிதினுய்ந்தோம்; இனி அவற்றின் பெருமைகளையும் அடியேங்கட்கு அருள் செய்யவேண்டு" மென்று நயந்து பிரார்த்திக்க, தேவர்களுக்குமரிய சிவபெருமான் சந்தோஷத்துடன் உரைக்கத் தொடங்கினர்.

தேவ தேவனாகிய சிவபிரான், உமாதேவியாரும் திருநந்தி தேவரும் கேட்கும்படி தலவிசேஷத்தை அமுத தாரைபோல அருள்செய்வாராயினர். "பரிமளங்கமழுங் கூந்தலினையுடைய மடந்தையே! ஓ! நந்தி! சொல்லுவோம், கேளும்; எக்காலத்தும் எவரும் பணியும்படி நாம் இனிது எழுந்தருளியிருந்து சிவஞானத்தைப் பிரகாசிப்பித்தலால் ஞானதலம் எனப்படும் ஓர் தலம் பூலோகத்தின்கண் உள்ளது; கிண் கிணி சத்திக்கும் பாதத்தையுடைய பெண்ணே, திருமாலும், நான்முகனும், திக்குப்பாலகர்களும், நவக்கிரஹங்களும், நக்ஷத்திரங்களும், ஸப்தமருத்துக்களும், அஷ்டவசுக்களும், ஏகாதசருத்திரரும், துவாதசாதித்தியரும், தபோதனர்களும், ஏனையோரும் ஐம்பொறியடக்கி, மனத்தை ஒருவழிப்படுத்தி, அங்கே வசித்தனர்? யாம், அருள்கூர்ந்து அவர்களுக்குப் பிரசன்னமாகி நல்ல பதவிகளையும், திரிகாலஞானத்தையும், சிவஞானத்தையும் அளித்தனம். அவர்கள் அவற்றைப்பெற்று, அங்கே இக்காலத்தும் வசிக்கின்றனர். அவர்கள் இருந்து அருந்தவம் புரிந்து பேறுபெற்ற பலதீர்த்தங்கள் அங்கே உள்ளன. அவற்றில் விதிப்படி ஸ்நாநம் செய்பவர்கள், இங்கே சொல்லிய பலன்களையெல்லாம் அடையக்கடவரென்று வரங்களும் அளித்தனம். கங்கையானவள் அந்த க்ஷேத்திரத்தில் தவம்செய்து திங்களும், கொன்றைமாலையும், அரவுந்தரித்த நமது சடாமகுடத்தில் தங்கப்பெற்றனள். மாதவர்கள் வணங்கும் அந்த க்ஷேத்திரத்தில் காவிரியானவள் கடுந்தவஞ்செய்து கங்கையினும் மிக்க புண்ணியத்தைத் தரும்பேற்றையடைந்தனள். மலர்மாலை யணிந்த பெண்ணே! இன்னும் கேட்பாயாக; மேருமலையின் கண்ணுள்ள மானஸமடுவானது புகழ்மிக்க ஞானதலத்திலிருந்து தவமாற்றி அன்னப்பறவைகளும் பொன்மயமான தாமரைமலர்களும் தன்னிடத்துத் தங்கும் பேற்றை அடைந்தது. அதன் நீர்ப்பெருக்கே சரயுமாநதியாகப் பெருகி ஓடுகின்றது. அது சார்ந்தோர்க்கு வறுமைப்பிணியைப் போக்கி நற்கதியைக்கொடுக்கும். அகஸ்தியமுனிவர் வசிக்கின்ற பொதியமலையினின்றும் பெருகி அளவுபடாத வரங்களை எவர்க்கும் அளிக்கும் தாமிரபரணியானது இந்த க்ஷேத்திரத்தில் தவஞ்செய்தே தன்னிடத்து முத்துக்குவியல்களுண்டாகும்படி வரம் எய்தியது. கோமுக மலையினின்றும் வரும் கோமதிநதியும், கோதாவரிநதியும், சந்திரபாகைநதியும், நருமதை நதியும், பூமி அந்தரிக்ஷம் சுவர்க்கம் என்று சொல்லப்பட்ட மூவுலகங்களினுமுள்ள ஏனைத்தீர்த்தங்களும், இந்த க்ஷேத்திரத்தில் தவஞ்செய்தே

தலவிசேஷம்.



தம்மிடத்து ஸ்நாநம் செய்பவர்களுடைய பாவங்களும் தம்முடைய பாவங்களும் பறந்தோடும்படியான பலவரங்களைப்பெற்று அங்கங்கே விளங்குவனவாயின. இரத்தினங்கள் நிரம்பிய ஸப்தஸாகரங்களும் அந்தப்புண்ணிய க்ஷேத்திரத்தின்கண் தடாகவடிவமாய் அங்கங்கே மேன்மையுற்று விளங்குகின்றன. அங்குள்ள பலதீர்த்தங்களுள்ளும் சந்திரன் முதலியோர் பெயரால் வழங்கும் சிலதீர்த்தங்கள் விசேஷமுடையனவாம். அஃது அப்புக்ஷேத்திரமாதலின் (அப்பு=ஜலம்) அப்புவின் மயமான எப்படிப்பட்ட தீர்த்தங்களும் அந்த க்ஷேத்திரத்தில் இனிது தங்கும். வாள்போலும் கண்ணையுடைய பெண்ணே, சிறந்த தலத்தின் மகிமையை இன்னும் சொல்லுவேன், கேள். முற்பிறப்பிற்செய்த புண்ணிய விசேஷத்தால் அங்கே பிறந்தவர்க்கும் வசித்தவர்க்கும் இறந்தவர்க்கும் எல்லா நோய்களும் நீங்கிவிடும். அவர்களுக்கு மறுபிறவி உண்டாவதில்லை. இது சத்தியம். பாவங்களும், அவற்றைச் செய்பவர்களும், ஆசைமிக்குடைய வீணரும் அத்தலத்தைச் சாரார். அந்த க்ஷேத்திரமானது, விதிப்படி தவஞ்செய்யும் முனிவர்க்கும், யோகியர்க்கும் வசிக்குமிடமாக விளங்குகின்றது. மெய்ம்முழுதும் வெண்ணீறு அணிந்து பரிசுத்தமான ருத்திராக்ஷமாலை தரித்து, பஞ்சாக்ஷரத்தை ஜபித்துப் பூசை செய்பவர்க்கு அவ்வளம்பதியானது சிறந்த தானமாகும். மணங்கமழும் மாலையணிந்த நங்காய்! உயர்ந்த மேருமலையும், கைலயங்கிரியும், மந்தரமலையும், ஸ்ரீகாசியும், கேதார க்ஷேத்திரமும், எல்லாப்பயன்களையும் அளிக்கவல்ல ஞானக்ஷேத்திரத்தினும் சிறந்தனவென்று சொல்லப்படா. அத்தலத்திற்பேசப்படும் வார்த்தைகளெல்லாம் வேத மந்திரங்களேயாம்; எண்ணும் எண்ணங்கள் யாவும் சிறந்த நிஷ்டையேயாம்; அவ்விடத்து நிற்றல், நடத்தல் முதலிய யாவும் யோகத்தின் அங்கங்களேயாம்; அத்தலத்தின்கண் உண்ணலும் உண்பித்தலும் விரும்பிக்கொடுத்தலும் விரைந்தேற்றலும் ஆகிய எல்லாத்தொழில்களும் சிவதருமங்களேயாம். ஞானதலத்திற் பிறந்து புல்லரிசிக்கூழை உண்பவன், வேறு தலங்களில் அறுசுவையினையுமுடைய நால்வகையாய உணவுகளைப் பெரியோர்களுக்கு உண்பித்தலால் உண்டாகும் பயனினும் எண்மடங்கு அதிகமான பயனைப்பெறுவனென்றால், அத்தலத்துப் பிறருக்கு உணவளித்தலால் உண்டாகும் பெரும்பயன் சொல்லும்பான்மையதோ? இந்திரனாகவும், குபேரனாகவும், உலகமெல்லாம் புரக்கும் அரசனாகவும் சிறப்புற்றிருப்பதினும், ஞானதலத்து வசித்து யோகிகளுடைய மனைகளில் பிச்சை புகுந்து உயிர்வாழ்தல் மேலானதாகும்.

கற்பகநாட்டின்கண் அமுதத்தையுண்டு அரம்பையருடைய இன்பநுகர்ந்து சுகித்திருத்தலினும், வேறு தலங்களில் பலவகைப் போகங்களும் பொருந்த இன்புற்று வாழ்தலினும், ஞானதலத்தின்கண் ஒருதினம் பட்டினியிருந்து வசிப்பதனால் பெறும் சுகம் மேலானதாகும். மகா பாதகங்களைத் தினந்தோறும் புரிந்து வழுவினோர்களும், முற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயனால் ஞானதலத்திற் சென்று வசிக்கப்பெறுவரேல், மலம், மாயை, கன்மமென்னு மூன்றும் வேரோடும் நசிக்க வீடு சேருவார்கள். வஸ்திரங்களையும், எண்ணெயையும், கன்னியர்களையும், விக்கிரயஞ்செய்தேனும், இன்னும் எத்தகைய இழிதொழில்களைப் புரிந்தேனும், ஞானதலத்தில் வசிப்பரேல், அன்னோர் அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும் பயன்களையும் பெறுவரென்றால், ஏனையவர்பெறும் சிறப்பைச் சொல்ல முடியுமோ. திருமாலின் சகோதரியே! பன்றி, வலம்புரி, மயில், நாய், கழுதை, காக்கை முதலியவற்றைக்கொன்று தசைகளைத் தின்று உழலும் புலையரானாலும், ஞானதலத்தில் வசிப்பரேல் தேவர்களுக்குள் சிறப்புற்று வாழ்வார்கள். இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையாவென்றறிந்த விவேகிகள் இளமையாதிகள் உள்ளபோதே ஞானதலத்தில் வசித்து அகமகிழ்ந்து அறமாதி நான்கையும் சம்பாதித்துக்கொள்வரேயன்றி, வேறு தலத்திற்குச் செல்ல ஒருநாளும் நினையார்கள். கணிகையரானாலும், பக்தியினாலேனும், பொருளீட்டுங்காரணத்தாலேனும், வினோதத்தாலேனும், ஞானதலத்தில் வசிப்பரேல், தவந்தான முதலான நல்வினை செய்தலானுண்டாகும் பயனையடைவார்கள். வழிநடையிற் செல்வோர் அவ்விடத்து ஓரிரவு தங்குவரானால், அவர்கள் சொர்க்கத்தில் நிலைபெற்று வாழ்வார்கள். ஞானக்ஷேத்திரத்தை எதிர்நோக்கி வணங்கினோரையும், கைதொழுதோரையும், அவர்கள் செய்த தீவினைகள் எதிர்நோக்கி யடிவணங்கியகலும். வாசனைமிகுந்த பொழில்கள் சூழ்ந்த ஞானதலத்தின் எல்லையினைக்கடவாதவர்கள், எந்தவிழிகுலத்திற் பிறந்தவராயினும், அவர்கள் வசிக்குமிடங்களில் இலட்சுமியானவள் நீங்காமல் நிலைபெற்று வாழ்வள். அறிவுடையோர், தவந்தானம் விரதம் வேள்வி ஆச்சிரம ஒழுக்கம் முதலிய தருமங்களையெல்லாம் ஞானதலத்திலிருந்தே செய்யவிரும்புவர். வேறுதலத்திற் செய்வோமென்று மறந்துமெண்ணார்கள். இந்த ஞானதலமானது தவந்தானங்களைச் செய்வோர்களுக்கு அவர்கள் விரும்பிய நாற்பெரும்பயனையும் விரைந்தளிக்கும்; அஷ்டமகா சித்திகளையும் விரைவிற் கொடுக்கும்; சொர்க்காதி



போகங்களையும் எளிதிலடைவிக்கும்; வீட்டையுமுதவும். இத்தன்மையதான தலம் பூவுலகில் எங்குமில்லை. மூர்க்கனைப்பிறர்க்குத் துன்பமே செய்துகொண்டு திரியும் மூடனானாலும், மேலான ஞானதலத்தில் என்றும் வசிக்கும் பண்புடையனானால் எமக்கு இனியனாவன். அஃதெவ்வாறெனில், கடல்விடமும் அம்புலியுமே தக்க சாட்சியாகும்; இந்த உண்மையை நீ அறிந்துகொள்வாய். ஞானதலத்தில் வசிக்கமுடியாமல் அயல் தேசத்தில் வசிப்போர்கள், சிறந்த குலத்திற்பிறந்த பிராமணரையும் பெரியோர்களையும் அத்தலத்தில் வசிக்கும்படி செய்வார்களானால், தாமே வசித்ததினால் அடையும் பயனையடைவார்கள். அந்த ஞானக்ஷேத்திரத்தை, ஜம்புகேசுவரமென்றும், கஜாரணியக்ஷேத்திரமென்றும் சொல்லுவர். இப்பெயர்கள் மூன்றுமே, மலம் இரண்டையும் நீக்கித் தவசிகளுச்சரிக்கும் மூன்றக்ஷரங்களின் மேன்மையையுடையனவாகி, ஜபிப்போர்க்கு எல்லாப் பயனையும் தருவனவாம். மலபரிபாகம் பிறந்து, சத்திநிபாதம் பதிந்து, இருவினையொப்பு வாய்ந்த பக்குவிகளுக்கல்லாமல், சுத்த பஞ்சாக்ஷரத்தைப் பெரியோர் சொல்லார். மைக்கருங்கண் உமைமாதே! மேற்கூறிய மூன்றுபெயர்களும் யாவருக்கும் சொல்லப்படுமாகையால், தக்க சிவஞானத்தை யளித்து வீட்டினையுமடைவிக்கும் அம்மூன்று திருப்பெயர்களையும் பக்தியோடு ஒருமுறை சொன்னாலும் இடர், பாவம், பொய், நோய் முதலானவெல்லாம் விடைபெற்று நீங்கும். எத்தகைய போகங்களும் எதிரே நிற்குமென்றால், அந்த உத்தமங்களாகிய பெயர்களை யெவர்தாம் உரையார். எல்லாவுலகங்களையும் பெற்றெடுத்த பெண்ணணங்கே! பெரும்பயனடைய விரும்புவோர், ஞானதலத்தின் கண்ணே வசிக்கக்கடவர்; அது பொருந்தாதாயின், அத்தலப்பெயரை ஓதக்கடவர்; அதுவும் கூடாதாயின், அப்பெயர்களைப்பிறர் சொல்லவாயினும் கேட்கக்கடவர். பக்தியோடு கேட்டவர்களும் மூவகைப்பாதகங்களினீங்கி மேலான ஞானத்தையடைந்து எமதடியிற் புகுந்திருப்பர். இஃதுண்மை; அடைந்தோர்க்கெல்லாம் அஞ்ஞானமாகியவிருள் நீங்கும்படி மெய்ஞ்ஞான சூரியன் உதித்து நெஞ்சாகிய மலர்க்கமலம் விரியச்செய்யும் அத்தலத்தின் பெருமைகளையெல்லாம் எடுத்துச்சொல்லப்புகுந்தால் காலம்போதாது. ஆகையால், தீர்த்தத்தின் மகிமையைச் சொல்லுவோம். ஸாவதானத்துடன் கேட்பாயாக.

முல்லையரும்பையொத்த முறுவலினையுடைய பெண்ணணங்கே! ஞானக்ஷேத்திரத்தின்கணுள்ள தீர்த்தங்களின் மகிமையைச் சொல்

ளுவோம், கேட்பாயாக. ஞானதலத்தெல்லையெல்லாம் அலங்கரித்தாற்போலக் கல்லெனவொலிக்கும் அலைகளையுடைய பல தீர்த்தங்கள் விளங்காநிற்கும்; அவை, நாற்புறத்தும் செழுமணிகளாலாய படிகளையுடையன.

தீர்த்தவிசேஷம்.

திங்களைப்போலக் குளிர்ந்து, அடியார்களுடைய சிந்தைபோலத் தெளிந்து, எல்லாப் பற்றுக்களும் அற்றுப் பிக்ஷையெடுத்துண்ணும் முற்றத்துறந்த பெரியோர்களுடைய உள்ளம்போல மேன்மையுற்று, கரும்பினிரசம்போல மிக்க சுவையினையுடையனவாய், மூன்றுலோகங்களுக்கும் எல்லா மங்களங்களையும் தருவனவாக அத்தீர்த்தங்கள் விளங்கின. பல துன்பங்களால் அலைப்புண்டும் சிற்றின்ப வாஞ்சையினால் இல்லறத்தினின்றும் நீங்காதாரைப்போல, அன்னப்பறவைகளும், கம்புளும், சக்கரவாகங்களும், அலைகளாலலைப்புண்டும் கயல்மீன் விருப்பினாலே, அத்தீர்த்தங்களில் நீங்காதனவாய் வசிக்கும். புனல் நிறைந்த தீர்த்தங்களின் கரைகளிலெல்லாம் பல மலர்களையுடைய நந்தனவனங்கள் உள்ளன. அவ்விடங்களில் தவங்களைச் செய்பவரும், பரயோகம் பயிற்றுவோரும், அவர்க்கு வேண்டும் பணிகள் செய்பவரும், பலருள்ளனர். இப்படிப்பட்ட தீர்த்தங்களுள் யாதானும் ஒரு தீர்த்தத்தில் மூழ்கினோர், முற்பிறப்பிற்செய்த பெரும்பாவங்களும், இப்பிறப்பிற்செய்த பாவங்களும் நீங்கித்தம் இனத்தாரோடும் வேண்டும் வரங்களையெல்லாம் பெறுவர். அவைகளுள் ஒரு தீர்த்தமே பிசாசு, பிரமஹத்தி, பிரமரக்ஷசு, அச்சத்தை விளைக்கும் பெரும்பூதம், துஷ்டதெய்வம் ஆகிய இவையெல்லாம் தன்னிடத்தில் ஸ்நாநம் செய்தோர்க்குப் போக்குமென்பது நிச்சயம். தீர்த்தம் ஒவ்வொன்றே குட்டநோய், தொழுநோய், முயலகநோய், குன்மம், சூலை, வாதநோய், காசம், நேத்திரநோய், தலைநோய் முதலான நோய்களைத்தீர்க்கும். பிறைபோன்ற நெற்றியையுடைய உமையே! பிரமகத்தியாதி பாவங்களையும் பிறதீவினைகளையும் ஒரு தீர்த்தமானது போக்குமென்பது திண்ணம். ஈன்றாள், புதல்வி, உடன் பிறந்தாள் முதலியோரைப் புணர்ந்த தீவினையையும் ஒரு தீர்த்தம் போக்கும். ஒழுக்கம், அறிவு, தவம், தானம், சீல முதலியவற்றையொரு தீர்த்தமளிக்கும். கல்வி, அழகு, ஆயுள், வலிமை, ஊக்கமுதலியவற்றை ஒரு தீர்த்தமளிக்கும். அங்குள்ள ஒரு தீர்த்தத்தின்கண், ஒருவர் ஸ்நாநஞ்செய்தால், புத்திரரும், அவர் வழிப்புத்திரரும், அவர்வழியிற் புத்திரரும் உண்டாவர். மூவேழு தலைமுறையிலுள்ளாரும் நரகத்துன்பத்தினின்று நீங்குவர். அவர்கள் குலம், உலகில் நீடூழி வாழ்ந்திருக்கும். பிதிர்



தேவதைகள் திருப்தியுடையவராவர். அப்புண்ணிய தீர்த்தங்களில், ஆசாரத்தோடு ஒன்பதுமுறை ஸ்நானஞ்செய்பவரே யல்லாமல், ஆசௌச நிவர்த்திக்கும், வெயிலின் வெப்பம் நீங்குதற்கும், அழுக்கைப் போக்கிக்கொள்ளுதற்கும் ஸ்நானம் பண்ணுகின்றவர்களும், பெரும் பயனடைவார்கள். கரையினின்றும் வழுக்கித் தண்ணீரில் விழுந்தாலும், அத்தீர்த்தத்தைக் கையால் எடுத்துப்பருகினாலும், அலை வீசிய நீர்த்துளி மெய்யிற்பட்டாலும், அவர்களுக்கு நற்கதியுண்டாகும். தீர்த்தத்தினழகைக் கண்ணுற் பார்த்தவர்களும் “தீர்த்தமிருக்குந் திசையைக் கேட்டோரும், தீர்த்தத்து வசிக்கும் மீன்முதலிய ஜந்துக்களும், தீர்த்தத்தில் வளரும் விருக்ஷங்களும், எல்லாக்குற்றங்களும் நீங்கி உயர்பதவியை யடைவார். இது நிச்சயமானது. சிறியநெற்றியையுடைய பெண்ணே! கேட்பாயாக. இவ்வாறுயர்ந்த தீர்த்தத் தருகுசென்று தவம் முதலிய செய்யினும், பலதானங்களைச் செய்யினும், பிதிர்க்களுக்குச் செய்யும் கடன்களைச் செய்யினும், அவற்றின் பயனை எவராலுஞ் சொல்லமுடியாது”.

இங்ஙனம் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்ட உமாதேவியார், மிக்க உவகையடைந்து; வணங்கி நின்று, துதித்து, “என் நாதனே! அளவில்லாமல் நெருங்கிய அந்தப் பலதீர்த்தங்களுள்ளும் சில தீர்த்தங்கள் மிகச் சிறந்தனவென்று திருவாய்மலர்ந்தருளினீர்; அண்ணலே! அந்தத் தீர்த்தங்களின் பெயர்களையும் அவற்றில் ஸ்நானஞ்செய்தவர்களையும், அவைகளில் ஸ்நானம் செய்யும் விதிகளையும், ஆடவேண்டுங் காலத்தையும், ஜபிக்கும் மந்திரத்தையும், எய்தும் பயனையும், அவற்றைக் காப்போரையும், அவற்றிற்குரியதேவதைகளையும், கொடுக்கவேண்டுந் தானங்களையும், தேவரீர் உரைத்தருள வேண்டும். தேவரீரையன்றி, அந்தத் தீர்த்தங்களினது மகிமையை உள்ளவாறுரைக்க வல்லவர் யாவர்? அடியேன் பிரார்த்திக்கின்றேன்” என்று மனங்கனிந்து வாஞ்சையாய் பின்னையும் வணங்கிக் கைகட்டி வாய் புதைத்து நின்றனள். பரமசிவன் உமாதேவியாரின் மனவிருப்பத்தைக்கண்டு, “மாதராய்! ஒப்பில்லாத தீர்த்தங்களின் மகிமையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற ஊக்கமுனக்கு மிகுதியாகவுள்ளது; அப்படியே அவற்றைச் சொல்லுவோம்; தெரிந்துகொள்ளுவாயாக” வென்று சொல்லத்தொடங்கினர்.

“பிரமதீர்த்தம், இந்திரபுஷ்கரணி, சம்புபுஷ்கரணி, இராமதீர்த்தம், ஸ்ரீமத்தீர்த்தம், அக்கினிதீர்த்தம், அகத்தியதீர்த்தம், சோமதீர்த்தம், சூரியதீர்த்தம், இவை மிகச்சிறந்த தீர்த்தங்களாம் என்று

தெரிந்துகொள்ளுவாய்; பிரமதேவன் முன்னொருகற்பத்து, அழகிற் சிறந்தவொரு பெண்ணைப் படைத்தனன். அதிரூபவதியான அப்பெண்ணானவள் தன் எதிரில் வந்து நிற்க, மேகத்தைக் கண்ட சாதகப் பறவைபோல, ஆசையானது தூண்டினமையால், நான்முகன் அவள் நலந்துய்த்தனன். அத்தீயவொழுக்கத்தினால் அவன் படைப்புத் தொழிலை மறந்தான். அவனால் படைக்கப்பட்டோர், நரை, திரை மூப்பு, அகாலமரண முதலியவற்றை யடைந்தனர். அப்படிப்பட்ட தவறு நேர்ந்ததைக்கண்டு, மனம் நடுங்கி, அருந்தவத்தாலென்னை யடைந்தான். மேகலாபரணங்களை யணிந்தவளே! யாம் அந்நான்முகனுக்கு இரங்கி மகாமகிமைபொருந்திய பஞ்சாக்ஷரத்தை அவனுக்குபதேசித்தனுப்பினோம். அவன் விடைபெற்றுச் சென்று தான் பரிசுத்தனாகும்பொருட்டு ஞானக்ஷேத்திரத்தை யடைந்தான்; அந்த க்ஷேத்திரத்தின் வளங்களையெல்லாம் கண்டு, அதிசயித்து, அங்குள்ளவொரு தீர்த்தத்தில் பக்தியோடு விதிப்படி ஸ்நானஞ்செய்தெழுந்தனன். மெய்ம்முழுதும் விபூதியணிந்து, ருத்திராக்ஷமாலையை மந்திரபூர்வமாகத் தரித்து, மந்திரங்களுள் சிறந்ததாகிய பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்துக்கொண்டு, அந்த க்ஷேத்திரத்தில் வசித்தனன். ஐம்பொறிகளையும்வென்று, ஆங்குள்ள சிவலிங்கப்பெருமானை வழிபட்டுப் புத்திரியைக்கூடின பாவம் நீங்கிச் சிருஷ்டித்தொழிலையும் பெற்றனன். வளைகளையணிந்த கையையுடைய மாதே! அந்தத் தீர்த்தமானது பிரமதீர்த்தமென்று பெயர் பெற்றது. அதில் ஸ்நானம் செய்தோர் புத்திரியாதியரை இச்சித்த பாவங்களெல்லாம் நீங்கப்பெறுவர். கற்பகநாட்டுக்குத் தலைவனாகிய இந்திரன் விருத்திரன் என்னும் பெயரையுடைய வொருவனைக் கொன்றனன். அந்தப் பிரமகத்தியானது அவனைப்பிடித்து வருத்தியலைத்தது. அவன் வலிமையெல்லா நீங்கி, விரைந்துசென்று, ஞானப்பதியை அடைந்தனன்; நம் சன்னிதியை யடையவேண்டி மேற்றிசைக் கண்ணே வந்தான்; வந்தபொழுது, அங்கேயொரு தடாகத்தைக் கண்டு உவந்து அதில் ஸ்நானஞ்செய்தான். அந்தத் தீர்த்தத்தின் கரையில் நம்மைப் பூசித்துத்தன் பாவத்தினின்றும் நீங்கிச்சென்று முன்போலவே தன்னரசாட்சியை யடைந்தனன். தேமொழியே! அஃது, அன்றுதொட்டு இந்திரதீர்த்தம் என்று பெயர் பெற்றது. அந்தத் தீர்த்தத்தைத் தரிசித்தோர்க்கும் பஞ்சமா பாதகங்களும் பறந்தோடும். தவத்திற் சிறந்த சம்புமுனியென்னுமொருவர் நம் சன்னிதிக்கு அக்கினி திக்கிலேயுள்ள வொரு தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்து பஞ்சாக்ஷரத்தைச் செபித்



துச் சங்கரநாதப் பெயரினையுடைய நமது அருட்குறியைக் காதல் பெருகப் பூசித்து, நமது தன்மையினை யடைந்தனர். ஆதலால், அதற்கு அன்றுமுதல் சம்புதீர்த்தமென்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தோர் பெரும்பாதகங்களினீங்கிப் புத்திமுத்திகளைப் பெறுவர். இராமன், இராவணனை வதஞ்செய்து, சீதையோடும் மீண்டு நமது சன்னிதியின் மேற்பக்கத்துள்ள வொரு தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அதன் கரைமேல் நீலவிண்டுநாதரைப் பிரதிட்டைப்பண்ணிப் பூசித்தான். அந்தத் தீர்த்தம் இராமதீர்த்தமென்னும்பெயர் பூண்டது. அது பிரமகத்தியாதி பாவங்களையும் ஒழிக்கும். அதில் விபீஷணனும் பக்தியோடு ஸ்நானஞ்செய்து பாவங்களினீங்கி நமது திருவடிகளைப் பூசித்துச்சென்று இலங்கையில் அரசாட்சி செய்தான். நமது கோயிலினுள் நமக்கருகே சிற்றாறலாக ஒரு தீர்த்தமுள்ளது. அந்தத் தீர்த்தமானது இனிமேலுன்பெயரினால் ஸ்ரீமத் தீர்த்தமென்னும் பெயரோடு விளங்கும். அதில் நீராடுவோர்க்கு உண்டாகும் பயன் இவ்வளவென்று தேவர்களாலுஞ் சொல்லவரிதாகும். முன்னொரு காலத்து, அக்கினிதேவன், வருணனுடைய மனைவியைக்கண்டு அவளுடைய வடிவழகில் மயங்கி மனவலியிழந்து, அவளைக்கூடி யின்புற்றான். பிறன் மனைவியைக் கூடிய பாவத்தால் அவனுடைய சுவர்ணவீரியமொழிந்து, மிக்க வலியும் ஒளியுநீங்க, அவன் துனுக்குற்று அஞ்சி, விரைந்து சென்று ஞானதலத்தை யடைந்தான்; அடைந்து, நம் சன்னிதிக்குத் தென்கிழக்கு மூலையிலுள்ள வொரு தீர்த்தத்தை எதிர்கண்டு மனமகிழ்ந்து அதிலே ஸ்நானம்செய்து, நம்மை முறைப்படி பூசித்தனன். நாம் அவன் வழிபாட்டிற்கிரங்கி, அருள்சுரந்து, ஊர்த்துவ வீரியமும், வலிமையும் தேஜசும், அழகும், வரங்களும் அளித்தோம். அவன் அவைகளைப் பெற்றுச் சென்று முன்போலத் தேவதைகளுடைய அவிர்ப்பாகத்தை வகிப்பானாயினன். மிக்க பிரகாசத்தையுடைய அக்கினிதேவன் ஸ்நானஞ்செய்து வரம்பெற்றமையால், அதற்கு அக்கினிதீர்த்தமெனப்பெயர் வழங்கலாயிற்று. அதில் விதிப்படி ஸ்நானஞ்செய்தோர், பிறர் மனைவியைக் கூடிய பாவங்களினீங்குவர்; தேகவலியில்லார், அவ்வலிமையை யடைவார்; தேககாந்தியில்லார், அதனைப் பெறுவர்; பாக்கியமில்லாதார், சகல பாக்கியங்களையும் பெறுவர். உமாதேவியே! பருவதராஜன் உன்னை எமக்கு அளித்தபொழுது, தேவர் முதலாயினோர் இமயமலைச் சாரலில் ஒருங்குகூடி யிருந்தமையால், தென்திசையுயர்ந்து வடதிசை தாழ்ந்தது; அந்தச்சமயத்தில் நாம் அகத்

தியமுனிவனை யழைத்து இவ்வுலகம் சமனாகும்பொருட்டு, பொதியமலையின்கண் நமக்கு ஒப்பாக வசிக்கும்படி யேவினோம்; அதுகேட்ட முனிவன், நம்மைப்பணிந்து, "சுவாமீ! தேவரீருக்கு ஒப்பாவாரில்லையே; அங்ஙனமாக, அடியேன், தேவரீரை எங்ஙனம் ஒப்பாவேன்; அருளிச்செய்ய வேண்டு" மென்று வேண்டினன். நாம், ஞானதலத்திடைச்சென்று, நம்மைப் பூசித்து நமக்குச் சமானமாகும்படி சொன்னோம்; அவன் "நன்று நன்று" என்றுகூறி, நம்மைத்தாழ்ந்தெழுந்து ஞானக்ஷேத்திரத்திற் சென்று, நம் சன்னிதிக்கு உத்தரதிக்கிலுள்ள ஒரு தடாகத்தைக்கண்டு அதில் பத்தியோடு மூழ்கி, மனவுறுதியோடு நம்மைப்பூசித்து, நமக்கு ஒப்பாகும்படியான வரத்தைப் பெற்றுப் பொதியமலையைச் சார்ந்தான். அந்தத் தீர்த்தத்தில் நீராடினோர், தீவினைகளினீங்கிப் பற்பல மேன்மைகளையுமடைவர். கல்வியையும், மிகுந்த ஆயுளையும், குறைவில்லாத குணங்களையும் அடைவர். தக்கன் பெற்ற மக்களுள் இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் சந்திரன் மணந்தான். அவன் அவர்களைச் சமமாகப்பாராது, ரோகிணியிடத்து அதிக நேசம் பாராட்டி நடந்தனன். ஆகையால், அவன் தக்கனால், சபிக்கப்பெற்றுத் தன் கலைகளெல்லாம் நீங்கப்பெற்றான். அவன் அதனால் மிக்க கவலையுற்று, ஞானதலத்தை விரைவிலடைந்து, தேவர்களால் பணியப்பெற்ற நமது சன்னிதிக்கு மேற்குத்திசையிலேயுள்ள ஒரு அற்புத தீர்த்தத்தைக் கண்டு, அதில் மூழ்கி அதன் கரையில் பஞ்சாக்கினி மத்தியினின்று அரிய தவஞ்செய்தான்; அன்று, நாம் அவன் தவத்துக்கிரங்கி, அவனுடைய சாபம் நீங்கும்படி அனுக்கிரகஞ்செய்தனம். அன்றுதொட்டு, அவன் அமரர் முதலியோர்க்கு அகமகிழ்ச்சியை உண்டாக்கத்தக்க நலனைப் பெற்றனன். அத்தடாகமானது சோமதீர்த்தமென்று பெயர் பெற்று விளங்குகின்றது. அதில் நீராடினோர் க்ஷயமுதலிய நோய்கள் நீங்கப்பெற்று, இம்மையில் மிக்க செல்வங்களையடைந்து, சுவர்க்கானுபவத்தையும் பெறுவர். மாயவன் எமது அருளைப்பெரும்பொருட்டு இனிமேல் தன்நாயகியை நடனமாடச் செய்வான். அக்காரணத்தால் அவ்விடம் ஸ்ரீரங்கமெனப் பெயர்பெற்று விளங்கும். உலகத்திற்கு இருளைப்போக்கிப் பிரகாசத்தைக் கொடுக்கின்ற சூரியனானவன், அழகிய இந்த ஞானதலத்தை யடைந்து நமது சன்னிதியின் மேற்றிசைக் கண்ணேயுள்ள ஒரு தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, பல மலர்களைக்கொண்டு நம்மை வழிபட்டுத் துதித்தனன். அதனால், அவன், உலகையெல்லாம் விளக்கும் பிரகாசத்தைப் பெற்றதோடு, எல்லாக்கருமங்களுக்கும் சாக்ஷியு



மாயினான். அந்தப்பெரிய தீர்த்தமானது உலகத்தில் சூரிய தீர்த்தமெனப் பிரசித்திபெற்றது. மலர்கள் நிரம்பிய அத்தடாகத்தில் பக்தியோடு ஸ்நானஞ்செய்தவர், சகல காரியங்களிலும் சித்திபெறுவர். வளையல்களையணிந்த கையினையுடைய உமாதேவியே! ஒன்பது தீர்த்தங்களிலும் நீராடினோர்களையும், அவர்கள் அடைந்த பயன்களையும் கூறினோம். இனி அவற்றில் ஸ்நானஞ்செய்யவேண்டிய முறைகளைக் கேட்பாயாக.

முல்லையரும்புபோன்ற ஒளிபொருந்திய பற்களையுடைய தையலே! அரிட்டங்கள் நீங்கவும், உலக இன்பமுதல் மோக்ஷானந்தம் இறுதியான வரங்களையடையவும் விரும்பினோர், இவ்வொன்பது தீர்த்தங்களிலும் நீராடுக. அந்தணர் முதலிய மூன்று வருணத்தாரும் மந்திர பூர்வகமாக நீராடக்கடவர்; நான்காம் வருணத்தினரும், பெண்களும், தந்திரவழியால் நீராடுதல் அமையும்.

ஸ்நானவிதி.

தைமாதம் பூரணை தினத்தில் விடியற்காலத்தெழுந்து நித்திய கன்மங்களை முடித்து, நம் சன்னிதிக்கெதிரே வந்து, முன்மண்டபத்தில் முப்பதுகோட்டம் வகுத்து, அவற்றுள் ஒன்பது மண்ணும், ஏழுதளிரும், பஞ்சகவ்வியமும், நவத்திரவியங்களும் வைக்க. மண் ஒன்பதாவது—அரசு, வில்வம், துளசி, புளி, ஆல், நாவல் இவற்றின் மூலத்திலுள்ள மண்ணும், யானை, குதிரை, பசு இவைகள் கட்டுமிடத்துள்ள மண்ணுமாம். தளிர் ஏழாவன—துளசி, புளி, நாவல், வில்வம், ஆல், அரசு, அறுகு என்பனவாம். கவ்வியம் ஐந்தாவன—பால், தயிர், நெய், ஜலம், கோமயம் என்பவனவாம். நவத்திரவியங்களாவன—எள், நெய், கோதுமை, வெல்லம், சிவலிங்கம், நெல், வஸ்திரம், பொன், இரத்தினம் என்பனவாம். கோட்டத்தில் வைத்திட்ட முப்பதுபொருளையும், சந்தனம், புஷ்பம், தூபதீபங்களால்பஞ்சாக்ஷரமந்திரத்தை ஜபித்து தனித்தனி அபிமந்திரித்தபின் விநாயகக் கடவுளைக் காரியசித்தியின்பொருட்டு வழிபடல்வேண்டும். பக்தியோடு விதிப்படி சங்கற்பஞ்செய்து, மனமுருகிக் கொடுப்பவனும் பெற்றுக்கொள்பவனும் தானப்பொருள்களும் அடையும் பயனும் எல்லாம் சிவரூபமென்று தியானித்து, ஒன்பது பொருளையும் பரிசுத்தமாக்கி, ஸ்நானத்தின் பயனைப் பரிபூர்ணஞ்செய்பவன் பரமசிவனேயென்று வணங்கி, முப்பதுபொருள்களையும் கையிலெடுத்துச் சென்று, பரமசிவ சரணாரவிந்தத்தில் புஷ்பங்களாலர்ச்சித்து, 'உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் அஞ்சும்படி பிச்சையேற்றுத்திரியும் பிக்ஷாடன மூர்த்தியே! ஊழித்தீப்போன்ற நிறம் விளங்கும் உருவமுடைய

வரே! அடியார்களுக்கு அருளைச்செய்யும் வைரவக்கடவுளே! உம்மைப்பணிந்தேன்; அடியேன், சிவதீர்த்தங்களில் நீராட வந்தேன். தேவரீர் உமது ஒப்பில்லாத பெருங்கருணையால் அனுக்கிரகிக்கவேண்டும்' என்று பிரார்த்தித்து, அந்தச் சன்னிதியினின்றும் அக்கினிதிக்கிற்சென்று, பிரமதீர்த்தத்தின் கரையிலே வளர்கின்ற தேமாமரத்தை அன்போடு வணங்கி, அதைக்கையால் தொட்டுப் பிரமதேவனாகிய ரிஷியைத் தியானித்துச் சங்கரநாத மந்திரத்தை நமவந்தம் படக் கையில் ஜபமாலையைக் கொண்டு அங்குள்ளவர்கள் காதில் கேட்கும்படி விளங்க ஜபித்து, அந்தத் தீர்த்தத்துக்குக் காவலாகிய கணங்களுக்குத் தலைவனான புஷ்பதந்தனை அன்போடு வணங்கி, அரையளவு ஜலத்திலிறங்கி, மண்ணைப்பார்த்து, பாவம், நோய் முதலான அரிஷ்டங்களெல்லாம் நீங்கவும் எல்லா நன்மைகளுண்டாகவும் நீ செய்யவேண்டுமென்று சொல்லி, மண்ணைச் சரீரத்தில் பூசி, நீரில் மூழ்கி, அம்மண்ணைக் கழுவி, மேற்கூறிய பஞ்சகவ்வியங்களில் கோசல முதலானவைகளைத் தனித்தனி ஆடிஸ்நானஞ் செய்து, எழுதளிர்களாலும் ஜலத்தைத் தோய்த்துப் பஞ்சாக்ஷர மந்திரத்தினால் புரோக்ஷணஞ்செய்துகொண்டு, கரையேறி, உடம்பின் நீரைத்துடைத்து, தேவரிஷி பிதிர் தர்ப்பணங்களை விதிப்படி கையாற்செய்து, பிதிர்களுக்குத் திருப்தியை விளைவிக்கும் இந்தத்திலதர்ப்பணத்தால் பரமசிவன் மகிழ்வடைந்து எனக்கு இவ்வுலகத்து நீண்ட ஆயுளைத்தருகவென்று உறுதியான பக்தியோடு திலத்தைக் கொடுக்கவேண்டும். மற்றைத்தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தற்குமிதுவே விதியாகும். அவைகளுக்குரிய விருக்ஷம், இருஷி, காவலர், தெய்வம், தானப்பொருள், மந்திரம், இவை வெவ்வேறாகும். அவற்றைச் சொல்லுவோம். ஓ பார்வதியே! இந்திரதீர்த்தத்துக்குரிய விருக்ஷம் தென்னை; இருஷி இந்திரன்; மூன்று கண்களையுடைய பரமசிவன் தெய்வம்; கும்போதரன் காப்போன்; வேதத்தில்வல்ல பிராமணர்க்குப் பசுவின் நெய்யைத் தக்ஷிணையோடு கொடுப்பது தானமாகும். 'யானையையுரித்த மேருவில்லியாகிய பரமசிவனுடைய வீரியமாய் அவனுக்கு மகிழ்ச்சியைச் செய்யும் இந்த நெய்யின் தானத்தினாலே, அச்சிவபெருமான் பிரீதியடையக்கடவன்' என்று ஜபித்தல் மந்திரமாகும். சம்பு தீர்த்தத்துக்குரிய விருக்ஷம் நாவல்; வசிஷ்டன் இருஷி; மயேச்சுவரன் தேவன்; சுனந்தர் காப்போர்; தானப்பொருள் கோதுமை; வேதாந்தி எற்போனாகும். 'இனிமையையுடையதும் தேவர்க்கெல்லாம் உணவுமாகிய இக்கோதுமையால், மலங்களையெல்லாம் போக்கும் பூதேசனா



கிய பரமசிவன் திருப்தியடையக்கடவ' னென்று உச்சரித்தல் மந்திரமாகும். இராம தீர்த்தத்துக்குரிய விருக்ஷம் இலுப்பை; இராமன் இருஷி; நீலஹரீசுவரர் தெய்வம்; வீரபத்திரன் காப்போன்; பிரம்மவித்தான பிராமணனுக்கு வெல்லத்தைக் கொடுத்தல் தானம்; 'சுவையுடையதும் சிவபத்திச்சுவையைக் கொடுப்பதுமான இந்தக்கருப்பங்கட்டி தானத்தாலே, சங்கரன் எக்காலத்தும் பிரீதனாகக்கடவ' னென்பது மந்திரமாகும். ஸ்ரீமத்தீர்த்தத்தின் பக்கத்துள்ள விருக்ஷம் நாவல்; கார்க்கியர் இருஷி; அமுதேசன் தெய்வம்; சுதந்தன் காப்போன்; சிவலிங்கத்தை நமது பக்தனுக்குக் கொடுத்தல் தானமாகும்; 'இச்சிவலிங்கதானத்தால், ஸ்ரீகண்ட பரமேசுவரன் திருப்தியுற்று முத்தியளிக்கக் கடவ'னென்று ஜபித்தல் மந்திரமாகும். அக்கினி தீர்த்தத்தின் பக்கத்தேயுள்ள விருக்ஷம் புளி; இருஷி அக்கினி; தெய்வம் கிரிசானுரேதசு என்னும் சிவன்; கருபன் காப்போன்; ஏழையும் குடும்பியுமான பிராமணனுக்கு நெல்லைக் கொடுத்தல் தானமாகும்; 'எல்லாருக்கும் உணவாகி இன்பத்தைத்தரும் இந்த நெல்லின் தானத்தால் அமுதேசன் திருப்தியடைவானாக' வென்பது மந்திரம். அகஸ்திய தீர்த்தத்தின் பக்கத்தேயுள்ள விருக்ஷம் பலா; அகஸ்தியர் இருஷி; அகிலாண்டவல்லியென்று சொல்லப்பெறும் நீயே தெய்வம்; சுருகதி காப்போன்; சிறந்த வித்வானுக்கு வெள்ளை வஸ்திரத்தைக் கொடுத்தல் தானமாகும்; 'சீதம், வெப்பம் இரண்டையும் நீக்குவதான இந்த வஸ்திர தானத்தினால், தேவர்களெல்லாரும் திருப்தியடையக்கடவர்' என்பது மந்திரம். சந்திரதீர்த்தத்தின் பக்கத்துள்ள விருக்ஷம் புன்னை; சந்திரன் இருஷி; அவனே தெய்வமும்; புஷ்கரன், புஷ்கராக்ஷன், குமுதன் ஆகிய மூவரும் காவலர்; யாகஞ்செய்வோர்க்குப் பொன்னைக்கொடுத்தல் தானமாகும்; 'உலகுக்கெல்லாம் ஆனந்தத்தை விளைவிப்பதான இந்தச் சுவர்ணதானத்தாலே, பரமசிவனுடைய உவகையானது வளர்க'வென்பது மந்திரம். சூரியதீர்த்தத்தின் பக்கத்திலேயுள்ள விருக்ஷம் வில்வம்; இருஷி பிருகு; தெய்வம் சூரியன்; வைரவன் காவலன்; சிவபத்தியிற் சிறந்தவருக்கு இரத்தினத்தைக் கொடுத்தல் தானமாகும்; 'இந்த இரத்தின தானத்தால், பிரபாகரனென்னும் பெயரையுடைய சூரியன் திருப்தியடைக' வென்பது மந்திரம். விருக்ஷ முதலான பேதங்களையெல்லாம் தனித்தனியே சொன்னோம். பசுங்கொம்புபோன்றவளே! ஒன்பது தீர்த்தத்திலும் விதிப்படி நீராடுவோர், நமது திருக்கோயிற் சன்னிதியில் வணங்கி மனத்தை ஒருமைப்படுத்தி நின்று, 'மந்திர முதலானவை

களில் வரும் குற்றங்களைப் பொறுத்து முன்னே சொன்ன தவதீர்த்தங்களிலாடிய பயன்களையெல்லாம் எங்களுக்கு ஈந்தருள்க' வென்று அன்போடு பிரார்த்தித்து, மூன்று பிரதக்ஷிணஞ்செய்து, ஐந்து முறை கீழே விழுந்து நமஸ்கரித்து, ஒரு பக்கத்திலிருந்து மூலமந்திரத்தையும் திரியம்பக மந்திரத்தையும் நூற்றெட்டு முறை ஜபித்து, உன்னுடைய ஆலயத்திற்சென்று, உன்னை வணங்கி, தியானத்தோடு நான்கு முறை பிரதக்ஷிணம் செய்து, ஐந்துமுறை நமஸ்கரித்து, அவ்விடத்து மந்திரங்களை வேண்டியவளவு ஜபிக்கவேண்டும். பூவையணிந்த கூந்தலையுடைய மடமங்கையே! அந்தப்புண்ணிய தீர்த்தங்களில் ஆடும் விதியைச் சொன்னோம்," என்று பரமசிவன் திருவாய் மலர்ந்தருளினர். அதைக்கேட்ட உமாதேவி பின்வருமாறு சொல்லுவாளாயினள்.

கரிய கண்டத்தையுடையவனே! கற்றைச்சடையாய்! கைலாசபதியே! அரிஷ்டங்களையெல்லாம் போக்கி இஷ்டங்களையெல்லாம் கொடுப்பனவான ஒன்பது தீர்த்தங்களும் ஞானதலத்திருக்கும்போது ஆன்மகோடிகள் பலநரகங்களிற் புகுந்து வருந்துங்குற்றம் யாது? புழுக்கள் நெளியவும், இரத்தம் ஒழுகவும், பலவித நோய்களால் துன்பப்படுவதும் யாது? தளர்ந்த மனத்துடன் வீடுகள்தோறும் ஐயம்புகுந்தும் கிடைக்காமையினாலே துயரப்பெருங்கடலில் முழுகிக் கஷ்டப்படுவதேன்? மனைவி மக்களை இழந்தும், செல்வங்களை இழந்தும், கண்செவி இவற்றை இழந்தும், தெளிவையுண்டாக்கும் வித்தைகளை இழந்தும், பலகோடி உயிர்கள் துன்பத்தில் அழுந்துவது என்னே? வெண்ணெய் கையிலிருக்கையில், நெய்க்கு வருந்தும் வீணர்களைப்போல, ஞானதலத்தில் பெருமையையுடைய அனேக தீர்த்தங்களிருக்கையில், அவற்றில் முழுகாமல், செல்லக்கூடாத கொடுங்காட்டிற்சேர்ந்து, ஆகாரத்தை விடுத்துச் செயற்கரிய பெருந்தவங்களைச் சிலர் செய்யும் இஃது என்ன வியப்பு?" என்று பருவதராஜன் புத்திரியாகிய உமாதேவியார் கேட்க, மேருவில்லியாகிய பரமசிவன் குளிரக்கடாக்ஷித்து, பின்வருமாறு திருவாய்மலர்ந்தருளுவாராயினர்.

"பார்வதியே! பொறிகளைவென்ற நந்தியும் கௌதமனும் ததீசிருஷியும் முற்காலத்துச் சபித்திருக்கிறார்கள். வேதவொழுக்கம், தவம், தானம், சத்தியம், பொறுமை முதலிய தருமமார்க்கத்தில் யாவரும் மனத்தைச் செலுத்தமாட்டார்கள். சிலரே முற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயனால் சன்மார்க்கத்தில் ஒழுகுகின்றார்கள் என்பது திண்ணம். முன்னைத்தவத்தால் ஞானதலத்தில் முறைப்படி வசிப்போரும்



புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வோரும் அங்கே நம்மைத் தரிசிப்போரும் மறுபடி பிறப்பினையடையார்; மற்றுத்துன்பங்களையும் அடையமாட்டார்கள்; சொல்லிய பயன்களையெல்லாம் நீங்காமல் எய்தி, நமது திருவடியின்கீழ் அமர்வர்; இது சத்தியமாகும். தலமகிமையும் தீர்த்த விசேடமும் அதிகரிக்கும்படி அங்கே எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் மேன்மையை இனி விளங்க எடுத்துக் கூறுவோம்.

ஓ, பார்வதி! உலகத்திலுள்ள மனிதர்களைக்காட்டிலும் தேவர்கள் உயர்ந்தவர்; அவர்களில் பிரமன் உயர்ந்தவன்; அவனிலும் திருமாலுயர்ந்தவன்; அவனிலும் ஆறுமுகன் உயர்ந்தவன்; அவனிலும் ஐங்கரன் உயர்ந்தவன்; அவனிலும் நீ உயர்ந்தவள்; முன் சொல்லிய முறைப்படி அவர்களாலே பூஜிக்கப்பட்டமூர்த்திகள் ஒன்றிலொன்று மூர்த்திவிசேஷம். மேன்மையுடையனவாம். ஆகையால் உன்னால் பூஜிக்கப்பட்ட இலிங்கம் எவ்வகை இலிங்கங்களுக்கும் மேலானதாகும். உலகத்தில் இடர்களெல்லாம் நீங்கும்படி நீ அறமாதிகளைக்கருதிப் பூசித்த இலிங்கங்களைக் காட்டிலும், ஞானத்தையடையும்படி உன்னால் பூஜிக்கப்பட்ட இலிங்கம் மிகவும் மேலானதாம். உத்தம குணத்தோர் பலர் தவங்கள்செய்து, மெய்ஞ்ஞானத்தையடைந்து, முத்திபெற்ற தலமாகிய ஞானக்ஷேத்திரத்தின்கண் நீ உன் கைம்மலரால் தீம்புனலைத் திரட்டிப்பூசித்த சிவலிங்கமானது நாவல் மரத்தின்கீழ் எவ்வகை வரங்களையும் அளித்து விளங்குவதாகும். ஞானத்தையளிக்கும் தீர்த்தங்களால் சூழப்பெற்று, ஞானத்தை மிகுதியாக அளிக்கும் க்ஷேத்திரத்தில், ஞானத்தைமிகுதியாக அளிக்கும் இலிங்கங்கள்பல. அவைகளுள், நின்கைம்மலரால் தாபிக்கப்பட்ட இலிங்கமானது மிகவும் மேலானதென்பதில் சந்தேகம் யாதுளது; எமக்கு உலகத்திலுள்ள அன்பைக்காட்டிலும் நின்னிடத்துள்ள அன்பு பெரிதாயினாற்போல, உலகத்து நாம் நிலவி வாழுகின்ற சிவலிங்கங்களிலிருந்து செய்யும் அநுக்கிரகத்திலும், ஞானதலத்தில் நின்னால் பூசிக்கப்பட்ட இலிங்கத்திலிருந்து செய்யும் அநுக்கிரகம் மிகப்பெரிதாம். வாள்போலும் கண்ணினையுடைய உமையே! தொடையின்மீது இருக்கச்செய்தும், மேனியில் ஒற்றுமை கொண்டும், என்றும் உன்னைவிட்டு யாம் பிரியாதவாறுபோல, ஞானக்ஷேத்திரத்தின்கண் உன்னால் பத்தியோடு ஆராதிக்கப்பெற்ற சிவலிங்கத்தில் யாம் என்றும் பிரியாது வீற்றிருப்போம். அமுதமென்று சொல்லப்படும் ஜலத்தினால் திரட்டி யமைக்கப்பெற்றமையினாலும்,

வழிபடுபவர் நித்தியமெய்தி அமுதராதலினாலும், ஆன்மாக்களிடத்துண்டாகும் எம்மையழியும் அறிவானது, அழிதலில்லாமையாலும், அமுதலிங்கமென்னும் பெயர் வழங்கும். அப்படிப்பட்டதாகிய பரம இரகசியமான அரும்பெரும்பொருளையுடைய பெயரை ஒருதரம் நினைத்தாலும், நாவினாலுரைத்தாலும் சித்தியாகாத பெரும்போகம் எவ்வுலகத்துமில்லை. எப்படிப்பட்ட அரிஷ்டங்களும் நீங்காதனவில்லை. நான்குவகை முத்தியுள் அடையப்படாதனவுமில்லை. தேவர்கள் கற்பகமலரைச் சொரிந்து ஏத்தும் அமுதலிங்கத்தை அன்போடு ஒருதரம் பார்த்த கண், வறுமையினால் துன்புற்றுப் பொருளை விரும்பி வேறு ஒருவரையும் பாராது; அமுதலிங்கத்தின் பெயரைக் கேட்டவருடைய காதுகள், வறிஞர்கள் சொல்லும் குறைகளைக் கேளா; பிரகாசம் பொருந்திய அமுதலிங்கத்தைப் பிரதக்ஷிணஞ் செய்தவருடைய கால்கள், இப்பிறப்பில் ஒரு பொருளை விரும்பி ஒருவரிடத்தும் செல்லமாட்டா; மறுபிறப்புண்டாயின் திரும்பப் பூமியின்மேல் வைக்கப்படா; அமுதலிங்கத்தை அஞ்சலித்த கைகள், ஒருவரை 'நாதனே கொடுக்கவேண்டு' மென்று ஏற்கமாட்டா. மகா பாதகங்களைச் செய்தவரானாலும், அமுதலிங்கத்தைப் பத்தியுடன் பணிந்தால், அவர்கள் செய்ததீவினையெல்லாம் எரிவாய்ப்பட்ட பஞ்சு போலத் தீயும். ஞானதலத்துள்ள அமுதலிங்க தெரிசனமானது, செல்வம், கல்வி, தவம், தானமுதலியவற்றால் போக்கமுடியாத ஆணவத்தையும், உயிரை மாய்க்கும் மாயைகளையும் இருவினைகளையும் பரிதிமுன் இருள்போல நீக்கும். ஞான க்ஷேத்திரத்திலுள்ள அமுதலிங்கமென்னும் பேரோடு ஜனனமரண நோயைப்போக்குவதான மருந்தை, மனமொழி மெய்களால் வணங்குவோரிடத்துப், பொன் முதலானவற்றாலுண்டாகும் துன்பமாகிய சிறுநோய்கள் என்ன செய்யும். நக்ஷத்திரங்களும், கிரகங்களும், இராசிகளும் வக்கிரித்துத் துன்பஞ்செய்யுமாயினும் அமுதலிங்கத்தை வழிபடுவோர்க்கு அவற்றாலுண்டாகும் தீங்குகளில்லையாகும். இதுவே ஊழிக்காலமோ வென்று மேகங்கள் வருஷித்தாலும், வெப்பமுண்டாம்படி மழை மாறினாலும், பகைவேந்தர் வருத்துங்காலம் அடுத்திடினும், அமுதலிங்கத்தைத் துதிப்போர், 'இவையென்ன செய்யு' மென்று இறுமாந்திருப்பர். திருப்பாற்கடலில் கடைந்தெடுத்த அமுதத்தை யுண்டோர், தேவரானாலும், மனிதரானாலும், நித்தத்தன்மையடைவர்; அதுபோல 'விதிப்படி நீராடுவோர், அசுத்தியுடையோராயினும் சுத்தியுடையோராயினும் இருவரும் பரிசுத்தத் தன்மையடைவர். அப்



படியே உயர்குலத்துப் பிறந்தவரானாலும், இழிகுலத்துப் பிறந்தவரானாலும், மலமுடையவரானாலும், மலநீங்கியவரானாலும், அமுதலிங்கத்தையடைந்து வணங்கினால், இவ்விருதிறத்தோரும், மோக்ஷமடையும் விஷயத்தில் ஒரு தன்மையரே யாவர். டைத்தியங்கொண்ட உள்ளத்தினையுடைய ஒருவர் விஷத்தை யுண்ணும்போது சுவைமிக்க தேவாமிர்தத்தைக் கலந்துண்பாராயின், அவர்களுக்கு உன்மத்தத்தோடு விஷவேகமும் நீங்க, வலிமையுண்டாகும்; அதுபோல, ஒருவர் நாடகக் கணிகையை விரும்பிச் செல்வராயினும், அடியார் மனவிருளைப் போக்கும் தீபமாகிய அமுதலிங்க மணியைத் தொழுவரேல், அவருக்குச் சஞ்சிதமும் பிராரத்தமும், ஆகாமியமுமாகிய வினைகளெல்லாம் தொலைந்துபோம். குற்றமற்றவளே! சமீபத்திலிருப்பவரானாலும், தூரத்திலிருப்பவரானாலும் அமுதலிங்கத்தைத் தரிசிப்போமென்று மனத்திலே நினைப்பராயின், அவர்கள் பாவத்தை யெழுதிய கணக்கோலையைச் சித்திரகுப்தன் கிழித்தெறிவான். ஞானக்ஷேத்திரத்தில் அமுதலிங்கத்தைத் தெரிசிக்கும் விருப்பத்துடன் பூமியில் ஏழடி நடப்பாராயின், அவர்கள் முன்னேழுபிறப்பிற் செய்த பாவமெல்லாம் நசிக்கும். அங்கே எழுந்தருளியிருக்கும் அமுதலிங்கத்தின் திருமுடியின்மேல் ஒரு சங்கு தீர்த்தத்தினால் அபிஷேகஞ்செய்தோர், வேறு மூர்த்திகளுக்குக் கருப்பஞ்சாறு, தயிர், பால், நெய், தேன் முதலியவைகளைக் கோடி மடாவினளவாக அபிஷேகஞ்செய்த பயனைப்பெறுவர். சம்புமூலத்தில் எழுந்தருளிய சிவலிங்கப்பெருமானை ஒருகையளவு நீரினால் அபிஷேகஞ்செய்தோர், இவ்வளவு பெரும்பயன்களை யடைவரென்றால், ஆவின்பால் முதலியவற்றால் அபிஷேகஞ்செய்தோரடையும் பெருமையைத் தேவர்களிலும் சொல்லவல்லவர் யாவர்? சம்புமூலத்தில் விரும்பியெழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கு நறுமணமுள்ள மலரொன்றை அன்பால் மனங்கரைந்து சாத்துவாரானால், தாமரை மலரில் வசிக்கும் பேற்றையடைவர். சங்கமொன்றைக் கொடுப்பரேல், தம்முடைய கையில் சங்கத்தையேந்தி உலகத்தைக் காக்கும் பதத்தைப்பெறுவர். நாவல் மூலத்தில் எழுந்தருளிய அமுதலிங்கத்தின் சந்நிதியடைந்து சரியையாதி நான்கு பணிகளையும் அனுட்டித்தோர், சாலோகமுதலிய நால்வகை முத்தியினையும் அடைவர். அறமுதல் நான்கினையும் சிறிதும் சிரமமில்லாமல் எளிதில் அடைய விரும்புவோரெல்லாம், சம்புமூலப்பெருமானைப் பூசைக்குரிய பொருள்களால் மிகுந்த பத்தியோடும் பூசிக்கக்கடவ”ரென்று மூர்த்தி விசேடத்தைப் பரமசிவன் விளங்கவெடுத்

துரைத்தனர். பார்வதிதேவியானவள், மனத்தின்கண் பெருமகிழ்ச்சி பொங்க வணங்கின்று "நாதா! அவ்விடத்து நாவல் மரமொன்று உளதென்று கூறினீர். அதன் பெருமையைக் கேட்கவிரும்பினேன்; கிருபைகூர்ந்து திருவாய் மலர்ந்தருளல்வேண்டும்" என்றுபிரார்த்தித்தாள். இங்ஙனம் உமாதேவியார் பிரார்த்தித்தலோடும், சிவபெருமான் புன்னகைசெய்து, சம்புவிருக்ஷத்தின் வரலாற்றைக் கருணையோடும் கூறத்தொடங்கினர்

புன்னை, வில்வம், மகிழ், பலா, சந்தனம், அகில், அரசு, சண்பகம், மூங்கில், அசோகம், தென்னை, கடம்பு, குருந்தம், ஆச்சா, குங்குமமுதலான பலவிருக்ஷங்களடர்ந்த சோலைசூழ்ந்த ஞானக்ஷேத்திரத்தினிடையில் ஒரு நாவன் மரச்சோலை உண்டு. அச்சோலையின்கண் சம்புமுனிவர் தவம் தேவர்களாலும் அளவிட்டறிய முடியாத பெருபுரிந்தது. மையினையுடைய மோக்ஷத்தை விரும்பினவனாகிய சம்புமுனிவனென்னும் ஒருதவன் மனத்தைத்தன் வசப்படுத்தி அருந்தவம் இயற்றினன். விபூதியைத்தரித்து, அக்கமாலை பூண்டு, சடாதாரியாய், எம்மையே தியானித்து, மெய்த்தவம் செய்த அம்முனிவன் முன்னே, வெண்ணாவற் பழம் ஒன்று வீழ்ந்தது. அதற்குமுன் பார்த்திராத திவ்யமான அப்பழத்தைக்கண்டதும், ஆச்சரியமடைந்து, மிக்க ஒளியையுடையதும் சிறந்ததும் ஊறுகின்ற சுவையையுடையதுமான இதை யாம் உண்ணல் நன்று என்று நினைத்து அப்பழத்தைக் கரத்தால் எடுத்து, அழகிய கைலையங்கிரியை யடைந்து, நம்மை மிகப்புகழ்ந்து பாடி, "சிற்பரனே! திருவருள் வைத்து இக்கனியை அமுதுசெய்க"வென்று நம் கரத்தில் ஈந்தனன். நாம், தீஞ்சுவையுடைய அப்பழத்தை உண்டு அதன் வித்தைப் பக்கத்தே உமிழ்ந்தனம். அதைப்பார்த்திருந்த தவசிரேஷ்டன் மனத்தில் உவகைகொண்டு அதை விரைந்து எடுத்து விழுங்கினன். தக்கார்க்கீந்தபொருள், தினையளவாயினும் பனையளவாமாறு போலத், தவசியின் வயிற்றில் தங்கிய அவ்வித்தையானது கணப்பொழுதில் முளைத்தெழுந்தோங்கியது. அச்சம்புமுனியின் தவம் வளர்ந்தாற்போல அந்நாவலானது, அவனுடைய சிரம்வெடிக்கத் தேவர் நாட்டினையும் நிழல்செய்து, எட்டுத்திக்குகளும் நிரம்பத்தளிர்த்து வளர்ந்து தழைத்தது. கற்பகதருவின் தருக்கைப் போக்குவமென்று அதனை யுத்தத்திற்கு அழைப்பதுபோல, நாவல் விருக்ஷத்தின் கிளைகளிலிருந்து பக்ஷிகள் சத்தித்தன. மேலோங்கிவளர்ந்து சாய்ந்த மெல்லிய மரக்கிளைகளில் தங்கிய தூக்கணாங்குருவியின் கூடுகள், விராட் புருஷனுடைய திருமேனியில்



மயிர்க்கால்கடோறும் தங்கிய அண்டங்களைப்போல் விளங்கின. நமது வாயின் நீரினால் நனைந்த விதையே, குற்றம் நீங்கிய பெருந்தவத்தையுடைய முனிவனது சரீரத்தில் முளைத்தலால் அம்மரத்தின் நிழலில் தேவர் முதலியோரும் விரும்பித்தவஞ்செய்வாராயினர். அம்மரத்தின் தளிர்களைக் கையாற்பரிசித்தாலும், நிழலில் தங்கினாலும், மெல்லிய மலர்களை மோந்தாலும், கண்ணால் தரிசித்தாலும், பெயரைக் காதினால் கேட்டாலும், அதன் கனியையுண்டாலும், தீயனவெல்லாம் நீங்க, நன்மையுண்டாகும். வேதங்களே மூலமாகவும், உபநிடதப்பொருளே பராரையாகவும், ஆகமங்களே பணைகளாகவும், சரியை கிரியை யோகங்கள் கிளைகளும் வளாரும் இணருமாகவும், ஐந்துஞானங்களும் அரும்பு மலர் காய் கனி கனியின் இரசமாகவும், விளங்கும் நாவல் மரமானது, ஆன்மாக்களின் பாவங்களையெல்லாம் போக்குவதாகும். வெண்ணாவலின் வளர்ச்சியைக் கண்ட செழுந்தவ முனிவர்கள் ஆனந்த நடனஞ்செய்தனர். தேவர் மலர்களைச் சிந்தினர். மரங்களும் மதுமழை பொழிந்தன. சம்புமாமுனிவன், இத்தகுதியை நோக்கி, ஆனந்தக்கடலில் மூழ்கினன். இந்நாவலின் நிழலே இப்பூவுலகில் தவஞ்செய்தற்கு மேலான தானமென்றெண்ணித் தவஞ்செய்தனன். அவன், அங்ஙனந் தவஞ்செய்துகொண்டிருக்கையில், பல தேவர்களும், முனிவரர்களும், [illegible]டர்களும், அந்நிழலினிடத்து விரும்பித் தவஞ்செய்து வாழ்ந்தனர். இப்படிச்சிலகாலம் சென்றது. பின்னர் ஓர் நாள் அத்தவசிரேஷ்டன் வந்து, நம்சன்னிதியில் வணங்கித், "தலைவனே! தேவரீர் இனி இந்நிழலின்கண் வசிக்கவேண்டு"மென்று வேண்டினன். நாம் அவன் வேண்டுகோளுக்கிரங்கி, "நீ முன்கனி வீழ்ந்த இடத்துச்சென்று தவம்புரிந்திருப்பாய்; நாம் அவ்விடத்து வந்து நீ விரும்பியபடி உறைவோம்" என்று பணித்தனம். திசைகளிலெல்லாம்புகழ்விளங்கிய அம்முனிவன்நமது அருளைப்பெற்று ஞானக்ஷேத்திரத்தையடைய விரும்பிப் புறப்பட்டனன். அவன், பூமியில் நடந்து செல்லும்போது, கண்டோரெல்லாம் கிளைகளையுடைய ஒரு மரமானது நடந்து செல்கின்றதென்று சந்தேகமுற்று அற்புதமடைந்தனர். சமீபித்துச்சென்று பார்த்த மனிதர்கள், கைமுதலிய உறுப்புக்களும் இலைகிளைகள் முதலியனவும் பொருந்திய இப்பிறவி எழுவகைத் தோற்றத்துமில்லை; இதுவும் சிவபெருமான் திருவிளையாட்டோவென்று வியப்படைந்தார்கள். நல்லோர்கள் செய்த நல்வினைப்பயனை அவர்களை அடுத்துவரும் அடைதல்போலச் சம்புமுனிவனைச் சூழ்ந்துசென்ற முனிவர்களும், தகிக்கின்ற சூரியனுடைய

வெப்பத்தை மாற்றிச்சென்றனர். மார்க்கத்தில் எதிர்ப்பட்ட பல தலங்களைத் தரிசித்து, மெல்லமெல்ல நடந்துபோய்க், காவிரியின்வடபக்கத்துள்ள ஞானக்ஷேத்திரத்தைக் குறுகி, முன்புபழம் விழுந்த இடத்தை வளர்கின்ற காதலோடுந்தொழுது, அவ்விடத்தையடைந்தனன். சூரியன் வெதுப்புகின்ற வேனிற்காலத்தில் அக்கினிமத்தியினின்றும், தொகுதியான மேகங்கள் எழுந்து நீரைப்பொழிகின்ற கார்காலமுதலிய நான்கு பருவத்தும் நீரிடை நின்றும், அரியதவத்தைச் செய்து தன்னுடைய மனத்தை எமது அடிகளில் நிறுத்தினன். கந்தமூலபலங்களையும், சருகையும், நீரையும், காற்றையும் உண்டும் சில பகல் அவைகளை நீக்கியும், அங்கே தவஞ்செய்து கொண்டிருக்கின்றனன். அவனுடைய விழிகள் எதிர்சென்று நின்றவரையும் பாரா; உடல் பரிசத்தை அறியாது; செவிகள் ஒலியைக்கேளா; நாசி நாற்றத்தையுணராது; இங்ஙனம் அவன் தவஞ்செய்துகொண்டிருக்கையில், முன்னரே அங்கு வந்து தவம் செய்துகொண்டிருந்த பிரமன், முனியின் சிரசில் ஓங்கிநின்ற வெண்ணாவல் மரத்தையும், அருந்தவஞ்செய்யும் முனிவனுடைய மாட்சிமையையுங்கண்டு, விம்மிதமடைந்து, அவனுடன் அளவளாவி நட்புக்கொண்டிருக்கின்றான். ஆருயிர்த்தொகைகள் இருண்மலம் நீங்கி, எமது அடிநிழலில் தங்கும்படி வந்ததாகிய அந்த நாவல் விருக்ஷத்தின் வரலாற்றைச் சொன்னோம். நீ அவ்விடத்தை யடைவாயாகவென்று பரமசிவன் உமாதேவியாருக்கருள் செய்தனன். அப்பொழுது உத்தமகுணத்தாலே உயர்ந்தவராகிய திருநந்திதேவர், வணங்கி, "திங்கள் சூடிய செஞ்சடைக்கடவுளே! உமது திருவுருவினின்றும் நீங்காத உமாதேவியார் உம்மைவிட்டுப் பிரிதற்கு நேர்ந்தகாரணம் யாதோ? கேட்க விரும்புகின்றேன்; அருள்செய்யவேண்டு" மென்று பிரார்த்தித்தனர். சிவபெருமான் அவரை நோக்கித் திருவாய்மலர்ந்தருளுவாராயினர். "சம்புமுனிவர் ஞானக்ஷேத்திரத்திலிருந்த பின்னர், உலகமெல்லாம் சிற்றின்பவழியிலே ஒழுகியது. ஆன்மாக்கள் உய்யும்வண்ணம், நாம் யோகத்திலிருந்தோம். இளமையும், கற்பும் இணையில்லாத அழகும்பொருந்தி, அன்போடு நமது இடம் பிரியாத இப்பெண்ணரசியை நோக்காமல் அளவில் காலம் யோகத்தில் அமர்ந்திருந்தோம். அப்பொழுது இவள் நம்மை நோக்கி அருகிலிருந்த கணநாதர்கள் பார்த்திருப்பப் பரிகாசமாகச் சிரித்திட்டாள். "இதனால் உண்டாகிய தீவினை நீங்கும்படி நம்மைப்பிரிந்து மனம்வருந்தி இருப்பா"யென்று சாபங்கொடுத்தோம். இவள் அம்மொழியைக் கேட்டு வெய்துயிர்த்து நடுநடுங்கிக்



கண்ணீர்பெருக்கி, மெய்வாடிப் பணிந்து சொல்லத் தொடங்கினள். "அடியவர் செய்தகுற்றம் ஆயிரமும் பொறுத்தருளும் கருணையனே! பரமேட்டி! நின்சரண்போற்றி; அடியேன் பேதைமையாலும் உரிமையாலும் பிழை செய்தேன்; ஆதலால் அடியேனை அன்னியரைப் போலப் புறக்கணித்து அருந்துயரத்து மூழ்கும்படி போக்குதல் அழகன்று; தேவரீர் பொறுத்தருள்க; பொறுத்தருள்க;

[illegible]ண்டாளப் புனற்பொய்கை தணந்தமலர்த் தாமரைபோல்
விண்டலத்துக் கதிவழுவி வீழ்ந்தபெருங் கடவுளர்போல்
கொண்டல்பொழி மழையொழிந்த குளிர்பண்ணைப் பசும்பயிர்போல்
அண்டர்தொழு மடிகளையா னகன்றிருத்த லழகேயோ.

உயிர்நீத்த வுடம்பென்ன வுணர்வொழிந்த வுயிரென்ன
மயிர்நீத்த மாவென்ன மணிநீத்த பணியென்னப்
பயிர்நீத்த சூலென்ன பகனீத்த தினமென்னச்
செயிர்நீத்த வடிகளையான் நீர்ந்திருத்த லழகேயோ.

புலனுகராப் பொறியேபோற் பூணணியா மடவார்போ
லலரணியா நீர்நிலைபோ லாயனிலா மகவேபோற்
பலன்விளையா நிலமேபோற் பண்ணுகராப் பாடல்போல்
நிலவுமடி களையடியே னீத்திருத்த லழகேயோ.

கொம்பரிலா வினங்கொடிபோற் கொழுங்கணிலாத் திருமுகம்போல்
வெம்பரிசி லாப்படைபோல் விரகினரில் லாவவைபோல்
பம்புமுயிர்க் குயிராகிப் பசுபதியாய்க் கணவனுமா
மெம்பெருமா னையுமடியே னிகந்திருத்த லழகேயோ."

என்று, ஆற்றமுடியாத பெருந்துயரத்தால் வருந்தி, வாடி அவசமுற்றனள். நாம் அவளது துன்பத்தைக் கண்டு மனமிரங்கி "பெண்ணே! வருந்துதலையொழிவாயாகவென்று தேற்றி, சிலகாலம் எம்மைப் பிரிந்து, ஞானக்ஷேத்திரத்தில் வசித்து அருந்தவஞ்செய்து நம்மை ஆர்வத்தோடும் பூசிப்பாய்; பின்பு நாம் அங்குவந்து உனக்கு அருள் செய்வோமென்று சொல்லிய அவ்வார்த்தையைக் கேட்டுக் கவலை சிறிது நீங்கித் தோத்திரங்களைச் சொல்லிப், பிழைசெய்ததனாலுண்டாகிய நாணினோடு மணிவாய் திறந்து பின்வருமாறு சொல்லத் துணிந்தனள். "தேவதேவனே! இந்திராதிதேவர்களும், விஞ்சையர் கின்னரர் கிம்புருடர்களும், கணநாதரும், துறவிகளுமாகிய யாவரும் வாசஞ்செய்து இருமைப்பயன்களையும் பெறும்படியான பெருமையையுடையது இக்கைலாயமலையல்லது வேறில்லையே; அதுமாத்திரமன்றி, உலகத்துள்ளோர் யாவரும், மனத்தின்கண் அன்புடையராய்த் துதிபாடியும், திசைநோக்கித் தொழுதும், தியானித்துப், பயனடைவது இக்கைலாயமல்லது வேறில்லையே; ஒப்பாரும் மிக்காருமில்லாத

இறைவனே! எல்லாத்தலங்களும் நீர் எழுந்தருளியதனாலன்றோ உயர்வடைவது; இக்கைலாயமலையோ தேவரீர் ஒருபொழுதும் நீங்காமல் எழுந்தருளியிருப்பது; இப்படிப்பட்ட சிறப்பினையுடைய கைலையங்கிரியை நீங்கி, ஞானதலத்துக்குச் செல்லும்படி அருள்செய்தது தேவரீர் திருவுள்ளத்திலுள்ள வெறுப்பினாலென்றே எண்ணி என் மனம் அஞ்சுகின்றது. அடியேன், அறியாது செய்தபிழை நீங்கும்படி பிராயச்சித்தமாக அருந்தவத்தையும் நின்பூசனையையும் இம்மலையில் வசித்தே நெடுங்காலம் விதிப்படி செய்வேன். இந்த என் விண்ணப்பத்தை அங்கீகரித்தருள்க"வென்று நீங்காத அன்போடும் பணிந்து உரைத்தனள். இவ்வாறு கூறிய பார்வதியைப்பார்த்து நாம், "சுந்தரி! கைலாயவரையின்கண் பலநாள் செய்த தவமெல்லாம் ஞானதலத்தினிடை நாழிகையொன்றிற் பலித்திடும்; அதுவுமன்றி அவ்விடத்து உனக்கு ஞானத்தையும் உபதேசிக்கக் கருதினோம்; ஞானத்தைத் தருதற்குரிய சிறந்த தலங்கள் வேறுள்ளனவாயினும், ஞானக்ஷேத்திரமென்னும் பெயரைத் தனக்கேயுரியதாகக் கொண்ட அந்த க்ஷேத்திரமே நற்பயனடைவதற்குரிய சிறந்த தலமாகும். ஆங்குச்சென்று தவஞ்செய்தற்கு ஏற்றகாலம் இதுவன்று; அது வருங்காறும் இங்கே உறைவாய்" என்று முன்னே சொன்னோம். அங்கே செல்லுதற்கு இதுவே தக்க சமயமாக நேர்ந்தது. இந்த விருத்தாந்தத்தைத் தெரிந்துகொள்வா"யென்று சிவபெருமான் திருநந்திதேவருக்கு அருள்செய்தனர். நந்தியெம்பெருமான், பரமசிவனுடைய அருளைத் தாங்கி ஞானதலத்தைத் தியானித்து எழுந்தருளி இருந்தனர். இப்பால் பார்வதிதேவியார் திரிபுரத்தைத் தீக்குஇரையாக்கிய மேருவில்லினர் இட்ட சாபத்தைப் போக்கவும் மெய்ஞ்ஞானத்தை யடையவும் சிவபூசை செய்யத் திருவுளம் பற்றினள்.

பார்வதிதேவி, கைலாசபதியாகிய பரமசிவனை வணங்கி, "பூதேசா! அடியேன், ஞானதலத்துக்குச் செல்ல ஒருப்பட்டேன்; தேவரீர் விடையளிக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, அகிலகாரணராகிய பரமசிவன், "மடவாய்! ஒப்பற்ற சிறப்புக்களோடு செல்வாய்; அஞ்சாதே: யாம் அவண் வருவோம்" என்றனர். அவள் சிவ
அகிலாண்டநாயகி பெருமான் திருவடிகளைத் திரும்பவும் வணங்கி
பூசித்தது. விடைபெற்றுக் கோயிற் கடைவாயிலெய்த, சிவபெருமான் ஆஜ்ஞைப்படி, திருநந்திதேவர், படைகளோடு முன்செல்லும்படி, பூதகணத்தலைவர்க்கு உத்தரவளித்தனர். கணநாதர் சிலர் அஞ்சத்தக்க சீற்றத்தோடு பெருந்திரளாகக் கூடினார்கள். திருமால்



முதலிய தேவர்கள் நெருங்கி வணங்கினர். சயை, விசையை முதலிய தோழியர் பக்கத்தே சூழ்ந்துசென்றார்கள். பேரிகைகள் முழங்கின. சங்கங்கள் சத்தித்தன. இனிய கீதங்கள் செவிகளுக்கு விருந்து செய்தன. வேதமுழக்கம் மேம்பாடுற்றது. மாதர்கள் நடனஞ்செய்தார்கள். பிச்சமும், குடையும், ஆலவட்டமும், சாந்தாற்றியும் நெருங்கின. வெண்ணிறமான கவரிகள் துள்ளின. துவசங்களின் கூட்டங்கள் ஆகாயவெளியை மறைத்தன. குறுகுறுநடந்துசெல்லும் குறளும் சிந்தும் முந்திச்செல்லவும் ஆணுடை தரித்துச்செல்லும் மாதர் வாளையேந்தி நெருங்கவும், பேடியர் பக்கத்தே நெருங்கிச் சூழவும், கிளிமுதலிய பறவைகளையுடைய கூடுகளைக் கையிலேந்திச் சில மாதர் மருங்கே துதித்துச் செல்லவும், மற்றைப்பணியாளர்கள் நெருங்கிச்செல்லவும், மாணிக்க விமானத்தில் ஏறி இறைவனைத் தியானித்துக்கொண்டு விரைவிற் சென்றனள். மார்க்கத்தில் ஆங்காங்குள்ள தலங்களில் இறைவனைவழிபட்டு, ஆங்காங்கு வந்து வணங்கிய அறிஞர்களுக்கு அருள்செய்து சென்று, ஞானக்ஷேத்திரமானது நெடுந்தூரத்தில் தோற்றுவதைக் கண்டார்கள். கண்டதும், பூமியிலிறங்கிப் பாங்கிமார் கொணர்ந்து கொடுத்த புஷ்பத்தைத் தனது செங்கையால் வாங்கித் தூவி கண்ணினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருக நமஸ்கரித்து பண் நிறைந்த துதிகளைச் செய்துகொண்டு மெல்லமெல்ல நடந்து சென்றனள். ஞானக்ஷேத்திரத்தின் எல்லையாகிய ஐந்துகுரோச அளவையும் பிரதக்ஷிணமாகச் சென்று, காவிரி தீர்த்தத்தில் முறைப்படிஸ்நானஞ்செய்து, பின்பு உடன்சென்றசேனைகளை ஆங்காங்கு நிறுத்தவேண்டிய முறைப்படி நிறுத்திச்சென்றனள். சென்றவள், அந்தக் க்ஷேத்திரத்தில் முத்துக்களும், வைரமும், பொன்னும் கிடந்து பிரகாசிப்பதையும், பசும்பொழில்களில் மேகங்கள் தங்கிக் கர்ச்சித்தலையும், தென்றல் வந்து உலாவுவதையும், கூட்டமாகிய குயில்களும், பூவைகளும், கிளிகளும், வண்டுகளும் இசைபாட மயில்கள் சிறைவிரித்து நடனமாடுதலையும், மலர்களில் வண்டுகள் குடைந்து பாடுதலையும் கண்டனள். வெண்ணாவல் மரத்தின் கனிகள் சிந்தி உடைந்து அதின் சாறு ஒழுகியோடுவதும் அம்மரத்தில் நிறம் பொருந்திய கனிகள் விளங்குவதுமாகிய விப்படிப்பட்ட பல வளங்களையும் பார்த்துக்கொண்டே சென்றனள். அங்கிருந்த முனிவர்கள், இந்த ஞான பூமியிலிருந்து தவஞ்செய்த பயன் பெற்றோமென்று அன்பு அதிகரிக்க எதிரே சென்று கைத்தலங் கூப்பித்தாழ்ந்தார்கள். பார்வதிதேவியும் தன் தோழியாகிய சுனந்தையைப் பார்த்து, "நாம்

பரமசிவனைப் பிரிந்தோமாயினும், ஒப்பில்லாத இந்தத்தலத்தை யடைந்தமையால், நீங்காத மகிழ்ச்சியைப் பெற்றோம்" என்றாள். முன்னமே அங்குச்சென்று தவஞ்செய்துகொண்டிருந்த பிரமன் அன்னையின் வரவினையறிந்து விரைந்துசென்று பணிந்து, விதிப்படி பூசனைசெய்து உமாதேவியைக் கேசாதி பாதம் துதித்து வணங்கி "அமுதமே! நின்னை யிங்குத் தரிசிக்கப்பெற்றேன்; யானே பெருந் தவஞ்செய்தேன்; யான்செய்த தவமும் வேள்வியும் பலித்தன; இனி யெனக்கொரு குறையுமுண்டோ? வேதாகமங்களாலும், தேவர்களாலும், திருமாலாலும், அறியப்படாத நீ இவ்வாறு எளிவந்த இது என்னே, மொழியாய்" என்று துதித்துக் குறையாத அன்போடு வினவிநின்ற நான்முகனைப்பார்த்து, உமாதேவி பின்வருமாறு கூறினள். "கமலமலர்மேவிய கடவுளே! கைலாசபதியாகிய பரமசிவனுடைய திருவடிகளை வணங்கி நான் ஒரு ஐயுற்ற பொருளை வினவினேன்; இறைவன், ஞானதலத்தை யடைந்து தவஞ்செய்வாய். யாம் அங்குவந்து இனிது விளக்குவோம் என்று கூறி விடுத்தமையால் இங்கு வந்தேன்" என்றனள். அப்படிச்சொல்லுகையில், யோகத்திலிருந்த சம்புமாமுனிவர் உணர்ந்து எழுந்து போற்றி வணங்க, அவருக்கு அருள்செய்து, பின்னர் பரமசிவனுடைய ஆஜ்ஞைப்படி பூசைக்குத்தொடங்கி, பக்கத்தில் நின்ற பரிஜனங்களைப் பார்த்து, சிவபூசைக்குரிய பொருளையெல்லாம் விரைவில் கொணரும்படி நியமித்துத் தான் காவிரியிலும் நவதீர்த்தங்களிலும் சென்று சிந்தை மகிழ நீராடினள். மணிக்கலன்களும், வாசனைக்கலவைகளும், பூம்பட்டுக்களும், அணியாளாய், வெள்ளாடையுடுத்து, திருநீறும் அக்கமாலையும் திருமேனிமுழுதுமணிந்தனள். அகத்திய தீர்த்தத்தின் முன்னிருந்து, இறைவி தவத்தினை யெய்தினள். பரிஜனத்தேவர்கள் பூசைக்குரிய பொருள்களையெல்லாம் ஞானக்ஷேத்திரத்தில்நிரப்பினர். சம்புமூலத்தின்கண் பரமசிவன் கோயில்கொண்ட முறையினையறிந்து விண்ணுலகிலுள்ள தச்சர்கள், மதில்களும், மாடங்களும், பூங்கோயில்களும், மலர்க்காவணங்களும், அழகுபெற நிருமித்தார்கள். சிலர் நீராடி மலர்களையாய்ந்து வேறுவேறு அமைத்து வைத்தனர். சிலர் பலவகை மாலைகளைச் சேர்த்து வைத்தார்கள். சிலர் சந்தனக்குழம்பைக் கஸ்தூரி முதலிய வாசனைப்பொருள்களைச் சேர்த்துச் சால்களில் பெய்து நிரைத்தார்கள். சிலர் அபிஷேகத்துக்குரிய பொருள்களைச் சேர்த்தார்கள். சிலர் நைவேத்தியத்துக்குரிய நால்வகையுண்டிகளையும் பொற்பாத்திரங்களில் துகிலால் மூடித்தொகுத்தார்கள்.



பூதகணங்கள் பல்வகை வாத்தியங்களை முழக்கினர். யாவரும் இவ்வகைப்பணிகளைச் செய்ய, அம்பிகை யெழுந்து ஆருயிர்த்தோழியர் கடலைப்போல் சூழ்ந்து செல்லவும், தேவர் பூமாரி பொழியவும், பிரம தீர்த்தத்தின் பக்கத்தே சென்றனள். பிரமதேவனையழைத்து "ஒப்பற்றவனே! யான் பூசிப்பதற்கு ஒரு சிவலிங்கத்தைத் தருவாயாக" வென்றனள். கேட்ட சதுமுகன், வணங்கி, "அகிலலோகங்களையும் பெற்ற வுன்னாலறியப்படாத பொருள்களுமுண்டோ? எல்லாமுணர்ந்த வுனக்குச்சொல்லுவதென்னே? எல்லாம் ஐம்பெரும் பூதங்களாலேயே நிகழ்வன. உனக்கு விருப்பம் செல்லுமாறு அப்பூதமைந்தனுள் ஒன்றினால் இயற்றுவாயாக" வென்றனன். அதைக் கேட்ட அம்பிகை இன்பச்சுவையை உதவுகிற முத்தியின் தன்மையைத் தெரிந்துகொள்ளும்படி பூசிப்பவளாகையால், சுவையைத்தருவதாகிய ஜலத்தைக்கொண்டு சிவலிங்கம் நிருமிக்க நினைத்து, அந்தத்தீர்த்தத்தினைச் சார்ந்தாள். எங்கும் நிறைந்த பூரணமாகிய அந்தத் தாணுவின் சரணங்களைத் தியானித்து, தீர்த்தத்தையே திரட்டியொளிமிக்க இலிங்கமாகச் செய்து தாபித்தனள். மங்கலவாத்தியங்கள் ஆர்ப்ப, மாதர்கள் கீதம்பாட, முனிவர்கள் ஆனந்தக் கூத்தாடினர்கள். சங்கரி, சம்புமுனியை யழைத்து அச்சிவலிங்கத்திற்கு நிழல்செய்யும்படி பணித்து, தீர்த்தங்களைக்கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்ய வெண்ணி, எல்லாத் தீர்த்தங்களும் பெருகும்படி தியானித்தனள். உமையவளுக்குப் பரமசிவனிடத்துண்டாகிய பக்தி பெருகுவது போல, எல்லாத் தீர்த்தங்களும் பெருகிவந்தன. அதற்கு ஸ்ரீமத்தீர்த்தமென்று பெயருண்டாயிற்று. அந்த ஸ்ரீமத்தீர்த்தத்தையும் யானைகளின்மேற்கொண்டு வந்த மற்றைத் தீர்த்தங்களையும் சுகந்தங்களும் மலர்களும் பெய்தமைத்துப் பூசித்து, ஆகமவிதியால் அபிஷேகஞ் செய்து மெல்லிய வஸ்திரத்தால் திருவுருவின் ஈரம்புலர்த்தி, அரைநாணுங் கோவணமும் பட்டும் சாத்தி, சந்தனக்காப்பணிந்து அதன் மீது விபூதியைப்பூசி, திருவாபரணங்களும் மாலைகளும் வேறுவேறு எடுத்து அலங்கரித்தனள். அறுசுவை கொழிக்கும் நால்வகையுண்டிகளையும் நிவேதனஞ்செய்து, தாம்பூலமளித்து, பலவகைத் தீபங்களும் முறைப்படி சுழற்றி, குடைமுதலிய உபசாரங்களனைத்துஞ் செய்து வாத்தியங்களைக் கோஷிக்கச்செய்து, ஊர்வசிமுதலிய தேவமாதர்களை நடனஞ்செய்வித்தனள். இவ்வாறு தினந்தினம் காலங்கள் தோறும் பூசை செய்துகொண்டு ஒழுகுநாட்களில் ஒருநாள், பூசை முடிந்தபிறகு, தான் இறைவனைப் பிரிந்த முறைமையை நினைந்

து வெய்துயிர்த்து, புளகமுற்றுத் துதிப்பாளாயினள்.

"கலங்கிப் புலவோர் பெரிதுன் குலையக் கறவுந் தகுவோர் குலவாழ்க் கையுறும்
கலங்கொள் புரமூன் றமொருங் கவிய மாயப் படைதொட் டமலர்க் கரனே
துலங்குங் கிரணப் பனிமா மதியோன் றொடர்சா பமறத் தவஞ் செறிவித்
திலங்கும் புகழ்ஞா னதலத் தடியேற் கெளிவந் தருளா மையியைந் திடுமே.
விண்ணு டுநெடும் புவியுந் துயர வெள்ளிக் கிரியைப் பெயர்வித் திடுவோன்
கண்ணூர் முகமும் புயமுஞ் சிரமுங் கடிதா கநெரித் தருள்கால் விரலோய்
புண்ணு டியவர் குலிசப் படையோன் புகர்வன் கொலைபோக் கிவரங் கள்பல
வெண்ணு தருண்ஞா னதலத் தடியேற் கெளிவந் தருளா மையியைந் திடுமே"

என்று கரைந்து கரைந்து உருகி இடைதள்ளாடவும், விழியினின்றும் புனல்சோரவும், கைகள் சிரமேற்குவியவும், புளகங்களுண்டாகவும், சோகமடைந்தாள்; சிவபெருமான் விரைந்து வெள்விடைமேல் பிரசன்னமாயினர்.

பூதகணம் புடைசூழப் புத்தேளிர் பொழிகின்ற
சீதமலர் வெளிதூர்ப்பத் திசைமுழுது மிசைதேங்க
வேதமுனி வார்பழிச்ச மெய்யன்பர் குதுகலிப்ப
நாதரினி தருள்காட்சி நயனமலர்ந் தெதிர்கண்டாள்.

தம்பிரான் எதிர் தோன்றலும், அங்கமனைத்தும் பூரித்தனள். அகிலாண்டநாயகி விரைந்து திருவடிகளில் வணங்கி ஒருபால்நிற்ப, பரமசிவன் கிருபாநோக்கமளித்து, பெருங்கருணையினால், விரும்பிய வரங்களைக் கேட்டுக்கொள்ளும்படி பணித்தனர். எல்லாவுயிர்களுக்குந் தலைவனாகிய பரமசிவனையே தனக்குத் தலைவனாக் கொண்டவம்மை, நாயகருடைய திருவருளை நோக்கி எல்லாவுலகங்களுமுய்யும்படியாகச் சில வரங்களைக் கேட்பாளாயினள்.

"தேவதைகள் தொழுது ஏத்தும் எம்பெருமானே! தேவரீர் இத்தலத்தில் கொண்டருளியிருக்கும் அமுதேசனென்னும் திருநாமத்தைக் கேட்டவர்கள், சாலோகபதவியையும், அமுதேசனென்னும் அருட்குறியைத் தரிசித்தவர்கள் சாமீபபதவியையும், தியானத்தோடு தரிசித்தவர்கள் சாரூப பதவியையும், அதைப்பூசித்தவர்கள் தேவரீ உமாதேவியாருடைய திருவடிக் கீழ்மாறாத சாயுச்சிய பதவியையுமடைக. பெருமானே! ஒருநாளைப் பூசைக்குரிய

வரம்பெற்றது.

பொருள்களையுதவினோர், இம்மையிலே விரும்பிய போகங்களையெல்லாமனுபவித்து, சிவலோகத்தில் நெடுங்காலம் உறைந்து நினைத்தவையெல்லாம் கிடைக்கப்பெற்றுத் திருவருளில் சேர்க; இந்த ஸ்ரீமத்தீர்த்தத்தைப் பார்த்தாலும், தொட்டாலும், நீர்வேட்கையால் குடித்



தாலும், ஊர்வனவாகிய பிராணிகளும் முத்திநிலையைப்பெறுக. தீர்த்தத்தின் பெயரைக் கூறினோரும் எல்லா நலங்களையும் பெற்று முக்தியைச்சேர்க. ஸ்ரீமத்தீர்த்தத்தின் பக்கத்தேயிருந்து தவஞ்செய்தோர்க்கு எல்லையில்லாத பயனுண்டாகுக. ஒரு பசுவைப் பிராமணனுக்கு விரும்பிக்கொடுத்தவர்க்கு அசுவமேதஞ்செய்த பயனுண்டாகுக. திலதானஞ்செய்தவர்க்கு எல்லாப்பாவமும் நீங்குக. சுவர்ண தானஞ்செய்தோர் சூரியமண்டலத்தில் வாழ்க. ஆச்சியதானஞ் செய்தோர்க்கு அக்கினிட்டோமத்தின் பயனுமாக. வஸ்திரதானங்கொடுப்போர், தீர்க்காயுளையும், செல்வத்தையும் அடைந்து, இறுதியில் வருணபதத்தை அடைக. தானியதானஞ்செய்வோர், எல்லாரும் பக்திசெய்யத் தக்க தெய்வமாகுக. வெல்லத்தைத் தானஞ்செய்வோர், எல்லாப் போகங்களையும் அடைக. வெள்ளியைக் கொடுப்போர், சந்திரபதத்தை யடைக. பூதானஞ்செய்தோர், இந்திரனாகி விண்முழுதையும் ஆளுக. இலவணதானஞ் செய்வோர் எல்லாத்துன்பங்களும் நீங்கி இன்பத்தை யடைக. கன்னிகாதானஞ் செய்வோர் விஷ்ணுபதத்தில் வாழ்க. அன்னதானஞ் செய்வோர் ஒவ்வொரு அன்னத்திற்கு ஒவ்வொரு கற்பகாலம் சிவலோகத்தில் விரும்பிவாழ்க. சிவலிங்கத்தைத் தானஞ்செய்வோர் இவ்வுலகத்தில் எல்லாப்பொருள்களையுமடைந்து ஈசுவர பதத்தில் இனிது வாழ்க. சிவராத்திரியில் சிவலிங்கத்தைப் பூசைக்குரிய உபகரணங்களோடுந் தானஞ்செய்வோரும், அந்தத் தானத்தையேற்றுப் பூசைசெய்வோரும், அப்போதே சீவன் முத்தராகுக. உருத்திராக்ஷ மணிகளை ஈவோரும் ஏற்போரும் கைலாசத்திலும், சிவபுரத்திலும் ஒவ்வொரு மணிக்குப் பத்துவருஷமாக வசித்து வாழ்க. இத்தலத்தில் சிவஞானத்தை யுபதேசிப்போரும், ஏற்றுக்கொள்வோரும் வாதனைகளற்று, ஆனந்தவெள்ளத்தில் மூழ்குக. இந்த ஞானக்ஷேத்திரம் அமுதேசுவரமென்னும் பெயரையும் அடைக. அமுதேசமென்னப்பட்ட இத்தலத்தின் எல்லையாகிய ஐந்து குரோசத்துக்குள் பிராம்மணருடைய குடும்பத்தைப் பிரதிஷ்டை செய்தோர், துன்பங்களெல்லாம் நீங்கித் தேவர்களெல்லாம் அழுக்காறடையப் பிரமத்தின் வாழ்க. அவ்வந்தணர்க்குப் பூமியைத் தானஞ்செய்வோர் சிவசாரூப்பியத்தோடு சீவன்முத்தராகுக. திருமாலைப் பிரதிஷ்டை செய்வோர், ஸ்ரீவைகுந்தம் சேர்ந்து வாழ்க. ஒப்பற்ற சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வோர் இம்மை மறுமைப் போகங்களை நுகர்ந்து மோக்ஷத்தைப் பெறுக. இந்தப்புண்ணிய தலத்தில் வசிப்போர், உமது திருவடியைப் பிரியாராகுக." என்று இவ்

வாறு வெவ்வேறு வரங்களை விரும்பி யாசித்துத் துதித்து, அம்பிகை, நாயகருடைய திருமுகத்தை நோக்கி "நம்பனே! நான் முன்கூறிய ஓர் வினவுக்கு இந்தத் தலத்தில் வந்து உத்தரமளிப்பதாகப் பணித்தீரன்றோ. அடியேன் தெளியும் வண்ணம் அதைத் தெரிவித்தருள வேண்டும்" என்று வணங்கிக்கூறினள்; அதுகேட்ட தேவதேவன் உமாதேவியைப் பார்த்து "யாசித்த வரங்களையெல்லாம் கொடுத்தோம்; நீகேட்ட மற்றொரு வினவிற்கு விடையளிப்போம்." என்று கூறிப் பிறகு நாவல் மரவடிவாய் நின்ற சம்புமுனிவரை நோக்க, அம்முனிவர் அக்குறிப்பை யுணர்ந்து, வணங்கியெழுந்து, களிப்பினால் உரைக்கத்தொடங்கினர். "என் சிரசு வெடித்தெழுந்த இந்த நாவல் மரத்தில் தேவரீர் கருணையோடும் எழுந்தருளியிருந்த தன்மையினாலே, அடியேனுய்ந்தேன்; அடியேனும், என் முன்னோர்களும் உய்ந்தோம். அமுதீச்சுரமென்னும் தலம் ஜம்புவீச்சுவரமென்று பெயர் பெறவும், என் நிழலில் தேவரீர் என்றும் நீங்காது வைகவும் வரம் அருளல்வேண்டும்." என்று வரங்களை யாசிக்க, எம்பிரான் அவற்றை யெல்லாம் அளித்துப் பக்கத்தில் துதிசெய்து நின்ற நான்முகனை அருளிப்பார்க்க, பிரமன் தாழ்ந்தெழுந்து, "அடியேனுய்ந்தேன்; அகிலகோடிகளும் உய்ந்தன. மாசிமாதத்தில் வருகின்ற சந்திரனுக்கு உரியநாளாகிய மிருகசீரிஷ நக்ஷத்திரத்தில் இடபக்கொடியை யேற்றி, பிறகு பங்குனிமாதத்தில் எனக்குரியதாகிய உரோகிணி நக்ஷத்திரத்தில் அக்கொடியை யிறக்கி, அத்தினத்தில், என்பேரால் விளங்குகிற தீர்த்தத்தில் யாவரும் ஸ்நானஞ்செய்யவும், அவர்கள் விரும்பிய பலவரங்களையும் அடையவும் வரமளிக்கவேண்டுகிறேன்." என்றனன். பங்கயாசனன் இங்ஙனம் சொல்லக்கேட்ட பரமசிவன், "அங்ஙனமே ஆகுக." என்று அநுக்கிரகஞ்செய்து, பக்கத்தில் நின்றவர்களை யெல்லாம் பார்த்தருளி, அவரவர் அபேக்ஷித்த வரங்களையெல்லாம் அளித்தபின், ஒப்பற்ற சிவஞானத்தைப் பார்வதிக்கு உபதேசிக்கத் தொடங்கினர்.

சந்திரகலாதரராகிய பரமசிவன் நந்திகேசுவரருடைய முகத்தைப் பார்க்க, திருநந்திதேவர் தாழ்ந்தெழுந்து, பரமசிவனுடைய திருவுள்ளக் குறிப்பையறிந்து, அங்கிருந்தோரை யெல்லாம் அகலநீக்கினர். சம்புமுனிவரும் திருநந்திதேவரும் தேவர்களாலும் செய்தற்கருமையான பெருந்தவஞ் செய்தோராதலின், உமாதேவியோடிருந்து அவ்வுபதேசத்தைக் கேட்கும்படி அருளப்பெற்று, சிவபெருமான்

பார்வதிதேவி ஞானோபதேசம் பெற்றது.



எழுந்தருளியிருந்து உபதேசிப்பதற்காக ஒரு மண்டபம் நிருமித்தார்கள். சிவபெருமான், அம்மண்டபத்து அமைக்கப்பெற்ற ஒரு சிறந்த ஆசனத்தில் வீற்றிருந்து, உமாதேவியை நோக்கி, "நீ யோக ரகசியத்தை வினவினை; அறுவகைச் சமயத்தோர்களும் உய்யும்படி அதைச் சொல்லுவோம்; கேட்பாய்." என்று உபதேசிக்கத்தொடங்கினர். "உலகங்களெல்லாம் நமது அருள்வழியே நடப்பனவாதலின், கூத்தாட்டத்தைக் கற்பிப்பவன் முன்பு தான் ஆடிக்காட்டுதல் போல, முதலில் நாமே அநுஷ்டித்து உலகத்தைப் பயிற்றவேண்டும்; ஆகையால், ஆன்மகோடிகள் போகத்தை நுகரும் பொருட்டு உன்னைத் தழுவிப் போகியாகவும், யோகத்தைச் செய்து மெய்ஞ்ஞானத்தையடைந்து வீடடையும் பொருட்டு யோகியாகவும் இருந்தோம்." என்று கூறலும், உமாதேவி, அகமகிழ்ந்து வணங்கி "நம்பனே, மலத்தழுந்திய சீவான்மாக்களெல்லாம், போகங்களை நுகர்ந்து, உமது அருளால் ஞானத்தையடைந்து மோட்சத்தைப் பெறுவார்களென்று கூறினீர். மலம் என்பது யாது? ஜீவன் யாது? மாயை யாவை? கர்மம் யாது? மெய்ஞ்ஞானம் யாது? முத்தி எத்தன்மையது? இவைகளை யெல்லாம் அடியேன் உள்ளபடியே அறிந்துகொள்ளும்படி அருளிச்செய்யவேண்டு"மென்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவற்றின் இயல்புகளையெல்லாம், சந்தேகவிபரீதமறத் தெளியும் வண்ணம், உபதேசித்தருளினர். அம்பிகையும், திருநந்திதேவரும், சம்புமாமுனிவரும், திருவருளைத் தியானித்துத் தெளிந்து நிஷ்டைகூடி முப்பாழுமற்று மேலே பெரும்பாழ் என்னும் சுத்தான பொருளொடு இரண்டறக்கலந்து, சீவன் முத்தி பரமுத்தியென்று கூறப்படும் இரண்டுவகை முத்திகளையும் பொருந்தி, சிவகைங்கரியங்களைப் புரிந்து மகிழ்ந்திருந்தார்கள்.

ஜம்புவிருட்சத்தின் நிழலில் எழுந்தருளியிருக்கும் ஐந்து திருமுகங்களையுடைய பரமசிவனுக்கு, நான்கு திருமுகங்களையுடைய பிரமன், திருவிழாச்செய்ய விரும்பித் திருமதில் முதலாகிய பல உறுப்புக்களும், மண்டபங்களும், பிராகாரங்களும், மாடமாளிகை களும், ஆலய நூல் விதிப்படி அமைத்து, சுவர்க்க மும் காணும்படி, நகரத்தை நிருமித்தான். அகிலாண்டேசுவரியின் திருவுருவத்தை நேரில் தரிசித்தபடியே தியானித்து அமைத்துப்பிரதிஷ்டை செய்து பூசித்து, விநாயகக் கடவுளுக்கும் குமாரக்கடவுளுக்கும் மற்றப்பரிவார தேவதைகளுக்கும் உருவங்களமைத்துப் பிரதிஷ்டை செய்தனன். தேர், யானை, குதிரை, தங்கப்

பிரமதேவன் திருவிழாச்செய்தது.

பல்லக்கு, குடை, கொடி, சாமரம் முதலிய சிறப்புக்களையெல்லாம் மிகுதியாகத் தொகுத்து, திருவிழாவைக் காணவரும்படி தேவர் முதலியோர்களுக்கு உத்ஸவ பத்திரிகைகளை யனுப்பினன். திருமுகத்தையேற்று உபசரித்து வணங்கி ஆனந்தமுற்று, தேவர்களும் எட்டுத் திக்குகளிலுள்ளவர்களும் நாகர் முதலியோரும் வேந்தர்களும் வந்து நெருங்கினார்கள். பிரமதேவன் மாசிமாதத்துக் கிருத்திகை நக்ஷத்திரங்கூடிய தினத்தில் பலவகை வாத்தியங்களும் கோஷிக்க மிருத்ஸங்கிரகணமும் அங்குரார்ப்பணமுஞ்செய்து, அடுத்த தினமாகிய உரோகிணியில், படத்தில் விருஷபத்தை யெழுதிப்பூசித்து, துவஜாரோகணஞ் செய்தனன். அன்று மாலைமுதல் விநாயகாதி தேவதைகளுக்குத திருவிழா நடந்தது. பதினேழாந்திருநாள் ஸாயங்காலத்தில், எட்டுக்கொடிகளைப் பூசித்து, பதினெட்டாந்திருநாள் காலையில், சுவாமி எழுந்தருளி எதிரே வந்துநிற்க, அந்த எட்டுக்கொடிகளையும் ஏற்றினன். பதினெட்டாநாள் காலைமுதல் சிவபெருமானுக்குத் திருவிழா நடக்கத்தொடங்கியது. அன்றுமுதல் எம்பிரான் காலையிலும் மாலையிலும் பலவாகனங்களில் திருவுலாப் போந்து இருபத்தேழாநாள் உரோகிணி நக்ஷத்திரத்தன்று மத்தியானத்தில் பிரமதீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருளினார். அன்று மாலை எட்டுக்கொடிகளும் இறங்கின. இருபத்தெட்டாநாள் மாலை முதல், மூன்றுதினம் மாலைப்பொழுதில், பள்ளியறைப் பெருமான், திருச்சிவிகையில் உலாப்போந்தனர். முப்பத்தோராந்தினம் முதல் மூன்றுநாள் சண்டேசப்பெருமானுக்கு திருவிழா நடந்தது. அன்று இராத்திரியில், நான்முகன் மற்றைக் கொடியையும் இறக்கினன். முப்பத்தேழாநாளில், ஐம்புநாதர் உட்பிரகாரமுதல் பஞ்சப்பிரகாரங்களிலும் திருவுலாப்போந்தார். முப்பத்தெட்டாநாள் நீராடிப் புஷ்பசந்தனாதிகளை யணிந்து சுவையுள்ள நிவேதனங்களைக் கொண்டருளி விடாயாற்றியுற்சவம் கொண்டருளினர். அன்று சாயங்காலம், முத்துப்பந்தரின் நிழலிலே தேவர்கள் போற்றப் பவனிவந்து இறைவர் உமாதேவியோடு திருக்கோவிலில் எழுந்தருளியிருந்தார். இவ்வாறு ஆதிப்பெருஞ்செல்வராகிய பரமசிவனுக்குப் பிரமதேவன் சிறப்பாகச் செய்த திருவிழாவைத் தேவர்களும் மனிதர்களும் பிரமோற்சவமென்று வருஷந்தோறுங் கொண்டாடத் தொடங்கினர். திருவானைக்காவின்கண் எழுந்தருளிய சிவபிரானுக்கு ஆதிப்பிரமன் இனிதாகச் செய்த திருவிழாவைச் சிறப்புறச்செய்தோரும், தரிசித்தோரும், எல்லாத்துன்பங்களுமற்று, இவ்வுலகத்தில் அரசராய் வாழ்ந்து,



மறுமையில் சுவர்க்கானுபவங்களை யனுபவித்துப், பின்பு பேரின்ப வீட்டையடைவர். முதல்வனுடைய திருவிழா முடிவில் பிரம தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தோர் உலகமுழுது மொருகுடையிலாளும் விண்ணுலகில் அரசு செலுத்திப் பேரின்பநலத்தைத் தருகின்ற முத்தியில் பெறுவர். சந்திர சூரியர் சேர்கின்ற அமாவாசியை தோறும் ஒருவருடம் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வெண்ணாவல் நிழலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கினோர் பாவமும் பிணியுநீங்கி ஆனந்தவெள்ளத்திலழுந்துவார்.

இராமன் பூஜை செய்தது.

திருமால், தேவதைகளுக்குப் பகைவனும் தோலாவலிமை படைத்தோனுமாகிய இராவணனை வதஞ்செய்தற்பொருட்டு, அயோத்தியில் தசரதசக்கிரவர்த்திக்குப் புத்திரனாக அவதரித்து, தந்தையின் ஏவலால் வனத்தில் சஞ்சரிக்கும் நாளில், இராவணன் சீதையையெடுத்துச் சென்றனன். இராமபிரான் மிக்கத்துயரமுற்று, பரமசிவனைப் பூசித்துப்பகைமுடிக்கும் ஆற்றலைப்பெற்று, இளைய பெருமானுந் தானும் விரைந்துசென்று, கிஷ்கிந்தையையடைந்து, சுக்கிரீவனோடு சிநேகஞ்செய்து, சமுத்திரமீது அணைகட்டி, வானரசேனையுடன் இலங்கையில் பிரவேசித்து, இராட்சஸப்படைகளையும், கும்பகர்ணனையும், இராவணனையும் வதஞ்செய்து, இலங்காராச்சியத்திற்கு விபீஷணனை அரசனாக்கி, சீதாதேவியுடன் வழிக்கொண்டு மீண்டனன். மீளும்போது, இராவணனும், கும்பகர்ணனும் பயங்கரமான வடிவத்தோடு, தண்டத்தைக் கையிலேந்தி, இடிமுழக்கம்போலக் கர்ச்சித்துத் தன்னை வளைந்து வருதலைக்கண்டு, இறந்த அரக்கர்கள் மாயையால் மீண்டும் உடல்பெற்று எழுந்தார்களோவென்று பயந்து உற்றுநோக்கி அவை அவர்களுடைய சாயையென்று துணிந்து அவைகளையும் தொலைக்கக் கருதி, இராமேசுவரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசிக்க, இராவணனுடைய சாயை மாத்திரம் நீங்கியது; கும்பகர்ணனுடையசாயை நீங்காமல் பின்தொடர்ந்து வருத்த, இதை எங்ஙனம் போக்குவோம் என்று கவலையுற்று நடந்து ஜம்புகேசுவரத்தின் ஐந்துகுரோச அளவில் சென்றவுடன் அந்தச்சாயை சூரியனைக்கண்ட இருள்போல நீங்கிற்று. தசரதராஜன் புதல்வனாகிய இராமன், அந்தச் சாயை தன்னை விட்டு நீங்கியதுகண்டு, மிக்க உவகையுற்று அந்தத்தலத்திலுள்ளே புகுந்து, காவிரியில் தீர்த்தமாடி, பின்பு அங்குள்ள நவதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து பரமசிவனுடைய சந்நிதியில் தாழ்ந்து வணங்கி, அமுதலிங்கத்தையும் அகிலாண்ட நாயகியையுந்தரிசித்து, ஆனந்

தக் கடலுள் ஆழ்ந்தனன். பின்னர் அங்கிருந்த முனிவர்களைக்கண்டு, அந்தச்சாயை தன்னைத்தொடர்ந்து வருத்தினதையும், இத்தலத்திற்கு எல்லையுள் வந்தவுடன் அது நீங்கியதையும் தெரிவிக்க, அவர்கள் "ஸ்தலமும், தீர்த்தமும் மூர்த்தியும் ஆகிய மூன்றினும் சிறந்ததாகிய இத்தலத்தில், பேயும், பிரம்மராக்ஷஸும், நோயுமாகிய தீங்குகள் அணுகமாட்டா; ஆதலின், அச்சாயை நீ இவ்வெல்லையைக் கடந்து சென்றால் உன்னை நெருக்கும்; வந்தமே! அது எவ்விடத்தும் நீங்கும் படியான முயற்சியை இத்தலத்திலேயே செய்வாயாக; சிவலிங்கப் பிரதிஷ்டையைச் செய்து, அச்சிவபிரானிடத்துச் சிந்தையை நிறுத்தி, நீராலும் மலராலும் ஆராதிக்கிற பூசையின் பலத்தினால் இக்கொலைப் பாவத்தைப் போக்கிக்கொள்வாயாக" என்றனர். முனிவரர்கள் இங்ஙனம் கூற, திருமால், விருப்புவெறுப்பற்ற பரமசிவனைப்பூசிக்க விரும்பி, அங்கதனை யழைத்து "நீ யிங்கே ஒரு சிவலிங்கத்தைக்கொண்டுவருக" என்று ஏவி, சன்னிதிக்கு மேல்பக்கத்திலுள்ள ஓர் தீர்த்தத்தைக் கண்டு அதன் கரையில் தங்கினான். அங்கதன் சாளக்கிராமகிரியை யடைந்து, ஒரு மரகதலிங்கத்தைக் கைக்கொண்டு இராமனிருக்கும் இடஞ்சேர்ந்தான். இராமபிரான் சிற்ப விதிப்படி சிவலிங்கத்தின் அளவுக்கேற்ப ஆலயமமைத்து ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்து அன்பினாலே மனங்கரைந்து,

"எண்ணி லுயிர்க்குந் தனதருளை யீயும் பொருட்டுப் பலவுருவாய்
நண்ணி யுலகுக் கைந்தொழிலு நடத்தி யந்த வுலகத்திற்
பண்ணி னிசையும் மலர்மணமும் பழத்தின் சுவையு மெனநிற்கும்
அண்ண லெவனே யவனடியை யன்பி னோப் பரசுவேன்."

"மாகாய வாசுகிநாண் மாமேருச் சிலைமாயப் பகழி யேந்தி
யேகாத நிலத்திண்டேர்க் கிரவிமதி கோத்தியக்கி யெயின்மூன் றட்டுப்
போகாத புகழ்நிறுத்த புண்ணியனைப் புகழ்ந்கால காலன் றன்னை
யாகாச கேசனைமா புருடனைமா கேச்சுரனை யறியா நின்றேன்."

"கங்கை நதியு மிளம்பிறையுங் கதிர்க்குஞ் செடிலத் திடைவிளங்க
மங்கை யுமையா ளிடப்பாலின் வயங்க வடியேன் பூசைகொள
லிங்கண் விரைவி னெழுந்தருளல் வேண்டு மடியா ரிரும்பேறே
செங்கை மலரி னழலேந்துஞ் செல்வா தேவர் சிங்கமே."

"மங்கல மருளு மஞ்சனே தேவ தேவனே மலிந்தவெண் பாவ
மிங்குமுற் றகற்றிச் சுகத்தினை யருள்க வெம்பிரா னெனக்கருள் சுரக்க
வெங்கிருந் தனினு மங்கனே விரைய வெழுந்தருள் சொரூபராய் விடையூர்த்
தங்கவெண் கவசா யுருத்திராய்த் துலங்கிய நும்மையா னொழுதேன்."



"இராசதவன் குணத்தோடு முலகமெலாம் படைப்பவனு யிருந்தாய் போற்றி
பராவலுறுஞ் சாத்துவிதத் தொடுமுலகம் புரப்பவனாய்ப் பயின்றாய் போற்றி
விராவியதா மதகுணத்தி னொடுமழிக்கு முருத்திரனாய் மிளிர்ந்தாய் போற்றி
வராகமுத லுருவாயு முகந்தொறும்புல் லானைவதைக் கின்றாய் போற்றி."

"எவ்வாயுந் திருமுடிக ளெவ்வாயு மொளிநுதலெவ் வாயுங் கண்கள்
எவ்வாயுந் திருச்செவிக ளெவ்வாயுஞ் செய்வாயெவ் வாயுந் தோள்கள்
எவ்வாயுந் திருக்கரங்க ளெவ்வாயுந் திருவயிறெவ் வாயுந் தாள்கள்
எவ்வாயுந் திருமேனி யெனநிற்குந் தனிமுதல்வ னெம்மைக் காக்க."

"அஞ்சலென வமைத்தவொரு கரதலமும் வரதமென வமைத்த கையும்
கஞ்சமல ரேந்துமிரு கரதலமு மூற்றிருக்குங் கருணை நோக்கும்
பஞ்சிகமழ் சீறடியு மழகெறிப்ப வணிகலன்கள் பலவுந் தாங்கி
வஞ்சமல விருள்சீக்கு மகிலாண்ட நாயகிதன் வடிவம் போற்றி."

எனப்பல தோத்திரங்களைச் செய்ய, அவற்றைச் சிவபெருமான் திருச்செவியேற்று, உமாதேவியாரோடும் விருஷபாரூடராய்க் காட்சி கொடுத்தருளினர். தாசரதி, தரிசித்த கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் பெருக, மனங்கரைந்துருகி வணங்கினான். சிவபெருமான், அருள்கூர்ந்து "இராமனே! நீ யென்னைத் துதித்தபடி, எவர் துதித்தாலும், அதை அன்போடு கேட்டாலும், பெரும்பாவங்களும் தீயின்முன் பஞ்சுபோல வெந்து நீங்க, இம்மை மறுமைப்பயன்களை யடைவர். அடர்த்துவந்த சாயையானது நீங்க, நீ அயோத்தியடைந்து நெடுங்கால மரசு செலுத்தி மனிதர்களுக்குத் தெய்வமாய், அவரவர் வேண்டிய வரங்களை யெல்லாம் வழங்கி, அந்தத்தில் முத்தியைப் பெறுவை. மன்னவனே! செல்லுவாய்." என்று விடையளித்துச் சிவபிரான் அந்தர்த்தானமாயினர். இராமபிரானும் பூசையை முற்றுறச் செய்து, அயோத்தியை யடைந்து அரசாட்சி புரிந்து வந்தனன். நீலநிறத்தையுடைய திருமாலால் பக்தியோடு பிரதிஷ்டை செய்து பூசனை செய்யப்பட்ட நீலவிண்டு ஈசுவரரைப் பணிந்தவரும், அவர் திருநாமத்தைச் செபித்தோரும், தரிசித்தோரும், கொலைப்பாதகங்களினின்றும் நீங்குவார்.

தேவலோகத்திலே, இந்திரனுடைய கொலு மண்டபத்தில் தேவர்களும் முனிவர்களும் வந்து கூடினார்கள். வசிஷ்டரும் விசுவா பாசான் வழி மித்திரரும் வந்திருந்தார்கள். அங்கிருந்தவர்களிற் பட்டம். சிலர், பூலோகத்தில் சத்தியந்தவறாதவர் யாரென வினவினர்: வசிஷ்டமுனிவர், அரசர்க்கரசனாகிய அரிச்சந்திரன்

ஒருபோதும் பொய்யுரையானெனக் கூறினர்: அதுகேட்ட விசுவாமித்திரர், "அவனைப் பொய் சொல்லும்படி செய்வேன்" என்றனர். வசிஷ்டமுனிவர் "விசுவாமித்திரனே! அரிச்சந்திரன் பொய்சொல்லுவானாயின் ஸுராபானஞ்செய்த பிராமணனைப்போல ஒர் சிறவஸ்திரத்தையுடுத்து, எமன் திசையாகிய தெற்கு நோக்கிச் செல்வேன். இதற்குத் தேவர்களே சாக்ஷி" என்றனர். விசுவாமித்திரரும் அவ்வரசன் நெஞ்சறியப் பொய்சொல்லும்படி செய்யேனாயின், நீ சொன்ன சபதமே எனக்குமாகுக." என்றுகூறிச் சுவர்க்கத்தினின்றும் பூலோகத்திற்கு வந்து, அரிச்சந்திர ராஜனைப் படுத்து, அவனைப்பல துன்பங்களுக்குள்ளாக்கவும், அவன் சத்தியத்தினின்றும் தவறுனாயிலன். தேவர்கள் பூமாரிபெய்து அவனுக்குப் பலவரங்களை ஈந்தார்கள். வேந்தனும் அவர்களை வணங்கி, "கடவுளர்களே! முனிவர் முன்புசெய்த சபதத்தை அடியேனுக்காகச் செய்யாதொழிதல் வேண்டும்." என்று வேண்ட, தேவர்கள் அரசனுடைய பரிவைப்பார்த்து, முனிவர்செய்த பிரதிக்ஞையைச் செய்யவேண்டாமென்றார்கள். அரசன், தேவர்கள் கொடுத்த வரங்களைப்பெற்று அயோத்திசென்று அரசாட்சி செய்தனன். விசுவாமித்திரர், நாணம் தலைக்கொண்டு, வசிஷ்டரிடத்துப் பகைமைபாராட்டி, துன்மந்திரங்களை ஜபித்து ஒரு அபிசாரயாகத்தையியற்றினர். அந்த யாககுண்டத்திருந்து ஒருபூதம் வெளிப்பட, அதைப்பார்த்து, "வசிஷ்டரைக் கொன்றுவருவாய்" என்றனர். அந்தப்பூதம் போய்ப்பார்த்தபொழுது, வசிஷ்டர் அங்கு இல்லை. அவர்குமாரராகிய சக்தி நித்திரைசெய்து கொண்டிருக்கக்கண்டு, அவரைக்கொன்று அப்பூதம் விசுவாமித்திரரிடம் சென்றுகூறி, அவருக்கு மகிழ்ச்சிமைவிளைவித்தது. சக்தி முனிவரின் மனைவியும் ஏனையோரும் மிக்கவிசனமடைந்து வருந்தும்போது, வசிஷ்டமுனிவர் வந்து நிகழ்ந்ததுதெரிந்து, ஆறாத்துயரமுற்று, சோகக்கடலில் அழுந்தினர்: அத்தருணத்தில், நான்முகன் அங்குவந்து வசிஷ்டமுனிவரைத்தேற்றி, பின்வருமாறு சொல்வானாயினன். "சக்தி இறந்தானென்று துக்கத்தால் க்லேசமடையாதே; உன்னுடையகுலம் மேம்பாடு அடையும்படி உன் மருகி கருப்பவதியாயிருக்கிறாள். அது ஆண்மகவாகப் பிறக்கும். அவன் அரக்கர்கள் குலத்தை வேரொடு களைவான்; நீ, அவன் காதில்படும்படி வேதங்களையெல்லாம் ஓதுதி" என்றனன். சற்குணசம்பன்னராகிய வசிஷ்டமுனிவர், ஒருவாறு துயர்நீங்கி மற்றவர்களையுந்தேற்றி, சக்தியின் மனைவி காதில் படும்படி வேதங்களைச் சாங்கமாகஓதினர். கருப்பத்திலிருந்த குழந்தை



யும் அவைகளையெல்லாம் கேட்டுணர்ந்தது. பத்துமாதமும் நிரம்பி குழந்தைபிறக்க, பூலோகமும் சுவர்க்கமுங்களித்தன. அரக்கர் வசிக்குமிடங்களிலெல்லாம் துர்நிமித்தங்கள் நிகழ்ந்தன. வசிஷ்டர், அக்குழந்தைக்குச் ஜாதகர்மம் முதலியவற்றைச்செய்து, பன்னிரண்டாம்நாளிலே பராசரனென்று நாமகரணமுஞ்செய்தனர். எட்டாம் பிராயத்தில் உபநயனஞ்செய்யப்பெற்று, பராசரமுனிவர் சுக்கிலபக்ஷத்துச்சந்திரன்போல, நாளுக்குநாள் வளர்ந்து வந்தனர். அவர் தம் தாயைப்பார்த்து "அம்மா! நீயேன் ஆபரணங்களை யணிந்துகொள்ளவில்லை. நீ மிக்க துக்கமுற்றிருக்கிறாயே; அதற்கு காரணம்யாது? என் தந்தையார் எங்கேயிருக்கிறார்? வசிஷ்டமுனிவர் யாவர்? எனக்கு எல்லாம் விளங்கச்சொல்லவேண்டும்" என்றுவினவ, அவள் "முனிவர்செல்வமே! என் துன்பத்தை நீக்கவந்த யானையிளங்கன்றே! யான் கொழுகொம்பற்ற கொடிபோலக் கொழுநனையிழந்தேன்; ஒருதீங்கையும் இயற்றாத உன் தந்தையை ஓர் அரக்கன்மாய்த்தனன். வசிஷ்டமுனிவர் உனக்குப்பாட்டனார்" என்று கூறிமறுகினாள். தம்தாய் இங்ஙனம் கூறிமனம்வருந்தி மூர்ச்சிக்கக்கண்டமுனிகுமாரர், தாயைப்பலமுறை கையால் தட்டியெழுப்பி, மூர்ச்சைதெளிவித்து, "அரக்கர் குலத்தைப் பெருமானருட்படி இன்றேதொலைப்பேன்," என்று கூறிவணங்கி, அவளால் ஆசீர்வதிக்கப்பெற்று, வசிஷ்டமுனிவருடைய அனுக்கிரகத்தையும் பெற்றுக்கொண்டு புறப்பட்டனர். புறப்பட்டு, ஞானதலத்தையடைந்து அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து உள்ளத்தில் மேன்மேல் ஓங்கி வளர்கின்ற பக்தியோடு திருக்கோயிலையடைந்து துவஜஸ்தம்பத்தினருகே விழுந்து தெண்டனிட்டு மறைகளாலே பாடித்துதித்து, உலகமாதாவாகிய அகிலாண்டநாயகியையும் பணிந்தார். அவ்விடம் விட்டு நீங்கி, கோயிலை வலமாகச் சென்று, வெளிப்போந்து, பிதிர்கள் களிக்க, தம்முடைய பிதாவைக் குறித்துச் செய்யவேண்டிய கர்மங்களையெல்லாம் அன்போடு இயற்றினர். தந்தையார், விருஷபத்துவசமசைந்தாடுகின்ற விமானத்தின்மேலே பலவகைச் சிறப்புக்களோடும் எதிர்தோன்றி, "அறிவில்லாத அரக்கனாலே கொல்லப்பட்டமையால் மிகுந்த பாவத்திற்குள்ளாகிப் பைசாசமாய்ப் பிறந்து, இதுகாறும் பெரிய துன்பத்தையனுபவித்தேன்; மைந்தனே! நீயின்று இந்த ஞானக்ஷேத்திரத்தில் இயற்றிய நல்வினைப்பயனால் என்னுடைய பாவங்களெல்லாம் நீங்கி, நான் நற்கதிபெற்றேன்", என்று சொல்லிச் சிவலோகத்தையடைய, பராசரர் அரக்கர்குலத்தை மாய்க்கும்படியான யாக

த்தைச் செய்யத்தொடங்கினார். சிவபெருமான் சம்புமூலத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற கோயிலின் வடகிழக்கு எல்லையில் ஒரு குண்டத்தையியற்றி ஆபிசார ஓமத்தைச் செய்தனர். அக்கினியில் ஆகுதியைப் பெய்தவுடன், மந்திரங்கள் சென்று, அரக்கரையும், தானவரையும், பூதவேதாளங்களையுங் கொணர்ந்து குண்டத்தில் தள்ளின; தினந்தோறும் நீயவருடைய இனங்களையெல்லாம் ஒழித்தபிறகு, தென்மேற்குத்திக்கின் காவலனாகிய, நிருதியின் வாகனமாகிய பூதத்தையும் கட்டி இழுத்தன. அப்பூதம், மந்திரங்களையெதிர்த்துத் தன் வலியிழந்து தளர்ச்சியுற்றதை நிருதி பார்த்து, மந்திரங்களையெதிர்க்கும் சக்தி தன்னிடத்திலில்லாமையாலே, மந்திரங்களுக்கு நல்வார்த்தை சொல்லி யிரந்தும், அம்மந்திரங்கள் விடாமல் அவனையும் சேர்த்து இழுத்தன. நிருதியானவன், மனந்தளர்ந்து வேறு பற்றுக்கோடில்லாமையாலே, நாவலின் நீழலில் வாழ்கின்ற சிவபெருமானுடைய திருவடிகளையே சரணமாகவடைந்து,

"பாலனுக் காகக் காலன் படவுதை செய்தா யோலம்
ஆலமுண் டமரா ராவி யளித்தரு டலைவ வோலம்
வேலனு லவுணர்க் காய்ந்து விண்குடி நிறுத்தா யோலஞ்
சீலமார் சம்பு நீழற் சிவபிரா னேவோலம்."

"முப்புரம் பொடித்த மேரு மூரிவெஞ் சிலையா யோலம்
அப்பவிர் வேணி வைத்திட் டனிலம் புரந்தா யோலஞ்
செப்பிள முலையாள் பூசை செய்தநீர்த் திரளே யோலம்
வைப்பெனச் சம்பு நீழல் வதிந்தருண் முதல்வா வோலம்."

என்று, பலவாறுதோத்திரஞ்செய்ய, கண்ணுதற்கடவுள் திருவருளால் ஆகாயத்தில் "நிருதியின் வாகனமாகிய பூதத்தை யெனக்குத் தருவாயாக" வென்று ஒரு ஒலிநிகழ்ந்தது. பாராசரமுனிவர், அவ்வொலியைத்தம் செவியாரக்கேட்டு, உவகையுற்று ஆகாயத்தைநோக்க, பூதமும் நிருதியும் சமீபத்திற் சென்றார்கள். அவர்களைப்பக்கத்தேயிருக்கச்செய்து, "வஞ்சினத்தால் கொல்லுதலினும் வேள்விமுகத்தில் கொடுத்தலே சிறந்ததென்று கருதினேன்" என்றுகூறி, "கொடுத்தேன், கொடுத்தேன்" என்றுசொல்லுகையில், சம்புமூலப்பெருமான், உமாதேவியோடு விருஷபாரூடராய்க் காட்சிகொடுத்தனர். முனிவர்கண்டு எழுந்து சிரமேற்கரங்குவித்து, ஆனந்தக்கூத்தாடிப் பூமியில் தண்டம்போல விழுந்து எழுந்து, இறைவனுடைய பாதங்களைத் துதிப்பாராயினர்.



"ஆதிப் பெருஞ்செல்வ னருட்கடலே யடியாரிளைப் பாறு மலர்த் தருவே
பூதிக் கவயத் திருமே னியனே புரமூன்று மெரித்த புரா தனனே
காதிப் பழவல் வினையைச் சிறியேன் கருதா வையுநீற் றியகண் ணுதலே
சோதிப் பொருளே தொழுவார் பருகுஞ் சுடர்வா னமிழ்தே சரணஞ் சரணம்."

"ஆரந் தொடையா னிமையான் களிநீங் காரம் புனலோ டெருக்குந் துறைக்
நீரந் திகழ்சென் னியினுட் டொழு திலகுந் திருமே னியனிந் தருளி
வாரந் தருநல் லருள்வைத் தவனே மணியே மலர்பம் பியகா விரியின்
நீரந் திகழ்நன் னிடையே வதியுஞ் சிவனே பவனே சரணஞ் சரணம்."

என்று, பராசரர் புகழ்களைப் பாடிவணங்க, வெள்விடைமேல் எதிர்தோன்றிய நாயகனார், வேண்டும் வரங்களைக் கொள்கவென்று கூற, முனிகுமாரர், "அடியேன் செய்த யாகசாலையில் நிருதிக்குப் பூதத்தைத் திருப்பிக்கொடுக்கும்படி கருணை செய்தமையால், தேவரீருக்குப் பச்சாத்தாபேசுவரரென்றும் பெயர் வழங்குக. அடியேனுக்குத் தேவரீருடைய திருவடிகளில் எந்நாளும் கெடாத பக்தியுண்டாகுக" வென்று பிரார்த்திக்க, பரமசிவன் அவ்வரங்களைக் கொடுத்தருளி நாவல் மூலத்தில் அமுதலிங்கத்தில் மறைந்தருளினார். அன்றுமுதல், பச்சாத்தாபேசுவரரென்னும் திருநாமம் வழங்கியது. கருணாமூர்த்தியாகிய பரமேசுவரனுடைய அருளைப்பெற்றுப் பராசரமுனிவர் தந்தை தந்தையாகிய வசிஷ்டரிடம் போய்ச் சேர்ந்து வாழ்ந்தனர். நிருதி, பச்சாத்தாபேசுவரர் அளித்த பூதத்தோடு தனது திசை சென்று பண்டுபோல் வாழ்ந்திருந்தான்.

ஸ்ரீராமன், தேவர்களுக்கு இடையூறு செய்து வந்த இராவணாதிகளை வதஞ் செய்து அயோத்தியடைந்து, தன்னுடைய அரசாட்சியை யெய்தியபின்னர், விபீஷணன் தன் ஊர்க்குமீண்டும் ஏக விடை கேட்டனன். அப்பொழுது, இராமன், அவனுக்கு ஒரு திருமாலின் விக்கிரகத்தையும் விமானத்தையும் உவப்புடன்
திருமால் வழிப்பட்டது.
அளிக்க, விபீஷணன் அவைகளை யேற்றுக்கொண்டு அயோத்தியை நீங்கி இலங்கை சேரும்படி தன் சேனையோடும் புறப்பட்டனன். மார்க்கத்திலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தரிசித்து, அநேக கழனிகளையும், மலைகளையும், காடுகளையும் தாண்டி, வெப்பமிகுந்த ஒரு பாலைவனத்தை யடைந்தான். அதன் கொடுமை சொல்லமுடியாதது. பூமியானது வாய்திறந்தாற்போல வெடித்து, வெடித்த வாய்களின்வழியே நீத்திரள் பாதலஞ் சென்றது. அங்குள்ள சர்ப்பங்களும் துவண்டன. மேகங்கள் அதன் வெப்பத்திற்குப்

பயந்து நேரே இயங்கமாட்டா. அந்தப் பாலைவனம், தன்னிடத்துத் தழையன்றி வேறொன்றையும் காட்டாது. அத்தன்மையதான பாலைவனத்தில், விபீஷணன், தன் சேனையோடு பெருந்துயருழந்து, அதைத் தாண்டிச்செல்லுகையில், காவிரியானது விளங்குவதைக் கண்டான். நரகத்தில் உழன்றவன் சுவர்க்கத்தைக் கண்டாற்போலவும், ஈசுவரசாபத்தை யடைந்து வருந்திய ஒருவன், அச்சாபம் நீங்கித் திருவருளைப்பெற்றாற்போலவும், காவிரியை நெருங்கிச் சென்றனன். அந்நதியில் தவழ்ந்துவந்த தென்றலானது வீச, தாழ்ந்த கிளைகளையுடைய குளிர்ச்சி மிக்க வொரு சோலையில், கடல்போலச் சத்திக்கும் தன் சேனையோடு சென்று தங்கி, இளைப்பாறினன். சிரம பரிகாரஞ் செய்துகொண்டபிறகு, காவிரியை யடைந்து, அதில் ஸ்நானஞ் செய்து விபூதியையும் உருத்திராட்சத்தையும் மெய்யிலணிந்து, திருமாலின் பூசையைச்செய்தான். பூசை முடிந்தபின் திருமாலை விமானத்தில் எழுந்தருளச்செய்து, மணல்வெளியில் வைத்துவிட்டு, அறுசுவை அடிசிலையும் உண்டபிறகு, இலங்காபுரிக்குப்போக நினைத்து, எழுந்து விமானத்தை யெடுக்க, அது வாராமையின் திரும்ப வலிந்து எடுத்தனன். அது கிளம்பாமையின், நிலத்தில் பதிந்து ஊன்றிய தென்றறிந்து மிகுந்த வருத்தத்தையடைந்தான். அவன் அங்குக் கவலையுற்றிருந்தபொழுது, உலகங்களையெல்லாம் உண்டவனாகிய திருமால், "விபீஷணனே! கேள்; நீ நெஞ்சிற் சபலங்கொண்டு வருந்தாதே; இந்த இடம் ஞானக்ஷேத்திரமென்று சொல்லப்படும். அகிலலோகங்களையும் இரட்சிப்பவளாகிய அம்பிகை அருந்தவஞ்செய்து, ஒப்பற்ற மெய்ஞ்ஞானத்தைப் பரமசிவன் உபதேசிக்கப்பெற்று ஆத்துமாக்களுக்குச் சகல பாவங்களையும் போக்கி, பலவரங்களையும் அளித்து எழுந்தருளியிருப்பது இத்தலம். சம்புமாமுனி, பாராசரரிஷி, நான்முகன், அகத்தியமுனி, சூரியன், சந்திரன், இராமன், இந்திரன், அக்கினிதேவன், என்று சொல்லிய இவர்களுக்கெல்லாம் ஈசனுடைய அருள் சுரக்கும்படி செய்தது இத்தலமே. மூர்த்தியின் மேன்மையுடையதும், தீர்த்த மகத்துவமுடையதும் இந்தத் தலமே. பரமசிவன் எழுந்தருளியிருக்கிற அனேக தலங்களுள்ளும் மேம்பட்டு விளங்குவதும் இந்த ஸ்தலமேயாம். வேதத்தின் மேற்பட்ட நூலும், காவிரிக்கு மேற்பட்ட நதியும், ஞானக்ஷேத்திரத்திற்கு மேற்பட்ட ஸ்தலமும், அகிலாண்டநாயகியின் மேம்பட்ட சத்தியும், நாவல் விருக்ஷத்தின் நீழலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் மேம்பட்ட மூர்த்தியுமில்லை. மற்றை ஸ்தலங்களில் சிவபிரான் தம்முடைய அம்சத்



தினாலே எழுந்தருளியிருந்து பல வரங்களையும் வழங்குவர். இந்த க்ஷேத்திரத்திலோ, தாம் பூர்ணமாக எழுந்தருளியிருந்து சிவஞானத்தையும் மற்றைப் பொருளையும் வழங்குவர். அந்த முறைமைக்கேற்ப, யானும் மற்றைய சிவஸ்தலங்களில் என்னுடைய அம்சத்தினாலே வழிபடுவேன்; இத்தலத்திலோ என்னுடைய பூர்ணாம்சத்தோடிருந்து ஜம்புநாதரை வழிபட உறுதிகொண்டேன். மகாலட்சுமியும் பரமசிவனுடைய கருணையைக் கொள்ளைகொள்ளும்படி இத்தலத்தில் பக்தியோடு தவஞ்செய்துகொண்டிருக்கின்றாள். நான் இங்கு வாழ்தலேயன்றி இலங்கையிற் செல்லேன்; ஜம்புநாதருடைய சன்னிதியில் இலக்குமியை நடனஞ்செய்வித்து, அவரது திருவருளைப் பெரிதுமடையும்படி என் மனம் விரும்புகின்றது. திருவானவள் நடனஞ்செய்யும் இடத்தில் ஸ்ரீரங்கமென்று ஓர் தலம் உண்டாகும். அதில் எனக்கு ஸ்ரீரங்கநாதனென்னும் பெயர் வழங்கும். அந்த ஸ்தலத்தில் எனக்குப் பூசனையும் திருவிழாவும் பிரபலமாக நடைபெறும். வருஷந்தோறும் நீ இவ்விடத்தையடைந்து, என்னை யாராதித்து, அமுதலிங்கத்தையும் பக்தியோடு தரிசித்துத்தொழுது மீளுவாய்" என்று கூறித் திருமால் மறைய, விபீஷணன், கனவை நனவெனக் கொண்டு, அன்போடு ஆனைக்கா அரனைப்போற்றி, இலங்கையை யடைந்து வாழ்ந்தனன். ஞானக்ஷேத்திரத்தில் வசிப்பதையே ஆதரித்த திருமால், நாவலின்கீழ் எழுந்தருளிய நாயகரை விரும்பிப்பூசித்து, தன் ஆருயிர்க் காதலியாகிய திருமகளை நடனஞ்செய்வித்தான். திருமகள் ஆடிய நடனத்தைப்பார்த்து, சிவபெருமான், சந்திரனைத் தரித்த ஜடாமகுடத்தோடு எதிர்தோன்றி, வேண்டும் வரங்களைக் கேட்டுக்கொள்ளும்படி சொல்ல, மாதவன் இறைஞ்சி வணங்கி, "சடைமுடியையுடைய வள்ளலே! யான் நாள்தோறும் உன்னைத் தரிசித்து என்னுடைய வல்வினையையெல்லாம் போக்கவேண்டும், யாவரும் என்னிடத்துப் பல வரங்களைப் பெறுதல்வேண்டும்; திருவிழா முதலிய சிறப்புகளெல்லாம் எனக்கு இங்குக் குறைவுபடாது பெருகிவளர்தல்வேண்டும்; உன்னைத் தொழாதவரிடத்துச் சேராத திருமகள் நடனத்தைச்செய்த இந்த க்ஷேத்திரமானது, ஸ்ரீரங்கமென்று சிறத்தல்வேண்டும்" என்று வேண்ட, பரமசிவன், 'பெறுக' வென்று அருள்செய்தனர். மாயவன் சம்புநாதருடைய அருளைப்பெற்று ஸ்ரீரங்கநகரத்தைத் தேவர்களும் விரும்பத்தக்கதாகச் செய்துகொண்டு யாவரும் இன்பமெய்தும்படி அங்கே வசித்தனன்.

காவிரி நாடானது மற்றை நாடுகளுக்கு ஓர் அணியாக விளங்குதலைப்போல், உறையூரானது மற்றை நகர்களுக்கெல்லாம் ஓர் அணியாக விளங்குவது. அந்நகரின்கண் சோழர்களுள் ஒருவன அரசுபுரிந்து வந்தான். அவன் பகைவரை வென்று மிக்க புகழை நாட்டுதலேயன்றி, ஆணவமாகிய பகைகளை வென்று, ஞானமாகிய பொருளையும் ஈட்
சோழராஜன் ஆரஞ் டி, ஈசனே புகலிடம் என்றும் உறுதிகொண்டு,
சாத்தியது. சிவதருமங்களைப் பரிபாலித்துவந்தான். நிகளாபுரியென்று சொல்லப்பட்டதான உறையூர் முதலாக, கண்ணுதற்பிரான் எழுந்தருளிய தலங்கள்தோறும் நித்திய நைமித்திய பூசைகளைக் குறைவறச் செய்துவருகின்ற காலத்தில், பனிப்பருவம் நீங்கி இளவேனிற்பருவம் தொடங்கியது. அறிஞர்களை மதித்தவர்களும் அந்த அறிஞர்களைப்போலவே உயிர்களுக்கு இதத்தைச் செய்வார்கள்; அதுபோலவே, அகத்தியமுனிவர் வசிக்கின்ற பொதியமலையினின்றும் வருகின்ற தென்றலும், குளிர்ச்சியும் நறுமணமும் தழுவி யாவரும் விரும்பும்படி மெல்லென வீசியது. குளம், பொய்கை, ஓடை, எந்திரவாவி முதலியவைகளில் நீர் சுருங்கி பல மலர் பூத்து நீர்வாழ் பறவைகளின் கூட்டங்கள் பல செறிந்து, ஒளி சிறந்தன. நீரானது, மெய்யடியாருடைய உள்ளம்போல மிகத்தெளிந்து, ஒரு புடை அருகி ஒழுகியது. வெண்மணற்குன்றமும் விசாலமான மணற்பரப்பும் மரநிழல்களோடு அழகு மிகுந்தன. தேசத்திலுள்ளவர்களெல்லாம் சோலைகளிற் சென்று நறுமணங்கமழும் தென்றற்காற்றையேற்றும் காவிரியாற்றில் புனலாடியும், வெப்பத்தைப் போக்கும் பொருட்டு நகர்ப்புறங்களில் வசிப்பாராயினர். பல இரத்தினாபரணங்களும், பூம்பட்டாடைகளும் சந்தனமும், தண்பனிநீரும், பொற்பொடியும், குளிர்ச்சியாகிய மதுவும், உண்டிவகைகளும், சேடியர் வேறு வேறு ஏந்தி இடந்தொறுஞ்சென்றார்கள். ஆடவரும் மாதர்களும் சோலைகளில் புக்கு ஆடினர். பெண்கள் மலரிடத்துஞ்சென்று மலர் கொய்தனர். அன்புடையவர்களாகிய ஆடவர்களும் மங்கையர்களும் காவிரி நதியினிறங்கி நீர்விளையாட்டைச் செய்து, கரையேறி, ஆடையுடுத்து, ஆபரணங்களையணிந்து, சுவையுள்ள உணவுகளைப் புசித்து, கூடிக்களித்து மகிழ்ந்து, வேனிலின் வெப்பத்தைப் போக்கினர். அப்படிப்பட்ட காலத்தில் உறையூரிலிருந்து அரசுபுரிந்தவனாகிய சோழவரசனும், இறைவருடைய திருவுருவங்களில் வெப்பம் உறைக்காதபடி சிறப்புச்செய்ய நினைத்தான். ஞானக்ஷேத்திரத்திலிருந்த ஜம்புநாதருடைய திருவுருவத்தில் வெப்பகற்றும்பொருட்டும் பலபொருள்



களைத் தன் வேலைக்காரர்களிடம் அனுப்பித் தன்மனைவியாளோடு தானும் அங்கே செல்லும்படி புறப்பட்டனன். அவன் தன் மனைவியின் மார்பில் கிடந்து பிரகாசித்த ஒரு முத்தாரத்தைக்கண்டு திரிபுரங்களை நீறாக்கிய அண்ணலார்க்கு இதைச் சாத்துவேன் என நினைந்து, காவிரியையடுத்துப் புனல் விளையாடிக் கரையேறினன். நீராடுகையில் அரசன் மனைவி அணிந்திருந்த ஆரத்தைக் காவிரியாற்று நீர் ஈர்த்துக் கொண்டு போய்விட்டது. அதனை யரசனறிந்து, "நின்மலனே! இந்த மணியாரத்தை நினக்குச் சாத்த நினைந்தேன். அறியாமையால் காவிரி நீத்தத்தில் போக்கினேன். அது உலகெலாம் விலைபெறத்தக்கது. அதற்கு ஒப்பானது உலகத்தில் வேறு இல்லை. அடியேன் அதைக் காணுமற்போக்கிய பெரும்பிழையினின்றும் அடியேனைக் காத்தருளுவையேல் அதை நினது அழகியதிருமேனியில் அணிந்துகொள்க" என்று மதிமயங்கிக் கூறி, மனங்கரைந்து, நித்தியக்கடன்களை முடித்துக் காவிரியினின்றும் புறப்பட்டு, அரசர்களும் அமைச்சர்களும், மருங்குள்ளார் பலரும் நெருங்க ஞானக்ஷேத்திரத்தையடைந்து அதிகாரமனர் வேலையாட்களுக்கு விபூதி யளித்துக் கட்டுவிக்க திருநீற்றுத்திருமதிலை முன்னே வணங்கி, கோபுரவாயிலைக் கடந்து, நந்தியின் பக்கத்தை யடுத்து அஷ்டாங்கபஞ்சாங்கமாக வணங்கி, எல்லாப் பிராகாரங்களையும் பிரதட்சிணம் செய்து உள்ளே சென்று, தரிசித்தனன். அப்பொழுது, பரிசனங்கள் முன்னமே கொணர்ந்த திருமஞ்சனக்குடத்தை வாங்கிப் பூஜகர் அபிஷேகஞ்செய்தனர். அடியார்க்கு எளியராகிய அமுதநாயகருடைய திருவருளால், அந்த ஆரமானது, திருமஞ்சனக்குடத்திற்புகுந்து அபிஷேகஞ்செய்யும்போது, தீர்த்தத்தோடு அவருடைய திருமுடியில் வீழ்ந்தது. அபிஷேகம் செய்த அந்த ஆதிசைவர்கள் உவகையுற்றனர். திருவாபரணங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக அந்த ஆரம் விளங்கியதை அரசன கண்டு உற்று நோக்கி

"சம்பு மூலத்தின் வீற்றிருந் தருளிய தலைவ
வெம்பி ரானின தருளைக் கிருந்தவா றென்னே
வம்பு நீணதி கெடுத்தமா ரரங்கு முடிமேல்
உம்ப ராருநன் றதிசய முறவணிந் தனையே."

என்று, துதித்தனன். அங்குச் சூழ்ந்தவர்களனைவருங் கண்டு அதிசயித்தார்கள். அரசனுடைய புகழானது இன்றைக்கும் உலகத்தில் நிலைபெற்று விளங்குகின்றது. அவன் ஏகநாயகனுடைய திருவருளுக்குப் பாத்திரனாகி அகிலாண்ட நாயகியையும் வணங்கித் திருமதில்க

ளையெல்லாம் வலமாகச் சூழ்ந்து சென்று, பொன்னுலகத்துக்கொப்பான தன்னுடைய நகரையடைந்து சுகமாக வாழ்ந்தனன்.

ஞானக்ஷேத்திரத்தின் வடமேற்குத் திசையில் பதுமகுண்டமென்னும் தீர்த்தத்தையுடைய சுவேதகிரியென்று ஒரு மலையுண்டு. சந்தனம், தேக்கு, அகில், அசோகு, சண்பகம் முதலாகிய பலவகை விருக்ஷங்கள் நெருங்கிய காடுகள் அடர்ந்து, யானை, புலி, ஸிம்மம், யாளி, கரடி, பன்றி, ஆமா முதலிய மிருகங்கள் திரளாக அங்கே வசித்தன. அப்படிப்பட்ட காட்டில் ஒரு மதயானையானது அம்மலைக் குகையில் வசித்தது. முன்னை நல்வினைப் பயன் வந்து சேருங்காலம் அடுக்க, அம்மலைக்குகையை விட்டு, ஆகாரத்தைத் தேடுவதற்குச் சென்ற அது, கொள்ளிடத்தைக் கடந்து ஞானபூமியையடைந்தது. அந்த எல்லைக்குள் சென்றவளவில் அதற்கு மெய்யறிவு உதிப்ப, இரை தேடுகிற எண்ணம் நீங்கி, அங்குள்ள சோலையில் விரைந்து செல்ல, நாவல்மரத்தின் நிழலில் அமுதலிங்கத்தைத் தரிசித்தது. தீவினை நீங்கப்பெற்றமையால், பசித்த கன்று தாயை நாடிச் செல்வதுபோல, அன்போடு மிக விரைந்து சென்றது. சரீரம் நடுங்க, கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் சொரிய, துதிக்கையைத் தூக்கி காலை வளைத்து மண்ணிலே விழுந்து, ஐம்புநாதருடைய திருவடிகளில் வணங்கியெழுந்து, வலம் வந்து கூத்தாடி, மேகங்களெல்லாம் அதிர்ந்து உதிரும்படி சத்தித்து, அன்பு கரைகடந்து பெருக, பின் வருமாறு சிந்திக்கத்தொடங்கியது.

கஜாரணியமானது.

"பண்டைநல் வினையின் றிறக்கினு முடலம் பற்பல வெடுத்திளைக் காது
மண்டிய தயரி னழுந்திடின் றழிக்தா மற்றுமுன் செய்தவம் யாதோ
தொண்டுகொண் டருளு மமுதநா யகனைத் துணையிலா வெமதுயிர்த் துணையை
யண்டருக் கரிய வமலனை நாவ லணிநிழ லெளிவரக் கண்டாம்."

"இனி இதற்குரிய பூசைகளைச்செய்து இருள்பொருந்திய மலவலியை வேரோடுங் கெடுக்கும் பேரின்பமுத்தியைப் பொருந்துவதே கடன்" என்று கருதி மனங்கனிந்துருக, பல தீர்த்தங்களிலும் சென்று நீராடிக் கரையேறியது. தன்னுடைய துதிக்கையில் கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ முதலிய நால்வகை மலரும் பறித்து, நாவல்விருக்ஷத்தின் பக்கத்தே வைத்து, அமுதேசருடைய சன்னிதியில் கிடந்த சருகு, குப்பைகளைத் தன்முழையக்கொண்டு நீக்கி, ஆவரம் பொருந்திய துதிக்கையில் நிரப்பிக்கொணர்ந்த காவிரி தீர்த்தத்தை, முன்பு அன்னமறியாத் திருமுடியின்மேலே அபிஷேகம் செய்து,



தான் தேடிக்கொணர்ந்த பரிசுத்தம்பொருந்திய நானாவித மலர்களையும் அன்போடு, அமுதேசருடைய திவ்விய திருமுடியில் சாத்தி, தீங்கனியையும் காய்களையும் எதிர்வைத்து நிவேதித்து, தன்னாலியன்ற பணிகளைச் செய்து, நீங்காத மெய்யன்பினோடு நின்று துதிகளைச் செய்து, தியானித்து வணங்கி, சிவபிரானெழுந்தருளிய இத்தலத்தில் வசித்து ஜலமலம் விடுத்தால் மிக்க சிவாபராதம் நேருமென நினைத்து, அவ்விடம்விட்டு அரிதில் பிரிந்து, தன்னுடைய வனத்தையடைந்தது. இந்தப்படி யானை பூசித்துவருகையில், முன்னமே அங்கு உதித்து வாயினால் நூலிழைத்திழைத்துத் தங்குவதாகிய ஒரு சிலம்பி இந்த வெண்ணாவல் விருட்சத்தைக் கண்டு அதில் சார்ந்தது. முன்செய்த தவப்பயனாலே அந்நாவல்மரத்தின் கிளையிலே தனக்கு இருப்பிடத்தையுண்டாக்க முயன்று, பிரகாசம்பொருந்திய நூலையிழைத்து மேலும் கீழுமாக ஓடி வளைந்துகொண்டிருக்கிறகாலத்து, சிவபெருமானுடைய சன்னிதியைக் குறுகியது. தேவர்க்கும் அரிய பெருமானை எதிர்கண்டதும், சூரியனைக்கண்ட கண்ணிருள்போல மலம் ஒழிய, நல்லறிவுதித்துத் தொழுது "தேவர்க்கும் அரியான் காட்சிகொடுத்தது என்ன வியப்பு" என்று கூறி, உள்ளத்தில் மிக்க அன்புமிகுதலால் "கண்ணுதற்பிரானைப் பிரியாமல் வழிபாடு செய்தற்கு வேண்டும் பொருள்கள் முட்டுப்பாடின்றிக் கிடைக்கும்படி வேந்தனாய்ப் பிறந்திலேனே" என்று வருந்தி, மனந்தளராது நூலினாலே ஆலயம் செய்யத் துணிந்து, ஆகாயத்தை யளாவும்படியான கோயிலை, மண்டபம், கோபுரம், பிராகாரம், மதில்கள் முதலிய உறுப்புக்களோடு வாய்நூலினாலே பூர்த்திசெய்தது. சந்திரசேகரராகிய சிவபெருமான் அன்புமிக்க சிலந்தியின் வாய்நூலினால் செய்யப்பட்ட சிறிய கோயிலைப் பெருங்கோயிலாகக்கொண்டருளினார்.

"ஊதவுகு சிறுநூலி னொருகோயில் வெண்ணாவற்
சீதநிழ லமர்ந்தபிரான் றிருக்கோயி லெனக்கொண்டா
னாதலினெவ் வுயிரெதனை யளிப்பினுமன் பொன்றுளதேற்
காதல்பிறப் பினையறுக்குந் தவமாக முடியுமே."

"புல்லியமெல் லுடற்சிலம்பி புனிதர்மகிழ் திருக்கோயின்
மெல்லிழையி னெளிவருந்தி விசிவியற்றுந் திறமறிந்து
நல்லவுடல் பொருளாதி நன்குடைய விலரன்றோ
வொல்லுநெறி யாற்பணிசெய் தொழுகாமைக் கெவன்செய்கேன்."

தன் வாய்ச் சிறுநூல்கொண்டு திருக்கோயில் செய்தமைத்த சிலம்பியானது, அந்த நாவல்மரத்தில் வசித்தல் குற்றமென்றுகொண்டு

முன்பு தான் வசித்திருந்த மரத்தையே அடைந்து வசித்திருந்தது. மற்றைநாள் காலையில் யானையானது வந்து, காவிரியில் புனலாடி, பல மலர்களையும் காய்கனிகளையும் கொண்டு புகுந்து, நூற்கோயில் சூழ்ந்திருப்பதைக்கண்டு, "சிவபெருமான் எழுந்தருளிய இவ்விடமெல்லாம் இது சூழ்ந்துறைந்தது யாதுகொல்லோ; அடியார்கள் இந்தச் சிலம்பிநூல் சூழ்ந்த மலரையும் பறித்துச் சாத்தார்களே; அந்தச் சிலந்தியை நான் கொல்லுவேன்" என நிச்சயித்து, தன் கையில் கொணர்ந்திருந்த மலர்முதலிய பொருள்களை யொருபால் வைத்து, பொழில்முழுதும் தேடியும் சிலம்பி கண்களுக்குப் புலப்படாமையால், ஜம்புலிங்கத்தின் சன்னிதியைக் குறுகி, நூற்கோயிலையெல்லாம் சிதைத்து, அவ்விடமெல்லாம் புனிதமாக்கி, சிலம்பிநூலைத் தொட்ட அசுத்தத்தைப் போக்கிக்கொள்ளுமாறு மீட்டும் நீராடி, வெண்ணாவல் மூலத்தை யடைந்து, முன்போலப் பூசித்துத் தன்னுடைய இருப்பிடத்தைச் சேர்ந்தது. ஒப்பற்ற சிலம்பியும், தான் நூலால்செய்த கோயிற்கண்ணெழுந்தருளிய கருணையங்கடலாகிய பரமசிவனுடைய திருவடிகளை வணங்கும்படி புகுந்தது. அந்த ஆலயம் அழிந்தமையறிந்து, யாவர் இங்ஙனம் செய்தவர் என்று, மனம் சுழன்று கீழே விழும்; திரும்ப எழும். "நாவலின் சருகு மேலேஉதிராமலிருக்கும்படி இறைவருக்குச் செய்த திருக்கோயிலும் சிதையுமா. மேலும் உலர்ந்த சருகுகளன்றி, மலர்களும், தளிர்களும், இலைகளும் நெருங்கியுள்ளன: இது என்ன பாவம்" என்று வருந்தி மெய்பதைத்துச் சோரும். "இந்தக் குற்றங்களைப் போக்குதற்கு எனக்கோ கைகள் இல்லை. எம்பிரானுடைய திருமேனியில், இவையெல்லாம் தங்கப் பெறுமோ? அடியேனுலாவது யாது?" என்று கவலையுற்றுக் கலங்கிவாடும். "சருகும் இலையும் மண்டிநிற்பதைப் பார்த்துக்கொண்டிருப்பதும் பெரும்பிழையாகும்" என்றெண்ணி, திரும்ப ஆலயத்தை நிருமித்துத் தன்னிருப்பிடத்துக்குத் திரும்பியது; இவ்வாறே தினந்தோறும் யானை வந்து ஆலயத்தைச் சிதைப்பதும், சிலந்தி புதிதாக அமைப்பதுமாக நிகழ்ந்தது. இப்படி நடக்குங்காலத்தில், ஒருநாள் சிலம்பி "என்னுடைய நூற்கோயிலை யழித்து, சிறிதும் அச்சமின்றி, விமலருடைய திருமேனியில் இங்ஙனம் குப்பையாக்கிய பிராணியைக்கொல்லுவதே செய்யத்தக்க காரியம்" என்று நினைத்து ஒரு பக்கத்தே மறைந்திருந்தது. சிலம்பியானது இராத்திரியிலும் தூக்கமின்றி இவ்வாறு மறைந்திருப்ப, யானையானது வந்து நூலெழிற்கோயிலையழித்து முன்போலப் பூசை செய்தது. ஒருபக்கத்தே மறைந்துநின்ற



சிலம்பியானது பார்த்து, "இறைவனுடைய பூசை செய்திடல், கோயிலை அழித்தலும் வேண்டுவதோ" என்று கோபங்கொண்டு மதயானையினுடைய கையின் துவாரத்தில் நுழைந்து வேகமாய் ஏறி அதன் கபாலத்துட் சுறுக்கெனக் கடித்தது. யானையானது கர்ச்சித்துக் கீழே விழுந்தது. இடியோசைபோலக் கர்ச்சித்து, கையையெடுத்து எடுத்து எறிந்து, பூமியைக் காலால் தேய்த்து விழும்; திரும்ப எழுந்திருக்கும்: மூச்செறியும்: தலையைக் கீழே சாய்க்கும்; அசைக்கும்; இங்ஙனம் துன்பத்தையடைந்து உயிர் நீத்தது. அந்த யானையானது கையை வாயில் கவ்விக்கொண்டு இறந்தமையால், சிலந்தியும், வெளிவருகிறதற்கு வழியில்லாமல் மிக்க துயருழந்து மாய்ந்தது. அவ்விரண்டும் பகையொழிந்து, பூமியில் மதயானையாகவும் சிலம்பியாகவும் இருந்தவர், தேவசரீரத்தோடு விளங்கினர். வெண்ணாவல் நீழலில் மேவிய பெருமானும், தேவர்கள் புஷ்பமாரி சொரிய சிவகணங்கள் புடைசூழ, விருஷபவாகனத்தின்மேல் பார்வதிதேவியோடு காட்சிகொடுத்தனர். தேவசரீரத்தைப்பெற்ற பக்தர்கள், மகிழ்ச்சிகொண்டு, சிரமிசைச் செங்கை கூப்பி, ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, சிவபெருமானுடைய திருவடிகளில் பணிந்தெழுந்து தட்டமிட்டுத் துதிப்பாராயினர்.

"செழுநீர்த் திரளே சிவண்மா மணியே,
கழுதார் வனமா டியகண் ணுதலே,
தொழுவா ரழுதே துரிசார் தமியேம்
பழுதார் பணியும் பணியாக் கினையே."

"அற்றூர்க் கலதின்ப ருளா நிதியே,
வற்றா தவருட் பெருவா ரிதியே,
செற்றூர் புரநீற் றியசே வகனே,
பற்றுப் பணியும் பணியாக் கினையே."

"மடமா திடமா கியவாழ்க் கையனே
சுடர்மா மதிவேய்ந் தருள்சுந் தரனே
யடர்தீ வினையே மையமாண் டருளப்,
படராப் பணியும் பணியாக் கினையே."

என்று தோத்திரஞ்செய்ய, எம்பிரான் மிக மகிழ்ந்து, "அன்பர்களே! நீங்கள் இந்தத்தலத்தில் நம்மைப் பூசித்ததினால், இழிந்தபிறப்பென்று சொல்லப்படும் உங்கள் வடிவம் நீங்கி, யாவரும் விரும்பத்தக்க ஒளி பொருந்திய யாக்கையையடைந்தீர். இனி வரத்தக்க வினையும் ஒழிந்து, தேவர்களும் வணங்கும் சிறப்பை யடைந்தீர்கள். யானைவடிவம்

நீங்கப்பெற்றவன், நமது உலகத்தில் பெரிய கணநாதனாகக் கலந்து விளங்குவான். ஞானக்ஷேத்திரமாகிய இந்தத்தலத்தில் பேரின்ப வீட்டினை யடையும்படி எம்மைப் பூசித்தமையால் இத்திருநகரமானது என்றும் நின்பெயரால் வழங்குக. சிலந்திவடிவம் நீங்கியவன், காவிரி நாட்டைப் பொதுவறப்புரக்கும் சோழர்குடியில் பிறந்து, சிவதருமங்களைச் செய்து, பின்பு சிவபதமடைக." என்று திருவாய்மலர்ந்தருளி, அப்புத்திரளாகிய சிவலிங்கத்தில், உமையாளோடும் மறைந்தருளினர். யானைவடிவம் நீங்கியவன் மீண்டும் ஜம்புலிங்கத்தைத் தரிசித்து வணங்கி, விமானத்தில் ஏறிச் சிவபுரத்தையடைந்து, ஆனந்தவெள்ளத்துள் மூழ்கினான். யானைக்கு அருள்புரிந்தமையால் ஞானக்ஷேத்திரத்திற்கு திருவானைக்காவென்னும் பெயருண்டாயிற்று.

கோச்செங்கணார் வழிப்பட்டது.

சிலந்திவடிவம் நீங்கிய தேவன், பரமசிவனருளிய வரத்தால், சோழவம்சத்தில் பிறந்து சிவதருமபரிபாலனம் செய்த வரலாற்றைச் சொல்லுவோம். செவ்வானம்போலும் திருவுருவத்தையுடைய நடராசப்பெருமான், ஆன்மகோடிகள் உய்யும்பொருட்டுத் திருநடனஞ் செய்தருளிய தலமாகிய சிதம்பர க்ஷேத்திரத்தில், சுபதேவனென்று பேருடைய ஒரு சோழ சக்கரவர்த்தி, அரசுபுரிந்துவந்தான். அவனுடைய மனையாள் கமலவதி யென்பவள்; அவள் பெருங்கற்பு வாய்ந்தவள். அவர்கள் மக்கட்பேறில்லாத குறையால் மிகவும் மனவருத்தமடைந்து, ஈசுவரனை வழிபட்டு ஒழுகுவாராயினர். சுபதேவன் ஒருநாள் தன் குலகுருவைப்பார்த்து, அடியேன் மக்கட்பேற்றைக் கருதி, முக்கட்பெருமானைக் குறித்துப் பல நோன்புகள் செய்தேன். அதனால் குழந்தைகள் உண்டாவதற்கு யாதொரு சந்தேகமுமில்லை; ஆதலின் தேவரீர் புதல்வர்க்கும் பெண்களுக்குமுரிய தர்மமார்க்கங்களை அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டும்." என்று வேண்ட, ஆசிரியன் மிக உவந்து, இராஜசிங்கமே! சாஸ்திரவிதிகளையெல்லாம் முறைப்படி சொல்லுவோம்; நீ தெரிந்துகொள்ளென்று"—வைதிகம், சைவமென்று சொல்லப்பட்ட இரண்டு வழிகளையும் அனுசரிப்போர்களுக்குரிய இருதுசங்கமனம், கர்ப்பாதானம், பும்ஸவனம் முதலிய பதினாறு கருமங்களையும் முறையே விரிவாகக் கூறினர். அங்ஙனம் கூறிய ஆசிரியரைப் பூசித்து மிகுந்த பொருள்களைக் கொடுத்து, அவருடைய கிருகத்தில் கொண்டுபோய்விட்டான். பின்பு அரசன் தன்னுடைய மனைவியைப் பார்த்து, அவள் அனுஷ்டிக்கவேண்டிய நியமங்களையெல்லாம் சொல்



லி, அந்தப்படியே ஒழுகும்படி திட்டஞ்செய்து நடக்கும்நாட்களில், அவள் கர்ப்பவதியாயினாள். அவள் கருவுற்றாளென்கிற செயலை அவனுடைய சரீரக் குறிகளால் அறிந்து, உடனே காப்பணிந்து, அங்குரார்ப்பணம் செய்து, கர்ப்பாதானக் கிரியையை விதிப்படி செய்தான். இந்தப்படியே அந்த அந்தக்காலத்தில் செய்யவேண்டிய கிரியைகளைத் தவறுமற்செய்துவர, பத்துமாதமும் நிரம்பி, கமலவதிக்குப் பிரசவவேதனை நிகழ்ந்தது. அப்போது சோதிடர் இன்றைக்குச் சிசுஜனனமாகாதிருத்தல் நலமென்று கூறினர். அரசன் என்ன உபாயம் செய்தால் நல்ல முகூர்த்தம் வருமளவும் குழந்தை பிறவாமலிருக்குமென்று கவலையடைய, கமலவதி அதைக்கேட்டு, தன்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டிருக்கும்படி கூறினள். அரசன் இதுவும் திருவருளின் செயலேயென நினைந்து, அப்படியே செய்யும்படி ஆக்ஞாபிக்க, அயலிலிருந்தோர் அங்ஙனம் செய்து தீங்குறுங்காலங் கடந்த பின்னர், இறக்கிவிட்டார்கள். நல்ல சுபமுகூர்த்தத்தில் வலம்புரிச் சங்கத்தில் முத்து உண்டானதுபோல, அரசனுக்கு ஒரு மைந்தன் பிறந்தான். இயல்பாய்ப் பிறக்கவேண்டிய காலத்துப் பிறவாமல் தாமதித்தமையால், குழந்தைக்கு கண் செந்நிறமாயிருந்தது. கமலவதி குமாரனைப்பார்த்துச் செங்கண்ணனோவென்றாள். சுபதேவன் தனக்குப் புத்திரன் பிறந்தானென்று கேட்டவுடன், ஆனந்தக்கடலுளாழ்ந்து, ஆலயங்களிலெல்லாம் சிறப்புச்செய்யவும், நகரத்தெய்வங்களுக்குப் பூஜை செய்யவும் திட்டஞ்செய்தான். சிறையிலிருந்த மறமன்னரைச் சிறையினின்றும் விடுவித்தான். விலையுயர்ந்த ஆபரணங்கள், ஆடைகள் முதலியவற்றை வேண்டினர் வேண்டியபடி வாரிக்கொண்டு போம்படி திரவியசாலைகளைத் திறந்துவிட்டான். பிறகு ஸ்நானஞ்செய்து ஜாதகர்மஞ் செய்தனன். மனைவி குழந்தையைச் செங்கணானென்று சொன்னமையால், குழந்தைக்குக் கோச்செங்கணானென்று நாமகரணஞ்செய்தான். பிறகு கோச்செங்கணார் உரிய பிராயத்தில் வித்தியாரம்பஞ்செய்யப்பெற்று, படைகள் பயின்று, ஆனையேற்றங் குதிரையேற்றமுதலிய சகல வித்தியாபாரங்கதரானார், பன்னிரண்டாவது பிராயத்தில் உபநயனஞ் செய்யப்பெற்று, எல்லா வேதங்களையுமுணர்ந்து, விவாகமாகி, பதினாறாவது பிராயத்தில் பூமியைத் தாங்கும் முறைமையும் பெற்றார். செங்கோலினால் பூமி செழிக்கவும், வேள்விகளினால் விண்ணுலகம் களிக்கவும், பகைவர்கள் வணங்கவும், பாவங்கள் தேயவும், புண்ணியம் வளரவும் அரசாட்சி செய்துவந்தனர். முற்பிறப்பின் நினைவால் வெண்ணாவல் நீழலில் வீற்றிருந்

த அமுதலிங்கேசரை விளையாடுங்காலத்தும் மறவாராய், அவர்க்குத் திருப்பணிகள் ஆக்குதற்கு மனம் வைத்தார். நாற்படையும் பரப்பி யெழுந்து, பகைவர்களுடைய முடிகளோடு முடிகள் புரளும்படி யுத்தத்தில் வென்று, அவர்களுடைய வளங்களையெல்லாம் கவர்ந்து, வணங்கிவந்த அரசர்களிடத்துத் திறைவாங்கி, அளவுபடாத செல்வத் திரளோடு நாவல்வனத்தை யடைந்தனர். முந்திய பிறப்புக்களிலே தொடர்ந்து நின்ற அன்பானது மிக, ஜம்புநாதருடைய திருவடிகளைத் தியானித்து வணங்கினர். அத்திருவுருவத்தை நோக்கிக் கண்ணீர் பெருக்கி, மனங்குழைந்து, உருகினர். எல்லையில்லாத ஆனந்த மாக்கடலில் திளைத்தனர். பல மறைகளைப் பாடி யாடினர். அவ்விடத்துநின்றும் அரிதில் நீங்கி அகிலாண்டவல்லியினது பரிபுரமணிந்த சீறடியைப்பணிந்து போற்றி, அவ்வனத்தில் ஓர் புறத்துத் தம் பரிசனத்தோடும் வைகினர். தம் மந்திரிகளைப்பார்த்து, "வெண்ணாவலின் மருவிய எம்பிரானுக்கு, ஆலயம்வகுக்க எண்ணினேன்" என்று கூற, அமைச்சர்முதலியோர், உலோகமுருக்குவோரையும், இரத்தினமிழைப்போரையும் வருவித்தனர். அன்று சூரியன் அஸ்தமித்தது. அன்று இராத்திரியில் சிவபெருமான் அவருடைய கனவில் ஒரு சிவனடியாரைப்போல் தோன்றி, அரசன் முகத்தைப் பார்த்து "உலகமுழுதும் ஒரு குடையின்கீழ் ஆளுகின்றவரசனே! பொன் முதலியவற்றால் பணி செய்யக் கருதினை. அவ்வெண்ணத்தை விடுக; தேவதச்சனாகிய விசுவகர்மா முன்பு நம்மிடத்து வந்து குற்றமில்லாத ஆலயத்தைச்செய்ய விரும்பினான். அவன் கண்டகை மலைச்சாரலில் கண்டகை நதியின்பக்கத்தில், விமானத்தைத் தன் கையினாலே செய்து இங்கு கொண்டுவந்து அமைக்கவெண்ணினான். நாம் அவனைப்பார்த்து, அதனை அவ்வாற்றில்விட்டு நீங்குகவென்று கூறினோம். அவன் அங்ஙனம் செய்து இத்தலத்தில் வந்து பெருந்தவஞ்செய்து நிருமிதத் தலைமை பூண்டனன். ஆதலால், அவ்விமானம் அவ்விடத்திலுள்ளது. அங்கே கோடி உருத்திரர்கள்பூசித்த ஒரு கடவுளுண்டு. அவரை யடுத்துப் பூசித்து, அவர் மொழிகிறபடி, நீ அதனை இங்கே பெயர்த்து வைப்பாய்" என்று நயமொழிகளைக் கூறி மறைய, அரசர் விழித்தெழுந்து, சொன்னவைகளை நனவெனத்துணிந்து, விடிந்தபின் அமைச்சரை யழைத்து, நிகழ்ந்ததைத் தெரிவித்து, நால்வகைச்சேனையும் சூழ, வடதிசைநோக்கிப் புறப்பட்டனர். அமுதலிங்கேசர் அருளிச்செய்தபடி, கண்டகநதியைச் சார்ந்து, அங்குள்ள இறைவருடைய அடிகளைப் பணிந்து, அங்குச் சிலநாள் வசித்தனர். முக்கட்பெரு



மான் எதிர்தோன்றி "அஃது இந்த இடத்திலுள்ளது. அதை யெடுத்து அந்தவிடத்தில் செலுத்துக" என்று கூறிமீட்டும் "நதியில் வீழ்த்திச்செல்லுக; அது அவ்விடம் வந்து சேரும்." என்று அருளிச்செய்து மறைந்தனர். அரசர் நதியில் மூழ்கி, கைலயங்கிரிக்கு ஒப்பான விமானத்தைக் கண்ணில் கண்டு சிற்பநூல்விதிப்படி யமைந்த அந்த விமானத்தைக் கரைமிசையேற்றி, நன்றாகப் பார்த்து "அவ்விடத்திற்கு வருக" என்று மீட்டும் நதியில் இட்டனர். அங்குள்ள கண்ணுதற்பெருமானை மீட்டும் வணங்கி, தம்சேனையும் தாமும் மீண்டு சென்று கஜாரணியத்தையடைந்து, அமுதலிங்கேசரைத் திருவடிதாழ்ந்தனர். பிறகு கோச்செங்கணார் காவிரியை யடுத்துநிற்ப, ஆற்றின் நடுவிலே விமானம் வந்து நின்றது. அற்புதம் எழுந்தாற்போல விமானமானது நீரிடைத் தோன்ற, வேந்தர் உள்ளத்தில் அற்புதங்கொண்டனர். தேவர்களும் ஆச்சரியத்தை யடைந்தார்கள். பூலோகத்திலுள்ளவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

"அடியவர் தமக்கெய் தாத வரும்பொருள் யாதொன் றில்லை
கடிகெழு நாவ னீழற் கண்ணுத லருளினாலே
படிமிசை யெவருங் காணப் பரந்தகெண் டகைநீ ராற்றின்
இடுசிலை பொன்னி யாற்றி னெழுந்துமேல் விளங்கு மென்றால்."

வேலையாட்களையழைத்துக் கரையிலேற்றி நாவல்நீழற் பெருமானுக்கு, இனிது சார்த்தி அதன் மேல்பக்கத்து ஒன்பது சாளரங்களையமைத்து, தென்திசையில் திருவாயிலுமமைத்தனர். தெற்கு வாயிலின் நேரே முப்பது சாலேகங்களோடு விண்ணையளாவுகின்ற கோயிலுக்குப்பொருந்த மண்டபம் முதலியவற்றையும், சிலையினாலே சிங்கத்தினுருவைப்போலச் சிறந்து தோன்றவமைத்தனர். மண்டபம் பிராகாரங் கோபுரங்கள் முதலியவற்றைச் செய்தபிறகு, எஞ்சிய நிதிமுழுதையும் ஒருபக்கத்தில் தாபித்து அதற்கு நேரே மேலாக உள்ள மண்டபத்திலே கோயிலொன்று அமைத்து அக்கோயிலினுள்ளே ஒரு சிவலிங்கத்தைத் தாபித்து, "உத்தம! இந்த நிதிகளையெல்லாம் உமது வசத்தில் வைத்தனன்; கைக்கொண்டருள்க" என்று வணங்கினர். அதனால் அந்த மூர்த்திக்கு ஆதிப்பெருஞ்செல்வர் என்னும் திருநாமமுண்டாயிற்று. ஜம்புநாதருக்கு நித்திய நைமித்திய பூசையெல்லாம் ஆகமவிதிப்படி குறைவறச் செய்தற்குரியவர்களைத் தேடிக்கொணர்ந்து இங்கே வைக்கவேண்டுமென்றெண்ணி, காசி, கேதாரம், காஞ்சி, முதலிய நகரங்களிலிருந்து நல்ல குலத்தில் பிறந்தவர்களான சிவத்துவிசர்களை யழைத்து வந்து, செல்வம், பூமி, சுதந்திரம், கிரக

ங்கள் முதலியவற்றைக்கொடுத்து அங்கே தாபித்தார். அமுதலிங்க
ருடைய திருவடிகளைப் பூசித்தற்குரிய சிவபக்தர்களுக்குப் பதினெட்
டுத் திருமடங்களைக் கட்டி, பலசெல்வங்களும் நல்கி, உலகம் வியக்கு
ம்படி எல்லாப்பாக்கியங்களையும் நிலைபெறச் செய்தார். இவ்வகை
யாக இவர் எல்லாத் திருப்பணிகளையும் இங்கே செய்ய, பாண்டியன்
முதலிய வேந்தர்கள் வந்து, அவரவர் தத்தமக்கேற்ப திருப்பணிக
ளைச் செய்தார்கள். நாள்தோறும் ஆறுகாலபூசையையும் திருவிழா
முதலியவற்றையும் சிறப்புறச்செய்து, தரிசித்துப் பேரானந்தமுற்
று, அங்கே பலநாள் வசித்து, பின்னர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு
மார்க்கத்திலுள்ள தலங்களில் பல திருப்பணிகளைச்செய்து, தம் பதி
யை யடைந்தார். அவ்விடத்திலிருந்தபடியே அரசுபுரிந்து உலகத்
திலுள்ள ஆலயங்களிலெல்லாம் குறைவறப் பூசை நடக்கும்படி செய்
து, மலங்களெல்லாம் நீர்ந்து, பரகதவடிவோடு ஒன்றாய் மேவி, சிவ
லோகத்தில் கணநாதராகப் பொருந்தினர்.

இந்தப்படி, சூதபுராணிகர் கூறக்கேட்ட மகரிஷிகள் "முனிசிரே
ஷ்டரே! இந்த நல்ல சரித்திரத்தைக்கூறினீர்; இதில் எங்களுக்கு ஒரு
சந்தேகம் உண்டாயிற்று. அதைத் தீர்க்கவேண்டும். அதுயாதெ
னில், சிலந்திக்கும் யானைக்கும் சிவபூசையில் பக்தியுண்டான காரண
ம் யாது? அவை ஞானக்ஷேத்திரத்தை யடைந்து சிவசரணாவிந்த
ங்களை ஆராதிக்கும் பேறு எப்படிக் கிடைத்தது. அன்புகூர்ந்து
அருளிச்செய்யவேண்டு" மென்று பிரார்த்திப்ப, சூதமுனிவர் சொல்
லத்தொடங்கினர். "கைலையங்கிரியிலேயுள்ள பல கணநாதர்களுக்கு
ள், மாலியவான் என்றும் புஷ்பதந்தனென்றும் இருவருண்டு. அவ்
விருவரும் சிவோபாஸனையில் மிக்க ஊக்கமுடையவராய் ஒருவருக்
கொருவர் மேம்படவேண்டுமென்று முயன்றனர்." அதுகாரணமாகப்
பொறாமையுற்று, ஒருவரை யொருவர் பகைத்தார்கள். ஒருநாள்
இருவரும் சந்தித்தபோது, மாலியவான் புஷ்பதந்தனை யானையாகும்
படி சபித்தான். புஷ்பதந்தனும் மிகச்சினந்து, மாலியவானைச் சிலந்
தியாகும்படி சபித்தான். நீங்காத பெரிய சாபவலையிலகப்பட்டு, இரு
வரும் மங்கைபாகரையடுத்து, நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்து,
"நாங்கள் அறியாமற் செய்த பிழையைப்பொறுத்து, சாபவிமோசன
மாகும்படி செய்தருளவேண்டு"மென்று வேண்ட, சிவபெருமான்
"சோழவளநாட்டில் தேவரும் துதித்து வணங்கும்படியான ஞான
க்ஷேத்திரத்தை யடைந்து, நம்மைப்பூசித்து, ஒருவரையொருவர்
இன்னும் அதிகமாகப் பகைத்து, அங்கே சரீரத்தைவிட்டு, சாபத்தை



யும் ஒழிப்பீர்" என்று கூறி விடுத்தனர். அப்படிப்பட்ட பெருந்த
வமுடையராதலினால் சிவபூசையில் மனத்தைச் செலுத்தி, ஞான
க்ஷேத்திரத்தையடைந்து, சிவபூசைபுரிந்து மேன்மையுற்று விளங்கி
னர்" என்று கூறி, மேலே கௌதமரிஷி பூசித்துப் பேறுபெற்ற வர
லாற்றைச் சொல்லத்தொடங்கினர்.

சிவயோகிகளுள் சிறந்தவரும், பரமசாம்பவருமான கௌதம
முனிவர், தம்முடைய பத்தினியாகிய அகலிகையென்பவளோடு வாழ்ந்து
கொண்டிருக்கையில், ஒருநாள், இந்திரன், உருவத்திற்சிறந்த அகலி
கையைக் கண்டு மோகித்து, சேர விரும்பி, அவளைப்பார்த்து இரக்க,

கௌதமர் பூசித்தது.

அவள் இந்திரனே யாசிக்கிறனென்று மனத்தில்
களிப்புற்று, அவன் கருத்துக்கிசைய, இருவரு
மனமொத்துக் கூடினர். இந்திரன் நீங்கிச் செல்
லும்போது, கௌதமர் கண்டு, "மேகவாகனனே! வேதநெறி தவறி,
நீ ஒரு பெண்ணினுடைய கற்பைக் கெடுத்தமையால், உன்னுடைய
குறியானது அழுகி வழுக" என்றும், மனைவியைப் பார்த்து, "நீ
கல்வடிவம் அடைவாய்" என்றும் சபித்தனர். அவர், இல்லாள் இல்
லாளாகவே இருந்துவருங்காலத்தில், அவளுக்கு நல்வினை யடையுங்
காலம் நெருங்கினமையால், ஒருநாள் இரவில், அவர் தம் மனைவியின்
மீது கருத்தைச் செலுத்தி, அவளையே நினைத்து வருந்துவாராயினர்.
பெருந்தவமுனிவர் இரவெல்லாம் காமநோயால் வருந்தி, விடியற்கா
லத்திலெழுந்து, சிவத்தியானஞ் செய்து, காலைக்கடன்களை முடித்து,
சம்புகேசுவரத்தை யடையும்படி புறப்பட்டுச்சென்று அதன் எல்லை
யை எதிர்கண்டார்; காணவே கவலையெல்லாம் நீங்கப்பெற்று, நிலத்தி
ல் விழுந்து தெண்டனிட்டு எழுந்து, கண்களில் ஆனந்தபாஷ்பம் பெ
ருக, நாவினால் வேதங்களை ஓதித் துதித்து, காவிரிநதியை யடுத்து
ஸ்நானஞ்செய்து, அத்தலத்தினுள்ளே புகுந்தார்; அங்குள்ள தீர்த்த
ங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்து, விதிப்படி விபூதி ருத்திராக்ஷதா
ரணம்செய்து, ஐந்தெழுத்தோதி, ப்ரம்மலிங்கத்தைத் தரிசித்துத்
தாழ்ந்து எழுந்தனர்.

மகரிஷிகள் சூதமுனிவரைப்பார்த்துப் பரமசிவனுக்கு ப்ரம்ம
லிங்கமென்னும் திருநாமம் வந்த காரணம் யாதென்று வினவ, சூத
முனிவர் சொல்லுகிறார்,—"இராதந்திரமென்று சொல்லப்பட்ட ஒரு
கற்பத்தில் திரேதாயுகத்தில் பிரம்மா சிருஷ்டித்தொழிலைப் பெறும்
பொருட்டுத்துதித்து வழிபாடு செய்தமையால், அரவாபரணராகிய

சிவபெருமானுக்கு அப்பெயருண்டாயிற்று." என்று கூறி மேலே சொல்லத்தொடங்கினர்.

கௌதமனர், தரிசித்து வணங்கி மலர்முதலியவற்றைக் கொண்டு சிலநாள் பூசிக்க, அண்டர்பெருமான் அவர் பூசைக்கிரங்கி விருஷபவாகனத்தின்மீது எதிர்தோன்றினர். இடப்பக்கத்தில் பார்வதிதேவி பொருந்தவும், திருமுடியில் கடுக்கைமாலை பிரகாசிக்கவும், அமரரும் முனிவரும் தொழுதேத்தவும், பூதகணங்கள் புடைசூழவும், சிவபெருமான் காட்சிகொடுத்தவுடன், முனிவர் கண்டு மலர்த்தாள்களில் விழுந்து பணிந்து வலம் வந்து மனம் குழைந்து, துதிக்கத்தொடங்கினர்.

"மருமலி கின்ற மென்பூ வாளிகள் கழைவி லேற்றிப்
பொருமொரு தேவ னாக்கை பொடித்தனை பொருவின் முத்தி
யுருவுகச் செங்க லோச்ச மொருவருக் களித்தி யானின்
றிருவருட் டிறத்தை யாரே யுள்ளவா தெரிக்கு நீரார்."

"சிறவிதி புரிந்த வேள்வி தீவினை யாக்கித் தேவர்க்
குறமுறை செய்தாய் தந்தை யுயிர்க்கொலை புரிந்த பாவ
முறகுபுண் ணியம தாக்கி முதன் மையோர் பாலர்க் கீந்தாய்
பெறுமநட் டிறத்தை யாரே யுள்ளவா பேணு நீரார்."

"தீங்குசெய் மனைவி கல்லாய்த் தீர்தா வெகுளி யென்பால்
வீங்கமுன் புரிந்தா யின்றும் மெல்லிய லின்பந் துய்த்து
நீங்கருஞ் செல்வ மோங்க நினைவினைக் கொடுத்து நின்று
யோங்கருட் டிறத்தை யாரே யுள்ளவா றுரைக்கு நீரார்."

என்று துதித்து நின்ற கௌதமரைப் பார்த்து, கொன்றைமாலையைத் தரித்த பரமன் "நீ உன் மனத்துயரத்தை யொழிப்பாய்; தாசரதியால் உன் மனைவியின் சாபம் நீங்கும்; பின்பு, உன்னிடம் வந்து சேர்வள்; அந்த நாள் வரையில் அனங்கன்வாளி உன்னைத் துன்பஞ்செய்யாதிருக்கும்படி, நீ இத்தலத்தில் எம்மைப்பூசித்துக்கொண்டு வசிப்பாய்" என்று கூறி, அமுதலிங்கத்தில் மறைந்தருளினர். பரமசிவன் அருளிச்செய்த அருளைச் சிரமேற்கொண்டு, புண்ணியமுனிவர் சிவபூசை செய்து பலநாள் அங்கு வசித்தனர். ஒரு காலத்தில், அயோத்தியென்னும் நகரத்தில், திருமால் இராமனாக அவதரித்து மிதிலைநோக்கிச் சென்றபோது, அவன் பாதந் தோய்ந்தவுடன், அகலிகைக்குக் கல்லுரு நீங்கியது. நீங்கியவுடன் எழுந்து, அரக்கர் சேனைகளையழிக்கவந்த செம்மலுடைய பாதங்களை வணங்கி, தன் கணவர் இருக்கும் இடத்



தைத் தேடிச்சென்றாள். பிரம்மலிங்கத்தைப் பூசித்துப்போற்றிய புண்ணியத்தின்பேற்றால், மனைவி சாபம் நீங்கித்தம்மிடம் வந்துசேர, முனிவர்விடைபெற்று, அவளோடும் அவ்விடம்விட்டு நீங்கி, தாம் முன் வசித்த இடம் சென்று போகங்களை நுகர்ந்து சுகமாக வாழ்ந்தனர்.

அருட்பிழம்பாகிய பரமசிவன் கௌதமருக்கு மிகுந்த சுகத்தையருளினமையால் சங்கரேசுவரர் என்னும் திருநாமம் திரேதாயுகத்தில் வழங்கியது. பிரமீசரென்றும், சங்கரேசுவரரென்றும் பெயர் பூண்ட நாயகருக்குப் பக்கத்தேயுள்ள சம்புதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர்களுக்குச் சகலகுணங்களும் செல்வங்களும் முக்தியுமுண்டாகும். எந்தத் தீர்த்தமும் இந்தத் தீர்த்தத்துக்கு ஒப்பாகாது.

வெள்ளிமால்வரையில் எழுந்தருளிய சிவபிரானுக்குத் தோழன் என்று பெயர் பெறும்படியான மேன்மையுடைய குபேரன் அளகாபுரியில் ஆட்சிசெய்து வந்தனன். தசகண்டனாகிய ராவணன், கண்ணுதற்பிரானைப் பூசித்துப் பலவரங்களைப் பெற்று வையகம் எல்லாம் தன்னை வணங்கும்படி ஆண்டு வருநாளில், குபேரனைச் செயிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு நால்வகைச்சேனைகளும்புடை சூழசென்று, அவனைப் புறங்கொடுத்தோடும்படி துரத்தி, அவனுடையநகரத்திலிருந்து எல்லா நிதிகளையும் புஷ்பகவிமானத்தையும் கவர்ந்துசென்றனன். குபேரன் இராவணனுடைய யுத்தத்தில் உயிர்தப்பிப் பிழைத்து, துக்கத்தோடு விரைந்தோடி, கைலையங்கிரியை யடைந்தனன். உயிர்க்குறுதியான மிக்க தவத்தைச்செய்து, கைலாசபதியினுடைய திருவடிகளில் மலர்களால் அர்ச்சித்து, தனக்குப் பகைவனால் நேர்ந்த இடர்களையெல்லாம் தெரிவித்து முறையிட்டான். "தேவர்கள் எல்லாம் தொழுதேத்தும் இறைவனே! பாபியாகிய இராவணன் கவர்ந்துபோன பொருள்களையெல்லாம் அடியேன் அடையும்படி அருள்செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க, சந்திரசூடர் கடைக்கண்ணால் அருளிப்பார்த்து, குபேரன் தமக்குத் தோழனாகையால், சொல்லத்தொடங்கினர்.

குபேரன் வழிபட்டது.

"தனதனே, நீ, தேவமானத்தால் பன்னிரண்டுவருஷம் பாசுபத விரதத்தை யனுஷ்டித்து, அரிய தவத்தைச்செய்து, நம்மைப் பூசித்தாயாகையால், 'இனி நீ ஒன்றுக்கும் அஞ்சற்க. பூலோகத்தில் ஞானக்ஷேத்திரம் என்று ஒருதலம் உளது. நீ அவ்விடத்தையடைந்து, அங்குள்ள பலபுண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து, நந்தீக

வரம், வாலகில்லீசுவரம் முதலான பல ஸ்தலங்களில் வழிபட்டு, பக்தியோடு தங்குவாய். இன்னும் சிலநாளில், இராமன் அரக்கனுடைய உயிரை மாய்ப்பான். அதன்பிறகு, உன்னுடைய பெருஞ் செல்வமும் புஷ்பகவிமானமும் முன்போலவே உன்னிடத்துவந்துசேரும்; இது சத்தியமாகும்." என்று கைலைப்பெருமான் விடையளித்தனர். குபேரன் சிவபிரானை அன்போடு வணங்கி விடைபெற்று, கைலையங்கிரியை நீங்கி, மார்க்கத்திலுள்ள பல தலங்களையும் பணிந்து, காவிரியின் பக்கத்தையடுத்தான். அங்கே ஞானக்ஷேத்திரத்தை நோக்கி, பூமியில் விழுந்துபணிந்து, காவிரிமுதலாகிய குற்றமற்ற எல்லாதீர்த்தங்களிலும்விதிப்படி நீராடி, அங்குள்ள சிவலிங்கங்களையெல்லாம் மலர்களால் அர்ச்சித்துப்பணிந்து, அமுதலிங்கத்தின் சன்னிதியையடைந்தான். வெண்ணாவலின் கீழ் அமர்ந்தருளிய முக்கட்கனியைத் திருவடி வணங்கி, வலம் வந்து, ஒரு பக்கத்திருந்து இரவிலும் துயிலாமல் பஞ்சாட்சரத்தை அன்போடு ஜபித்துக்கொண்டிருந்தான். சூரிய உதயமான பிறகு அங்கொருபக்கத்து, தன் பேராலே ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து வேதாகமவிதிப்படி பூசை புரிந்து தவஞ்செய்து கொண்டிருந்தான். அன்றையதினம் போலவே, பலநாள் குபேரன்வழிபாடுசெய்து கொண்டு வருகிறகாலத்தில், நீலமேகம்போன்ற இராமன் தன்னுடைய வெற்றிக்கணையால் இராவணனுடைய உயிரை மாய்க்க, குபேரன், முன்னிழந்த புஷ்பகத்தையும் மற்றைச் செல்வங்களையும் திரும்பவும் அடைந்து, தன்னிருப்பிடத்தையடைந்து வாழ்ந்திருந்தான்.

"பேணுருட்டற்றம் பெரும்பகையும் பிரவிப் பகைசெய் யாணவமும்
மாணு வினையு மாயைகளும் வறுமை பிணியா திகள்பலவும்
வீணு யழிய வேட்டவரம் வேட்டாங் களுரு மெஞ்ஞான்றுங்
கோணு வருளுங் கொடுத்தருளுங் குபேர லிங்கம் வழிபடினே."

கோச்செங்கட்சோழரும், மற்ற வேந்தரும் கூடிப்பணிசெய்யு நாளிலே, கோயில்சூழ்ந்த மதில்களையெல்லாம் கட்ட முயன்றனர். அப்பொழுது சிவபெருமான் திருவருளால் "எல்லாவற்றையும் உள்ளடக்கிக்கொள்ளும்படியான பெரிய மதில் நீங்கலாக, மற்றைப் பணிகளையெல்லாம் செய்யுங்கள்" என்று ஆகாசத்தில் ஒரு மொழியுண்டாயிற்று. அந்த மொழி செவியில் படலும்,

திருநீற்றுத்திருமதில் வரலாறு.

அந்த வேந்தர்கள், "இது நாதனாருள்; இறைவரே இதை யமைப்பார்" என்று கூறி அந்தப் பெரிய மதிலைக் கட்டாமற் சென்றனர். நாவலின்கீழ் எழுந்தருளிய



உமாபதி உலகத்திற்குப் பெருவாழ்வை யளித்தற்பொருட்டு, பெரிய மதிலைச் செய்யும்படி திருவுளத்து எண்ணி, காஷாயமுடுத்துச் சடைமுடி தரித்து, கண்மணியும் திருநீறுமணிந்து, ஒருதுறவியாகிவந்தனர். தவத்தால் வருந்தலும் திருப்பணியால் மிக வருந்துதலுமே பாவவினையெல்லாம் போக்கி நற்கதிக்கு வித்தாகும் என்று யாவரும் அறிந்துகொள்ளும்படி, திருமதில் திருப்பணியைக் கரங்களால் செய்யக்கருதினர். தச்சர் முதலோரைத் தொழில் செய்யும்படி நியமித்து, எல்லா வல்லமையுமுடைய தமதியல்பும், எல்லாக் கருமங்களுக்கும் பொருந்தத் தாமே பயனுதவும் இயல்பும், விபூதியென்னும் பெயருடைய திருநீற்றின் மகிமையும் விளங்கும்படி, ஆட்களுக்கு விபூதியே கூலியாகக் கொடுக்கக் கருதினர். திருநீறே யவரவர் வேலைக்குத் தக்கபடி, பொன்னாக மாறியது. ஒரு சித்தரைப்போல விளையாடைச்செய்யும் அருந்தேசருக்கு ஒளிக்கும் வகையில்லாமையாலே, எல்லாரும் பணி செய்வாராயினர். அதற்கு வேண்டும் பொருள்களையெல்லாம் பற்பல இடங்களிற் பற்பலர் கூடிச் சித்தம் செய்தார்கள். இப்படித் தொழில்செய்வோர் பலர் நெருங்கி மதிலைக் கட்ட, மதில் கொஞ்சம் உயர்ந்தவுடனே, அதற்கண்ணை மறைத்துவந்த சித்தர், மதில்வரிசைமேல் கால் வைத்தேறி மிதித்து, பூமியின் உள்ளேயழுத்தினர். பூமியின்மேலே கிளம்பிய வரிசைகளையெல்லாம் பூமியினுள்ளே மறையும்படியழுத்தி பிறகு ஆகாசத்தை யளாவும்படிக்கு பெரிதாகிய மதிலை அமைத்தனர். அரிஷ்டம் நீங்கவும், சர்வாபீஷ்டமடையவும் கருதித் தம்மை யடைந்தவரையெல்லாம்பார்த்து, அருளோடு அருளிச்செய்வாராயினர்.

எல்லாச் சித்துக்களையுமுடைய எம்மிடத்திருந்த பொருள்களையெல்லாம் இந்த மதிலிலே தங்கும்படி வைத்துவிட்டோம். ஆகலால், வரன்களையடைய விரும்புவோரெல்லாம், கனிந்த அன்புடன், இந்த விசாலமான மதிலைப் பிரதட்சிணம் செய்க." என்று கூறினர். அன்றுதொட்டு உலகத்திலுள்ளவர்கள் மகப்பேறு கருதியும், ஐயத்தை விரும்பியும், செல்வத்தை விரும்பியும், இன்பத்தை விரும்பியும், இந்த மதிலைப் பிரதக்ஷிணம் செய்து எல்லா வரன்களையும் பெறுகிறார்கள்.

"மதிலினைச் சூழ்வா மென்று மனையகந் தன்னை நீங்கிற்
பொதிதரு பாவ யாதிப் புல்வினை யனைத்து நீங்கு
மெதிர் கொளின் வரங்க ளெல்லா மெதிர்கொளுங் கதுவின் ஞானங்
கதவுறுஞ் சூழிற் சூழுங் கரிசறு முத்தி நான்கும்."

கோச்செங்கட்சோழநாயனாரால் கொண்டுவந்து தாபிக்கப்பெற்ற சிவத்துவிஜர்கள், சகல கலைகளிலும் வல்லவராகவும், ஆகமக்கடலைக் கடந்தவராகவும், விதிப்படி சிவபூஜைசெய்து வருகிற காலத்தில், மன்னவர்களும் பணிகேட்க, வேறு தேயத்திலுள்ளவர்களும் என்ன வினை செய்தாலும் வருந்திப் பிரார்த்தித்து அழைக்கவும் தக்க மேன்மையுடையராயிருந்தமையால், அவர்கள், தம்மைத் தாமே மதித்துத் தருக்குற்று நடந்தனர். அவர்கள் தமக்குண்டான பெருமைகளெல்லாம் ஞானதலத்தில் வசிப்பதனாலும், அமுதலிங்கேசரைப் பூசிப்பதனாலும் உண்டானவையென்று எண்ணாமல், தப்பான எண்ணங்கொண்டு தவறுகளை செய்து வந்தார்கள்.

அமுதலிங்கேசர் அருண்முறை செய்தது.

கணிகையரைச் சேர்ந்தும், சிவாலயப்பொருள்களைக் கவர்ந்தும், காலங்களில் பூசைசெய்யாமல் தாமதித்தும், ஆசாரங்கள் குன்றியும், பூஜாக்கிரகங்களை விடுத்தும், இப்படிப்பட்ட தீங்குகளைச் செய்தமையால், சிவபெருமான் சினங்கொண்டு, அவர்களை ஆற்றில் கவிழ்க்கத் திருவுளங்கொண்டனர். இப்படியிருக்கையில், ஒருநாள் பிக்ஷாடன மூர்த்திக்குத் திருவிழா நடக்கையில், ஒரு சிறுவனை மாத்திரம் வைத்துவிட்டு, சிவத்துவிஜர்கள் எல்லாரும் அயலூருக்குப் போகப் புறப்பட்டு, கொள்ளிடத்தைத் தாண்டுவதற்காகத் தோணி ஏறினார்கள். கோலுக்கு நிலையாத பிரவாகத்தில் செல்லும்போது, ஐம்புநாதருடைய திருவருளால், ஒரு சூறைக்காற்று வீசியது. தோணி கவிழ்ந்து அதிலிருந்தவர்கள் எல்லாரும் மனைவிமக்களுடன் நீத்தத்தில் வீழ்ந்து உயிர் மடிந்தார்கள். அருட்பெருங்கடலாகிய அமுதலிங்கேசரே திருவுளங்கறுத்துச் சிவத்துவிஜரையெல்லாம் கொன்றார் என்றால், ஆராயும்போது, ஒருவரிடத்தும் குற்றம் செய்யாதிருத்தலே நல்லதென்று, உலகத்திலுள்ளவரெல்லாம் அஞ்சி நடுங்கினார்கள். அமுதலிங்கேசர், வெள்ளத்தில் இறவாமல் பிழைத்த சிறுவனுக்கு அனுக்கிரகம்செய்து, வேதாகமங்களையெல்லாம் அருளி மேன்மைதரும் பணிவிடையில் வைத்தார்.

முன்னொருகாலத்தில், குமாரக்கடவுள் சில பிராமணரைச் சிவபூசைக்குரியரென்று வெள்ளியங்கிரியிலிருந்து கொணர்ந்து, திருப்பிடவூரிலே தாபித்திருந்தனர். அவர்களில் அறிவிற் சிறந்தவர்களும், பக்தியின் வழுவாத சிந்தையுடையவர்களுமான சிலரை யழைத்து, பூசைமுதலிய செய்யும்படி வைத்தனர்.

அவர்கள் அச்சமும் அன்புங்கொண்டு, வேதாகம விதிப்படி பூசை முதலியபணிகளை உலகமெல்லாம் கொண்டாடும்படி செய்துவருகிறார்கள். உமாதேவியையிடப்பாகத்திற்கொண்ட பரமசிவனைப் பூசிக்கும் அந்தணரை அமுதலிங்கேசரென்றே மதித்து வணங்கினோர், தேவர்களாலும் போற்றி வணங்கப்படுவரென்றால், அன்னோருடைய பெருமையைச் சொல்ல யாவர் வல்லவர்.

"பிரிந்தபின் னிரக்கஞ் செய்த பரமனர் சரிதந் தன்னைத்
தெரிந்தவர் தெரித்தோ ரெல்லாந் தீவினை முழுது நீங்கி
விரிந்தபல் கதிகடம்முள் வேட்டநற் கதியுண் டேவிப்
புரிந்தபே ரின்ப வெள்ளப் புணரியுட் டிளைத்து வாழ்வார்."


இந்தப்பிரகாரமாக ஞானக்ஷேத்திரத்தினுடைய மகிமையையெல்லாம், சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்கு எடுத்துச்சொல்ல, அவர்கள் பரமானந்த வெள்ளத்துள் திளைத்து வாழ்ந்தார்கள்.

அருள்வளர் சம்பு மூலத் தமுதலிங் கேசர் வாழ்க
வருமகி லாண்ட வல்லி வாழ்கவே தாக மத்தின்
பொருணிலை வழாது வாழ்க புகழ்திரு வானைக் காவாந்
திருநகர் வாழ்க வாழ்க தேயங்க ளனைத்து மாதோ.

முற்றிற்று.

M. V. இராமாநுஜாசாரியர்.

67677



ஸ்ரீ ஜம்புகேச்வரர்கோவில் விமானம்.

உ

# திருவானைக்காப்புராணம்.

## கடவுள் வாழ்த்து.

நிலம்போற்றும் பனிக்கிரண நிலாவணிந்த நாயகனூர் நிருதர் வாழுஞ்
சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய பூசனைகள் சால வாற்றிப்
புலம்போற்று மெய்யடியார் விநாயகனென் றியம்புபதப் பொருளை நாட்டி
வலம்போற்று மணியிரத மூர்ந்தமழ விளங்களிற்றை வணக்கஞ் செய்வாம். 1

மதிவளம் படைத்து நாளும் வளரிருள் சீக்கு மாபோற்
கதிவளம் படைக்குந் தூய கருணையெவ் வுயிரின் மாட்டும்
பதிவளம் படைத்துப் பாசம் பாற்றவெய் யவனிற் றோன்றிப்
பொதிவளம் படைக்கு மின்பப் பூரணப் பொருளின் வாழ்வாம். 2

ஆணவ மகன்ற சுத்த வறிவல்லா லுருவ மில்லாத்
தாணுவி னகற லின்றிச் சசத்தினைந் தொழிலு மாற்றிக்
கோணவ மனைத்து நீக்கிக் குறுகிய வுயிர்கட் கெல்லாம்
பூணவ வின்ப நல்கும் பூரணிக் கன்பு செய்வாம். 3

மணிபூத்த நறும்பொகுட்டு மலர்த்தவிசு நாகணையு மாகத் தும்பர்ப்
பணிபூத்த கயிலாய நெடுஞ்சிலம்பு மொருமூவர் பணிந்து வைக
வணிபூத்த வவருளமுந் திருவானைக் காவுமினி தமர்ந்தெல் லோர்க்கும்
பிணிபூத்த மலந்தூரக்குஞ் சம்புநா யகர்மலர்த்தாள் பேணி வாழ்வாம். 4

எண்ணிறந்த தாயர்வயிற் றிருந்துபிறந் திறந்துயர மெனைத்து நீங்க
மண்ணிறந்து புனலிறந்து வயங்கியசெந் தீயிறந்து வளியி றேந்
விண்ணிறந்து பெருங்கருணைத் தாயாகித் தனதகட்டின் விரவ வைத்துக்
கண்ணிறந்த கவின்காட்டு மகிலாண்ட நாயகியைக் கருத்துள் வைப்பாம். 5

---

1. விநாயகர். 2. நிஷ்களசிவம். 3. நிஷ்களசக்தி. 4. ஜம்புநாதர். 5. அகிலாண்டேசுவரி.

பொன்னணிநூ புரஞ்சிலம்ப வடிபெயர்க்குந் தொறமங்கைப் புணர்செந் தீயு
மின்னொளிவே ணியிற்புனலு மெழுந் துபொறி திவலையிவை விரவ வீசி
மன்னரியீள் பகைமுடிப்ப வுடலமுயலன் முங்கிரண்டும் வயங்கி யாடத்
துன்னியபே ரொளிமன்றி னடநவிற்றும் பெருமானைத் தொழுது வாழ்வாம். 6

இளங்குழவிப் பிணிக்கின்ற தாய்மருந்து நுகர்வதுபோ லிருளின் மாண்ட
களங்குலவு மலமுயிர்கட் கொழியவரு ணடங்காணுங் கடன்பூக் கொண்டு
வளங்குலவு தனதுபெருங் கற்புமொரு கணவரிறை மாண்புந் தோன்ற
விளங்குமிரா ணியமன்றி னின்றருளு மணிவிளக்கை விளம்பி வாழ்வாம். 7

மும்மலம் வேறுபட் டொழிய மெய்த்துயி
ரம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கருவ நல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தி யாதரோ. 8

விண்ணாடர் தமக்கிரங்கி வேழமுகத் தவுணனுயிர் வீட்ட வீட்டற்
கொண்ணாத வொருசாங்க முபாங்கமென மலர்க்கரத்தி னொளிரக் கொண்டோய்
கண்ணுதற்பன் மொழிகேட்கு மலரிப்பூந் தோய் கமழ்சந்தங் கையான் மோக்கு
மண்ணுறுவென் றுரைத்தாதிப் பெருஞ்செல்வ விநாயகனை யடுத்து வாழ்வாம். 9

இருமுது குரவர் காப்ப னிளமையோ டிருந்து சேயென்
றொருவரும் பெயரும் வேறே யொருவருஞ் சாமி யாகாக்
குருபர னிறைஞ்ச வுண்மை கொடுத்தொரு சாமி யென்னும்
பொருவரும் பெயரும் பூண்ட புனிதனைப் புகழ்ந்து வாழ்வாம். 10

உலக மளித்தல் சுதந்திரமன் றுவண முயர்த்தோற் றெனவவன்சே
யிலகு முருவம் பொடித்தவன்பா லெழுந்து படைப்புஞ் சுதந்திரமன்
றலர்மெல் லணையாற் றெனவவனை யரங்கத் திசைமா முகனுக்கிப்
பலரும் வெருவப் பொழிநெய்த்தோர்ப் பயிக்கம் புகுந்தோன் பதம்பணிவாம். 11

எங்கு நிறைந்த பேரறிவென் றியம்பு பொருளு மான்மாவுந்
தங்கு மலமும் பகுத்துணர்ந்த தனதுள் ளகம்போற் றெழப்புகுந்த
துங்க முனிவர் முதலோரைச் சுடர்கைப் பிரம்பால் வேறுவே
றங்க ணிறுவிப் பணிபுரியு மண்ணன் மலர்த்தா ளெண்ணுவாம். 12

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புநிதற் கமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனு டைகள்பிறவும் வேறு தனக்கென் றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும் பயனை யடியார்க
ளின்னும் படிபூ சனைகொள்ளுந் தூயோ னடித்தா மரைதொழுவாம். 13

6. ஸபாநாயகர். 7. சிவகாமி அம்மன். 8. தக்ஷிணாமூர்த்தி. 9. ஆதிவிநாயகர்.
10. ஸுப்ரமண்யர். 11. வைரவர். 12. நந்திகேசுவரர். 13. சண்டேசுவரர்.



மழலை யின்னமு தூற்றெழு மாசைவள் ளத்துக்
குழலின் மென்மொழி யுமையவள் கொடுத்தபால் கமழப்
பழகு செந்தமிழ்ப் பாடலந் தேன்வடித் தாடு
மழக னஞ்செவி யூட்டிய வறிஞனை யடுப்பாம். 14

கொண்ட லாடிய விழிகளுங் கோலவெண் ணீற்று
வண்ட லாடிய மேனியு மல்குமா னந்த
முண்ட தாங்கெதி ரெடுத்தென வோதுசெய் பாட்டுங்
கண்டு கேட்டரு ளுவிறுங் காசினைக் கலப்பாம். 15

அடிமை யானவர்க் கருளையுந் தன்னையு முயிரிற்
படியி லாவகை யளிப்பது பாருளோ ரறிய
வடிவின் மாண்டவ ளொருத்திதூ தெனவிறை வழங்க
கொடியின் மாலைசெய் வன்றொண்ட ரடிமலர் நுவல்வாம். 16

உளத்திற் றேக்கிய சிவானந்த வெள்ளமுட் பொசிந்து
வளத்திற் றேக்கிய தெனவெயர் பொடிப்பவான் மடையாற்
களத்திற் றேக்கிய தெனவிழி காலவன் பிறைதாட்
டளத்திற் றேக்கிய வாதவூ ரடிகளைச் சார்வாம். 17

ஒப்பி றேடியர் விசந்தவ னுவந்தினி தருள
வப்பு ராதனன் றொழுது மருண்மொழிக் கவிஞன்
செப்பு மேன்மையி னறுபத்து மூவர்செம் மலர்த்தாள்
வைப்பி னுவினு மனத்தினுஞ் சிரத்தினு மணப்பாம். 18

தொகையா நாவ லூராளி தொடுத்த திருத்தொண் டப்பெருமை
வகையால் விளங்க வுயர்நம்பி யாண்டார் வகுப்ப மற்றதனைத்
தகையா வன்பின் விரித்துலகோர் தம்மை யடிமைத் திறப்பாட்டி
னுகையா நின்ற சேக்கிழா ரொளிர்பொற் கமலத் தாள்பணிவாம். 19

மும்மைப் பொருட்கு மிலக்கணங்கண் மொழிந்த விரண்டு காலத்துந்
தம்மிற் றிரியா வகைகாட்டித் தானுந் தன்மை மிகத்தேற்றி
நம்மைப் பணித்த புகழ்த்துறைசை நமச்சி வாய தேசிகன்றன்
செம்மைப் பதுமத் தாண்மலரென் சிந்தைத் தடாகத் தலருமால். 20

14 திருஞானசம்பந்தர். 15. திருநாவுக்கரசு. 16. சுந்தரமூர்த்தி. 17. மாணிக்க
வாசகர். 18. அறுபத்துமூன்று நாயன்மார். 19. சேக்கிழார். 20. பஞ்சாக்ஷர தேசிகர்.

## அவையடக்கம்.

மூவுலகு மீரடியா லொருங்களந்த நாரணனு முன்னிக் காணாத்
தேவனெனத் திருவானைக் காவானை யிறைஞ்சாமற் றீர்த லாமோ
வோவின்மறை தமக்குமரி தேனுமவன் பெரும்புகழை யுரைத்தி டாமை
மேவுவது முளதாமோ திறனிலரா யினும்பயனை விரும்பி னோர்க்கே. 1

தூயமறை யான்முடிவிற் றுலங்குமருட் கோயிலிடைத் துதைந்து வாழுந்
தேயமலி திருவானைக் காவிலொரு பெருமானார் சிலம்பி வாயி
னுபசிறு நூற்கோயி லிடத்துமினி தமர்தலினா லான்றோர் செய்யும்
பாயபெரும் புகழ்கேட்கு மவர்செவியி லெனதுரையும் படரு மன்றே. 2

பொன்பூத்த நெடுங்குடுமிக் கயிலாயத் தெம்பெருமான் புரைசீர் நந்தி
மின்பூத்த மணிப்பசும்பூ ணுமையிவர்கட் களித்ததென விரும்பிச் சூதன்
கொன்பூத்த முனிவரர்க்குக் கூறியசீர்த் திருவானைக் காவின் மேன்மை
தென்பூத்த செழுந்தமிழாற் றெரித்தெமது தீவினையைத் தீர்த்து மாதோ. 3

உ

# திருவானைக்காப்புராணம்.

## திருநாட்டுச்சிறப்பு.

பூவினுட் கமலமும் பொருப்புண் மேருவுங்
காவினுட் கற்பகக் காவுந் தேவருட்
டேவர்க டேவனுஞ் சிறந்திட் டாலென
நாவலர் புகழுநீர் நாடு மிக்கதே. 1

பல்வகை யொளியினும் பாரித் தெங்கணு
மெல்வளம் பெருக்குறு மிரவி மைந்தரு
னல்வளம் படைத்துநா வலரின் மேதகு
சொல்வளம் படைத்தது சோழ மண்டலம். 2

உந்தொளித் தமனியத் துருவ மாகியும்
பைந்தரு மணிநிதி பலவுந் தாங்கியுஞ்
சுந்தர மிகுந்தசோ ணொடொவ் வாமையா
னந்தரத் திசைந்ததா லமரர் வாழ்பதி. 3

நறக்கிளர் பொதும்பர்நீர் நாடு போன்மெனச்
சிறக்குநாற் பயனையுந் தேக்க வல்லதோ
துறக்கமென் றறிஞர்தம் மனக்குச் சொற்றலிற்
றுறக்கமென் றுயது சுரர்தம் வைப்பரோ. 4

இந்திர னிறைஞ்சவீற் றிருந்த விண்ணெறீஇச்
சிந்தையின் மகிழ்வொடுந் தியாக ராசரே
வந்திருந் தனரெனின் மல்கு சோழநாட்
டந்தமில் பெருமையா ரளக்கற் பாலரோ. 5

விற்பயில் சிவபுரத் தமர்ந்த வித்தகன்
பற்பன்மந் திரங்கொடு பயில்கின் றனனெனிற்
பொற்பமர் சோழநா டதனைப் பூதலத்
தற்புத நாடென வறையல் வேண்டுமோ. 6

எங்கணுஞ் சிவாக மொலிக்குந் தீர்த்தங்க
ளெங்கணு மறையொலி யெங்கும் வேள்விக
ளெங்கணுந் தருமமீ தெங்கு மல்கலா
லெங்கணு மிதற்கிணை நாடொன் றில்லையே. 7

சான்றவர் தவன்றசோ ணாடு தங்கலா
லான்றதென் றவனியை யாதி சேடனு
மூன்றியொன் மணித்தலை யுயர்த்தி நின்றன
னான்றநற் கல்விமற் றின்று மீட்டவே. 8

களமலி விடமணி கண்டர் போன்மென
வளவிடற் கரியதே யாறுஞ் சோழநாட்
டுளமலி நால்வகை நிலத்து மோங்கிய
வளமெமக் கியன்றவா வகுத்து மென்பவே. 9

தங்க ணாயகன் சூரனைப் பயந்தநாட் டவிர்ந்து
மங்கை யோடருள் பெற்றநாட் டினைவளர்ப் பாமென்
றங்கண் வான்படர்ந் தாழிநீர் முகந்தமா மேக
மெங்கு மாய்மழை பொழிந்தன விடம்பொரு தனவே. 10

வலனை மாட்டினேன் மருவுமோ ரவுணன்வல் லுடல
நிலனி னீக்குவா னெடுவிசும் படர்ந்துழைக் குலிச
மலகி னீளொளி படலிதிர்த் தார்த்தழுத் தியவே
றிலகு மீட்டியி னீண்டின வெழிலிநீர்த் தாரை. 11

புடவி நாயகி பூத்தமைக் கணிந்தசெவ் வணிபோற்
கடவுண் மால்வரை கலங்கிய வாசநீ ராடி
விடலில் வான்கனி பயந்தமைக் கணிந்தவெள் ளணிபோற்
படரு மாசறத் தெளிந்தநீ ரொழுக்கொடும் பயின்ற. 12

அருவி பற்பல திசைதொறும் விழுகிமி ரடுக்கல்
பொருநர் வன்கயிற் றிறுக்கிய போகுயர் கழைச்சீர்
தருவ வன்னவற் றுச்சியிற் கூத்தியர் தகைய
மருவு மஞ்ஞைக ளாலுவ மழைவர வெதிர்ந்து. 13

இழுமென் னோதையி னிழிதரு மருவியி னியமாக்
குழுமு தேத்தடைத் தேன்முரல் வனகுளிர் யாழா
விழுமி தாகிய கிளியின மிழற்றுவ கழையின்
வழுவில் கூத்தினுக் கிசைத்தபாட் டெனநனி வழங்கும். 14

நெருப்ப விர்ந்தென நிரைநிரை மலர்ந்தபூங் காந்தண்
மருப்ப கந்தமிழ் மாருதந் தவழ்தொறு மசைவ



வொருப்ப டுங்கரத் தாற்கழைக் கூத்தினை யுவந்து
விருப்பொ டுங்கர தலங்களை விதிர்ப்பன போலும். 15

சாலுங் கூத்தினி யமைகெனத் தடங்கர மமைத்தாற்
போலுங் காந்தள்கள் போதவிழ்ந் திதழ்கண்மே னிமிர்வ
வேலுங் கூத்தினுக் கிடும்பெரும் பரிசிலே யென்னக்
காலுங் கானறுந் தேன்மல ரவிழ்ப்பன கணிகள். 16

ஆடு மாமயி லெறுக்கிய வயிர்மணி நாகம்
வாடு மோகையின் வல்விரைந் தளைதொறு நுழைவ
பாடு கூத்தியர் பரிசிலுக் கலைப்படவென் றஞ்சி
நீடு மோர்சிறைக் கரந்துறு முலோபரே நிகர்ப்ப. 17

அரிய மாதவ மாற்றுநர் சூழலின் மருங்கே
யிரியல் போமத வேழத்தை யெழுந்துதாய் மடங்க
னெரிய மோதுவ வவர்வயி னீங்குமா மலத்தை
யுரிய மாதவ முருக்கொடு தொடர்ந்தடர்ப் பனபோல். 18

வலரி லாவிய மதத்தவர் வழிபடுந் தத்த
மிலகு தேவரி னும்பய னெய்துமா போல
வலரி நோக்கனு மதன்சிலை யாரழ லுமிழ்வ
நிலவு நோக்கனு மதன்சிலை நெடும்புன லுமிழ்வ. 19

உடைய நாயக னுணையா லுயர்வரைக் கயிலை
யடையு நாவலூ ரடிகளோ டடுத்தமன் னவன்போற்
படைகை யேந்தினோர் பாங்குறிற் படையொடு மவர்தம்
புடைய ராம்படி புரியயக் காந்தமும் பொலிவ. 20

குங்கு மங்குளிர் சந்தனங் கோழகில் பிறவுஞ்
செங்கண் வெற்பர்கள் சிதைத்தெரி மடுத்திடப் படுவ
வங்க ரிந்திஃ தடுக்குமே நமக்குமென் றமையுட்
டங்கு மங்கியி னவிவன தாங்களே யுரிஞ்சி. 21

அழிக்கப் பட்டபி னுலகெலா மாக்கத்திற் சிறந்தாங்
கொழிக்கப் பட்டபின் வளமெலா மொன்றபற் பலவாய்ச்
செழிக்கப் பட்டன சிலம்புகள் சிலம்புக டோறுங்
கொழிக்கப் பட்டன புனங்களுங் கொழும்பயன் றினையால். 22

மூரன் முத்தொடு நிகர்ப்பன வெனமுனிந் தாங்கு
வேரன் முத்தமும் வேழத்தின் மருப்பவிர் முத்துஞ்
சாரன் முற்றிய வேனலிற் றையலார் கவணூற்
றீரன் முற்றற வெறிவன திவள்வன வுடுப்போல். 23

சிமைய மால்வரைத் தையலார் திரள்பெருந் தோளி
னமைவு வாய்த்தலி னமையெனப் பட்டவே யதூர்கைச்
சுமையை நீத்துமென் றிரும்புனந் துவன்றுபுள் ளிரிய
விமையி னீளொலி படவெடித் திறைப்பன முத்தம். 24

சுருள்ப டுங்குழற் கிகலிவண் டோட்டலர் பொதும்ப
ரிருள்ப டப்பெரி தீண்டிஞு மீண்டுறுந் தோறு
மருள்ப டுங்கள வயலறி யாப்பகற் குறியாய்த்
தெருள்ப டுங்களி செய்வெவன் றவக்குமந் நவரால். 25

அமரர் நாயக ஞகிய வங்கண னிறைஞ்சுங்
குமர நாயகன் வணங்கியோர் கொடிச்சியை மணந்து
விமல நாடொறு மடியவர்க் களிப்பவீற் றிருக்கும்
பமர மார்பொழில் வரைவளம் பகருதற் கெளிதோ. 26

பிறந்ததம் மனையி னீங்கும் பெருநதி யென்னு மாது
சிறந்தகுங் குமங்கத் தாரி செழும்பொருள் பலவுந் தாங்கி
யிறந்தழிப் பசும்பொன் வீசி யிழுதுபா றயிரு மற்று
மறந்தழை தாக நீங்க மடுப்பன புறவ மம்மா. 27

தேவருக் காசா வுண்டி தெவ்வுறும் விரதத் தார்போற்
றூவர காதி யண்டர் துவன்றினர் விளைப்பத் தேவர்க்
காவன வென்பார் போல வானநெய் யாதி நாளு
மாவடு கன்னி ஞரு மாறிவண் பொருள்கைக் கொள்வார், 28

யாவரும் பழிச்சு மேன்மை யிமையவ ருறுப்பிற் றங்கி
மேவரும் பெற்ற மெல்லாம் விழைந்துதம் மேவ லாற்றிற்
போவதுந் திரும்பு மாறும் புரிகருந் தேவ ரேயென்
றுவதந் நிலத்து மாந்தர்க் சண்டரென் றுரைக்கு நாமம். 29

விண்ணவர் தமக்கே யல்லால் விண்ணவ ருறுப்பிற் றங்கும்
வண்ணவன் கோட்டு நல்லான் வழிநடந் தொழுகா தென்றே
மண்ணவர்க் கொருசான் ருக வையக மூன்றுங் காக்குங்
கண்ண னு மாய ஞகிக் காத்தன னிரைக ளம்ம. 30

மட்டலர் கோதைப் பைம்பூண் வள்ளிநா யகியை முன்னோர்
கட்டழ கெறிக்கு மானைக் காதலித் தாயிர்த்து நம்பாற்
பெட்டுல கேத்து மேன்மை பெருக்கிய நெடியோன் வைப்பென்
றட்டிக மார்வத் தோடு முறைந்தன வுழைக ளெங்கும். 31

மயாற வொருவர் தொட்ட வன்குளப் புனலும் வேண்டா
வியனிலப் பயிரு மேயா வேலியுங் கடத்தல் செய்யா



முயலினம் வாழா நின்ற முறைதிறம் பாமை நன்றென்
றயலுறு மனத்தார் நோக்கி யுவப்பன கரிய கானம். 32

உறும்பொறை நகிலி னுற்று வொசியிடை யவர்சொன் மான
நறும்பொறை யோதி மாதர் நளிரித ழமுத மாந்துங்
குறும்பொறை நாட ருதப் படுவன குழல்கள் கானம்
வறும்பொறை ஞான்று மந்த வளரிசைக் கிளகிப் பூப்ப. 33

கூர்த்தநுதிப் பனிமுல்லை கோதையர்த் மியலொளியிற்
சீர்த்தநகை முகையொப்புச் சிவணுத மானத்தா
லார்த்தவிதழ் நெகிழ்ந்துடைவ வவர்செயற்கை யொளிநகைக்கு
நேர்த்திலமென் றுடைந்தொழிவ நெடுங்கொடிமா தவிமுகையும். 34

துருவினர்நா மணர்பண்டு சுகந்தந்த கணவனைத்தா
மருவவருந் தவம்புரிந்தான் மானவலர் வனபூவை
பெருகுதவத் தினுக்கிரங்கிப் பின்னுரான்பல் லுருவாகி
யருகடுத்த தெணமலர்வ வசம்புயநந் தேங்கொன்றை. 35

கற்புமேம் படுஞ்சிறப்பாற் காதலரைத் தணந்தவர்தாம்
வற்புமேம் படவாற்றி வதிகின்று ரக்கான
மற்புமேம் படுமானு மனைந்தகன்முக் கட்கடவுள்
பொற்புமேம் படுவாவு புகன்றிருந்தாற் றலதென்றே. 36

உருப்பவிர்வே னிலின்வாடு முயர்கான மகன்றவர்தே
ரொருப்படுகார் வரும்பருவத் தொள்ளிழையா ருடன்மலிவ
விருப்பொடுதாந் தழீஇயினர்கண் மெலிவின்மெலிந் துவப்பினுவந்
திருப்பவர்போ லிளங்குயில்க ளினைந்தொழிவ பொருதவர்போல். 37

எவ்வளனு மினிதீட்டு மிலக்குமிசேர் மணிமார்பிற்
கௌவைநெடுங் கடற்பாயற் காகுத்தன் மகிழ்ந்துறையுஞ்
செவ்விபெறு நறுங்கானச் சிறப்பனைத்து மொழியாமே
மூவ்வுலகத் தினுமில்லை மொழிதக்க திறத்தினரே. 38

குறிஞ்சியை யடுத்துப் பாலை கொண்டெழின் முல்லை தோற்றி
யுறுஞ்சில நெய்தல் பின்ன ரோம்பவைத் தழீஇ ருந்திப்
பெறுஞ்சுக மருதஞ் சேர்ப்பப் பெயர்வதாற் பிணக்கு மூற்று
மறுஞ்சகத் தான்றோர் மெச்ச வைந்திணை யாற்று வார்போல். 39

மாயையின் வேறு வேறு பந்தத்து வங்கள் போலத்
தூயபன் மலரும் பொன்னுஞ் சுடரொளி மணியு முந்தி
மேயநற் பொன்னி யாற்றின் வேறுவே றெழுந்து கால்கள்
பாயதண் பணைக ளோம்பப் படர்வன வூர்க டோறும். 40

பொறிவழிப் புலன்க டோறும் புகுமுளங் குரவ னேக்கா
னெறியுளி யொழுக்கி னேகு நீதியி னுடைப்பு முற்று
மெறிபறை யார்ப்ப மள்ள ரிடந்தொறு மீண்டிச் செய்யுஞ்
செறிகுலை யகத்த வாகிச் செல்லுவ செழுங்கா னீத்தம். 41

கேட்டமெய் யருளை மீட்டுங் கேட்டுறச் சிந்தை செய்து
தேட்டறத் தெளிந்து நிட்டை சேர்ந்திடு மறிஞ ரேபோல்
வாட்டமில் குலைகண் மீட்டும் வயக்கிவன் சிலையு மற்றுங்
கூட்டியொண் புனல்சிந் தாமற் கொள்ளுவர் மள்ள ரெங்கும். 42

வழுவுறு மமண ரிட்ட வையைநீ ரேடு போல
வொழுகுதண் புனலிற் சின்மீ னொழுக்கினே டொழுகா நின்ற
கழுமல விறைவ னிட்ட காமர்பா சுரமே யென்னக்
கழுமிய சிலமீ னேனை கொண்டெதி ரேற நின்ற. 43

வாதனை மலத்திற் சற்றே வழீஇயுளம் பொறியாற் புக்கு
வேதனை யுடற்ற மீண்டு விரைந்துதன் னிலையை நோக்கிப்
போதுத லென்னக் காலாற் புலம்புகு சிலமீன் வல்லே
பேதுளங் கொண்டு வந்த பெரும்புன லெதிர்ந்து செல்வ. 44

தரையவ ரிறந்த காலைத் தரையொடு துறக்க நாடு
நிரையமும் புகுவ தேபோ னெடும்பனை யெழுந்து பாய்மீன்
விரைகமழ் பனையி னேடு விழச்செறு வாதி மாட்டுங்
கரைதிட ராதி மாட்டுங் கலப்பன பலாஞ்சி லாமே. 45

ஆம்பலுந் தாமரை யலருஞ் சங்கமுந்
தாம்பல கோடிக டங்கும் பண்ணையி
லாம்பலுந் தாமரை யளவுஞ் சங்கமுந்
தாம்பல வாமென வினைஞர் சார்ந்தனார். 46

பொறுமையள் பூமக ளென்னும் பெற்றியைத்
தெறுவது செய்துதாந் தெரிக்கின் றுரெனக்
கொறுகொறுத் துழல்சமன் கோல வூர்திசேர்த்
தெறுழலத் துழுநர்க மீட்ட மெங்கணும். 47

சூலியுண் மகிழ்பெறத் தொடங்கு பாதகம்
போலிய வுயிர்பல பொன்றறக் கஞ்சுருர்
கோலிய வுழவர்தாங் குறித்த வொண்பொருள்
சாலியென் றுயதன் பெயரை நாடியே. 48

தீக்கையில் லார்க்குப தேசந் தீர்ந்தெனத்
தேக்கதல் விடருண வறந்த செய்தொறுந்



தீக்கையுள் ளார்க்குப தேசஞ் சித்தெனத்
தேக்கறல் பெருகிய துழுத சேறெலாம். 49

பரத்துத் தரிக்குந் ததிசி முனம் பகைத்த நெடுமால் படைதுமிய
வரத்துத் தரிக்குந் தனதுடலை வகிர்ந்து முதுகென் பினைப்படையாக்
கரத்துத் தரிப்பப் புருகூதன் கருணை புரிந்த தெனப்பண்ணை
யுரத்துத் தரிக்குந் தனதியற்கை யொழிந்த துழுநர் பயன்பெறவே. 50

வருத்தம் பலகால் புரிகிற்பின் வரம்பி லின்பத் தழுந்துநர்க்குங்
கருத்தங் குரியா திருப்பரிது கலக்கி வருத்தம் புரிதோறுந்
திருத்தம் பயின்று பயன்பயக்குஞ் சிறப்பிற் றகன்பூம் பணையென்றே
பொருத்தம் பயின்று களமர்மகிழ் பூப்ப வதனைச் சமஞ்செய்வார். 51

மண்ணணி லரசன் காப்பதற்கு வளத்திற் பகுக்கு நல்லுழவர்
விண்ணணி லரசன் மழைபொழிய மேகம் விடுத்துத் தாளாண்மை
பண்ணு முதவிக் கிதுபுரிதல் பண்பா மெனத்தின் படைக்குலிசத்
தண்ண லடித்தா மரைவணங்கி யகன்செய் விதைவித் துவர்நாளால். 52

பற்று பருவந் தனக்கிசையப் பற்ப லுயிர்க்குந் தருவாதி
முற்ற வருளு மிறைவன்போன் முருகு விரியும் பணைதோறு
முற்ற கலங்க னீர்தெளிந்த வுடனே கவிழ்த்த வுழவர்கள்பின்
சற்று நறுநீர் பாய்த்துவார் தயங்கு முளைக ளெழுந்தாமே. 53

பவளச் சடிலத் திளம்பிறையும் பணிப்பூம் புனலு மணிந்தபிரான்
றவளத் திருநீற் றொளியுருவிற் றயங்கு முளைகா கிளையானுங்
குவளைத் தடங்கண் ணியுமொருங்கு கொள்ள முழுது மவனுருவந்
திவளப் பசந்தா லெனப்பசந்து செறிபுன் பயிராய் வளருமால். 54

புவன போகம் வெவ்வேறெவ் வுருவினுந்
சிவனு மென்று தெளிக்கவுற் றுரென
வுவகை யோடுபர் நாறு பறித்துப்போய்
நவையி னீங்க நடுகுந ரெங்கணும். 55

சிறமை யாளரிற் றீர்ந்து பெரியவ
ருறவு பூண்டவ ரொப்ப வுழத்திய
நிறும ருவிடை யென்றிரங் கார்பலை
நிறுவு நாறு நெடுகி வளர்வன. 56

உறுப்பி ளுற்றம்மை யோட்டிய மாதரார்
வெறுப்பி லார்செய் வினையுறு பூம்பயி
ரிறுப்ப கேர்த்தென வீர்ப்பலை யெங்கணு
நறுப்பங் கேருக மாதிக ளுறமே. 57

சேம வீட்டிற் கெழுவதோர் சிந்தையைக்
காம மாதி கருவி நெருக்கியாங்
கேம மார்பயி ரீண்டு பணைதொறுந்
தோம ளாவு களைக டுவன்றுவ. 58

பருவ நோக்கிவன் பாச மறுத்திடுங்
குருவ னேயெனக் கூர்ந்த களையெலா
மொருவு செவ்வி யுணர்ந்து பணைதொறுங்
கருமை வாட்கட் கடைசியர் நண்ணுவார். 59

வருந்து மெல்லடி யென்று மதித்திலார்
முருந்து மூர னிகர்த்த முளிவிறைற்
பொருந்து முத்த மிதித்துப் புகுந்தவர்
திருந்து பண்ணைச் செறிகளை கட்பவே., 60

விரும்பித் தேனுகர் வீகளை யுந்தொறுங்
கரும்பிற் றேமொழிக் காரிகை யார்முலை
சுரும்புற் றூர்ப்பவித் தோடவிழ் செவ்விய
வரும்பிற் றேனுமுண் பாமெனு மாசையால். 61

குவளை வண்டு கொழுங்கண் கயிரவத்
துவகை வண்டொளிர் வாய்கம லத்துவண்
டவிர்மு கத்து மடுப்ப வவையெனக்
கவர்ம லர்க்களை கட்பவர் மாடெலாம். 62

கயல்கண் ணோடும் வரால்களைக் காலொடும்
வயலி னுமைகள் வார்புறந் தாளொடு
மியல முட்டு மிகலின வாமென
வயர்வி லாற்றுக்கா லாட்டிய ரஞ்சவே. 63

களைகட் டோறுங் கடைசியர் கைத்துணை
வளைமிக் கார்ப்பன வாய்ந்தன வென்றியென்
றளையப் பங்கயத் தாள்கை யொறுத்தொறுந்
தளையிற் பங்கயஞ் சார்வளை யார்ப்பன. 64

காட்ட லாற்கம லப்பகைக் காடெலாம்
வாட்டி னுமந்த வாள்விழி யோடிகல்
கூட்ட மாங்குவ ளைக்குல முங்கெட
வோட்டி னுமென் றுறுப்பன கைகளே. 65

நடக்க லுற்றமை யானம் பகையெலா
மடர்க்க லுற்றன மத்தரு தாட்பகை



கிடக்க லுற்ற வனிச்சமுங் கீழ்ந்துமென்
றிடக்க லுற்ற வவற்றினை யெங்கணும். 66

வண்டு மாழியு மற்றுந் தமக்கிட
விண்டி டுங்கனி வாய்க்கு மிகும்பகை
கொண்ட செங்குமு தக்குல முங்கெடக்
கண்ட கண்ட விடந்தொறுங் காதுவ. 67

தம்மைப் போன்மலர்த் தாமரை யோடிகல்
செம்மைத் தாயசெவ் வாய்வளர் மூரற்கு
வெம்மைத் தாக முருந்தின் விளங்கிய
கொம்மைத் தாயபஞ் சாயுங் குமைத்தன. 68

ஒள்ளி தாங்குழை யூழ்மலர் தங்களாற்
கொள்ளும் வார்செவி கூந்தற் கிகலிய
வள்ளை நீள்சை வலமுஞ் சவட்டுவ
கள்ளுண் கோதையர் கைக்கம லங்களே. 69

பண்ணை யாட்டயர் பாவைநல் லார்களைப்
பண்ணை யாமெனப் பாற்றுறு நீர்மையாற்
பண்ணை யான பரப்பிடம் யாவுமப்
பண்ணை யாம்பெயர் பற்றின போலுமால். 70

கொம்ப ரேமலர்க் கோதையர் தாமலர்
நம்பு வீரென நன்று தெரித்தெனப்
பம்பு பூவிற் பமரம் பூவுற
வம்புண் கோதையர் மாட்டு வளர்பவே. 71

அளியி னீங்க வகல்பவர் போன்மென
வளியி லாதல ரட்டவ ரங்கையிற்
றுளிசெய் தேமலர் சோர்குழ றுங்குபு
குளிரு நீர்ப்பணை கொம்மென நீங்கினார். 72

சஞ்சி தத்தொடு சார்மல மாயையுந்
துஞ்ச வெஞ்சுட லூழினைத் தோலுடை
மஞ்ச னேற்பது மானவன் டின்குழா
மஞ்சி லோதியர் தாங்கொண் டகல்பவே. 73

பைய வந்து பயிற்சியி னைம்பொறி
மெய்யு ணர்ந்திட விட்டகன் றுலெனச்
செய்யின் வந்து சிறையோதி மக்குழாங்
கைய கல்வன கஞ்ச மிறத்தலான். 74

சேழ்த்த பூங்குழ லார்கெழு மிக்கலை
வீழ்த்து மென்மலர்க் கைத்துணைக் காலினாற்
றாழ்த்தப் பட்டுத் தழைக்கவிற் பூம்பயிர்
காழ்த்த காமத்துக் காளையர் போலுமே. 75

மாத ராலுளிக் கப்படும் வாய்மையான்
மாத ரார்முகம் போன்றொளிர் வான்மதி
காத லால்லளிக் கப்படுங் காட்சிய
சீத நீர்வயற் செற்றிய பூம்பயிர் 76

திங்கள் வெண்கதிர்த் தெள்ளமு தத்தினாற்
றங்கு கின்றத னுண்மை தெரித்தெனப்
பொங்கு வெண்ணிறம் பூண்கரு வுட்பொதிந்
தெங்க ணும்பயி ரீண்டி நிவந்தவே. 77

வாலொளி முளையிற் றோற்றி மரகத நிறத்த சாலி
சூலெனுங் கதிருட் கொள்ளப் பசந்ததோர் தோற்றம் போன்ற
காலும்வெண் கதிரும் பாலாங் கருத்திரண் டினிது முற்றச்
சாலமெய் பசந்தா லென்னப் பசந்தன தளைக டோறும். 78

வணக்கமில் லார்க ளெல்லாம் வண்பய னென்னும் பார
மிணக்கமில் லார்க ளென்போ லெனத்தலை நிவந்த சாலி
வணக்கமுள் ளார்க ளெல்லாம் வண்பய னென்னும் பார
மிணக்கமுள் ளார்க ளென்போ லெனத்தலை யிறைஞ்சிற் றம்ம. 79

மூவரு முலகம் யாவு மொழிந்ததன் மயமே யென்ன
யாவரு முணர மூவர் யாவையு மினிது தோற்றுந்
தாவின்முக் குணத்தின் வண்ணந் தாங்குத லென்னச் சாலி
மேவர வெளுத்துப் பச்சை விராயது சிவந்த தன்றே. 80

கருமமே விரும்பி நாளுங் கவர்தரு முயிர்கள் பின்னர்க்
கருமநே ராகி ஞானங் கலந்தின்பம் விளைத லோடுங்
கருமமே தானும் வேண்டாக் காட்சியிற் கமழ்நீர் வேண்டாக்
கருமநேர் நோக்கி மள்ளர் கவிழ்த்தனர் மடைகள் சீத்து. 81

கரையறு கருணை வெள்ளக் கடலொடுங் கலந்து ளார்கள்
புரையறத் தமக்கா தாரப் பொருளொடும் பொருந்து வார்போல்
விரைகமழ் நீத்த நின்று விளங்கொளிர் தெய்வச் சாலி
தரையகம் பொருந்த வீழ்ந்து தழைவன விறம்பூ தெய்த. 82

நாள்வரை யறையே நோக்கு நடுவனூர் தூத ரேய்ப்பத்
தாள்வரை யறைகட் கேற்பத் தரும்பயன் விளைக்குஞ் செய்யிற்



கோள்வரை யறையீ தென்று குழமதிக் குயங்கை யேந்தி
நீள்வரை யறையுந் தோளார் கிரந்தரித் தரிய லுற்றார். 83

பெண்ணுமை யிடத்தி னாரைப் பேணுமெய்த் தவத்தி னோர்க
ளெண்ணுமை யெழுத்திற் பாவ மிரிவது கடுப்பக் காரை
நண்ணுமை முழக்க மேய்ப்ப நனந்தலைக் கழனி யார்க்குந்
தண்ணுமை வெருவிப் பீலி தகைதரப் பிளிறு மன்றே. 84

நல்வினை புரிவோர் தம்மை நடுவன்வன் றூத ரானார்
பல்வினை யுபசா ரத்திற் பட்டாரக் கொண்டுய்ப் பார்போற்
புல்வினை யெவையு நீங்கப் பொலிந்தநெல் லரியைச் சேர்த்துத்
தொல்வினை யுழவர் தங்க டலைமிசைச் சுமந்து செல்வார். 85

களத்துறப் போர்க ளிட்டுக் கடாவிட்டுப் பலால நீக்கி
யுளத்துறு மகிழ்ச்சி பொங்க வுழவர்கள் காற்றிற் றூற்ற
வளத்தொடும் பொலிந்த செந்நெல் மறலிதன் முறையிற் பட்டக்
கிளைத்துறு முயிர்க டம்மை யெய்திய தென்ன மாதோ. 86

மறப்பெருஞ் சேனைச் செங்கோன் மன்னவன் பகுதி தீர்த்திட்
டறப்பெருஞ் செல்வ ராகி யாலய மாதி யான
திறப்பெருங் கடன்க ளாற்றிச் சென்றிரந் தவர்கள் சால
வறப்பெருங் கொடைமை நல்கி யாழ்குவ ரூர்க டோறும். 87

இன்னணஞ் சாலிச் செல்வ மீட்டுத லொருபா லாகக்
கன்னலுங் கதலிக் காடுங் கமுகொடு தெங்கு மாக்கித்
துன்னிய மஞ்ச ளிஞ்சி யாதிய துடவை வைத்துப்
பன்னல வளனு மீட்டும் பண்புமற் றொருபா லாமால். 88

இளமரக் காவி னாடி யெறிதிரைப் புனலி னாடி
யுளமகிழ் பரத்தை மார்க ளுடன்விளை யாடிச் செல்லோ
ரளமர நோக்கு மில்லி னங்கலா ரூட றீர்த்து
வளமலி போகந் துய்க்கு மாட்சியு மூர்க டோறும். 89

போகமே நுகரா நிற்கும் புலவர்கண் முழுதுந் தாழ
மாகநா டாளும் வேந்தன் வாஞ்சையி னுரிமை பூண்ட
வேகநீர் மருத வைப்பின் விழைதகு வளங்க ளெல்லா
நாகநாட் டரசற் கேனு நவிற்றலாந் தகைமைத் தேயோ. 90

இறைவ னெடுத்த வுருத்தோறு மியைந்தெவ் வுயிரும் வளர்த்தருளு
மிறைவி நிகர்ப்ப வரைகான மெறிநீர்ப் பழன மிவைதம்மி
னிறைய வளங்க ளினிதாக்கு நீர்மை யொளியா மேகலன்க
ளுறைவெண் டரங்கக் கடல்புகுமா லுலவா நீத்த நதிமாதோ. 91

வாய்மை யடுத்த மாதவத்தோர் மறிந்து பவத்திற் சென்றிடினுந்
தூய்மை யடுத்த தம்தியற்கை துளங்கா நீர்மை காட்டுதல்போற்
பாய்மை யடுத்த கடற்பரப்பிற் படர்ந்து புகுந்த பெருநீத்தஞ்
சேய்மை யடுத்த நதியெதிர்ந்து தேங்கி யுவரே தோற்றுமால். 92

தெள்ளித் தெளிந்து பகைகடந்த சீவன் முத்த ருலகியற்கை
தள்ளித் ததைந்த பேருளிற் றமியற் றுறங்கு மாறிதுவென்
றள்ளித் தரள மணிப்பவள மலைத்துக் கரைமேற் றவழ்கடலிற்
றுள்ளித் திரியுஞ் சுறவாங்கே துயின்று காட்டு நிலைமைத்தால். 93

பரந்து நிறைந்த வுயிரூடு பன்மாண் கருவி தகக்கொளுத்தி
யரந்தை தயங்க வகுத்தமைத்த வாக்கை யுழிதந் திடுமாபோற்
புரந்து விடுக்கும் பலமதலை பொருள்கொண் டிறக்கும் பொழுதானுஞ்
சுரந்த பொருளேற் றிடும்பதத்துந் துவன்று மொலியக் கடல்பொருமால். 94

ஆழ்ந்து பெருநூ லிடைக்கிடந்த வரிய பொருளைப் பலர்கவர
வாழ்ந்த கருத்திற் பேரறிஞர் வகுத்து விளக்கு மாறேபோல்
வீழ்ந்த கருத்தி னுளையர்குழாம் வில்லிட் டிலகு மணிபலவுந்
தாழ்ந்த நெடுநீர்க் கடற்குளித்துத் தடவுக் கரையெங் கணுநிரைப்பார். 95

புறவுக் கோட்டஞ் செயும்வனப்பிற் பூவை மொழியார் விழிதான்வா
ழிறவுக் கோட்டுக் கடல்பணிக்கு மெழிலா லவர்நாட் டினரிறைஞ்சுஞ்
சுறவுக் கோட்டுட் கடலரசன் றோன்றி வரங்க ளினிதருளு
நறவுக் கோட்டு மலர்ப்புன்னை ஞாழற் பொதும்ப ரெவ்விடனும். 96

இம்மையினோர் வினைபுரிந்தா லியற்றுவினைக் கேற்றபய
னம்மையிலென் பதுநிற்க வடுத்தநுளை யர்கள்களிப்பச்
செம்மைநிறப் பவளமொடு திகழ்தரளம் வளைக்குலமுஞ்
சும்மைநெடுங் கடலன்றே துறத்துவது துறைதோறும். 97

மலையடுத்த சிலைத்தோளான் வலையெறிந்து மீன்படுத்தாற்
கொலையடுத்த தெனநுளையர் குழித்தொழிக்கு மாலையரோ
சிலையடுத்த தோடுவளச் செறிவலைகள் பலவீசி
யலைபடுத்த மீன்படுத்திட் டகன்கரையெங் கணுங்குவிப்பார். 98

வேறுருவந் தோன்றாது விரிபுனலோ டுறமுப்பு
வேறுருவாய் வரவுமணர் வினைபலசெய் துலகத்து
வேறுருவந் தோன்றாத விமலனார் குருவென்ன
வேறுருவாய் வரப்பணிகள் விளைப்பார்போ லாயினார். 99

தெண்ணீருட் பயின்றிருந்துந் தெண்ணீரு ளுருத்திரண்டுந்
தெண்ணீருக் குடைகின்ற செயலினாற் சுவையனைத்து



முண்ணீர்மைப் படுத்தொளிரு முப்பினைப்புல் லியவிலைக்குப்
பெண்ணீர்மை யுமண்டியூர்கள் பெரிதளக்கும் பான்மையரால். 100

எங்கண்மிடற் றிசைக்கெதிரு மின்னிசைக்கோ கிலம்பல்கத்
தங்குகுடம் பைகளளித்துத் தாயாகி வளர்த்துவிடு
நுங்களையீ துணைவொட்டோ மெனநுதலுங் கருத்தினர்போன்
மங்கையர்மீ னுணங்கலுண வருங்கொடிக ளோப்புவார். 101

பெருஞ்செல்வ ராயிடினும் பெயராத தீக்குணங்க
டருஞ்செயல் ராயிருப்பிற் றமையடுப்பா ரெவர்யாரு
மிருஞ்செல்வக் கடலிருந்து மெடுத்துண்ணார் மணற்கேணி
யருஞ்செல்வச் சிற்றூற லாதரிப்பார் குணமாண்பால். 102

வெள்ளநீர்ச் சடைப்பெருமான் மிளிர்மதிய மிலைத்ததுவுந்
தெள்ளுநீர்க் கடற்குளிக்குஞ் செயலினு விதிப்படியிற்
கொள்ளுமே நமையின்னுங் கோதிலணி யாகவென
வுள்ளியாங் கடுத்தனபோன் றுறைந்தனமுண் டகக்கானம். 103

சாப்பறையி னொலிதழங்கத் தணந்தவர்தம் வரவுள்ளி
யேப்பகைக்கண் மடமாத ரிரங்குகடற் கழிமாரன்
றாப்படையாக் கொலைபுரியுந் தோடவிழு நறுநீலப்
பூப்பொலிவ வினமினத்திற் புணராமை யுளதேயோ. 104

வன்மையுறு சிலைமென்மை மரம்போன்று மிதந்துலகின்
மென்மையவ லுயர்சைவம் வன்மையே யெனவிளக்கப்
புன்மைமதத் தினரழியப் புகழ்நாவுக் கரசினைமு
னன்மைபெறச் சுமந்தகட னலமுழுது நவில்வாரார். 105

வரன்மலி நானில மருங்கு மெல்லையாப்
பரன்மலி முரம்பினைப் பற்றி வேனிலி
னுரன்மலி பாலைமிக் குதிப்பச் சீர்த்ததோர்
சுரன்மலி வளஞ்சில சொல்ல நின்றவே. 106

ஒருநிலத் தனநுகர் வுகந்த தன்றென
மருவுவெஞ் சுரத்திடை வதிகின் றார்களீ
ரிருநிலத் தவரையு மெய்த வாறலைத்
தருளில ராய்க்கவர்ந் தாரு நீர்மையார். 107

அலர்முலை யதனே ரான கோங்குமு
மிலவமு மெல்லடி யிணைவு றுவகைத்
தலைவரோ டவ்வழிச் சார்ந ரின்புற
நிலைபெறு பஞ்சியி னெறிக ணேர்க்குமே. 108

அணர்ந்தபூண் முலையவ ரன்ப ரோடுறப்
புணர்ந்தபா வையினொடும் பொலிக யாமெனா
வணர்ந்தசா கையின்மலர்க் குரவ மெங்கணு
நிணர்ந்தபூங் குளிர்நிழ னீட நல்குமே. 109

மலடெனக் கொழியென வாட்கைக் கன்னித
னிலகுசெஞ் சீறடி யிதயத் தெண்ணியாங்
கலரெதிர் சொரிந்தருந் தவத்தி னின்றன
பலவுடன் காய்படாப் பாட லங்களே. 110

வல்விதன் பாகனார் வகுத்த வூழினை
யல்லதென் றகற்றுவா ரகிலத் தில்லென
நல்லவர் தெளிதர நண்ப கற்சனுங்
கல்விரை தேருவ கபோத கங்களே. 111

இருப்பையி னுண்மல ரிலங்கு முத்தமா
யுருப்பொலி செம்மலொண் பவளக் கானமா
யிருப்பன முன்றிலி னீந்து மேய்ந்திடைக்
கருப்பையா டாக்குடில் கனல்வ வெங்கணும். 112

குமரியி னல்லது வென்றி கூடுரு
தமரின ரிவளடி யடைமி னென்பபோற்
சமரின்மேம் பட்டவர் தரிக்கும் வாகையவ்
விமலைதன் பாங்கெலாம் விரவிப் பூச்குமால். 113

கல்லத ரியங்குநர் காழ்த்த தாகநோய்
வல்லைவிட் டொழிக்குநீர் வறந்த தாயினு
மல்லலுற் றழியன்மி னக்கைக் கொண்மென
நெல்லியுண் கனிபல நிலத்து திர்க்குமே. 114

துன்புறி னல்லது சுகந்த காதெனு
நன்பொருள் விளக்கிய நாட்டும் பாலையா
மின்பொருள் விளங்குறு மிடத்திற் சில்வள
மன்புள வறிந்தவா றறைந்திட் டாமரோ. 115

பகுத்த நானிலத் தைந்திணைப் பற்பல வளனு
மிகுத்த கேள்வியோர்க் கல்லது விதப்பது தகாதாற்
றொகுத்தி யாஞ்சில மொழிந்தனந் தொகுத்தநா னிலத்து
வகுத்த வான்பொருண் மயக்கமுஞ் சிலவகுப் பாமால். 116

வருடை கொல்லையின் மானமா வுடன்விளை யாட
வருவி நின்றதி ரடுக்கலி னகன்றினைப் புனத்தி



னுருவ மஞ்ஞையுங் கானவா ரணமுமுற் றெழில்க
டருவ வின்னணங் குறிஞ்சியு முல்லையுஞ் சாரும். 117

வேழ மென்கரும் பயில்வன விலங்கலிற் பயிலும்
வேழ மென்புலம் படர்வதென் னெனவெதிர் மேவி
வேழ மல்கிய வரைவளர் பசுந்தினை மேயும்
வேழ மல்கிய வியன்பணை விரவுறு மேதி. 118

மீனம் பாய்ந்தெழு விலங்கலின் வியன்சுனை வேலை
மீனம் பாய்ந்துவீழ்ந் துகளுமவ் வியன்சுனை நீலத்
தானம் பாய்ந்துள ரளிவெரீஇத் தண்கழி நீலக்
கானம் பாய்ந்தய ரளியெழக் கதுமெனப் பாயும். 119

புறவ நின்றலர் கடுக்கைபொன் றரப்புனற் பழன
நறவ நின்றலர் தாமரைக் கரத்தினன் றேந்திப்
பெறவ தற்கெதிர் கொடுத்திடப் பேணிய தேய்ப்ப
வறவி னர்த்தசங் காங்கொரு மலர்க்கரத் தணிவ. 120

வெறிய கானமர் கோகில மீன்கவர் புட்கள்
பறிய வோப்புறும் பரத்தியர் செவிக்கிசை பகருஞ்
செறியும் வீமண மூமிழ்ந்துதன் முடையினைச் சிதைக்கு
நறிய கானடி நிரைக்கையிற் பரவுநீர் நரலை. 121

கோழி விட்டெறி குழையினைக் குண்டலப் புழுவென்
றூழி யின்கரை மீன்கவர் காகமங் காப்ப
வாழி விட்டெறி முத்தினை யண்டமென் றுகந்து
வாழி யன்னமற் றடைகிடப் பனவயற் பாங்கர். 122

இன்ன வானபல் வளங்களு மியைந்தசோ ணாட்டுத்
தன்னை நீங்குத லருமையிற் றடாதபே ரன்பிற்
பொன்னி யாறிரு மருங்கினும் பொற்பவாற் றொழுக
மன்னு மாநகர் வளஞ்சிறி தறிந்தவா வகுப்பாம்.  123

உ

# திருநகரச்சிறப்பு.

பூமேவு பசும்பொழில்சூழ் திருவானைக் காவிலைமுப் புவனத் தோரு
மாமேவு பலநகரு ளொருநகரென் றுதுயர்மா நகரென் றோரத்
தேமேவு பலநகரும் புறமாக வகந்தழுவித் தீர்த்தப் பொன்னிக்
காமேவி யொழுகுமெனி னந்நகருக் கிணைநகரங் கட்ட லாமே. 1

இருநதியி னிடைக்கிடந்த காரியெவற் றினுஞ்சிறந்த தென்ப வந்த
விருநதியு ளொருநதியே சிவபெருமா னளித்ததத னியல்பு நிற்க
வொருநதியே யிருநதியா யொழுகவிடை யிருக்குமுய ரானைக் காவவ்
வொருநதிமற் றிறையளிப்ப மலயமுனி கொணர்ந்ததெனி லுரைப்புண் டாமோ. 2

கங்கைநதி யொருவேந்த னிரப்பவொரு முனிவாயிற் கரந்து மாண்டோ
ரங்கமலி தரப்புகுந்த துயரானைக் காவினைச்சூழ்ந் தமரும் பொன்னி
துங்கமுனி கமண்டலத்துட் கரந்துவிசும் பிறைவேண்டத் துதிக்கை நம்பி
யிங்கருளச் சிவபூசைக் குதவியதென் றுற்பெருமை யெவற்ற தாமே. 3

மதுவார முறுக்கவிழ்ந்து மலர்விரியும் பசும்பொதும்பர் மருங்கு சூழ
விதுவாழுஞ் சடைமௌலி சம்புநா யகர்கருணை விரவி வாழு
முதுவாழ்வு தருமானைக் காவினெழில் வனப்புமுதிர் தகர வித்தை
கதுவாய்மை மாயவனு ருள்ளகத்தா மரைமலரே கடுக்கு மன்றே. 4

உரிமையிற் சிலம்பி பூசனை புரிந்த வுண்மைதேர்ந் தெம்பிரா னுவப்ப
வரியளிக் குலமும் பூசனை புரியு மாட்சியிற் பசும்பொழி லூறும்
புரிமுறுக் கவிழ்ந்து மலர்வழி யொழுகும் புதுநறு வாரியின் முழுகி
விரிமணத் தாது பூசிமெல் லிசைகண் மிழற்றிநின் றுட்டயர் வனவால். 5

இலம்பக மிலைத்த திலகவா ணுதலா ரெதிரெதி ராட்டயர் தோறு
மலம்புகிண் கிணியுஞ் சிலம்புமே கலையு மதிர்குரன் மழைமுகில் காட்டக்
குலம்பயின் மயில்க ளாடுவ பூவை குயில்கிளி பாடுவ விவையுஞ்
சிலம்பியி னுவந்து தத்தமக் கியன்ற திருப்பணி செய்வபோன் றனவால். 6

நாரணர் பிரமர் நாடியு மறியா நங்கைபங் காளனூர் முடியுந்
தாரணி பதமு ஞானபூ மியினுந் தங்கருந் தவத்தினுற் சார்ந்திட்
டாரணர்க் குரிய தவிசெனும் பழியு மகற்றுது மெனமுயன் றனபோ
னீரணி பழனந் தடாகமும் பிறவு நிரந்தரித் தனமலர்க் கமலம். 7



முள்ளரைப் பசுந்தாட் சேயிதழ்ப் பொகுட்டு முண்டக நாண்மலர்த் தவிசின்
வெள்ளொளி விரிக்கு மென்சிறை யன்னம் விழுத்தகு துணையொடும் பயில்வ
கள்ளவைம் பொறியுங் கடந்தவ ரிதைய கமலநாண் மலர்மிசை யஞ்சப்
புள்ளுரு வாகச் சத்தியுஞ் சிவமும் பொற்பவீற் றிருப்பது தகையும். 8

பண்டுவெண் ணீறு திமிர்ந்தொளிர் படிவப் பராசர முனிவனி வளர்த்த
மண்டுசெந் தழலி னரக்கர்தங் குலங்கள் வந்துவந் துருவனை விழையக்
கண்டவர் வியப்பப் பாசடை மருங்கிற் கதிர்வெள் ளோதிமத் தெதிரே
விண்டசெங் கமலத் தொழுகுதே னசையால் விழுவன வீற்றுவீற் றளிகள். 9

முந்துபகை யானசுரர் முற்றிவதி வீயுந்
தந்தமிட மாகவிக ருனவ ரிறுத்தாங்
குந்துமது வுண்ணவுழி தந்தளிகள் பாயு
நந்தன வனங்கள்பல நாற்றிசையு மல்கும். 10

கைபழக முன்புபடை கஞ்சமுதல் வீயு
மெய்பழகு வேதனகர் மேகவென விட்டா
னெய்பழகு கூந்தலர் நிலாமுகமு மற்று
மைபழகி நின்றவென யாருமறி வெய்த. 11

மறநவிலும் வாட்கண்மட மாதரிசை வல்லாத்
திறநவில வேறுகரி தேர்வொழிக சான்றீர்
புறநக ரடுத்துவளர் பூவைகிளி தாமே
யுறநவில்வ வுண்ணக ருறுதற வொழிந்தே. 12

தீர்த்தமுடி வைத்தவொரு தீர்த்தனிவ னென்றுந்
தீர்த்தமுரு வாகவளர் செய்தியை மதித்தே
தீர்த்தலரி தாங்களி சிறந்தொளிர்வ தென்னத்
தீர்த்தமெவை யும்பெரிது தேங்கியெழில் கூறும். 13

நீருருவ மாகிவளர் நின்மலன் மகிழ்ந்த
சீருருவ மானநகர் சேர்ந்தன மினித்தான்
நீருணவி னேமல மெனத்திக ழுவப்பா
னேருருவ வார்பொழி லிணர்த்துமல ரூழ்க்கும். 14

தண்ணார் மதிசூ டியசங்க ரனார்ப தங்கள்
விண்ணோர் பெருமான் பணியப்புக மேக வூர்தி
யெண்ணு விறலோடு புறத்திறை கொண்ட தேய்ப்ப
மண்ணு மணியா னைகள்யாத்தன வாரி யோர்சார். 15

கருணைக் கடலா கியகண்ணுத லார்ப தங்கள்
வருணன் றொழுவான் புகவன்னவன் வாழ்க்கை யான

பொருதண் கடலும் புறமுற்றிய பொற்பு மான
வருமைங் கதிவா சியின்மந்திரம் வாய்ந்த தோர்சார். 16

ஒருஞான்று முலப்பி விருங்கதி யுய்க்கு நாத
னிருசேவடி யேத்தவுள் புக்கவி ராறு கோடிப்
பொருசூரிய ரேறிய தேர்புற நின்ற தென்னக்
குருமாமணி யாத்தொளிர் தேர்குழு முற்ற தோர்சார். 17

வடவைக் கனலுங் கடனஞ்சமும் வானி னேறு
முடனுஞ் சமனூனையு மோருருக் கொண்ட தென்னச்
சுடருங் கணைவா னயிலாதி தொடர்ந்து வீர
ரடல்விஞ் சையரஞ்ச வமர்ந்தகல் லூரி யோர்சார் 18

பருமக் கலினப் புரசைப்பகிர் வார்க ளார்க
ளுருவச் சகடத் துருளச்சுறை யாய்த மாதி
கருவித் திரண்முற்று முணற்றுகை வல்ல நீரார்
மருவித் தொகுசேரி யனந்தம்வெவ் வேறு வாய்ந்த. 19

வண்டா டியமா மதவேழமும் வாவு மானுஞ்
செண்டாடிய செண்டு வெளித்தல முஞ்செ றிந்து
கண்டார் களிகூ ரிரதத்தொழில் கற்கு ஞாட்புந்
தண்டாது விலாழி பொழிந்துதண் சேறு செய்யும். 20

ஒழுகுஞ் சுடர்வா ளயில்வேல்சிலை யொண்கை யேந்திக்
குழுமத் திறல்வீரர் கொடுஞ்சமர் கற்கு மெல்லை
விழுமக் கலனிற் பிதிருக்கநல் வெள்ளி பொன்னும்
புழுதித் திரளாய்ப் புறம்போர்ப்பன பொற்ப வெங்கும். 21

நடைமா மலையா திகண்முற்றி நலஞ்சி றந்த
புடைமா நகரின் வளனிற்சிறி தேபு கன்றுங்
தொடைமாண் சிலைவேள் கலையின்சுவை தோற்றி யாடு
மிடைமா நகரின் வளனிற்சிறி தேத்து வாமால். 23

பளிக்குக் குன்றமும் பரந்த வெக்கரு
மொளிக்கண் மேடையு முயர்செய் குன்றமுந்
தெளிக்கும் பொய்கையுந் திகழுய் யானமுங்
களிக்கு நீரன கடவு ளார்க்குமே. 23

பலர்வி யப்புறும் பளிக்குக் குன்றுகள்
கலவ மாமயில் கதுவு செவ்வியி
னிலவி ருங்கறை நீக்கப் புக்கமர்
விலகி வில்லுமிழ் விதுவி கர்க்குமே. 24



குமுத வாவிதூங் குளிர்ந்த முத்தமுங்
கமுக முத்தமுங் கலந்த நீர்மையா
லமுத வெண்கதி ரோட டுத்தமீன்
சமுகம் போன்றன தரணி யெங்கணும். 25

பட்ட மாடுவார் பரந்த வெக்கர்வா
யிட்ட செம்மல ரெரியி னெய்மர
மட்ட வண்டுசூழ்த் தாவிப் பேட்டினைத்
தொட்டு வைகவண் சுகங்கள் பாடுமே. 26

மைக்கண் மாதரார் வாவி தோய்தொறு
மெக்கர் வாயவ ரிடுமெ டிச்சுவட்
டொக்கு மென்னடை யோதி மம்புகத்
தக்க தன்றெனத் தரங்க நீக்குமே. 27

கொழுநர் கொங்கைபூங் கொத்தின் வேறற
வெழுது மவ்விடை யிளையர் நெஞ்சமான்
முழுக வாலவாய் முதல்வ ரைகெனக்
கெழுவு மாடமேற் கிளந்து வப்பரால். 28

இரண்ம ணிக்கலாற் செய்த குன்றின்வாய்
விரவி யாடுவார் விளங்கு தங்நிழல்
கரவி லாதுகண் ணடியிற் றோற்றலும்
பலர்கொ லோவெனப் படர்ந்து தேறுவார். 29

பேதை யாருழைப் பிழையி லார்க்குமிக்
கேத மேயுறு மென்றி யம்பியாங்
கோது மாதர்கை யுற்ற கந்துக
மாத காதென வடிபட் டாடுமே. 30

பாடி யம்மனை பாவை மாரெறிந்
தாடு செங்கையை யலரென் றன்னவர்
நீடு வார்குழ லிலவு வண்டுக
ளோடி வீழ்ந்தெழுந் துடனு லாவுமே. 31

ஆசை நீட்சியி னலைதன் முற்றுற
மேசி லாருயிர்க் கென்று ரைப்பபோற்
பாச நீட்சியிற் பரந்து லாவுறு
மூச னீங்கலா ரோட ரிக்கணூர். 32

பண்ணை யாட்டயர் பாவை மார்குழல்
வண்ண மாலையும் வாசச் சுண்ணமு

மொண்ணனி முற்கல ரோடு வீழ்தலால்
விண்ணு ளார்க்கும்விம் மிதம்வி ளைக்குமே. 33

போக பூமியும் பொருவு றாதென
நாகர் போற்றிடை நகரு மீரததன
மேக நாதனே யிழைத்த விஞ்சிசூழ்ந்
தோகை மிக்கவுண் ணகரு ரைத்துமால். 34

வெலற்க ரும்பகை விழிநகை யாதியின் விளித்தும்வன் படைநீதன்
மலர்க்க ரத்தமீ ளிமைக்கடை யாளமா வயக்கிய திறனேய்ப்ப
வலக்கண் வெம்பகை யாதிகள் காணுமு னனுக்கியு மரணென்னச்
சொலத்த குஞ்சுடர் மதில்புடை யுடுத்தது தொல்லைமா நகரம்ம. 35

தூங்கு வீங்கிரு ளொங்தொளி கஞற்றவெஞ் சுடரவன் கலைத்திங்க
ளோங்கு ருதவல் லுடுக்கண மேகமு னித்தனும் வெளியூடே
யாங்க வேகுழித் தவிர்ந்திளைப் பாறவு மமைந்ததா லவிர்செம்பொ
ஞேங்க லாமல தெனநிவந் தோங்கிய வொளிர்மணித் தடநொச்சி. 36

பொருது தன்னிலை கடக்கும்வன் மீளியர் புவனமூன் றினுமில்லா
வருமை மல்கிய தாயினும் பொருளெலா மளித்தவன் செயப்பட்டுப்
பெருமை மல்கிய நகர்க்கெலாங் காட்டெனப் பிறங்கலின் மணியிஞ்சி
கருமை மல்கிய வகழியும் பொறிகளுங் கலந்துவீற் றிருந்தன்றே. 37

முடியில் வான்செழுங் கங்கையுந் திங்களு முதிரொளி மணிப்பாம்பும்
படிய சீர்க்கிடங் கடித்தலஞ் சூழ்தரப் பயின்றநொச் சியின்வீக்கங்
கடிவி ராவிய கடுக்கையங் கண்ணியான் கடையுகத் தெழுமாழி
நெடிய நீரிடை மாலயன் முரண்கெட நிவந்துநின் றதுபோலும். 38

எறிந்து வண்கிளர் கமலமுங் குமுதமு மிருங்குவ ளையுமற்றுஞ்
செறிந்த நல்லெழி லங்கலா ருறுப்பொடு தெவ்வுவ விவையென்று
வறிந்து வெஞ்சிறை யிட்டகோட் டம்பொரூஉ மவையெலா மலையூடே
மறிந்து பங்கமுற் றுண்ணெகிழ்ந் திருங்கணீர் வாக்குந்தண் கிடங்கம்ம. 39

இறைவன் யாவரும் வணங்கியும் வாழ்த்தியு மெண்ணிய நலனெய்தக்
குறைவில் பேரரு ளாலிழைத் திட்டவிக் கோனைமா மதிட்பாங்க
ருறையு மேனைய மதிலென வெண்மையி னுறலென வொழிக்கின்றுங்
கறையு நீள்பொறி யமரர்கள் விமானமு மகற்றுவ வெளியூடே. 40

செழுந்தண் மாமணி குயின்றொளி திசைதிசை செறிந்துவல் லிருள்வாய்ப்பெய்
தெழுந்த கோபுர மந்நகர்த் தெய்வத மெழுந்துவிண் பரப்பெல்லைக்
கொழுந்தண் மால்வரங் கொண்டயர் நகரெலாங் கோலவிந் நகரொப்புத்
தழுங்கொ லோவென விழிகளிற் பார்த்திடுந் தன்மைபோன் றதுமாதோ. 41



நால்வ கைப்பெரு வளங்களு மெளிதரு ணன்மையால் வளமாண்பாற்
சால்வ திந்நக ரிந்நகர் நிகர்நகர் சகங்கண்மூன் றினுமில்லை
யேல்வ தென்றெழு தெய்வத மிருங்கர மெடுத்துச்சூ ளுறநின்றாற்
போல்வ தும்பரி னெழுந்தகோ புரமிசைப் பொலிந்தவார் கொடியம்ம. 42

நீங்கரும் வளத்திற் சான்ற நெடுநகர்க் குறுப்பா யென்று
மோங்கிய மதிலுந் தாழ்ந்த வொலிபுனற் கிடங்குஞ் சொற்றுந்
தாங்கரு மகிழ்ச்சி பொங்கத் தருணர்க ளுளத்தை யெல்லாம்
வாங்கியொண் பொருளும் வாங்கும் வரைவிலார் சேரி சொல்வாம். 43

ஓவிய வுருவ மெல்லா மொண்டொடித் தடக்கைச் செவ்வாய்க்
காவியங் கண்ணி னல்லார் காரிகைக் குடைந்த வாற்று
ளோவிய வுரையு மற்று நடையுமற் றிமைப்பு மற்றுப்
பாவிய வுயிர்ப்பு மின்றிப் பயின்றன சுவரோ டொன்றாய். 44

கண்டவ ருயிரை யெல்லாங் கதுமெனத் தம்பா லாக்கிக்
கொண்டமர் பரத்தை மார்கள் கொள்கையைத் தெரிக்கு மாபோற்
கண்டவ ருருவ மெல்லாங் கவர்ந்தொளிர் தருப்ப ணங்கள்
கொண்டபன் மாட மேடை குலவுவ சேரி யெங்கும். 45

உடையினு மணியினு முருவச் சாந்தினு
நடையினு மொழியினு நயன நோக்கினுந்
தடையற மயக்குநர் தமக்கி னம்மென
மிடைவன வவருழை வேரித் தண்டரோ. 46

அஞ்சன மெழுதியங் கயற்கண் மாமுலைக்
குஞ்சர மெழில்பெறக் கோலந் தீட்டுவார்
மஞ்சனர் யாவணம் வரைந்தி டாமையே
யெஞ்சலில் பொருளுங்கொண் டேவல் கொள்வரால். 47

கற்பிலர் பொய்யினர் கவர்த்த நெஞ்சின
ரற்பில ரெனநனி யறிந்த மன்னரும்
பொற்பொடு சிறப்பருள் பொலிவி னுறெனிற்
சொற்பயில் பரத்தையர் சொரூப மென்சொல்கேன். 48

சூதுபொய் யரியவிற் றொடக்க மாதியாத்
தீதுசெய் யினும்விலைத் தெரிவை மாருழை
மாதருக் குடைந்தபூ மாது வைகலுங்
கோதறு திருவெலாங் கொடுத்து நிற்குமே. 49

கலைத்தொழிற் சுவையினுங் கடுத்தி லேமென
விலைத்தெரி வையர்க்குளம் வெள்கிப் பூக்கரந்

தலைத்தரு பயத்தின் விட் டன்ப ருவக
நிலைத்தருக் கரந்தன ணிகழ்சொன் மங்கையே. 50

ஆடலி னரவமு மமுத குத்தெனப்
பாடலி னிசைகளும் பகலு மெல்லியுங்
கூடலிற் றுறக்கமாய்க் குறைவி லின்பமே
நீடலின் வீடுமாய்ச் சேரி நின்றதே. 51

சுடர்விடு மவையவந் தோறுந் தீஞ்சுதை
விடமொழித் தார்வலர் வேண்டி யாங்கருள்
கெடவரற் பரத்தையர் கெழுவ வல்லரேற்
கடல்கடைந் திளைப்பரோ கடவு ளாரெலாம். 52

மேவண வகப்பொருள் விலைசெய் வாழ்க்கைய
தாவணப் பரத்தையர் குழல் சொற்றனம்
பாவணப் புறப்பொருள் பலவும் விற்றிடு
மாவண வீதியி னமைதி சொற்றுமால். 53

மரகத மணிக்கிடுகு வளர்செழும் பவளக்கால்
விரவுற வெடுத்திட்டு வேறுபன் மணிமாலைக்
குரவலர் மலர்த்தொங்கல் கோடலை கொளவார்த்துப்
பரவுநன் மணமூட்டிப் பயின்றன கடையெல்லாம். 54

முந்திட வெழிற்பந்தர் முகிலுழை தரச்செய்து
நந்தொளி மணிவாழை நாகிளங் கமுகியாத்துச்
சுந்தர மலர்வாசச் சுண்ணமு நனிதூவி
யிந்திர நகரேங்க விருத்தினர் தவிசெங்கும். 55

நடுநிலை பிழையார்போ னளத்தரு கோறங்கைத்
தொடுதலி னன்றேயித் தொலைவறு பொருளெல்லா
முடையவ ராகின்ற ரொருநிய நாயகரெனக்
கடைவள நோக்குநர்கள் கருதுறுந் தகையனவே. 56

வரைவள முழுதொருபால் வனத்தன முழுதொருபா
லுரைதரு பழனத்தி னுறுவிவள முழுதொருபாற்
றிரையன முழுதொருபாற் செறிதலி னியமந்தாந்
தரைமகள் பண்டாரம் போன்றன தனித்தனியே. 57

வரையென மணிமாடம் வனமென வுயர்கொடிக
டிரைதவழ் கடலென்னத் திகழ்சன வொலிமூன்றும்
விரவிய நியமந்தாம் விளம்புமுந் நிலந்தாமும்
பரவிய தண்ணடையிற் பயில்வுறுந் தகையனவே. 58



இரதமொ டெழில்வேழ மிவுளியு மயிலாதிக்
கரவில்பல் படைமற்றுங் காதலின் விலைசெய்மார்
நிரைநிரை நிறுவித்த நீடிய நியமந்தாம்
வரமலி பாசறையின் வயங்குவ வொருபாங்கர். 59

விஞ்சுபு பன்மொழியும் விரவலிற் பொருள்கவரா
தஞ்செவி துயர்கூர வனைத்தையு நுகர்கிலமென்
றெஞ்சிய பொறிநான்கு மின்னலிற் றுளைகிற்பத்
தஞ்சமில் பொருளெல்லாந் தலைத்தலை சிறந்தனவே. 60

உளதுகொ லிலதுகொலென் றொருபொருள் வினவுதலு
முளதில தெனச்செவ்வே யுணர்த்தலு மலதிலையென்
றளவறு மவைமூன்று மாங்கிலை யாவர்களு
மளவில்பல் பொருளெல்லாந் தருகென வமைந்தனவே. 61

கொள்ளுநர் தமக்கெல்லாங் குறைவற நனிநல்கி
யொள்ளிய பொருள்பலவு மொருதினம் போற்காட்டி
நள்ளுறு மாவணந்தா நாடுறி னமரங்கா
டெள்ளுலவு வாக்கிழியிற் றிகழ்வன தகவுறவே. 62

சேயிடைப் பொருள்பலவுந் தெவ்வுநர்க் கெளிதாக
வாயிடைத் தவவுய்க்கு மாவணத் தெழிலீதாற்
பாயின புகழோடும் பல்குடி களுமல்கி
மேயின மணிவீதி வியத்தகு வளஞ்சொல்வாம். 63

எடுத்த சாங்கரத் திணங்குபல் வேறுசா தியினு
மடுத்த மாந்தர்க ளவரவர்க் கான்றதொல் லொழுக்க
மடுத்து மேவர வதிந்துவாழ் மறுகுகள் சூழ்ந்து
தொடுத்த வோகையிற் றுவன்றின தலங்குநாற் றெருவும். 64

உழுதி யாவருந் தத்தம தொழுக்கினிற் பிழையா
தொழுகு மாறுப கரித்துவே ளாளரென் றொருபேர்
தழுவு நீர்மையர் தருமமா திகளொரு நான்குங்
கெழுவு மோகையர் கிளர்ந்துவாழ் வீதிக ளொருபால். 65

தரும ஞயினுந் தாணுவின் பெருமைதேர்ந் தவர்தம்
பெருமை தேர்கலாப் பிழையினுற் பிரிந்துபின் னவரை
யெருமை யூர்திதொண் டினும்பிழை யாரிவ ரெனச்சார்ந்
தொருவு றுதன போன்றன வோங்குகார் மேதி. 66

விளைந்து வந்தன வித்துமா யுணவுமாய் விரவ
வளைந்து நின்றிடும் பின்னவ ரமர்ந்துவாழ் மாடம்

வளைந்து நின்றுவல் வினைகண்மூ வகையென மருவத்
தளைந்து நின்றவத் தனிப்பெரு மாலையயே தகைவ.

மன்னணி லேபல வித்திவண் பொருள்விளைப் பதுபோற்
றிண்ண மாகநல் குரவினர் செங்கையோ தனமும்
வண்ண மாகிய பொருள்களும் வகைவகை வித்தி
யண்ண லாம்புகழ் விளைத்தலா லயின்றுகண் டுயிலார்.

உள்ளம் யாவையுங் கோளுறுத லுருதசெந் நிலைமை
விள்ளு ருறுதங் குறிப்பினால் விளக்குவார் போலத்
தெள்ளும் வாணிறைக் கோலினைச் செங்கையிற் றூக்கிக்
கொள்ளு நீர்மையர் குழுமிவாழ் வீதிக ளொருபால்.

முதல்கெ டாவகை யாவணத் தூங்கிய முகக்குங்
கதமி லாதுயர் வணிகர்தங் கைப்பொருண் முழுது
முதவி யார்வல ராதியோர்க் கும்பரின் மாட்டுஞ்
சிதர்வி லூதியஞ் செறித்தலாற் றெறுபசி களையார்.

அளகை மாநகர்க் கொருவனே தலைவனு தவினவ்
வளமை மாநக ரெக்குமோ வளர்நிதிக் கிழவர்
கிளைஞ ரோடுபல் லாயிரர் செழீஇயினர் வதியுந்
தளர்வில் பேரொளி யசும்பிய தமனிய வீதி.

பகைமை மீக்கொளு மன்னரைப் பறந்தலைப் படுத்து
மிகைமை மீக்கொள விண்ணெலாங் கைக்கொள விடுத்துத்
தகைமை மீக்கொளு மண்ணெலாந் தமதுமண் ணாக்கி
வகைமை மீக்கொளு மன்னர்வாழ் வீதிக ளொருபால்.

அங்கண் வாழ்தரு மரையர்கண் ணிமைப்பன வாயும்
பொங்கு போரிடை யழித்திமை யாதிகல் பொலிவு
தங்கண் மேவரி தென்பது தாமறிந் திமையாத்
துங்க மேயினர் தோல்வியிற் படாவகைச் சுரர்கள்.

இயக்கு நாயக னின்றியா ருயிரியங் காமை
வயக்கி னூலென வயின்வயிற் செயலற வதிந்த
வுயக்க மாணவந் திறுத்தவொன் னலருயிர் குடித்துத்
தயக்க மாண்டவத் திரமுத லாஞ்சமர்ப் படைகள்.

இரக்கு மாந்தர்நல் குரவெனும் பகையொடு மிரப்பிற்
கரக்குங் காரதி வெனும்பகை கருவியம் படையா
லரக்கி மேதகு மறமெனு நிலமுழு தாண்டு
பரக்கு மோகையிற் படிந்தலாற் பரிவுயிர்த் தலையார்.



மூவர் தாடொழு முதன்மையு மூவகைப் புரமுந்
தாவ நூல்பல பயிற்றலுந் தழல்கையோம் புதலு
மேவ லால்வெறிக் கொன்றையங் கண்ணியான் விழையு
மோவின் மாமறை யந்தணர் வீதிக ளொருபால். 76

சென்னி வேறொரு வருணத்திற் றணிக்கலாச் சிறப்பின்
மன்னி யாவரும் வணக்கலா மதிமுடிச் சடையோன்
றன்னை நீள்சிகை தாழ்க்கலாத் தழலிடை வழிபட்
டுன்னு வான்கதி யுறுபவர் வாழ்க்கைசொல் வரைத்தோ. 77

செருத்த லான்பல படுத்துஞ்சேர் தார்தமைக் கொல்லி
யிருத்தி னாடொறும் பூசனை யியற்றியு மிழியார்
வருத்தும் வானவர் பசியொரீஇ மலைவளஞ் சிறப்பித்
தருத்தி நானிலத் தரந்தையு மனுக்குந ரவரே. 78

வேத மோதியும் வேள்விகள் பற்பல புரிந்து
மேத நீவியு மதிதிபூ சனையினி தமைத்துங்
காத ஞூண்முக னெலுறக் கடிநக ரிருக்கு
மாதர் வேதிய ரலதுக ணவையகத் தில்லையே. 79

வேள்வி முற்றிய வேதியர் வேறுவே றாரும்
வாள்வி மானமு மிரதமு மதவிளங் களிறுந்
தாள்வி சைத்தெழு புரவியுந் தகைதலின் வீதி
யாள்வி னைத்திறத் தரசர்வீ திகளொடு மமர்ந்த. 80

தாங்க ளேயரு ளுடையராந் தகுதியை மதியார்
யாங்க ணியாவரு மருளினா ராம்வகை யெண்ணி
யோங்கு பூசனை யிரண்டையு முளுற்றுவிப் பிரர்கள்
வீங்கு மோகையின் வதிதரும் வியலிடம் பலவால். 81

சரியை யாற்றுநர் மடமொரு சாரெலாந் தகையுங்
கிரியை யாற்றுநர் மடமொரு சாரெலாங் கெழுவு
முரிய யோகியர் மடமொரு சாரெலா மொளிருந்
தெரியு ஞானியர் மடமொரு சாரெலாஞ் சிவணும். 82

நம்ப னாரடிப் பூசனை நலத்தக வியற்ற
வம்பு நீள்புனன் மணிக்குட முச்சியின் வயக்கி
யம்ப ரேகுந ரடுத்திடு முருவின்வான் கங்கை
பம்ப வேற்றுநின் றூற்றுவான் பழகுவா ரனையார். 83

சான்ற தீஞ்சுவை நால்வகைக் கவிதையும் புணர்க்கு
மான்ற கேள்வியிற் கவியொடு கமகனே வாதி

யான்ற வாக்கியென் றனைவரு மளவளா யிருந்து
சான்ற நூனெறி பட்டிமண் டபம்பல தயங்கும். 84

மூன்றி ரட்டிய சுவைகளு மொய்த்தா லுண்டி
மான்ற வைம்பொறி யடங்கிய மாதவர் முதலோர்க்
கேன்ற நல்லுப சாரத்தி னினிதுமிக் கூட்டி
யூன்றி நின்றிடு மோதனச் சாலையு முளவால். 85

அவத்தி னூன்றவ ரிருக்கைக ளவணில வாகத்
தவத்தி னூன்றவ ரிருக்கையு மவணசார் பத்திப்
பவத்தி னூன்றவ ரிருக்கையு மவணபண் பினராய்ச்
சிவத்தி னூன்றவ ரிருக்கையு மவணதே சுறவே. 86

ஆங்க ணில்லதென் றோரற மனைத்துல கினுமி
லாங்க ணில்லதென் றொருபொரு ளனைத்துல கினுமி
லாங்க ணில்லதென் றின்பமொன் றனைத்துல கினுமி
லாங்க ணில்லதென் றரியவீ டனைத்துல கினுமில். 87

வாரணத் திரளும் வாம்பரித் திரளு மணிகுயின் றெடுத்தபொற் றேருந்
தாரணி புயத்து மைந்தரந் தணர்கைத் தானமாக் கொடுத்தன ருகுக்கு
நீரணி மகளிர் சிதர்ந்தகுங் குமமு நிழன்மணிக் கலன்களுங் கொழித்த
சீரணி வண்ட லிழுக்கவின் விளையச் செலவுறு செப்பிய வவையே. 88

உருக்கிய பசும்பொற் றகட்டினுன் மணியா லுருகெழப் படுத்தவார் வீதி
பொருக்கெனப் புகுவா ரடிக்கிடர் புரியப் புழுதியும் பரலுமின் றேனுந்
தருக்கினர் மடவார் வீசுகுங் குமமுந் தமனியப் பொடியும்பூந் தாதுங்
குருக்கலத் திரளுங் குவால்படக் கிடந்து குறுநடை யாக்குவ மாதோ. 89

வீதிகட் கழகு புரிவன வுயர்ந்து விரிந்தபூம் பந்தரப் பந்தர்க்
கேதமி லழகு புரிவன மணியி னிழைத்தவே திகைபல்வை தமக்குக்
கோதறு மழகு புரிவன நிறைநீர்க் கும்பமு மாடியும் விளக்குந்
தீதறு மழகு புரிமலர்த் தொடையுஞ் செழுங்கனித் திரள்களும் பிறவும். 90

நாரணன் முதலோர் வலம்வரும் வீதி நள்ளிரு மருங்கினு மணியாற்
சீரணித் தெடுத்த மாடமே டைகளிற் செறிகதிர்ப் பிழம்புதை வரலாற்
றோரணை நிரையுந் துகிலிகைக் காடுஞ் சுரும்புளர் பந்தரு மிடைந்து
காரணி விளக்குஞ் சுடரிருங் கிரணந் தடுத்தும்வல் விருள்படா தால். 91

தமனியத் தகடு படுத்தொளிர் நிலத்தாற் றமனியப் பொடிகள்போர்த் தெல்லாந்
தமனிய வுருவா யிருத்தலாற் பந்தர் தகைந்திரு சுடரையும் விலக்கத்
தமமற மணிக ளொன்றுமோ ரியல்பிற் றகையொளி விரித்தலாற் றெருக்க
டமனிய வுலகம் பொரும்புரை யாது தனிச்சிவ லோகமும் பொருளால். 92



விண்ணந் தூய நிறத்தது வேறுபல்
வண்ண மேயதென் னேயென வானவ
ரெண்ண மாடத் திழைத்தொளிர் மாமணி
நண்ணி ருங்கதிர் நாளும் பரக்குமே. 93

நீல மேக நிமிர்ந்து தவழ்தொறுஞ்
சூல மேந்திச் சுடர்விடு மாளிகை
ஞால முய்ந்திட நாகத்தி னீருரிக்
கோலங் கொண்ட குழகனொ டொக்குமே. 94

வளங்கொள் வெண்சுதை பூட்டிய மாடமேற்
றுளங்கு பைங்கதிர்ச் சோமன் றவழ்ந்துறல்
விளங்கு மாதர் முகம்பொர மெய்யுரைஇக்
களங்க மாய்க்குமக் காட்சி நிகர்க்குமே. 95

உருவ வார்சிவி றிக்குலத் தாக்குநீ
ரருவி வார்கொடி யாரமை மாளிகை
பொருவின் மால்வரை பொற்பவங் காடுவான்
மருவு மாதர் வரையர மாதரே. 96

ஈண்டு தேவ ரிருக்கை நிலத்துகா
தாண்டு வானிடை யேயமர் வெய்திய
மாண்ட வான்மத லைத்திரள் சேர்த்தென
நீண்ட கேதன நீள்விசும் போங்குமே. 97

மேனி லத்தின் விராயமர் மாந்தர்கள்
கீழ்நி லத்துக் கெழூஉப்புனல் கொள்கிலா
ரானி லத்தொளி ரம்புலி யின்சிலைக்
கானி லைத்த கடிப்புனல் வாக்கலான். 98

இந்த மாநக ரத்தெழி லோடெதிர்
தந்து நோக்கத் தமனிய மாநக
ரெந்த நாளு மிருஞ்சுர மாதலா
லந்த வான்பதி யார்சுர ராயினர். 99

ஆளும் விண்ணழ கான்றில தென்பது
கோளு நாளுமிக் கோனை நகரென
நாளு நாளு நலத்தகக் காணிய
தாளு றுவது வேதகச் சாற்றுமே. 100

எடுத்த மேனிலத் தின்புறு மாந்தர்க
டொடுத்த வான்கல விச்சுவை நோக்கியுண்

மடுத்த நீளழுக் காற்றின்விண் வாழ்க்கையர்
விடுத்து ளாருண வோடு விழித்துயில். 101

இயற்கை மெய்யெழி லேனக்குறின் யாவருஞ்
செயற்கை யற்றழி செய்கை யறிந்துசம்
மயக்கு மெய்முழு தும்மறைக் தாரரோ
நயக்க மாணணி யாவினந் தையலார். 102

கருங்க யற்கண் மாதர் காத லன்ப ரைப்பு லந்துமின்
னெருங்கு தங்கை வாங்கி வீச லுற்ற தாரி னேடுபோய்
நெருங்கு கற்ப கப்பொ ழிற்க ணீடு கூடு வண்டினை
மருங்கு கண்டி தென்கொ லென்று வானு ளார யிர்ப்பரே. 103

நருக திர்ப்பி ழம்பு கா லு நன்ம ணிச்செய் மேனிலத்
துரும துக்க மழ்ந்த தொங்க லோதி மாதர் கூடலின்,
முகுளி தங்கண் கொள்ள வேர்மு கத்த ரும்ப நோக்கிய
வகம கிழ்ந்தி ருந்த வானி னங்க லார்ச மழ்ப்பரே. 104

புலந்து நிற்கும் வேலை யும்பு ணர்ந்து நிற்கும் வேலையும்
கலந்து நின்ற தம்மை யுங்க ழற்றி விட்ட மானமுள்
ளலர்ந்து வீதி வெய்யி னின்ற வான்ற மாந்தர் கேட்சென
மலர்ந்த வாண்மு கத்தி னூர்தம் வாச மாலை யாதியே. 105

பாட கப்ப சும்பொ னூபு ரத்த ளிர்ப்ப தத்தினூர்
மாட கத்த யாழெ ழுப்ப மாடு வீழ்ந்த கின்னர
நீட கத்த ருச்சி ரித்து நீவிர் பண்ப யிற்றுகென்
றேட கத்த கூந்த லார்க்கி றைஞ்சி நின்ற தொத்தசே. 106

வயங்கு கிள்ளை பூவை யோடு மானு மாதர் சொல்லென
நயங்கொள் பாட லூட்பு ணர்த்து நாவ லார்க்க வற்றினை
யியங்கு ருது கூட்டி விட்டி டித்தி டித்து ரைத்திசைப்
பயன்கொ ளுத்து மாதர் மேன்மை பார்த்த லின்மை யென்கொலோ.

மங்க லச்சி றப்பு நாளு மாட மெங்கு மல்கலிற்
றுங்க வச்சி றப்பி னேடமைந்த தூய தோட்டிமை
தங்க லான்வ னப்பி ரண்டு சாரு மேனை மாநக
ரங்கண் ஞால மெச்சு கின்ற வங்க கர்க்கி ணங்குமே. 108

பூம டந்தை மார்பி விட்ட பொற்ற பேர ணிக்கல
மாம ணிக்கு லங்கு யின்ற மைந்த மாட மாநகர்
காமர் மல்கு மக்க லங்க லந்தி லங்கு நாயக
மாம ணிக்கு ழாங்க டுக்கை மாலை வள்ளல் கோயிலே. 109



தங்களுக் கிறைவ னின்ற தாழ்குழற் றேவி யன்பு
பொங்கமிக் காற்று நின்ற புரையறு தவத்திற் கூறு
தங்குவ தில்லை யாசத் தடவரைக் குலங்கள் சூழ்ந்து
மங்குழை நின்றுங் காத்தா லனையபன் மதிலு மற்றும். 110

குருமணி யிழைத்த நொச்சி கோபுர மாட மெங்கு
முருவவெள் விடைக டங்கி யொளிர்தரு காட்சி நாதன்
திருவடி வணங்கச் சார்வோர் செயிர்வழி யிடையே நீங்கத்
தருமவெள் ளேறு பல்வே றுருக்கொடு தவிர்ந்த தொக்கும். 111

மேதகு தீர்த்தங் கொண்மார் வியத்தகு படியின் மாந்தர்
காதலி னிறங்கி யேறிக் களித்துறுங் காட்சி சுத்தத்
தேதமி லவத்தை யைந்து மேறியு மிழிந்து நிற்குஞ்
சாதக ருள்ள மென்னத் தகையுற நாளு நாளும். 112

தம்பிரா னுருவங் கொண்ட தம்மினத் தீர்த்தங் காண
நம்பிவந் திறுத்தா லன்ன நளிர்புனற் றீர்த்த மெல்லாம்
வம்புலா மலர்கள் பூத்து மலரடிக் குதவித் தேசு
பம்பியான் றவிரற் சாலத் தெளிந்துபா வழுந்தீர்க் கும்மே. 113

கையணி நுதற்க ணுடைங் கவினரங் கிறைவர்க் கான
செய்யணி குறித்துச் சேர்ந்தார்க் கொல்லுமத் தீமை நோக்கா
தையர்செங் கனலி யோம்பு மவிர்மணி வேள்விச் சாலை
நெய்யவித் தூம நாளு நெடுவிசும் பளக்கு மன்றே. 114

பெருகிய வன்பு பொங்கப் பிஞ்ஞகன் றன்னைத் தாங்கு
முருகிய வுள்ள மேலா யோங்குமென் றுணர்த்தா நின்ற
திருநில முழுதும் போற்ற வெம்பிரான் றிருமுன் றேலாத்
தருமவெள் விடையி னூர்தி தனிக்கொடி நிவந்த காட்சி. 115

நம்பிரா னினிது வைகி நல்லருள் கொழியா நின்ற
வம்பொனா லயத்து மேலா லவிர்மணித் தூவிப் பாங்க
ரும்பர்வா னளந்து நிற்கு முருகெழு நாவற் குரு
செம்பொன்மால் வரையின் பாங்கர்ச் சிவணிய நாவ லொக்கும். 116

கவர்மணி விளக்குஞ் செய்ய கனற்கெழு விளக்கும் பல்வே
றவிர்வன வன்பு பொங்க வடிமலர் தொழுவோர்க் கெல்லா
மிவர்நுதல் விழிக ளாக வீவதற் கிறைவர் வைத்த
வுவமையி றழல்கள் போன்ற வொளிர்செழுங் கோயி லெங்கும். 117

முரசம்மின் முகிலு நாண முழங்குறு முழக்கும் பல்லோர்
விரசினர் வணங்கிப் போற்றும் வியத்தகு குரைப்புந் தேவ

ரசர்கள் பொருள்க ணல்கி யடிதொழு மார்ப்பு மல்கித்
திரைசெறி கடல்க ளேழுந் தெழித்தெனத் திகழு மன்றே. 118

இருட்பிழம் பெடுத்து வாய்ப்பெ யெரிமணிக் குவையும் வேறு
பொருட்டிரட் குவையு மியாண்டும் புணர்கலாப் புதிய பொற்பு
மருட்டிறத் தினருங் காணின் மலமொரு மூன்று நீங்கி
யருட்டிறத் தினர்க ளாக்கு மாக்கமு மவண மாதோ. 119

அறுவகை மதத்தி னோர்க்கு மவ்வவப் பொருளாய் நின்றங்
குறுவர மருளு முண்மை யொருபொரு ளாயே நின்று
மறுவற விளக்கி நின்றுள் வணங்குந ரெவர்க்கும் வேட்ட
நிறுவிமெய்ஞ் ஞான நீதி நிகழ்த்தகி லாண்ட வல்லி. 120

எவ்வழி முயன்று பூசை யியற்றினு மடிமை யானோ
ரவ்வழி வழியே யாக வடிநிழல் குறுகு முண்மை
செவ்விதி னுணர்த்து முக்கட் செம்மலைப் பலசா லேகத்
தவ்விய மனுக்க யாரு மன்பொடு காணுங் காட்சி. 121

நெகிழ்ச்சிமிக் குடைய நீரா னெடுவலி யுருவந் தான்கொண்
டிகழ்ச்சிமிக் குடைய் மாசி னிணங்கினோ ரிருப்பு நெஞ்சு
மகிழ்ச்சிமிக் குடைமை யாக வாவா நெகிழ்த்து நாளும்
புகழ்ச்சிமிக் குடைய வின்பப் பூரணா னரசு செய்யும். 122

இத்தகு வளமை சான்ற வெழில்வள ரானைக் காவி
னுத்தம சரித மெல்லா முயர்ந்தனை மிசவ னத்தின்
மெத்திய வன்பின் வைகும் விரதியர் சூதன் றன்னைப்
பத்தியிற் கடாவி நின்ற பரிசினைப் பகர லுற்றேன். 123

15 SEP 1909
MADRAS

# நைமிசப்படலம்.

திருவி ளங்கிய தேயத்த வர்க்கெலாங்
கருவி ளங்கிய கார்வளஞ் செய்வதோர்
குருவி ளங்கு குரையழல் வேள்வியி
னுருவி ளங்கிய தானுயர் நைமிசம். 1

மண்ண யந்ததண் வாரி வழங்குமா
றண்ண லங்கன லாற்றி வளிதடுத்
தீண்ண யந்த வுறுவரி னூற்பசி
விண்ண யந்தவர் வீப்பதக் கானகம். 2

உதர வங்கி யுலகொரு மூன்றினுஞ்
சிதைய வங்கி வளர்த்திடுஞ் செய்கையார்
கதமி லாதவர் காய்தரிற் றேவரு
மதலை யற்றிடும் வாய்மைய ரங்குளார். 3

விடுத்த மந்திர மேவிய ழைக்குமுன்
னெடுத்த வன்பி னதற்கெதிர் கொண்டென
வடுத்து விண்ணவ ராங்குற வானெலாந்
தொடுத்த வேள்வியின் றூம நிவக்குமால். 4

மடங்கல் வாரண மான்புலி மாறற
விடங்க டோறு மிருப்பன வெம்பிரா
னடங்கொள் சேவடி நண்ணிய தாங்களு
மடங்கி மாதவ மாற்றுவ போன்றன. 5

அயில்கொள் சூலி யருச்சனை மாலியம்
வெயிலின் வாடுவ வேள்விடும் வெங்கனை
பயிலு மாதவர் பாலுற லஞ்சபு
செயிரி னங்கழி யுஞ்செய லொத்தன. 6

மறியு டம்புதை வந்துசின் மாதவர்
கறிபு னல்கினர் காக்குமப் பெற்றிமை
மறிகை யேந்தி வடிவுகொ ளன்றுகைப்
பெறுவ தாமெனப் பேணுவ தொத்ததே. 7

அவியி ருங்கோடை யந்தார்க் கிந்திடுஞ்
சவிகொ டும்புகழ் தம்மையும் போர்த்தொளிர்
கவின்வி ளக்குவ காசறு மாதவ
ரவிர்வெண் பூதி யணிந்தொளிர் தோற்றமே.

படியில் வேறுபற் றின்மை தெரித்தெனக்
கடிவி ராவு கடுக்கையங் கண்ணிபோம்
மடிகள் கண்மணி யேயணி யாக்கினார்
நெடிய வைய நிரப்பறு கோளினார்.

கற்ப கத்தக் கவினிழை தம்மைமே
வற்பின் வந்தண வுந்திறங் காட்டுமப்
பொற்பி னின்றனர் புண்ணிய மாதவர்
வற்பின் வற்கலை வாங்கி யுடுத்தியே.

பிறவி யொப்பினும் பேணிய செய்கையா
லறவர் மேலென் றறைவன மாதவர்
செறிம யிர்த்தொகை செஞ்சடை யாகிவிண்
ணெறியி னுரையு நிச்சம்வ ணக்கியே.

மொழியு மாமொழி யுங்கிளி போற்சுவை
வழியு மாமறை மாதவர் தஞ்சிறு
ரழிவி லாசிரி யன்வழி யோதுறுங்
கழிவி லோதைக் கிடையிரு காலெலாம்.

விளங்கு வேத புருடரே மேவியங்
குளங்கொள் காதலி னோதுதல் வீழ்தரத்
துளங்க மாமறை சொல்விநல் லந்தணர்
வளங்கொள் வேள்வி வளர்ப்பதோர் சாலெலாம்.

மதிமு டித்தருள் வள்ளறன் பூசனை
விதியி னாற்றி விளங்கழ லோம்புபு
கதிய வன்பினர் காலத்தி னாற்செயு
மதிதி பூசையு மாங்கொரு பாலெலாம்.

இரண்டு நாடி யியக்க மறுத்திடைத்
திரண்ட வாயுச் செலுத்தி யிருண்மல
முரண்ட டுத்தொளிர் மெய்யொளி யேதமக்
கரண்ட கச்செயு மார்வமோர் பாலெலாம்.

நல்ல ஞான மிரண்டினு நாட்டம்வைத்
தெல்லை யற்றொளி ரின்பக் கடலிடை



யல்ல லற்றறி வற்றிரண் டொன்றறப்
புல்ல லுற்ற புணர்ப்புமோர் பாலெலாம். 16

கருவி நூலுங் கணக்கும் பயின்றவர்
பொருள்க ளாயும் புகற்சியோர் பாலெலா
மிருதி நூலின் விளக்க முணர்ந்தவர்
மருவு நீதி வழக்கமோர் பாலெலாம். 17

தீங்க ரும்புஞ் செழுங்கனி யுஞ்சுவை
யோங்கு தேனு முடங்குகுத் தாலென
வீங்கு தீஞ்சுவை மேய புராணங்கள்
பாங்கி னோதும் பயிற்சியோர் பாலெலாம். 18

இன்ன தாகிய நைமிசத் தெய்தினன்
கன்னி பாகன் கழலெழுங் காதலான்
பன்னு கேள்விப் பதினெண் புராணமுந்
தன்ன தாகத் தழீஇக்கொண்ட சூதனே. 19

எய்திய சூத னெழில்வன நோக்கி
வெய்தெழு சிந்தையின் விம்மித னாக
வைதவண் வைகிய வந்தணர் தேரா
வுய்திய மென்னெறி யுற்றனர் மன்னோ. 20

மாதன மெய்து வறிஞரி னெப்பக்
காதலி னாற்செய் கடன்முறை செய்தங்
காதன நல்கி யதற்கணி ருத்தி
யேதமி னட்பி னியைந்துரை செய்வார். 21

கற்பகஞ் சுரபி சிந்தா மணிநிதி கரைந்த வைந்தும்
பொற்புற வெளிதிற் றமே வறிஞர்பாற் புக்கா லென்ன
வற்பொடு மீங்குப் போந்தா யாதலி னடியே மாட்டுத்
தற்பர னருளின் செல்வஞ் சார்வதற் றையமின்றே. 22

இருண்மல வலியைத் தாக்கு மிராற்றே டாறுஞ் சேர்ந்த
பொருவறு புராண முற்றும் புரையறத் தெளிந்தோய்க் கியாது
மருவரி தொன்று கேட்க வலித்தனம் வாஞ்சை முற்ற
வருளொடு மிறுத்தல் வேண்டு மதுவெது வென்னிற் கேண்மோ. 23

உலப்பறு தீர்த்தந் தம்மு ளுத்தம தீர்த்தஞ் சால
நலத்தரு மூர்த்தி தம்மு ணலத்தகு மூர்த்தி யின்ன
தலத்தினு ளுயர்ந்து நின்ற தலத்தொருங் கிருக்கு மாயின்
மலத்தொகை யிரியக் கேட்கும் வாஞ்சையே மென்றுந் தாழ்ந்தார். 24

தவத்துயர் வலிமை சான்ற சவுனக முனிவ ஞகிப்
பவத்தொகை யிரிக்கு மையர் பரிந்தனர் விஞுத லோடு
மவத்தொகை யுயிர்கட் கெல்லா மனுங்கவச் சூத மேலோன்
சிவத்துள மழுத்தி நின்று தெளிந்தன ஹுவற லுற்முன்.

தேவரும் விழைய நோற்குந் திருத்தகு முனிவர் கீவி
ரேவரு மின்ப மெய்த வெம்முழைக் கடாவி நின்ற
மூவகை யுயர்வு மொன்ருய் முற்றிய தலன்மற் ருனைக்
காவல தில்லை கொண்மின் கைத்தலக் கனியின் மாதோ.

அருந்தவப் பேறு வாய்ந்த வந்தணீ ராத லாலே
திருந்திய வானைக் காவின் றிருத்தகு மேன்மை நம்பாற்
பொருந்திய கிளந்தா மீது புராதனன் றேவி நந்திக்
கிருந்தருள் செய்த தாமென் றியம்பினன் மோன முற்முன்.

அனையது கேட்ட லோடு மறிஞர்கண் மகிழ்ச்சி துள்ள
வினையறு சூதன் பாத மீட்டுநன் றிறைஞ்சித் தேவி
வனைபுகழ் நந்திக் கண்ணல் வகுத்தவா வகுக்க வென்முர்க்
கினையது முரைத்து மென்ஞு விவறினன் சூத மேலோன்.

எற்றமி லாள ராகி யிருந்தவக் கிழவ ரெல்லா
முற்றமெய்ச் சூதன் றன்னை விஞுயது முத்த ரந்தான்
மற்றவர்க் குரைத்த வாறும் வழங்கிஞுந் தேவி நந்திக்
கற்றவர்க் கற்ருேன் கூறு மடைவினி யுரைத்து மாலோ.

௨

# புராணவரலாற்றுப்படலம்.

உலகம் யாவையு மொடுங்குமவ் வூழியு மொடுங்கா
திலகு பேரொளி யாயதன் னிறைவனே யிழையச்
சுலவு வாரிதி யுலகெலாந் தொலைக்குமக் கடைநா
ணிலவி மேக்குற நிவந்துநிற் பதுநெடுங் கயிலை. 1

உருத்தி ரப்பெயர்ச் செம்மலா ருருவந்தன் மயமென்
றருத்தி வையகந் தெளிதர வலங்குசாத் துவிகம்
பெருத்த குன்றமாய்த் தாங்கிய பெற்றியே கடுக்குங்
குருத்த தும்பிய கொழுஞ்சுடர் கொழிக்குமச் சயிலம். 2

மேக மண்டலங் கவான்வரை வீராவநள் ளிடையே
நாக நன்மணி யிழைப்பமே னலக்குந்தன் னொளியே
யாக நின்றவக் கிரிகுண மூன்றுநேர்ந் தனைய
தேக னக்குணங் கடந்துநின் றெனமிசை யிருக்கும். 3

கற்றை வெண்கதிர் பரப்பிய கலைமுழுத் திங்கட்
பெற்றி யொத்தது பெயர்ந்தெழு மாலைவெள் ளருவி
சுற்றின் வீழ்தர விளங்கிய கயிலைதுன் றியவா
னூற்ற மீன்கண மொத்தசா ரலினொளிர் முத்தம். 4

கொழுந்து கொண்டெழு கொழுங்கதிர் மாணிக்க முழைநின்
றெழுந்து பல்லரு வித்திர ளிழுமென விழிவ
செழுந்த ழற்பெரும் பூதத்திற் றிகழ்தரத் தோன்று
மழுந்து தண்புனற் பூதமென் றறைவது தேற்றும். 5

கூம்பு கையவாய்க் கூம்பல்செய் யாவிழி யினவாய்த்
தேம்பு னற்செழுந் தடங்களுந் தெரிசியா நின்றுங்
கோங்கல் வெண்கதிர் பரத்தலி னேரிரு பொழுதும்
வீங்கு பங்கயங் குவளைகள் விரிதரா குவியா. 6

எம்பி ரான்றிரு வுருவெடுத் தியங்குமெய் யடியார்
வம்பு லாஞ்சடை வளர்மதிக் கிரணமெவ் வாயும்
பம்ப லாற்பனிக் கதிர்ச்சிலை களும்பா ணடியை
நம்பி யாங்குரு கியதென நறும்புனல் வாக்கும். 7

நீற்றின் வெள்ளொளி பரத்தலி னெடுங்கணீ ரருவி
யூற்றி ருத்தலிற் பேரிசை தழுவிமிக் குயர்ச்சி
தோற்றி நிற்றலி னமலனா ரசந்திர விடமா
வீற்றி ருத்தலி னடியரின் விளங்குமப் பொருப்பு.

ஒருகொம் பானையு மொராயிரத் திரட்டிவெண் கோட்டுச்
செருவின் வேழமுந் திரளிமிற் றருமவெள் ளேறும்
பொருவி லோகையிற் பொருந்திய படிவதல் லாது
மருவ லார்களிற் பொருதிடப் படாததவ் வரையே.

கொண்டல் வாய்திறந் துகுத்தவெண் முத்தமோ குலவேய்
விண்டு வாய்திறந் துகுத்தவெண் முத்தமோ மடங்கற்
கண்டு காய்ந்துகு கடாக்கரி முத்தமோ வறியா
மண்டர் போற்றுமக் கயிலையஞ் சாரலி னதிகம்.

கருணை நாயகன் கழலெழுக் கருதிவா னவர்கந்
தருவர் சாரணர் சித்தர்விச் சாதரர் முதலோர்
மருவி வாழ்தரத் தழுவிவான் கதிகளெல் லாந்த
னுருவி னேருழிக் காட்டவற் றுயதவ் வோங்கல்.

பெண்ணி னாயகி யாகிய பிறங்கலின் மடந்தை
பண்ணை யாட்டயர் தரப்படர் பசும்பொழி லிடத்தும்
வண்ண வான்முழை யிடத்துமென் மலரடிச் சுவடு
விண்ணு ளார்முடி கோட்டுவ வியத்தக விளங்கி.

விலகி வில்லுமிழ் மணிகளும் விண்ணுயர் மணியு
மலர்செ யைவகைத் தருக்களு மைவகைப் பசவு
நிலவு பங்கய நிதிகளு நிகழ்வினை நிதியுங்
குலவு விம்மிதப் பொருள்களும் வயின்வயிற் குழுமும்.

கணங்கள் காதலிற் றம்பிரான் கழலிணை பரசித்
துணங்கை யாட்டயர் காட்சியுஞ் சுடர்மணி யரங்கின்
வணங்கு நூலிடை யரமகளிர் கண்மணி முழவோ
டிணங்க வாட்டய ராடலு மிடந்தொறு நிலவும்.

இந்தி ரன்பத முதலிய விமையவர் பதமுங்
கந்த மென்மல ரயன்பதங் காகுத்தன் பதமு
மெந்த விம்மித வளங்களு மிறைஞ்சினர்க் களிக்கு
மந்த வெள்ளியங் கிரிவள மறைவதற் கெளிதோ.

இனையவெள் ளியங்கிரிக் கெழில்செய் தாலெனக்
கனைகதிர் மணிச்செயுங் கால்க ளாயிரம்



புனைதரு மண்டபம் பொலிந்த தாங்கரோ
துனைபரி யேழுடைச் சுடரு மாயவே. 16

தெள்ளடி யாரினுந் தீமை செய்வவென்
றள்ளொளிக் கோளுநா ளனைத்தும் யாத்தென
வொள்ளிய மண்டபத் துள்ளெ லாமிரு
ளள்ளுறு மணித்தொடை யாக்கப் பட்டவே. 17

விலகிவில் லுமிழ்மணி வீற்று வீற்றுநீ இ
யிலகிய விளக்கமு னிமைப்பில் லார்முடிக்
குலமணி மழுங்குவ குழகன் பேரரு
ணிலவுழி யுயிர்மதி நின்று மாய்ந்தென. 18

அளவில்சிந் தாமணி யனந்த கோடிகள்
வளமலி மண்டப மருங்கு துன்றுவ
களமணி மிடற்றிறை காணப் போந்தவர்க்
குளமகிழ்ந் தருளிய வுறுத்தி யனைலென. 19

அணியில ராயினு மடிமை பூண்டுயர்
பணியினி லுரியர்தன் பால ரென்பது
தணிவுறச் சிவபிரா னிருக்கைச் சுற்றெலாங்
கணிதமில் கணக்கணங் களுலிற் றென்பவே. 20

சிம்புளா யெனையடு மினைய செம்மலென்
செம்பொன்மா முடிமிசைச் சிவணப் பாலனென்
றம்பரார்க் கரியரி யுணர்த்தி னலெனப்
பைம்பொன்மா லரியணை பயின்ற தாயிடை. 21

கவரிக ளுள்ளின கால்செய் வட்டமங்
கிவர்தரு குளிர்வளி யெழுப்பி நின்றன
வவிரிழை வெள்ளைக ளாலித் தோங்கின
வுவவுவெண் மதிக்குடை யுயர்த்தப் பட்டவே. 22

வயம்படு சாரதர் மழையு நாணுற
வியம்பின ரியம்பல வினிய பாடினார்
நயம்படு கின்னரர் நார தாதியர்
பயம்படு வீணையிற் பண்ணி யக்கினார். 23

தழங்கிய கிண்கிணித் தளிர்மென் சீறடிப்
பழங்கண்மெல் விடையினார் பண்பி னாடினார்
வழங்கினர் வானவர் மதுச்செய் பூமழை
முழங்கின வடியவர் மொழிந்த தோத்திரம். 24

நாரணர் நான்முகர் நாக ராதியோர்
தாரணி மலரடி சார்ந்து போற்றுறக்
காரண காரியங் கடந்த கண்ணுதற்
பூரண ருமையொடும் பொற்ப வைகினர்.

விண்ணோர் புருகூ தன்விரிஞ் சன்மலர்க்
கண்ணோன் முனிவோ ரெவருங் கனவின்
வண்ணே வெனவேத் திவரங் கள்பல
வெண்ணு வவைகொண் டனரே கினரே.

இவ்வா றெவரும் பணியக் கருணை
செவ்வே திகழ்கின் றதினத் தொருநாட்
கைவா ரணமைந் தரொடுங் கலவி
யொவ்வா விளையா டலுவந் தனரே.

அயின்முற் றியகூ லமணிந் தவர்தாம்
வெயின்முற் றியவே லர்விரா யகரிற்
பயின்முற் றினரா டெபதந் தனது
செயிர்முற் றறுசெவ் வியெனக் கருதா.

வாரற் கவெனச் சிலர்வாய் தலையற்
றீரக் கடியுஞ் சிலர்சோ யிலகஞ்
சாரக் கடிதே தழுவுந் தலைமைச்
சூற் படையான் றெழுநீ தசொல்வான்.

பண்ணவர்க் கரியாய் போற்றி பத்தருக் கெளியாய் போற்றி
தண்ணிய மதியும் பாம்புந் தரித்தரு டலைவா போற்றி
கண்ணிய வடியா ருள்ளக் கருத்தினை முடிப்பாய் போற்றி
புண்ணிய முதலே போற்றி பூரணப் பொருளே போற்றி.

இரந்தவர் வறிய ராகா தியாவையு மெளிதி னெய்தச்
சுரந்தருள் கொழிக்கு முக்கட் சுந்தர மகவி னென்னைப்
புரந்தருள் புனித வொன்று புகற்சியின் விழைதல் வேட்டேன்
வரந்தரு பகவ யாதே யதுவெனின் வகுப்பக் கேண்மோ.

மாதொடு மடிகள் சால மகிழ்ந்துறை தலங்க டம்முண்
மேதகு தலத்தி னோடு விளங்கிமே லாகுந் தீர்த்த
மூதருள் கொழித்து மேலா மூர்த்தியு மொருங்கு வாய்ந்த
தீதறு வரைப்பொன் றீங்குத் திருவுளம் பற்றல் வேண்டும்.

அன்னது மின்று காறு மகிலத்தி லொருவர் மாட்டு
மன்னவ வருளிச் செய்யா மந்தண முடைய தாகுந்



தன்மைய தாதல் வேண்டுந் தலைவவென் றிரந்து மீட்டு
நன்னய மொழிக ளார்த்தி நகைமல ரடியிற் றாழ்ந்தான். 33

ஆயதோர் செவ்வி நோக்கி யகிலமீன் றெடுத்த தாயும்
பாயமே கலைக ளார்ப்பப் பாதநூ புரங்க ளேங்கத்
தாயமென் மலர்ப்பூங் கோதைச் சுரும்பெழ வெழுந்து வல்லே
நாயக னடியிற் றாழ்ந்து நகுமுகத் தினிது கூறும். 34

சகத்துறு பொருள்க ளெல்லாந் தன்வய மாத லன்றிச்
சகத்தொரு பொருளின் மாட்டுந் தான்வய மாத லில்லென்
றகத்தினெவ் வெவருந் தேற வழல்விட மெடுத்து மாந்திப்
புகர்க்கறைக் கண்ட ஞான பூரண புராண போற்றி. 35

வியப்பொடு படைத்துக் காத்து விளிக்குமூ வருக்கெவ் வாறு
செயப்படு பொருளாய் நிற்குஞ் செறிந்தபல் லுலக மவ்வா
றுயிர்ப்பிலத் தேவர் தாமுஞ் செயப்படு பொருள்க ளாகப்
பெயர்ப்பொரு ளாயே யென்று நின்றருள் பெரும போற்றி. 36

காலமுற் றுறுதி நோக்கிக் கணிதமி லுயிர்கட் கெல்லாஞ்
சாலமுற் றியதே கத்தைத் தவிர்த்திடு காலன் மாட்டுங்
காலமுற் றுறுதி நோக்கிக் காய்த்தி னொழித்தாட் கொள்கை
சாலமுற் றெரித்து நின்ற தற்பரம் பொருளே போற்றி. 37

கங்கை கொழிப்பச் செஞ்சடிலங் கதிர்க்கு முடியெம் பெருமானே
யங்க ணுலகம் பெரிதுய்ய வருள்சேர் நந்தி விஞயபொரு
ளிங்க ணறித லடியேனு மினிது விழைந்தே னிதுவன்றித்
திங்க ளணிந்தோ யோரையந் திகழ்ந்த துளத்தி லதுகேண்மோ. 38

பரந்த வுலகம் படைத்தளித்துப் பாற்று வானு மொருநீயே
சுரந்த வன்பின் முனிவரர்கள் சுரர்கண் முதலோ ரெவ்வெவரு
மரந்தை யறுக்கும் வேள்விமுத லனைத்தி னானும் வழிபட்டு
வரந்தந் தருளு கெனவிரக்கும் வள்ள லையனு மொருநீயே. 39

ஆற்றுந் தருமந் தமக்கியைய வகில வுயிர்க்கும் வேட்டபயன்
போற்றி யவனே யவளதுவே யெனமூன் றாகிப் புணர்விக்குந்
தேற்றப் பொருளு மொருநீயே தெள்ளித் தெளிந்தோர் சிந்தைமல
மாற்றி வளர்பே ரின்பநலம் வழங்கு முதலு மொருநீயே. 40

மண்ணாய் மண்ணி னைந்தாய் வழங்கும் புனலா யதினான்காய்க்
கண்ணா ரழலா யதின்மூன் றாய்க் காலாய்க் காலி னிரண்டாய்
விண்ணாய் விண்ணி னொன்றாகி வேட்டோர் வேட்ட பலனாகி
நண்ணா ருயிரா யுயிர்க்குயிராய் நலக்கு மிறையு மொருநீயே. 41

அருவா யுருவா யருவுருவா யலையமூன் றனையு மன்றறிவே
யுருவா யனுதி வினையிரண்டு மொழியா மலமுங் கருமமு
மிருண்மா யையுமற் றிவைவிளைப்ப வீண்டுந் தருவா ரிகமுன்கு
மருவா தென்று மோரியல்பின் வயங்கு பொருளு மொருநீயே.

என்று மறைகள் பலகோடி யெடுத்து முறையிட் டடிபரசும்
வென்றி மழுமான் கரத்தணிந்த விமலா நினக்கு வேறிறையு
மொன்று பயனு முளரேபோல் யோக முழக்கு மிறவென்னே
மன்ற வெமக்கிங் கிவையிரண்டும் வழங்கல் வேண்டு மெனவிரந்தாள்.

விழைந்திரந்த மடவரலை மேகருநங் கியைநோக்கித்
தழைந்தபெருங் கருணையினுற் றம்பிரான் முறுவலித்துக்
குழைந்தவுளத் தினிர்வேட்ட கோதில்பொரு ளருள்செய்வா
நுழைந்தவறி வொடுங்கேண்மி னெனவிதந்து நவில்கிற்கும்.

மந்தணமாய்த் தலந்தீர்த்த மறுமையுமிம் மையும்வீடுந்
தந்தருண்மூர்த் தியுமூன்றுந் தகவுயர்ந்த வொருதான
மந்தமில்ச்சீர் சோணுட்டி னணிவளர்கா விரிக்கரையிற்
சுந்தரமா யுத்தமத்தி னுத்தமமாய்த் துலங்குமால்.

ஞானகேத் திரமென்று நலத்தகுமத் திருநகர்க்
கானதோர் பெயர்வழங்கு மதிமின்க ளினியிப்பா
லேனையோ ரரும்பொருளு மிடுகிடையா யருந்தவமத்
தானநீ யடுத்தியற்று சாற்றுதும்வந் தாங்கென்முன்.

தம்பிரா னதுகூறத் தாழ்ந்தெழுந்த கிருவர்களு
மெய்பிரா னெளிதுய்ந்தே யினியவற்றின் பெருமைகளு
நம்பினேங் களுக்கருள வேண்டுமென நயந்திரப்ப
வும்பரார்க் கரியபிரா னுவந்தனைத்து முறைசெய்தான்.

பொத்தனுக்கு மிதுபாத்ம மெனப்புகலும் புராணத்தின்
மத்தியினுள் ளதுநமக்கு வரன்முறையே யுரைக்கின்றும்
வைத்தமதி யொடுகேண்மி னெனச்சூத மாதவத்தோன்
பத்தியின்ன் னானடி பணிந்துளத்திற் பகர்கிற்பான்.

௨

## ஸ்தலவிசேஷப்படலம்.

வண்டுவரி பாடமலர் விண்டுமது ஆற்றுந்
தண்டலையு டுத்துவள ருந்தலவி சேடந்
தொண்டுபுரி நந்தியொடு தோகையுமை கேட்ப
வண்டர்பெரு மானமுத மென்னவருள் செய்யும். 1

மன்றல்கம ழுங்குழன் மடந்தையுயர் நந்தி
யென்றுமெவ ரும்பணிய யாமினிது வைகி
யொன்றுசிவ ஞானநனி யுய்த்தருள் சிறப்பா
னின்றதது ஞானதல மென்னநில மீதே. 2

சிலம்புசிறு கிண்கிணி சிலம்புபத மாதே
வலம்புரி விளைக்கரனும் வாரிச மலர்க்க
ணிலம்பணிய நின்றவனு நீடிய திசைக்க
ணலம்பட விருந்தவரு நாளொடுபல் லோரும். 3

மருத்துவ ருருத்திரர் வசுக்கள்கதிர் வீசு
மருக்கரு மருந்தவரு மன்றியனை வோரு
மொருக்கிமன நோற்றன ருறைந்தனர்க ளாங்கு
விருப்பொடு மவர்க்கெதிர் விளங்கியருள் கூர்ந்து. 4

காமர்கதி யோடுதிரி காலமுணர் ஞான
நாமமல நீவுசிவ ஞானமிவை யெல்லாம்
யாமருள வேற்றவர்க ளின்றும்வதி கின்றார்
வாமமணி மேகலை மலர்க்குழன் மடந்தாய். 5

ஆங்கவ ரிருந்துதவ மாற்றுபல தீர்த்த
மோங்கின வவற்றின்விதி யோடுபடி வோரு
மீங்குரைசெ யும்பயனை யெய்திடுக வென்று
நீங்கரு வரங்களு நிகழ்த்தின மணங்கே. 6

கொங்குமலி பன்மலர்கொ ழித்தொழுகு கின்ற
கங்கையவ ளக்கடிவ ரைப்பினனி நோற்றுத்
திங்களித ழித்தெரியல் சிந்தரவும் வேய்ந்த
வங்கிகிகர் செஞ்சடை யமர்ந்தன ளணங்கே. 7

பூவிரி நறுந்தொடை புனைந்தருமு னங்காய்
தாவிரிய மாதவர்க டாமுமவ் வரைப்பிற்
காவிரி தவங்கள்கடி தாற்றியுயர் கங்கை
மாவிரி நதிக்கதிக மாயவண் வழங்கும்.

வயங்குமணி யேருவமை மானத மடுத்தான்
றயங்குபுகழ் ஞானதல மீதுதவ மாற்றி
யியங்குசிறை யன்னமொளி ரேமவன சங்க
ணயங்கதுவி வைகுவா நண்ணியதை யன்றே.

வரமலியு மன்னது வரம்பிற வொழுந்து
சாயுநதி யென்றுதவழ் கின்றதது சார்ந்தோர்க்
கிரவினை யகற்றியெழி லார்கலியு நல்கு
மரவென வகன்றமணி யல்குன்மட மாதே.

வளர்தீந்தமிழ் முனிவன்வதி மலயத்திழு மெனவீழ்ந்
தளவாவர மெவரும்பெற வருடாம்பிர பன்னி
தளராதுபர் தவமாற்றுபு தபளத்தொடைக தன்பா
லுளதாம்வகை வரமெய்திய தொளிர்பூணிள முலையாய்.

எழுகோமுக மலைநின்றினி திழிகோமதி நதியுங்
குழுமாமணி திரையிற்றிவள் கோதாவரி நதியும்
பழுதோடிய தவழ்சந்திர பாகைப்பெயர் நதியும்
வழுவாதெழில் வளமல்கிய வருநீர்நரு மதையும்.

சிறப்பப்புவி வலயத்தினுந் திகழுந்தா மாட்டுந்
துறக்கத்தினு முளதீர்த்தமுந் துன்னித்தவ மாற்றி
யிறப்பப்படி குரர்பாவமு மீட்டுந்தம தகமும்
பறப்பப்பல வரமுங்கொடு பயில்கின்றன வாங்கே.

மணிமல்கிய வெழுவேலையு மலர்பூந்தட வுருவாய்த்
திணிமல்கிய வப்பூமியிற் றிசைநான்கினும் வதியுந்
துணிவெண்கதிர் முதலோர்பெயர் சூழுஞ்சில தீர்த்த
மணிமல்கிய பலவற்றுளு மதிமேன்மையி னமரும்.

அப்புத்தல மதுவாதலி னப்பின்மய மான
வெப்பெற்றிய தீர்த்தங்களு மினிதாங்குறை கிற்குஞ்
செப்பொத்தில கும்பூண்முலை திகழ்வெண்மதி தாழ்வித்
தொப்பற்றில கியவாணுத லொளிர்பூங்கொடி யனையாய்.

மறந்திகழ் வேல்பொரு மதர்த்த வாட்கணாய்
சிறந்தவத் தலத்துமுன் செய்த நன்மையாற்



பிறந்தவர் வதிந்தவர் பெருகி னூர்க்குமோ
யிறந்திடு மறுபிறப் பில்லை யில்லையே. 16

பாவமும் பாவங்கள் பண்ணு வோர்களு
மேவிய வாசைமிக் குடைய வீணருங்
காவள ரத்தலங் கலக்க வல்லரோ
வோவியம் வழிபடு முருவின் மங்கையே. 17

மறைகளின் முடிக்குமெட் டாத வாய்மையி
னிறைதரு மத்தல நெடுகு கூந்தலாய்
முறையுளித் தவம்புரி முனிவர் யோகியர்க்
குறைதரு மிருக்கையா யொளிர்வ தாகுமால். 18

சுடரும்வெண் ணீற்றொடு தூய கண்மணி
யுடலின ரஞ்செழுத் தோது நாவினர்
படாருச் சனைமுதற் பண்ணு வோர்க்குமத்
தடவிய வளம்பதி தான மாகுமால். 19

பயந்தரு ஞானமா பதியி னல்லதை
யுயர்ந்தன வெனப்படா வுயர்ந்த மேருவும்
வயந்திகழ் கயிலைமந் தரமுங் காசியு
நயந்தகே தாரமு நறிய தாரிணாய். 20

மந்திர மாகுமால் வசனம் யாவையுஞ்
சிந்தனை யாவையுஞ் சிறந்த சிட்டையா
மந்திளின் றிடுதல்சென் றிடுத லாதிக
ளுந்திய யோகத்தி னுறைப்ப தாகுமே. 21

உண்டலு மூட்டலு முவந்து வீசலு
மண்டின ரேற்றலு மற்று மாயிடைத்
தண்டலி லாச்சிவ தரும மாமரோ
வொண்டளிர் கவற்றிய வுரவச் செங்கையாய். 22

அறுசுவைநால் வகையுண்டி பிறதலத்தி லான்றவரை யமைய வூட்டி
யுறுபயனெண் மடங்காங்கு வதிகின்றுன் புற்கையுண வுண்டா னேனும்
பெறுவனெனிற் பிறனொருவற் கூட்டிவரும் பெரும்பயன்றன் பேசற் பாற்றோ
கொறுகொறுத்துக் கூரிலைவேற் குலத்தொடமர் புரிந்தழுக்குங் குவளைக் கண்ணாய்

புரந்தரனு யளகையர்தம் பெருமானு யுலகமெலாம் புரக்கும் வேந்தாய்
வரந்திகழ விருப்பதினு மேலான ஞானதலம் வதிந்து நாளு
மரந்தைதபுஞ் சிவயோகத் தவர்மனையிற் பயிக்கநுழைந் தமைத னன்றும்
பரந்தொழுந்து குவிந்திலைந்த யோதாத்தி னிடுகுமிடைப் பசும்பொற் பாவாய்.24

காமருகற் பகநாட்டி னமுதநுகர்ந் தரம்பையர்தங் கலவி யாற்றி
யேமுறநன் றிருப்பதினும் பிறதலத்திற் போகமெலா மிசைய வாழ்ந்து
தேமருவி யிருப்பதினு ஞானதலத் துபவாசஞ் செய்தோர் வைகற்
றுமருவி யிருப்பதினுஞ் சுகமதிக மாயிருக்குஞ் சயிலப் பாவாய். 25

மண்டுபெரும் பாதகர்கள் வைகலும்வை கலும்புரிந்து வழூவி ஞேரும்
பண்டுபுரி நல்வினையாற் பகர்ஞான க்ஷேத்திரத்துப் படர்ந்து வாழின்
மிண்டுமல மாயைகன்மம் வேரோடும் விடைகொள்ள வீடு சேர்வார்
கண்டுநறுங் கனியமுதாங் கலந்தனைய தீங்கிளவி கதித்த வாயாய். 26

பஞ்சுகொடித் தெண்ணெய்விற்றப் பவளவாய்ச் சிறுவர்தமைப் பகர்த்திட் டேனு
மெஞ்சியமற் றிருதொழில்கள் புரிந்தேனு ஞானதலத் திருப்பி னன்னோர்
விஞ்சியநாற் பெரும்பொருளும் பெறுவரெனி னேனையர்சீர் விளம்பற் பாற்றோ
கஞ்சமலர்க் கண்ணமர ரிருவரையும் பயந்தளிக்குங் கருணை மாதே. 27

வன்றிவலம் புரிதோளை ஞமலியென்று கழுதைவா யசங்க ளென்று
கொன்றுதனை தின்றழலும் புலையரென்று வெவேறாறுங் கோல மார்ந்த
வென்றிபுனை ஞானதலத் திருப்பரெனின் விண்ணவருண் மேலாய் வாழ்வர்
கன்றெறிந்து கனியுகுத்தோன் சகோதரியென் றுலகியம்புங் கடிப்பூங் கோதாய்.

இளமையுஞ்செல் வமுமுடலு நிலையாவென் றறிந்தவர்க ளிளமை யாதி
யுளபொழுதே ஞானதலத் துறைந்துமகிழ்ந் தறமாதி யுகப்ப வீட்டிக்
கொளுவரல தயற்பதியிற் குறுகுதமென் றொருஞான்றுங் குறிப்பர் கொல்லோ
வளமலிபங் கயமாதர் வனோக்கரந்தை வாப்பசைக்கு மலர்ப்பூந் தாளாய். 29

கணிகையர்கா தலினுக பொருளீட்டுங் காரணத்தா னுக வெவ்வே
றடிவளரும் வினோதமுதற் பொருட்டாக ஞானதலத் தமரி னன்னோர்
துணிவுடைய தவந்தான முதலான வினைசூழ்த லெற்றுக் தீர்ந்தண்
மணிவடங்கள் கிடந்துறிஞ மதர்த்தெழுந்து புளகரும்பும் வனசக் கொங்காய். 30

வழிநடையி னேறிரவு வைகினுமன் னவர்துறக்கம் வைகி வாழ்வார்
சுழிமகிழ்வின் ஞானதல மெதிர்நோக்கி வணங்கினுங்கை தொழினு மன்னோர்க்
கழியுசெய வரும்வினைக ளெதிர்நோக்கி யடிவணங்கி யங்கை கூப்புங்
குழிவிழுந்த வுயிரிடத்துங் குருடொழிய வுடன்கலந்து குலவு நங்காய். 31

ஓதியுண ரந்தணரா யிரர்தமக்குப் பிறதலத்தி னுவந்த நாலி
னீதிதவ றுதருத்தும் பயனுற்றி யிரட்டியந்த நிகரி லூரிற்
காதலொடு மொருகவள நாய்க்கிடுவோர் பெறுவரெனிற் கரிசற் றோர்க்கள்
காதரவி னொருபிடிசோ றளிப்பவர்தம் பெருமையெவ ரளப்பர் மானே. 32

கந்தமலி பொழில்புடைசூழ் ஞானதலத் தெல்லையினைக் கடவா ராயி
னெந்தவிழி குலத்தவரே யாயினுமற் றவர்வாழு மில்லி னெல்லைச்



சந்தமணி குலவுமுலைத் தாமரையாள் கடவாது தங்கி வாழு
மைந்துமலி கிரவுஞ்ச வரைதுளைத்தோன் றனையுயிர்த்து வளர்த்த மின்னே. 33

தவந்தான விரதமக மாச்சிரம வொழுக்கமுதற் றரும மெல்லா
மவந்திர வுணர்ந்தவர்கண் ஞானதலத் திருந்தாற்றி யமைவ ரல்லா
லுவந்தேனைத் தலத்தினிடை யுஞற்றுதுமென் றேமறந்து முன்னல் செய்யார்
சிவந்தோங்கும் பொலங்குவட்டி னிமையவரை யுயிர்த்தெடுத்த சிறைபூங்கொம்பே.

தவமாதி புரிகுநர்க்கு வேட்டநாற் பெரும்பயனுந் தாழா தியு
மவமான மறுஞ்சித்தி யெட்டினையும் விரைந்தளிக்கு மும்பர் வைப்பி
னவமான போகங்க ளெளிதருளும் வீடுதவு நலத்த தந்தச்
சிவமாரு ஞானதல மலதுலகின் வேறில்லை செய்ய வாயாய். 35

மூர்க்கனுய்ப் பிறந்திடுக்கண் புரிந்துழலு மறிவில்லா மூட னுக
பார்க்குண்மேம் படுஞான தலத்தென்றும் வதிந்திருக்கும் பண்ப னுயி
னேர்த்தபூ ணிளமுலையா யெமக்கினிய னவனஃ தெவ்வா றென்னி
லார்த்தநீர்க் கடல்விடமு மம்புலியுஞ் சான்றுக வறிந்து கொள்ளே. 36

தலத்தினுயர் ஞானதலத் திருக்கைமுடி யாதயலே சார்ந்தோர் தாமுங்
குலத்தினுயர் மறையவரைப் பெரியவரை யடியவரைக் கோல மார
நலத்தினுய ருறையுளிழைத் திருத்தினரேற் றும்வதிந்து நண்ணும் பேற்றை
நிலத்தினுயர்க் தவர்வியப்பப் பெறுவர்நெடுஞ் செவிமடுக்கு நீலக் கண்ணுய். 37

சம்புகே சுரமென்றுங் கெசாரணிய தலமென்றுஞ் சாற்று வார்க
ளும்பரார் தொழுஞான தலத்தினையிப் பெயர்மூன்று முமையே சால
நம்பிமா தவராதி மலமிரண்டு நீக்கிநவி லெழுத்து மூன்றிற்
பம்புமேன் மையவாகிப் பயனைவையுங் கொடுப்பனவாம் பன்னு வோர்க்கே. 38

பக்குவமே சிவதரும மலபரிபா கம்பிறந்து பதிந்து சத்தி
தொக்கவினை சமமான வுயிர்க்கலது சுத்தபஞ்சாக் கரத்தைச் சொல்லார்
மைக்கருங்க ணுமைமாதே வகுத்தபெய ரவர்மாட்டும் வழங்கப் பட்டுத்
தக்கசிவ ஞானமளித் துயர்வீடு புகுவிக்குந் தகைய வாகும். 39

பத்தியினற் பெயர்மூன்று மொருமுறைசொன் னுலுமிடர் பாவம் பொய்கண்
மெத்தியநோய் முதலான வாட்டமெலாம் விடைகொள்ளும் விண்ணோர் சூழ
வெத்தகைய போகவித மெனைத்துமெதி ரேமிற்கு மென்று லந்த
வுத்தமமாம் பெயரையெவ ருரையாதா ருலகமெலா முயிர்த்த பெண்ணே. 40

மேதகைய பயன்விழைவோர் ஞானதலத் துறைகவது மேவா தாயி
ஞேதுகவத் தலப்பெயரை யாங்கதுவு முற்றுதே லுரைப்பக் கேட்க
காதலொடு கேட்டவரு மூவகைய பாதகமுங் கடந்து மேலாம்
போதமுணர்ந் தெமதடியிற் புக்கிருப்ப ரிஃதுண்மை பொலங்கொம் பன்னுய். 41

அஞ்ஞான விருளோட மெய்ஞ்ஞான பானுவெழூஉ தடைந்தோர்க் கெல்லா
மெஞ்சான மலர்க்கமல நெகிழ்த்தவிழ்க்கு மத்தலத்தி னிகரில் வாய்மை
யெஞ்சாது விரித்துரைப்பக் காலமில்லை யினித்தீர்த்தத் தியல்பு சொற்று
மஞ்சாரு மலர்க்குழல்வா ளுதற்கருங்கண் வெண்முறுவல் வளைக்கை மானே. 42

# தீர்த்தவிசேஷப்படலம்.

முல்லைங்கர் முறுவலினுய் முழங்குபுகழ் ஞானதலத்
தெல்லையெல்லா மலங்கரித்தா லெனவிளங்கா நின்றனவாற்
கல்லெனவார் திரை யினவாய்க் கமழ்நறும்பன் மலரணிந்து
மல்லன்மணிச் செழும்படிகண் மருங்கடுத்த தீர்த்தமெலாம். 1

திங்களெனக் குளிர்ந்தன்பர் சிந்தையெனத் தெளிந்திரப்பிற்
றங்கினவ ரெனமேன்மை தழீஇக்கரும்பி னிரதமெனப்
பொங்குசுவை யுடையினவாய்ப் புவனமொரு மூன்றினுக்கு
மங்கலமெல் லாந்தருவ வயங்கியவத் தீர்த்தங்கள். 2

ஒண்டொடியா யுத்தரத்துக் குத்தரநே ருரைப்பவர்போற்
றண்டரள மணிவான்றித் தடங்கரையிற் றவழ்ந்தலவும்
வெண்டரங்க மொலிபரப்ப விகங்குல மெதிரொலித்துக்
கண்டவர்கள் வியப்பெய்தக் கவின்வளர்ப்ப தீர்த்தங்கள். 3

கயல்விருப்பி ஞேதிமமுங் கம்புளுநே மிக்குருகும்
பயில்வனவெண் டிரையலைப்பப் பட்டுமொழி விலமன்னே
மயல்வளருஞ் சிற்றின்ப வாஞ்சையினு விடராலைத்துஞ்
செயல்வளரு மில்லறத்திற் றீராத்திண் ணியர்போல. 4

வரந்தருமெய் மொடுமெதிரா மரபுடைமா னதசரசிற்
பரம்பியநீ வீர்களெம்பாற் பயின்றிருத்த லடாதென்ன
வரம்புபுரிந் தலைப்பனபோ லலையலைக்கு மோதிமமு
நிரம்பியபே னமுமயங்கி நிற்பனநீர் நிலைதோறும். 5

மாதிரத்தெண் கடகளிறு மல்கியதீர்த் தம்படிந்து
போதலைத்துத் துளைக்கரத்துப் புனல்வாங்கித் துளித்தேகுஞ்
சீதளத்த வெக்கர்களுந் தேவருளந் திறைவாங்குங்
காதரமித் துயிர்க்கிரியக் கடைக்கணிக்கு மடக்கொடியே. 6

தேங்குநறும் புனற்றீர்த்தத் தீரமெலாம் பன்மலரி
ஞேங்கியநந் தனவனமு முந்திடமெய் கனுந்தவங்கள்
பாங்குபெற விழைக்குநரும் பரயோகம் பயிற்றுநரும்
வீங்கருளி னவர்பணிகள் விளைக்குநரு முளரென்றும். 7

இத்தகைய தீர்த்தத்துள் யாதொன்றிற் றோய்ந்தெழினு
மெத்திய பண்டைப்பவத்தின் விளைத்தபெரும் பாதகமுமீ
டைத்தடர்ந்த விப்பவத்திற் பாதகமும் பறிபோகக்
கொத்தினறு மலர்க்குழலாய் குலத்தொடும்வீட் டணைபெறுவர். 8

மண்ணை பிரமக் கொலைச்சாயை மறநூம் பிரம ராக்கதமுந்
தண்ணென் றுடற்றும் பெரும்பூதத் தொடக்குந் துட்ட தெய்வதமுங்
கண்ணின் றுறுத்து மந்திரத்திற் காது மணங்கு மிவையெல்லாம்
பண்ணின் மொழியா யொருதீர்த்தம் பாற்றும் பாற்றும் படிந்தோர்க்கே. 9

குட்டந் தொழுநோய் முயலகநோய் குன்மஞ் சூலை வாதநோய்
கட்ட முறுத்துங் காசநோய் கண்ணோய் தலைநோய் சுரம்விக்கு
ளொட்டுங் கிரந்தி நோயாதி யொழிக்குந் தீர்த்த மொவ்வொன்றே
மட்டு விரிந்த நறுந்தொடையல் வருடச் சிவக்குந் தடந்தோளாய். 10

மறையோர் கொலைமன் னவர்கொலையே வணிகர் கொலைசூத் திரர்கொலையே
நிறைநீர்க் கேளிர் தந்தைதாய் நீடுந் துணைசூற் பசுநன்றி
பறையார் வீர ரிவர்கொலையும் பாவ வினையும் பிறவினையும்
பிறைநேர் நுதலா யொருதீர்த்தம் பெயர்க்கும் பெயர்க்கும் பெயர்க்குமே. 11

ஈன்றாள் புதல்வி யுடன்பிறந்தா ளொழிவார் குரவன் மனைமெய்மை
யான்றார் மனையே னையரில்லத் தணங்கை யிழிந்த மாதர்தமை
மான்ற தரவிற் புணர்வினையும் வரையா நாளிற் புணர்வினையுஞ்
சான்றோர் வணங்கு மடக்கொடியே சாடுஞ் சாடு மொருதீர்த்தம். 17

வறுமை யகற்று மனக்கவலை மாற்றும் பகையைப் புறங்கொடுக்குஞ்
சிறுமை துறக்கும் பழிதொலைக்குஞ் சிந்தை மயக்கஞ் சிதைவிக்கு
முருகு மடத்தின் வலிமுருக்கு முதிர்ந்த காம முதலாய
மறுதி பயக்கு மாநேருக் கலம்பு மணிமே கலைக்கிளியே. 13

ஒழுக்க மறிவு தவந்தான முறவு சீல முபசாரம்
வழுக்கில் கருணை யாசாரம் வாய்மை வணக்கம் வந்தித்த
லழுக்கி லன்பு துறவடக்க மழுக்கா றுமை முதலறங்கண்
முழுக்க வருளு முழுகுநர்க்கு முழுவெண் டிங்கண் முகத்திருய். 14

நிரம்பு கல்வி பெருஞ்செல்வி நீடு மாயுள் வலியூக்கம்
பரம்பு சூழ்ச்சி கலங்காமை பனுவல் வழியே பொருளீட்டல்
வரம்பி லீகை புகழாக்கம் மலிய நுகர்த லிவையெல்லாங்
குரம்பு மலியு மொருதீர்த்தங் குடைந்தோர்க் கெய்துங் கோற்றொடியே. 15

உயிரொன் றிரண்டு வடிவெடுத்தாங் குவக்கும் பெருங்கா தலின்முழுகிக்
கயில்வண் கழற்கா லாடவருங் கமழ்பூந் தெரியன் மடவாரும்



பயிலும் படியிற் றுறக்கத்திற் படர்பே ரின்ப நலநுகர்வர்
செயிர்முற் றிரிக்கு மொருதீர்த்தஞ் சென்று படியிற் றேமொழியே. 16

அறிவு வளரும் புத்திரரு மவர்தம் வழியிற் புத்திரருஞ்
செறிவ ரெழுமுப் பவத்தோர்க்குந் தீரா நரகின் சிறைநீங்கு
நெறியி னவர்தங் குலமுலகி னீடு வாழும் பிதிர்த்தேவ
ரெறிவர் பரிவை யொருதீர்த்த மெய்தி யொருவ ராடுதினே. 17

தேசார்மணி கரைமேலெறி திரைவார்தரு தீர்த்த
மாசாரமொ டன்பான்முறை யாடுந்தவ ரல்லா
லேசார்தரு மாசுசமு மெரிவெங்கதிர் வெப்பு
மாசானது மொழியப்படி வாரும்பய னுறுவார். 18

வழுக்கிக்கரை புனல்வீழினும் வாரிப்பரு கிடினு
மொழுக்கத்தெழு திரைவீசிய வுறைமெய்த்தலை யுறினு
மழுக்கற்றிடு தீர்த்தந்தனை யநிலங்குளிர் செயினு
முழுக்கக்கரி சொழியக்கதி முற்றுங்கனி வாயாய். 19

தீர்த்தத்தெழில் விழிநோக்கினர் தீர்த்தத்திசை கேட்டோர்
தீர்த்தத்துறை நீருதிக டீர்த்தம்வளர் தாரு
தீர்த்தம்விளை நெல்லாதிக ளைதேர்குரு கினமுந்
தீர்த்துக்கரி சுயர்வாரிது தின்னைஞ்சிறு நுதலாய். 20

இவ்வாறுயர் தீர்த்தத்தரு கெய்தித்தவ மாதி
செவ்வாய்மைய புரியிற்றிகழ் தானம்பல செய்யி
னவ்வானருள் பிதிரர்க்குள மமையக்கட னாற்றிற்
றவ்வாவமிழ் தனையாய்பயன் சொல்லின்முடி யாதால். 21

இன்ன வாறி யம்பு மெம்பி ரானை யேந்து கொங்கையா
ளன்ன சோகை நண்ணி நாத வென்று போற்றி யோதுவாண
முன்ன ரெண்ணி லாத தீர்த்த மொய்த்த வற்றுண் மேலவாய்
மன்னி நின்ற சில்ல வென்று வாய்ம லர்த்தி யண்ணலே. 22

அனைய தீர்த்த நாம மாதி யோர்க ளாடு நூல்விதி
வினைக ணீங்க வாடு கால மேவு மந்தி ரம்பய
னினைவு றாத பாலர் தேவ ரீய நின்ற தானமு
நினைவி ரோடொ ழாத தேவ நீயு ரைத்தல் வேண்டுமே. 23

நின்னை யன்றி வேறு தீர்த்த நீடு மேன்மை யுள்ளவா
றன்னை யன்னை யாவர் கூறு மாற்றல் வல்ல ராதலான்
மன்ன யானி ரந்து ளேனெ னக்க சிந்து வாஞ்சையிற்
பின்ன ரும்வ ணங்கி நீளை பின்னி வாய்பு கைத்தனள். 24

முப்பு ரம்பொ டித்த மேரு மூரி வார்ச் லேக்கையான்
மைப்ப டித்த கண்ணி யுள்ள வாஞ்சை நோக்கி மாதரா
யொப்பி லாத தீர்த்த மேன்மை யொரு மூக்க மிக்குளாய்
செப்பு கேம னைத்து மென்று செய்ய வாய்ம லர்த்தினன். 25

காய்ரு பிரம தீர்த்தமிந் திடபுட் கரணியே சப்புட் கரணி
தேமலி யிராம தீர்த்தமே சிமத் தீர்த்தமே யக்கினி தீர்த்த
மாமகத் தியாகற் றீர்த்தமே சோம தீர்த்தமே யலரியின் றீர்த்தம்
வாமமே கலையாய் மேலவாந் தீர்த்த மருவிய பெயரிவை காண்டி. 26

அரியளி முரல மதுமடை யுடைக்கும் வாரிதழ்த் தாமரைப் பொருட்டு
விரியனைத் தவிசின் வீற்றிருந் துலக மேதகப் படைக்குநான் முகத்தோ
னுரிமையின் வாழு முன்னொரு கற்பத் தொருமக ளழகுறப் படைத்தா
னரிபரந் தொழுகி யகன்றெழுந் தோடி யம்பலைத் தமர்த்தவாள் விழியாய். 27

கொண்டனீர் முகந்து மேக்கெழுந் தாங்குக் குலவிய கூந்தலு மருகே
மண்டொர் சாபம் வாங்கிய தென்ன மாண்மையிற் சிறந்தவா ணுதலுங்
கண்டகா ருமிழ்ந்த மின்னென நுடங்குங் கைபிடி கவற்றுநா விடையு
மண்டநா டதிர்க்கு மதன்முழக் கனைய வாட்க நூபுரத் தொலியும். 28

சுரந்துசூழ் மேக மழைபொழிந் தனைய துலங்கிய பேரெழில் வனப்பும்
பரந்தகா ரடுப்பக் கோபமே காந்தள் பனிமுகை முல்லையுந் தோன்றி
திரந்தவா றனைய சேயித ழுங்கை நிலவொளி முறுவலுங் காட்டி
வரந்தரா நின்ற வுணங்கென வெதிரே நின்றனன் மகளொரு மாது. 29

மழைமுகி லடுப்பச் சாதகக் குருகு வாஞ்சையிற் றுளிமடுத் தாங்குத்
தழைதரு காதல் பிடர்பிடித் துந்தத் தாமரைத் தவிசேறுன் றழுவி
விழைதரு காமந் துய்த்தன னங்கே மேதகு படைப்பயர்ந் திழிந்தான்
குழைதரு கலைமூப் பிடையறு மாயுள் கொண்டன ரன்னவன் படைத்தோர். 30

ஆயந்தா தவறு நோக்கியுள் வெருவி யருந்தவத் தாலெலமை யடுத்தான்
பாயமே கலையா யாங்கவற் கிரங்கிப் பரந்தபே ருலகெலாம் போற்று
மேயசீ ரெழுத்தோ ரைந்தையுங் கிளந்து விடுத்தனம் விடைகொடு நடந்து
தாயருள் பொருட்டு ஞானக்ஷேத்திரத்தைத் துன்னினான் சதுமுகத்தோன்றல். 31

ஞான பூமியி னல்வள நோக்கிந யந்தனன்
பேன வார்திரை பின்னிய தீர்த்தமெல் லாம்பிரிந்
தான காதல கத்தெழ வொன்றனை யண்ணினு
னீன மோடவி திப்படி யாடியெ ழுந்தனன். 32

ஈறு மெய்யினி ரம்பவ ணிந்துவி ரப்பெலா
நாறு கண்மணி மாலைம ணக்கவு ணர்ந்தனிந்



தேறு மஞ்செழுத் தவ்வழி வைகின னெண்ணினன்
மாறு கொண்டெழு மைம்பொறி யின்வலி வாட்டினன். 33

ஆங்கு வைகிய சங்கர நாதவ ருட்குறி
பாங்கி னுதர வால்வழி பாடுப யிற்றினன்
வீங்கு மென்முலைப் புத்திரி தன்னைவி ழைந்தறுந்
தீங்கு தீர்ந்துசி ருட்டியு மெய்தினன் மாதராய். 34

வாரி லாவிய வத்தகு தீர்த்தமண் ணேடிவிண்
பிரம தீர்த்தமெ னப்பட நின்றது பெய்வளாய்
விரவு புத்திரி யாதியர் தம்மைவி ழைந்துறும்
பாவு பாவமெல் லாம்படிந் தார்க்குப்ப றக்குமே. 35

மருத்த கற்பக வானக, ரருத்தி யோடர சாள்பவன்
விருத்தி ரப்பெயர், மேவிய, வொருத்த னுயி ருண்டனன். 36

பிரம சாயை பிடித்தலைத், துரன ழித்தவி னெய்யெனப்
பரவு ஞானப் பதிக்கணே, விரவு மன்பொடு மேயினன். 37

தணிவி லாதநஞ் சந்நிதி, நணிய மேற்றிசை நண்ணினு
னணியி ருந்ததோ ராவியி, னணியு வந்ததி னுடினன். 38

அன்ன தீர்த்தத் தகன்கரை, மன்னி நம்வழி பாடுகெ
ணன்ன ராற்றி நயந்துத, னின்ன லோட்பி யெழுந்தனன். 39

இன்ப மாரிமை யார்பதி, முன்பு போன்முறை செய்தனன்
பொன்பி றங்கிய பூண்முலை, மின்பி றங்குவி ளங்கிழாய். 40

வர்த்த வத்தட மிந்திர, தீர்த்த மாயது சேமொழி
பார்த்த வைம்பெரும் பாவமும், பார்த்து ளார்க்கும்ப றக்குமே

தாவிலருந் தவத்துயர்ந்த சம்புமுனி யென்றொருவன்
பாவுறநஞ் சந்நிதிக்குப் பாவகன்மா திரத்தெழிலார்
பூவலர்ந்த வொருதீர்த்தம் புகுந்தாடிக் கடனியற்றி
மேவனைய விழிமடவா யெழுத்தைந்து மினிதெண்ணி. 42

சங்கரநா தப்பெயரிற் றழைக்குமெம தருட்குறியிற்
பொங்கியசா தலிற்பூசை புரிந்துலகெ லாம்விரவித்
தங்குமெம தியற்கையினைத் தலைப்பட்டா னுதலினை
யக்தற்குப் பெயர்சம்பு தீர்த்தமென்று யதுமாதே. 43

தந்துதிரை மணிதெறிப்பத் தடங்கரையிற் குருகிரியு
மத்தகுதீர்த் தம்படிந்தோர்க் கடர்பெரும்பா தகந்துமியப்

புத்தியொடு முத்தியிலை புணர்கிற்கும் புனைவேய்த்தோட்
கத்திரிகைப் பெருஞ்செவிப்பூங் கத்திகைமென் குழற்கொடியே. 44

இராவணனை யுயிர்மாட்டி யெழிற்சீதை யொடுமீண்ட
வராவணையிற் கிடந்தவனே யருட்பெருஞ்சந் நிதிமேல்பால்
விராவுமலர்த் தடமொன்றின் விழைந்தாடி யதன்கரைமே
னிராமயமா லிலவிண்டு நாதர்தமை நிறுவித்தான். 45

எழில்வளரு மத்தீர்த்த மிராமதீர்த் தப்பெயர்பூண்
டொழிவில்கொலைப் பாதகங்க ளொழிவிக்கு மற்றதனிற்
கழிமகிழ்வின் வீடணனுங் கரிசிரியத் தோய்ந்தெமது
செழிமலர்த்தாள் பூசித்துச் சென்றிலங்கை யரசாண்டான். 46

அற்றாற்றும் விழிப்புனன்மெய் யடியர்தொழுங் கோயிலினுண்
முற்றாற்றி னினிதாகி முதிர்சுவைத்தாய் நமக்கருகே
சிற்றாற்றி னொருதீர்த்தந் திகழ்ந்துளது திசைவிளங்க
வெற்றாற்று மணிவடங்க ளிலகியபூ ணிளமுலையாய். 47

நீங்கரிதா மத்தீர்த்த நின்றனையே யினியுலகிற்
றேங்குபுகழ் திசைவிளங்கச் சீமத்தீர்த் தப்பெயரி
னோங்குமத னீராடு முறுதவர்க்குக் கனங்குழையாய்
வீங்குபய னினைத்தென்ன விதிப்பரிதாம் விண்ணவர்க்கும். 48

தேவர்க டமக்கெல்லாந் திருமுக மெனநின்ற
பாவகன் முன்னொருநாட் பணிப்புனற் கிறைவன்ற
னாவியி னனையாண்மெய் யழகணங் குறத்தப்பட்
டோவிய நிறையினனு யுறுகல னுகர்வுற்றான். 49

பிறன்மனை விழைவுற்ற பெருகிய பாவத்தால்
விறன்மலி தருசொன்ன வீரிய மதுவீழ்ந்திட்
டிறுவலி தேசோடு மொழிதலி னதுநோக்கி
வெறுவிய வுளத்தோடும் விரைந்தன னங்கெய்தி. 50

திகழுநஞ் சந்நிதிக்குத் தென்கிழக் கெல்லையிடைப்
புகழ்மலி யொருதீர்த்தம் பொற்பொடு மெதிர்நோக்கி
யகமலி யுவகையனு யடுத்ததிற் படிவுற்று
முகையவிழ் மலர்கொண்டு முறையுளிப் பூசித்தான். 51

அன்னவன் வழிபாட்டுக் ககத்திடை யருள்கூர்ந்து
மின்னிடை நாமூர்த்த வீரியம் வலிதேசு
நன்னலம் வரம்யாவு நல்கின மவைபெற்று
முன்னிின் னமரர்க்கு முன்புபோ லவியுய்த்தான். 52



மிக்கொளி திகழங்கி விண்ணவன் வரம்பெறலா
லக்கினி தீர்த்தமென வாகிய தத்தீர்த்தந்
தக்கதொர் விதியாற்றிற் சார்ந்தது னுநேர்க்குத்
தொக்கதொர் பிறனில்லந் தோய்வினை முழுதோடும். 53

ஆக்கையின் வலியில்லார்க் காக்கையின் வலியெய்துந்
தேக்கிய தேசில்லார் தேசுமிக் குளராவர்
பாக்கிய மில்லார்கள் பாக்கியத் துயர்வார்கள்
வீக்கிய வத்தீர்த்தம் விதியுளித் தோய்தரினே. 54

இமைய மால்வரை யேந்த லெமக்குனை
யமைவில் காதலி னங்கிமு னீத்துழி
யுமைந லாயிமை யாரொடங் கெய்தலிற்
சமனி லாதவ டாதுமண் டாழ்ந்ததே. 55

ஆய காலை யகத்தியன் றன்னைநாங்
கூவி யிந்தக் குவலய நேர்பெறத்
தூய மாமல யத்தினைத் துன்னுகென்
றேவி னமது கேட்டவ னேந்திழாய். 56

நினக்கு நேரில நின்னொடு நேர்பெற
லெனக்கெவ் வாறியை யும்மென வேண்டினன்
றனக்கு ஞான தலத்திடைப் பூசைசெய்
தெனக்கு நேர்பெறு கென்றனந் தையலாய். 57

நன்று நன்றென நற்றவன் றாழ்ந்தெழுந்
தன்று சென்றனன் ஞான தலத்துநம்
மொன்று சந்நிதிக் குத்தர திக்கிடை
மன்றன் மல்குமொர் வாவிகண் டண்மினான். 58

நறும லர்ப்புன னன்று படிந்தெழுந், துறுதி யாலெம தொள்ளிய பூசனை
நிறுவி யெம்மை நிகத்து வரங்கொடு, குறுகி னன்மல யங்குறு மாதவன். 59

அறையு மத்தகு தீர்த்தத்தி னாடினோர், பறைய வல்வினை பற்பல மேன்மையு
நிறைவர் கல்வியு நீடிய வாயுளுங், குறைவி லாதகு ணங்களு மெய்துவார். 60

அந்த வாவிக் கெதிரே யணிமையி, னிந்தி ராதிய ரேத்தநின் சந்நிதிச்
சுந்த ரத்தின் விளங்குமச் சூட்சியைப், பிந்து காணுதி பெய்வளைத் தோளினாய்.

தக்க னூர்பெறுந் தையன் மார்களுட், டொக்க நாளெனுந் தோகை மார்களை
மிக்க காதலின் வேட்ட சோமன்மற், றொக்க நோக்கிலா னுரோணி சார்பினான்.

தவற தாகலாற் சாப மெய்தினு, னிவறு தண்கலை யிறப்ப நோக்கினன்
கவலை பூண்டொளான் கடுக வவ்வயி, னுவகை யெய்துவா னோடி நண்ணினன். 63

பரவி விண்ணவர் பணியு நம்முடை, விரவு சந்நிதி மேற்றி சைக்கணே
யரவ வல்குலா யற்பு தத்தகாய்ப், புரவு செய்வதோர் பொய்கை யண்ணினன். 64

தீர்த்த மாடினன் தீர்த்தக் கோட்டிடை, யார்த்த வங்கியி னரித நோற்றனன்
பார்த்த நாமவன் பரிவு தீர்தர, வீர்த்து ளாங்கதிந் சாபத் தின்னலே. 65

அன்று தொட்டவ னமர ராதியோர்க், கொன்று யோகைமிக் குறுத்தித் தானலர்
துன்று கின்றனன் சோம தீர்த்தமென், றென்று மத்தட மிலகி நின்றதே. 66

நீடு மத்தட நிறைந்த வன்பினு, லாடி னுர்கய ரோக மாதிகள்
வீட மண்ணிடை மிக்க செல்வராய்க், கூடி விண்ணினுங் குலவி வாழ்வரே. 67

மாயவ னெமதருள் வாய்ப்ப மேலினி, நாயகி தன்னொடு டகஞ்செய் விப்பனு
லாயவக் காரணத் தாலச் சூழுருள், சேயிழாய் சிரங்க மெனச்சி றக்குமே. 68

பாயிருள் பருகுபு பகலைக் கான்றெழூஉங்
காயெரிக் கதிரவன் காம ரத்தல
மேயின னெமதுசந் நிதியின் மேற்றிசைத்
தூயதோர் தீர்த்தத்தைத் துன்னிற் தோய்ந்தனன். 69

மலர்பல கொண்டெமை வழிபட் டேத்தினு
னுலகெலாம் விளக்குறு மொளிபெற் றேங்கினன்
கலதியில் கருமக்குக் கரியு மாயினு
னிலவெனச் சிவந்தொளி ரிதழ்ச்செவ் வாயினுய். 70

சீரிய வப்பெருந் தீர்த்த மண்ணிடைச்
சூரிய தீர்த்தமாய்த் துலங்கி நின்றதவ்
வேரிய மலர்த்தடம் விழைந்து தோய்ந்தவர்
காரிய மனைத்தையுங் கைக்கொள் வாரரோ. 71

நவமணி தீர்த்தமு நாடி யாடினோர்
தவமறு பயனிவை சாற்றி னுரினிக்
குவவினை பூண்முலைக் கோற்றொ டிச்சையா
யிவருற வேனவு மியம்பு வாமரோ. 72

64

உ

# ஸ்நானவிதிப்படலம்.

தளவ வாணகைத் தையல்கேள் சாடுநோ யாதி
யளவி லாதபல் லரிட்டங்க ளனுங்கவு மாதர்
வளமை யாதிவீ டிறுதிய வரங்கண்மல் குறவு
மூளம ரீஇயின ராடுக தீர்த்தமொன் பதமே. 1

மூந்து மந்தண ராதியர் மூவர்க்குங் கதியி
னுந்து மந்திரத் தாடுத லுறுவது பின்றேர்
கந்த மென்குழற் காரிகை யாரிவர்க் குலகந்
தந்த சுந்தரி தந்திர மாத்திரை யேயாம். 2

தகர வார்குழற் கனக்குழைத் தரளவா ணகையாய்
மகர மாமதிப் பூரணை வைகறை யெழுந்து
புகரி லாதநாட் கடனெலாம் பொலிவுற முடித்து
நிகரி லாதநஞ் சந்நிதி நேர்பெற வடுத்து. 3

முன்னர் மண்டப மத்தியின் முப்பது கோட்ட
மன்னு வித்தவற் றென்பது மண்ணுமேழ் தளிரு
நன்ன ரைந்துகவ் வியங்களு நவதிர வியமுஞ்
சொன்ன முப்பது மொரோவொன்று துன்னிட வைத்தல். 4

அரசு கூவிளந் துழாய்புளி யால்சம்பு மூலம்
புரசை மால்கரிக் கூடமும் புரவிமந் திரமுங்
கரிசி லாணிரைத் தொழுவமுங் கல்விநூல் விதியின்
வரிசை யாலெடுத் திடப்படு மண்களொன் பதுமே. 5

தளிர்து ழாய்புளி சம்புகூ விளம்வட மரசு
விளரி லாவறு கென்பன விளம்புகவ் வியங்க
ளளவில் சீர்தரு மங்கலா யதிகபா றயிர்நெய்
வளமி லாவிய கோசல மயமிவை யாகும். 6

சிறுகு காருடற் றிலநெய்கோ தூமந்தீங் கட்டி
மறுவி லாச்சிவ லிங்கநெல் வத்திரஞ் செம்பொன்
முறுகு பேரொளி யரதன மெனமொழிந் தவைதா
முறுதி யாளர்க டானமென் றதவுமொண் பொருள்கள். 7

சோட்டம் வைத்திடு முப்பது பொருளையுங் கொலேவே
லோட்டு நீமக்களுய் சந்தன மலர்புகை யொளியா
ளூட்டு மஞ்செழுத் துரைத்தநற் பூசனை நவிற்றி
வாட்ட மின்றிவெவ் வேறபி மந்திரித் ததன்பின்.

ஒற்றை வெண்மருப் பிருசெவி மூன்றுக ளூல்வாய்க்
கொற்ற வைங்கர மாறுகொண் டெழுகுல மதமும்
பெற்ற பிள்ளையை யெட்டுமென் பாற்பெரி திறைஞ்சி
யற்ற மின்றியிக் காரிய மாக்கெனப் பராவி.

விழைந்த வன்பினூற் சங்கற்பம் விதியுளிச் செய்து
குழைந்த நெஞ்சொடுக் கொடுப்பவ னேற்பவன் கொடுக்குந்
தழைந்த வொன்பது பொருள்களுந் தக்கநற் பயனு
நுழைந்து நின்றருள் சிவமலர் விலேயென நுதலி.

சோர்வி லொன்பது பொருளையுந் தூய்மைய வாக்கி
யார்வ மல்குநீ ராடிறும் விதிநிறை வாகத்
தீர்வி லாப்பெருங் கருணையாள் முடிப்பவன் சிலம்பை
வார்வி லாக்கிய வள்ளலே யெனப்பராய் வணங்கி.

மண்டு முப்பது பொருளும்வெவ் வேறதம் மலர்க்கைக்
கொண்டு சென்றரா வணையினூன் கொழுத்தவெந் நெலும்பின்
றண்ட மங்கையிற் கொண்டரு டலேவன்வார் சரணம்
வண்டு துன்றிய மலர்கடுய் வந்தனை புரிந்து.

பாழி வையகத் துயிர்க்கெலாம் பயமுள மலேப்பக்
கேழி லையமேற் றுழிதருங் கெழுதகை யினரே
யூழி யங்கியி னிறங்கிள ருருவுடை யவரே
வாழி நல்லருள் வயிரவ ரேயுமைப் பணிந்தேன்.

அடிய னேன்சிவ தீர்த்தங்க ளாடுவான் புகுந்தேன்
படியி லாப்பெருங் கருணையா ளருள்பணித் திடுகென்
றொடிவி லாவிடை பெற்றவன் சந்நிதி யொழிந்து
முடிவி லாற்றலங் கியின்றிசை முந்துறக் குறுகி.

பிரம தீர்த்தத்தின் கரைவளர் பிரசமா மரத்தை
விரவு காதலின் வணங்கிமென் கரத்தினுற் றொட்டுப்
பரவு தீநெறி பாறமுன் னருந்தவம் பயின்ற
பிரம ஞகிய விருடியைப் பேணியுண் ணினைந்து.

நங்கை சங்கர நாததே வரைநம வந்தந்
தங்க வங்கையின் மாலேயிற் றழைதர வெண்ணி



யங்க ணுள்ளவ ரஞ்செவி யினும்புக வந்தப்
பொங்கு நல்லருண் மந்திரம் பொருக்கெனக் கிளந்து. 16

பெருகு மத்தடங் காத்திடும் பெருங்கண நாதன்
பொருவில் சீர்த்திய ஞகிய புட்பதந் தனையுள்
ளுருகு மன்பினுல் வணங்கியொண் புனலரை யளாயு
மருவ வுள்ளுற விறங்கிமண் ணினையெதிர் நோக்கி. 17

பாவ நோய்முத லரிட்டமெல் லாநனி பாற
மேவ நன்றியை விளக்கென வியந்துப சரித்துத்
தாவி லாதவம் மண்ணினைத் தனுவினிற் றிமிர்ந்து
காவி நேர்விழி யாய்புனல் படிந்தது கழுவி. 18

கூறு மானுடை யைந்தையுங் கோசல முதலா
வேறு வேறுற வாடிவீங் கிருப்புன லாடி
மாறி லாதவேழ் சளிரினும் வார்புன லேய்த்திட்
டேறு மாமனு மூலத்திற் புரோக்கண மியற்றி. 19

வார்ந்த தண்கரை யிவர்ந்துநீர் வடிவினிற் புலர்த்தித்
தேர்ந்து தேவர்க ளிருடியர் தென்புலத் தவர்க்கு
நேர்ந்த நீர்க்கடன் விதியுளி நெடுங்கரத் தியற்றிச்
சார்ந்த தென்புலத் தவர்க்குளந் தழைதரும் பொருட்டு. 20

எண்ணில் பாவமு மிறக்குமிவ் வெள்ளிருங் கொடையா
லண்ண லாகிய சிவன்மகிழ் வடைந்துபே ராயுண்
மண்ணி லேயெனக் களித்திடக் கடவதூ வென்று
திண்ண மாகிய பத்தியாற் றிலங்கொடை வழங்கல். 21

அதிவ ளம்பெற வின்னண மாடுறும் விதியே
மதிவ ளந்தரு மேனிவண் மூர்த்தமா டுதற்கும்
விதியெ னப்படு மாமுனி காவலர் விண்ணோர்
கதிசெய் தான மந் திரங்கள்வெவ் வேறவை கவைவாம். 22

இந்திர தீர்த்தப் பாங்க ரொழுங்கொளிர் மரங்கெங் காகு
மிந்திர னிருடி முக்க ணிறைசிவன் றேவன் காவ
றந்திடும் பாலன் கும்போ தரன்சதுர் வேதம் வல்ல
வந்தணர்க் காவி னெய்யை யளிக்கதக் கனையி ரேடும். 23

கைம்மலே யுரித்த மேருக் கார்முகக் கடகச் செங்கைச்
செம்மல்வீ ரியமா யந்தச் சிவனுக்கு மகிழ்ச்சி செய்யு
மிம்மண நெய்த்தா னத்தா லின்புறக் கடவ தொரு
மைம்முகப் பெருமா னென்ன வறைதன்மந் திரமா கும்மே. 24

சம்புதீர்த் தத்தின் பாங்கர்ச் சம்புயர் மரமல திட்டன
வம்பறு மிருடி தேவஞ் மயேச்சுரன் றீர்த்தப் பாலர்
நம்புறு சுனந்தர் தான் நலத்தகு பொருள்கோ தாம்ப
பம்புவே தாந்தி யேற்றும் பாத்திர மாவன் மாதே. 25

இனியதாய்த் தேவர்க் கெல்லா மின்புறு முணவ தாகி
நனிவளர் பாவ முற்று நலியுமிக் கோதா மத்தான்
முனிதரு மலங்கண் மூன்று முருக்குஞ் தேச ஞன
புனிதனுண் மகிழ்க வென்று புகறன்மந் திரம தாகும். 26

இராமதீர்த் தத்தின் பாங்க ரிருப்பைநன் மரமி ராமன்
பராவுறு மிருடி நீல வரீச்சுரன் பகருந் தேவன்
விராவுறு தீர்த்தப் பாலன் வீரபத் திரன்றீங் கட்டி
யுராவிய பிரம வித்தா யுயர்மறை யவனுக் கீதல்.

27

சுவையதாய் விமலன் பத்திச் சுவைமிக்க் கொடுப்ப தாமிந்
நவையறு கரும்பின் கட்டி நல்குறுஞ் சானத் தாலே
தவ்வறுத் தின்ப நல்குஞ் சங்கர னெக்கா லத்து
முவகைய னுக வென்ன வுரைத்தன்மந் திரம தாகும். 28

சீமதீர்த் தத்தின் பாங்கர்ச் செழுமர நாவல் சார்கிய
நாமத்தா னிருடி தேவ னவிலமு தேசன் பாலன்
சேருமிற்றீர் சுதந்தன் மேன்மை தொகுஞ்சிவ லிங்கந் தன்னைக்
காமுற்று தரவு நம்பாற் கலந்தவர்க் களித்த றனம். 29

நின்மலன் சால வைகு நிலையமா யுலக மெல்லாந்
தன்மய மாக நிற்குந் தக்கவிச் சிவலிங் கத்தா
லன்மலி கண்ட ஞேகை யகத்தின ஞகி முத்தி
நன்மையை யளிக்க வென்ன நவிற்றன்மந் திரமா கும்மே. 30

அக்கினி தீர்த்தப் பாங்கர் மரம்புளி யிருடி யங்கி
நற்கிரு சானு ரேத செனுஞ்சிவ னவிற்றுந் தேவன்
றக்கசீர்க் கருபன் பாலன் சாலியை வறிய ஞன
பொக்கமில் சுற்றஞ் சூழ்ந்த பூசுரற் களித்த றனம். 31

வையக மாந்தர்க் கெல்லாம் வளர்பசி தாகம் போக்கி
மெய்யுறு மாற்ற லாதி விளைத்துவிண் ணவர்கட் கெல்லாம்
பொய்யறு முணவா யின்பம் பொருந்துமிந் நெற்று னத்தா
லையமு தேச ஞேகை யடைகவென் பதும வுத்தான். 32

அகத்திய தீர்த்தப் பாங்க ரணிமிழல் வருக்கைத் தாரு
வகத்திய னிருடி தெய்வ மகிலாண்ட வல்லி யென்னச்



சகத்தவர் பழிச்சு நீயே சுருததி தக்க பாலன்
மிகக்கலை வல்லா னேற்பா வெண்கலை வீச றனம் 33

தேவர்கள் விழைவ தாகிச் சீதம்வெப் பிரண்டு நீக்கி
மேவுமிக் கலைத்தா னத்தால் விண்ணமர் தேவ ரெல்லா
மோவிலின் புறுக வென்ன வுரைத்தன்மந் திரமாம் பூத்த
காவிகள் செவியி னெட்டிக் கவின்கவர் கருங்கட் பாவாய். 34

சந்திர தீர்த்தப் பாங்கர்த் தழைத்தெழு மரம்புன் னைகுஞ்
சந்திர னிருடி தேவன் றனுமன் னவனே பாலர்
முந்துபுட் கரனே புட்க ராக்கனே குமுதன் மூவ
ரந்தமில் வேள்வி செய்வார்க் காடக மளித்த றனம். 35

அங்கிசம் பந்த மாகி யானந்த முலகுக் கெல்லாந்
தங்குவ தாகு மிந்தத் தமனியத் தானத் தாலே
யங்கியை நுதற்க ணுக்கு மருள்வளர் சிவன்மா ராய
மிங்கண்மிக் குறுக வென்று வியம்பன்மந் திரமா கும்மே. 36

பரிதியின் றீர்த்தப் பாங்கர்ப் பசுமரம் வில்லந் தாய
பிருகுநல் லிருடி தெய்வம் பெருகொளி யென்றாழ் பால
னுருகெழு சுவான ஆர்தி யுயர்சிவ பத்தி வல்லான்
மருவுற வாச னத்தை வழங்குத றன மாகும். 37

வரமலி தேவர் தேசின் வந்தொளி கஞற்று மிந்த
வரதனத் தானந் தன்னு லமர்பிர பாக ரப்பேர்
விரவிய கதிரோ னின்ப மேவுக வென்று செப்பல்
பரவுமந் திரமாம் பண்ணைப் பழித்ததீங் குதலைச் சொல்லாய். 38

தருமுதற் பேத மெல்லாந் தனித்தனி வகுத்துச் சொற்று
முருவளர் பசுங்கொம் பன்னு யொன்பது தீர்த்த மாட்டு
மருவிய விதியி னுடு மாந்தர்க ளமது கோயிற்
றிருமுன ரடைந்துத் தாழ்ந்து சிந்தையை யொருக்கி நின்று. 39

மந்திர மாதி தம்மால் வருபிழை பொறுத்திட் டெங்கு
முந்திய நவதீர்த் தத்து முழுகிய பேறெம் பாங்கர்
மைந்துற நிரப்பு கென்ன வாஞ்சையி னிரந்து நம்மைப்
பிந்துற முக்காற் சூழ்ந்து பெருநிலத் தைங்காற் றழ்ந்து. 40

ஒருசிறை யிருந்து மூல முயர்கிரி யம்ப கத்தை
யிருபதைந் தடுக்கி யெட்டுத் தலைப்பெய்யெண் ணளவை யெண்ணிப்
பொருவில்பூங் கொடிநின் கோயில் புகுந்தநின் சரணம் போற்றிக்
கருதுபு நாற்காற் சூழ்ந்து காதலி னைங்காற் றழ்ந்து. 41

ஆங்குமந் திரங்கள் வேட்ட வளவுநன் கியம்பல் வேண்டும்
பூங்குழன் மடந்தா யாங்குப் பொங்கிய தீர்த்த மாடும்
வீங்கிய விதிகள் தோற்ரு மென்றனன் விமலன் கேட்ட
மாங்குயிற் பழித்த தீஞ்சொன் மானினி யிதனைச் சொல்வாள். 42

கங்கு ணிகர்த்த கறைமிடற்ருய் கற்றைச் சடையாய் கயிலாயா
பங்க முறுத்து மரிட்டமெலாம் பாற்றி யிட்ட மனைத்தினையுந்
தங்க வருளு நவதீர்த்தந் தக்க ஞான தலத்திருப்பிற்
றங்க நிரயம் பலகோடி யுயிர்க ளெனையுந் தரிசென்னே. 43

புழுக்க ணெளியக் கறைசோரப் புண்ணைந் திருக வுறுசீயு
மொழுக்க வுடலு நோயாதி யுலப்பி ஞேயாற் கொளப்படலெ
ணிழுக்கம் பயின்ற வுளத்தினரா யிரந்து மையங் கிடையாமை
முழுக்கத் துயரப் பெருங்கடலின் முழுகித் திளைக்கு மிதுவென்னே. 44

மைந்த ரிழந்து மனையிழந்தும் வளமை யிழந்தும் பொருளிழந்து
மூந்து மொளிகண் செவியிழந்து முரைநா விழந்து மெழிலிழந்துஞ்
சிந்தை தெருட்டுங் கலையிழந்துந் திண்மை யிழந்து மிவ்வாறே
யந்தி லுயிர்கள் பலகோடி யரிட்டத் தழுந்து மிதுவென்னே. 45

வெண்ணெ யிருப்ப நெய்க்குழலும் வீணர் போல ஞானதலத்
தெண்ணில் பெருமை தருதீர்த்த மிருப்ப வவற்றின் முழுகாதே
நண்ணற் கரிய கொடுங்கான நண்ணி யனைவா றுகள்விடுத்துப்
பண்ணற் கரிய பெருந்தவங்கள் பல்லோர் பயிற்று மிதுவென்னே. 46

என்று பணிமால் வரையுயிர்த்த விறைவி வினவ வளர்மேருக்
குன்ற நெடுவார் சிலைக்கரத்தார் குளிர்நோக் குதவி யருள்செய்வார்
வென்ற பொறியி னைந்திசவு தமன்மெய் வாய்ந்த தவசியிவ
ரன்று சபித்தார் குழைகிழிக்கு மயில்வேல் விழியா யதனாலே. 47

மறையி னொழுக்கந் தவந்தானம் வாய்மை பொறையா தியதருமத்
துறைநெஞ் சிலரியா வருமவருட் சிலரே யொழுக்க முதலறத்தை
நிறைமுற் பவத்தின் பெருந்தவத்தா னிசழ்த்த லுறுகின் றோர்திண்ணம்
பிறையொண் ணுதலா யிவரல்லாற் பேணூர் ஞான தலதீர்த்தம். 48

முன்னைத்தவத்தான் ஞானதல முறையின் வதியு நலத்தினரு
நன்னர்த் திருத்த மாடிநரு நம்மை யாங்கு வணங்குநரும்
பின்னர்ப் பவத்தி னுமுறாமை யுமுர்பெண் ணரசே யுரைத்தபயன்
மன்னிப் பிரியா தெமதடிக்கீழ் வாழ்வா ரிதுசத் தியமாமால். 49

எழுந்து பரந்து தண்ணெனவெச் செனமிக் கோங்கி யிறுமாந்து
செழுந்தண் டரள வடமணிந்த திதலை முலையா யினித்தலமு
மெழுந்து படுந்தீர்த் தமுமுயர வமரு மூர்த்தி மேன்மையினை
விழுந்து வினைக ளோட்டெடுப்ப விளங்க வெடுத்து விளம்புவாம். 50

---

67

உ

# மூர்த்திவிசேஷப்படலம்.

மாயி ரும்புவி மாந்தருக் கமரர் வான வர்க்கய னவற்கரி யரிக்குச்
சேயி லைப்படை வேலவ னவற்குத் திகழு மைங்கர னுயர்ந்தன ரவர்க்கு
நீயு யர்ந்தெனை வீங்கிவர் பூசை நிகழ்த்தி லிங்கங்க ளொன்றினு யர்ந்த
வாய வெவ்வகை யிலிங்கத்து மேலா மணங்கு நீபணிந் திடப்படு மிலிங்கம். 1

வல்லிவென் றொளிரு மணிமுலைக் கொடியே வையகத் திடரொலாந் துமிய
நல்லற மாகி கருதிநீ பூசை நடவிய வெமதருட் குறிகள்
பல்லவற் றுள்ளு மெவற்றினு மேலாய்ப் பாசுக வீட்டினை யருளுஞ்
சொல்லரு ஞானம் பெற்றிட நின்றாற் றொழப்படு மிலிங்கமே லாகும். 2

உத்தம குணத்தோ ரெண்ணிலர் தவங்க ளுஞற்றிமெய்ஞ் ஞானமுற் றுயர்ந்த
முத்தியை யடைந்த ஞானகேத் திரத்தின் முருகுயிர் பூங்குழ லாய்நின்
கைத்தல மலரார் நீம்புன றிரட்டிக் கவின்றரு மிலிங்கமா வலின்கீ
ழெத்தகு வாழும் வழங்குவ தாக வின்னினி யேவிளங் குறுமால். 3

ஞானமிக் களிக்குந் தீர்த்தங்க ளுடைத்து ஞானமிக் களிக்குங்கேத் திரத்தின்
ஞானமிக் களிக்கு மிலிங்கமும் பலவே நவிற்றிய வவற்றுளு மேலாம்
வானமிக் களிக்கு நின்கர மலரான் மறுவற வகுத்திடப் பட்டு
வானமிக் களிக்கு மிலிங்கமென் றுரைக்கும் வார்த்தையி னயிர்ப்பது முளதோ. 4

உலக மாட்டுவை கியவெம துள்ள வுவகை தன்னினு மொண்டொடி நின்பாற்
குலவு மோகைமிக் காயினற் போலக் குவல யப்பெரும் பரப்பினுங் காங்கு
நிலவி வாழ்சிவ லிங்கத்தின் மாட்டு நின்று நாம்வழங் குறுமரு டனினு
மிலகு ஞானகேத் திரத்தாநீ வணங்கு மிலிங்க நின்றுநாம் வழங்கருள் பெரிதாம். 5

குறங்கின் மீமிசை யிருத்தியு மெமது கோல மேனியி னொற்றுமைக் கொண்டு
னறங்கு லாவிய வாட்கணு மென்று மருவி நின்னையாம் பிரிவுறு ததுபோ
லறங்கு லாவிய ஞானகேத் திரத்தி லன்பி னீவழி படுமிலிங் கத்து
மிறங்கி யாணவ முயிர்க்கெலா மடிய வென்று நாம்பிரி யாதுவீற் றிருப்பாம். 6

அமுத மென்றதண் புனலினுற் றிரட்டி யமைக்கு மச்சிவ லிங்கமவ் வியல்பா
னமுத லிங்கமென் றுரைத்திடப் படுமங் கடுத்தி றைஞ்சினோர் நித்திய மெய்தி
யமுத மாதலி னுனுமும் மலத்தி னழிந்து தோன்றயி ராருளிடத் தனவா
யமுத மென்மொழி யெமையறி யறிவுங் கழிவ தின்மையி னுமப் பெயராம். 7

அனைய வாகிய மந்தண மான வரும்பெ ரும்பொருட் பெயரினை யொருகா
லினைய நாவினு லுரைக்கமுற் றுத நீடு போகமெவ் வுலகினு மில்லை
யினைய வாகிய வரிட்டங்க டம்மு ளிராதி முற்றுரு திருப்பதொன் றில்லை
வினையெ லாந்தப முத்தியீ ரிரண்டுண் மேவு றுதனு மில்லைமின் கொடியே. 8

அண்டர் கற்பகத் தலர்சொரிந் தேத்து மமுத லிங்கத்தை யன்பினு லொருகாற்
கண்ட கண்மலர் வறுமையுற் றிரங்கிக் கனகம் வேட்டொரு வரையுங்கா ணுது
மிண்டு துன்பற மமுதலிங் கத்தின் மேத கும்பெயர் கேட்டவர் செவிகள்
கொண்ட நல்குர வினர்க்குமுன் னறிந்து கொடுப்ப தல்லது குறைசொலக் கேளா.

சோதி மல்கிய வமுதலிங் கத்தைச் சூழ்ந்து ளாரடி யிம்மையி னென்றிற்
காதல் வைத்துமற் றொருவர்தம் மாட்டெக் கதவச் செல்லுறு மறுமைவந் தடைப்பி
னேத முற்றற மண்மிசை மீட்டு மிடப்ப டாவெதிர் கூம்பிய கரங்க
ளூத கல்லென வொருவரை யிரவா நடுக்கு மின்னென நுடங்குநுண் ணிடையாய்.

தீய வினைக ளனைத்தினையுஞ் செய்தா ரேனு ஞானதல
மேய வமுத லிங்கத்தை விழைந்து பணியப் பெறுகிற்பி
னூய வினைக ளவையெல்லா மழல்வாய்ப் பட்ட தூய்யேபோன்
மாயும் வளரெண் ணுண்மதியின் வாங்கி வயங்குஞ் சிறுநுதலே. 11

வெறுக்கை கல்வி தவந்தானம் வெவ்வே றுன வறத்தானு
மொறுக்க முடியா வாணவமு முயிரை மயக்கு மாயைகளு
மிறுக்குங் கரும மோரிரண்டு மெல்லாம் பரிதி முன்னிருள்போ
லறுக்கு மணிசேர் ஞானதலத் தமுத லிங்க தரிசனமே. 12

அனகர் வதியு ஞானதலத் தமுத லிங்க மெனும்பெயராற்
சனன மரணப் பெருநோயைத் தவிர்த்து வளரு மொருமருந்தை
மனமெய் மொழிமூன் றினும்பணிவார் மாட்டுச் சிறிய நோயான
கனக முதலாம் பொருட்சார்பாற் கதுவுங் கலக்க முளதாமோ. 13

உறுநாள் கோளே யிராசியே யுதிக்குங் காலை மாறுகித்
தெறுநீ ரனவா யிருந்திடினுஞ் சிந்தைக் கினிய வமுதலிங்கம்
பெறுநீர் மையினுல் வழிபாடு பேணு வார்க்கு மற்றவற்று
விறுநு லிடையாய் தீயபய னெய்தி யடர்க்கு மாறின்றே. 14

ஊழி யிதுவோ வென்மேக முதக மிகுந்து பொழிந்திடினு
மூழி யிதுவோ வெனவெப்ப முடற்ற மழைகண் மாறிடினு
மூழி யிதுவோ வெனவிகல்வேந் துலைக்குங் கால மடுத்திடினு
மூழி தெவண்கொல் செய்யுமென வுவப்ப ரதன்சீ ருணர்ப்போரே. 15

வரையால் வேலை கடைந்தெடுத்த மருந்த நுகர்ந்தோர் சுராரக
தரையோ ராக நித்தியர்கைச் சார்வார் விதியி னீராடி



னுரையா சூசம் வறிதுடையோ ருகப்ப வுடையோ ரிருவோரும்
புரைதீர் புனித மொப்பரிசைப் பொருந்து வார்க ளதுபோல. 16

குலமிக் குயர்ந்தோ ராயிடினுங் குலமிக் கிழிந்தோ ராயிடினு
மலமிக் குயர்ந்தோ ராயிடினு மலமிக் கிழிந்தோ ராயிடினு
நலமிக் குயர்ந்த வமுதலிங்க நண்ணித் தொழினவ் விருவோரும்
பலமிக் குயர்ந்த வொருவீட்டி னெய்தப் படரும் பரிசினரே. 17

பித்து மிகுந்த வுளத்தொருவர் பெருகு விடத்தைப் பருகுங்கான்
மெத்து சுவையின் வானமுதம் விரவப் பெறின்மற் றவர்தமக்குன்
மத்த முட்டனே விடவேகம் வல்லை யொழிய மணித்தரளப்
பத்தி நிகர்த்த முறுவலாய் பாழி யடுக்கு மதுபோல. 18

நடனம் புரியுங் கணிகையரை நாடிப் புகுந்தா ரயிடினு
மடமை யகற்று மமுதலிங்க மணியை யடியார் மனவிளக்கைப்
படர்வில் விமைக்கு மணித்தொடலை பயில்பூண் முலையாய் தொழினவர்க்குத்
தொடர்தொல் வினையு மிப்பவத்திற் சூழும் வினையுந் தொலையுமே. 19

பண்ணவர் சூழ மமுதலிங் கத்தைப் பணிவோமென்
றண்மைய ரேனுஞ் சேய்மைய ரேனு மகனுடிற்
றிண்ணிய பாவந் தீட்டுக ணக்கைச் சிதைவிப்பான்
றுண்ணென வஞ்சிச் சித்திர குத்தன் றுரிசில்லாய். 20

ஞான தலத்தி னமுதலிங் கத்தை நனிகாண
வான மனத்தோ டேழடி மண்ணிட் டனராயிற்
போன பவத்து ளேழனு லீட்டும் புரையெல்லா
நான மளைந்த வார்குழ லங்காய் நலிவெய்தும். 21

அங்குலி லங்கு மமுதலிங் கத்தின் முடிமேலோர்
சங்கமர் தீர்த்த மாட்டின ரிக்குத் தயிர்பானெய்
கொங்கமர் தேன்பால் கோடிமி டாவே லையமூர்த்திக்
குங்கினி தாட்டு மொண்பய னுற்ற வுறுமாதே. 22

சம்புவின் மூலம் வைகுமி லிங்கந் தனிலங்கைப்
பைம்புன லாட்டும் பண்பின ரன்ன பயனுற்றுல்
வம்புறு பாலா திகண்மிக வாட்ட வளர்வாய்மை
யும்பர் குழாத்து மார்சொல வல்லா ரொளிர்பூணாய். 23

மருமல ரொன்று சம்புவின் மூல மகிழ்மூர்த்திக்
குருகிய வன்பா லீந்தவ ரொண்மா மலர்வாழ்வர்
திருவியல் சங்க மொன்று கொடுத்தோர் திகழ்செங்கைப்
பொருவறு சங்க மொன்று தரித்துப் புவிகாப்பார். 24


மான்மத நீந்த மாமணம தங்கை மாதுருகும்
பான்முத லீந்த பன்மணி யான்கோ புரமேவுங்
கான்மல ரீந்த பூமா மாநி கவினூர்ந்த
வான்மலி வைப்புப் யானைங் காவி மகிழ்செய்யும். 25

அருள்வளர் நாவன் மூலத் தமுதலிங் கத்தின் சார்புற்
றொருதின மேனு மன்பா லோங்கிய சரியை யாதிப்
பெருகிய பணிக ணான்கும் பெட்டவர் சாலோ காதி
மருவிய முத்தி நான்கும் வல்விரைந் தடைவர் மாதோ. 26

அறமுத னான்கும் வல்லே யருமையொன் றானு மின்றி
யுறுவது வேட்டோ ரெல்லா மொலித்தபூஞ் சாகை நாவ
னறும்பிழ லிலிங்க பூசை நண்ணிய பொருள்கைக் கொண்டு
முறுகிய வன்பு பொங்க முற்றுவித் திடுக மானே. 27

என்றுயர் மூர்த்தி மேன்மை யியம்பலு மிறைவன் பாதம்
மன்றலங் கூந்தற் செவ்வாய் மலைமகள் வணங்கி நின்று
நன்றுள மகிழ்ச்சி பொங்க நாதனே யாங்கு நாவ
லொன்றுள தென்றி யன்றே யதன்வர வுரைக்க வென்றாள். 28

வரையினுக் கரைய னீன்ற மலர்க்கொடி யுசுப்பி னங்கை
கரையறு காதல் பொங்கக் கைதொழு திரந்த லோடும்
புரைதபு கருணை யோடும் பூரணன் முறுவல் பூத்து
விரைகமழ் நாவல் வந்த வரவினை விளம்ப லுற்றான். 29



ஜம்புவிருக்ஷம்.

உ

# சம்புமுனிதவம்புரிபடலம்.

புன்னை கூவிள நாகம் பூவை பிடாநமை சேவாண்
வன்னி தாதகி வேங்கை வகுள ஞெமையரை பாங்கர்ச்
கன்னி காரமந் தார ங் கடுக்கை தமாலங்கச் சோல
முன்னம் வாகைவெட் பாலை முருக்கு வருக்கைப லாசு. 1

சந்து காரகில் போதி சண்பக மால்வரை யாமா
சிந்து வாரம சோகஞ் செருந்தி திமிசு திலகங்
கந்தி நாளிகே ரங்கள் கடம்பெகி னில்ல மடம்பு
குந்தங் கூதள மாச்சா குங்கும மேழிலைம் பாலை. 2

முருகு நரந்தங் குறிஞ்சி முந்திரி கைப்பழச் சோலை
மருது தடாவழை யோமை மாதளை ஞாழன்ம தூகம்
பொருவறு மின்னம ரங்கள் பொலிதரு ஞானத லத்தின்
மருவ விடைக்க ணெழுந்து வைகுமொர் நாவலங் கானம். 3

வளர்ந்து வண்டிசை லாவ மலர்ந்தொளிர் நாவலங் கானத்
தளர்ந்து தேவருங் காணு வரும்பெரு வீட்டினை வேட்டோன்
றளர்ந்து சாய்ந்தம லத்தான் சம்பு முனியெனுந் தக்கோ
னுளர்ந்த ஞூறுவ யத்தி னொருக்கி யருந்தவ முற்றான். 4

நீறுத ரித்துக் கண்மணி பூண்டு நிமிர்சென்னி
யேறிய வேணி தாழ்புவி வீழ விருந்தெம்மை
வேறற நாடி மெய்த்தவ மாற்று மவன்முன்னே
வீறுயர் வெண்ணு வற்கனி யொன்று வீழ்ந்தன்றே. 5

பண்டறி யாத திப்பிய மான பழமுன்னே
கண்டன னுவா கண்ணொடு நெஞ்சங் கவர்தேசு
மண்டிய சீர்மைத் தூறுசு வைத்து மற்றிதியாங்
கொண்டயி லாத கொள்கைய தென்று குறிக்கொண்டான். 6

அற்புத மெய்தி யப்பழ மங்கைத் தலம்வவ்விப்
பொற்பம ரிந்த வெற்பினை நண்ணிப் புகழ்பாடிச்
சிற்பர வீது திருவருள் வைத்து நுகர்கென்ன
விற்புரு வத்தாய் நங்கர மீந்தான் வினைவெல்வான். 7

வீங்கு தீஞ்சுவை யப்பழ முண்டுவி ளங்கிழாய்
பாங்கு மிழ்ந்தனம் வித்தினை யன்னது பார்த்துளந்
தேங்கு மன்பிநு வந்துகைக் கொண்டொளிர் மூரலிற்
றுங்கு றுநும டுத்துவி ழுங்கினன் றுபதன்.

வினையி னீங்கிய மெய்த்தவற் கீந்தவி ழுப்பொரு
டினையி னீள்பனை யாய்வள ருஞ்செய றேற்றியாங்
கனைய மாதவன் பாழிவ யிற்றின மர்ந்தது
வினையு மூன்முளை யாகியெ ழுந்துநி வந்ததே.

சம்பு மாமுனி யாற்றுத வம்வளர்ந் தாலென
வம்பி னீடுவெண் ணாவல வன்சிரம் வாய்திறந்
தும்பர் நாடுநி ழற்றியு லவையெண் மாதிரம்
பம்ப வார்தளி ரீன்றும லர்ந்துப சந்ததே.

அண்ட மீபடி யாலளந் தானக நாணுற
வண்ட நாடுகண் முற்றும டங்கவ ளர்ந்துமே
லண்ட முட்டியங் கேபெருங் காவல் வயிரவ
வண்ட னுங்களி கூர வவன்மெய்தை வந்ததே.

சுரும்பு கிள்ளைகள் பூவைகு யில்பசுந் தோகைக
ளிரும்பு ளூவினங் கின்னர மாதியி சைப்பன
விரும்பு கற்பக மெய்துத ருக்கைவி ளித்துமென்
றரும்பு நாவலெ திர்ந்தறை கூவிய தொக்குமே.

மேக்கெ ழுந்துகு ரங்கியி ணர்த்தமென் சாகையிற்
றூக்க ணங்குரு வித்திர டென்னுரு டம்பைக
டேக்கு சீர்த்திவி ராட்புரு டன்றிரு மேனியி
னீக்க மின்மயிர் தொற்றம ரண்டநி கர்க்குமே.

நமது வாயினை னைந்தவித் தேகமை நீங்கிய
பிமிர்பெ ருந்தவன் மெய்யின்மு ளைத்தரு ணீடலாற்
பமர மொய்க்குமப் பாதவ நீழல்ப ரப்பவா
ழமர ராதிய ருந்தவ மாற்றுந ராயினர்.

பல்ல வங்களை தொடினு நிழலிற் பயிலினு
மெல்லென் மாமலர் நாறினு நேர்விழி நோக்கினு
நல்ல பேர்செவி கேட்பினு நன்கனி யுண்ணினு
மல்லல் யாவு மறுமுறு நல்லன யாவுமே.

உரைசெய்மா மறைகண் மூலமாய்ப் பராரை யுபநிட தப்பொரு ளாகிக்
கரையுமா கமங்கள் பணைகளாய்ச் சரியை கிரியையோ கங்கிளை வளார்கள்



விரைகுலா மிணராய் ஞானமோ ரைந்து மெல்லரும் பலர்கள்காய் கனிகள்
புரையிலாக் கனியி னிரதமா யுயிரின் புகர்மலந் துரக்குமந் நாவல். 16

எழுந்தவெண் ணாவலி னீட்ட நோக்கிய
கொழுந்தவ முனிவரர் குணலை யிட்டனர்
செழுந்திருக் கடவுளர் மலர்கள் சிந்தினர்
பொழிந்தன மதுமழை பூம ரங்களும். 17

சம்புமா முனிவனத் தகைமை நோக்கினன்
பம்புபே ரோகையம் பரவை மூழ்கியிவ்
வம்புநா வலினிழன் மாத வத்தினுக்
கிம்பர்மேம் பட்டதென் றெண்ணி னோற்றனன். 18

அருந்தவ மன்னவ னுற்று மெல்லையி
லிருந்தவ முனிவர ரிமைப்பி லார்களும்
பெருங்கண நாதரும் பேணி யங்கிழ
லொருங்கிருந் தருந்தவ முஞற்றி வாழ்ந்தனர். 19

இன்னணஞ் சிலபக லிறந்த பாணியி
னன்னணந் தவம்புரி யறவன் வந்துநம்
முன்னுற வணங்கியிம் மூரி மாநிழன்
மன்னவ நீயினி வதிக வென்றனன். 20

ஆங்கவற் கிரங்கிநா மருப்புக் கொங்கையா
யாங்குமுன் கனிவிழுந் தெடுத்தி யாங்குநீ
யோங்கிருந் தவம்புரிந் துறைதி யவ்வயிற்
பாங்குற வதிகுதும் படர்க வென்றனம். 21

கோட்டமி லெமதருள் கொண்டு திக்கெலாந்
தீட்டிய புகழினன் சிறந்த தேசெலா
நாட்டிய ஞானகேத் திரத்தை நண்ணிய
வீட்டிய வன்புளத் தெழுந்திட் டானரோ. 22

பாயிரும் புவியிடைப் படர்ந்து செல்வுழிச்
சேயிடை நோக்கினர் தேம லர்ச்சினை
மீயுயர் மரநடை மேவிற் றென்னென
வாயின ரையமற் புசமு மேயினர். 23

அடுத்து நோக்கிய மாந்தர்க ளங்கையா திகளுந்
தொடுத்த தேத்தடைச் சினைகளுந் துன்னுமிப் பிறவி
யெடுத்த வேழ்வகைத் தோற்றத்து மில்லைமற் றிதுவு
முடுத்த தோலினன் றிருவினை யாட்டென வுவந்தார். 24

அடங்கி னோற்றவச் சம்புமா முனிவனை யன்னா
னுடங்கு சூழ்ந்துசென் முனிவரு முருப்பவிர் விப்ப
மடங்கு முதவெய் யவன்வெயின் மாற்றினர் நல்லோர்
தொடங்கு மாலஞ் சூழ்ந்தவர் தாமுமெய் தாரோ. 25

அண்டர் போற்றிட நாயினி றுறைந்திடு மரும்பெருந் தலநேர்ந்த
கண்டு போற்றுபு மென்மெல நடந்துபோய்க் காவிரி வடபாங்கர்க்
கொண்ட ஞானகேத் திரத்தினைக் குறுகிமுன் கொழுங்கனி வீழெல்லை
மண்டு காதலி னெதிர்தொழு தடுத்தனன் மாதவர்க் கேறன்றான். 26

பரிதி வானவ னுருப்பெழுந் துடற்றிரு பருவத்து மழனின்றுங்
கருவி மாமழை யெழுந்துநீர் பொழிதரு கார்முத லியாண்கு
முருவ வார்திரைப் புனலினு மருந்தவ முஞற்றியொண் டொடிமாதே
யிருவி றுன்றன திருபதா மரைமல ரெமதடித் தலத்தம்ம. 27

சந்த மூலமுங் கனிகளுஞ் சருகுநீர் காலுமுன் டவைநீக்கி
யந்தி ஞேற்றிருக் கின்றன னவன்விழி யடுத்தவர் தமைக்காணு
வுந்து தேமலர்த் தென்றன்மேற் றவா தூறட லறியாது
நந்து மோனைதனன் செவியுறு நாற்றங்க ளுறுமோ வாதன்றே. 28

பெருகு மன்புட னின்னண மருந்தவம் பேணிமா தவன்வைக
மருவி முன்னரே தவம்புரி தாமரை மலரினான் முனிச்சென்னி
யுருவி நின்றவெண் ணுவலு மருந்தவ முஞற்றுமா தவன்மாண்புங்
கருதி விம்மித மெய்தின னளவளாய்க் கலந்துட னிருக்கின்றான். 29

ஆரு யிர்த்தொகை யிருண்மலங் கழீஇயெம தடியலர் நிழற்சேக்கச்
சேரு மத்தகு நாவலின் வாவிது செப்பினு மினியாங்குச்
சாரு மத்திறம் புரிதியென் றெம்பிரான் றையனுக் கருள்செய்ய
வோரு முத்தமன் குணத் துயர் நந்திதாழ்ந் தொன்றுகேட் குவனானன். 30

திங்கள் சூடிய செஞ்சடைக் கடவுளே திருவுரு விலைநீக்கா
நங்கை பார்ப்பதி பிரிவதற் கேதுமுன் னண்ணிய துளதேயோ
விங்குக் கேட்பது வேட்டன னருளென வியம்புநந் திமைநோக்கி
யங்கி மூவெயி லுணநகை புரிந்தவ னருளினாற் கேட்பித்தான். 31

சம்புமுனி தவம்புரியத் தகுஞான கேத்திரத்தி
னும்பர்தொழச் சென்றதற்பி னுலகமெலாஞ் சிற்றின்ப
வம்புநெறி யொழுகுறவிம் மாதுடனு மியாநாமே
நம்புமுயிர் வீடணுக நல்யோகத் திருந்தனமால். 32

இளமைபெருங் கற்பொருவ றெதிராத வெழிலொத்த
வளமையுற மன்பனைத்து மங்கியிடம் பிரியாத



பிளவுமதி நீத்ருதலிப் பெண்ணரசி தனைநோக்கா
தளவின்றி நல்யோகத் தமர்ந்திருந்த வெமைநோக்கி. 33

அள்ளிலைவேற் கணநாத ரருகிருந்தோர் பார்த்திருப்ப
வெள்ளனகை புரிந்திட்டா ளிவளதனால் விளைகின்ற
கள்ளவினை கழுவுவான் கதங்காட்டி நமைப்பிரிந்திட்
டுள்ளமுலைந் திருத்தியென வொருசாப முறுத்தினமால். 34

வெச்சென்ற மொழிகேளா வெய்துயிர்த்து நடுநடுங்கிக்
கச்சொன்று முலைத்தலைமேற் கனல்சேர்ந்த திரிநெய்போன்
மைச்சென்ற மலர்நீல வாட்டடங்கண் புனலுறைப்பப்
பச்சென்ற வுடல்குழையப் பணிந்துமொழி குவளானள். 35

அடியவர்செய் திடுங்குற்ற மாயிரமும் பொறுத்தருளும்
படியில்பெருங் கருணையனே பசுவேறும் பரமேட்டி
கடியவிழு நறுங்கொன்றைக் கண்ணியா கருநீல
விடமணிந்த கருமிடற்று விகிர்தாநின் சரண்போற்றி. 36

பேதைமையே பெருங்கிழமை யிரண்டானும் பிழைசெய்தே
னாகவினுற் பெருங்கருணை யடிகேண்மற் றடியேனை
யேதிலர்போற் புறக்கணித்திட் டிருந்துயரத் திடைமூழ்கப்
போதவிட லழகன்று பொறுத்தருளாய் பொறுத்தருளாய். 37

தண்டரளப் புனற்பொய்கை தணந்தமலர்த் தாமரைபோல்
விண்டலத்துக் கதிவழுவி விழுந்தபெருங் கடவுளர்போற்
கொண்டல்பொழி மழையொழிந்த குளிர்பண்ணைப் பசும்பயிர்போ
லண்டர்தொழு மடிகளையா னகன்றிருத்த லழகேயோ. 38

உயிர்நீத்த வுடம்பென்ன வுணர்வொழிந்த வுயிரென்ன
மயிர்நீத்த மானென்ன மணிநீத்த பணியென்னப்
பயிர்நீத்த சூலென்னப் பகனீத்த தினமென்னச்
செயிர்நீத்த வடிகளையான் றீர்ந்திருத்த லழகேயோ. 39

புலனுகராப் பொறியேபோற் பூணணியா மடவார்போ
லலரணியா நீர்நிலைபோ லாயனையா மகவேபோற்
பலன்விளையா நிலமேபோற் பண்ணுகராப் பாடல்போ
னிலவும்டி களையடியே னீத்திருத்த லழகேயோ. 40

கொம்பரிலா விளங்கொடிபோற் கொழுங்கணிலாத் திருமுகம்போல்
வெம்பரசி லாப்படைபோல் விரகினரில் லாவவைபோற்
பம்புமுயிர்க் குயிராகிப் பசுபதியாய்க் கணவனுமா
மெம்பெருமா னையுமடியே னிகந்திருத்த லழகேயோ. 41

ஆற்றரிய பெருந்துயரா லலைப்புண்டிவ் வாறுரைத்துக்
கோற்றொடிக்கை மடவாது குழைந்துருகி யகமுருக
மாற்றுதிநின் னலைவத்தை யாழ்கலைமாழ் கலையென்னத்
தேற்றியவண் மனங்குளிர்ப்பத் திருவருளா லிதுகிளந்தாம். 42

சின்னுளிங் கெனைப்பிரிந்து திகழ்ஞான கேத்திரத்தின்
மன்னுமின் றருந்தவத்தின் மனம்வைத்து நமைப்பூசை
துன்னுர்வுத் தொடும்புரிந்து சூழ்திரமி யாமியுனீ
பின்னுமக் கருள்வழங்க கெமியானவ் வேணென்றும். 43

நவின்றவரு ளன்மொழிகேளா நந்தியெனு மியற்பெயரோய்
கவன்றகவ லையிற்சிறிது மையகன்று தோத்திரக்க
ணுவன்றபிழை பாலெழுந்த நோன்மையுறு நாணிறெறுங்
துவன்றுமணி வாய்திறந்து மற்றிதயுஞ் சொலவலித்தாள். 44

தண்ணறுங் கமலத் தயனுங் கவேயான் சதமக்ஞ்செய் திமையார்க் கிறையாய்
நண்ணுங் குலிசப் படையா னமரர் நவில்வின் னுசையர்கின் னரர்கிம் புருட
ரெண்ணுங் கணநா தர்கணந் துறவோ ரெவரும் வதியுந் திருவைப் பயனு
மண்ணுறும் பெருமைத் தடிகே ளுயரிவ் வணியார் கயிலா யமலா லிலையே. 45

அதுமாத் திரமன் றுலகந் துறைவோ ருலைவோர் களுமன் பலர்நெஞ் சினராய்த்
துதிபா டியுமா திரநோக் கியெதிர் தொழுதுந் தொலையர் மையுளத் திடையே
யிதுவா லிதன்வண் ணமெனப் பதிவித் திட்டும் பயனெய் துவதாம் பெருமான்
முதிர்பே ரொளிகான் றிருள்சீத் தலமொய்க் குங் கயிலா யயலா லிலையே. 46

ஒப்பா ருயர்வா ரையிலாய் வதியுந் துயர்கின் றனவன் றுகொலைத் தமுழு
மப்பே ரருளு யகனீ யொழியா தமரும் பெருமைத் துயருங் கயிலை
யிப்பூ தரம்விட் டினைஞா னதலத் தேனென் றருள்செய் தனமெம் பெருமான்
றப்பார் திருவுள் ளவெறுப் பெனவே சூழ்ந்தச் சமொழிந் திலதென் னுனமே. 47

அடியேன் மதியா மையிழைத் தபிழை யகலுங் கழுவா யெனமா தவமு
முடியா தின்பூ சனையுந் தகவே முற்றும் பலநா ளுமியம்மா நிலைவாய்க்
கடியா துபுரிந் தமர்வே னிதுவே கைக்கொண் டிடுமா றுகடைக் கணியென்
றொடியா தவளந் தொழுமன் பினளா யுரைத்தாள் பனிமால் வரையுந் தரியே. 48

நந்தியின் னணமோது நாயகிக் கிதுசொற்றுஞ்
சுந்தரி கயிலாயத் தொல்வரை யிதிற்பன்னு
ணந்திய தவ்மெல்லா நாழிகை யொன்றதனில்
வந்திடு முயர்ஞான வைப்பிடை யதுவன்றி.

ஞானமு நினைக்காங்கு நவிற்றிய நிலைத்திட்டா
ஞானநல் குறமேனை நற்றவ முனைவேனு



ஞானவைப் பெறுநாமந் தனக்கல தில்லாத
ஞானவைப் புலர்ந்தன்று னற்பய னுறுதற்கே. 50

ஆங்குறுங் காலந்தா னனுதில ததுகாறு
நீங்குறை கெனமுன்னே யியம்பின மாங்கெய்தும்
பாங்குறு பாணியுமிப் பாணியல் லதையிந்லை
தீங்கறு நந்திதெளி கென்றனன் சிவபெருமான். 51

அருளிய வருடலைத் தருள்வளர் தருநந்தி
பெருகிய களிகூரப் பேசிய ஞானதலத்
திருவினைத் தியானித்தங் குறைந்தன னினியிப்பாற்
கருணையை நினைந்தோங்கற் காரிகை மகிழ்கூர்ந்து. 52

உருக்கிளர் புரமூன்று மொள்ளழற் குணவாக்கும்
வெருக்கிளர் மாமேரு வில்லின நிடுசாப
முருக்கவு மெய்ஞ்ஞான முற்றவு மெய்பெருமான்
றிருக்கிளர் பூசனையிற் றிருவுளம் பற்றினளால். 53



உ.

# அகிலாண்டநாயகியாராதனைப்படலம்.

பொன்பூத்து மணிதுறுமிப் பொங்கு மருவி பலவார்ந்து
தென்பூத்த விமையவரைச் செல்வ மடந்தை திசைவிளங்குங்
கொன்பூத்த புகழ்க்கயிலை குடிகொண் டிருந்த கொண்கனிரு
மின்பூத்த மலரடியின் விரையார் மலர்தூய்ப் பணிந்தெழுந்தாள்.

பூதேச மாதேவ புலவு நாறுஞ் சூலத்த
வாதேய வாதார மனைத்து மான நிராலம்ப
மாதேசின் வளர்ஞான வைப்பிற் கேக வொருப்பட்டே
னீதேச நலனெய்த நிகரில் விடைதந் தருளென்றாள்.

நஞ்சேந்தி யமுதளைந்த நாம வடவா முகத்தீயி
னெஞ்சாத செவ்வரிகொண் டிருநீர் பெருக்கிக் கடல்போலுந்
துஞ்சாத விழிமடவாய் தோலாச் சிறப்பி னெஞ்சேறி
யஞ்சாதி யவண்வருது மென்றா ரகில காரணரே.

விடையவன் றிருமுன் றாழ்ந்து விடைபெற்ற மாது கோயிற்
கடைமணி வாயி லெய்தக் கண்ணுத லேவ லாற்று
முடைமணிச் சுரிகை நந்தி யொய்யென முன்ன ரேகிப்
படையொடு முடன்செல் கென்றான் பாரிடத் தலைவர்க் கம்மா.

அருட்டலைக் கொண்டு வல்லே யருக்கண நாதர் சில்லோர்
வெருவரு தோற்றஞ் சான்ற விறற்பெருங் கணத்திற் றெக்கார்
பொருவரு மாய ஞதிப் புலவர்க ணெருங்கித் தாழ்ந்தார்
வருசயை விசயை யாதித் தோழியர் மருங்கு சூழ்ந்தார்.

வாரணி முரச மார்த்த வால்வளை நரன்ற வீணைச்
சீரணி யெழாலின் பாடல் செவியெலா மினிமை செய்த
வாரண முழக்கஞ் சான்ற வடியவர் துதிகண் மாண்ட
காரணி விழியின் மாதர் கலையெதி ராடி னார்கள்.

மாலைகால் யாத்த பிச்ச மதிக்குடை தவன்றிச் சூழக்
கோலமா ரால வட்டங் குளிர்செய்சாந் தாற்றி வாய்ந்த
பாலவா யசைத்து நிற்பப் பானிறக் கவரி துள்ளச்
சீலமார் கொடியி னீட்டஞ் சேண்வெளி முழுதுந் தூர்ப்ப.



குறுகுறு நடந்து செல்லுங் குறளொடு சிந்து முந்த
வறுவகைப் படையு மஞ்ச வாளுடை தாங்கு மாதர்
கொறுகொறுத் துடனும் வைவாள் குடங்கையி னேந்தி யொய்ப்ப
விறுகிடைப் பேடி மாரு மொருபுடை யீண்டிச் சூழ. 8

பூவையுங் கிளியு மற்றும் பொற்புறக் கூட்டி னேந்தி
மாவடு வகிர்க்கண் மாதர் சிலரொரு மருங்கு போற்றத்
தேவர்கள் சில்லோர் யூகந் திரிமருப் பிரலை மற்றுந்
தாவுறுந் தொடரி னேற்றுத் தடங்கரம் பற்றிச் சார. 9

கஞ்சுக மணிந்த தேவர் கைத்தலம் பிரம்பு தாங்கி
வெஞ்சொன்மிக் குலைத்து முன்ன மிடைசனத் திரளை நீக்க
வஞ்சலி புரிந்து சூத மாகத ரொருகு நிற்ப
வெஞ்சலி லாத வேனைப் பணியினர் யாரு மீண்ட. 10

ஆணிப்பொன் னடர்மேல் வேய்ந்திட் டசும்பொளி திசைகள் போர்ப்ப
மாணிக்க நிரையு முத்தும் வயிரமுந் தூக்கி யிட்ட
வேணுற்ற விமான நண்ண விறைவனை மனத்து ளெண்ணிப்
பூணுற்ற கொங்கை யன்னை பொருக்கென விவர்ந்து சென்றாள். 11

நெறியிடை யாங்காங் குள்ள நிறைமணிக் கோயில் சார்ந்து
முறிவளர் மேனி நல்லாண் முதல்வனை வழிபா டாற்றி
யறிஞர்கள் வந்து தாழ வவரவர்க் கருளிச் சென்று
செறியொளி ஞான பூமி சேணிடைத் தோற்றக் கண்டாள். 12

மண்ணிடை யிழிந்து பாங்கி மார்கொணர்ந் தளித்த போதக்
கொண்ணிழற் கடகச் செங்கை யொய்யென வாங்கித் தாவிக்
கண்ணிறைந் திமையிற் றாங்குங் கதிர்முத்தஞ் சிந்தத் தாழ்ந்து
பண்ணிறை துதிக ளார்த்துப் பைப்பய நடந்து சென்றாள். 13

விரோதமொன் றானு மின்றி மிருகமும் பயிலா நின்ற
வரோகமே யருளு ஞான பூமியி னெவ்வி யுள்ள
குரோசமைந் தனையுஞ் சூழ்போய்க் குறுகுவாள் கோல மார்ந்த
வரோதயப் பொன்னி நீத்த மாபுனித் தோய்ந்துள் புக்காள். 14

உடங்குறு சேனை யாங்காங் குறவகை நிறுவிச் செல்லுந்
தடங்கரை யிரண்டு பாலுந் தவழ்தரு பொன்னி வீசு
மடங்குறுங் கதிர்செய் முத்தும் வயிரமும் பொன்னு மற்று
[illegible]ங்கெடக் கிடந்து போக பூமியி னிமைப்பக் கண்டாள். 15

கடலுவர் பருகுந் தீமை கையகல் பாக்குச் சார்ந்து
படலைமை முகிலேற் றன்ன பசும்பொழி லுடுத்த சூழ

விடையிய தீர்த்த மாம் மியங்குழு மனைய மேக
படைறத் துதித்தா லென்ன மகிழ்ச்சியின் முழுங்கக் கண்டாள்.

மலைமலைவற் பிடையே தோன்றி மாதவ ஸகத்தி யன்பாற்
றொலைவறப் பழக்கஞ் சான்ற தூக்குணர் தெரிக்கு மாபோ
லலைதவழ் தீர்த்த மாடி யவர்மனைங் கவர்ந்து மெல்லென்
றுலைவிசய் வருந்த நீங்கத் தென்றல்வந் துலாவக் கண்டாள்.

அகிலமு முயிர்த்த தாயே யகித்தன னென்று மோசை
மிகுதலிற் பாட லாடல் விளைத்திடுந் திறமே யென்னத்
தொகுகுயில் பூவை கிள்ளை தும்பியு மிசைப்பத் தோகை
மிகவறு வனப்புத் துள்ள விடந்தொறு மாடக் கண்டாள்.

தருவுறு காக ஞான தலத்திலடப் பிறந்தா மேனும்
திருவினைப் பெறலா மென்று தேவரு மிறும்பூ தெய்த
மருமலர் தாவித் தாரு மதுப்புன லிறைத்துத் தெய்வ
முருகெதிர் விடுத்துத் தாழ மொய்யருள் வழங்கிக் கண்டாள்.

கங்கையீ லொத்துத் தோற்றுங் கையிறுள் கமல பாத
மிக்குநா மனையப் பெற்று மெனமகிழ் சிறந்தா லென்னப்
பொக்கிவெண் டரங்கக் கையாற் புனல்வளர் தீர்த்த மெல்லாஞ்
செங்குயிர் முத்தந் தாவித் தாள்பணிந் தேகக் கண்டாள்.

கருப்புவில் லோடி நம்மைக் கைத்தலந் தாங்கு மன்னே
திருப்பொலி பாத தோதல் சிவனுமே யென்னப் பூவிற்
கருப்பினங் குடைந்து வாசக் கன்னனூன் டூறி வீழ்ப்ப
வரும்பினா முறைசால் கோட்டி யலர்விழி குளிர்ப்பக் கண்டாள்.

இருந்தரு தவங்க ளோற்கு மிருடியர் பாவ முற்றும்
வருந்திமண் விடுந்தோட் டத்தான் மானவா னிழுகின்ற காவற்
கருந்திரட் கனிகள் சிந்தி யுடைந்துகால் கொண்ட சாறு
விருந்தனைச் சுரும்ப ரீட்டம் விரைந்தொழுந் தோடக் கண்டாள்.

தொடுக்குமன் புடைய காந்த ருகிய சோம ரேற்ற
வடுக்கண மறிந்து தாமு மெண்டகம் புரியு மாபோ
லடுக்கிய வுலகுக் கெல்லா மரும்பெரும் பொருள்க ளீன்றுங்
கொடுக்கிய வளர்வெண் ணாவற் குருஉக்கனி யுதிரக் கண்டாள்.

இத்தகு ஞான பூமி யிருந்தபே றினியே தென்னே
யுத்தமி யுமையாள் காட்சி யுதவிடப் பெற்று மென்று
மெத்திய வன்பு பொங்க விரவிய சேகரோ சென்று
ஞைத்தலங் குப்பித் தாழ்ந்து கண்பனி யுறைப்பக் கண்டாள்.



இன்னபல் வளங்க ளோக்கி யெய்தியோர் தருவின் மூலத்
துன்னியின் றடுத்த தோழிச் சனங்கையை நோக்கி முக்கண்
மன்னனைப் பிரிந்தா மேனும் பிரிதரா மகிழ்வே பெற்றுந்
தன்னிக ரில்லா விந்தத் தலம்புகு மாண்பா லென்றுள். 25

அரசநத் தசும்பை வென்ற வருப்பிளங் கொங்கை யன்னை
வரவினை யறிந்து முன்னே வதிந்துமா தவங்க ளாற்றும்
பிரமன்வல் விரைந்து சென்று பெருகிய வன்போ டச்சம்
விரவமுன் பணிந்து பூசை விதியளிப் புரிந்து போற்றும். 26

இருசுட ரெதிரா தெழிலியோ ரியல்பி னிராதுதண் டலைமுடி கூடா
கருமணை லொழுக்கு நீவறில் லாதாகதிக்ககைச வலம்புழு களையா
வுருவளர் கொன்றை கமுகுமெல் லென்று வெனவிவை யொழித்தியன் மணமே
மருவிமெய் யடியார் மலவிருட் செறிவு மடிக்குநின் பூங்குழல் போற்றி. 27

கருந்துணர்க் கடுக்கைக் கண்ணியான் முடியிற் கலந்தன னமக்கொரங் காந்தன்
முருந்திள முறுவற் றேவிபா னமக்கு மூறையென முதிரொளி யுடுக்க
ளருந்தவத் திறைகொண் டிருந்தன பொருஉநின் னணிகுழற் றூக்குநித் திலமுந்
திருந்திய முல்லைத் தெரியலுஞ் செருகுஞ் சின்னவெண் மலர்களும் போற்றி. 28

இலகொளி மணிச்செ யிலம்பகந் திருத்தி யெறிகதிர் மகரவாய் பொறித்த
திலதமே விடத்துச் செங்கதிர் தொடர்ந்த சேயொளி யரவென நாற்றிக்
குலவம ரடுப்பிற் புறந்தரு நீர்மைக் கொடுமர நாணுற வொளிவாய்ந்
தலவுறு மெண்ணுண் மதியும்வெண் ணிறமென் றொழிக்குநின் னாணுதல் போற்றி.

காமனு ருருவங் கனற்கணாற் பொடித்த கணவனுர் திருவுளம் வணக்கு
நாமவா ளிகளோ ரிரண்டென மிளிர்ந்த நறுமலர் நயனமீ மிசையே
சேமவார் சிலையுஞ் செருச்செய்வார் சிலையுஞ் சேர்ந்தொருக் கிருந்தன பொருஉநின்
னேமவார் புருவம் போற்றியிப் புருவத் தெழின்மயி ரொழுக்கமும் போற்றி. 30

மாநிலம் விளக்குஞ் சுடர்க்கொளி கொடுக்கு மகிழ்நனுர் விழிச்சுடர் மூன்று
மூனமில் காத லுளத்தெழ வணக்கி யொளிர்தரு வதனமீ மதியந்
தானழ கெறிப்ப மணந்தவுற் பலமோ தண்ணமிழ் துணவுட் னடுத்த
வீனமில் சகோரத் துணைகளோ வென்ன விருந்தநின் கண்மலர் போற்றி. 31

கண்ணளி யடுத்து கனகமட் வாய்ந்து கதிருமிழ் மணியணி யணிந்து
தண்ணென வியற்கை நறுமண முயிர்த்துத் தழைந்துவா டாதுசண் பகத்தை
யெண்ணறு மலரைக் குமிழினைக் காம ரெயிலை யிகல்கெடப் பொருது
வண்ணவார் கொடியின் வயங்குநின் னாசி யணியொளித் திருவெழில் போற்றி. 32

இந்திர கோபங் காரொடு மொழிய விருங்கிடை நீரொடுங் கழியச்
செந்தவ ருவர்நீர்க் கடலொடு மறுகச் செம்மணி ரிலொடு முறக்கு

நந்திய ஞான்றே நலனுறத் தொண்டை நறுங்கனி தூங்கிடின் றழிய
வந்தமி லமிழ்தம் பொதிந்தொளி ததும்பி யணிகிளர் வாயிதழ் போற்றி. 33

செய்யதா மரைதண் பனிக்குமுற் றழிந்தந் திங்கண்முன் னிகழ்வ மொழிந்து
மையபளாங் கண்ணி யொருத்திலைக் கமர்ந்து மன்றலுமுட் டாளதாய் நின்றும்
பொய்யதாய்க் கழியக் குமுதமு மென்றாழ்ப் புலவன்மு னெழுநலந் தாய்ப
மெய்யவாம் பொருள்கள் விளைத்தருள் கொழிக்கும் விமலைநின் செய்யவாய் போற்றி.

முருந்திளஞ் சாயற் குடைந்தமஞ் ஞையதாய் மூளைத்ததன் னுடன்பிரி யாமற்
றிருந்தருக் காட்டாச் செயிரதா யொழியத் தெள்ளொளி நித்திலம் விலைப்பட்
டருந்திறற் காப்புற் றட்புரை காழுற் றலையவெண் முல்லைநெக் குடையப்
பொருந்துதண் ணமிழ்த மூற்றிருந் தொளிசால் பொழியுநின் மணிநகை போற்றி.

சிறைபடு பூவை கிள்ளையு மொருவர் தேமொழி பயிற்றிடப் பயில்வ
வறைகுயி லொழுத்தி னுமொழி யரியா தருஞ்சுவை யாழ்சுதந் திரமன் [றித்தா
றுறைசெய்தேன் செழும்பா லமிழ்தமுந் தெவியின் புறுவென விளைவெல மொ
நிறைசுவை யினதாய்த் தன்னையே நினைத்த நின்புந்நின் குளிர்மொழி போற்றி. 36

ஒப்பறு முதல்வ ரூகிய கணவ னொளிர்முகத் திருவெழி லேனக்கத்
திப்பிய மாக விளங்குகண் ணடியோ சிவபிரான் றிருவுளக் கமல
மெப்பொழு திலும்பூத் தலர்நீர் நிலையோ வெனத்திகழ் திருஞ்செவி யணிகள்
செப்பருங் கதிர்நீ ராஞ்சனம் புரியத் திருத்தநின் கவுட்டுணை போற்றி. 37

மயிரெறி கருவி தனதிழி தொழிலை மதித்தமஞ் செழுவுறை தூங்கப்
பயிலுறம் வள்ளை கொடியதாய்ப் புனலிற் படியவா ரூசனின் செவியி
னியலுரு வெனநிற் சுமந்தெழுந் தாட வெழில்குலாய்ச் சாயிமே லணிந்து
செயிரறு மணிப்பூங் குழையொடு தோடு செறிந்தநின் செஞ்செவி போற்றி. 38

ஆரணங் கடந்த வருட்பெருங் கடவு ளகமெழூஉந் தாமரை மலரப்
பூரண வொளியிக் கெழுதலா விருளைப் புரட்டுசெங் கதிரவ னேயோ
காரணங் கடந்த கண்ணுதல் வதனக் கதிரவன் முனமலர் தவிருற்
சீரணி கமல மலர்செர்வே வெண்ணத் திகழ்ந்தநின் றிருமுகம் போற்றி. 39

பாளையுட் பொதிந்து திரண்டபூங் கமுகின் பாலொளிக் கண்டமோ நிலைபா
கோளறு தரளங் கொழித்தொளிர் சங்கு குழகனூர் திருவுள மகிழ
வாளுமென் பன்னின் குரலொடு மகிழ்த மன்னவாய் மங்கல நாணும்
வாளுமிழ் கலனு முருவென விலக்கி வயங்குநின் கந்தரம் போற்றி. 40

மழலைவண் டிமிருந் தொடையலைச் சிறைய வாரலை வாய்கடைப் புண்ண
முழுவுவன் வாரின் பிணிப்பிணு லொங்க மூங்கிலக் கணைத்தொடு முரிஞ்சி
யழலிலை யவிர்ப்பா திருப்பினு மதோ வரும்பய னெய்துழி யழியத்
தழலொளிக் கதிர்ப்பூ ணகந்த மணிந்து தாழ்ந்தியல் தோளிணை போற்றி. 41



வலைவரம் பறிந்த காளையாய்ச் சேர்ப்பர் வண்குடி மகிழ்கொளத் தோன்றி
யலைவரம் பறிந்த மகரமீன் படுத்த வன்பனு ரங்கையிற் பற்றி
விலைவரம் பிகந்த மணிவளை கடகம் விற்செறி கங்கண மணியக்
கலைவரம் பிகந்து மகாமீன் யாழுங் கடந்தநின் கூர்ப்பரம் போற்றி. 42

தங்குபன் மலர்க்கு மருங்கல மான தாமரை காண்மலர் குவித்து
மங்கத னரும்பை மலர்த்தியுந் திரியு மலங்கொளிச் சுடர்கண்மை யாப்பக்
கங்கையை யணிந்த கண்ணுதல் வதனக் கதிர்விழி புதைத்திசை தோற்றிப்
பங்கய மலரைக் காந்தளைத் தளிரைப் பாற்றுநின் செங்கரம் போற்றி. 43

கருப்புவிற் குழைக்குங் காமவே ளெடுத்த கணையெனு முற்பல முகிழைப் [க்கித்
பொருப்புவிற் குழைத்த புண்ணியன் விழையப் பொலிந்துநேர் பெருந்தன விலை
திருப்பொலி செங்கை யார்விரல் போற்றி சித்தசன் றேர்க்குவாம் பரியா
யொருப்படுங் கிள்ளைச் செய்யவாய் விலக்கி யொளிருநின் விரலுகிர் போற்றி. 44

கடகரி மருப்பு மத்தகத் துணையுங் காமரு செப்பும்பொற் குடமுந்
தடவரைக் குவடுந் தாமரை முகிழுஞ் சக்கர வாகமும் பந்துஞ்
சுடர்மணி வடமுங் கலவையு மமிழ்தந் தொய்யிலுங் கலந்தமு தேச
நிடவிய மார்பங் கதைத்தல்செய் யாவென் றிகந்தநின் னிளமுலை போற்றி. 45

உருப்பவிர் பருவத் துறுகுளிர் கொடுத்து முறுகுளிர்ப் பருவத்து வெம்மை
விருப்புற வளித்தும் புணர்ச்சியிற் புளகம் விரவியு மேனையோர் குயமு
மிருப்பன வெனினு மிகந்தல கீன்று மிளமைநீங் காதுமா மேருப்
பருப்பதங் குழைத்தார் பகட்டுரங் குழைத்த பயோதரத் தின்னியல் போற்றி. 46

முழுத்தபே ரன்பிற் காந்தனுர் மணித்தோண் முயங்கிய வேலையு முயக்கம்
விழுத்தவே லையினும் வேறுவே றுருவாய் வேங்கையி னறுமலர்த் தாதும்
பழுத்தவா டகப்பொற் பாரகமும் விலக்கிப் பன்மணி கரைத்திலே கித்த
வெழுத்திறற் பொலிந்த விளமுலை முற்றத் திணங்கிய சுணங்கெழில் போற்றி. 47

மூகவரை யடக்கி மாலொரு வளையே முற்றுறச் சுமந்தசோ ராலின்
மேவுபச் சிலையும் விலக்கியண் ணாந்து விளங்கிய முலைமுக டுருவித்
தாழ்வட மணியி னிளவெயிற் பிழம்புந் தயங்கிய நிதயமே கலையி
னேவில்பல் லொளியும் விராய்க்கிடந் திமைப்ப வொளிருத ரத்தெழில் போற்றி. 48

மாந்தளிர் மருட்டுங் கரதலத் தெடுத்த வார்கழைக் கருப்புவில் விசிக்கு
மேந்தெழிற் சுரும்புச் சேமநா ணென்றே விறந்தவே ளெழுவள ருந்திக்
காந்தழற் குண்டத் தெழும்புகைக் கொழுந்தோ கண்ணெழு தஞ்சனம் பிழைத்து
வீழ்ந்தொழு கியதோ வெனவயிற் றெழுந்த மென்மயி ரொழுக்கெழில் போற்றி. 49

நிரஞ்சனப் பொருளா யிருந்தருள் கணவர் நெஞ்சகன் னிலுங்கலந் துலாவு
முரஞ்சொளி வனப்புப் பெருங்கடற் பரப்பின் முரிதிரை யெனவயிற் றெழுங்கும்

வாஞ்செறி யடிப்பு மதன்கழி டெல்லை வயங்கிய வுந்திய பாகமே
யூஞ்செறி மணிகள் கிடந்தென நிசப்புத் தொளிர்தரு வுதரமும் போற்றி. 50

கடிமலர்க் கொய்டீர் கொடியனா தாற்றங் கைப்பிடி மின்னினை நிலையா
முடிகனட பட்ட சரவிட முரிழுந் தாயுதால் பாவிலைப் பநெஞ்சி
முடிவறு படங்கல் சிட்டருக் கழிய பொனவிலை முனிக்குமொய்க் கரப
கடிவுசொள் கணைவன் மனமொராம் கலைக்க கலைக்குநீர் னிலினட போற்றி. 51

காமவே ளெரித்த கண்ணுதற் பரமன் கரத்தினை வணக்கிமேக் குயர்த்த
வாமமா முரோம வல்லியென் றரைக்கு மணிக்கொடி யசைவற நாட்டு
மேமமா ருந்திக் குழிமிசைத் தாய வெரியணி விதானஞ்செய் பொலங்கே
ராமரு வடங்கள் கிடந்தொளி யரும்பு மழகிய கடிதடம் போற்றி. 52

பிணர்படு வடிவி னுட்புழை யுடைய பெருங்களிற் றிருகரா மிசைந்து
வணர்நெடு வாளாற் றனிபடக் குறைத்து வரிகலாயி னுரித்திடப் பட்டு
மிணர்வனப் பிழக்குங் கதலியை நீக்கி நிழன்மணி மகரமாய்ச் செறிந்து
துணர்படு மாவி னிளந்தளிர்ப் பட்டிற் றலைக்குந்தன் கவான்றுனை போற்றி. 53

பொர்பமர் பொன்னனக் கிழியுடை படுவ பூந்திரட் பந்தடி படுவ
வற்பமர் பெருண்டு பங்கமுற் றலைய மாபின வெனவெலா மொழித்துத்
தற்பரன் காத்தாற் பிசைதொறு மமிழ்தந் தந்தனி யொன்றமெய் தாமே
யற்புத மான வியற்கைநல் லழகி னமர்முழந் தாளினை போற்றி. 54

சிலம்புகின் கிணிப பாதசா லங்கள் செறுமணிப் பாடகந் தண்டை
யலம்புற வணிந்து புலவியிற் கணவ னங்கையோ டயர்சிறி தாற்றிச்
சலம்படு வாறுமாசைா றிலைகயுந் தணித்துவார்த் தொளிர்கழலைக் காலும்
பலம்படு தராசிற் றட்டினைத் தாக்கிப் பறித்தநின் பாங்கேர் போற்றி. 55

பெண்ணுருவெடுத்து நின்னரட் கணவன் பெரும்புயப் புணர்ந்தமா யவனின்
கண்ணுரு கிகர்ப்ப மீனுரு வெடுத்துக் காநிடப் பட்டிதற் கேது
கண்ணுரு வெடுத்து நிகர்த்துமென் றெண்ணி நலந்தக வெடுத்தகூர் மமுமாங்
கெண்ணுரு வழிய வென்றிகொண் டிலகு மெழிற்புறந் தாளினை போற்றி. 56

தொண்டையங் கனிவாய்த் திருவெழிற் குடைந்த தவர்ந்ற விக்கரு மந்தின்
கண்டமுங் குளிர்வெண் ணகையெழிற் குடைந்த கதிர்பொழி தானமு மெனையுந்
தொண்டுகொண் டருளல் வேண்டுமென் றடியைத் தொடர்ந்து கொண்டனையமெல்
மண்டெழில் கொழிக்கு மவ்விரற் றலையின் வயங்கிய நகங்களும் போற்றி. [விரவு

வந்தெதிர் பணியும் வானவர் சிரத்த மற்றவர் செய்பசா விடத்துஞ்
சிந்தையி னிடத்து மறைமுடி யிடத்துந் திகழ்வரு புலவியின் முக்கட்
சுந்தர னலங்கல் வேணியி னிடத்துந் தலங்குறத் தோற்றிநா யடியேன்
புந்தியி னென்று நீங்குத லரியப் பூந்தளிர்ச் சீரடி போற்றி. 58



பயிலிய வுலகம் படைப்பவ னூர்தி யாகிய படர்சிறை யனமு
மயினுதி நெடுவே லண்ணலா ரூர்தி யாகிய மயினுமிற் சுமந்து
செயிரறு மயிரா வணமுமேர் பணிந்து திகழ்நடை திருந்தவே சுறப்பல்
லுயிர்களும் வேத நெறியுளி யொதுங்க வொதுங்குநின் னடையெழில் போற்றி.

எழுதரு மறையு மெட்டுதற் கரிதா யிலகியா னெழுதிடப் பட்டோ
ரெழுதுசித் திரமுங் கைசெய்பா வையுமீழ்ந் திளந்தளிர் கவற்றமெல் லியலு
மெழுதுபர் மஞ்ஞை குறுக்குநா யனுக்கொண் டெளியனேன் சிரத்தநீ முன்ன
மெழுதிய வெழுத்துந் துடைக்குநின் வடிவத் திருவவின் முழுவதும் போற்றி. 60

நீடிய பரையா யாதியா யிச்சை நீக்கமில் லறிவிருந் தொழிலாய்ப்
பீடியா லுலகிற் பேதமும் பேதா பேதமு மபேதமு மென்னக்
கூடியுங் கூட லின்றியு மொன்றாய்க் குறுகிய வுயிர்க்கெலாந் தகவே
நாடிய முத்தி யருளகி லாண்ட நாயகி யெனும்பெயர் போற்றி. 61

மானே குயிலே பசுங்கிளியே மயிலே புறவே நடையனமே
தேனே யமுதே தினையீன்றத் தெரிசித் தேத்தப் பெறுதலினால்
யானே பெரிய தவஞ்செய்தேன் யான்செய் தவமும் வேள்வியுமிங்
கியானே பயந்த திடப்பெற்றே னெனக்கோர் குறையு மினியுண்டோ. 62

மறையர் சமத்தால் வானவரான் மாலா லறியப் படாததீ
முறையோ வில்வா றெளிவந்த தென்னே மொழியா யெனத்துதித்துக்
குறையா வன்பின் விறைப்பின்ற குருமா மலரோன் முகநோக்கி
நறைவார்ந் தொழுகு மலர்க்கூந்த னங்கை யிதனை விளம்புமால். 63

அளகன் கயிலை யெம்பெருமா னடிகள் வணங்கிப் பொருளொன்று
வினவி னேற்கு ஞானகல மேவிந் நலமாற் றுதியரங்கே
யினிது விரித்துத் தெரித்துமென வியம்பி விடுப்ப வீங்கடுத்தேன்
கனக மலர்மெல் லணைச்சேக்கு மட்டுவ ளறிநீ யெனக்கிளந்தாள். 64

சாற்று மளவில் யோகிருந்த சம்பு முனிவ னுணர்ந்தெழுந்து
போற்றிப் பணிந்து மகிழ்தாங்கப் பொங்குங் கருணை யெதிர்வழங்கிக்
கீற்று மதிய முடிவேய்ந்த கேள்வ ருலாந்த வருணினைந்து
தோற்று முழுவ லன்பிலெருகித் தூய பூசை தொடங்குவான். 65

பாங்கர் நின்ற பரிசனத்தை நோக்கிப் பன்னித் தாயமுத
லோங்கும் பொருள்கள் சிவபூசை யுதற்ற வொல்லை யிவ்வரைப்பிற்
றுங்கிக் கொணர்மி னெனவிடுத்துத் தானங் கொழிக்குங் காவிரியுந்
தேங்கு நவதீர்த் தமுஞ்சென்று சிந்தை மகிழத் தோய்ந்தெழுந்தான். 66

திரைக்கும் புனற்றீர்த் தமும்படிந்த தேவ் திருமே னியிலணிந்த
விரைக்குங் குமமு மலர்த்தொடையும் வெறிகுழ் கலவை முதற்பலவு

முறைக்கு முனங்கொண் டுயிர்க்குயிர்கட் குறதி பயப்ப தெளிவுடன்
குறைக்கு மணிநூ புரீர்காவிற் கூடு முயிர்க்குங் குறையுண்டோ. 67

பொழியுங் கிரண மணிக்கலசம் பொற்ற விரையும் பூம்பட்டு
மொழியுந் திறத்த வெண்கொடியு மொளிர்வெண் பேசு விலைமுந்துமதி
யிழியும் பழிபா சகமுமுதலியிச்சு நீடிய வண்மணியு
மொழியும் பனுவல் விதியாற்றன் முழுதுந் திருமே னியிலணிந்தாள். 68

அருந்தவக் குறுமுனி யாடு தீர்த்தமு
மிருந்திருந் தவத்தினை யிறைவி யெய்திறூ
டிருந்திய பரிசனத் தேவர் சென்றவர்
பொருந்திய பொருளெலாம் போதந் திட்டனார். 69

சிவபுரத் தலைமையிற் சிவஞானக் கோபுரத்
தவமற வதியுமா னைந்தும் பற்றுபு
புவனமுற் றுயிர்த்தவள் பூசைக் காமெனத்
தவமகிழ் தலைக்கொளத் தந்திட் டார்சிலர். 70

இந்திர னகர்புகுந் திணர்த்த தாருவோ
டைந்தொடு நிதிசரு மணிசெய் தேறுவுந்
சிந்தைய நிரப்புறு மணியுந் தெவ்வுபு
வந்தொரு சிறையெலா மலிவித் தார்சிலர். 71

மன்மகிழ் சிறப்புடை மயிலை விச்சுவ
கன்மனைக் கூவியொண் காசம் பாசனம்
பன்மணிப் படலிகை பாந்த வட்டகை
யென்னவும் புரிமினென் றேவி னார்சிலர். 72

மாதிரக் களிற்றினை யவ்வி யன்னவை
மீதுவிண் ணொலியின் விறந்த தீர்த்தமும்
பூதல வரைப்பிடைப் புணர்பல் தீர்த்தமுங்
காதலிற் கொண்டுபோய்க் கறுத்தி னார்சிலர். 73

கண்டவொண் பதிற்றினுங் கலந்த கல்லையுங்
கொண்டபல் தீவினுங் குலவி யுள்ளவு
மண்டர்நாட் டதிசய மாக வுள்ளவு
மண்டினர் வவ்வினர் வந்துய்த் தார்சிலர். 74

இன்னண மிறைவனுர் பூசைக் கேற்றன
மன்னிய பொருளெலாம் வவ்வி ஞானமா
நன்னகர் முற்றிய நவைய காமெலாந்
துன்னினர் பணிவிடை தொடங்கி னாரரோ. 75



நிறைமலர்ச் சம்பு மூல நின்மலன் கோயில் சொன்மூ
முறையினை யுணர்ந்து வானிற் றச்சர்கண் முயன்று வல்லே
பிறைதவ ழெயில்கண் மாடம் பிலகொளி மணிப்பூங் கோயி
னறைமலர்க் காவ ணங்க ணலத்தக நிறுவிச் சாரால். 76

மண்டப மேடை வேதி மடைப்பள்ளி யாதி யாக
வண்டர்வீழ் யவனர் செய்த வாலயத் தெம்பி ராட்டி
கண்டுள மகிழ்மீக் கொள்ளக் காதலிற் சிலர்நீ ராடி
விண்டமென் மலர்க ளாய்ந்து வேறுவே றமைத்து வைத்தார். 77

தாரணி யிண்டை மாலை ததைமலர்த் தொங்க லாதி
சீரணிந் தியற்றி யோர்சார் செறிதரச் சிலர்கள் வைத்தா
ரேரணி கலன்பூ ணாடை யிருங்குடை கவரி யாடி
நீரணி கடாதி தூய்மை நிகழ்த்தினர் சில்லோர் வைத்தார். 78

நாறுமென் பனிநீர் வாக்கி நறுங்குற டரிஞ்சு தேய்வை
யேறிய கடிக்கத் தூரி யிளகிய புழுகு வாச
மூறிய குங்கு மப்பூக் கருப்பூர முறமட் டித்த
கூறருங் கலவை சாலிற் கொளப்பெய்து நிரைத்தார் சில்லோர். 79

தயிலமா மலக மஞ்சள் சாலிமா வானைந் தீம்பா
றயிரிழு திளந்தேன் வேழச் சாறமிழ் தந்தைத் தென்ன
வியனுறு மிரதம் பல்வே றிருங்கனி யிளநீர் மற்றுஞ்
செயிரறு கலத்தின் வாங்கிச் செறித்தன ரொருசார் சில்லோர். 80

கடவுளா ஞுதவு முண்டி கடல்வரு மமிழ்த மேனைப்
படர்சுவைத் தெய்வ வுண்டி பாரிடை யமைக்கும் பல்வே
றடர்சுவை யுண்டி நான்கு மாதகக் கலத்தி லேந்திச்
சுடரிழைத் துகிலின் மூடித் தொகுத்தன ரொருசார் சில்லோர். 81

கற்பகத் திழையும் பூவுங் கடவுளார் மணியுங் கொண்டு
பொற்புற விதானித் தெங்கும் புகைமணங் கமழ வூட்டிப்
பற்பல விளக்கம் வைத்துப் பனிநறு நீர்தூய் வாச
வுற்பல மலர்கள் சிந்தி நலமெழி லுறுத்தார் சில்லோர். 82

தொண்டகந் துடிதடாரி தூரியம் பதலை பம்பை
திண்டிம முரசு மொந்தை செறிகிளை தருவாச் சங்கண்
மண்டிதண் ணுமையே வீணை வளைவயிர் பீலி காளங்
கொண்டபல் லியங்க ளெல்லாங் கூளிய ரியம்பா நின்றார். 83

இவ்வகைப் பணிகண் முற்ற யாவரு மியற்ற லோடு
மவ்வகை யுணர்ந்து வல்லே யம்பிகை யெழுந்து சென்றாள்

பல்வுயிமன் றுயிர்க்கு மாவிப் பாக்கியர் பருங்கு ரூழ்ந்தார்
செவ்விய சேவர் கற்பச் செழுமலர் மாரி தூர்த்தார். 84

பிரமன்மா தவங்கள் சாலப் பெறுதகுங் குறித்தோ வேகப்
பிரமகா மத்தை யன்றுன் பெற்றமை யறித்தோ வந்தப்
பிரமன்மூ துலக மாக்கும் பெயற நினைந்தோ தேறேம்
பிரமதீர்த் தத்தின் பாங்கர்ச் சென்றனள் பிணைமா னன்னாள். 85

மருவிய தொழும்பின் மேன்மை வயங்கிய பிரமன் பாங்கர்க்
கருணையின் பெருமை காட்டக் கருதிமற் றவனைக் கூவிப்
பொருவிலி பூசை சாலப் புரிவதற் கிலிங்க மொன்று
தருகவென் றுரைத்தாள் கேட்ட சதுமுகன் வணங்கிக் கூறும். 86

அகிலமு முயிர்த்த நின்று லரிதராப் பொருள்க ளில்லை
சகலமு முணர்ந்து ளாய்க்குச் சாற்றுவ தென்னே யெல்லா
நிகழ்வதைம் பூதத் தத்தப் பூதத்தி னினக்கு வேட்கை
நிகழ்வதி னிபற்று தென்றுன் செவியடுத் துமையாள் பின்னர். 87

உயிரினுக் குலவா வின்பச் சுவையினை யுதவு முத்தி
வியலினை யுணரப் பூசை யியற்றுவாள் சுவையை நல்குஞ்
செயிரறு புனலைக் கொண்டு சிவலிங்க மாக்க முன்னி
யயிர்வரித் தார்க்கு மக்கத் தீர்த்தத்தி னறலைச் சார்ந்தாள். 88

நீக்கமில் லாம லெங்கு நிறைந்தபூ ரணத்தி னின்று
தாக்கற நின்ற வந்தத் தானுவின் சரணம் போற்றிப்
போக்கறு தீர்த்தந் தன்னைப் பொள்ளெனத் திரட்டித் தேசு
தேக்கொளி யிலிங்க மாக்கித் திகழ்தா விருத்தி னாளால். 89

விழைதகு கணவன் மெய்யின் விராயதா மாறு மென்னத்
தழையெழின் மகளாய் நின்ற தற்பரைக் கெறும்வன் மேருக்
குழைதரக் குழைத்த செம்மல் கோனொடு முரணி தென்னப்
பிழைதப நெகிழ்நீர் வன்மைப் பிழம்புறல் வியப்பிற் றேயோ. 90

மங்கலந் துவன்றி யார்ப்ப மாதர்பல் லாண்டி சைப்பப்
புங்கவர் குணலை செய்யப் புலவர்கை கொட்டி யாடச்
சங்கரி சம்பு யோகி தவப்பயன் முற்று விப்பா
னங்கவன் றன்னைக் கூவி நிழற்றெனை வருளிச் செய்வான். 91

மருத்தகு நாவ லென்ன மருவிய சம்பு யோகி
கருத்துறு மகிழ்ச்சி துள்ளக் கவித்துற நிழற்றி நிற்பத்
திருத்தகீர் கொண்டு நாதன் றிருமுடி யாட்ட வெண்ணிப்
பெருத்தபூ நீர்த்த மெல்லாம் பெருகுமா பாவித் திட்டாள். 92



விழுமிய முக்கண் மூர்த்தி விரைமலர்ப் பதத்தன் றுட்கு
முழுவலன் பெழுந்தா லென்ன வுற்றதீர்த் தங்க ளெல்லா
மெழுதலுஞ் சீமத் தீர்த்த மெனவிறும் பூதா கொண்டாள்.
கெழுதகு மனைய தீர்த்த மப்பெயர் கெழுமிற் றன்றே. 93

வத்திய சீமத் தீர்த்தநீ ரினையு மெண்டிசைக் களிற்றின்மேல் வந்த
தூத்தகு தீர்த்தந் தன்னையுஞ் சுகந்தந் தோட்டலர் பெய்தன ளமைத்தாய்
பாத்திய மாச மனமருக் கியமும் பாங்குற வமைத்தருள் கொழிக்கு
மாத்த னூல் விதியாற் சுத்தியோ டைந்து மாக்கின ளகிலமீன் றெடுத்தாள். 94

ஆதன மூர்த்தி யமைத்தரு வுருவ மருவமோ ருருவமா யவற்றின்
பேதமு மாகிப் பிரிவில தாகிப் பிரிதரா வுயிரினைத் தொடர்ந்த
வேதமெய் தரிய தாகியவ் வேத மெனைத்தையுந் துடைத்தருள் கொழிக்குஞ்
சோதியை மூர்த்தி மானென வருளாற் றுகளறக் கண்டருச் சித்தாள். 95

பகர்ந்தபாத் தியமுன் மூன்றமே ளளித்துப் பகர்தயி லாதிக ளாட்டித்
திகழ்ந்திடு மவற்றி னிடையிடை யலர்கள் சேர்த்திரும் புகையொளி யுணவு
மகிழ்ந்திட வளித்துச் சுத்தநீ ராட்டி வயங்கிய வுருத்திர மனைத்தும்
புகழ்ந்திடுஞ் சந்தக் குழம்பருக் கியமும் பொற்புற முறையினாட் டினளால். 96

துழையிழைத் துகிலாற் றிருவுரு வீர நொடிக்குமுன் புலர்த்திமின் னனைகாண்
டழையழ கெறிக்குங் கோவணம் பட்டுஞ் சாத்திமெய் முழுவதுங் குளிர்பக்
குழைவிரைக் கலவை கோட்டியொண் சுண்ணங் கூர்தர மீமிசை யட்டி
விழைதரு கல்லுங் தொங்கலா திகளும் வேறுவே றெடுத்தலங் கரித்தாள். 97

அறுசுவை கொழிக்கு நால்வகை யுண்டி யனைத்தமின் னுழைகிளர்ந் தூட்டி
நறுவிரைப் புதுநீர் பொழிந்துபா சுலட்டு நல்குபு பல்வகை யொளியும்
பெறுமுறை சுழற்றிக் குடைமுத லுதவிப் பெருகிய வியப்புவித் தெதிரே
யுறுவசி முதலோர் தமைநடத் தியக்கி நின்றனை ளோடரிக் கண்ணாள். 98

நிச்சலுங் காலந் தொறுந்தொறு முள்ள நெகிழ்தர வுருகியவ் வாறங்
கெச்சமில் பூசை புரிகுவா ளொருநா ளினிதுபூ சனைமுடிந் ததற்பின்
முச்சகம் பழிச்சு முதல்வனைத் தணந்த முறைமையை நினைந்தன ளாகி
வெச்சென வுயிர்த்துப் புளகமெய் போர்ப்ப விழுத்தகு துதிவிளம் பினளால். 99

உலகே ழுமொடுங் கவெழுந் துங்கி ரூழிக் கனலுங் குளிரத் தழலாய்ப்
புலவோர் நலம்வந் தழியக் கடுகும் புகர்கஞ் சமயின் றபுரா தனனே
மலரோன் மகண்மே லெழுகா தலினால் வருபா வமகற் றியநா வல்வன
மிலமா கவிருந் தருள்வா யடியேற் கெளிவந் தருளா டையினைந் திடுமே. 100

அருளே துமிலா தொருபா லனுயி ரழியத் தொடர்தென் றிசையா னியமன்
பொருளே துமிலா னெனவே சிலமேற் புராச் சரணோச் சியபுண் ணியனே

தெருளே காமிலான் பிறனில் விழையுஞ் சேர்ந்தார்க் கொலித் வைய்தை தருஞ
மிருளே காமிலா ததலத் தடியேற் கெளிவர் தருளா னமயியைத் திஙமே. 101

கலங்கிப் புலவோர் பெரிதால் ஞலையக் கழயுந் தருவோர் குவகாழ்க் கையுறய்
வலங்கொள் புரமூன் றமொருங் கவிய மாயப் படைதொட் டமலர்க் கரனே
தலைக்குங் கிரணப் பனிமா மதியோன் றொடர்சா பமறுத் தவாஞ் செறிவித்
திலங்கும் புகழ்ஞா னதலத் தடியேற் கெளிவர் தருளா மையியைத் திஙமே. 102

விண்ணுறு மெகமெம் புவியுந் திட வெள்ளிக் கிரியைப் பெயர்வித் திடுவோன்
கண்ணுர் முகமும் புயமுந் சிரமுங் கழ்தா கநெரித் தருள்கால் விரலோய்
புண்ணு டியவார் ஞ்லிசப் படையோன் புகர்வன் கொலைபோக் கிரங் கள்பவ
வெண்ணு தருண்ஞா னதலத் தடியேற் கெளிவர் தருளா னமயியைத் திஙமே. 103

பராவிப் பணியா தடியுஞ் சிரமும் பார்ப்பா மெனவெண் ணுமறன் கடையால்
வராகந் தொடுபுள் ளுருமா லயறு மருவுங் கழிமேன் மையவா னவனே
விராவித் தவமாற் றியசம் புமுனி வெய்யோன் யலைகோ லையடக் குமுனி
யிராமற் கருண்ஞா னதலத் தடியேற் கெளிவர் தருளா னமயியைத் திஙமே. 104

விலக்கற் கரையன் பெறமெல் லியலாள் விம்மாக் குகரைத் துகரைத் தருகித்
துலங்கித் தளர்வெய் தமருங் குல்விழி சோரப் புனைவக் கைசிரக் குவிய
விலங்கப் புளகங் களிக்கா றதநி யிவைவித் தறசோ கமினங் கறமே [றனனே.
யலங்கற் சடையண் ணல்விரைந் தெதிரே யடல்வெள் விடைமேல் வெளிநின்

பூதகணம் புடைசூழப் புக்கேளிர் பொழிகின்ற
சீதமலர் வெளிதூர்ப்பத் திசைமுழுது மிசைதேங்க
வேதமுனி வார்பழிச்ச மெய்யன்பர் ருதகளிப்ப
நாதரினி தருள்காட்டி நயனமலர்க் கெதிர்கண்டாள் 106

இருங்கண்ணிற் சிறந்தயுறப் பிலலையெனன் முகமனே
கருங்கண்க டம்பிரான் காட்சியிஞற் களித்தலொடும்
பெருங்களிகெந் சகங்கொள்ளப் பேரமைத்தோன் முலைவிம்ம
வொருங்குருவ மனைத்தமெழி லோங்கிளவா துணையவட்கே. 107

அல்லவரைந்த மலர்க்கூந்த லெிலாண்ட நாயகியின்
வல்விரைந்த பதமலரின் வணங்கியொரு பாணிற்பக்
கல்வரைந்த வெறழ்த்திண்டோட் காபாலி கண்ணளித்தச்
சொல்வரைந்த கருணையிஞற் றுக்கவரங் கொள்கென்ருன். 108

எவ்வுயிர்க்கு மெஞ்ஞான்று மிருங்கிழவ ருய்கிற்கு
மவ்வுயிரின் கிழவனையே யருங்கிழவ னெனச்சார்ந்த
கொவ்வைவாறுங் கனிவாயாள் கொண்கர்திரு வருளேக்கி
முவ்வுலகு மொளிதய்ய மூன்னிவரங் கொள்ளுமால். 109

---



௨

## வரங்கொள்படலம்.

இமையார்க டொழுதேத்து மெம்பெருமா னெனையாள விலிங்க மாகி
யமிழ்தேச னெனச்சம்பு மூலத்தி லமர்ந்தனையே யனைய தான
வமிழ்தேச னெனுநாமங் கேட்டவர்கள் சாலோக மடைக வன்பா
லமிழ்தேச னெனுங்குறியைக் கண்டவர்கள் சாமீப மடைக மாதோ. 1

திப்பியமா கியவமுத லிங்கத்தைத் தியானித்துத் தெரிசித் தோர்க
ளொப்பரிய நின்னுருவ முறுகவந்தச் சிவலிங்கத் துவந்து பூசை
யெப்பொழுதி னெப்பொருள்கொண் டியற்றினே ரும்வினையி னிரியல் போக
வைப்பனைய நினதடிக்கீழ் மாருத சிவானுபவ மருவி வாழ்க. 2

பெருமானே யமுதலிங்கத் தொருநாளைப் பூசனைக்குப் பெட்பி னேடும்
பொருளாதி கொடுத்தவர்க ளிட்மையிலே வேட்டபெரும் போக மூழ்கி
யொருவாத சிவலோகத் தாண்டிலக்க முறைந்துவ்ள மூன்னிற் றெல்லா
மருகாமை யெதிர்நிற்பப் பெரும்போகத் திடையழுந்தி யருளிற் சேர்க.. 3

இன்னல்கெட நின்முடியின் மனுவோதி யெளியனே னெடுத்திங் காட்டு
மன்னியசீ மத்தீர்த்த தெரிசனத்தாற் பரிசத்தால் வருநீர் வேட்கை
பின்னமுறு பானத்தா லூர்வனவு முத்திநிலை பெறுக வேட்ட
வெந்நலமு மத்தீர்த்த மூரைத்தவரும் பெற்றின்ப முத்தி சேர்க. 4

மாதவங்க ளத்தகுசீ மத்தீர்த்தத் தருகிருந்து வயக்கி னேர்க்கு
மேதகைய பயனனந்த மாயுறுக கோதானம் விரும்பி யொன்று
கோதகலு மந்தணர்க்குக் கொடுத்தவர்க்குப் பரிமேதங் குயின்ற பேறு
தீதகல வுளதாக சிரித்தெயின்மூன் றெருங்கெரித்த தேவ தேவே. 5

திலதானம் புரிந்தவர்க்குச் செறிந்தபல பாவமெலாந் தேய்ந்து மாய்க
வுலவாத செழுங்கனக முதவுநர்கள் பரிதிபதத் துறைந்து வாழ்க
விலகாத சுவைநறுநெய் வீசிநருக் கக்கினிட்டோ மத்தின் மேவு
பலனுர்க பாணிவளர் பகழிவிழி கிடந்தொளிரும் பதுமத் தாளோய். 6

வத்திரதா னங்கொடுப்போ ராயுளொடு பெருஞ்செல்வ மருவி யீற்றிற்
பொத்தியசீர் வருணபத முறுகதா னியதானம் புகன்று செய்வோர்
பத்தியெவ ரும்புரியத் தெய்வதமாய் விளங்குகபைங் கழையின் கட்டி
யுத்தமருக் குதவினே ருறதகநன் னுகர்ச்சியென வுரைப்ப வெல்லாம். 7

தவளவிர சிதக்கொடுப்போர் சந்திரன்வாழ் பதமுறுக தரணி யீவோர்
திவளுமுடி யிந்திரனாய் விண்முழுதும் புரக்கநிக பூப்பீ வோர்க
ளிவளவரு மிடும்பையெலாந் துமித்தின்ப முறுகதவர்க் கனியாய் வேய்த்தோட்
குவளைவிழிக் கன்னியரைக் கொடுப்பவர்கள் விண்டுபதங் குலாவி வாழ்க. 8

அன்னதா னம்புரிவோ ரன்னமொரோ ரொன்றினுக்குக் கற்ப மொவ்வொன்
றென்னையா ளுடையபிரான் சிவலோகத் தினிதமர்க விலிங்க மீவோர்
தின்னுபோ கம்பலவு மீண்டெய்தித் தோலாத வின்ப மெல்லா
மன்னுமீ சுரபதத்தி னேற்றவர்க ளொழிவின்றி மருவி வாழ்க. 9

சிவனிசியிற் சிவலிங்க முபகரணத் தொடுமளிப்போர் சிறப்ப வேற்றிட்
டவமறுபூ சனைபுரிவோ ரப்பொழுதே சிவன்முத்த ராக செஞ்சக்
கவலையறு கண்மணிக ளீவோரு மேற்பவருங் கயிலா யத்து
முவமையறு சிவபுரத்து மொரோரொன்றுக் கொருபதிற்றுண் டுறைந்து வாழ்க. 10

மும்மலந்தாட் படப்படுக்கு மித்தலத்தின் முற்றவங்கள் முயன்ற பேற்றுச்
செம்மைபெறுஞ் சிவஞான மளிப்பவரு மேற்பவருஞ் செயிரிற் றீர்ந்து
விம்மியபே ரானந்த வெள்ளத்தன் வாதனையும் விளிவி மூழ்க
வம்மவிந்த ஞானதல மமுதேச மெனும்பெயரு மணிவ தாக. 11

அமுதேச மெனப்படுமித் தலத்தெல்லை யைங்குரோ சத்தி னுள்ளா
லமையாத காதலினு லந்தணரைப் பதிட்டைசெய்வோ ரலக்க னீக்கி
யிமையார்க ளழுக்கறுப்பப் பிரமத்தின் வாழ்கவிவர்க் கவனி யிந்தோ
ரெமையாளு நாயகசா ரூபத்திற் சிவன்முத்தி யெய்தி வாழ்க. 12

திருமாலைப் பதிட்டைசெய்வோர் திப்பியமாம் வைகுந்தஞ் சேர்ந்து வாழ்க
பொருவேறு மில்லாத சிவலிங்கப் பதிட்டைசெய்வோர் பொக்க நீக்கி
யொருவாத விம்மைமறு மையிற்போக நுகர்ந்துயர்ந்த வீடு சேர்க
பெருவாழ்வு தருமிந்தத் தலம்வசிப்போர் நின்னடியைப் பிரியா ராக. 13

வேறுவே றிவ்வாறு வரம்பலவும் விழைந்திரந்து வியந்து போற்றி
நாறுபூங் குழலுமையா ளுடனிரு முகநோக்கி நப்ப யான்முன்
கூறியதோர் விறலினுக்குத் தாமீண்டு கொடுத்துமெனக் குறித்தி யன்றே
தேறுமா றினியதுவுந் தெரிந்தருளா யெனக்கேட்ட தேவ தேவன். 14

இரந்தபல் வரங்களு மீந்திட் டாமதுச்
சுரந்தபன் மலர்க்குழற் றோகை மற்றினி
யரந்தைவை யகந்தனக் கறவி ருயதற்
குரந்திக ழிறையுமின் குரைத்து மென்றபின். 15

நன்னிழற் பரப்புறு நாவற் குருவாய்
முன்னுறுஞ் சம்புமா முனியை நோக்கியு



ளன்னது தெரிந்தவ னுடித் தாழ்ந்தெழூஉந்
துன்னருங் களிப்பினு லுரைத்தன் மேயினன். 16

அடியனே னுய்ந்தன னடிய னேனுறுங்
குடிமுத லெழுமையுங் கோதற் றுய்ந்தன
முடிபொதிர்த் தெழூஉந்தவிம் முறிசெய் நாவலங்
கடிநிழற் கருணையிற் கலந்த நீர்மையால். 17

எழிலமு தீச்சர மென்னு மித்தலந், தொழுதகு சம்புவீச் சரமென் றோதவு
நிழலிதி னென்றுநீ நிலையின் வைகவு, மழகிய வரமென வருளல் வேண்டுமால். 18

என்றுபல் வரங்களு மிரப்ப வெம்பிரா, னன்றென வனையெலா நல்கிப் பாங்கரிற்
றுன்றிய மறைபல துதிக்கும் வேதன்மே, லொன்றிய வருள்விழி யுறுத்தி னனரோ.

கமலமெல்லணையினன் கசிந்துதாழ்ந்தெழுந், தமலனேயுய்ந்தனேனகிலகோடியுந்
திமிரவல்வினைகளிற்றீர்ந்தின்றுய்ந்தவென், றிமிழ்கொளுமன்பினுலினிதுகூறுவா
[ன்.

காசினை மிலகிய கண்டத் தெம்பிரான், மாசிமா மதிவரு மதியி னுளெனப்
பேசிய மிருகசீ ரிடத்திற் பேணிய, தேசவிர் விடைக்கொடி சிறப்ப வேற்றுபு. 21

பொங்கெழிற் றிருவிழாப் பொலியச் செய்துபின்
பங்குனி மதியிடைப் பகரென் னுளெனத்
தங்கிய வுரோகணி தன்னி னீள்கொடி
யிங்குயி ரனைத்துமின் பெய்தத் தாழ்த்துபு. 22

அற்றைநா ளென்பெய ரணிந்த தீர்த்தத்தி
னுற்றவ ரனைவரு முவந்து தோயவு
மற்றவர் வேட்டபல் வரங்க ளெய்தவும்
பற்றிய தெனதுளம் பணிக்க வென்றனன். 23

பங்கய னின்னணம் பகரக் கேட்டரு
ளங்கண னன்னண மாக வென்றுபின்
றங்கினின் றேத்துநர் தங்கண் மேலெலாம்
பொங்கருள் விழியெதிர் புகுத்தி னனரோ. 24

அவரவர் மகிழ்ச்சியி னடிகள் போற்றிநின்
றிவறிய வரமெலா மியம்பிப் பெற்றனர்
சிவபிரா னின்னணம் வரங்கள் சேர்த்தென
வுவமையி லருளுமைக் குதவப் புக்கனன். 25

# ஞானோபதேசப்படலம்.

சந்த வான்மதி மிலைச்சிய தாழ்சடை யழகர்
நந்தி வாண்முக நோக்கினை நந்திதாழ்ந் தெழுந்து
முந்த ஞானிரு வுளத்தெழு முன்னையிக் கறிந்திட்
டந்தின் மேயினு சியானையும் புடையகற் றினனால். 1

சம்பு மாதவ னக்தியென் றிருவருந் தவஞ்ச
ஞம்ப ராக்கரி யனமிக வுருந்திய பேற்று
லம்பர் மாதுமை யானொடங் கேட்டிய வருள்பெற்
றெம்பி ரானிருந் தருள்புரி யண்டப மிசைத்தார். 2

சிமைய மால்வரை யெனச்சிறந் தொளிருமண் டபத்து
ளமையு மாதனத் தக்கணன் வீற்றிருந் தருளி
யுமையை நோக்கிநீ யோருப் படுவின்வி ஞவினையாற்
சமைய மாறுமுய்ந் திடுவது கேளெனச் சாற்றும். 3

உலக மியாவையு மோங்கிய சமதருள் வழியி
னிலவு நீர்மைய தாதலி னிழன்மணிப் புவு
யிலக வாட்டிவா ஞடிருமான் காட்டுமா றென்னைப்
பலவு மாற்பயின் றலகினைப் பயிற்றுதல் வேண்டும். 4

ஆகை யான்மல பந்தமா கியவுயிர் மாயா
போக மார்தர நிற்றழீஇப் போகியா யிருந்தும்
யோக மாற்றிமெய்ஞ் ஞானமுற் றுயர்சிவ போகத்
தேக மாகிவீ டெய்திட யோகியா யிருந்தும். 5

விரைத்த மென்மலர் வாளியான் விளித்கா ரணமு
நிரைத்த வையகத் தியாவரு நேரிழை யவர்பால்
வரைத்த வின்னல நுகர்த்தகா ரணமுமா னனையா
யுரைத்த வொண்பொரு ளிரண்டிற்குஞ் சான்றென வுணர்தி. 6

என்று கூறலு மகிழ்ந்துமை யிறைஞ்சியீ துரைக்கு
மொன்று மாமலத் தழுந்திய வுயிரெலா மாயைத்
துன்று போகமுற றனதருள் ஞானத்தாற் றுகடீர்
நன்று வீட்டினை நண்ணுமென் றுரைத்திரா யகனே. 7

82



இருளு மாமலம் யாதுயிர் யாதியா மாயை
கரும மியாதுமெய்ஞ் ஞானமியா தியாதுகாண் முத்தி
பொருவி லாவிவை யனைத்தையும் புகரற வடியேன்
றெருளு மாறரு ளுதியெனச் செய்யவாய் மலர்ந்தாள். 8

சிலையு யிழ்த்தவ ளின்னண மிருவலுந் தெரிக்கு
கலைம லர்க்கரத் தணிந்தருள் கண்ணுதற் பெருமா
னிலைமு நத்தபூ ணிளமுலை மாதரா யெல்லா
மலைவ றத்தெளிப் பாமதி யெனவிறை வழங்கும். 9

காள வன்மல மூலந்தங் காலவெல் லைகளின்
மீளு மெண்ணருஞ் சத்திக ளுடையதாய் விரவிக்
கோளு றும்பசு வறிவினைக் கூட்டொடு மறைக்கும்
வாளு றும்பல விழியினை மறைத்திடு மிருள்போல். 10

எண்ணி றந்தன சிற்றறி வினும்பல வியல்பி
னண்ணி நிற்பன சார்ந்ததன் வண்ணமாய் நவில்வ
வண்ணு சிற்றறி வினுஞ்சுதந் தரத்தன வல்ல
வுண்ண யந்தநா முணர்த்திடி னுணர்வன வுயிரே. 11

ம...ய சுத்தமே யசுத்தமே யெனவிரு வகையா
மாய மாயைக ளிரண்டுமெய் யறிவுரு வல்லாற்
றேயு முதநம் மருளினாற் றொழிலுற்று முயிர்க்கு
மேய சேர்த்தனு வாதிக ளுன்குமாய் விரியும். 12

கரும மென்பது மாயையே கருவிக ளாகத்
தெருள்வ ழங்குநம் மருளெனப் படுந்திரோ தானப்
பொருவில் சத்தியின் சகாயத்தாற் புல்லறி வுயிர்கண்
முருகு விம்மிய குழலினுய் முனைந்துசெய் தொழிலாம். 13

புந்தி வாக்குரு வத்திலும் புரியுமன் னதுதான்
வந்து நல்லதுந் தீயது மெனவிரு வகையா
மந்த நல்லதுந் தீயதுஞ் சஞ்சித மாகிப்
பிந்தி யாருயிர்க் குணவுமாய்ப் பிறப்புக்கும் வித்தாம். 14

உருவத் தாற்கரு மந்தவ வீட்டியு முருவல
கருமத் தாற்றவ வீட்டியுங் காழ்த்தவா ணவமே
மருவத் தாழ்ந்தகே வலத்திடை மன்னிய வுயிரிற்
றிருவத் தாஞ்சக லத்தியா னெனதெனச் செருக்கும்.

இதமெ னப்படு நல்வினை யின்பமே பயக்கு
மிதமெ னப்படாத் தீவினை யின்னலே பயக்கு

மதர்கெ டுங்கருப் மற்றவை யறிந்துசெய் வினையுங்
கதுவு கெஞ்சறி யாதுசெய் வினையுமாய்க் கலவும். 16

புடைபெ யர்ந்திடும் வினைபுடை பெயர்த [illegible] வினையென்
றடைவி னேறிய வவ்வி [illegible] யிவ்விதத் [illegible] டார்
தொடைம லர்க்குழன் மாயையுங் கருமமுந் தொடர்ந்துத்
தடைசெய் யாணவத் தொன்மல மூன்றெனத் தருமால். 17

மாயை காரிய மாணமா மாயையு கம [illegible]
ஆய சேரு ளொனுந் திரோ தாயியுந் தொகுத்திட்
டாயு தான்மல மைந்தென வறைவது முண்டாற்
றேயு நூலிடை வருத்திய நிதலைமென் முலையாய். 18

இனைய வைம்மல பந்தமு மிரண்டெனும் பழைய
வினையும் வன்மல வேருமா மாவினுந் தல்லாற்
றினையு நந்தமக் கில்லைநந் திருவரு ளொழிய
வினைய மாயையுங் கருமமு மாவியு மசையா. 19

இந்த மாயையுங் கருமமும் பந்தமே யிவற்றைத்
தந்த தாருயிர்க் கென்னெனிற் சாற்றுதுங் கேண்மோ
முந்து மாணவ மூலங்கெட மூட்டின மாசு
சிந்த வேறுபா சுவையிற் செறித்திடு மாபோல். 20

படைத்த தும்புவ னங்களைப் பாதுகாத் ததும்பின்
றுடைத்த துந்தக வுறுத்தது மருந்தெறத் ததுவென்
றடுத்த வைந்தொழி லயன்முத லைவரு மாய்நா
மெடுத்து நின்றன மாவினு மெமக்கிலை விகாரம். 21

விரவு மாயையெம் முடைமையற் றுயிரும் விடந்தா
னரவை யென்செய்யு மங்கியைச் சுடுமென் செய்யும்
பரவு மிந்திர ஞாலப்பண் ணுநரையென் செய்யுங்
குரவ மாலைபா யெமக்கது கொடாதுகாண் மயக்கம். 22

அல்ல தாஉயிரு ளாணவ மயக்குவ ததனு
னல்ல மாயையுங் கருமமு நாடிய வுயிரை
வல்ல வாறெலா மயக்குவ மயக்குமா ணவந்தேய்ந்
தில்லை யேலவை யுயிரையு மயக்குவ திலையே. 23

தேங்கு பேரொளி யாகிய சிவமெனு நாமு
நீங்கு றுதருஞ் சத்தியாய் நிலைபெறு மருளுங்
[illegible]கு மாவியுந் தொடர்திரோ தாயியும் பிந்த
[illegible] மாணவத் தெழுவலி யுரைப்பரி தனைக்கே. 24



கரிய வாணவந் தேயுமா கலந்தருஞ் சத்தி
யுரிய தாகுசெ [illegible]ண்ணிய முடன்விரா யுட்டும்
பெரிய வா[illegible]றாய் பின்மல பாகமாம் பின்னர்
விரியு [illegible]தி பாதம்பின் வினையொப்பு மேவும். 25

ஆய[illegible] [illegible]ன வறைதிரோ தாயி
மாயி[illegible]ருக[illegible]வ்வயு மாறவே [illegible]ாறித்
தாய வின்னரு ளாகியே நின்றிடுந் தோகா
யேயு மிவ்வரு ளால்ல திருதுயிர்க் கிறளே. 26

இச்சை ஞானமுங் கிரியையு மானவிவ் வருளே
[illegible]ச்சி லாகிய கலாதியிச் சையுந்தொலைத் திட்டு
[illegible]வச்செ ஞெணவம் விழுங்கிடப் பட்டவா ருயிரி
னிச்சை யாதியும் விளக்கியுள் ளிருத்திமே லாகும். 27

பிறிவு றுதவெம் மருளினு லெம்மையும் பெயரா
மறிவி னீங்கிய தன்னையு மலைவறத் தெரிந்த
வறிவு பானுவின் விழியென வெம்முளே யடங்கிச்
செறியு மானந்த மொன்றமே திளைக்குந்தே மொழியாய். 28

மருளி னுன்முத லென்றலு மன்னுயி ரருள்கண்
டருளி னுன்முத லென்றலு மருண்முத லென்றுந்
தெருளி லாததி லழுந்தலுந் தீர்ந்தெம்மோ டறிவா
[illegible]ிருள்செய் கேவலம் போற்கலந் திருப்பதே முத்தி. 29

பேத மாகிய பாவனை பேணுவ தெல்லா
மேத மாகிய பந்தமே யென்றியா னெனுமால்
போத வாருயி ரபேதபா வனைபுரி வஃதே
மாத ராயுயர் முத்தியென் றுரைத்திடு மறையும். 30

பரிதி முன்னிரு ளெனமலம் பரையிடை மாயுங்
கருவி முன்பகல் விளக்கொடு கடுக்குமு மொன்றே
மருவு மன்னதுங் கருணையால் வாங்குவம் யாமே
பொருவில் சஞ்சித முன்னரே யழிந்தது பூவாய். 31


என்ற தூழுட விருத்தலி னேறும்வல் வினையுந்
தோன்று மேற்றிரு வெழுத்தினைச் சூழ்ந்திடி னழியுஞ்
சான்ற வீட்டினைச் சார்ந்தவர் தமக்குமா லையமுன்
மூன்று மார்வமோ டிறைஞ்சுதன் முறைமையா மதைக்கே. 32

தொடுத்த நின்பெருங் கடாவினுக் கவிர்பொலந் தொடியாய்
விடுத்த னம்விடை யறிகென விமலனு ரருள

யடுத்த வஞ்சொடு கேட்டமால் வரைமக ளோடுந்
தடுத்த வைம்பொறி தந்தியுஞ் சம்புமா முனியும்.

அருளெ லாமுளத் தழுத்தினர் தெளிந்தனர்
மருளெ லாந்தப மருவினர் மன்னுமுப் பாரு
மொருவி மேற்பெரும் பாழெனு முலப்பி...
பொருளொ டேகமாய்ப் பொருந்தி முத்...

சிவன் முத்தியே திகழ்பர முத்தியே யென்ன
வேவு முத்தியோ ரிரண்டினு மேயின ராகி.
மூவ ரும்பணி முயன்றிருந் தனரியன் முயன்ற
தேவ ருந்தொழுந் திருவிழாத் திறமினித் தெரிப்பாம்.





உ

# திருவிழாப்படலம்.

பொறிவண் டுழக்க முறுக்கவிழ்ந்து புதுத்தேன் றளிக்குஞ் செழுங்கமல
நறுமென் பொகுட்டு மலர்த்தவிசி னன்கு தலைப்பண் ணவனுவற்
செறிமென் னிழலில் வீற்றிருக்குந் தேவர் தேவ னருள்வாய்த்தா
னெறியி னினிய திருவிழா நிலத்திற் புரிவா னிதுசெய்தான். 1

புரிசை யாதி பலவுமுப்பும் பொருப்பென் றெவரு மதிசயிப்ப
வரிசை யாக வாலயநூன் மரபின் வகுத்துங் கிரணங்கள்
விரிசெய் மாட மாளிகைகள் விருந்த பலவீ தியும்போக்கித்
துரிசி லாத மணிநகரந் துறக்க நாண நிருமித்தான். 2

நெகிழன் புருக்க வகிலாண்ட நிமலை யுருவ மிருந்தாங்கே
திகழ வுளத்திற் றியானித்துச் சிற்பம் விளங்கத் திருவுருவொன்
றகில வுயிருங் கதிசேர வமைத்து நிறுவிப் பூசித்துப்
புகழைங் கரன்வேண் முதலான புலவ ருருவு மினிதமைத்தான். 3

செம்பொன் மணித்தேர் கடாங்கவிழ்க்குஞ் சினவெங் களிறு வாம்புரவி
யம்பொற் சிவிகை கவிகைகொடி யால வட்ட மயிர்ச்சவரி
யிம்பர் விழையும் பலபொருளு மீண்ட வாக்கி விழாமுடங்க
வும்பர் முதலோர் வரவிடுத்தா னுலக மாக்கும் பணிதொடுத்தான். 4

முடங்க லேற்று மலர்த்தவிசின் முறையி னிருத்தி முடிதாழ்த்தி
மடங்க லரியா மகிழ்சிறப்ப மதர்க்கண் மடமா தர்களோடு
மிடங்கொள் வானத் திமையாரு மெண்மர் திருமுர்கர்களும்
விடங்கொப் புளிக்கு மணிவேற்கை வேந்தர் பலருஞ் சென்றிறுத்தார். 5

வம்பு விரியுஞ் செழுங்கமல மலர்மேல் லணையான் மகிழ்சிறப்பக்
கும்ப மதியிற் கார்த்திகைநாள் குலவுந் தினத்தி லியமியம்ப
வும்பர் முதலோர் புடைசூழ வொளிர்மண் விதியாற் றினிற்கவர்ந்து
பம்பு மணிப்பா லிகைபலவும் பரப்பிச் சொரிந்து முளைதெளித்தான். 6

வழிநா ளடுத்த வுரோகணியின் மதவெள் விடையை யிலேகித்த
செழிவான் படத்திற் பூசித்துத் திகழு மிருக சீரிடத்திற்
கழிவா னவர்க டொழுஞ்சோமாக் கந்த ரெதிரே யெழுந்தருளப்
பழிதீர்ந் துலக முழுதய்யும் படிவார் கொடியிற் பசுவுயர்த்தான். 7

அந்நாளை யாலை முதலாக வந்த காருக் காறென்று
நன்னாட் காலை யிருக நவிற்று மிரைவ் காலத்தும்
பொன்னார் மணிக்கிம் புரிக்கோட்டுப் புத்தேன் மூருக வேளிவர்க்குக்
கொன்னு தாவிற் திருவிழாக் கோலம் பிறங்கக் குயிற்றினான். 8

ஆறுந் திருநாண் மாலைமுத லாக வொன்பா னாட்காலை
யிருங் கால மோராறு மிருண்மா மலத்தி னரிகல்கடக்கு
வேறுய்ச் சிவத்தி னொன்றுமி விளக்கு நீறல் கண்மணியும்
பேறுத் தரிக்கு மடியார்க்குப் பிறங்கத் திருச்சா தினியெடுத்தான். 9

ஒன்பான் றிருநாண் மாலைமுத லாக வொருபன் னிரண்டாநா
டன்பாற் காலை யிருகச் சாற்று மோறு காலத்து
மன்பா தரவிற் கலியாண வழகர் தமக்குத் திருவிழா
நன்பார் முழுதாங் களியாக்கி நகையிற் றேர் விளிதமைத்தான். 10

ஒருபன் னிரண்டாந் திருநாளி னுற்ற மாலை முதலாகப்
பொருவில் குண்ட மோரைந்திற் பொங்குஞ் சமூலா குதியோம்பி
மருவு மிருநாற் றிசைமுழுது மதுவாற் றடைத்துப் பலியோக்கிச்
செருவின் மலியத் திரதேவர் தம்க்கு விழாமுன் செய்திட்டு. 11

பதினே ழெனவந் திகந்திருநாட் பயின்ற காலை யிருக
விதியா னின்ற வீரைந்து காலத் திடத்தும் வெவ்வேறு
கதிசே ருர்தி மேல்கொண்டு கவின்சற் றிடசே கரர்போத
நிதியார் பலருந் தானங்க ளிகழ்த்தி வணங்க விழாவெடுத்தான். 12

அந்தப் பதினே ழெறுந்திருநா ளந்திக் காலத் திமிலேற்றுச்
சந்தப் படமோ ரெட்டிலையுந் தயங்கப் பூசை யினிதமைத்துப்
பந்தப் பழைய வினைமுருக்கப் பதினெட் டெனுநாட் காலைதனில்
வந்தப் பனித்தா ரெதிர்ந்திறப வயங்கெண் கொடியும் பசவுயர்த்தான். 13

ஒன்பா னிரட்டித் திருநாளெண் ணுரைத்த வைகல் முதலாக
வொன்பான் மணிக்குன் றமுஞ்செந்தீ பொளிர வந்நாண் மாலையினில்
வன்பார் மகன்செய் தவம்வாய்ப்ப மணிநித் திலப்பந் தரினீழ
லென்பா பரணப் பெருமானு ரெதிரில் வீசி யுலாப்போந்தார். 14

புணரு மிடனும் வரைக்கின்னோ பூக்கைக் கருப்புச் சிலைமலர்க்கோ
லணவு தொழிற்கேற் புறக்கிரியி னனைக்கு செலுத்த வட்டினிய
கணவர் பூத நாதரெனக் கரையும் பெயர்க்கேற் புறப்பூதத்
தணிவி லூர்தி பத்தொன்பா னாளிற் றயங்கக் கடாவினார். 15

திருமா றனது கூறேயாஞ் செயலைத் தெரித்தாங் கவனைவை
யொருபா லுமையாள் கொளக்கொடைவமக் கொருவ ரிவரே யெனவெவரு



மருளா துணரக் கொடைவழங்கு மலர்க்கற் பகத்தை யண்ணலிரு
ருபான் றினத்திற் திருவீதி யெழில்கொப் புளிப்பத் தூண்டினார். 16

மன்று வடியார் புரிகுற்ற மதியா தவர்செய் குணங்கொள்ளு
நன்றி தெரித்தாங் கறனீக்கி நற்பா லுறையுள் ளுமையூரக்
குன்று மினைந்தாங் கியல்கொள்கை கொள்ள வெவலுங் கயிலாய
மொன்று தலைப்பெ யிருபானு னவப்புற் றிறைவ னூர்தினார். 17

தரும விடையு மால்விடையுஞ் சகல பொருளு மொருபாதி
மருவு வுருவிற் பாதியுறு மாதுந் தாமும் பகுத்தாங்குப்
பொருவெள் விடைகள் வெவ்வேறு பூங்க ளுமையு மொருதாமுந்
தெருவி னிருப திரண்டாநாட் செம்மற் சிவனார் நடாவினார். 18

மூன்று தலைப்பெய் யிருபதென மொழியுந் திருநா ளவிர்செம்பொ
னான்ற மணித்தே ரைங்கரனு மயில்வே லிறையுஞ் சண்டனுங்கான்
கான்ற வெறிப்பூங் குழற்கொடியுங் கறுமென் றுகைப்பப் புரமநாட்
சான்ற திலத்தேர் பொருமணித்தேர் சங்கத் தலைவ ருருட்டினார். 19

விலங்கற் கரசன் றமகளிர்க் கரசாய் விளங்குந் தனக்கியைய
விலங்குக் கரசை யகிலாண்ட விமலை யுகைப்ப வழுதேசர்
மலங்க வமித்தார் வடிவிடத்தும் வந்த தெறித்தாங் கருணயமா
யிலங்கு நந்தி தனையருநான் கென்னு நாளி னியக்கினார். 20

ஐயைந் தெனவந் திகந்திருநா ளாங்கோ ரியின்மா துமையேக
வையத் தரித்த வயிற்றிவுளி மல்குங் கலியிற் றியோர்க
ளையுந் திறஞ்செய வரம்பெறுவா ருடிச் சுமந்த தெனவனப்புச்
செய்யும் புரவி மேற்கொண்டு செக்கர்ச் சடையா ருங்கினார். 21

பயில்வா னவர்கள் பலர்காவப் பசும்பொற் குழைக்கா துமைமாது
செயிர்தீர் சிவிகை மேற்கொள்ளத் திகழ்ந்த வாதிப் பெருஞ்செல்வப்
பெயரா தரிக்குஞ் செயற்கேற்பப் பேணு மிருபத் தாறுநா
ளயிரா வணத்தை வெண்ணுஞ்சு வடிவீற் றிருந்தா ரினிதுகைத்தார். 22

மன்றி னடிக்கும் பெருமானார் வயங்க விருபத் தேழுநா
ளொன்றும் விடியற் சிறுகாலை யுவப்பக் காட்சி கொடுத்தசற்பி
னன்று வருமு ரோகணிநண் பகலி னயனார் தீர்த்தத்திற்
கொன்றை முடியா ரிருந்தீர்த்தங் கொடுத்தா ருலகங் குறைதீர. 23

அந்நாண் மாலை யெண்கொடியு மாண்ட பசுவே தினிதிறக்கப்
பின்னு மிருபத் தெட்டாநாட் பேணு மாலை முதலாக
முந்நாண் மாலை யிருக மூன்று பொழுதுஞ் சிவிகையின்மே
லென்றன் பள்ளி யறைப்பெருமா னெழிலார் கோயி லுலாப்போந்தான். 24

மோன முறுநற் றிருவிழா முப்பத் தொருநாண் முதலாக
வீன மகல மூன்றுநா ளியங்க முப்பத் தொருநாள்சென்
றுன தினமுன் மூன்றுநா ளருள்சேர் நிலவு சண்டேச
ஞான மகன்ற மணிமுத்தி நோர்தி நிழலி னுலாப்போந்தான். 25

மொழிந்த சண்டன் றிருவிழா முடிவா முப்பத் தாறுநா
ளிழிந்த குணத்தார் மனமேபோன் றிருண்ட கலரு விணர்மலர்கள்
பொழிந்து புலவர் போற்றிசைப்பப் போற்று மடியார் மும்மையு
மழிந்து விடமற் றொருகொடியி னுனே றிறங்கி யயன்றொழுதான். 26

மறைகுத் திரமே புராணமே வயங்கு கீத மேகிருத்த
நிறைவாத் தியமே யெனவைந்து நேரே பியம்ப வனமெல்லா
முறையா னின்ற வுட்குழுன் முதலா வரண மோரைந்து
மிறையார் முப்பத் தேழாநா ளிமையார் வியப்ப வுலாப்போந்தார். 27

துணிநீர்ப் பாங்கர்ச் சூழ்போக்கித் தோடார் மலர்கண் மிகப்பெய்து
மணியா லிழைத்த மண்டபத்தின் வதிந்து முப்பத் தெட்டாநா
ளணிநீ ராடிக் கலைவமுத லணிந்து சுவையா றுணவயின்று
பணியா பரணப் பெருமானுர் பற்றும் விடாயைப் பாற்றினார். 28

அற்றைத் திருநாள் வளர்மாலை யவிர்பூத் திலைப்பந் தர்நிழற்
கொற்றக் கவிகை சாந்தாற்றி கோலக் கவரி கொடிபிறவும்
பற்றிக் கடவு ளார்போற்றப் பவனி யினிது போந்திறைவர்
முற்றக் கவினு மணிக்கோயின் முன்னி யுமையோ டமர்ந்திருந்தார். 29

இவ்வா றுதிப் பெருஞ்செல்வத் தியைய வாதிப் பிரமனார்
செவ்வாய் மையினு லினிதெடுத்த திருவார் விழாவை மானிடரு
மவ்வா னவரு முவந்தாதிப் பிரமோற் சவமென் றன்றுமுதற்
றவ்வா வமிழ்தங் கண்டாரின் வருடந் தோறுந் தொழாநின்றார். 30

ஆதிப் பிரமன் றிருவானைக் காவி னமர்ந்தார்க் கினிதெடுத்த
காதற் சிறப்புத் திருவிழாக் கவினைப் புரிந்தோர் தெரிசித்தோர்
நீதற் றவனி முழுதாண்டு தேவர் போகம் பெரிதார்ந்து
சாதற் பிறப்பிற் றலைப்படாத் தனிவீட் டின்பத் தழுந்துவார். 31

மூவா முதல்வன் றிருவிழா முடிவிற் பிரம தீர்த்தத்தி
னோவா வன்பிற் படிந்தோரு முலக முழுது மொருநிழற்
றாவா துருட்டி விண்ணுறைந்து சனன மரணப் பெருந்துக்க
நீவா வளர்பே ரின்பால நீங்கா நிலையிற் றாங்குவார். 32

திங்கட் கடவுள் கதிர்க்கடவுள் சேரு முகூர்த்தோ ரொருவருடந்
தங்கு மனைய தீர்த்தத்திற் சார்ந்து படிந்து வெண்ணுவைத்

86



பொங்கு நிழலின் வீற்றிருந்த புனிதர் பாதம் போற்றிசைத்தோர்
றுங்க வினையும் பெரும்பிணியுந் தொலைத்தா னந்தத் துறைபடிவார். 33

செந்தா துருக்கு நறுங்கமலச் செம்ம லெடுத்த திருவிழா
நந்தாச் சிறப்பிற் சிறிதுரைத்தா நல்ல தவத்தீர் தசரதன்பால்
வந்தான் வினையி னரக்கனுயிர் மாற்றி னூற்கு வரம்பலவுந்
தந்தார் சரிதங் கேண்மினெனச் சாற்றுந் தவத்தி னுயர்சூதன். 34

67677

# நீலவிண்டுவீச்சரப்படலம்.

சார்க்கு மாற்றல ருறிய தோல்வியில் வலியோன்
பாக்கு நீர்க்கட லுப்பணை பயின்றிடு மிலங்கை
யரக்க ருயிர் பருகிய வலைகடற் றயின்று
புரக்கு நாயகன் றசரத ராமனுப் போந்தான்.

தந்தை யேவலில் வனத்திடைச் சரித்திடு நாளில்
வந்தி ராவணன் சீதையை வௌவின னேக
முந்து மானமுந் துயரமு மொருங்குற முடிப்பா
னெந்தி வன்னார்தம் மடிதொழ் தருண்மிசைக் கொண்டான்.

உடங்கு நின்றதன் னிளவலுந் தானுமொய் வெனர்சென்
றடைந்த மாருளம் பனிப்புற கிட்கிந்தை யாரு
மடங்கு ருவிறல் வானரப் படையொடும் வியர்த்த
விடங்கொ ளாழியிற் சேதுசெய் திலங்கையிற் புக்கான்.

வெம்பு சின்றவல் லரக்கர்தம் விழுப்படை யோடுங்
கும்ப கன்னனை யிராவணன் றனையுயிர் குடிப்ப
வம்ப ரேக்கறு மிலங்கையை விபீடணற் குதவி
வம்புண் கோதையை யுடன்கொண்டு வழிக்கொண்டு மீண்டான்.

தண்ட மேந்திய கரத்தினர் தயங்கிதழ் மடித்துண்
டண்டம் விண்டென வார்த்திடும் வாயினர் வெருவங்
கொண்ட வாக்கைய ராய்க்கும்ப கன்னனுங் கொற்ற
மண்டி ராவணப் பதகனும் வளைத்திடக் கண்டான்.

மாயை யாலிறந் திடுமுடன் மரீஇயம ருடற்ற
மேயி னர்கொலோ வெனவெரீஇ யையமுற் றவர்தஞ்
சாயை யேயிவை தம்மையுந் தாக்குத வென்று
நாய னுருருச் சேதுவி னிறீஇயர் தெழுந்தான்.

கொன்னி ராவணச் சாயையே யொழிதரக் குய்ய
கன்ன னேர்வருங் கதழுருச் சாயைகை யகலாப்
பின்ன ரேதொடர்ந் தலைசெயப் பிணிப்புய மனத்தா
னின்ன சாயைமற் றெங்ஙன மிறுத்துமென் றிறப்பான்.



நங்கை பாகற்கு நிழல்செயு நாவன்மா நகரி
நைகங்கு ரோசமென் றறைந்திடு மெல்லையை யடுத்தான்
பொங்கு காரிரு ளிரவிகண் டெனப்புலர்ந் தாக்குத்
தங்கு மேனவன் சாயையுந் தணந்திடக் கண்டான். 8

வினையென வுடன்றொடர் வெய்ய சாயைநோய்
தனையகன் றொழிதலுந் தசர தப்பெயர்
புனைமனு மன்னவன் புதல்வ னைகையோ
டனையதொன் னகரியி னகத்தை நண்ணினான். 9

இரைசெயுங் காவிரித் தீர்த்த மாடிப்பின்
றரைசெயுந் தவப்பய னென்னத் தங்கிய
விரைசெயப் ஃ நீர்த்தமும் விழைந்து தோய்ந்தனன்
வரைசெய்பொன் வில்லிமுன் வணங்கி னனரோ. 10

அரிக்குரற் கிண்கிணி யலம்புஞ் சீறடி
வரிக்கயற் கண்ணகி லாண்ட வல்லியைத்
தரிக்குமெய் யன்பொடு சார்ந்து தாழ்ந்தனன்
பரிக்குமுள் ளோகையம் பரவை தோய்ந்தனன். 11

கனிவொடுங் கோயிலைக் கைய கன்றவண்
முனிவ ரிருந்தவர் முன்வ ணங்குபு
துனிவுசெய் சாயையந் தொலைவு கூறினு
னினிதெனக் கேட்டவ ரிராமற் கோதுவார். 12

தாங்கிய பெரும்புகழ்த் தலனுந் தீர்த்தமு
மோங்கிய மூர்த்தியு முத்த மத்தன
வீங்கிய ண[illegible]
தீங்கெனப் படுவன யாவுஞ் சேர்தரா. 13

ஆதலி னீங்குறு தப்பு றத்தினே
பாதகப் பழியுருப் பாறிற் றிங்ஙகர்
நீதவிர் தரினுறும் யாங்கு நீங்கவே
யாதுமெய் தக்கதீங் கதுசெ யேந்தலே. 14

செய்யித்தை சிவலிங்கப் பதிட்டை சிந்தையை
வையித்தை யச்சிவன் மாட்டு நீர்மலர்
பெய்யித்தை பேணுமிப் பூசைப் பேற்றினற்
கொய்யித்தை நினைத்தொடர் கொலையை யென்றனர். 15

துறவர்க ளின்னணந் தொகுத்துக் கூறவு
மறம்வளர் திருநக ரயோத்தி காவல

றுறவிகல் கடந்தவ ரேறுங்கு பேரருள்
பெறவடிப் பூசனை பேண வெண்ணினான். 16

அங்கதன் றன்னைக் கூவி யருட்சிவ லிங்கந் தாமெறுன்
றிங்குநீ கொணர்தி யாலென் றேவின னிருப்பைச் சூழற்
றங்கிய தீர்த்த மொன்று சந்நிதி தனக்கு மேல்பாற்
பொங்கழ கெரிப்பக் கண்டு போந்தவன் வசித்தா னாக. 17

ஆண்மையின் மிக்க திண்டோ ளங்கத னேகி ஞானக்
கேண்மையிக் கருணுஞ் சாளக் கிராமமால் வரையைச் சார்ந்து
மாண்மதி யறிவிற் றேர்ந்து மரகத லிங்கங் கைக்கொண்
டேண்மலி யிராமன் பாங்க ரெய்தினு னிராம னிப்பால். 18

சிற்பநூல் விதியி னூற்றுற் செவலிக்கத் தனைக் கேற்பக்
கற்பகிர்க் தலைய தீர்த்தக் கரையின்மேல் பாங்கர்க் கோயில்
பொற்புற வமைத்திட் டாத்தன் புகன்றநூல் விதியிற் றூபித்
தற்பகக் களியப் பூசை யாற்றினன் பரசு ராமன். 19

எறுழ்வன் கணக்கட் கிறையவனா யிமையா ரெவர்க்கு முத்தமனாய்
மறுவில் வலியிக் காரெவர்க்கும் வலியிக் குடைய வீரனாய்ப்
பெறுதற் கரிய கவிக்கெல்லாம் பிறக்குங் கவியா னைங்கரனைத்
தெறுவல் வினைக டெறவளித்த தேவ தேவன் சரணடைந்தாம். 20

வேத முடியுங் காணரிய விமலா னந்தப் பெருவெளியை
யேத முயிர்கட் கறப்பணிக்கு மெங்கு நிறைந்த பராபரனைப்
போத மகன்றே ரேகமாய்ப் புசிக்கு மேலாம் போகத்தைச்
சாதல் பிறப்பிற் றலைப்பட்டார் தாமே யுணர்ப்ப தெவ்வாறே. 21

விரியும் வித்தை யனைத்தினையும் விளக்கு மிறையாய் மறைமுடிக்கு
மரிய பொருளா யிருந்தாலு மடியார்க் குரியன் மதிச்சூடி
பெரிய கருணைத் தேவேசன் பிறங்கு நீலப் பொன்மயனாய்த்
தெரிவித் தவனைப் பசுபதியைச் சிந்தை மகிழப் பழிச்சுவேன். 22

எண்ணி லுயிர்க்குந் தனதருளா லியும் பொருட்டுப் பலவுருவாய்
நண்ணி யுலகுக் கைந்தொழிலு நடத்தி யந்த வுலகத்திற்
பண்ணி னிசையு மலர்மணமும் பழத்தின் சுவையு மெனநிற்கு
மண்ண லெவனே யவனடியை யன்பி னூரப் பரவுவேன். 23

ஈச னுடைய தாய்மரண மிரிக்குந் திறந்த தாயீசன்
றேசு விளங்குந் திருமுகங்க ளைந்தி னிடத்துந் திகழ்ந்ததாய்ப்
பேசு மைந்து விதமான பெருமந் திரம்யா தத்தனையே
பாச வினைகள் பறிந்தோடப் பறுவ லாற்றிற் கணிக்கின்றேன். 24



சத்தியமாய்ப் பரப்பிரமந் தானாகிச் சிவாக்கியமாய்ச் சாந்த மாகி
யெத்திரத மாயேக மாயனந்த ரூபமாய் விளக்கஞ் சான்ற
வுத்தமமா யிருக்குமென வுயர்ந்தவரா லுவந்துரைக்கப் பட்டு நிற்கு
மத்தருமந் திரந்தனையே யடியேனுஞ் சரணமென வடையா நின்றேன். 25

மாகாய வாசகிநாண் மாமேருச் சிலைமாயப் பகழி யேந்தி
யேகாத நிலத்திண்டேர்க் கிரவிமதி கோத்தியக்கி யெயின்மூன் றட்டுப்
போகாத புகழ்சிறந்த புண்ணியனைப் புகழ்க்கால காலன் றன்னை
யாகாச கேசனைமா புருடனைமா கேச்சுரனை யறியா நின்றேன். 26

ஒளிக்கொளியா யேகமாய்ச் சாந்தமா யாதியந்த மொன்று மில்லா
வளிக்களியாய்ப் பிரமமாய்ச் சிவமாகி யானந்த மயமா யெல்லாந்
தெளிக்குமொரு சித்தாகிச் சத்தாகிச் சதசத்தின் செயிர்தீர்த் தின்பம்
வளர்க்குமிறை யெவனந்தத் தேவதே வன்பதத்தை வணங்கா நின்றேன். 27

உக்கிரமாய்க் கோரமாய்ப் பயங்கரமா யிருக்குமொரு தனுவை விட்டுத்
தக்கபெரு மங்கலமாய்ச் சாந்தமா யிருக்குமொரு தனுவி னாலே
மிக்கபெருங் கருணையினா லெனைக்காக்க வேண்டுமென விமலா வுன்னைப்
பொக்கமிலன் பானதிய பூமுதற்பல் பொருள்கொண்டு பூசிக் கின்றேன். 28

கங்கை நதியு மிளம்பிறையுங் கதிர்க்குஞ் சடிலத் திடைவிளங்க
மங்கை யுமையா ளிடப்பாலின் வயங்க வடியேன் பூசைகொள
விங்கண் விரைவி னெழுந்தருளல் வேண்டு மடியா ரிரும்பேறே
செங்கை மலரி னழுவேந்துஞ் செல்வா தேவர் சிங்கமே. 29

பாவிக்கப் படுவானும் பனுவாத் தோத்திரிக்கப் படுகின் றானுந்
தேவர்க்கு மேலாக விருப்பானுஞ் செறியிதழ்த்தா மரையோ னாதி
மூவர்க்கு முதலான காயகனு மூவரையு முயிர்த்தான் றானும்
யாவர்க்கு மிறையவனும் யாரந்த மகேச்சுரன்மற் றென்னைக் காக்க. 30

சத்தியோ சாத னெனும்பெய ருமக்குத் தயங்கலாற் றமியனே னீங்குப்
பத்தியாய்ப் பதிட்டை புரியருட் குறியிற் பதிந்துவல் விரைந்தென துள்ளத்
தித்தியா நிற்ப விட்டகா மியங்கள் செறித்திடக் கடவது நுமக்கே
யத்தரே யந்தச் சத்தியோ சாத ராகிய நும்மையான் றொழுதேன். 31

மங்கல மருளு மஞ்சனே தேவ தேவனே மலிந்தவென் பாவ
மிக்குமுற் றகற்றிச் சுகத்தினை யருள்க வெம்பிரா னெனக்கருள் சுரக்க
வெங்கிருந் தனினு மங்கனே விரைய வெழுந்தருள் சொரூபராய் விடையாத்
துங்கவெண் கவச ராயுருத் திரராய்த் துலங்கிய நும்மையான் றொழுதேன். 32

உள்ளகக் கமலத் தமர்ந்தநா யகரே யொளிர்சடை மதியுமி ழமிழ்த
வெள்ளமிக் கொழுகி நனைதிரு மேனி விமலரே யம்பிகேச் சுரரே

தெள்ளொளி யிரவி மண்டலத் திருக்குந் தேவரே திகழொளி மயரே
தள்ளரு மகிழ்ச்சி தலைக்கொள விதயந் தளிரு மைத் தியானியா நின்றேன். 33

இந்தவடி யேன்றன்னை யந்தவுன தருளொழிவா ருனது தாளிற்
பந்தமுடை யவருகைப் பண்ணுகமற் றதுதாய்போற் பரிந்து காக்க
சந்திரசே கரதேவ சம்போவா திரயன்னைக் தலைக்க ளான்க
ளாக்குவன மனைத்திலுங்கும் பதியாகு நின்பாத மலினைப் போற்றி. 34

கந்தமா றுறு சுவையின் றுண்டி கனிவொடு மூட்டுதுந் தோயாக்
கந்தராய் விடைமேற் கொண்டெழூஉந் தருளிக் கைக்கொள்க சங்கர னீசன்
சிந்தைமா சகற்றுஞ் சிவனணி மாதி சித்திகள் சேவியா நின்ற
முந்தனு மையினு லென்குணச் செல்வ முதலிலா முதல்வதந் தருள்க. 35

கருமத்தா லறுசுவையாற் புத்திரராற் பவுத்திரராற் கவிகை தன்னுற்
றிருவத்தா லணிமாதி சித்திகளான் மனவாக்குத் தேகந் தம்மாற்
பருவத்தா லொன்றுறு மடையாத முத்தியினைப் பரம ஞான
வுருவத்தா லடைவிப்பா னெவனவனு ளியாவுன்னை யுரையா நின்றேன். 36

குறிகுணங் காணம் வடிவமா திகாரங் கொளப்படான் யாவனே யவனை
மறுவறப் பயின்ற யோகிய ரவனை வாக்கையி னறிந்தமாத் திரத்திற்
செறிதரு பவங்கள் வினைத்திடு மலமோய் சிதையமா னெனதெனச் செருக்கா
வறிஞராய் முத்த ராகுவன் றோ அவனையே வந்தியா நின்றேன். 37

தருகவிழி யினைச்செவியைத் தருகபிரா ணவைத்தருக தருக வாயுன்
மருவலரைப் புறங்காண்க மாணத்தைப் போக்குகவெம் மருங்கு மென்பால்
வெருவாவென் றயத்தைக் கொடுக்கசமு சாரத்தின் விலக்கி யாள்க
விருடருசத் தாதியினின் றெடுக்கவடி கேளுமை யிறைஞ்சா நின்றேன். 38

வானவுணர் நஞ்சொழுகும் வாலெயிற்றுப் பணிபாவம் வறுமை நோயென்
றானையிடத் தொடரிடரி னெழித்தாங்க பெருஞ்செல்வ முலகா லின்ப
நாளுமினி தீண்டவருள் சுரக்கதே சினைப்புரக்க நனைப் போகத்
தாளுமலர்த் தாளினையி னன்பருள்க வமரருக்கு மகா போற்றி. 39

இராசதவன் குணத்தோடு முலகமெலாம் படைப்பவனு யிருந்தாய் போற்றி
பராவுறுஞ் சாத்துவிதத் தொடுமுலகம் புரப்பவனுய்ப் பயின்றாய் போற்றி
விராவியதா மதகுணத்தி னுடனழிக்கு முருத்திரனுய் மிளிர்ந்தாய் போற்றி
வராகமுத லுருவாயு முகந்தொறும்புல் லாதவைதக் கின்றாய் போற்றி. 40

யாரொருவன் றன்விலையாக் கலியினும்ல் வெரிஇயியம னிரியா நிற்கும்
யாரொருவன் றன்விலையாக் கலியினு லிரவிமதி யியங்கா நிற்கும்
யாரொருவன் றன்விலையாக் கலியினற் கடல்களா யினகவா நிற்கும்
யாரொருவன் றன்விலையாக் கலியினுயி ருணருமவ னிணைத்தாள் போற்றி. 41



குருதியுமிழ் முத்தலைவேல் குடக்கையணிந் தோய்நினது சேவடி போற்றி
மருவலர்க்கு நிலையாமை வல்லையுத விடுமென்கை வாளி போற்றி
யொருவரையு நிகராத கனகவரைச் சிலைவாங்கு மொண்டோள் போற்றி
கருதலரைப் புறந்தலையிற் கடக்கவென்னைக் குரனளித்த கருணை போற்றி. 42

எவ்வாயுந் திருமுடிக ளெவ்வாயு மொளிநுதலெவ் வாயுங் கண்க
ளெவ்வாயுந் திருச்செவிக ளெவ்வாயுஞ் செவ்வாயெவ் வாயுந் தோள்க
ளெவ்வாயுந் திருக்கரங்க ளெவ்வாயுந் திருவயிறெவ் வாயுந் தாள்க
ளெவ்வாயுந் திருமேனி யெனநிற்குந் தனிமுதல்வ னெம்மைக் காக்க. 43

எம்பெருமான் றிருவடிப்பூ சனைபுரிந்து மேற்றெடுத்து மிருண்ட பாச
நம்பிகருக் கறுத்தருளு நாமத்தை நாவார நவின்று மேலாஞ்
செம்பொருள்சேர் புகழ்க்காதை செவிமடுத்துந் திருமேனி திகழக் கண்டு
மம்புவியி னிருக்கின்று மடியேமை யீன்றவர்போ லருளிக் காக்க. 44

அஞ்சலென வமைத்தவொரு கரதலமும் வரதமென வமைத்த கையுங்
கஞ்சமல ரேந்துமிரு கரதலமு மூன்றிருக்குங் கருணை நோக்கும்
பஞ்சிகமழ் சீறடியு மழகொழுகப் பல்கலன்கள் பலவுந் தாங்கி
வஞ்சமுறு விருள்சீக்கு மயிலாண்ட நாயகிதன் வடிவம் போற்றி. 45

என்றி ராம னியம்பிய தோத்திரம் யாவையு
நன்று சென்று திருச்செவி யேறலு நாதனார்
மன்ற லோதி மடந்தையொர் பாகம் வயங்குற
வென்றி மால்விடை மேல்வெளி நின்றனர் காணவே. 46

கண்ட கண்கள் களிழ்க்கு நறும்புனல் கால்செயாக்
கொண்டன் மேனிக் குரூஉக்கவ யப்பெறு நீற்றினை
வண்டல் செய்யக் கரைந்து கரைந்துவ ணங்கிமு
னண்டர் கோனருள் கூர்ந்தவர் கீதுரை செய்யுமால். 47

இராம நீயெமை யேத்திய தியாவர்க ளேத்தினும்
பராவி யன்பொடு கேட்பினும் பல்பெரும் பாவமும்
விராவு தீயிடைப் பஞ்செனை வெந்தவி யப்பெருந்
தராத லத்துயர் வாழ்வுந் துறக்கமுஞ் சார்வரே. 48

அடரும் வல்வினைச் சாலையு நீங்கி யயோத்தியுக்
கிடர்து ரந்துபன் னூறெ சாண்டிருந் தெம்மையத்
தொடரு மாந்தர்க்கு வேட்டவ ரங்கடு றுத்திருள்
விடவு யர்ந்தநன் முத்தியை யர்தத்தின் மேவுதி. 49

சிறந்த மன்னவ செல்லுதி யென்று சிவபிரான்
மறைந்த னன்சில லிங்கத்தி ராமனும் வல்விரைந்

தறந்த வைத்திடு பூசனை முற்றுற வாற்றிப்போ
யுறைந்த னன்றுமை காண்டிதன் ஞார்வயி னெனபவே. 50

நீல விண்டுநி கழ்த்தமெய் யன்பொடு பூசனை
சால வாற்றிய நீலவின் னப்பெயர்த் தானவை
ஞால மீதுப ணிந்தவர் சாபம விற்றினோர்
கோல நோக்கினர் தாமுக்கொ லேப்பழி நீங்கவே. 51

கையர் சாயை காக்குங் கரியமா லீச்சர
மையை சொற்றனை மாங்குப் பராசர னங்கயிற்
பொய்ப ரக்கரைப் பொன்றிய காதையுங் கேண்மினென்
றய்ய மையக மோதுத லுற்றனன் சூதனே. 52

உ

# பராசரன்வழிபடுபடலம்.

சுந்தர மிகுந்தபொன் னகரிற் றொல்லைநா
ளிந்திர னரசுவீற் றிருக்கு மண்டபத்
தந்தரத் தமரரு மறிஞர் யாவருஞ்
சிந்தையின் மகிழ்கொளச் சென்று தொக்கனர். 1

உத்தம வசிட்டனு முயர்ந்த விச்சுவா
மித்திர முனிவனு மேவி வைகினு
ரத்தலை யுள்ளவ ரவனி மாட்டெவர்
பொய்த்துரை யாதவ ரென்ற போதரோ. 2

மந்திர வசிட்டன்மன் னவர்க்கு மன்னரிச்
சந்திரன் பொய்சொலா னென்று சாற்றினன்
வெந்திறல் விச்சுவா மித்தி ரன்முரண்
சிந்தையன் பொய்சொலச் செய்வ லென்றனன். 3

வேந்தனொரு பொய்மொழியின் விச்சுவா மித்திரனோ
காந்துமணி முடியமரர் கரிகண்டா யடுநெறு
மாந்தியவந் தணன்போல வார்துகிலொன் றுடுத்தியமண்
பூந்திசையின் முகநோக்கிப் போதுவலென் றுன்வசிட்டன். 4

தஞ்சமறை பயில்வாயாற் சபதமிட வசிட்டமுனி
வெஞ்சினநீள் விச்சுவா மித்திரனும் விறல்வேந்த
னெஞ்சறிந்தே பொய்மொழிய நிகழ்த்தேனே னீயுரைத்த
வஞ்சினமற் றெனதாகு மெனக்கிளர்ந்து வான்விடுத்தான். 5

பூதல மருங்கு போந்து புகழரிச் சந்தி ரன்பா
லேதமெத் துணையு மாற்றி யியன்மொழி மெய்யிற் றீரா
றுதலை யறிந்து தோற்று னரசனுக் கமர ரெல்லா
மேதகு வரங்க ளீந்தார் வேந்தனும் வணங்கிப் பின்னர். 6

கடவுளீ ரறிவன் முன்னர்க் ககழ்க்குரை சபதந் தன்னை
யடியனேன் பொருட்டுச் செய்யா றுதலே வேண்டு மென்னப்
படர்பெருங் கருணைத் தேவர் பார்த்திபன் பரிவு நோக்கி
மடனறு முனிவன் சொன்ன வஞ்சினம் புரிய வென்றார். 7

விலாமெறி கற்பத் தண்டார் விண்ணவர் வரங்கள் பெற்ற
வரசனைக் ககன்ற முனைந்து சலைத்திட வசிட்டன் றன்பா
லவா:செறி விச்ச வாமித் திரனுயு சிற்றங் கொண்டு
புரைநெறி வேள்வி யொன்று புரிந்தனன் மனுக்க ளோதி.

வெருவரு தோற்றஞ் சான்ற வெங்குறற் பூத மொன்று
கருவரை யென்ன வேள்விக் கனல்கெழு குண்ட நின்று
வருதலு மதனை நோக்கி வசிட்டனைக் கோறி யென்று
நூருவயல் லரக்க னுகி யொய்யெனச் சென்றப் பூதம்.

அருந்தவ வசிட்ட னக்கா ளியல்பினுஞ் சிரம நீங்கி
யிருந்தன னினையான் மைந்த னியற்பெயர் சத்தி யென்பான்
பொருந்தனை தவியக் கண்டு பொள்ளெனக் கொன்று மீண்டு
திருந்திய விச்ச வாமித் திரனுள மகிழ்செய் தன்றே.

அருந்துறிக் கற்பின் மிக்கா ளவன்மனை மாது நோக்கி
வருந்திமிக் கழுத லோடு மருங்குளார் தாமும் கூடிப்
பெருந்துய ருழக்கு மேல்லைப் பெருந்தவ வசிட்டன் போந்து
கருந்துய ருழந்து சோகக் கடலிடை யழுந்தி னானால்.

வந்திதழ்க் கமலச் செம்ம லிம்மென வங்குப் போந்து
வீந்தவ னென்ன வீழ்ந்த விருத்தவ வசிட்ட னெஞ்சி
னுந்துய ரகலத் தேற்றி யறைகுவான் சத்தி யாவி
போந்தன னென்று சாலப் பொருமிமிக் கவலுஞ் செய்யேல்.

நின்குலம் விழுப்ப மெய்த நின்னுடை மருகி மாட்டு
நன்கரு வாய்ந்த தன்றே நற்றவ வஃதா னாகும்
பின்குல வரக்கர் தம்மைப் பெயரொடுங் கெடுக்கு மன்றூ
டன்குலச் செவிகள் கேட்ப மறையெலாஞ் சாற்று கென்றான்.

மறையவன் றேற்றத் தேறி மருங்குளார் தம்மைத் தேற்றி
நிறைகுண வசிட்டன் சத்தி நேரிழை மனைவி கேட்ப
முறையுளி வேத மெல்லா மொழிந்தன னவற்றை யெல்லா
முறைதரு வயிற்றி னின்றே யுணர்ந்தகக் கருவிற் பிள்ளை.

ஐயிரு மதியு முற்ற வகட்டிறு கருவி னீங்கி
வையக மிடரு நீங்க வானக மகிழ்ச்சி துன்ன
வெய்யவல் லரக்கர் தேய மிக்கவெய்த் தோரின் மாரி
பெய்யவர் துதித்த தென்ப பிறங்கெழிற் குழவி மாதோ.

தன்னிகர் வசிட்ட மேலோன் சாதக முதல வாற்றிப்
பன்னிரு நாளி னும்மம் பராசர னென்று சாற்றிப்



பின்னுப நயன் மெட்டா மாண்டினிற் பிறங்கச் செய்தான்
மன்னிள மதியம் போல வளர்ந்திடு மைந்த னோர்நாள். 16

தாய்முக நோக்கி யன்னா தவ்வென விருத்தி மெய்யி
னுய்மணிக் கலனே காணு மவலமோ நின்பாற் கண்டாம்
வாய்மையி னுணர்த்தி யெந்தை யாண்டையன் வசிட்டன் யாவன்
றூய்மைநெஞ் சயிர்ப்பி னீங்க வென்றலுஞ் சொல்லு மன்னை. 17

கொழுகொம் பிழந்த கொடியேபோற் கொழுந னிழந்தேன் பருவாலை
முழுது மகற்ற வந்தகய முனியே முனிவர் செல்வமே
பழுதொன் றியற்று நுந்தையுயிர் படர்ந்தோ ரரக்கன் பருகினான்
வழுவில் வசிட்டன் மூதாதை மதியா யென்று மறுகினாள். 18

தன்னாய் மறுகி மூர்ச்சித்துத் தளர நோக்கி முனிச்சிறுவ
னன்னா வன்னா வெனப்பல்கா லன்னைத் தளிராற் புடைத்தெழுப்பி
யின்னா வினைசெ யரக்கர்குல மின்னே யிறுத்தே னெனவணங்கிக்
கொன்னா தரவி னருள்பெற்று வசிட்டன் விடையுங் கொண்டெழுந்தான். 19

கள்ளம் படருங் கருத்தினர்க்குக் காண்டற் கரிய தனிமுதல்வன்
வெள்ளம் படருஞ் சடைக்கற்றை விமலன் ஞான தலமெய்தி
வள்ளம் படங்கின் மலர்கமல மணங்கேழ் தீர்த்தம் பலதோய்ந்தக்
குள்ளம் படரும் பேரன்பி னொளிர்பொற் கோயி னண்ணினான். 20

ஆனே றுயர்த்த கொடிப்பாங்க ரகநெக் குருக விழுந்தெழுந்து
மீனே றுயர்த்த கொடிக்காளை வேவ விழித்த பூரணனை
மானே றுயர்த்த கரதலத்து மணியை வணங்கி மறைபாடி
யூனே றுடம்பின் பயன்பெறுவா னுலக முயிர்த்தா ளையும்பணிந்தான். 21

அங்க ணகன்று கோயில்வல மாகப் போந்து புறத்தேகித்
தங்க மறையின் விதியாற்றாற் றுவன்றும் பிதிரர் களிதூங்க
வெங்க ணரக்க னுலாவி விளிந்த காதை தனைக்குறித்துத்
தங்கு கரும மனைத்தினையுந் தழைத்த வன்பி னியற்றினான். 22

னொறில்வெள் விடையின் கொடிமேலா னுடங்க விளங்கும் விமானத்திற்
செறிபல் சிறப்பி னொடுமெதிரே சென்று தாதை செப்புவா
னறிவி லரக்க னுல்விளிந்த வலகில் பாவந் தொடங்கினாற்
பிறிவி லவை யாயினல் பெரிது முழந்தே னிதுகாறும். 23

இன்று சிறவ நீயிந்த ஞான தலத்தி னினிதியற்று
நன்றி வினையாற் றீவினைக ணழுவ வினைய றுயினேன்
சென்று சேர்து மெனவெழுந்து சிவலோ கத்தை யவனடையப்
பின்றை யரக்கர் குலந்தூரியப் பிறங்கு வேள்வி தொடங்குவான். 24

கடவுள்வெண் ணாவலங் காமர் நீழல்வாழ்
படவர வணிந்தருள் பரமர் கோயிலின்
வடகிழக் கெல்லையின் வயங்கு குண்டமிட்
டடையுற வியற்றினா னவி சாரமே. 25

செந்தழ லாகுதி நேர்கு செவ்வியின்
மந்திரஞ் சென்றவல் லரக்கர் தானவர்
வெந்திறற் பூதவே தாள மியாவையு
முந்திவந் தொளிரழற் குண்டத் திட்டவே. 26

தினந்தொறு மந்திரந் தீயிற் றீயர்த
மினங்கெட விறுத்தத்தென் மேற்றி னெய்திரோன்
மனந்தளர் வுறவவன் வாகை வாகனக்
கனங்கெழு பூதமுங் கலங்கப் பற்றின. 27

பொருதெழும் வலிகெடும் பூத நோக்குபு
நிருதியும் வலியினா னீக்க மாட்டிலன்
றருமய மொழிபல சாற்ற வும்விடா
திருவமர் திரமவ னோடு மீர்த்தவே. 28

நெஞ்செலா மழிதர நிருதி யென்பவன்
றஞ்சம்வே றிலையெனச் சம்பு நீழல்வாழ்
செஞ்சடா மகுடர்தஞ் சேவ டித்துணைக்
கெஞ்சுறு வன்பினோ லேத்தன் மேயினான். 29

பாலனுக் காகக் காலன் படவுதை செய்தா யோல
மாலமுண் டமர ராவி யளித்தரு டலைவ வோலம்
வேலனை லவுணர்க் காய்ந்த விண்குடி யிறுத்தா யோலஞ்
சீலமார் சம்பு நீழற் சிவபிரா னேல வோலம். 30

பிரமனை மாய னோர்காற் பெறவர மளித்தா யோலம்
பிரமன்மா யவனை யோர்காற் பெறவர மளித்தா யோலம்
பிரமன்மா யவனைப் பல்காற் பெற்றளித் தழிப்பா யோலம்
பிரசமார் சம்பு நீழற் பிஞ்ஞகா வோல வோலம். 31

முப்புரம் பொடித்த மேரு மூரிவெஞ் சிலையா யோல
மப்பவிர் வேணி வைத்திட் டகனிலம் புரந்தா யோலஞ்
செப்பிள முலையாள் பூசை செய்தகீர்த் திரனே யோலம்
வைப்பெனச் சம்பு நீழல் வதிந்தருண் முதல்வா வோலம். 32

ஐம்புல னீர்க்கப் பட்ட வார்வநெஞ் சுடையார் போலப்
பம்புமங் கிரங்க வீர்ப்பப் படுகின்றே னொல வோல



நம்புறு துணைவே தில்லை நாயக வோல வோலம்
வம்பலர்ச் சம்பு நீழல் வானவா வோல வோலம். 33

ஒருகணந் தாழ்க்கி னாயே னூர்தியோ டறவ னுற்றும்
வெருவரு வேள்வித் தீயின் வீழ்வது திண்ண மோலங்
கருணையி னெளியன் றெம்மைக் காப்பது கடன்மை யோல
மருவளர் சம்பு நீழல் வள்ளலே யோல வோலம். 34

சாலுமெய் யன்பினோ னிருதி தாழ்ந்துமிக்
கோலிடத் திருவுள முவந்த நாவலின்
கோலவெண் ணீழலிற் குழக னாணையா
லேல்வுற வானினா டெழுந்த தோருரை. 35

நிருதிதன் பூதவா கனத்தை நீயிவண்
டருதி யெமக்கெனத் தழங்கும் வான்மொழி
யிருசெவி நுழைதலு மிரும்ப ராசரன்
மருவிய வுவகையன் வான நோக்கினான். 36

பூதமு நிருதியும் பொன்னொன் றண்மையிற்
போதலு மவர்தமைப் புடையி ருத்தினோ
னுதரு வஞ்சின மதனின் வேள்விமுன்
னீதலே சிறப்பென வியைந்து ளேனென்றான். 37

சந்தனே னென்னுமு னிணர்த்த நாவலி
னார்ந்ததண் ணீழலி னமர்ந்த நாயகன்
சாந்தமென் முலையுமைத் தயலோ டேற்றிமேற்
போந்தனன் விசும்பிடைப் புலவர் போற்றவே. 38

கண்டன னெழுந்தனன் கரங்கள் சென்னிமேற்
கொண்டன னாடினன் குவல யந்தனிற்
றண்டென விழுந்தன னெழுந்து தட்டமிட்
டண்டர்நா யகன்சர ணன்பி னேத்துவான். 39

ஆதிப் பெருஞ்செல் வவருட் கடலே யடியா ரிளைப்பா றுமலர்த் தருவே
பூதிக் கவயத் திருமே னியனே புரமூன் றுமெரித் தபுரா தனனே
காதிப் பழவல் வினையைச் சிறியேன் கருதா ரையுநீற் றியகண் ணுதலே
சோதிப் பொருளே தொழுவார் பருகுஞ் சுடர்வா னமிழ்தே சரணஞ் சரணம். 40

ஆறா டியவே ணியின்மீ மிசைமிக் கமிழ்தா டியவெண் மதிக்கண் ணியனே
பாறா டியமுத் தலைவே லவனே பழியா டியவெண் டலைமா லையனே
கூறா டியகோ மளவல் லியனே குன்றா டியகொற் றவிலங் கையனே
வீறா டியவெள் விடைவா கனனே விண்ணோ ரிறையே சரணஞ் சரணம். 41

நவதீர்த் தமும்பா பெயன் செறியு நவசா ளரசங் கிரியா சரண
மவனீங் கறலா டவிதித் தபொரு ளாலறந் தெனவே யரிவித் தொருபா
லிவர்மாட் சியின்முப் பதுசா ளரின் றிலகுந் திருக்கோ யிலுளாய் சரணந்
தவநீ டியசம் புமுனிக் கருளுந் தனிநா யகனே சரணஞ் சரணம்.

ஆரந் தொடையான் மனையாள் கவுரீங் காரப் புனலோ டுருடத் தூதமழுந்
தீரந் திகழ்சென் னியிருட் டுடேபாடு திலகுந் திருமே னியனிந் தருளி
யாரந் தருகல் லருள்வைத் தவனே மணியே மலர்பம் பியகா விரியின்
றீரந் திகழ்கன் னிடையே வதியுஞ் சிவனே பவனே சரணஞ் சரணம்.

உழுவ லன்பிற் பராசரனென் றுரைக்கும் பெயரா னிவ்வாறு
பழுதில் புகழ்கள் புகழ்ந்திறைஞ்சப் பாய்வெள் விடையே யெதிர்நின்ற
முழுது முணர்ந்த நாயகனுன் முனிவில் வரங்கள் கொள்கென்றுர்
வழுவின் முனிவன் மீட்டெடிரே வணங்கி வரங்கள் வேண்டுமால்.

மன்ற வடியேன் புரிவேள்வி மணிச்சா லையிற்றென் மேற்றிசையி
லொன்று திருதிக் கெழுப்பூத முதவும் படியில் கருணையா
லென்று மினக்குப் பச்சாதா பேச னெனும்பே ரினிதுறுக
வென்றி விடையாய் நினதாளின் வீயாப் பத்தி யெனக்குறுக.

எனமா தவத்துப் பராசரன்மற் றிரந்த வரங்கள் கொடுத்தருளித்
தனிநா வலின்கீழ்ச் சிவலிங்கத் தன்னி லிறைவ னமர்ந்திருந்தா
னனிநா னிலத்தி லன்றமுத லென்று நாவ லிழலுடையார்க்
கினிதாம் பெயர்தான் பச்சாதா பேச னென்வு மிலங்கியதே.

கருணைப் பெருமா னருள்பெற்ற காலை முனிவன் மகமுடித்துப்
பொருவில் வரக்க னொடுந்தாதை தாதைப் பாங்கர்ப் போய்வாழ்ந்தா
னிருதி பச்சா தாபேச ரளித்த நீடு பூதத்தின்
மருவு தனது திசைசென்று பண்டு போல வாழ்ந்திருந்தான்.

மல்குந் தவத்து வசிட்டமுனி மருமான் வழிபாட் டினைப்புகன்று
நல்குந் திருமான் ஞானதல மெனவாங் கிருந்து நாடோறும்
பல்கும் பயன்றந் திடுமாறும் பண்பிற் கேண்மி னெனச்சூதன்
புல்குங் குணத்து முனிவரர்க்குப் புரிந்து புகறன் மேயினுன்.

உ

# திருமால்வழிபடுபடலம்.

வானவர்க் கிடையூ றுற்று மறமலி யரக்கர் சேனை
வானரப் படையாற் றுக்கி வன்பகை கடந்த யோத்தி
தானமர்ந் தரசு பூண்ட தசரத ராமன் பாங்கர்
வேணவில் கடகத் திண்டோள் விபீடணன் விடைகொள் காலை. 1

திருமறு மார்பத் தண்ண றிருவுரு வொன்றுஞ் சிறப்பத்
துருவள ரிமான மொன்று முவந்தவ னளிப்பக் கொண்டு
மருவிய வயோத்தி நீங்கி மன்னிய விலங்கை சேர
வெருவருந் தானை யோடும் வியனில நெளியச் செல்வான். 2

கண்ணுத லமர்ந்த தானங் கண்டன பலவும் போற்றிப்
பண்ணையும் வரையுங் கானும் பற்பல நீந்தி யென்றாழ்
விண்ணவ னுச்சி யெய்தும் வேலைவெவ் வெரிவாய்க் கும்பி
நண்ணிய தனைய தாய்கோர் நனந்தலைப் பழுவஞ் சார்ந்தான். 3

உருத்திரப் பெய ராண்டகைக் கொன்னலார் தம்மை
வருத்த மிக்கெழும் வெகுளியந் தழலவர் மடிந்தும்
பெருத்த நிற்பமற் றதுதனைப் பெயர்த்தெழுந் தோறு
மிருத்தி லைக்குமோர் வைப்புமா யிலகுமச் சுரமே. 4

மாய னாதிப்பல் லுயிர்களும் வளரிளைப் பாற
வாய மாயையின் காரிய மனைத்தையும் விழியாற்
காயு நாளையிற் சூற்படைக் கடவுணின் றுடுங்
தூய வாரழற் கானமுந் துணைவதக் கானம். 5

கங்கை வான்மதி சூடிதன் கரத்திடை முனிவ
ரங்கி சேர்ந்தது மாழியில் வடவைசார்ந் ததுஞ்சீர்
பொங்கு மாதவன் வைகலும் புனரிமூழ் குவதுந்
தங்கு நீச்சுரந் தழற்றுதா பந்தபும் பொருட்டே. 6

தால தேகமே யன்றிவண் சூக்கும வுடலுஞ்
சால நீற்றுவ தனையது தழல்பரந் தொழுகிக்
கோல மார்தரு மாமரங் குழையடை யிருப்பை
பாலை யாதியுங் கரிந்திட மேயதப் பழுவம். 7

உடைந்து சார்வட வைத்தழற் குதவிசெய் வாயென்
றடைந்து சாகரம் போர்த்ததே யனையது வென்பேர்
மிடைந்த நீச்சரம் வெருப்பலின் மேவிய புணரி
யிடைந்து ருவகை யதைப்பதே பொருமத னியங்கம். 8

விரிந்த பூதலம் விண்டது விண்டவாய் தோறுஞ்
சொரிந்த நீத்திர ளெண்டன பாதலத் துரகர்
பொரிந்த மாவினம் பொடிந்தன வுலர்ந்தன புள்ளினங்கள்
கரிந்த நீரின காயமா மழையுதே ரியங்கா. 9

தழலை யல்லது பிறிதொன்றுந் தன்னிடைக் காட்டா
தழலும் வெஞ்சர மடுத்தவன் சேனைக ளோடு
கழிபெ ருந்துய ருழந்தது கடந்துசெல் காலை
விழைத ரும்புனற் காவிரி விளங்குறக் கண்டான். 10

நகை வெந்துய ருழந்தவின் னைவலிது வெனவுங்
குரவ மல்கிய கொன்றையான் சோபத்தி னவிந்து
விரவி யன்னவ னருட்ட விளங்கிறு மெனவும்
பரவு தண்புனற் காவிரி நன்னுறப் படர்ந்தான். 11

தரங்க வார்நதி தவழ்நறுந் தென்றல்சார்ந் துலவுங்
குரங்கு சாகையங் குளிர்நிழற் பொருப்பரிற் கடல்போ
லிரங்கு தானையோ டெய்திரு னிருந்தயர் வுயிர்த்தான். 12
புரங்கொல் சேவகன் திருவடி நீழல்புக் கார்போல்.

கார்த்த பூம்பொழில் கலந்தயர் வுயிர்த்தபி னரங்க
னார்த்தெ ழுந்துசெல் காவிரி யளிபுன லாடிச்
சீர்த்த வெண்பொடி கண்மணி திகழமெய் யணிந்து
கீர்த்தி மேம்படுஞ் சேசவன் பூசையும் புரிந்தான். 13

பூசை முற்றுறப் புரிந்தபின் புயணிறத் தவனைக்
காசு மல்கிய விமானத்துக் கருவுவித் ததனைத்
தேசு மல்கிய வெக்கரி விருத்தினன் சிறப்ப
வாசை மல்கிய வருசகை யடிசிறு மயின்றான். 14

இலக்கை மாசக ரிளிப்புரு வாமென வெழுந்திட்
டலங்கன் மார்பகத் தியல்வர விமானத்தை யடுத்து
வலங்கொ டோரிறைறற் பெயர்த்தனன் மற்றது பெயரா
திலங்கொ ளேந்திய தரித்தன னெடுந்துய ருழந்தான். 15

கலலை யுற்றவ னிருந்துழிக் கனவிடைத் தேன்றிப்
புவன முண்டவன் விபீடண சேனைப் புகல்வான்



சவலை நெஞ்சினை யுடைமையாய்த் தளரலை யிந்த
வவனி ஞானகேத் திரமென வறைந்திடப் படுமால். 16

அகில லோகமு மளிப்பவ னருந்தவம் புரிந்து
நிகரி லாதமெய்ஞ் ஞானநின் மலன்றரப் பெற்றுப்
புகரொ லாங்கெடுத் துயிர்க்கெலாம் புகன்றபல் வாமு
மிகவில் சீர்த்தியோ யினிதளித் தருள்வதிவ் விடமே. 17

சம்பு மாதவன் பராசரன் றுமறைக் கிழவன்
கும்ப மாமுனி தினகரன் குளிர்மதி யிராம
னும்பர் கோனழற் கடவுளென் றிவர்க்கெலா முவந்து
தம்பி ரானரு டழைதரக் கொடுத்ததித் தலமே. 18

மூர்த்தி மேன்மைமிக் குடையது மொழிந்தவித் தலமே
தீர்த்த மேன்மைமிக் குடையதுஞ் சிறந்தவித் தலமே
கார்த்த கண்டனூர் காதல்செய் பலதலத் துள்ளுங்
கீர்த்தி போர்த்துமேம் பட்டதுங் கெழீஇயவித் தலமே. 19

மறையின் வார்புனற் பொன்னியின் ஞானகேத் திரத்தின்
மிறையி னீங்கி லாண்டகா யகியின்மேம் பட்ட
முறைசெய் தானதி தலமுமுச் சத்தியு மில்லை
யிறைசெய் நாவலின் மூர்த்தியின் மூர்த்தியு மில்லை. 20

ஏனை வைப்பிடை யெம்பிரான் றனதொரு கூற்றுற்
றுனை மாந்துபல் வரங்களுந் ததைதர வழங்கு
மீன முற்றற முழுவது மித்தலத் திருந்து
ஞான முற்றுமெய்ப் பொருள்களு நலத்தக வழங்கும். 21

திங்கள் சூடினர் சிவணிய சிவதலந் தோறுந்
தங்கி நாளுமென் கூற்றினுற் றுழந்துவாழ் யானு
மிங்க ணாடொறு முழுவது மிருந்துவெண் ணறவற்
பொங்கு நீழல்வாழ் புனிதரைப் போற்றிட வலித்தேன். 22

கள்ளு மிழ்ந்தலர் கொன்றையங் கண்ணியான் கருணை
கொள்ளை கொள்ளுவான் குறித்தருந் தவத்தினிற் கூர்ந்து
வெள்ள ரும்பெரும் பத்தியின் விழைந்திருக் கின்றான்
முள்ள ரைச்செழுந் தாமரை முற்றிலக் குமியும். 23

சங்கு வாழ்தலே யன்றிமற் றிலங்கையிற் படரேன்
றீங்கி லாநட மிலக்குமி செய்யுமா றியக்கி
யோங்கு நாவலி னொருவனுர் திருவருள் பெரிதுந்
தாங்கு மார்வமுந் தழுவிய நெஞ்சினேன் கண்டாய். 24

திருவின் மாதரா ளுடனுஞ் செய்யுரித் தானத்
தருவ மாசு கொன்றுசீ ரங்கமென் றுளதா
மருவு சீரங்க நாதரென் றெமக்குரை வழங்கும்
பொருவில் பூசனை விழாமுதல் லெமக்கிவட் பொலியும்.

ஆண்டு தோறுமிங் கடுத்தநீ யெமதடி மலரு
மீண் ரவலி னிறைவனுர் பாததா மரையும்
பூண்டு வன்பினுற் போற்றுதி போதுதி யென்று
நீண்ட மாதவ னிகழ்த்திடன் மறைந்தனன் மாதோ.

கனவினை நனவெனக் காதல் செய்தெழுந்
தனகனை யானைக்கா வகத்துப் போற்றிப்போய்
வினைதப வீடணப் பெயரின் மேயிறைன்
றனைதிக ரிலங்கையிற் சார்ந்து வாழ்ந்தனன்.

ஆயிடை வதிவதே யாதரித் திடு
மாயனு நாவலின் மருங்கு வைகிய
நாயகன் பூசனை நயந்து தன்னுயிர்
நாயகி தனைநட நவில்வித் தானரோ.

பதுமைநன் றியற்றிடும் பரவை நோக்குபு
கதுமென நாவலிற் கலந்த கண்ணுதல்
விதுவணி சடைமுடி விளங்க முன்னுற்றி
யெதுவரங் கொள்கென விறைஞ்சி மாதவன்.

நின்னடித் தெரிசன நிச்சம் யான்புரிந்
தின்னவல் வினையெலா மிரித்தல் வேண்டுநீர்
மன்னிய சடைமுடி வள்ளல் யாவரு
மென்னிடை வரம்பல வெய்தல் வேண்டுமால்.

விழாமுதற் சிறப்பின்மேம் பாடு வைகலும்
வழாவகை யெனக்கிவண் வளர்தல் வேண்டுநிற்
செழாதவர் மாட்டெருத் தொடிக்கை மாமகள்
குழாமலி நாடகங் குயின்ற வைப்பிது.

சீரங்க நகரெனச் சிறத்தல் வேண்டுமா
லோரங்க மிரிய லான வுத்தம
கூரங்கி நிசருக் குழக வென்றனன்
பேரங்க மறையினன் பெறுக வென்றனன்.

சம்புநா யகனரு டாங்கி மாயவ
னும்பரார் விழைதக வோங்கு சீரங்கப்



பைம்பொன்மா மதினகர் பயிற்றி வைகினு
னிம்பர்வா ழனைவரு மின்ப மெய்தவே. 33

நெடியவன் வழிபடு நிலைமை கூறினுஞ்
சுடர்மணி யாரமுன் சோழன் சத்திய
வடைவினி யறிந்தவா றறைது மாவெனை
விடலருங் கருணையால் விளம்புஞ் சூதனே. 34



உ

# ஹாரஞ்சாத்துபடலம்.

சிறந்த பொன்னி வளஞ்சுரப்பத் தெய்வக் கமழுந் தீம்புனற்
றுறந்தக் கியவே லையநாட்டுக் கணியாய் விளங்கு மாறேபோற்
புறந்தங் கியபல் லூர்க்கெல்லாம் போற்ற வணியாய் நனிவிளங்கு
முறந்தை நகரின் வீற்றிருந்திட் டுலகம் புரக்கு மொருசோழன்.

அகன்மா நிலத்தைப் பொறுத்திக் கியாண்டு திகிரி திசையுருட்டி
மிகன்மா னவையர் பகைமுருக்கி யிசைசரிக் கீட்ட லேயன்றித்
தகையா னவத்தின் பகைதலையுஞ் சவட்டி ஞானப் பொருளீட்டிப்
புகலிச் சுரனே யெனவவர்தம் புரைதீர் பயிரிற் றலைநின்றான்.

நிசுளா புரியென் றுலகேத்து நிகரி லுறையூர் முதலாகப்
பகவே யயர்த்தார் தலந்தோறும் பரிந்து பூசை விழாவாதி
திசையோ ரெட்டுங் குதுகலிப்பச் செய்து வருநாட் பனிப்பருவம்
பசைதீர்ந் தொழிய விளவேனிற் பருவ மொன்று படர்ந்தன்றே.

அறிஞர் தம்மை யடுத்தவரு மறிஞ ரேபோ லுயர்கிதமே
செறிய வுதவி செய்கின்ற திறத்தை விளக்கு மாபோலக்
குறிய முனிவன் பொதியவரைக் குலவு தென்றன் மென்குளிரு
நறிய மணமுந் தழீஇயெவரு நயப்ப மெல்லத் தவழ்ந்ததே.

பேணுங் கழைவில் விறைதனக்குப் பெருகா வடுத்த தெனம்பளிர்
பூணுங் குகிலு முதலான புதிய வணிவ தரித்தின்பங்
காணும் பனிப்பூம் பொழிற்முன் கவின்கொள் வனபோற் சகுதிர்த்து
மாணுந் தளிர்மெல் லரும்பாதி வரிசை யாக வுயிர்க்குமால்.

தேனூர் பலமா மலருள்ளுஞ் சிறந்த கமல முதன்முருக்கு
மானைப் பகைமைப் பனிப்பருவ மகலச் செய்த சிறப்பேபோல்
வானூர் சினைமென் விணர்தெய்வ மகளிர் முலையோ டமராடுங்
கானூர் சோலை மரமுழுதுங் கவினத் தளிர்த்து வயங்கினவே.

தம்மை வணக்கு மெழில்வாய்ந்த தையல் மடவா ருளம்வணக்கச்
செம்மன் மதவேள் விழாக்கொண்டு செருச்செய் கால மிதுவாமென்
றும்ம வவன்மிக் கமொழியா தாற்ற மலர்வா ளிகளனந்தம்
விம்ம வுயிர்த்த வாளிழன்ற விரைசூழ் பொதும்பர் தொறுக்கொம்பர்.



செய்ய தளிரி னிடையிடையே தீந்தேன் மலர்கள் பலநெருக்கல்
வையை முழுதும் பணிகேட்ப வார்ந்த கரும்புச் சிலைகோட்டி
யெய்யு மதவேள் கலைகூர்மை யியற்றப் பருவ மெனுங்கொல்லன்
வெய்ய வுலைவெந் தழலிடையே விளங்கத் துறுத்த பரிசேய்க்கும். 8

நிச்சமு மென்றா முன்ப னெருக்குமப் பகைமீக் கொண்டு
நச்சன பனிக டாக்க நலிந்ததா மரையின் வெய்யோன்
வெச்சென முழுது மாற்றி மேம்பட நோக்கி நோக்கிக்
கச்சமின் மகிழ்ச்சி பொங்கக் களுலின கயங்க டோறும். 9

ஆடவர் குழாங்கண் மாட்டு மருப்பிளங் கொங்கைச் செவ்வாய்த்
தோடவிழ் மலர்மென் கூந்தற் றெரிவையர் மாட்டு மார
னேடவிழ் மலரின் வாளி யெய்யும்வார் சிலைநா ணொதை
பீடுகொண் டார்ப்ப போலும் பிரமரத் தொழுனி யீட்டம். 10

மலர்தொறும் வண்டு பாய்ந்து வண்டுக ளுகுத்துச் செந்தே
னலநுகர்ந் தழக்குந் தோற்ற நாயவே லமர ரென்னுங்
கலதிசெய் தெவ்வர் வாழுங் காமரில் லகமிவ் வென்றே
வலனுய ரவுணர் கூடி மாணின்மை புரிவ போலும். 11

காமரு துறக்க வைப்பிற் கார்வரச் சென்ற வன்னந்
தாமரை வளங்கூர் காலஞ் சார்ந்தசென் றடுக்குந் தோற்ற
மேமரு மிளைய வேனி லின்பங்க ணுகரத் தாமும்
வீமலி கற்ப நாட்டு மெல்லியர் வருதல் போலாம். 12

இசைமொழி யாதி வெவ்வே றிடம்பொரத் தருவின் மாட்டும்
பசையொடு வதியும் வாணி பண்ணொடு பயில்வ தேபோ
னசையொடு மகிழ்ச்சி பொங்க நலத்தகு கலைக ளெல்லாம்
வசையறு கிள்ளை பூவை வயக்குவ சோலை தோறும். 13

பாலையே கொள்ளும் வேனிற் பருவத்து முல்லை யாதி
யாலிய பருவத் தின்ப மருவிய மயிலின் கூட்ட
மாலுவ தடாமை யெண்ணி யடங்குவ தறிந்து வல்லே
சாலவுண் மகிழ்வி னார்ப்ப தாய்முனி குயிலி னீட்டம். 14

எந்திணர்க் கொங்கைக் கொம்பி னேழையர் தளிர்ச்செவ் வாய்த்தேன்
மாந்துமென் குயிலின் சொல்லின் மலிவன முசுக்கள் பாயப்
பூந்துண ருகுக்குந் தேறல் புயலென வெழுந்து மஞ்ஞை
யோய்ந்தன கனவி னூரி னுளத்தெழு மகிழ்ச்சி யோடும். 15

பூந்துகள் விரவித் தோற்றுப் புதுமதுக் கவர்ந்து தேனீ
மாந்துதன் மாந்தி யெஞ்சு மதுவெலாந் திரட்டி நாளு

மேந்திணர்க் கொப்பு தோறு மிருப்பல தொங்கத் தமாந்தர்
போந்தனர் கொள்ள வைப்ப புண்ணியம் விழைந்த தேபோல். 16

இலஞ்சி பொய்கைநீ ரோடையே பெருவிர வாவி
கலஞ்சி றந்தநீர் சுருங்கிரண் மலர்பல பூத்துப்
பொலஞ்சி றைச்செழும் பவளவாய்த் தோகைப் புள்ளின்
குலஞ்செ றிந்தெழில் கூர்ந்தொளி கொண்டன யாங்கும். 17

அயிர்வ ரித்தறல் வார்த்துமெய் யடியவ ரகம்போற்
செயிர றத்தவத் தெளிந்தநீ ரோர்புடை யொழுகப்
பயிலும் வெண்மணற் குன்றமும் பாய்மணற் பரப்பும்
வியன்க ரைத்தரு நீழல்சேர் தாரெழின் மிகுந்த. 18

ஆய தண்பனிக் குடைந்திடும் போர்வையி னறையிற்
பாய தண்புன றண்டுவீழ் வனபடர் வேனிற்
மேய தென்றலி போர்வையை வியத்தகச் சுருக்குந்
தூய வுத்தரா சங்கமே யனையவள் வரைகள். 19

ஆன வேனிலின் மாந்தர்போ லவர்த்தடம் பொழிலுந்
தானு மாடுதல் கருதியோ வுறிந்திலஞ் சையத்
தேன முவளாத் திகழ்தரு காவிரிக் குடிநைப்
பேன வார்திரைப் புகப்புனல் பெயர்ந்தொழு கியதால். 20

தேசத் துள்ளவ ரனைவருந் தேம்பொழில் புகுங்கால்
வாசத் தென்றன்மெய் யேற்றவன் காவிரி யாற்றற்
பூசற் றண்புன லாடியும் போக்கிய வெப்பம்
வீசத் தங்கிய புறநகர் மேவுதல் வலித்தார். 21

காந்து பன்மணிக் கலன்களுங் காமர்பூந் துகிலுஞ்
சாந்துந் தண்பனி நீர்களுந் தமனியப் பொடியும்
பூந்தண் டேறலு மூண்டியும் பொற்பவெவ் வேறாய்
கேந்து சேடிய ரிடந்தொறு மீண்டினார் சூழ. 22

களிறு பண்ணியுங் கவனவாம் புரவிபண் ணியுமிக்
கொளிறு பன்மணித் தேர்பல பண்ணியு முவந்து
வெளிறி லன்பரு ளுடன்றமீஇ யூர்தர வேவிப்
பிளிறு கார்தவழ் சோலைபுக் கனர்பிலை யனையார். 23

காமவே ளெனுமரசன் வைக்கொண்டு பகைகடக்கு
நாமவா ளிகடாமு நன்றேந்தத் தணிந்தார்போ
லேமமார் தருசேனை யெனுமடவார் பொழிலுளாய்
வாமமே கலைசிரிப்ப வயின்வயிற்சென் றலர்கொய்தார். 24



மலர்க்கணத்தாற் பொறையாற்று வணங்கினமைக் கிரங்கியோ
நலக்குமெழி றமதுருப்போ னணிவாய்ந்த பகைகுறித்தோ
வலக்கணுற வளிக்குலங்க ளலர்பலவும் பசுங்கொம்பர்
விலக்கருநல் வனப்பிழப்ப மிகப்பறித்தார் மடமாதர். 25

அடியானும் விழியானு மணப்பானுஞ் சுவைப்பானும்
வடிவாரு நிழலானும் வசையானு மிசையானு
நடமாடுந் தொழிலானு நகையானு நட்பானுங்
கடியார மலர்ந்துசில காரிகையார் வழிநின்ற. 26

கைத்தளிரு மியற்றளிருங் காற்றளிரு முலைத்தொத்து
மெய்த்தவெழின் முகமலரும் விழிவண்டும் வாய்க்கனியும்
வைத்திருக்கு மடமாதர் மருங்குபெயர்ந் தாலன்றி
யொத்தமலர்ப் பசுங்கொம்ப ரொடுவேறு தெரிப்பரிதாம். 27

கொம்பரெனச் சிலர்சிலரைக் குறுகியவை யவர்தம்மைப்
பம்புமல ரெனப்பறிப்பப் பற்றியுள நாணுவார்
வெம்புமது தாகரிளைஞர் வேணவா வொடுங்கொய்யை
கம்பவிழ்கோ தையொன்று தழீஇவெள்கி மருங்ககல்வார். 28

சிறைபுறத்தின் மயிர்க்கற்றை சேர்த்தலையப் பசுங்கொம்பி
னறுமலர்கொய் விழைவினொ டணைக்கின்ற மாதர்தமை
யுறுகலவ மயிலென்ன வுளங்கொண்டு பெடைமஞ்ஞை
முறுகியவன் பொடுதொடர்ந்து மூக்கினைக்கண் டயருமால். 29

மதுவிதழின் முறுக்கவிழ்த்து வார்ந்தொழுகுஞ் செண்பகத்தின்
புதுமலரோ யிபன்மணத்திற் பொன்முமை நிலைநின்ற
சுதுமெனச்சென் றனர்கொய்யுங் காரிகையா ருயிர்ப்புறலான்
முதுசுவைத்தே மலரினைத்து மொய்த்தவியன் மணந்திரிந்த. 30

கொய்யுநறு மலர்த்தாதுங் கொழுந்தேனுஞ் சிந்துதலான்
மெய்யளைந்து மணங்கமழ மெல்லியலா ரிடைவண்டு
பையவலைக் கவருயிர்ப்பாற் பயந்தோடி யாடவர்தோள்
வெய்யமலர்த் தொடைவீழ்வ தாயுரைப்ப மேவுவபோல். 31

தூவ்வாத வமிழ்தனைய தொடித்தோளின் மடமாத
ரிவ்வாறு மலர்பலகொய் தெழிலாரத் தொடுத்தமைத்துச்
செவ்வாசப் பொற்சுண்ணஞ் சிவிறிமுத லியதழீஇ
யவ்வார்தண் புனலாட வன்பரொடு நதியடுத்தார். 32

காரமர் குழல்வளர் சைவலங் கண்கய லொளிநகை நித்திலஞ்
சீரத ரம்பவ ளந்தனந் திகழ்தரு புற்புத முந்திநல்

லோணி கழிகால் சான்மல ரெனவொளிர் மாதர்கு ழாங்கொல
கிரணி நதியொடு நதிபொர் சேர்ந்தென நதியுளி றங்கினார். 33

கன்றொடு கயலெதிர் பாய்ந்தன கைபொடு மகரம லைத்தன
வென்னுற கைவிர லொடுகவி றேற்றன வுகரம டிப்பொடு
தண்ணிய நிரைபல மூட்டின தாளொரு மூன்றொடு தெருவங்க
டிண்ணிய வராலக மடர்ந்தமர் செய்தன மகளிர்நீ ராடினர். 34

குங்குமம் விரவிய தண்புனல் குமரர்கள் சிவிறியில் வாங்கியின்
றங்குறும் மேனியர் கொங்கைகே ணன்னுற விட்டன ரைதென
மங்கைய ரவையிடை யிடைவிழ வார்தரு பங்கினுற தங்குபு
பொங்கறன் மேற்செல வுந்தினர் பொருசிலை யிங்க ளம்பொடே. 35

வாளொடு கியவொளி மின்னன மாதரு மொழுகவி மைந்தருந்
தேனொடு கியமல ரெதிரெதிர் செல்லுற வுந்தின ராடினர்
கூடொடு கியகழை வண்சிலைக் குமரனு மிரதியு மனைகராய்க்
காடொடு கியமலர் காளிகள் கடவினர் பொருசமர் நிகரவே. 36

எதிரெதி ரொருவர்க ளொருவர்மே லெறிதரு மலருமா வன்பக
ளதிகா லினவவர் மாலையி னணவின விதிநியி னிபொர
முதிர்தய ரொடுபுனன் மகர்மலர் முற்றின வலைகள லைத்தலிற்
கதவின பயில்பொழி லிடர்புறங் கண்டவர் கங்கிலை கொண்டென. 37

குதலைமென் மொழியரு மைந்தருங் குஞ்சர மமர்செய்த லாம்பொர
மதலைக ளெதிரெதிர் கடவுபு வலைமென வின்னைட யெறிந்தனர்
கதமலி பாசமெ னத்தொடர் கண்முறை வீசினர் கண்டிலாத்
புரமுறு தொடலையு ரம்புகப் போக்கின ரார்த்தன ராடினார். 38

சுண்ணமு நறுமலர்ச் சுண்ணமுந் தாயதன் குங்குமச் சாந்தமுங்
கண்ணிய மிளகிய தளிர்களுங் கையரிக் கொண்டுசெல் காவிரி
கண்ணலி னெடுகிய புண்ணியு காரிய புலவிரொறு ழிந்துடன்
மண்ணினர் மன்னவர் மகிழ்கொள மல்கிய நறுமணக் கமழுமே. 39

இன்னண மாடிய வினைவரு மேதினர் கரைமிசை வார்பொழிற்
றுன்னின ரணிகள ணிந்தனர் கவையமு தாரவ யின்றனர்
மன்னிய காதலி னன்பர்தோ ளன் மருவினர் வேனிலு லப்பினைப்
பின்னிலை கண்டன ரிங்ஙனம் பெருகிய வேனிலு நின்றதே. 40

அனைய காலையிற் கோழியி னிருந்தர சாள்வோ
னெனையு மாண்டருள் புரிதரு மிறைவனு ருருவிற்
றினையும் வேனில்வெப் புறவகை செய்குவென் றெண்ணிப்
புனையு மாலயந் தொழுஞ்சிறப் பெடுக்கெனப் புகன்றான். 41



ஞான கேத்திரத் திருந்தரு ளைம்பது ருருவி
னுன வேனில்வெப் பகற்றவு மரும்பொருள் பலவு
மீன நீங்கிய வுழையரி னெடுத்தனன் விடுத்தான்
ரூனு மேருவான் றன்மனை யாவொடு மெழுந்தான். 42

உடங்கு மாதொடு செல்பவ னுள்ளிய மிழ் தரள
வடங்கு லாயவன் முலைகளின் வருடிவில் விடக்கண்
டடங்க லார்புர நீற்றிய வண்ணலார்க் கிதனைத்
தடங்கை வாங்குபு சாற்றுது மெனத்தனி நினைந்தான். 43

காவி ரிக்கரை யடைந்தனன் காதலி யோடு
கூவி ரத்தடந் தேரினன் கூர்த்தபொற் சுண்ணம்
பூவி ரைத்தசாந் தாதிதூய்ப் புனல்விளை யாடி
மாவி ரைத்தெழும் பூம்புனல் வார்கரை யிவர்ந்தான். 44

தரங்க வார்புன லலைத்தலிற் றனிக்கள னீங்கிப்
புரங்கொல் சேவகற் கமைத்தபூண் கதிர்பொழி யார
மிரங்கு காவிரி யாற்றுநீ ரொழுக்கொடு மிறந்த
தரங்கு தீவினை யானஃ தறிந்தனன் மாதோ. 45

நின்ம லாமணி யாரநா னினக்கென நினைந்தேன்
புன்மை யால்வரு காவிரிப் பூம்புனல் வீழ்த்தே
னன்மை மேவிய நானிலம் விற்குமன் னதற்கே
யின்மை வேறுமோ ராமெய் வுலகினு மினையே. 46

ஆத லாலடி யேனது கெடுத்தவன் பிழையிற்
றீர்த லேபுரிந் தாண்டருள் புரிகவே லதுகின்
மாதர் மேனியி லணிந்துகொள் கெனமதி யாழாந்
தோதி னுளுள மூருகிருகன் செய்கடன் முடித்தான். 47

மன்னர் மன்னரு மமைச்சரு மருங்குளார் பலருந்
தன்ன நன்னதி நீங்கினன் சுடர்மணிக் கழலா
னென்னை யாளுடை யானிருந் தருள்வளங் கொழிக்கு
நன்னர் ஞானகேத் திரத்தினை நடந்துசென் றடைந்தான். 48

அகில காரணர் விளைஞர்பாற் பூதியை யளித்து
முகில்சு லாவுநன் னிழைத்தமா மதிலையுண் வணங்கி
நகரின் மாமணி நிழற்றுகோ புரநெடு வாயில்
புகரில் கேள்வியான் கடந்துபோர் விடைப்புறத் தடைந்தான். 49

எட்டு நூப்பிறு ஸைந்துறப் பிறையிணி திறைஞ்சிக்
கட்டு பொற்செழுங் கோயிலிற் காமர்பன் மருகு

மட்டு குத்தவார்ந் தொடைமுடி மன்னவன் சூழ்போர்க்
கட்ட ழைத்தபே ரன்பொடு முன்னுறப் புகுந்தான்.

தூய வேலையின் முன்னமோ திருமுடி யாட்டத்
தூய சீர்த்திரு மஞ்சனஞ் சுடர்மணிக் குடத்தட்
பாய காவிரிப் பைம்புனல் பரிசன முகந்துத்
தீய வாங்கியாட் டினனிறை பூசனை முடிப்போன்.

அன்ப ரன்பிலுக் கெளிவரு மமுதநா யகனூர்
பொன்பி றங்கிய புனலொடுங் குடம்புகுந் தார
மின்பி றங்குசம் முடிமிசை மிளிர்தரக் கருணை
மன்பி றங்கிய சோழன்மேல் வழங்குகா ரணத்தால்.

அன்ன வாறுநீர்க் குடத்திறு மடுத்தமா ஞூர
மன்று தார்முடி விழுதலும் பூசைசெய் மறையோன்
றன்று யோகைபன் சுடர்மணி பெயர்த்திது மேலான்
மின்ன லாங்கவரிந் திருந்தமை கண்டனன் வேந்தன்.

சம்பு மூலத்தின் வீற்றிருந் தருளிய தலைவ
வெம்பி ரானின தருளெனக் கிருந்தவா றென்னோ
வம்பு நீணதிக் கெடுத்தமா லூரத்தின் முடிமே
லும்ப ராருநன் றதிசய முறவணிந் தனையே.

என்று நாயகன் றிருமுடி யிருந்தமா ஞூர
நன்று நோக்கிய நாமவே லனையனைத் தெடுத்தா
னன்று சூழ்ந்தவ ரினைவருங் கண்டதி சயித்தார்
நின்ற தாலவன் பெரும்புக ழின்றுமி வுலகத்தில்.

ஏக நாயக னருளினுக் கிலக்கமா மனையன்
மாகர் சூழவி லாண்டநா யகியையும் வணங்கி
மேக மேறுறங் கெழின்மதின் முற்றுறச் சூழ்ந்த
போக பூமியிற் பொலிந்ததன் னகர்புகுந் திருந்தான்.

அறையூ ருவின்வெற் பிறையுயிர்த்த வணங்கை யிருந்தாந் தலைவனுக்குக்
கறையூ ரயில்வேல் கரத்தோர்சிக் கருதா ருயிர்மேற் கொறுகொறங்கு
முறையூர்ச் சோழன் மணியாரஞ் சாத்திற் றமைத்தா மூர்ப்பலொடு
முறையூர் சிலம்பி யிவையிரண்டு முபன்ற பணியு மொழிகுவாம்.

உ

# கஜாரண்யப்படலம்.

மதும லர்ப்பொழின் ஞானபூ மியின்வட மேல்பாற்
புதும லர்த்திர ளணிந்துபொன் மணிபல கொழித்துப்
பதும குண்டலி யெனப்படும் பசும்புனற் றீர்த்தங்
கதுவி நின்றது சுவேதவெற் பெனவொரு கல்லு. 1

ஆரந் தேக்ககி லசோகுசண் பகமகிழ் கன்னி
காரம் பாடலங் குங்குமங் கணிவழை சிந்து
வாரங் கூவிளந் தாதகி மருதமர் தாரம்
வேர லாதிகண் மிடைந்தகா னுடுத்ததவ் விலங்கல். 2

வருடை சாமரை மாமரை வாரண முழுவை
யெருமை கேழல்பஞ் சானனம் யாளியெண் காமா
வருண மாதிய மிருகங்க ளடர்ந்தவக் கானத்
தொருவில் வாழ்க்கைகொண் டிடுமொரு சுவேதவெண் களிறு. 3

வழுவி லாதமெய் யன்பினல் வையக மயின்றோன்
பழுதில் பூசனை புரிதரப் பல்வரங் கொடுத்து
முழுது மானவ னிருந்தவம் மூரிமால் வரையால்
விழும மேவுநாண் மேலைநல் வினையும்வந் தடுப்ப. 4

அளகி ஞேடுவன் குராலயின் முழையினவ் வடுக்க
விளகு கானகத் திடைநின்று மெழுந்தவவ் விரைந்து
குளகு தேரிய செல்வது கொள்ளிடங் கடந்து
வளகு நீடிய ஞானபூ மியைமரு வியதே. 5

ஞான பூமியை நண்ணு லோடுமங், கான மெய்யுணர் வகந்து தித்தெழத்
தான மாமழைத் தறுகண் வாரணம், வான ளாவுவார் பொழிலின் மேயதே. 6

இரைநு கர்ந்திடு மெண்ண நீங்குபு, விரைய வார்பொழின் மேவ லோடுமங்
குரையி றந்தவ னுருவ நாவலின், புரைய நீழலிற் பொலியக் கண்டதே. 7

அசித்து முப்புர மழித்த நாதனை, நசித்து வல்வினை நழுவ நோக்கலும்
பசித்த கன்றுதாய் பாற்ப டர்ந்தென, விசித்த வன்பொடும் விரைந்த டுத்ததே. 8

மெய்வி திர்ப்புற விழியி னீருகக், கையெ டுத்துமுன் காலவ ளைத்துமண்
ணையெ னப்படித் தமுத நாயகன், செய்ய சேவடி சென்னி வைத்ததே. 9

எழுந்த குழக் குமுன் னெய்தி கூத்தாடிட், டெழுந்த நீர்க்கட லயின்ற கார்க்குரல்
விழுந்த கீழ்ப்பட மிக்கு லப்பிமால், கொழுந்த வெண்டெழு விதரு றிக்குமே. 10

பண்டைவல் வினையின் றிருக்கிறு நுடலம் பற்பல வெடுத்திளைத் தாறு
மண்டிய துயரி னழுந்திடின் றழிந்தா மற்றுமுன் செய்தவம் யாதோ
தொண்டுகொண் டருளு மமுதநா யகனைத் துணையிலா மெய்யுயிர்த் துணையை
யண்டருக் கரிய வமரனை நாவ லொன்றிழ லெளிவரக் கண்டாம். 11

இனியிவற் குரிய பூசனை யியற்றி யிருண்மல முதலொழித் தாவிப்
புனிதமெய்ஞ் ஞான வின்பமுந் தியியினைப் பொருந்துவ தேகட னென்னக்
கனிவுள முருகக் கதிர்பொழி தரளங் கனைசெய்த் திரையெறித் தெதிரும்
பனிமலர்த் தீர்த்தம் பலவுமாய் வெய்திப் படிந்திருங் கரையினை நியமே. 12

கீட்டிவார் கரத்திற் கோட்டுறு மலரு நிலத்தலர் மலரும்பைங் கொடிகள்
காட்டுபன் மலரும் புனல்வளர் மலருங் கவின்றளிர் காய்கனி பலவும்
வேட்டன கிதப்பப் பறித்துவெண் ணூலவ் விரித்து வொருங்கிறை யிருத்திப்
பாட்டளி முரலுந் தழைகொடு திருமுன் பயிறரா னுடைத்தகற் றியமே. 13

செம்பொன்னு நவமணியுஞ் செழுமலருங் கொணர்ந்திருக்கு
மம்பொன்னிப் புனற்புதைக்கை யகரிப்பப் போதகந்து
முன்பன்ன மறியாத முதல்வனார் முடியாட்டி
மன்பன்ன மார்பவ்வு மல்கவெடுத் தருச்சித்து. 14

தீங்கனிகா யெதிர்வைத்துத் திருவமுது செய்வித்துப்
பாங்குபெறத் தனக்கியன்ற பணிபலவு மினிதாற்றி
நீங்குமெய் யன்பினொடு நின்றுதுதி முழக்கெழுப்பி
யாங்குவலம் வந்தொருசா யயர்ந்துயிர் னிந்திறைஞ்சி. 15

கறைகொண்ட நெடுங்குவ காயாவி மலிழ்கூர
விறைகொண்ட வித்தலத்தி னிருந்தாசை மலர்விடுப்பி
னிறைகொண்ட பிழைவந்து நிற்குமென வஞ்சகன்று
நறைகொண்ட தன்கான நண்ணினன் மயக்கமிற. 16

இன்னவா றியம்பூசை யியற்றிவருங் காலத்து
முன்னமோர் யாங்கொருசார் முருகவிழ்பூ மாத்தறித்து
நன்னரா விழைத்திழைத்து நன்றுவைத்து வென்றுறை
தன்னைனோர் கண்டதனிற் சார்ந்ததா லொருசிலம்பி. 17

முன்செய்த தவப்பயத்தான் முருகவிழ்மென் மலர்நாயன்
மன்செய்த பசுங்கோட்டின் மீதனக்குச் செயற்குயன்று
பின்செய்த நூலிழைத்து மேலொடுநீ றழிதருக்காற்
றொண்செய்த பெருமானார் திருமுன்னர்க் குறுகியதே. 18



சேணுரு மணிமேருச் சிலைவளைத்த செழுமலையைப்
பூணாரா மெனநாகம் பூண்டருளும் பூரணனைக்
கோணாக வனையானுங் குறுகரிய குருமணியை
மாணாத மலந்தீமிய மருங்கெதிர்கண் டதுமாதோ. 19

செஞ்சடையோன் றனைக்கண்ட திகழ்விழியி னிருளேபோன்
மஞ்சனுருக் காண்டலுமே மறைத்தமலம் பெரிதிரியத்
துஞ்சியநல் லறிவுதிப்பத் தொழுதெழுந்தெ னேயென்னே
கஞ்சனரி தமக்கரியான் காட்சிகொடுத் தனனென்னா. 20

கழிகாத லுளத்தெழலுங் கண்ணுதலைப் பிரியாது
வழிபாடு செயல்வேண்டு மற்றதற்கு மனுவேந்தா
யொழியாது பொருள்பலவு முழையர்தரப் பெற்றிலனென்
றழியாமற் றினநூலி னிலயஞ்செய் தெனத்துணிந்து. 21

வானளவு தூவிகையின் மணிக்கோயின் மண்டபங்க
ளானபெருங் கோபுரங்க ளணிசெழுமா மதிற்குலங்க
ளூனமற வுறப்பினொடு முனுற்றவவே யனையபலவு
மீனமற வாய்நூலி னிழைத்தமைப் பியதன்றே. 22

வெண்ணுவ னறுங்கனிமேல் விறந்தொளிர்தா ரகைநிகர்ப்பத்
மண்ணுர்வெண் மதிநிரம்பித் தயக்கியமண் டலமேபோ
னண்ணுமின் றதுகோயி னூற்றிசையும் போக்கியநூன்
மண்ணுரத் தூங்கியன மதிக்கிரணம் போன்றனவே. 23

கலதிபுரி கொடுஞ்சாபங் கைபகலத் தவமுன்பு
நிலவுபுரிந் தொளிர்கலைக ணிரம்பியது மறுவலும்புக்
கலகிறவங் குயின்றுகறை யகன்றுமுழு வடிவானு
மிலகமலன் முடிக்கணியா யிருந்ததாஉம் பொருங்கோயில். 24

கடிகமழும் வெண்ணுவல் கனலியபா சடைதொடுத்து
வடிநெடுநூ லிழைத்தெடுத்த மணிக்கோயில் வார்கொடியி
னிடியுயர்த்தோ னெனத்தானு மினியவராங் கொளமேக
மடிகண்முடி மிசையமுத தாரைகளாட் டுதல்போலும். 25

ஆயிரங்கண் ணுடையவன்முன் னடுத்தகாண் மிசைகவித்த
மாயிருந்தண் டாள்மர் விகைக்குடையும் பொருமவனூற்
பாயிருந்த நித்திலப்பூம் பந்தருமொத் திடுமெங்கு
மூயிலங்கி யிறையவனார் முடிமிசைமல் கியகோயில். 26

ஒருகைக்கை தலைச்சடையி னொளித்திருந்தா னெனவேனை
யிருகைக்கை நதியும்விசும் பிடைநின்று மிறைவரொடு

பொருதந்தக் கங்கையினைப் புயக்கரிகைக் கவித்தமுர
மருவும்புல் வியர்லம்பி வாய்நூலின் மணிக்கோயில். 27

கங்கையணிந் தருமன்றிக் காமர்திரு வுருமுழுதும்
பொங்குபுனற் றிரளான புண்ணியர்பால் வழியாட்டிற்
றங்குவதே கடனென்று தாக்கரெங்கும் பார்புனரி
யங்கணைந்து முடிமிசைபோர்த் தலங்கியதாஉம் பொருமக்கோயில். 28

உரைத்தபெரும் பூதங்க ளோரைந்து ளொருதான்மர்
றிரைத்தபுனற் சடைக்கற்றை யெம்பிரா னுருவாகித்
தரைத்தலைவை யெதெவர்க்குஞ் சான்றுரைத்தா லெனப்புனலே
நிரைத்தமணிக் கோயிலுமாய் நிற்பதுஉம் பொருமதுவே. 29

பைத்தபாம் பணையாறும் பங்கயறும் வானகுருங்
தத்துநீர்க் கடல்புடைசூழ் தரையகரும் பணிக்கெப்ப
முத்தியா நிகள்கொங்கு முதிர்ந்தபெரும் புகழ்சூழ்க்கு
மெத்திமேக் குறங்கவந்து விளங்கியதாம் பொருக்கோயில். 30

வேற்றொருமால் வரைச்சிலையால் வேறொருவர் திருக்கோயி
லாற்றுதல்வேண் டாவெனவே யவியெரளிவெள் ளியக்கிரியே
போற்றுமெழிற் கோயிலுமாய்ப் போந்துசெடி நீர்த்திரளா
லீற்றிருப்ப விருந்ததுஉம் விழையுமொரு தூற்கோயில். 31

ஏந்தவுயி ரடித்தொண்டி னியங்கின்ற தந்தவுயிர்
தந்தவுடல் பொருளுயிருந் தகவேற்றுக் கருணைசெய்ய
மந்தமதி முடிவேய்ந்தா ரன்புமிருஞ் சிலம்பியின்வாய்
வந்தசிறு தூற்கோயின் மணிக்கோயி லெனக்கொண்டார். 32

மாதவருஞ் சிறுநூலி னொருகோயில் வெண்ணுவர்
சேதிழ லமர்ந்தபிரான் றிருக்கோயி லெனக்கொண்டா
ராதலினவ் வுயிரெதனை யளிப்பிறுமன் பொன்னுளதேற்
சாதல்பிறப் பினையறுக்குந் தவமாக முடியுமே. 33

புல்லியமெல் லுடற்சிலம்பி புனிதர்மகிழ் திருக்கோயின்
மெல்லிழையி னளியருந்தி மிகவியற்றுந் திறமதிந்து
கல்லவுடல் பொருளாதி கன்றுடைய சிலரன்றே
சொல்லுவெறி பாற்பணிசெய் தொழுதாடைக் கெனன்செய்கேன். 34

உறுநூலின் முறையாற்று முனற்றுபணி யிதுஞ்சிறப்பச்
சிறுநூலின் மணிக்கோயில் செய்துமுடிக் கிசைசிலம்பி
நறுமாவ விடைவதித னையைவென்று முன்புதான்
பெறுசீர்மை மரமெய்திப் பேடிமியிருந் தனதயன்றே. 35



சிலம்பிசிறு நூற்கோயில் செய்திறைஞ்சி வலம்வந்து சென்று பாங்கர்
நலம்பெறுதன் னிருக்கையினை நண்ணியவந் நாள்விடிய னனுகுங் கால
மலங்குமணிக் காவிரியிற் புனலாடி யலர்கனிகா யமையக் கொண்டு
புலம்புகளி யளியுளரும் புகர்முகத்த கடகளிறு புகுந்த தன்றே. 36

கதழ்ந்துபுகு மதவேழங் காமருநூற் கோயிலெதிர் கண்டு கண்டோ
ரீதந்தழுவு சிவபெருமான் சூழலெலா மிதுவளைந்த தென்கொல் கெட்டேன்
பதந்தழுவு மடியார்க ளிதுசூழ்ந்த பனிமலரும் பறித்துச் சாத்தார்
மதந்தழுவு புல்லியர்போல் வந்ததனைக் கொல்லெனவ மதித்துப் பின்னர். 37

நெடும்புல்ழுக்கைத் தலத்திருந்த மலர்முதற்பல் பொருளொருபா னிறுவி வாசம்
படும்பசுந்தண் பொழின்முழுதுந் தருவிவிழிக் கெதிர்சிலம்பி பட்டாத வாற்றுற்
கொடும்பணிவெவன் மதிக்கொழுந்து மிலைத்தவர்தந் திருமுன்பு குறுகி நூலா
லிடும்பெரிய கோயிலினைச் சிதைத்திடமெல் லாம்புனித மியற்றிச் சென்று. 38

நீட்டுசிறு நூற்றிரளா னியந்தரித்த கோயிலெலா நிமிடப் போதில்
வீட்டிநனி யழுக்குதலான் மினிர்தருமந் நூற்பரிசம் விரவுந் தீமை
யோட்டநறும் புனன்மீட்டு முறத்தோய்ந்து வெண்ணுவன் றூல மெய்தி
யோட்டையற முன்புபோற் பூசித்துத் தனதிருக்கைக் கேகிற் றம்மா. 39

கொருநூற் றிரளினு னிகழ்த்துங் கோயிற்
கருணையங் கடலினைக் கண்டு சூழ்ந்தவன்
மருமலர்ச் சேவடி வணங்கு வாமெனப்
பொருவறு சிலம்பியும் புகுந்த தன்பவே. 40

நறுங்கனி தூங்குமெவன் றுவன் மென்னிழல்
பெறுங்கட வுளர்பிரான் பேணு மாலய
மிறுங்கரி சதிந்திந்தி யார்செய் தாரென
வறுங்களங் கண்டவ ரென்ன மாழ்குமே. 41

மண்ணணிடை விழுமொழு மறுகு நாவலி
னண்ணிய சரகொடு நவையு ருவகை
யண்ணாலுக் கிழைத்தவா லயமுஞ் சிந்துமே
யெண்ணரிய தெண்ணமென் றுய தென்றுமே. 42

ஆவலெவன் செய்குவ லமல ஞர்முடி
காவலின் சரகலா னவம தாகவே
பூவலர் தளிர்தழை பொதுளிற் றீதென்ன
பாவமென் றினையுமெய் பதைக்குஞ் சோருமே. 43

கைவெனக் கில்லைசெய் காரிக நீக்குநச்
செய்யவே னியினவை செறிந்து நிற்பதோ

ஐயவோ வடியஞ் லாவ தென்னெனாக்
கையறு கவலையிற் கலங்கிக் கன்றுமே. 44

மண்டிலே சாருகா லிற்ப மற்றிது
கண்டுநிற் பதும்பிழை கருது மேதுபா
கொண்டல மருதலே கொள்ளைத் தன்றென
விண்டொடா ராலயம் விதித்துப் போற்றதே. 45

நாடொறுங் கடக்கி கவித்து செல்லவுக்
கோடலின் மனத்தொடுங் கோயி லாக்குபு
பீடுறச் செல்லலிற் பெருகு வெஞ்சின
கீடலிற் சிலம்பிமற் றிதுவி யாத்ததே. 46

உருவுறு கோயிலை யுலைத்துக் குப்பையா
வெருளுறு வுளத்தொடும் விமலன் மெய்யுற்றுத்
திருவடிப் பிழைத்தவா ருயிர்செ குத்தலே
பொருளெனக் கரந்துறு புடையி ருந்ததே. 47

இரவிறுந் துயிலறச் சிலம்பி யின்னணங்
கரவொடு மிருப்பவெங் களிறு புக்குலாய்
விரவிழைக் கோயிலை விளித்து முன்புபோற்
பரவிய பூசனை பயிற்றி நின்றதே. 48

ஒளித்தொரு மருங்கு வைகு மொள்ளிய சிலம்பி நோக்கித்
தெளித்தரு ளிறைவன் பூசை செய்திடி ளிழைத்த கோயில்
விளித்தலும் வேண்டுங் கொல்லோ வெனவெழும் வெகுளி பூக்கத்
துளித்திழி மதயால் யானைத் தூங்குகைத் துளைபுக் கன்றே. 49

மகா யகஞ்சு டொற்றித் திருந்தியா னைத்தி னின்று
நாகநீள் கரத்தி னூடு நண்ணிய சிலம்பி யென்னே
வேகமாய்க் கபாலத் தேறி வெச்செனக் கறித்த லோடு
மூகமாங் கிருந்த தோட வுலம்பிமண் ணிடைவீழ்ந் தன்றே. 50

இடியெனப் பிளிறுங் கைவை பெடுத்தெடுத் தெறியு மண்ணி
னடியுராய்ப் புரூதி பொங்க வலமரும் புரளும் பொங்கும்
படியினின் றெழுந்து சாலப் பன்முறை யுயிர்க்குஞ் சாய்த்து
முடிநனி துளக்கும் வீழ்ந்து முடிந்தது தறுகண் வேழம். 51

வார்ந்தகை நுதியை வாயின் வல்விமால் யானை சாம்பச்
சார்ந்துமண் ணிழிய வாய்த முன்றுடை யுறுத லாலே
பூர்ந்துள சிலம்பி தானு முறுதுய ருழந்து மாய்ந்த
தார்ந்தசொல் பகையும் வீந்த தலைவிரண் டற்கு மாதோ. 52



மண்ணிடைச் சிலம்பி யென்ன மதமலை யென்ன நின்றோர்
பண்ணவ ராறூர் நாவற் பனிமலர் நிழலி னூரும்
விண்ணவர் சொரிபூ மாரி மிடைதரக் கணங்கள் சூழப்
புண்ணிய விடைமேல் கொண்டு பூவையோ டெதிரே நின்றார். 53

கண்டன ரிறைவ னுரைக் கடவுள ரான வன்பர்
கொண்டனர் மகிழ்ச்சி யுச்சிக் கூப்பினர் செங்கை கண்க
ளுண்டுளி சிந்தச் சூழ்ந்து நூபுரஞ் சிலம்புந் தாளிற்
றண்டென விழுந்தங் காடித் தட்டமிட் டேத்தா நின்றார். 54

செழுநீர்த் திரளே திவண்மா மணியே
கழுதார் வனமா டியகண் ணுதலே
தொழுவா ரமுதே துரிசார் தமியேம்
பழுதார் பணியும் பணியாக் கினையே. 55

அற்றூர்க் கலதின் பருளா நிதியே
வற்று தவருட் பெருவா ரிதியே
செற்றார் புரநீற் றியசே வகனே
பற்றுப் பணியும் பணியாக் கினையே. 56

மடமா திடமா கியவாழ்க் கையனே
சுடர்மா மதிவேய்ந் தருள்சுந் தரனே
யடர்தீ வினையே மையுமாண் டருளப்
படராப் பணியும் பணியாக் கினையே. 57

என்று தோத்திர மியம்பலு மெம்பிரான் மகிழ்ந்து
நன்று கூறுவா னயத்தகு மன்புடை யமரீர்
வென்று தீவினை யனைத்தையும் விளங்குமித் தலத்தி
னென்று நாம்விழை பூசனை யுஞற்றுகா ரணத்தால். 58

இழிந்த யோனியென் றியம்பிடப் படுநும துருவங்
கழிந்த தாலிவண் யாவருங் காமுறுந் தேசு
பொழிந்த வாக்கைய ராயினீர் புல்லுதீ வினையு
மொழிந்தீர்மிக் குயர்ந்தனீ ரும்பரா ரிறைஞ்ச. 59

ஒருத்த லாக்கையிற் றீர்ந்தவு னுயர்ந்தகம் மூலகிற்
கருத்து மேதகும் பெருங்கண நாதனுய்க் கலந்து
வருத்து மாமலம் விடைகொள வயங்குகம் மருளாற்
றிருத்த மேவரு மானந்தத் தவசமாய்த் திளைக்க. 60

ஞான கேத்திர மாளவித் தல[illegible]டை ஞான
மோன வீட்டினை முற்றுவான் முயன்றகா ரணத்தா

வினை நீக்குமித் திருக்க வென்றுநின் பெயரான்
வான நாடரும் வழங்கிடப் பட்டுவாழ்க் திருக்க.

சிலம்பி யாக்கையிற் றீர்ந்தவன் றிகிரியோன் றருட்டி
யலம்பு தீம்புனற் காவிரி நாடமர் சான்றோர்
புலம்பு காவுல காண்டொங் குளாகமுற் பணியாற்
புலம்பு தீர்ந்துயர் வீட்டினைப் புணர்கெனப் புகன்ற.

அமுத நாயக ரவிர்செழு நீர்த்திரட் குறியிற்
குமுத வாயுமை யாளொடுங் கொம்மென மறைந்தார்
சமுக ராயருள் வழங்கினார் மறையுமுன் கருணைச்
சமுக ராயிமை யார்விமா னங்கொடு சார்ந்தார்.

களிற்றிற் றீர்ந்தவன் கடிசெழு நகரிவின் மூலப்
பிளிற்றுத் தோலுரி யாரடி பெயர்த்துய்வர் தனைசெய்
தொளிற்றத் தேசுடை விமானமூர்ந் துயர்சிவ புரத்தின்
வெளிற்றுக் கேள்விநீர் நானந்த வெள்ளத்துட் குளித்தான்.

தேனைக் காதலித் தாளரி செறிகவுட் கடாத்த
வானைக் காருள் புரிதலி னானைக்கா வாயிற்
றேனைக் காவுடை யிரும்பதி யெவற்றினு மேலா
யூனைக் காமுறு வுயர்வருண் ஞானதேத் திரமே.

ஞான தேத்திர மானைக்கா வானது நவின்று
மான மால்விடை யூர்தியா ரருளிய வரத்தான்
மான வேலுடைச் சோழனுய்ச் சிலம்பியா னவனு
மூன நீத்துந் தேண்மியொன் றுரைத்தியுஞ் சூதன்.



உ

# கோச்செங்கணார் வழிபடுபடலம்.

தருமந்தி கழுமுளத்துத் தவமுனிவர் தொழுதேத்த
வருமந்தி திறப்பெருமான் மகிழ்ந்தாடு மரங்காகுங்
கருமந்தி முசுவுகளுங் கடிபொழில்சூழ் தடைந்தவர்க்குத்
திருமந்தி யூதருளுஞ் சிதம்பரமென் றொருதலமே. 1

என்றுவரு நமக்கருளென் றிரங்கலுறு வீரந்தோ
வென்றுவருந் தவிர்மணியி னிரணியமன் றிறைஞ்சாமை
யென்றுவரு மலக்கட்டு மெண்ணியதும் வரும்பணிமி
னென்றுவருங் கடலறத்தே னிழிபொழிற்பூ வைகளினக்கும். 2

தருக்கமல மலமென்னத் தத்தைகள்பே சுபொழில்கண்
மருக்கமல மலர்மன்னும் வண்டிசைபா டுவதடங்க
ளிருக்கமல மலரமுறை யியம்புவன விருக்கிடைகண்
முருக்கமல மலகிடுமர் திரவழன்முற் றுவமனைகள். 3

இருப்புலக்கைத் தொடர்க்கரத்த வியமமர்செய் வனவெளிக்கள்
விருப்புலக்கைப் புயக்களமர் வினைபுரிவ தடம்பணைகள்
செருப்புலக்கை யரைப்படுக்குஞ் செறிபொழில்வை குவமதில்கள்
உருப்புலக்கை யணிந்தவர்மெய் புரையயில்வ திருமடங்கள். 4

நதிக்கோட்டந் தருக்காமை நாணமதுப் பொழிந்தளிக்கும்
மதிக்கோட்டந் தருக்காமை மங்கையர்வா ணுதல்கதிர்க்கும்
நிதிக்கோட்டந் தருக்காமை யிலைக்கென் றிடினிருதன்
கதிக்கோட்டந் தருக்காமை யடியாரைக் களிப்பிக்கும். 5

மருந்துதரு வனமொழியார் மருந்துதரு வனமொழியா
ரருந்துதிக்குக் கற்பணியா ரருந்துதிக்குக் கற்பணியார்
பொருந்தவசத் திறந்திகழ்வார் பொருந்துவசத் திறந்திகழ்வார்
இருந்தவள மாடவணி யிருந்தவள மாடவணி. 6

இவ்வாறு வளஞ்சிறந்த விரும்புலியூ ரெனும்பதியி
னெவ்வார்க டிறையளப்ப வொருமதிவெண் குடைகவித்துச்
செவ்வாய்மை யரசாளுஞ் செங்கோலி னொருசோழன்
றுவ்வாத மன்றுமிழ்கின் றொருழும்புபுரி சுபதேவன். 7

மன்னவற்குத் திருமனையாள் வாய்த்தபெருங் கற்புடையாள்
கன்னியர்க ளரசென்னுங் கமலவதி யெனும்பெயரா
ளின்னவர்பா லுலகுய்ய வெம்பெருமா னருள்செய்த
வன்னவரத் தாற்சிம்பி யமாறுதிப் பாறைறன். 8

இருதிங்கள் சுபதேவ னெழிலிவயிற் றிற்சுவையொ டிம்போ
பொருதிங்கள் புறங்கொடுக்கு மொளிமுகத்தாள் வயிற்றேசி
வருதிங்க ளொருபஃதும் வளர்ந்துபிறந் ததிதொன்றிற்
பொருதிங்க ளரசாண்டு புரிந்தபலர் புகல்வாமால். 9

மன்னவர் திறைமுன் னிட்டு மலரடி வணங்கிச் சூழத்
தொன்னிலங் காவல் பூண்ட சுபதேவ னென்றுஞ் சோழன்
றன்னருட் குரவன் சரதத் தாளிணைக் கமலந் தாழ்ந்து
நன்னய மொழிக ளார்த்தி நகைமுகத் திதனை வேண்டும். 10

அடியனே மக்கட் பேறின் காதலித் தரிய நோன்பு
செடிபவ னரியா முக்க ணிருமலர்க் குறித்துச் செய்தேன்
படியிலப் பயத்தா லடைந்தேர்ப் பயப்பதற் கைய மின்றே
யடிகளைப் புதல்வர் நல்லா றறநெறி யருளு கென்றான். 11

வெற்றிவே லரசன் வேண்ட வினைத்திருக் கிரித்த மேன்மை
யுற்றவா சிரியன் சால வுவந்துமன் னவர்க ளேறே
பற்றுமால் விதிக ளெல்லாம் பயிற்றுதற் கெய்தி நீயென்
றற்றமில் விதிகள் சால வடைவினாற் றெளிக்கப் புக்கான். 12

வைதிகஞ் சைவ மென்ன வகுத்தனை யிரண்டன் மாட்டு
மெய்திடுங் கிழமை யாளா ரின்றுயி ரென்ன வோம்பிச்
செய்திடத் தக்க வான திருவளர் கரும மீரெட்
டெய்திடத் தருளு மீச னுரைத்திடப் பட்டு நிற்கும். 13

பூணிருது சங்கமநங் கருப்பா தானம் புஞ்சவனஞ் சீமந்தஞ் சாத கன்மம்
பேணுமுத்தா பனநாம கரண மன்னப் பிராசநமே பிரவாசம் பிண்ட விர்த்தி
காண வுறஞ் சவுளமுப நயனங் காண்டோ பங்கிரம னங்காண்ட மோச நஞ்சேர்
மாறுசமா வர்த்தநமே விவாக மின்ன வகுத்தபதி னாறுமென மதிக்க மன்றே. 14

பின்னரிந் நால்பி ரேதசமீக் காரத் தோடு
பிறங்குசபிண் டீகரணம் பேச மிக்குச்
சொன்னவற்று ளுத்தாநஞ் சாத கன்மத்
துறையிதுஞ்சோ றூட்டுதலிற் பிண்ட விர்த்தி
தன்னையுங்ல் லுபநயநந் தனிற்காண் டோபக்
கிரமணந்தன் னையுமடக்கித் தகுதா லொன்று



நனைவிண்டு பலியகப்பத் திரண்டுங் கூட்டி
நவிலும்விண்டு பலிசேமந் தத்தி னென்னும். 15

மறையவர்முன் மூவர்க்குந் தீக்கை யுண்டேல்
வைதிகத்தாந் திரம்விரவி வகுத்த லாகு
மறைசருதாந் திரமொன்றாற் புரித லூறு
மவையுமருட் டீக்கையில தாயின் வேத
முறையுரிச்செய் திடன்முறையாம் பின்னோன் றீக்கை
முற்றினனே லாகமத்தான் முடித்த லேயா
நிறைதருதாந் திரத்தியற்று ராயிற் றீக்கை
நெடும்பயனின் றுந்திக்கை நிகழ்ந்தா ளார்க்கே. 16

தீக்கையிலாச் சூத்திரர்க்கு மனுக்க ளின்றிச்
செய்வதுதாந் திரவிதிமுன் செப்பு நால்வர்
நோக்கியடந் திறமுரைத்த நூறு நான்கா
நெறிபரித்தோர் மன்னவனே நுவலக் கேளா
யாக்கமுறும் பிரணவமுன் னமோந்தம் பார்ப்பா
னரசன்சுவா காந்தம்வழ டந்தஞ் செல்வந்
தேக்குவணி கன்வவுழ டந்தம் பின்னோன்
றேத்தனவாஞ் சிறந்தமனு வாறுண் மாதோ. 17

ஆங்கிரத் தந்தணு ரடியா ராக
வலகடற்பா யவிற்றுயின்று னடியா ராகத்
தாங்கமரு டீக்கையில ரேனை னோர்க்குத்
தாயபிர ணவமின்றி நமோந்த மாகத்
தங்கியிடுந் தேவதோத் திரத்தைச் செய்து
தருங்கிரியை யியற்றுவது தகுதி யாகுந்
தொங்குசுமழ்ந் தினவண்டின் குழலை யோம்புங்
குருமலர்த்தார் துயல்வருந்திண் குவவுத் தோளாய். 18

தாயவுப நயநமில்லா வொருமூ வர்க்குஞ்
சூத்திரர்க்கு மடவார்க்கு நமோந்த மாக
மேயபிர ணவமின்றி மனுக்க ளெல்லாம்
விளம்புதலாந் தத்தமக்கு விதித்த வாறே
யாபமனு வாற்கிரியை புரியா ராயி
னும்பயனு மில்லையவ ரங்கைப் பட்ட
பாயபுனல் சுராபானம் பொருள்க ளெல்லாம்
பசுவிறைச்சி தசர்ச்சியெனப் பகரல் வேந்தே. 19

புரையகற்றுந் தீக்கையுள்ளான் றீக்கை யில்லாப்
புலையையக்கைப் பிடிப்பினவன் போற்று மன்ற
லுரைகருப்பா தானமுதற் கிரியை யெல்லா
முயர்ந்தவா கமவிதியா லுஞற்றல் வேண்டும்
வரைநிகர்த்த தடந்தோளா யினைய மாதின்
மைந்தருக்கும் வழியதுவே யாகும் கண்டாய்
கரையனுலோ மாதியர்க்கு மநுக்க ளின்றிக்
கரிசறுக்குந் தந்திரமாந் திரமே யாகும்.

மறையவர்முன் மூவர்க்கு முரிய தாக
வருஞ்சவுச மாசமா மலிநீ ராடல்
கறையகலுஞ் சந்திருப் பணமே யோமங்
கலமறையோ துதல்சோம யாக மாதி
நிறைகருப்பா தானாதி தகர மாதி
சித்தியனை மித்திகமென் றினைய சொல்லா
மறையுமனு லோமருக்கு வேத மார்ந்த
தடாதனவா மழுதுயிர்க்கு மடல்வேன் மன்னா.

சாதகன்ம நாமமிட லன்ன மூட்டல்
சவுளமுப நயனமெனுஞ் சமக்கா ரங்கள்
மேதகவெய் திலராயி லுயர்மூ வர்க்கும்
வேதமோ துதலென்று மேலா திகக
ளோதுசமக் காரங்க ளற்று னேனு
முரைத்ததம தொழுக்கநிலை யொழிந்தா ராயி
னோதமறச் சுதந்திரமாய்க் கிரியை யொன்று
மியையாதா லவர்க்குலக மேந்து தோளாய்.

வருணநிலை யொழுக்கங்கள் வழீஇய வன்றே
மலர்தழீயச் சிவானந்த வாரி மூழ்குந்
திருவினரை யடுத்தொழுகிச் சுத்த ராயிற்
றிகழ்கருமஞ் சுதந்திரமாய்ச் செய்தன் மேவுங்
கரிசில்சமக் காரமைந்து மெய்தா ராயிற்
கனைந்தவவாந் தரசைவன் றனக்குங் கன்மத்
துரிமையிலை யாதலினாற் கிரியை யெல்லா
மொழியானை யவனுக்கு முஞற்றல் வேண்டும்.

தலைக்கமுறுந் தீக்கைதனக் குரிய ராவார்
தொகுத்தமறை யோராதி மூவர் தாமுன்



கலக்கமில்சற் சூத்திரரு முரிய ராகக்
கரைந்தவனு லோமருமென் றிவரே நூல்கள்
விலக்குமசற் சூத்திரர்க்கும் வனர்நீ சர்க்கும்
வெய்யகா ருகர்க்குஞ்சாங் கரர்க்கு மேனை
யலக்கணுறு மிழிகுலத்து ளமர்ந்து ளார்க்கு
மருட்டீக்கை யொருநாளு மடாது வேந்தே. 24

தள்ளுமசற் சூத்திரனை முதலா னோருந்
தக்கசிவ பத்திமிகுந் துயர்ந்தோர் தம்மை
நள்ளியவர் பணிபலவு நயந்து பாத
நறும்புனன்மிச் சிலுநுகரு நன்மை யெய்தி
னெள்ளுவர்கண் மலமைந்துங் குலத்தி னன்மை
யெய்திமது னுதரா தரத்திற் சிந்தை
விள்ளிலசேல் விளங்குசற்சூத் திரனு மன்ற
வேந்தர்குலத் தோரொடொப்பன் வேந்தர் வேந்தே. 25

எத்தலமுந் தீக்கையுள்ளா ரெவரே யாக
வியம்புவரு ணாச்சிரம வொழுக்கந் தன்னை
நீத்தனரேற் றீக்கையிலா தவரோ டொப்பர்
நீத்தவொழுக் கத்தொருநால் வருமந் நன்மை
பாத்தியமா தருமலியுஞ் செவிடும் பித்தும்
பயில்குருடு மையுந்தீக்கைக் குரிய வாகா
சூத்திரனு மொழுக்கமுறின் மறையோ னொப்பான்
சூத்திரனொப் பான்மறையோ னொழுக்கம் விட்டால். 26

தூங்குஞ்சேர் தீக்கையொழுக் கத்தி னுன்ற
சூத்திரன்சற் சூத்திரனு மவற்றிற் சாலப்
பங்குஞ்சார் தவனசற்சூத் திரனுஞ் சாதிப்
பகுப்புவே றிலையிருவர் தமக்கு மூவர்ச்
செங்கெங்கே யாகமத்தின் விதிக்கப் பட்ட
தியாதனுமற் றங்கங்கே யெழுசேர் தீக்கை
தங்குசூத் திரர்க்குரித்தா மயில்வே லோச்சித்
தரியலரைப் புறங்காணுந் தறுகட் கோவே. 27

மூவருக்கும் வேதமந் திரமெங் கெங்கே
மொழிந்திடப்பட் டனவவற்றிற் கெல்லா மாங்காங்
கோவிலருள் வளர்நய மநுவைப் பின்னோ
ருணரக்கமனு லோத்திலையு முரைக்க வந்து

மேவுபா வனைத்தினையுங் கொடுக்க வல்ல
விழுத்தகுமத் திரமதாகா தலின்மேவன் மன்று.
நாவின்மறை யவர்தமக்கே யாகி வந்த
சாற்றுமுறை யேபுரிக நருதி யாகும்.

அரசர்முதன் மூவர்க்கு மாகி யாக
மத்துறைபா வனையா மாகவேதன்னாதிர்
பரசறுகு ருடன்முத லியவாப் பாகப்
பண்ணுவது பார்த்தயனே பத்தோ டாறு
கிரியைகளுக் குரியரிய வெனவு மந்தக்
கிரியைபுரி தான்முறையுங் கொக்க மிட்டாற்
கிரியைகளுக் கின்றியமை யாத காப்புங்
கொருமக்கு ஏற்பனைமுங் கொட்பா முன்னா.

இட்ட காமிய மியாலயமுஞ் சித்திக்கும் பொருட்டுக்
கட்டு வார்கரஞ் சுக்கிலக் காலத்த கிரியை
தொட்ட நான்முத றுளிர மேதொடக் கியமா
வொட்டு காலையே வினைசெயு முன்னிவற தெருஞ்சும்.

பொருந்து புண்ணியா வாசக முந்துறப் புரிந்து
திருந்து தண்டில செவ்விறுற் செப்பிடைக் காவல்
வளாந்து வெண்பொரி இலக்குளை மலர்க்கனமேற் பரப்பி
விரிந்த வட்டத்துப் படலிகை மிசிகை யிருத்தி.

பொழிந்து தண்டிலக் தாமையின் புதாக்கனி புடை
இழிந்த வாடின வில்லிய கொர்ந்து வளாந்து
வொழிந்த செல்விலைப் பாகுவைத் தொளிர்பொன்ரு வியன்ற
செழுந்தண் பாசவெண் சந்தனத் திமிர்த்துடன் வைத்து.

புரிந்த புண்ணியா வாசகப் பூம்புனல் புரோக்கித்
திருந்த தண்டிலத் தினைக்கடா தாரத் தினையுந்
தெரிந்த வட்டத்தின் காவின்முத் தத்துவத் திலையும்
பரந்த வான்பிர திருவினைப் படலிகை யிடத்தும்.

எழு கோடிமா மறுவையு மிலகிரி சிவிறும்
தாழை வான்கனித் தந்திமா முகனையு மதியையுந்
தெழில் பாகடை யிறுக்கின மிதருங் காவிலை
வாழி தீர்த்தமும் வார்ந்தருக் கியத்தனந் தினையும்.

பூசை செய்துவி டைப்புரோக் கணைஞ்சப் புரிந்து
தேசி கன்றிக முதாமினை மங்குட்டஞ் செறியப்



பாச நன்கெடுத் தாடவர் பயில்வலக் கரத்தும்
பேசு மங்கைய ரிடக்காத் திறும்பெறத் தரித்தல். 35

ஒள்ளி தாகிய கனகசூத் திரமுத லாமேல்
வெள்ளி தாகிய பட்டுநூற் பாசமு மேவு
நள்ளு றுவெளி லதுவுநற் பருத்திநூற் கயிறுங்
கொள்ள லாகுமாற் குருமதிக் கவிகைமன் னவனே. 36

கவச மந்திரத் திணக்கிய கயிற்றது முடியி
னவிர்வெண் பூதிமூ லத்திரு லணிவது முறையாம்
புவிபு ரப்பவ புண்ணியா வாசகங் காப்பெண்
திவைசெ யாதுசெய் கருமங்க ளொங்கறு மில்லையே. 37

அங்கு ரம்புரி வினைகளுக் கதுபுரி யாமேன்
மங்க லம்பய னுருவிலக் கியவரு வினைக்குத்
தங்க லங்குரம் புரிதரிற் சகலமுஞ் சேடா
மிங்க ணிவ்விரு திறத்தையு மியம்புது மன்று. 38

தகும்பரெண் கிரியையுளும் புஞ்சவனஞ் சீமந்தஞ் சாத கன்மம்
வருநாம கரணஞ்சோ றூட்ட லுப நிட்கிரா மணமுமீக்கி
மிகுமேனைக் கிரியையினும் பவுட்டிகத்தும் வேறுமங்க லத்தின் மாட்டுந்
திகழ்தேவ தாபநத்து மேனையதா பநத்தினுஞ்சீர் விழாவின் மாட்டும். 39

சம்புரோக் கணநயனஞ் சிவதீக்கை தருதீக்கை யபிடே கங்கள்
வம்புதா மனைபுகுதல் புதுநகரம் புகுதல்வளர் விமான பாச்சல்
வெம்பவார் செவிதுளைத்தல் வேழவிழா வேழத்தின் மருப்பை யரிதல்
பம்புவான் படையெடுத்தல் பால்குடித்தல் பட்டாபி டேகம் பண்ணல். 40

வேள்விபவுத் திரமினைய கிரியையினு முளைவித்தல் விதிய தாகுந்
தாழ்வுபெறு சிராத்தமுத லசுபத்துஞ் சாந்தியினு மவிசா ரத்தும்
வாழ்வுபெறு தேவயாத் திரைமாட்டுஞ் சூத்திரகன் மங்கண் மாட்டும்
பாழ்வினையா மெப்பொருளும் பகர்ந்தலங்கு ரார்ப்பணத்தைப் பண்ணின் மன்று. 41

இங்கன்பயிர் வளர்த்தலினு லதற்குரிய விரவத்தாச் செய்த னன்றுந்
தங்குமிர வொழிந்தசிறு காலையுமாஞ் சவுளமுப நயநம் வாத்துக்
கன்மமிவை பகலன்றிக் கைக்கொளார் தேவருக்குங் கங்கு லன்றி
யங்குரம்வித் திதல்புரியா ரருமறையா கமவிதியை யறிந்து ளோரே. 42

நித்தியமா மித்திகமே பிரதிட்டை விழாவிடுநீள் சங்கி ராந்தி
சத்துருசங் காரங்கிர கணங்கருப்பா தாநாதி நசுக மாதி
மெத்துகழு வாய்பவித்தி ரந்தீக்கை மிகுசாந்தி சம்பத் தோமங்
கொத்துமற் றினைத்திறுஞ்செந் தீவளர்த்தன் முறையாகுங் கொற்ற வேந்தே. 43

இருது சங்கம மின்றெனிற் கருப்பமின் றதனு
லிருது சங்கத் தியல்பு மியம்புவன் கேளாய்
பொருவில் மன்னவ பூத்தவன் மூன்றிர வொழிய
மருவு தண்புனல் விதியுளி யாடுதல் வழக்காம். 44

மஞ்சுலவு சலதயி னன்றி யாலைய மதனிற் பூப்பிற்
புல்லுமத் தினமுன் னுக மூன்றுநாட் புறத்தே வைகிப்
பல்கிய நான்கிற் றூநீர் படிந்துகொண் கணையுள் ளொண்ணிப்
பில்லொளிப் பரிதி நோக்கிப் பின்மனை சேறல் வேண்டும். 45

பிரவிலசண் டாளி யென்று பிரமகா தகியே யென்று
விரசகி யென்று மூன்று மியம்பிய முறையே பூப்பு
விரவிய முதனு ளாதி மேவிய மூன்றா னாறு
கரிசறப் பூத்துள் ளார்க்குங் கட்டுரைத் திடவ தாகும். 46

ஒளிதரு மறுக்கோ நின்ற வொருபொழு தன்றி யுண்டல்
வளமனை காத்த லைகல் வளர்பக லுறங்கல் பேச
லளவளாய் வேறு பூத்த வணங்கினர் தம்மைத் தீண்டல்
வெளியுறு மாத ரார்க்கு வேயுறு வெற்றி வேந்தே. 47

அறம்படிக் கதத்தைச் சார்ந்தா னாலினைத் தருந்தி வைகி
மறுவலும் புனலிற் றோய்ந்து மனைவளர் பாத்தி யங்க
ணுறுமகா முறுமை யன்று முழுவது முறைக்கைத் தாகா
ணறுவிரைப் புனலிற் றோய்ந்து கற்பணிக் குரிய ளாவாள். 48

முந்திய பூப்பே யாயின் முற்றிய நான்கா நாளிற்
பிந்திய நறுநீர்த் தோய்ந்த பேதையை யலங்க ரித்துச்
சந்தமென் புனலிற் றோய்ந்து காத்தலுக் காய்த்து ளுகி
வெந்தழ லருத்தி யாக்கம் விழுமிய வணியுந் தாங்கி. 49

புண்ணிய வாச கத்தைப் பூம்புனல் விதத்தி யாகத்
திண்ணிய மனுவா லாசான் றெளித்திடப் பட்ட பாய
மண்டுறு மாதை வைத்து நவின்றுசங் கிறையைக் கும்பத்
தண்ணலைப் பூசை யாற்றி யழலிடை யோமஞ் செய்து. 50

ஆயிரத் தெட்டே யாக வன்றியு மற்றெட்டே யாக
மாயிரும் பிரம மைந்தின் வயங்குவா குதிசெய் தாவின்
பேயமென் முகுபு மூக்கை விலாத்தபால் சொரிந்த நெக்கிப்
பாயவத் திறத்தி லிட்டுப் பாயனைத் தியானம் பண்ணி. 51

அழுகையே யிரும மம்ம னாயித்தல் வெருளல் வாசச்
செழுமுடி தானக்க லின்றித் தெளிவைத் திருப்பச் செய்து



விழுமிய மைந்தன் வேண்டின் வியன்வளை நாசி யுள்ளே
யொழுகுறப் பிழிந்து வாயா லுண்ணுவித் திடுதல் வேண்டும். 52

மாசறு புண்ணி யாக வாசக மீட்டும் பண்ணித்
தேசவிர் குரவன் பூசை செய்தபின் னியர்முன் னோரைப்
போசனம் பண்ணு வித்துப் புசிப்பது விதியா மேனை
யேசறு கிரியை யீற்று மின்னணம் புரிக மன்னோ. 53

அற்றைநா ளிரவிற் பார்ப்போ ரயின்றிரு வோருந் தம்மை
முற்றுமாய் நிறைந்த வீசன் முயங்கருட் சத்தி யென்னப்
பற்றற நினைந்து மைந்தர்ப் பயத்தலே யேது வாகத்
தெற்றென மதித்து மாரன் றிகழ்கலை நடாத்தல் வேண்டும். 54

பூத்துநீ ராடியநாண் முதலாகப் பன்னிருநாள் பூவை மார்க்கு
வாய்த்தகரு வுறுங்கால மாதவிரு லந்நாளுண் மகமே மூலம்
பாத்தசீர் விரதினந் தனக்காகா நாள்பஞ்ச பருவ மெல்லா
நீத்துநூல் விதித்ததினம் புணராமேற் கருவொன்று நீக்கி னன்றாம். 55

இருதுவின்சங் கமம்புகன்று மினியெறழ்த்தோன் மன்னவனே
யியம்பக் கேளாய்
திருவளருஞ் சுபக்கிரியை யனைத்தினுக்கு நாந்திமுகஞ்
செய்தல் வேண்டும்
மருவுவது வையின்காறங் கிரியையெலாம் பிதாபுரிக்
மைந்த னப்பாற்
கிரியைபுரி வதுவழக்காங் கிளர்கருப்பா தானவிதி
கிளப்பா மன்றே. 56

கருப்பமியைந் தமைகுறிப்பா னறிந்துநா யகன்விதிசெய் கால மந்தத்
திருப்பொலியு மதிவாரந் திங்கள்புதன் குருவெள்ளி சிறந்த நாள்க
ளருத்திமிகும் புனர்பூசம் பூசமுரோ கிணிசதய மத்த மோணம்
வருத்தமிலுத் திரத்திரைய மான்றலைசித் திரையனுடம் வங்கஞ் சோதி. 57

ஈங்குரைத்த கிழமையொரு நாளேனைக் கிரியையெவற் றினுக்கு மாகு
மோங்கியபூ ரணைபதினென் கொருபஃதட் டமியாறைந் தொருநான் கின்ன
நீங்குதிதி களினெட்டா மிடஞ்சுத்தி யாங்கருப்ப நிலைசீ மந்தம்
வீங்குபுஞ்ச வகம்வதுவை வேள்விகுடிப் புகன்மனைக்கு மேவ நாள்பார். 58

இல்லவள்சூல் வயிற்றினளே லிருங்கணவன் முனமேற் றிடுதல் கோயி
லில்லமுத லியவிழைத்தல் விழவுமுதற் கிரியைசெய லீன்றோர்க் கன்றிப்
புல்லசுபக் கிரியைசெய றீர்த்தயாத் திரைபிறர்பாற் புசித்தல் சார்ந்த
நல்லகட லாட்டலை மழுக்கலிவை செய்யற்க நாம வேலோய். 59

கரிசொழிய முசற்கருப்பம் வயிற்றிழ மாதருக்கே கருப்பா நாசக்
கிரியையொடு புஞ்சவனஞ் சீமந்த மிவைபுரியக் கிளத்தர் நல்லர்
வரிசையுறப் பின்னவர்தம் வயிற்றிழ வுவினுக்கு மருத்த முன்னர்ப்
புரியவுறுங் கிரியாவே பயன்கொடுக்கும் வெவ்வேறு புரிதல் வேண்டா. 60

சத்தியோ சாதத்தி னிருநான்கு தலைப்பெய்த சதவோ மஞ்செய்
தொத்தபா ரயிர்மறுசெய் பவையுழுக்கும் விரைவிக்குந் தோம மாற்றி
[illegible]
[illegible] வாய். 61

[illegible]
[illegible]
[illegible]
[illegible] காகும். 62

[illegible]
[illegible]
[illegible]
[illegible] கோரப். 63

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 64

[illegible]
[illegible]
[illegible]
[illegible] வேண்டும். 65

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 66

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 67

[illegible]
[illegible]
[illegible]



பரிவின் மெழுகிக் கடுகெள்ளுப் பம்பப் புகைத்து நன்முகூர்த்தத்
தரிய மகனி ரொடுமெங்கட் கருப்ப வதியை யுறுத்துகவே. 68

சருமன் வருமன் றனன்ருசன் சார்த்தி வழங்கு மியற்பெயர்கள்
பிரமன் முதனுல் வருணத்துப் பிறந்தோர்க் கெல்லா மிடப்படுமா
லிரவி னகத்து மகவுயிர்ப்பி னின்றோ னிமவென் றிரானுடனே
பரவு புனலிற் றுடுமெனப்போய்ப் பாய்ந்து முழுகி வினைபுரிக. 69

மக்கட் பவத்தி னெக்கியத்தின் மாதம் பிறக்கு மமையத்திற்
றொக்குச் சுடரை மணியரவந் தொடருங் காலத் திரவிடைதீர்ப்
புக்குப் படிய வளர்மிருதி சாரம் புகலப் பட்டதுகாண்
மிக்குப் பகையின் வலிமுருக்கி விரிநீ ருலகம் புரக்கின்றோய். 70

பிறந்த வுடனன் றெனின்முலைப்பால் பேணிக் கொடுக்கு முன்கொப்பூழ்
விறந்த நாளம் வீட்டிடுமுன் வெந்நீ ராட்டி யுறப்பனைத்து
நிறைந்த குழவி முகந்தாதை நிகரி லிதயத் தாற்கண்டு
சிறந்த மகனை யிரணியமாச் சிந்திக் திரும்பொன் வழங்குகவே. 71

சதமா குதியத் திரத்தியற்றித் தழைந்த வாம மந்திரத்தி
னிதமார் காவற் பொருட்டிளவன் முகத்தை மீட்டு மெதிர்நோக்கிப்
பதமார் பஞ்சப் பிரமங்கள் பகர்ந்துச் சியைமோந் தெழிற்புருட
மதமார் மனுவை வலக்காதின் மடுக்க விஃது சாதகன்மம். 72

வெல்ல நறுநெய் தேன்மூன்றும் வி:விக் குழந்தை வாய்ப்பெய்து
மல்லன் முலைகள் கழீஇவலப்பால் வயங்கு முலைப்பால் பிராசாசஞ்
சொல்லி யருத்தி யத்திரத்தாற் றொடர்ந்த வுந்தி நாளத்தை
மெல்ல வரிந்து புறத்தொழிக்க வில்விட் டிவரு மணிப்பூணோய். 73

அருமை மகவின் சிரப்புறத்தி லகோராத் திரத்தான் மணிக்கும்ப
மிருவி யீரைந் தினமுமிரு போதும் பூசை யினிதியற்றிப்
பொருவி லாபச் சத்தமனுப் புகன்று பட்சா குதிபுரிந்து
மருவு மரியா நந்தத்தா னெய்யா குதியு மலிவித்து. 74

புருட மனுவா னூற்றெட்டா குதியும் புரிந்திட் டாசிலையோ
டொசெய் புருடத் தாற்பலியிட் டெவந்து வெள்ளைக் கடுகொறுக்
கரிசு தபவோ மம்புரிக காமர் குழவிக் கிதுகாப்பாம்
பரவை யுலகந் தடந்தோளிற் பரித்தோ யுத்தா பகங்கேளாய். 75

மூன்று தினத்து மைந்தினத்து மொழிந்த வேழா நாளிடத்து
மான்ற குழவிப் படுக்கையினை யாற்ற வுதறிப் போட்டிடுக
வேன்ற வொருப தெனுந்தினத்தி லிருநீ ராட்டிக் குழந்தைதனைச்
சான்ற வேறு மனையகத்துச் சார்வித் திடுக தாயோரால். 76

சாம்பல் புசிசெய் செருப்பிவர்ஞற் றருப்பெனச் சுவையா றிகள்புனித
மோம்பி யறவனுவ யோகமி பொலிந்துத் தரக்கொண் டிமையினைத்
தேம்ப மயமன் னுறன்மொழிந் தேகப் புலைத்து மட்சமைப்பா
யாம்பல் பொருளும் புறத்தாக்கி யரவிலங் குருதி யிருமோரும். 77

பொருந்த வபாகம் போற்றியற லாடிப் புன்மலி யாகத்துப்
பரந்த புனலாற் புரோக்கப் பட்ட புனலு மானைக்குஞ்
சொரிந்து மடக்கிற் குசைமிட்டுக் கலைக்குஞ் சிவமாப் பாவித்துப்
பரிந்து தூகர்க பன்னிரண்டா சாளி ஞமம் பசுவைசால். 78

திகழ்தரு தசமி முதலிய மூன்று திதியினிற் புண்ணிய இதில்
வகமற வாற்றெட் டாகுதி மூலைத் தாக்கிப் சுதந்திரத் திட்டுப்
பகர்தரு வெல்ல மாதிமுன் போலப் பருகுவித் தமயக விருநக்குப்
புகழ்சிவ வத்தம் வைத்தபின் ஞமம் புதறுக புகல்வகை கேளாய். 79

வயங்குமா தேவன் மயேச்சரன் நிருத்த வாசனற் பார்ப்பதிப் பிரியன்
றயங்குசீ கண்டன் றேவதே வேசன் சங்கர னுருத்திர னீச
னயங்கொளு மிடபத் துவசனே காம கரசனன் சிவனென நாமத்
தியங்கிய சனனை நான்மறைக் கேற்ப விகைத முறைமையன் னவனே. 80

அம்பிகை பவானி சுராற்சிதை சாட்சா யணியரப் பிரியைபார்ப் பதியே
வம்புறு கிரிசை சிவங்கரி யுமை யதியுமை யகன்மகா தேவி
நம்புறு கௌரி யெனும்பெயர் பெண்ணி னுட்டிய நாலருளி னீன்றோர்
பம்பிய குடியி னுள்ளவர் பெயரும் பன்னலாம் வேறுபன் னலுமாம். 81

ஆண்மக விறுக்குப் புறியமா மங்க லமைத்திடி லிரட்டைபார் காத்து
மேண்மலி பெண்ணுக் கொற்றைபக் கரத்து மியப்புக வெவ்வகைப் பெயர்க்கும்
பூண்மலி சிவாந்த மாக்குக செத்த புத்திரற் கப்பொழு தேதப்போ
ஞுண்மலி சாத கன்மமா திகன்முதன் னடாய்ப்பெய ரிடுசன் முறையால். 82

பெயருறத் திமயி னிருகரத் தாதும் பேணிமென் னரிசிபா சதனை
யியல்புத முழக்கான் புயத்திரு திகை விகளியொரு பஃதொறுத் தினத்திற்
பயிலுமுன் நான்கிற் பத்திறே டாதிற் பல்குறு மங்கலப் பெருட்டு
மயர்வறு வணப்பின் பொருட்டும்மார் செவிக ளையறுத் தனித்திடல் விதியாம்.

மும்மதி வளைப்பிற் பரிதிகாட் டுதலு முற்றிய நான்மதி வளைப்பின்
விம்மிய செருத்தற் பசுவொரு திணை வெண்மதி காட்டலும் பொருக்குஞ்
செம்மையி னுன்கு மதியிலட்டத் செல்வற் றிகழ்தரு மாயுளும் வளர
வம்மழ விறுக்கு மிட்டிரு மணத்தா னுற்றுதல் வேண்டுமென் னவனே. 84

பத்தா மிடஞ்சுத் தியதாகப் பார்த்தல் சக்தி யோசாதத்
தொத்தா குதிதூற் றெட்டியற்றி யறுதன் மகவை யலங்கரித்துப்



பெற்றான் சிவவென் றூர்த்துச்சி மிழைதீர் புருடத் தான்மோந்து
மற்றோர் நால்வ ராலாசீர் வாத முரபிற் புரிவிக்க. 85

தொடர்சீர் மாமன் மகவேடுப்பச் சுவத்தி முழக்கி யெறும்வெளிப்பட்
டிடர்தீர் கோயிற் புகுந்துவிடை யேற்றை விடகா யினிமனுவா
லுடனே தெரிசிப் பித்துவிதி யுளியே சிவனை முருகனையும்
விடியா வன்பிற் பணிவித்து மீண்டு மீனையி னேகிடுக. 86

வகுத்தாம் பிரவா சக்கிரிகைய மன்று வன்னைப் பிராசநங்கேள்
முகுர்த்த நாட்கு முதலுமே முனிவின் மறையோர்க் கினிதூட்டி
மிகுத்த பத்தா மிடஞ்சுத்தி மேவ மகவை யலங்கரித்துப்
பகுத்துப் பிரமாங் சம்பதிற்றுப் பத்தா குதிவெவ் வேறியற்றி. 87

நீம்பா னிகத்தி னைதியுஞ் செய்தெஞ் சியபா யசமெச்சி
லோம்பா தொழித்த விளங்குழவிக் கூட்டன் மூலறயா ருந்திகச
னாம்பார்த் திடனே யெண்மதியி னைந்தா மதியன் னிருமதியு
மேம்பா டாக வுறுவேனும் விதியாம் பிண்ட வர்த்தநங்கேள். 88

பிரம சிரமந் திரத்கோமம் பேணி நூற்றெட் டிளமகற்கு
விரவு சகளீ கரணத்தை மேவப் புரிந்திட் டர்தியந்தம்
பரவு னுறுநற் பிராணவங்கள் பயின்ற வியோம வியாபியினை
யுரமிக் குறவக் குழந்தைவலந் காதி னுபதே சித்திடுக. 89

மதுநெய் நறும்பால் விராயமதுப் பருக்க மதுவென் மந்திரத்தால்
விதுவின் வளருங் குழந்தைதனை மிசைவித் துரிய ஞானியரோ
டெதிரில் சுவையி னுணவார்க விண்டு மாயு ளுடற்கினிமை
முதிர வளரு முத்தரா யணத்திற் சவுள முறைபுரிக. 90

கருவிற் கொருமூன் றுண்டினுமண் கதுவும் பிறவிக் கொருமூன்றும்
வருட மிகவுத் தமமஞ்சாம் வருட மேழாம் வருடமுமாம்
பொருவில் சவுள மிலையாயிற் புரியுங் கிரியைக் குரிமையிலை
யுருவில் கிரியைக் குரிமைசெயி னோராண் டினுள்வேண் டியபொழுதாம். 91

மாதா வயிற்றிற் சூலேர்ந்து மதியின் மேற்பட் டிருந்தாலு
மாதா பிதாவென் றிவருயிரை மறலி கவர்ந்தா ருயிடினுந்
தீதாஞ் சவுளம் புரிவிற்பிற் செறிகு லுயிர்த்த பின்றுனு
மேதா மெனச்செப் பியவாண்டொன் றிறந்த பின்னு மியற்றுகவே. 92

உருத்திரமந் திரத்தி னொலொருநூற் றெட் டாகுதிநன் குளற்றித் தீமுன்
னிருத்தியமைந் தலையணியி னினிதணிந்திட் டாகமென் றீண்ட வர்த்து
வருத்தமிரி தருஞ்சுவத்தி மங்கலவா சகத்தாலம் மைந்தன் சென்னி
திருத்தமுறு மழுகரிசி யிட்டதற்பி [illegible] ப்பாலிற் சிறுவ னர்ருய். 93

அச்சுதத்தோ டாண்மைத்திண் பிண்டமோ ரகலிடைமைத் தன்னை யேய்த
வெச்செறுகீர் தண்ணொளுகீர் விரவியன்னத் தொங்குதமுத விளக்கு மைத்த
ஐச்சிதெளித் தத்திரத்தா ளுவிதன்மான் வாமமோமாளிர் தருப்பை வைத்து
மைச்சமயி ரொடுகீரா ளுமிழ்வை காலேந்து நீல்லின மாட்டும். 94

விளைபுரிந்து குறைபட்ட மயிர்தனுப்பை வியனகம் சேர்த்து மாப்பி
தனிவிருத்தி மையமைத்து பங்கொரு பங்கிலமைர் தலைமிற் சேகர்
வினைகுகியி யொளவித்து மற்றிடமே வாமவாகம் சயங்கர் செய்வித்
தினிமபுனை மட்டியலங் கரித்தமைத்த நிலைபதமே விரத்தப் பின்னை. 95

ஆயிரத்தெட் டொருநூற்றெட் டாகவே மந்திரத்தா குறிகள் மேவ
மேயவுருத் திரமனுவாற் பூசனை குதிசெய்து விளைப்புந் சத்தி
பாயமறை யொழிந்ததைக ளாசிரியன் றனக்குதவி யகலி ஞெப்பி
யாயதருப் பையிற்பயிற்ற பகவைக் மிகத் திமின்முலத் தொன்றிற் பற்றல். 96

மரபுளிச் சவுளஞ் செய்து மேனுபெ நயகம் சேனர்ப்
சருகிலைக் காது மேவும் காக்கவென் றைவீர முன்னோர்க்
குரியன வைத்தி னோரே போக்கிய பிரமதேச
விதிதரு மாமுன் செல்வம் வேட்டவர் புரிசமன் பீசு. 97

உருபனவத் திறுக்கென் றுணர்க மொன்பதும் பத்து மாரு
மிருவிய வருடன் தாமும் கீழ்மினே மெட்டின் காறு
முறைமையா மனுவுக் கப்பின் முடித்திடப் படாதம் வைத்தே
மறுவுறு மடியா வீன்ற மைந்தரு மொருவ ராவர். 98

மன்னவிடை வருதற் கீழை வழுமுதம் பத்தோ டொன்றும்
இன்னனிய மைசர் ஈர்வர் செலைக்கா வமைதரக் தப்பி
லண்ணறா வேதமின் காது கவின்றவை யைர்நின் காறு
பண்ணலா மமையுத் தப்பிற் பகர்ந்தமுன் வைவோ ராவர். 99

உத்தம நயன முன்னை யியம்பிய சவுளஞ் செய்தல்
ருத்திரன் றனைத்ருத் தீக்கை குழந்தையாய் காலத் தென்று
மாத்தருமால் பணத்தி மார்க்கு மறைத்தன வீசைமு மன்றம்
காத்திரமே காலத் தென்று பிறகுக் கமைந்த வாற்றல். 100

அந்தணர் தமக்கு வெள்ளி யரசர்க்கு வியாழப் புத்தேள்
புந்தியம் கடவு ளேற்கத் தகத்தோனே புணர்பின் வேற்குச்
சந்திரன் குரவ ராவர் தருந்தேவ் தாவிசன் மைந்தர்க்
குத்தம நயன மான வுடன்சிவ தீக்கை செய்தல். 101

செய்தருள் வழங்குந் தீக்கை விரவுறு வாருக்கு முன்னர்
வைதிக சத்தி செய்தே வயக்குறு சைவ சத்தி



செய்திடன் முறையாஞ் சிர்த்த கயிட்டிகன் விரதி யென்போர்க்
குய்திசெய் சைவ சுந்தி யொன்றுசெய் திடலு மாகும். 102

அத்திர சந்தி தீக்கை யாளர்கள் புரியா ராயி
னத்திரஞ் சுமந்த திண்டோ ளரசனே பதித ராவ
ரத்திர சந்தி தீக்கை யாளராற் றதலே வேண்டு
மத்திர சந்தி செய்யு மடைவுமிங் கறையக் கேளாய். 103

அத்திர மனுவை யுன்னி யலையெறி புனலி லாடி
மெத்திய பிராண யாமம் விதியுளி யியற்றி நூற்றெட்
டுத்தம சிவாத்தி ரத்தை யுறக்கணித் திரத யத்தைப்
பத்தியி னுரைத்துக் கொண்டு பாணியஞ் சலிய ராகி. 104

நின்றுழி நின்றே தன்னு ளின்றதின் மலனை முக்கா
லொன்றுற வமைா வந்திட் டெத்தாந மினிது செய்த
லன்றிய வினைகால் சீக்கு மத்திர சந்தி யாகும்
வென்றியிற் கிளருந் திண்டோள் விறலுடை வேந்தர் வேந்தே. 105

மொழிதரு மறையோ ராதி மூவர்க்கு முறையே தேசு
பொழியிள வேனில் வெப்புப் புனன்முதிர் வேனில் கூதிர்
பழியறு கால மாகும் பகர்ந்தமுன் னுளே நாண்மார்
கழிசிவத் துவிசன் மைந்தர்க் காதிரை யுத்த மந்தான். 106

மறுவறு திருவோ ணந்தான் வைசாந் சனுக்கு நன்று
மறையுமிக் கிரகாண் மன்ற வாஞ்சயு மணச னுக்குக்
குறைவில்வா ருணநா ளாகுங் குண்டகர் கோள கர்க்கு
நிறைதரு சனன நாளு நிகழ்சில வினைக்குக் கூடும். 107

அன்னசெய் வினைகள் யாவை யென்றிடி னன்ன மூட்டன்
மன்னிய சவுள மீங்கு வருமுப நயநம் வேறே
பன்னிடப் பட்ட பட்ட பந்தன நான்கு மாகு
முன்னுறு பக்க நன்றும் பின்னது முனியார் நல்லோர். 108

உத்தமஞ்சத் தமிதிரையோ தசிதசமி சட்டி
யுறுதுதிகை திரிதிகைபஞ் சமியிவையோ ரேழு
மத்திமமே காதசிது வாதசியோ ரிரண்டும்
வளர்பக்கத் தாமதிதேய் பக்கத்துக் கிரணக்
கொத்துறுசத் திரபவறு யிருப்பின்முதற் றிதியுங்
கொண்டசதுர்த் தசியுமாங் கொழுந்திரையோ தசிமுன்
வைத்தநிதி யொருமூன்று மறவேனைத் திதியும்
வகுத்தனர்க ளொருசாரார் மதிக்குடைமன் னவனே. 109

விடையிதனை கன்னிகடை கக்தனுக டீனை
மேவுமக்கு ராற்பணைத்துக் கோமேயுா சாரு
மடைவுறலைத் தாகாரு மெனுமிகையு மாரு
மறையுமுப சயாதத்தோ ரைக்குறுப்புந் திறந்த
தொடருமுப வீதமுட்டி நீடமுத்த ரியஞ்
சூழுமே கலைசெண்ட் மிலையவகை ளாகும்
படர்சிவத்து விசறுங்கீ பகுமுட்டி நீடம்
பண்ணுமுத்த ரியமே கலையுப்பின்னேற்க் காகா. 110

அவற்றனுப வீதமுறை யாற்கொணர்பஞ் சினைத்தாற்
றக்குலதான் கிடைத்தொண்சாற் முருகற்றி யதனே
டிவற்றிழையே திரண்டிணைக்கிப் புசனிற்றிற் கருவி
யொழிற்சத்தி யோகசத் திடக்காக்கி புசக்
கவற்றுவினை நீரிழுக்க மேர்தருமா மாகக்
கலத்திருவர் திரித்துவலக் கரக்கீழா வதனைத்
தவற்றகன்றுப் புரியாக்கி யிலையாக்கைப் தருப்பை
தம்முளொன்றிற் றிழுக்கிரக்கோன் சார்த்துமுன்னர் வைக்க. 111

பிரணவஞ்செக் கனைமதியா தவன்வளியீய பிதிரர்
பிரமனரி யானிவரான் குதியொன்பான் காறும்
விரவுமிழை தமக்குரிய தேவராகு டிகடாம்
விளம்புமுறை யோவசிட்டர் காரதர்கா சிபரே
துரிசில்கவு சிகமுனியே யங்கிரயா ரத்து
வாசமுனி பிருகுமுனி யரியகத் தியர்கீர்
பரவுமிழை யினைத்தினுக்கும் பிரமசந் தாக
பார்த்திபனே யினிக்கயிற்றை வாமத்தாற் றெளித்து. 112

விலக்குறக்கை களிற்பிடித்துத் தற்சனியங் குட்டம்
விரவுமுடித் திரிக்காலே முன்றுசுற்றிட் டவற்று
ளிலங்குகலை மகன்சாவித் திரிவாயத் திரிவை
யிருத்தியகோ ரத்திரத்தி னிறக்கருப வீதம்
தலங்குபுரி மூன்றிடத்து மையனியு மாறுந்
தொக்கிருப்பர் பணவர்முத லுவ்வருக்கு மிடத்தோட்
பலக்கதுவ வணிமனுத்தாக் தற்புருட மகோரம்
பகர்வாம மாகுமிவை பார்த்திபன் னவனே. 113

சூத்திரர்க்குப் புரியொன்றே முப்புரியு மாகுந்
சொற்றிடுமு வருணத்தும் பிரமசரி முதலோர்க்



கொத்திடுமுப் புரிதாலொன் றிரண்டுமூன் றொருநான்
கெனவியம்புஞ் சுப்பிரபே தம்பிறநூல் வேறும்
பாத்துரைக்கு முபவீத மாகிடட வியர்க்குப்
பகராது பின்னேரு ணயிட்டிகனைக் கலையு
நீத்தலுறுந் திக்கையுளா னெக்காலு மணிவா
னிசழ்த்தருச்ச குதிகளின் மற்றையரு மணிவார். 114

விழாவகத்திற் றீயகத்திற் புரோக்கணத்திற் செபத்தின்
மேவுமுட்டி நீடமுழ மேழாகு மெட்டும்
வழாத்தனைக் கூற்றிலொன்றி லேழிலொன்றி னகல
மருவவிழை மெல்லியதாய் வாலியதா யிருப்பிற்
றழாலுருமற் றதனையிடச் செவியிலொரு தானே
சார்ந்துதொங்கச் சுற்றிவலச் செவியிலொரு தானே
நழாதசெருகு குதலுத்த ரியமுன்னூ லொப்ப
நல்லகலை யிருதானை நனுகும்வகை யணிதல். 115

முஞ்சியெனும் புன்மூன்று புரியினுறு கயிறு
மூரிநெடுஞ் சிலைநாணுஞ் சணைக்கயிறு மூவர்க்
கெஞ்சலுறு மேகலைமுச் சுற்றுமற் றிடைமே
லிணக்குவதா மான்றோலு மியல்பியல்பான் மரித்த
வஞ்சவியன் மயிருறதோ லக்குலமூன் றிரண்டொன்
றகலமுற விருதலையு முபவீதத் திணக்கி
விஞ்சலுறுஞ் சத்தியோ சாதமுறைத் தணிதல்
விதித்தமுஞ்சி கிடையாதேற் றருப்பையும்வே தியர்க்காம். 116

தண்டமொரு நால்வர்க்கும் பலாசகருங் காலி
தருமத்தி மூங்கிலிவை தாமுறையே நெற்றி
தண்டமெறழ்த் தோளுபி யளவுயர மாகுந்
தோலுரியா தழகினவாய்க் கோணமை வேண்டுங்
கொண்டவுப வீதமுத லானவெலா முறைத்தாங்
கொற்றவனே யினிச்சவுளம் போல்வபக முடித்து
மண்டறலிற் படிந்தசரு நுகர்ந்தசிற வனைத்தான்
வன்னியின்றென் புறத்துவட முகமாக விருத்தி. 117

அங்கியினுத் தாத்திலுப வீதமுத லிருத்தி
யான்றசுசி மந்திரத்தா லறலினாற் றெளித்துத்
தங்குசிற வனைப்பஞ்சப் பிரமத்தாற் றெளித்துத்
தயங்கரிசி யாதிகளா லருச்சித்து நீரா

பொங்கழலை வியாகிருதி மந்திரத்தால் வளர்த்துப்
புகரறுசக் கிதையின்வெவ்வே றைந்தோமம் புரிந்து
பங்கமற வுபவீத மாதிகளைச் சிறவன்
பகர்தருமந் திரங்களினாற் பரிக்கும்வகை புரிதல். 118

ஒக்கவுப மந்திரமந் திரமிரண்டுங் கலைக்கா
முறையைந்தி ருக்குமறு மேகலைக்குத் திரந்தான்
றக்கநெடுந் தண்டினுக்கு முப்புரிநூ றனுக்குச்
சாற்றுமது வேயுத்த ரீயத்துங் காகுந்
தொக்கவைத்து மணிந்தவன்பின் காமைம்பி முக்காற்
றேய்முழுந் தளவுதகர்ந் தங்கிவலஞ் செய்து
ரிக்குவளர் பிரமகூர்ச் சத்தின்முறை புரிந்த
விளக்கியவா னைக்தாகர்ந் தாசமநம் புரிக. 119

பிரமாங்க மந்திரத்தாற் சம்பாத வோமம்
பேணுகுரா வன்பிரம வுபதேசஞ் செய்து
புரைதீர மனுநூற்றெட் டெண்ணலெரி வலமாய்ப்
போந்திறைஞ்சல் செய்வித்துச் சிவாத்திரத்தா குதிநூ
றெருவாது புரிந்தீசா னாதியொன்பான் மனுவா
லொன்பதிற்றுச் சமிதையிரே மம்புரிவித் தறலா
லெரிகாயத் திரியின்வியா கிருதியின்வட் டிப்பித்
தேழோமந் தனித்தனிசெய் வித்தல்பிர மாங்கம். 120

தேவதே வனைவணங்கி யாசிரியன் பூசை
செய்தவர்க்குத் தனக்கியன்ற செழும்பொருள்க ளுறுத்தி
மேவுகாஞ் சனமாதி யாலியல்பாத் திரத்தை
வியன்புருட மந்திரத்தால் வாங்கிவலங் காத்திற்
பாவுநீ டண்டமிடக் கரத்தேந்தி யன்னை
பயந்தவளோ டென்பிறந்தா டன்றெடுடன் பிறந்த
பூவைமா ரிவருளொரு வரையடுத்துப் பிச்சை
புகரின்மொழி மொழிந்தேற்றன் றூவருக்கு முரித்தே. 121

பவதிமொழி முன்மொழிதல் பிராமணனுக் குரித்தாம்
பார்த்திபனுக் கிடைமொழிதல் வணிகனுக்குப் பின்னாந்
தவறறுமுத் தினமிவ்வா றிரந்திரண்டு போதுந்
தழலோம்பிச் சமிதையிறு நெய்யிலுமா குதிசெய்
தவமறநா லாநாளிற் பலாசவோ மஞ்செய்
தகற்றியுப வீதமுதல் வேறணிதன் முறையா



றிவறுசத்தி யோசாதத் தானூற்றெட் டோம
மியற்றிமொழி யாமைமுத லாம்விரத மொழிக்க. 122

விளங்கழலை முன்போலப் புனலினுல் வளர்த்து
வியோமவியா பியினூறுங் காண்டரிடி யோமங்
களங்கமற வொருநூறுங் காதலொடு புரிதல்
காண்டோபக் கிரமணந்தான் பிரமசரி யத்துள்
வளங்குலவு நயிட்டிகத்தை நிவட்டவன்றன் குருவை
வணங்கியிரந் ததுநிலைக்கச் சதவோமம் புரிந்திட்
டொளங்குளிரப் பூரணா குதியுமுறை யியற்றி
யொளியழனித் தனும்வளர்த்த லுரித்தவர்க்கு மன்றே. 123

மேதகு நயிட்டிக விரத மேற்குமுன்
னோதுப வீதமா திகளை யொண்ணதி
போதவிழ் தடாகமா திகளிற் போக்குபு
கோதற வேறவை யணிதல் கொள்கையே. 124

அருள்வளர் சிவனையு மங்கி தன்னையுங்
குருவையும் பூசைமுன் குறித்துச் செய்தலான்
மருவுமப் பூசனை மூன்றும் வைகலு
மொருவுவ திலையுப நயநத் தார்க்கெலாம். 125

பயிலுப நயநமுன் பண்ண வர்க்கிய
லியன்மனுத் தழலினை யிலங்கு வேலினாய்
மயரறுஞ் சயாதியோ மத்தை யாக்கியங்
கயர்வற வொடுக்குத லறம தாகுமே. 126

சத்தியோ சாத மிருக்குநல் வாமந் தயங்கிய வெசுர்மய மகோர
மெத்திய சாம மறைவியன் புருடம் விழுத்தகு மதர்வண மயமாஞ்
சுத்தவி சானஞ் சகலதே வர்களின் சொரூபமா மங்கமந் திரங்கள்
வைத்தவே தாங்க மாறுமாந் தெளிக மன்னவ வகுத்தவிம் மனுவை. 127

உரைத்தலே வேத முழுவது மோத லுரைப்பித்த லோதுவித் திடுதல்
புரைத்தபு சிவபூ சனைசெயல் வேட்டல் பூசைசெய் வித்தல்வேட் பித்த
னிரைத்ததன் பொருளைத் தக்கவர்க் களித்த னெறியுளி யீதலன் னவர்பாற்
றரைத்தலை வாங்க லேற்றலா மிவைதாந் தகுசிவத் துவிசன்பான் மிகவும். 128

மேதகு சிவத்து விசனிவை யுரைத்த விதிப்படி யன்றிவே ருக
வோதிய பனுவல் விதியுளிக் கிரியை யுளுற்றுறின் மறுவலுந் தீக்கை
யாதியிற் புனித னுவனுத் தமமா வறைதரு காலங்கள் கழியிற்
றீதற வுத்தா லகவிர தத்தைச் செய்துப நயநம்பின் புரிக. 129

உத்தரா யணத்திற் சித்திரை யொழிந்தன் குற்றமக மாறிய மதியின்
மெத்தமூ டத்தில் வெள்ளிபொன் னுருத வேலையி லுரைத்தகன் றுவரி
னத்தமா வாசை யிருத்தைநீர் திதியி னனுதமே மூாமிட மன்றச்
சுத்தியா யிருப்ப வதுவைசெய் வதன்முன் செருடங்குக சமாவருத் தகமே. 130

காப்பணிந் ததற்பின் கரைந்தகக் கிரிய விரதத்தைக் கரிசறத் தொடங்கி
வாய்ப்புறு மூலத் தாகுதி நூறு வயக்குபு முந்திய விரத
யாப்பினை யகற்றி யில்லினுச் சிரம யாப்பினை யுற்றுவார் சிகையும்
கூர்ப்பர மயிருந் தவிரவே வபாங் குயிற்றிடப் பட்டுநீ ராடல். 131

விஞ்சமீ சான மாதியி னூறு வியத்தகு மாகுதி புரிந்து
முஞ்சியா திகள்விட் டிரண்டுமுப் புரிநூன் மொய்ம்புற வுரீஇமதுப் பருக்கர்
தஞ்சமார் வாம மந்திரத் தருந்தித் தழல்வலஞ் செய்தெதிர் வணங்கிச்
செஞ்செவே நீண்ட தண்டமுங் குடையுர் திகழ்ந்தபுத் தகமுங்கை யேந்தி. 132

மொழிதரு முபாந பதத்தொடு வடக்கு முகமுறச் சென்றபெண் கொடுப்போன்
கழிமகிழ் வொடுதின் றினியன ளிப்பக் காமரில் லினையடுத் திருந்து
பழியறு மாசீர் வாதமுற் றியபின் பலரொடு முன்பது விதியா
மிழிவறு மிதனோ டரசருக் குரிய வியப்பும்வே றளதது கேளாய். 133

கவிக்கமோ ரிரண்டு தரிக்குமுன் னரசன் கதிருமிழ் படைகரந் தரித்துத்
தலங்குகு ரியனைத் துறவையை வணங்கல் சூத்திர னிருகலை யகற்றி
யிலங்குமூன் றணிந வியம்புமன் னவனே யியல்சமா வருத்தகத் தயில்கைத்
தலம்படு பொழுதின் மன்றலிற் றத்தர் தைவிக வந்தனை புரிக. 134

சாற்றுவந் தனைதான் கரும்புகிஞ் சுகம்பைந் தருப்பையென் றிவையொருன் றாக
வீற்றுற வொன்றே யாகமன் னவனே விழைவொடு கொண்டுபோய் வளங்க
ளோற்றிய தன்து ஈமனை யகத்தே யிருந்திற் பூசனை புரிதல்
கோற்முடி யவர்க்கு வதுவைமிச் சயமே கூறிய சமாவருத் தனமாம். 135

வரிந்தசா தகத்தான் மன்றலுக் குரிய மாதரா டவர்களா யுளினைத்
தெரிந்தபின் மடவா ரிடப்புறத் தியல்புஞ் செப்புமா டவர்வலப் புறத்தின்
விரிந்தகல் வியல்பு மிருக்குமா நோக்கி விரிச்சியுஞ் சகுநமும் பார்த்துப்
பொருந்தறின் வதுவை புரிவது வழக்காம் பொருந்துறு தெனில்வழக் கன்றாம். 136

ஒருவயிற் றுதித்தோ ரிருவருக் கிதமற் றுடங்குறப் புரிதலோ ராண்டின்
மருவுறப் புரிதல் வழக்கிலை சவுள மன்றுப நயாத் தி மதுவே
யொருகுல மொருகோத் திரமெனி லாகா தற்றதாய் தந்தையர் தமக்கு
வருமுறை யைந்தி னல்லது மன்றற் மற்றைய முறையினும் கூடா. 137

குலங்களோ ரிரண்டுந் தாயில் லனவாய்க் குறுமிய தலைமுறை யினைந்
தலங்கலில் லாத தூய்மைய வாயி னத்தகு குலத்திடைப் பிறந்த



கலங்கறி செறிக்கு மாதரான் மைந்தன் கதுவிய வாயுளிற் றுழ்ந்து
புலங்கொளும் பருவங் கிளந்தபே ரழகு புணர்ந்திடின் வரைவினுக் குரியள். 138

நாலிரு வயது நண்ணினள் கவுரி நவையறு மொன்பதாம் பிராய
மேலுற வுடையா ளுரோகிணி பத்தென் றியம்பிய வாயுளாள் கன்னி
மேலுறு மீரா றுண்டினை யுடையாள் விடலியென் றுரைத்திடப் படுவார்
மாலறு மிவருட் கவுரியைத் தானம் வழங்கினோன் சுவர்க்கம்வாழ்ந் திருப்பன். 139

உரோகிணி தானம் டண்ணினோன் றிருமா லுறைந்தவா ழுலகில்வாழ்ந் திருப்பன்
பராவுசுன் னிகையை வழங்கினோன் பிரமன் பதத்தில்வாழ்ந் திருப்பன்பன்னிரண்டு
பிராயமுற் றவளை வழங்கினோ னிரவு ரவமெனும் பெருநர் குழப்பன்
னிராறின்மேம் பட்ட மாதரைக் கொடுப்போற் கிதுபய னென்றியா னறியேன்.

பூத்தவள் வதுவை முற்றுறு திருப்பிற் பூப்பவுங் கொடாறுவைத் தவளைக்
காத்திருப் பவனீ ரியக்கமும் பிறிரர் கைக்கொண்டு நுகர்தலி னந்தோ
மூத்துறு குலமு மழியுமா தலினுன் மொய்த்தபூப் பினுக்குரித் தாக
யாத்தவா யுளின்மு னுயுளுங் கழியு மீட்டுவோர் மன்றல்செய் தளிக்க. 141

பொருள்விழைந் தணங்கைக் கொடுத்தவன் றனக்கும்
புகன்றமுற் குற்றமே யடுக்கும்
பொருள்விழைந் தளித்த பூவையுந் தூய்மை
புணர்கிலள் புழுக்கையே யொப்பா
டருமுறை யின்றி வலியினுற் கவர்ந்த
தையலுங் கருநிலை யாதி
கருமமில் லவளும் விதியுளி வதுவை
காணினு மத்தகை மையரே. 14

பிரமமே பிரசா பத்தியந் தெய்வம் பேணுமா ரிடம்வள ரசுரம்
பரவுகாந் தருவ மிராக்கதம் பசாச மெனப்பகர் மன்றலோ ரெட்டாங்
கரவுதீர் பிரம சரியநோற் றவர்க்குக் காமரு செல்வமிக் குடைய
வரவமே கலையை யங்கிமுன் றுன மாகநன் றளிப்பது பிரமம். 1

அரிவையைக் கோடற் குரியவன் கொடுத்த வாடகத் திரட்டியம் மகளைப்
பரிவொடு சார்த்திக் கொடுப்பது பிரசா பத்தியம் வேள்விசெய் சவர்க்காங்
குரிமையின் மகளைத் தக்கணை யாக வுதவுத றெய்வமீ ராவ
புரியிழை யணிந்து நிதீஇயிடை மகளைப் புரையிலார்க் களிட... ரிடமே. 144

மகட்பயந் தவனை யிரந்திரந் தீந்து வாங்கலு மொக்கலார்க் கிரும்பொன்
மிகக்கொடுத் தவாற் பயந்தவ னளிப்ப மேவலும் பிறவுமா மசுரந்
தகப்பெருங் காத லாலெதிர் நோக்கித் தங்களுட் கூடல்காந் தருவம்
பகப்பயர் தவனை யலைத்தணங் கலறப் பாழியிற் கொள ... கதமே. 145

களித்தவர் அயின்றோர் மூத்தவ ரிவரைக் காவிறைற் கவர்வது பசாசங்
தெளித்தன மன்ற லெட்டுமந் தணர்க்கே சிறந்தன மூந்திய நான்கு
மளித்தணங் கேற்கு மசுரநால் வருக்கு மாகுஞ்சுத் திரன்முத லோர்க்கு
வளைந்தகந் தருவ மிராக்கத முரிய மருவுறு தொருவர்க்கும் பசாசம். 146

இன்னவா றுரைக்குஞ் சுப்பிர பேத மியற்றிவேச் சிறிதவேற் றமைபாற்
சொன்னதால் வேறு முளதது நிற்க தொடங்கிய வதுவையே திகேப்
பன்றுதா மிருபத் தொருமுழ வேதி பணவருக் காசர்க்குப் பதினாந்
தின்னவில் வணிகர்க் கொன்பது பின்னோர்க் கெழுமுழந் திற்பருக் கைந்தாம். 147

மருவிய வந்த ணாளர்க்கு நான்கா மங்கல மனைத்துணைந் தனிக்கும்
பெருகிட மிலேயேற் பிராமணன் முதலா நால்வர்க்கும் பிறங்குவே திகைதாம்
வருமுழ மேழா றைந்துநான் காகு மற்றிவை தமக்குமே ரதே
விருமுழத் திட்டி வேதிகை யெல்லார் தமக்குமா மிகரபு வேந்தே. 148

மந்திர வாச மேழிரு முழமா மற்றதற் கெட்டியொன் றகலஞ்
சுந்தர வெண்பட் டிரித்திழை கருப்புக் தன்றுறைச் சித்திர படமுஞ்
செந்தாவர்ப் பருத்திக் கலிங்கமும் விலக்கார் திகழுமவ் விலியமாக் கிடும்பொன்
முந்திரு குஞ்ச முதற்பதி றெறு முடிவுமுப் பதுமுடி விற்றுமாம். 149

இலகொரு மருப்ப னெனமலர்க் கடல மெனவெழிற் சிவலிக்க மொளச்செய்
தலரொளி யரும்பைந் திலழுத்திறு தலைபா லக்கிமற் றதனிடை யிரண்டு
குலவிய கனகக் கயிறுகோத் ததுதரீன் கோதின்மங் கிலியமாங் கண்டாய்
மலர்தலே யுலகம் வியத்தரு மன்றல் வரயினைப் புகலுதுங் கேளாய். 150

குருமணிக் கலனு மாலையுந் துகிலுங் கொண்டெழில் கொளவலங் கரித்திட்
டிருவர்க ளுடைய கோத்திர நாம மியம்பிநீ ரோடுதன் மகளைப்
பெருவளம் பிறங்க வீன்றவ னளிக்க பெற்றவ னில்லையேன் மகளைத்
தருமவ னுடனே பிறந்தவன் முதலோர் தம்முளே யொருவனீந் திடுக. 151

அங்கிமேற் கிரைசி னுதன மியற்றி யாங்கொளிர் சிவாகம மறுவாற்
பாங்கெழிற் கலைமென் மலரிவை கொடுத்துப் பொற்புற விடப்புற மாகத்
தங்குவித் ததன்பி னபவிர தயத்தாற் றையலா ளிரதயந் தொட்டு
மங்கலத் திருநாண் மங்கல முழங்க மணமகன் மனைவிகளத் தணிக. 152

சத்தியுஞ் சிவமும் ... ளரிவைாந் தாசான் றகும்பிர ணவந்தொடர் மூலம்
பத்தறாம் பத்தா குதிபுரிந் தினிமை பயின்மதுப் பருக்கான் களித்துப்
பொத்திய மணித்திண் கலத்தறு மனமும் புதகா யத்திரி மறுவால்
வைத்தெதிர் காட்டி வயங்குமா சமகம் வாங்குவித் ததன்பின்று யகன்றன். 153

அறைவியா கிருதி மதுவளி றாற் றெட்டா குதிபுரிந் தங்கியிற் றென்பா
னிறைபிரா ணுதி யோ... நிகழ்த்தி நிகழ்கருந் தேனுமந் திரத்தாற்



கறையறு பசவுங் கன்றுநே ரடுப்பக் கண்டழ றனக்குமேன் முகத்தின்
மறையுளி யரனைப் பூசனை யியற்றி மாதுதன் வலப்பதம் பிடித்து. 154

எரியழல் வடபால் வாமதே வத்தி னேழடி யியக்கியம் மியின்மே
லுரைசிவ காயத் திரியினு லெடுத்திட் டொண்டொடி வலக்கரம் பற்றிப்
பொரியுமா மகேசத் தஞ்சலி யோமம் புரிதரச் செய்துவல் வினையை
வரைதரும் வியோம வியாபிமந் திரத்தான் மனையழ லாகுதி வளர்த்து. 155

மறுவறு மோமம் வியாகிரு தியினும் வயங்கிய நித்தியஞ் சிறப்பென்
றறைவன பிரமாங் கங்களி னுலு மாற்றியெவ் வங்கமந் திரத்துங்
குறைவற வோமங் குயின்றுமுன் போலக் கோற்றொடி காம்பிடித் தேகி
நிறைசுவைப் பாலிற் கால்கழீஇ யணிக ணிரப்பிய மனையகம் புகுந்து. 156

சத்தியோ சாதத் தான்மனை புனிதந் தழைதரச் செய்துமங் கிலிய
முத்தநேர் நகையார் நால்வர்க ளிட்ட வூரியம் பாயினை யிடையே
சத்தியே யாக நினைந்தொரு கல்லைத் தங்குவித் தொருவர்மே லொருவ
ரத்தயா டாம லுரையிறந் தலரி யம்புலி நினைந்துறங் குகவே. 157

வைகறை யெழுந்து நாட்கடன் முடித்து வைகலு மாரழ லோம்பிப்
பொய்கழி யோம நான்கெனுந் தினத்தும் புகல்பிர மாங்கமந் திரத்தாற்
செய்தருந் துதியைக் காட்டுபு சயாதி திகழ்வியா கிருதியா திகளின்
வெய்துற கழுவா யோமமு மியற்றி வியன்மனை முன்புபோற் புகுந்து. 158

இயம்பிய வாமத் திருதுசங் கமன மியற்றியைந் தினத்துற காலை
நயம்பட லபாந் நண்ணியூர்க் கிழக்கு நடந்துதம் பரமர நோக்கி
வயம்படு முழுங்கா லளவுநீ ரிறங்கி வத்திரத் தாற்கயல் பிடித்துப்
பயம்படு மத்தி மூலநற் பூசை பண்ணுக பார்த்திப ரேறே. 159

பத்தினில் விசுவ தேவரி தரய வெனுமனுப் பகர்ந்தொரு பதினாந்
தொத்தவா குதிசெய் தொளிர்மனை யகத்தே யுறுதச திக்கினும் பூசை
பத்தியிற் புரிந்திட் டெச்சமோ ரைந்தும் பயிற்றியிட் டப்பியா க்தரோ
டுத்தம வதிதி பூசையும் புரித லுறுமுறை யாகுமென் றுரைத்தான். 160

இன்னவா றிருங்கிரியை யீரெட்டு மினிதியம்பு
நன்னா ரியன்பாத நளினமலர் பணிந்தேத்தித்
துன்னிநீள் பொருள்பலவுந் தொகுத்தவனை யவனிருக்கை
மன்னிவாழ் தரவிடுத்து மனுநீதி வளர்சோழன். 161

மனைக்குரியாண் முகநோக்கி வயங்கியபூப் புறுநாளி
னினக்குரிய வொழுக்கமிவை நிகழ்த்துதிநீ யெனவியம்பி
யினிக்கவிதித் திடுநாளி லினைவிழைச்சாற் றலுமறுகி
லுனிக்கணுறு பனியேபோ லுண்கருவாய்த் ததுவயிற்றில். 162

கருவாய்ந்து வயிற்றகத்துக் கதித்துவளர் செயன்மனையா
ளுருவாய்ந்த குறிகளிரு றுணர்ந்துடனே காப்பமைந்து
பெருகார்வத் தொடுமங்கு ராற்பணமும் பெரிதாற்றித்
தருமாறு மிறைகருப்பா தானவினை தகச்செய்தான். 163

இருமதியிற் புஞ்சவன மியற்றியிரு மூன்றென்ன
வருமதியிற் சீமந்தம் வருத்திட்டான் மனுவேந்த
னொருமதித்தண் கலையென்ன வுறுகருப்பம் வளர்தோறுங்
குருமதியி னொளிர்முகத்துக் கோற்றொடிவே றுருவானாள். 164

சுவையாது நுகர்ந்திடினுந் தொகவேற்றிட் டுறுப்பனைத்து
மிவர்சாரம் புகுவிக்கு மெழில்வயிறு கருவேற்றுத்
தவநாளுந் தன்னுருவம் வேறாகித் தக்கவனை
யவநாளும் வேறாகி யலக்கும்வகை புரிந்ததே. 165

கொண்டல்படிந் திலங்குசெம்பொற் குவடெனவு மலர்பதத்து
வண்டுபடிந் திலங்கனக வனசமுகிழ்த் தானையெனவுங்
கண்டவர்கள் வியப்பெய்தக் கடையவொரு தலையாக்கு
மண்டியபொற் செப்பெனவும் வளர்முலைகள் கறுத்தனவே. 166

மாரவேண் முதற்கணையாய் வயங்குமுலை கறுத்தலொடும்
வீரமார் கடைக்கணையாய் விளங்கும்விழி மலர்நோக்கிக்
கோரமா யெதிர்ந்தவரைக் குமைக்குமருந் திறஞ்சிறிது
தீரவே யுள்வாங்கிச் சிறந்தநிறம் பசந்தனவே. 167

கண்ணனில மெனுமனையாள் காயர்நிறம் பசத்தலொடு
நண்ணனீர்மை நுதலென்னு நகைமதிய நிறம்பசந்த
கண்ணனீர்மைக் கணவனருந் தாவமிழ்துள் ளோமிருந்து
வெண்ணனீர்மை போர்த்ததென விளர்த்ததுசெவ் வாயதாய். 168

தன்னுருவந் தோற்றமற் றறுகண்மை யொழிந்தாக்கும்
பொன்னுருவ முலைகறுத்துப் பொலிவழித லெதிர்நோக்கி
மன்னுவவை தலைக்கொள்ள வயக்குருவின் கியதேய்ப்ப
மின்னுருவ விடைவிழிக்குப் புலனாக விளங்கியதே. 169

அருங்கலம்புத் திரனன்றி யரிவையர்க்குப் பொன்னாதி
யிருங்கலமற் றருங்கலமா மிராதுமிகை யென்பான்போற்
பெருங்கலன்கள் பொறையாற்றுப் பெற்றியினாற் பேரணியு
மொருங்கலர்மா லையுமுவப்பி னணியாத தளர்வினளே. 170

கருவிடத்து நீரிடுதல் கடனென்று திருநீறும்
பொருதடந்தோண் மகன்பழகப் புனைவுண்ட கருமண்ணும்



தொருளுயிரக் கருவினிடைச் சிவனுநிலை யிதுபோலென்
றுருவாறுந் திம்புளியு முவந்தருந்தும் வயாநிறைந்த. 171

ஐயிருநன் மதியடைப்ப வகன்றொழிந்து கமலவதி
மெய்யினையக் கருமதலை மிளிர்ந்துசிரங் கீழ்நோக்க
வொய்யெனச்சென் றரசனிடை யுழையருரைத் தலுங்கணிகள்
மையவிது பொழுதகலிற் பார்த்திபனே நன்றென்றார். 172

நன்முகூர்த்தம் வருமளவு நளிமைந்தன் பிறவாமை
யென்முயன்று மெனவரச னினைகின்ற செயல்கேளா
வன்மதியிற் கமலவதி மற்றென்னைத் தலைகீழா
வென்மணிநா புரத்தாளின் யாத்தினித்துக் குகவென்றாள். 173

ஈங்கிதுவுந் திருவருளா லியன்றதென வலித்தரச
னங்கதுவே புரிமினென வயலிருந்தா ரதுபுரிந்து
நீங்குறுகா லங்கடந்த செவ்வியினி லிறக்கினு
ரோங்குவலம் புரிமுத்தி னொருமைந்த னுதித்திட்டான். 174

தக்கபவ முறுங்காலந் தாழ்த்தலினாற் றனிமைந்தன்
செக்கர்நிற விழியினனாய்த் திகழ்ந்தொளிருஞ் செயனோக்கி
மைக்கணுறு கமலவதி வளர்கோச்செங் கண்ணனே
தொக்கவறந் தலையெடுப்பத் தோன்றியவிம் மணியென்றாள். 175

உறைந்த சோழநா டேயன்றி யுலகெலாம் வியப்ப
விறந்த தேவரும் பிதிரும் விழுத்தக நினைப்ப
மறந்த வாததெம் மன்னரு மனங்களி கூர்ப்பச்
சிறந்த கான்முளை பிறத்தலுந் திகழ்சுப தேவன். 176

அறங்க ளாகுக வாலயந் தொறுஞ்சிறப் பெடுக்க
பிறங்கு மாநகர்த் தெய்வமா திகளும்பே ணிடுக
மறங்கு லாவுதெம் மன்னர்கா ணிகளம்வாய் விடுக்க
வுறங்கு வாருள ரேலவர்க் குறுமதி யூறுக்க. 177

திறைகொ டாதுசில் லாண்டுதெம் மன்னரே சிறக்க
கறைகொ டாதுசில் லாண்டுவாழ் குடிகளே களிக்க
குறைகொ டாதமா நகரெலாங் கோடணை கிளக்க
மறைகொ டாதுபண் டாரம்வாய் திறக்கவென் றேவி. 178

தாய நீர்படிந் தடுத்தனன் றோன்றலை நோக்கி
மேய சாதகன் மத்தினை விதியுளி யியற்றி
யாய காஞ்சன மாதிக டானமா வளித்துப்
பாய வோமமும் பத்தநா ளளவுமாற் றினனால். 179

செய்யகோ லுடைமன்னவர் கையுறை செரித்திட்
டையவோகையின் விருமினார்க் கதிமகிழ் சிறப்ப
வெய்யவேலினுன் விழுக்கலன் பூந்துகில் பிறவும்
பெய்யு மாரிபோல் வழங்கினன் பெரும்புகழ் சிறந்தான். 180

வளருந் தாபதம் வயக்கிவார் காரிலை தனைத்துந்
தெளிபு மாமதி மனைவிகோச் செங்கணா ரேனுமென்
னவிலோகையி னறைந்தவக் காபமே மகற்கு
வெளிறில் கேள்வியான் விதியுளி யிட்டனன் றனருள். 181

கொங்கு யிர்த்ததார்க் கொற்றவன் குறித்தகா லோலை
மங்கலத்தபுல் வினைகளு மரபுளி யியற்றி
வங்கண் மெல்லிய லணைக்கின ராற்றவ வாற்றத்
தங்கு மைந்தருந் தனிமதி யெனவளர் கின்றார். 182

இவ்வுலகே நாற்பொருட்கு மிடமென்று காட்டுதல்போ
லெவ்வமறு நிலைத்திருகை யிருத்திநெறி வான்போகத்
தவ்வுதல்யான் விழைந்திலே னெனத்தலையைத் துளக்குதல்போற்
செவ்விபெறு முகநிமிர்த்துச் செங்கீரை யாடினார். 183

மாயையெனும் பெருந்தொட்டில் வல்வினையின் கயிறியக்கிப்
பாயபெரும் புவனமெனும் பரப்பனைத்துஞ் சென்றாட
லாயவொரு தாவொழிய வைத்தவரை மணித்தொட்டி
லேயும்வகை யினைவித்திட் டேழையர்தா லாட்டினார். 184

எஞ்ஞான மில்லாம லிதுதாறு கிலேகாணு
வஞ்ஞானப் பெருங்கடலி லழுப்புண்ட வுயர்நீர்க்கு
மெய்ஞ்ஞான வரமருந்த மிகுமகிழ்வின் விளைவேபோற்
றஞ்ஞானம் பெறவந்தார் சப்பாணி கொட்டினார். 185

இரவிமரு மானென்னு மியல்பெயர்க்குந் தெரிப்பவர்போ
லரவமணி மேகலையி னணங்கனையார் முகமென்னும்
புரியிதழ்த்தா மரைமலர்கள் பொற்பலர் தரச்சென்று
முரிவிலருள் பெறவந்தார் முத்தமளித் தருளினார். 186

கானனையின் கற்பகப்பூங் கன்மணியரு மிருடியாரும்
பானனைய மணிச்சிறுவாய்ப் பாலன்வரு கெனவிளியாத்
தானனைய பெருந்தவத்தாற் சார்ந்தபெரி யவர்தம்மை
மானனைய விழிமடவார் வருகவரு கெனவிளித்தார். 187

சந்திரனே சூரியனிற் றனிமைந்தன் பயிர்வளர்க்கு
மந்தரனே யெவ்வுயிரு மளிக்குமிவன் றூமணியாய்



சுந்தரமா ரிவனுடனே தொக்காட வருகவெனப்
பைந்தொடியார் மதிவிளிப்பப் பார்த்துமனங் களிகூர்ந்தார். 188

உற்றதோர் வினையன்றி யுறுதுசெய் தாலதனைப்
பற்றலா ரெனவழித்துப் பாரளித்த றெளிப்பவர்போன்
முற்றிலான் மனைத்தொழித்து மொய்த்தசிறு மியரிழைத்த
சிற்றிலா னவையவர்கள் சினந்தலறச் சிதைத்திட்டார். 189

பிறவியெனு நெடும்பகையும் பெருகுகலி யின்பகையு
மறமலிமன் னவர்பகையும் வையசத்தோர் தீவினையு
மறவொழிக வறமனைத்து மமர்கவெனச் சாற்றுதல்போற்
சிறுவிரல்க ளொளிதுளும்பச் சிறுபறைகண் முழக்கினார். 190

பறந்தலையி னெதிர்ந்தவர்கள் பன்மணித்தேர் புறங்கொடுப்ப
மறந்தழையு மணிநெடுந்தேர் வல்லையுகைத் திடற்குரியார்
பிறந்தகதிர்க் குலத்தினுக்குப் பெரிதுமிஃ தியைவதெனச்
சிறந்தசிறு வர்களொடும்போய்ச் சிறுதேரங் குருட்டினார். 191

இத்தகைய விளையாட்டி னியல்பொழிய வைந்தாண்டிற்
பைத்தநெடுங் கடலுலகம் பரிக்குமொரு சுபதேவன்
மெத்தியபே ருவகையனாய் விழுத்தகுமங் கலஞ்சிறப்பப்
பொத்தமெழிற் கலைமகளைப் புணர்வித்தான் மகனார்க்கு. 192

சின்னாளிற் பயில்கலைகள் செயிர்தீர மிகப்பயின்று
பின்னார்வத் தொடும்படையின் பெருங்கடலைக் கரைகடந்து
முன்னார்கள் குடர்குழம்பத் துரகதமுங் கடகளிறும்
பொன்னார்திண் மணித்தேரும் பொருதிறத்தி னுகைத்திட்டார். 193

ஓங்குமுப யகவினை யொருபதிற்றுண் டினிற்பெற்று
வீங்குமறை முழுதோதி விழுத்தகைமை யொழுக்கெய்திப்
பாங்குபெறும் பதினாறுண் டினில்வதுவை பயின்றுலகந்
தாங்குமுறை மையும்பெற்றார் தறுகண்வினைப் பவமற்றார். 194

மண்ணுலகஞ் செங்கோலின் மலிவெய்த வேள்விகளால்
விண்ணுலக மலிவெய்த வேத்தவையின் வீற்றிருந்து
நண்ணலர்கள் பணிகேட்ப நவையனைத்து நலிந்தொழியப்
புண்ணியமென் கனும்வளரப் புகழரசு புரிகாலை. 195

விளையாடும் பருவத்தும் வெண்ணாவல் வீற்றிருந்த
வளையாடு மணிநாகத் தகலத்தார் திருவடியே
யுளநாடி வருமவர்தா மோங்கியமுற் பவநினைந்தே
யளவாத திருப்பணிக ளாக்குதற்கு மனம்வைத்தார். 196

படிகெளியு நாற்படையும் பரப்பியெழுந் தலைக்கலர்த
முடிகளொடு முடிபுரள வெய்யபடு ஞாயிறுபுரிசெ
கடிகெழுபல் வாக்கவர்ந்து கழலடைக்கீழ் நிறையாக்கி
மடிவில்பொரு ளொங்காவும் வகுத்தினைமுற் றினர்மாதோ. 197

முர்றிய பவந்தொறு முற்றி நின்றதோ
சந்தமி லன்புமிக் காய காதலின்
சுந்தமென் னிழலிற் கலந்து ளார்பதற்
சிந்தைசென் றிறைகுறச் சென்று தாழ்ந்தனர். 198

இருவுரு நோக்கினர் செங்க ணீருக
வுருகினர் குழைந்தன ருடைப்பி லானந்தம்
பருகினர் மறைபல பாடி யாடினர்
பெருகிய வன்பொடும் பெயர்ந்த ருழ்ந்தனர். 199

அரிதவ னைகன்றறி லாண்ட வல்லிதன்
பரிபுரச் சீறடி பணிந்து போற்றினார்
வரியளி முரலுமைம் வனத்தி லோரிறை
யுரிமைசெய் பரிசனத் தோடும் வைகினார். 200

ஆத்சியின் மிகுந்தவர் தொகுப்ப நோக்குப
வாழ்ச்சிவெண் ணாவலின் மருவி னார்க்கவன்
டாழ்ச்சியில் பொருளெலாந் தயங்கு மாலயம்
வீழ்ச்சியில் வினைஞரால் விதிக்க வென்றனர். 201

அருடலைக் கொண்டுசென் றமைச்ச ராதியோ
ருருவனா ருலோகமிக் குருக்கு வாரையுமா
குருமணித் திரள்களைக் குயிற்று வாரையுந்
தருகவென் றேவினர் வியவர் தங்களை. 202

வியவரும் வினைஞரை விளிப்ப லேகினார், நயவரு மிரவியு நரலை சென்றதால் கயர்வுறு மாலையு மடுத்த தல்விராக், கயவுரிப் போர்வையார் கனவிற் சொல்லுவார்.

அடியவர் வேடமோ டடுத்த நாயகர், முடிகெழு வேந்தனை முகத்து நோக்குப படிமுழு தாள்பவ பணிபொன் னுதியான், மிடியறச் செய்வது வேட்டு நின்றனை.

வேட்டவவ் வுளத்தினை விடுதி விண்ணவர், காட்டினா தவ்வம்மு னண்மணி நம்முழை வாட்டமி னிருமித வரங்கொண் முன்னரே, கோட்டமி லாலயங் குயிற்ற வென்னனிருன்.

மேவிய கெண்டகை விலங்கற் சாரலிற்
பாவிய கெண்டகை நதியின் பாங்கரிற்
றாவில வியானத்தன் ஞெடிச்சை யாலிழைத்
தோவிலன் பாலிவ ணுறைத்த வூக்கினான்.



ஆங்கவற் கதனையவ் வாற்றி னிட்டுநீ
நீங்குகென் றுமது மிகழ்த்தி யன்னவன்
பாங்குறு மித்தலம் படர்ந்து மாதவந்
தாங்கினன் னிருமிதத் தலைமை பூண்டனன். 207

ஆதலி னுங்குநீ யடுத்திட் டவ்வயிற்
கோதறு முருத்திரர் கோடி யோர்குழீஇ
மேதகு பூசனை விளைத்துப் போற்றிய
நாதரு முளரவர் தம்மை நண்ணுதி. 208

முன்னவ ரருளினன் மொழிந்த வாறுகீ
பின்னது தனையிவட் பெயர்த்து வையென
நன்னய மொழியினு னவின்று நீங்கினார்
சொன்னவை நனவெனத் துணிந்து சோழனார். 209

விடிந்தபி னமைச்சரை விளித்து மற்றிவண்
முடிந்தது முதல்வனு ரருளி தென்றவர்
தொடர்ந்தவர் நால்வகைச் சேனை சூழ்தரப்
படர்ந்தனர் வடமுகம் பார்த்து வேந்தனார். 210

கலைச்செழுங் கரத்தவர் களிப்ந்த கெண்டகைச்
சிலைத்தலை நதியினைச் சேர்ந்து பாங்கரி
னிலைத்தநின் மலனடி நிகரில் வந்தனை
நலத்தகப் புரிந்துபின் னுளங் குற்றனர். 211

முந்திடத் தெய்திமுக் கண்ணர் கூறுவா
ரிந்திடத் துளதவ் தெடுத்து மீட்டுமிவ்
குந்திடத் துறுகென வுறுத்திச் சென்மதி
யந்திடத் துறுமென வருளிப் போயினார். 212

அயிலுறு சூற்படை யமலர் கூறலும்
வெயிலுறு பூணுடை வேந்த னார்மணி
பயிலுறு நதியிடைப் படிந்து நேருறக்
கயிலையை நேர்விமா னத்தைக் கண்டனர். 213

புரையறு சிற்பநூல் புகன்ற வாற்றினால்
வரையென விலகிய விமானம் வல்லையே
கரைமிசை யேற்றினர் கண்டு மீட்டுமவ்
விரைநதி யிட்டனர் மேவு காங்கென. 214

வியலரை யாயிடை மீட்டும் போற்றினார்
தமதிருஞ் சேனையுந் தாமு மீண்டுசென்

நிமையவ ரேத்திய நகரை யெய்தியொ
ரமுதலிங் கேசரை யன்பிற் போற்றினார். 215

திரைதவழ் பொன்னி சார்ந்து செங்கணார் நிறப வாக்குக்
கரையர்முன் வடாது திக்கி னமரொரு தடத்தின் மூழ்கி
விரையவை யாற்றப் பொய்கை மீமிசை யெழுந்த தென்னா
விரைபுனற் பொன்னி நாப்ப ணெழுந்தது விமான மம்மா. 216

அற்புத மெழுந்த தென்னப் புனலிடை விமானந் தோன்றத்
தற்பரன் சரண மன்றிச் சார்புறாத் தலைமை மன்ன
ரற்புத வுளத்த ராகி யொருமிறைஞ் சாற்றார்
சொற்பயில் புவியி லேருந் தொல்லியின் மகிழ்ச்சி பூத்தார். 217

அடியவர் தமக்கெய் தாத வரும்பெற லியாதோன் றில்லை
கடிகெழு காவ ளீழுற் கண்ணுத லருளி னாலே
படிமிசை யெவருங் காணப் பரந்தகேண் டலைக்க ராற்றி
னிடைசிலை பொன்னி யாற்றி னெழுந்ததுமேல் விளங்கு மென்றால். 218

வினைஞரைக் கூவி யெல்லா மேதகக் கரையி லேற்றி
நனையவிழ் காவ ளீழ னம்பனூர்க் கினிது சார்த்தித்
தனைநிக ரதனி லொன்பான் சாரா மேல்பால் வைத்துப்
புனைமணி வாயி றென்பா லாக்கினர் புகாதி ரன்பர். 219

மொழிந்தவென் வாய்த னேரே முப்பது சாலே தத்தோ
டெழுந்தவிண் ணளாவுங் கோயிற் கிணக்குமண் டபமு மற்றுஞ்
செழுந்திருச் சிலையாற் சிங்கத் திருவெனச் சிறந்து தோன்றக்
கொழுந்துகொண் டெழுந்த வன்பிற் கொற்றவர் குயிற்றுச் செய்தார்.

மண்டபம் பிரகா ரங்கள் வயங்குகோ புரங்க ளாதி
விண்டொடு விழைத்திட் டெஞ்சும் விழுநிதி முழுது மோர்சார்
மிண்டறத் தாபித் திட்டு மேக்குற வதற்கு நேரே
கொண்டமண் டபத்து மேலாற் கோயிலொன் றிழைத்திட் டாரால்.

சித்திரக் கோயி லுள்ளே சிவலிங்க மொன்று தாபித்
துத்தம நிதிக ளெல்லா முமதருள் வசமா மீங்கு
வைத்தன னைக்கொ ளென்று வணங்கின ரதனு ளத்தப்
பித்தருக் குளதா லாதிப் பெருஞ்செல்வ னென்று நாமம். 222

சம்புவீ ளீழ லார்க்குச் சக்கரா கமத்திற் செய்யு
நம்புநித் தியமே யாதி நவையறு பூசை யெல்லா
மும்பரும் விழைய வாற்றற் குரியவர் தம்மை நாடி
யிம்பரி னிருத்து வாமென் றெண்ணின ரிகல்வேன் மன்னர். 223



காசிகே தாரங் காஞ்சிக் கடிநக ராதி மூதூர்
மாசுதீர் குலத்தின் மேலாய் வளர்சிவத் துவிசர் தம்மை
நேசமோ டழைத்துப் போந்து நிதிநிலஞ் சுதந்தி ரங்க
ளேசுதீர் மனைகண் மற்று மீந்தனர் தாபித் திட்டார். 224

தருமமுந் தவமும் பேணுந் தலைமைபூண் டமுத லிங்கர்
திருவடிப் போது போற்றுஞ் சிவபத்தர் தமக்கீ ரொன்பா
னுருவளர் மடங்க ளாக்கி யூதியம் பலவு நல்கி
யிருநிலம் வியப்ப வெல்லா வியற்கையு நிறுவி னாரால். 225

இவ்வகைப் பணிக ளெல்லா மீங்கிவ ரியற்று நிற்பச்
செவ்விய வழுதி யாதிச் செருத்திறல் வேந்தர் போந்திட்
டவ்விய மில்லா நெஞ்சி னளவளா யவர்கட் கேன்ற
நவ்வியங் கரத்தி னார்த நற்பணி யியற்றி னாரால். 226

காலமோ ராறும் பூசை கடிவிழா வாதி யெல்லா
மேலுமா றியற்ற நோக்கி யின்பகந் ததும்ப வாங்கே
சாலுநாள் வசித்துப் பின்னர்த் தலந்தொறுஞ் சார்ந்து நம்பர்
கோலமார் பணிக ளெல்லாங் குயின்றுதம் பதியைச் சார்ந்தார். 227

ஆயிடை யிருந்த வாறே யரசுசெய் துலகத் துள்ள
கோயில்க டோறும் பூசை குறைவற வியற்று வித்துப்
பாயின மலங்க ளூரப் பரசுக வடிவொ டொன்றாய்
மேயினார் சிவலோ கத்தின் விறற்கண நாத ரென்ன. 228

என்றுமிக் குரைத்த சூத விருடியை முனிவர் நோக்கி
நன்றுறு சரித மீங்கு நவிற்றினை சிலம்பி யானைக்
கொன்றிய பூசை வேட்கை யுற்றவை ஞான பூமி
வென்றிகொ டலைவன் பாத மேவுகா ரணம்யா தென்றார். 229

கடுத்தெதிர் வினாவி நின்ற கரிசறு முனிவர் தம்மை
விடுத்தவைம் பொறியி னின்ற மேதகு சூத னோக்கித்
தொடுத்தமெய்ப் பத்தி யோடுஞ் சூழ்ந்துரை வினாவிற் கீங்கே
யடுத்திட விறுத்து மாலென் றறைதரப் புக்கா னன்றே. 230

கயிலைநெடு வரையகத்துக் கணநாதர் பலருள்ளும்
பயிலுமா லியவானும் பகர்புட்ப தந்தனுமென்
றியலியற்கைப் பெயருடையா ரிருவருமுப் புரமெரித்த
சயமுடைய சேவகனார் தகும்பணியிற் றலைநின்றார். 231

ஒருவரொரு வரைநோக்கி யுளத்தெழுந்த பொறாமையினு
லொருவரொரு வரிற்பூசை யுஞற்றுதலான் மேம்படுத

திருகுமுளத் தொடங்கினைந்து தினமுமிக வினர்வருங்கா
லிருவருமோ ருழியெதிர்சே ரெய்திமிகத் தருக்கினூர். 232

தருக்கியிரு வருந்தம்முட் டழல்விழித்து முரணுமிடைப்
பொருக்கெனமா லியவானப் புட்பதந்தன் முகநோக்கி
வெருக்கொளிப மாகென்றான் வெகுண்டிமா லியவானைச்
செருக்கிளரும் புட்பதந்தன் சிலம்பியா கெனச்சபித்தான். 233

மாருத பெருஞ்சாப வலைப்பட்டிவ் விருவோரு.
மாருடு சடைமுடியா ரடிபணிந்து விளாந்ததிது
வேறுக வருளுகென வேண்டினார் வேண்டிதனு
சீருமிக் திருமேனி நிமலனு மருள்செய்வார். 234

வானநா டரும்பழிச்சி வரமேற்குஞ் சோனாட்டின்
ஞானபூமியையடுத்து நமதருட்பூ சனையாற்றி
யானதோர் தலத்தினுமிக் ககத்திகலி யுயிரிறந்திவ்
வீனமா கியசாப மிழப்புறுவீ ரெனவிடுத்தார். 235

அனையபெருந் தவமுண்டையா ராதலினு லருந்தவத்திர்.
வினையகனுஞ் சிவபூசை விழைவினொடுஞ் சிவம்பெருகித்
தனைநிகரு ஞானதலஞ் சார்ந்தனரென் றிறத்தப்பாற்
புனைதவத்துக் கவுதமனூர் புரிந்தபணி சொலப்புக்கான். 236

---

# கௌதமப்படலம்.

தவமலி யோகருட் டலைமை சான்றவ
னவமறும் வெண்பொடி யவிரு மெய்யின
னிவருறு கண்மணி யிலங்கு பூணினன்
கவுதம னெனும்பெயர் கலந்த மாதவன்.

முகிலுறழ் கருங்குழன் முத்தந் தைவரு
நகிலின ணறுமணங் கமழு மெய்யின
ளகலிகை யெனும்பெய ரணங்கு தன்னொடும்
பகலிக ழன்பனாய்ப் பண்பின் வாழுநாள்.

பொன்னுல காள்பவன் பொருவின் மாதரா
ளின்னலம் விழைந்தன னெதிரி லம்முனி
தன்னுரு வெடுத்தனன் சார்ந்து தையலாய்
நன்னலம் வேட்டன னென்மற் றிந்திரன்.

மாரவேண் மலர்க்கணை மலையப் பட்டனே
னாரமா முலைக்களி றடுத்து நின்விழிக்
கோரவா ளறத்தழீஇக் குமைத்து வெம்பகை
வீரநான் பெறத்தரும் வேலை யீதரோ.

கருதலர் போரினாற் காய நீங்குறாத்
திருவள ரமுதந்தெண் கடலிற் பெற்றனே
னுருவிலி போரினு லுயிரு காணமின்
னுருவளிர்ரமிழ்தமிக் குதவு கென்றனன்.

பண்டைய வூழ்வினைப் பாழி யென்சொல்கேன்
மண்டழன் மெழுகென மனநெ கிழ்ந்தநாண்
விண்டனள் காதலை விழியிற் றோற்றியால்
கொண்டனள் பின்வருங் குற்ற நாடிலள்.

இந்திர னோகமை யிரக்கின் றானெனப்
புந்தியி னரும்பிய பொருவி லோகைய
ளந்தினெட் டியிர்த்தன ளாண்ட காயினி
முந்திய தெனக்குமான் முயக்கு கென்றனள்.

கறையடி வெங்கயக் கீடவு குஞ்சர
நிறையெனுங் காவலை நெகிழ மாதென
வறைபெறுங் கானகத் தடைத்திட் டைம்புலக்
குறையறு குளகுவாய்க் குதட்டிச் சென்றதே. 8

காதன்மொட் டரும்பிமெய்க் காமச் செவ்வியி
னேதமின் மலர்மலர்ந் தின்பத் தேன்சொரிந்
தாதகக் களிப்பளி யுலாவ விந்திரப்
பாதவம் படர்ந்தது பசும்பொன் மென்கொடி. 9

கலவிதயத் தின்னணங் களிப்ப நீடிய
வலர்முலை மாதினை யகலுஞ் செவ்வியிற்
பலர்விழை கவுதமன் படர்ந்து நோக்கினு
னலமலி தனதுரு நண்ணும் வஞ்சனை. 10

யாரிவ னெனதுரு வெடுத்து ளானிவன்
யாரிவன் புருதர வெண்ணுங் காரியம்
யாரிடை யிவற்குறு குறையென் றெண்ணுவான்
யாரினுங் கைதவ னியல்பு தெள்ளினன். 11

உள்ளவா றரையென வுருத்து நோக்கினன்
றெள்ளுமா தவனவன் சிவப்புக் கஞ்சுபு
கள்ளனு மியலிசும் பமரர் காவல
னள்ளுமா றிதுவென நவிற்றி யிட்டனன். 12

விழுமிய வருந்தவன் மேக வாகன
வொழுகுறு மறைநெறி யொருவிக் கற்பெனுஞ்
செழுவிய பெண்மையைச் சிதைத்த தின்குறி
யழுகிமண் விழுகெனச் சாப மாக்கினன். 13

சிலைமா மென்னவே தெவ்வி னேர்வக
நிலைபெறு நீர்மையி னிற்றி யாதலிற்
கலைதிரி கானிடைக் கல்லு ருக்கொடு
மலைவறக் கிடவென மனைவிக் கோதினன். 14

இந்திரன் விடணமங் கிற்று மண்விழ
வந்தரத் தெய்தின னமரர் தம்பொருட்
டிந்திடத் தொருவினை யுஞற்றி னேர்ந்தது
வந்தது வானுளீர் மாற்றுவீ ரென்றனன். 15

கடவுளர் சூழ்ந்தனர் [illegible] மேடத்தின்
விடணமே விடவுநக்கு விடண மாக்கினர்.



மடனறு மகவினை மாதுங் கல்லென
விடவிய கானகத் தினைந்து வைகினள். 16

மனையவ ளின்றியே வைகுஞ் செவ்வியி
னனையவட் கறப்பய னணிமைத் தாகலின்
வினைதபு முனிவற்கு விளங்கு மோர்தினம்
புனையிழை கலவியிற் புந்தி சென்றதே. 17

பெருந்தவன் காமநோய் பிணைந்து வானனி
வருந்துவ னவன்படி வருத்தங் காணுதல்
பொருந்துவ தன்றெனப் பொலிந்த வெய்யவன்
றிருந்திய குடகடற் செல்லன் முன்னினன். 18

இருளுந் தானவர் குழுக்களு மிறத்திறுத் தொழிக்குஞ்
செருவி னூர்ந்தநெய்த் தோர்செறிந் திட்டது சிவணும்
பரிதி நாயகன் சேர்ந்தது பறந்தலை யுழக்கப்
பெருகு சீர்ப்பிர தாபம்போர்த் திட்டதும் புரையும். 19

பாவ காரிய ருடலமும் பல்கதிர்க் கரங்கண்
மேவலர் லுறுந் தொடக்கினை விளிப்பவன் போல
வோவி லாதவஞ் சொரிந்திரு ளொதுக்குவெஞ் சுடரோன்
றுவு மேழ்பரித் தேரொடுங் குடகடற் குளித்தான். 20

மணந்து ளாருயிர்க் கிரும்பயன் வளர்க்குமந் திரத்திற்
புணர்ந்த வேள்வியிற் செய்யவான் றழலுமாய்ப் புணர்ந்து
தணந்து ளாருயிர் நீத்தவி சாரத்திற் றகதா
லுணர்ந்து ளார்புரி தழலுமா யொளிர்ந்தது செவ்வான். 21

அருள்சி வத்தினின் றெழுவொரு சகலமு மதுபின்
மருவி யொன்றுறக் கரத்தலு மடியுமா போலப்
பரிதி தண்கட லெழுவெழும் பறவையா திகளப்
பரிதி தண்கடல் விழவடங் கினபயி லிடமே. 22

அளிசெய் தின்னலை யகற்றுமா றருளொடுங் கலந்து
தெளிவி னல்லதை செறிந்தறி வுயிர்க்குமா மலநோய்
யெளிவ தின்றென விளக்குமோர் சான்றதாய் விழிக
ளொளிய தன்மையி னிருப்பவல் லிருள்பரந் தன்றே. 23

பெரிய ராற்பெருங் காரியம் பேணினர் முடித்தற்
குரிய ராங்கவ ரொழிந்தழி யொழிந்தவர்க் கினமேற்
சிறிய ராலுமக் காரியஞ் செய்துகொள் வதுபோற்
சிறிய தாமொளி விளக்கினுற் றிகழ்ந்தன தனக்கண். 24

ஆசை வற்குய்வெண் மதிக்குமிக் கவியொளி தனதே
யாத விற்கட ரிரண்டிறு படப்படா விருளுங்
காது தற்குரி விளக்கிடைக் கன்னியர் வதன
மோத மெத்தி ரிளட மதி யெனப்புலாத் தருமே. 25

இருண்ட சேவலைக் கயமெனன் விருண்டன சிலகண்
மருண்ட தாஞ்சக லத்துயிர் மானமே சிலகண்
வெருண்டி டாதொளிர் விளக்கிருப்ப விளக்கிவ சிலகண்
டெருண்ட வீட்டிதும் மனைச்செறி யிருள் சுழிக் கிலவே. 26

அன்பி னோர்கிலேயக் களவொழுக்கினிற் காண்டுரேர்
வன்பின் மற்றைய பொருள்களோக் களவின்கவ் வுரக
வின்ப வன்பரைப் பிறைபுக்குரர் பேயிவ செல்லைச்
சன்ப மற்றனர் தைகிக ளினர்க்குச காதே. 27

தயங்கு பேரொளிச் செக்கர்வா னெனுத்தழற் பிழம்பி
னியக்கு கார்நிறப் புகைவிரா யிரத்தசே போல
வயங்கு ருதைபல் லுயிர்த்தொகை பயிர்வுற வமைத்த
மயக்கு காரிருள் மென்மெல மவிந்தது மன்றே. 28

மண்வி ராம்புனல் விராவழுன் மானமேல் கடற்பாய்
விண்வி ராவொளி விராவிருள் விளக்கமும் விராவு
மெண்வி ராவுகால் பொரவிதின் விரவுவான் குரியிற்
றண்வி ராவிய தவளமா மதியெழுந் தன்றே.

எழுந்த மாமதி தோற்றலு மிர்க்கலை யமிழ்தச்
செழுந்தண் வார்கிர ணங்களெண் டிக்கினும் பரந்த
வழுந்து சேறெனப் பானிலாப் பிழம்படர்ந் தன்று
விழுந்த காரிருண் மெய்யழப் பொய்கிமுந் தாங்கு. 30

ஒளிமி குந்தவ ரையிலு முனைமா திகைர்
களிமி குந்தவ ருயிறுங் கடலமக் கன்றொன்
றளிமி குந்ததா ரைபகற் கழகுற தமிந்து
தெளிமி குந்தன் பகிக்கெழி திகழ்ந்தது நிலவொளம். 31

உருக்கும் வெய்யவ ராயிறு முற்றவர்க் கின்பம்
பெருக்கு மன்பினர் தண்ணிய ராயிறும் பெற்றார்
கருக்கும் வன்பின ராவர்வெங் கதிரவ னளர்த்தி
யிருக்கு மப்புயஞ் சுருக்கின னிராகுதன் கதிரோன். 32

கொதமல் காட்டின கோட்டலர் தண்டலித் தேறற்
பிதம நீடிய பலகலினைக் காட்டின வெனத்தாம்

124



விதுவி மேருமெற வாதனன் றெனவிமைழுந் தாங்கு
மதுவ ருததண் குமுதமு நீலமு மலர்ந்த. 33

செயலை மாவினுன் மரமெலாம் புகமொடு சிறந்த
பயிலு நீரின பதுமநீ லங்களாற் சிறந்த
வுயர்க வார்கொடி யினத்துமென் றுமெலன வொருப்பட்
டயர்வின் மாரனுக் கொருகணை யலர்ந்தன முல்லை. 34

தமியர் வாண்முகத் தொடும்பக ணிகர்த்ததண் மதிய
மெமியர் வாண்முகத் தொடுமிர வொத்தில வியதா
லெமியர் வாண்முகத் தொடும்பக லிருந்ததா மரைக
டமியர் வாண்முகம் போன்றன தயங்கிய விரவில். 35

புரிந்த வன்பரைப் புணர்ந்தவர் புணர்முலைக் கழிந்து
பிரிந்த மங்கையர் பெருமுலை முன்பக னிகர்த்த
றெரிந்த சக்கர வாகங்க டிங்கள்பைங் கதிர்கள்
விரிந்த பின்பகல் பிரிந்தவர் முலையும்வீழ்ந் திலவே. 36

கணவர் வைகிய காரிகை மடந்தையர் கருங்கண்
மணம லிந்ததண் டாமரை மலரொ ணிகரா
கணவர் வைகிய காரிகை மடந்தையர் கருங்கண்
மணம லிந்ததண் குவளையுஞ் சகோரமு மலையும். 37

கரண்ட மேவிய பொய்கையிற் கமலமா மலரிற்
றிரண்ட தேத்துளி பருகியுஞ் செறியிதழ்க் குவளை
வரண்டு வார்மதுப் பருகியு மகிழ்தவண் டொன்றே
யிரண்டு காலத்தும் பிரிவிலார் விழியிழைந் தனவே. 38

வீங்கு தண்புன லெங்கெழு மேகங்கள் வளர்ப்ப
வோங்கு பைம்பயிர்க் கொளிர்ந்துதன் வயிற்றெழுந் திங்க
ளீங்க ருங்கருவுறுத்திடு நெடும்பயன் குறித்துத்
தாங்க ருங்களிப் பானனி தழைத்தது புனரி. 39

அளிக்கத் தக்கன விரவியி னரவிந்த மாதி
களிக்கத் தக்கன திங்களிற் கயிரவ மாதி
யொளிக்கத் தக்கது சுடரிரண் டானுமோவ திருள்சீர்
விளிக்கத் தக்கவர் யாவரின் விழைதகப் படுவார். 40

பிரசம் வார்கணைப் பெருஞ்சுவைச் சிலையெறும்ப் பெருந்தோ
ளரசன் மாமதி வெண்குடை நிழற்றவார் கலியின்
முரச மப்பெழ மொய்குயிற் காகல முழங்க
விரசு காண்மணித் தேர்கடாய் வெய்யபோ ருழுந்தான். 41

மாதர் பாலம ருறுதென மைந்தர்க ளயிர்த்தார்
மாத ராடவர்க் குடைதரு மாயே மென்று
மாத ரோடுதல் கணவரை மணந்தன ரவர்பால்
மாதர் வேள்கலை தேர்ந்திடக் கண்டன மாதோ. 42

கொங்கை யன்றிது யாரெனுர் தொய்த்தவோ காகஞ்
செங்கை யன்றிது மாந்த மன்றிது செயலை
தங்கு வெண்ணகை யன்றிது நாவுவாள் விழியன்
றிங்கி துற்பல மெனத்தணர் தார்சில சினைந்தார். 43

காம னார்மத யானையைக் கருகுழற் பிணித்துக்
காம ருருரு நுசுப்பிடைக் காந்துதண் கலிகை
காமர் வாண்முகத் தடக்கியிவ் வணமெலாங் கடந்து
காம வீராய்க் களித்தனர் கலந்தகா மிகையார். 44

இனையபுன் மாலைவந் திறுத்த வெல்லையிற்
றனையிகர் கவுதமன் றனது நெஞ்சிடை
நனையெனு மரும்பொற் போது கொண்டதோர்
வினையிகர் காமநோய் மிக்க வர்ந்ததே. 45

மாறனுர் தனதுகை மதுகை தோற்றிரு
ணீரவெண் டிங்களு மெரியு மிழ்ந்தது
கோரவல் விடமெனக் குளிர்ந்த தென்றலுஞ்
சாரவம் முனிவரன் றளர்தன் மேயினன். 46

எல்லுருக் காத்தது மெழுந்த காயநோய்
வல்லுரு மேறென மதியைப் போழ்ந்தது
கல்லுரு வாயினன் காதன் மாதரா
னல்லுருக் கின்றதென் றயர்ந்து மாழ்குமே. 47

உருவெளித் தோற்றது மோடிக் கைகளால்
மருவுறத் தழுவிடு மாய மோவெனும்
தெருமரச் சிலையெனச் செய்த நீயையாற்
பருவரற் படுத்திகொல் பாவை நீயெனும். 48

எரிக்குங் கண்ணனென் றறிந்துயி சதுக்கெதிர்ந் தடல
மரிக்கும் பேதையை யிருந்தையா லளித்தவன் மனமுந்
திரிக்குந் தீமையை தெரிவையர் சித்தமும் போராற்
பொரிக்கு மாண்மையை யென்னைநீ பொராய்கொன் மன்மதனே. 49

கடித்து மென்றமென் றமிழ்த்திடப் படுங்காத் தினில்வில்
பிடித்து மென்கரத் தார்பிசைத் திடப்படுங் கனைக

122



முடிக்க மெல்லிதழ் மாதரை யினைகொலாந் துறப்பின்
முடித்தல் வல்லைகொல் வஞ்சின முழங்குவை மதனே. 50

வெம்பு சாபமுன் வாங்கின தொழியமேல் வாங்கின்
வெம்பு சாபம்பின் வாங்குவை சாதவேட் குரிசி
லம்பு தூவுவை யாயின்வா ளிக்கண்ணுரு விரதி
யம்பு தூவுவ ளன்னவ ளாயுளின் காறும். 51

தனது சேனையைத் தணந்தவர்க் கல்லது சமக
டனது சேனையைச் சார்ந்தவர்க் குறத்திடா தவனைத்
தனது சேனையைச் சம்புவாற் றணப்பினல் லாது
தனது போரிடைத் தனித்துவுங் கூடுமோ வென்னும். 52

கற்ற கல்வியுங் கண்ணகத் தஞ்சனம் புறத்தே
யுற்ற வொண்பொருள் விளக்கியுங் கண்ணினுக் குதவாப்
பெற்றி யொப்புறப் பிறர்க்கெலா முதவியே பேணிப்
பற்று மற்றெனக் காவதின் றேயெனப் பரியும். 53

தேயு நீரினை தேய்த்திடப் பட்டனை கறையை
காய மேகதி யாகிய கவலையை துருவன்
பாய குத்திரப் பிணிப்பினை பாருமைத் தருங்கி
மாயை நோயையும் வளர்ப்பது தக்கதோ திங்காள். 54

அத்தி வண்ணர்தம் வேணியி னிருப்புமா ரமிழ்த
முத்து தண்கதி ராற்பயிர் விளைக்குமோ ராமுஞ்
சித்த வெம்பர வுண்பது துவைவயிற் றீர்க்தோர்
நந்த வெம்பிய பாவமன் றோநகு திங்காள். 55

கரிய நஞ்சினும் வெண்ணிற நஞ்சுகண் வடிவை
பெரிய தண்கடற் பிறந்தநூன் றல்லது பெருமா
னுரிய கண்டமின் றெவரையு முலைசெய்யா ததநீ
புரியு மென்சடை யிருந்துநோய் புரிதிவெண் டிங்காள். 56

விடங்க ளித்தவுட் டுளையயிற் றரவும்வெய் துயிலு
மடங்க ருங்கொடுந் தீயைநீ யாதலி னமல
னிடங்கி டந்துமின் னருளினை யலையிகல் காம
னுடங்கு டன்றனை யொளிர்மதி தருங்கொலோ வென்னும். 57

வான்ம ருந்திலக் குமிமுதல் வளம்பல புணரி
தான்வ ருந்தநஞ் சுமிழ்ந்ததே யெனிற்றவத் தழுக்கி
மீன்ம லிந்தவர் புலான்மிடை கீவிடி யளவு
நான்ம ருந்தவு முனிகரா திருந்தியோ நமலாய். 58

கல்ல வர்க்கிடை ரேபுரி நவையினீ தமக்கே
செல்லும் வண்ணமெல் லாந்திக ழுதவியே செய்து
மல்லல் குன்றுறப் பன்முறை வழுத்தனை யனக்கற்
கொல்ல லொல்லெனு மொலிகட லேயென வுரைக்கும். 59

சந்தன மலயக் காலே தமியரை வருத்தி வேண்மெய்
வெந்தனன் கவிகை யாகி விதுக்குறைத் தருதே ராகி
மந்தமுற் றனைநீ யென்னே மற்றுமன் மதனைத் தாங்கி
வந்தனை நீகட் பாரியார் வருந்தியும் வருத்தா ரென்னும். 60

காமனை யுயிர்த்த மாயக் காமரு விடையின் சாறி
யாமத விடையின் கண்டந் தணிந்திடப் பந்த லாலே
தாமணிக் குழைமு கம்பாற் றெருகுபிணி செய்யா நின்ற
கூமணிக் குயிலோ பீழை கூர்ந்திடா தென்ற ளையும். 61

இவ்வகை யிரவி வெல்லாப் பொருளினு மிவேயா நின்ற
செவ்விய முனிவன் சாலச் செய்தவப் பயத்தின் பேற்று
லவ்விய மளிக்குங் காமக் கருமமுந் தளிக்கு நாத
னவ்வியக் காத்தா னென்றி யிலையென நாட்டங் கொண்டான். 62

வானகாட் டவர்க்கு மெய்தா வரம்பல வழங்கா நின்ற
ஞானகேத் திரத்தை நண்ணி நான்மறைக் கண்ணி யார்தா
மீனமா மகல வல்லே யினிதருள் வழங்கு வாரென்
றானமாங் கமல முன்னி யொருமருங் கிருந்தா ரூர். 63

பெருந்தவ முனிவரன் பெரிதுங் காமத்தின்
வருந்தினை னின்னுநாம் வருத்தி சாபமுந்
தருந்தரு மெனவகை யிரவுஞ் சாய்ந்தது
விருந்தெனை வைகறைப் பொழுது மேயதே. 64

இராக்குறி தகர்ச்சியி னெய்தி னோர்களு
மராப்பாத் தையர்யனை மறுவி னோர்களு
முராய்ப்பல விரைகமி றுற்ற மாக்களும்
விராய்ப்பயி றமதிட மேவ மீண்டனர். 65

னெடிய மகளிரை யுணர்த்தும் பாணியும்
வாடிய வுடலை மாற்றி யின்பமே
நீடிய கலவிக ணிகழ்த்தும் பாணியு
மாடக நூபுரத் தொலிய ருதவே. 66

மெத்திய காரிருள் விடியன் மேவலு
மைத்தடர் காமக்கு விரைஞ மல்கிய



நித்திய கேவல விருளு நின்மலன்
பத்திசெய் குநர்மல விருளும் பாறுமே. 67

மழுங்கிய திந்ததா ரகைம ழுங்கின
விளங்கிரு ளிரிந்தொளிர் விளக்கு மங்கின
செழுங்கதி ரவன்வரு மென்று சிந்தைமிக்
கழுங்கிய கவலையி கடங்கி ருலென. 68

சந்திர னெனுமொரு தகயன் மாவெளிக்
கொந்தகொண் டிலகிய கோலங் காண்டொறு
மந்தின்மெய் மலிந்தெழு மாழி மற்றவ
னந்தொளி காண்டொறு நந்தன் மேயதே. 69

வாரணத் தழனிகண் மனைதொ றீண்டின
வாரண முழக்கமுங் கிடைதொ றண்ணின
பூரண னருளிய பொருவின் மந்திரங்
காரணி கருக்குரி கரைதன் மேயின. 70

காவலர் நகர்தொறுங் கடுகுங் கைப்பறை
யோவின கடலொலி யோடு மற்றெதிர்
நாவலர் துதியொடு நன்கி யம்பின
தேவர்மந் திரந்தொறுஞ் செறிந்த பல்லியம். 71

இருளெனும் பகைக்கழிந் திளையுந் தாமரை
மருமலர்க் கிழத்திதன் வாட்டம் வீட்டுவான்
பரிதியின் வரவினைப் பகருந் தாதென
வருணன்வந் தெழுந்தன னம்பு ராசிமேல். 72

பாச வறிவும் பசுவறிவும் பாந்த வருளின் முழுதடங்கத்
தேச விரியுஞ் சிவஞானந் திகழ்ந்து விளங்கு மாறேபோன்
மூக மிருளின் விழிக்குதவு மொய்த்த வுடுவு மதியொளியும்
வீச கிரணத் திடைக்காப்ப வெய்யோன் வேலை முகட்டெழுந்தான். 73

இரவை யகற்றி யொளிபரப்பி யிலகுஞ் சுடரோன் குடதிசையிற்
பரவை குளித்துங் குணதிசையிற் பரவை குளித்து மணியுருவின்
விரவு முவரு மாறியங்க மிக்க விளைப்பு மொருவுநர்போற்
கரமென் மலரிற் புனலெதிர்தூய்க் கரைந்தார் மறைநூ லுரர்பலரும். 74

அருளிற் பெரிய சிவபெருமா ஞன்ற வருவ மெதிர்நோக்குங்
கருணை யடியார் திருமுகமுங் கண்ணு மனமு மெனமலர்ந்த
பெருகு மறுத்தா மரையந்தப் பெருமா னுருவப் பொலிவினுக்குத்
திருகு மதத்தா ரெனக்குவிந்த தேன்செய் குமுதத் தொடுகுவளை. 75

கரும வகையை யென்னென்று கரைவா மிரவிற் களிகூர்ந்து
பரிதி யெழலுஞ் சிலவுயிர்கள் பருவர் லழிந்த விரவெல்லாந்
தெருமர் லழிந்த சிலவுயிர்கள் செம்மாந் தின்பக் கடற்குளித்த
வெருவி லுயிர்க டொறுஞ்செயல்கள் வெவ்வே றாகி வளர்ந்தனவே. 76

விடிய லமைப்ப வகைநறையே விமலன் பாத மூளத்திருத்திக்
கடிமென் மலர்வா விகளிரக்குங் காம னமரிற் சிறிதயர்ந்த
முடிவி லரிய பெருந்தவத்த முனிவன் வைகற் கடன்முடித்தப்
படியில் வனத்தி னயர்சம்பு பதியை நோக்கிப் படர்கின்றான். 77

அமையாக் காதற் பெருங்காம வாழி பெற்றி [illegible]வேற்க
ஞமையா னொருபா லினிதமா வுலக முழுது மொருங்குயிர்த்தார்
தமைநா டியமெய் யுணர்வர்சேர் தனரப் பலரோற் றபுமுனத்தோ
டமையா நிறைஞ்சர் திருவானைக் காவி னெல்லை யெதிர்கண்டான். 78

கண்டவ னெழுந்த பொங்கிய காமக் கடல்கரை யிகவுற நடக்க
விண்டன னவலை தலைமேல் கிடந்ததோ விழுந்தன னெழுந்தன னின்ப
நண்ணிணி யிரும்பும் விழியினன் மறைக ணுவல்செறு நாவின னடர்ந்த
மண்டிய பொன்னி நதிப்புன லாடி வளஞ்செறி யகநகர் புகுந்தான். 79

ஆங்குள தீர்த்த மனைத்திலும் படிந்திட் டருள்கெழு பூதிசா தனமு
மோங்கிய விதியா லணிந்தெழுந் தைந்து முரைத்தரு வுருவரு வுருவாய்
நீங்கரு மலத்தின் வலிகெடுத் தெவர்க்கு நின்மல ஞானமுய்த் தருளும்
வீங்கிய கருணைப் பிரமலிங் கத்தை விழியெதிர் கண்டுதொழ்ந் தெழுந்தான். 80

என்று கூற விருடியர் சூதனை, யன்று கூற வவிப்பிர வேசனென்
றென்று நாமமங் குள்ள பிரான்றனை, நின்ற வாறு நிகழ்த்துகென் றாரே. 81

வேத வாயினர் மெய்யுணர் நெஞ்சினர், ரேத மேதமொய் யாத வியல்பினர்
தீதி லீரவி நாதனுஞ் செய்தவச், சூத மாதவன் சொல்லத் தொடங்கினன். 82

இராதர் திரவியன் றெருளுறப்பத் திமையர் திபேதா யுத்தசவிகள்
விராவுங் கமல மலர்மேலையான் விளங்குஞ் சிருட்டித் தொழில்பெறுவான்
பராவி வழிபா டினிதாற்றும் பரிசா லனைய திருநாம
மராவு மதியு மணிந்தாருக் காயிற் றென்மற் றறைகிற்பாம். 83

கண்டு பணிந்த கவுதமனார் கடிமென் மலரா திகள்கொணர்ந்து
மிண்டு மலத்தின் வலிமுருக்கும் விதியாற் பூசை யினிதியற்றித்
தொண்டு பலவு மர்காட்டேபோற் றொழிக்கச் சிலநாள் புரிகாலை
யண்டர் பெருமான் பணிக்கிரங்கி யடல்வெள் ளேற்றி னெதிர்நின்றான். 84

மிலங்கற் கரைய னின்றெடுத்த விளிர்புண் முலையா ளிடந்தழுவ
வலங்கற் கங்கை முடிகவிர்ப்ப வமரர் முனிவர் தொழுதேத்த



வலக்கொள் பூதம் புடைநெருங்க மழவெள் விடைமே னின்றார்தந்
தலங்கு மலர்த்தா ளுறப்பணிந்து சூழ்ந்து குழைந்து துதிக்கின்றான். 85

இணைமலர் சிந்தும் வேழஞ் சிலரொடு மெறிவித் தாய்நின்
சினகரந் தகர்த்த வேழஞ் சிவகதி யடைவித் தாயா
லனகனே நாவ னீழ லண்ணலே யமரர் ரேறே
யுனதருட் டிறத்தை யாரே யுள்ளவா றுணரு நீரார். 86

பதிவிர தையருக் கெல்லாம் பாரிடை யொருசான் றாகும்
பிதிரொளி யங்கி மாட்டும் பிறன்மனை விழைந்த பாவ
விதமுழு தகல வூர்த்த வீரிய மளித்தா யின்பம்
பொதியருட் டிறத்தை யாரே யுள்ளவா புகலு நீரார். 87

மறைமுடி தனக்கு நீண்ட மாலயன் முடிக்கு மெட்டா
தறைகழற் செய்ய பாத மதிர்குரைப் புனலும் பாம்பும்
பிறையுமென் றிவற்றை யெல்லாம் பிறங்கொளிச் சடையில் வைத்தாய்
நிறையருட் டிறத்தை யாரே யுள்ளவா நினைக்கு நீரார். 88

மருமலி கின்ற மென்பூ வாளிகள் கழைவி லேற்றிப்
பொருமொரு தேவ னுக்கை பொடித்தனை பொருவின் முத்தி
யுருவுகச் செங்க லோச்சு மொருவருக் களித்தி யானின்
றிருவருட் டிறத்தை யாரே யுள்ளவா தெரிக்கு நீரார். 89

சிறுவிதி புரிந்த வேள்வி தீவினை யாக்கித் தேவர்க்
குறுமுறை செய்தாய் தந்தை யுயிர்க்கொலை புரிந்த பாவ
முறுகுபுண் ணியம தாக்கி முதன்மையோர் பாலர்க் கீந்தாய்
பெறுமருட் டிறத்தை யாரே யுள்ளவா பேணு நீரார். 90

ஒருவர்பாற் பிறந்தார் தம்முட் கலவிசெய் யொழுக்கந் தீதென்
றருளினை நினது மெய்யி னுக்கிய வுமைபொன் வாணி
வருமரன் மாயன் வேதன் மூவரு மணப்பச் செய்தாய்
பெருகருட் டிறத்தை யாரே யுள்ளவா பேசு நீரார். 91

தீம்புனல் குடைந்து தூய திரவியத் தியற்றும் பூசை
யாம்படி விதித்தாய் நீமற் றழக்கடத் தாட லென்பு
வேம்பொடி கொண்ட தன்றி வேடன்மிச் சிலுங்கைக் கொண்டா
யோம்பருட் டிறத்தை யாரே யுள்ளவா றுன்னு நீரார். 92

எண்ணிரண் டாண்டே முன்ன ரீந்தனை யதனைத் தெள்ளி
யண்ணிய கால னாவி யடர்த்தொரு பாலன் றன்பா
லெண்ணிரண் டாண்டே யென்று மெய்துமா கடைக்கண் வைத்தாய்
நண்ணருட் டிறத்தை யாரே யுள்ளவா நயக்கு நீரார். 93

வெல்லமர் விளைத்த வானவர் வீங்குதோ ளூன்று மற்ப
வல்லெறுழ்த் தோள்க ளெல்லா மாற்றினை விளைந்த தீய
சொல்லமர் விலக்குப் பார்த்தன் றெக்கினைத் தழும்பு கொண்டாய்
கல்லருட் டிறத்தை யாரே யுள்ளவா கவிற்ற நீரார்.

மாலொடு பொருத ஞான்று வார்சிலை செரித்து வீழ்ந்த
கோலவிண் ணவர்கு ழாத்துட் குறுகியோர் தருப்ப கட்டு
மேலவர் வலிக ளெல்லாம் வேறுவே றளந்து நின்றாய்
சாலருட் டிறத்தை யாரே யுள்ளவா சாற்ற நீரார்.

தீங்குசெய் மனைவி கல்லாய்த் தீர்தர வெகுளி யென்பால்
வீங்கமுன் புரிந்தா யின்றும் மெல்லிய லின்பந் துய்த்து
நீங்கருஞ் செல்வ னீங்க நினைவினைக் கொடுத்து நின்று
போக்கரட் டிறத்தை யாரே யுள்ளவா றுரைக்கு நீரார்.

எனத்துதி யியம்பி நின்ற விருடியை யினிது நோக்கி
நினைத்தவண் ணொருங் கொன்றைக் கண்ணியா ரருளிச் செய்வார்
மனத்துய ரொழிதி தாச ரதியினின் மனைவி சாப
மொனைத்தும்விட் டகல நின்பா லெய்துவ ளின்ப மெய்த.

அற்றைநாள் காறு நின்பா லணங்கவே லமர்செய் காளி
யுற்றுட லாது நிற்க வோங்குமித் தலத்தி னெந்தம்
பொற்றகழ் கழற்குப் பூசை புரிந்தநீ வதிக வென்று
கற்றைவார் சடையார் கூறிக் கரந்தனர் கத்த னானார்.

அண்ணலா ரருளிச் செய்த வருட்டலைக் கொண்டு நாளும்
புண்ணிய முனிவன் சாலப் பொருவின்மா தவங்க ளாற்றி
வண்ணமென் மலர்க ளாதி மாண்பொரு டூவிப் பூசை
பண்ணியங் கிருந்தான் மீட்டும் பல்பகல் கழிந்த வன்றே.

ஆயதோ ரமையத் தன்னி லயோத்தியென் றலகம் போற்றும்
பாயசீர் நகரின் மேய பட்சிலை யிராம னென்பான்
மேயசீர் மிதிலை நோக்கி வியத்தகச் செல்வான் பாதத்
தோயமான் கல்லின் வண்ணந் தடர்த்தொழிக் கொழிந்த தம்மா.

நல்லுரு வொழித லோடுங் கனங்குழை யொழுந்த வல்லே
பல்லுரு கிருதச் சேனை யழித்திட வந்த சேர்ம
லல்லுருப் பாதம் போற்றி நயத்தகு கணவன் பாட்கி
னெல்லுரு விலிசெய் வெம்போர் விழுமமாங் கொழியச் சார்ந்தாள்.

பிரமலிங் கத்திற் பூசை பேறுபுண் ணியத்தின் பேர்றால்
விரவிய சாப நீங்கி மேவிய மனைவி யோடு

125



பரவியங் ககன்று தான்முன் பயின்றுவா ழிருக்கை மேவிச்
சரமொரா றொருபடப் போகந் துய்த்தனன் முனிவர் கோமான். 102

அங்கியோர் சடைப்பெருமான் கவுதமனுக் கிருஞ்சாபம் களித்த வாற்றாற்
சங்கருவி சரனெனும்பேர் தக்கதிரோ தாயுகத்திற் றாவி நின்றான்
மங்கைமான் மலமாதி கெட்டவர்க்கும் வான்வீடு வாஞ்சிப் போர்க்கும்
பொங்குமா ருள்சுரக்குஞ் சங்கரே சுரலது புகல்வே றுண்டோ. 103

பிரமேச ரெனும்பெயருஞ் சங்கரே சுரரென்னும் பெயரும் பூண்டார்
வரநாளு மினிதருள வாங்கரோ வதிசம்பு தீர்த்தந் தோய்வோர்க்
குரமாதி நற்குணமும் பல்பொருளு முயர்வீடு முறுமா சாதி
விரவாதங் காதலினா லைர்கொருகீர்த் தமுமினையாய் மேவா தன்றே. 104

கோடாத பெருந்தவத்துக் கவுதமனார் வழிபாட்டின் கொள்கை சொற்றும்
வாடாத பெருஞ்செல்வத் தனதன்வழி படுங்காண்ட வகுத்துஞ் சேண்மி
னீடாழிப் பெருநிலத்தி லெஞ்ஞான்று மாதவமே நிகழ்த்து வீரென்
றோடாத பெருங்கா தலுளத்தரும்பச் சூதமுனி யுரைக்க லுற்றான். 105



# குபேரன் வழிபடுபடலம்.

வெள்ளி மால்வரை மேவிய வித்தகர்க்
குள்ள வாறயர் பூசனைப் பேற்றினா
னள்ளு தோழ னெனும்பெயர் சாலொடுங்
கொள்ளு மேன்மைக் குபேரனென் பானரோ.

அளகை மாநக ராளுழி லயயிரு
களனி லாவிய காதகன் கண்ணுதல்
விளரில் பூசனை மேதகு பேற்றினால்
வளரி லாவிய வையகங் காக்குநாள்.

தன்கு டித்தம ராகிய தன்மையா
னன்கு முற்றிய நால்வகைச் சேனையுங்
கொன்கொ ழிப்பக் குறளி செகிஞ்சய
பின்கொ ளித்திரி யப்பெரி தாற்றினான்.

நிதியின் மன்னவ னிக்கு மன்னவன்
பதியின் மல்கிய பல்வள முக்கவர்
தெதிரின் மேன்மை வியைந்து பெருகவின்
பொதியும் புட்பக முகமொடு போயினான்.

இருப தின்றெழுந் தோளினி ராவணன்
செருவி லுய்க்கொளி செய்திக்கு பேரனை
கொருவு மோகைய மேறுக்கு கயிலையைப்
பொருவி லன்பொடு பொன்மெனு நண்ணினான்.

தின்ன மாதிபூ செய்தவ மாற்றினு
வன்ன வாரடித் தாமரை யன்பொடு
வன்ன மாமலர் தூவி வணங்கிரு
னன்ன லான்செய் தவிவினைக் கூறினான்.

தேவ தேவ திகம்பர தேவர்கள்
யாவ ருந்தொழு தேத்து மிறைவ
பாவ காரி பரித்தொழி செல்வமா
மேவு மாறு விளித்தரு ளென்றனன்.



தோழ னின்னணந் தொண்டுசெய் தேத்தலுங்
கேழி லாத கிளர்கதிர்த் திங்களம்
போழி னுன்புனை நீரக் கடைக்கணித்
தாழி னாலிஃதோ துவ தாயினன். 8

தேவ வருடம் பன்னிரண்டு செல்லப் பாசு பதவித
மேவி யரிய தவம்புரிந்து விலைழந்து நமது பூசனையுந்
தாவில் விதியான் மிகச்செய்தாய் தனத விணிநீ வெறுவற்க
பூவிற் பொதும்பர் வளர்ஞான பூமி யுளதங் கினிதெய்தி. 9

பந்த மகற்றுங் குளிர்தீர்த்தம் பலவும் படிந்து தவத்துயர்ந்த
நந்தி வணங்கு நந்தீச நவைதீர் வால கில்லீச
முந்து மளவில் சிவலிங்க முளைத்தங் குளவா லவையெல்லாங்
கந்த மலர்தூய் வழிபட்டுக் காத லொடும்மை குதிகண்டாய். 10

சின்னாள் கழியச் சிலைராமன் செருவி லரக்க னுயிர்குடிப்பப்
பின்னு னுனது பெருந்திருவும் பிறங்கா நின்ற புட்பகமு
முன்னு னெனவே நின்பாங்கர் முற்று மிதுமெய் யெனக்கயிலை
மன்னு நின்ற பெருமானுர் வகுத்து விடைநல் கினர்யாதோ. 11

விடைதந் தருளுந் தனித்தரும விடைமேக் குபர்த்த பெருமானை
மடைவின் டொழுகும் பேரன்பின் வணங்கிக் கயிலை வரைநீங்கி
நடைகொண் டவனித் தலத்திறங்கி வன்னுக் தலங்கள் பலபணிந்து
புடைகொண் டொழுகுங் காவிரியின் மருங்கு புகுந்தான் பொருட்கிறைவன். 12

அங்கு நகர மெதிர்நோக்கி யவனித் தலத்தி னுறநாழ்ந்து
பொங்கு புனற்கா விரியாதிப் புனர்நீர் தீர்த்தம் பற்பலவுந்
தங்கு விதியாற் றினிற்படிந்து தயங்கு மிலிங்கம் பற்பலவுங்
கொங்கு மலர்தூய்ப் பணிந்தமுத லிங்கர் திருமுன் குறுகினன். 13

மீளா வடிமைப் பெயரன்பின் விஞ்ஞு வலின்முக் கட்கனியைத்
தோளா மணியைச் சுவையமுதைத் தொழுது வணங்கி வலம்வந்து
நீளா தரவி னிருந்தொருசார் நிசியுந் துயிலா தெழுந்தைந்துங்
கோளா னுதிர் தரக்கணித்தான் குருவெங் கதிரோன் கடனுதித்தான். 14


அங்க னொருசார் தன்பெயர்கொண் டமைய விலிங்க மொன்றிருத்தித்
தங்கு மறையா கமவிதியாற் றண்டா விருப்பிற் பூசைபுரிந்
தெங்கு நிறைந்த பூரணனை யெல்லாப் பொருட்குங் காரணனைப்
பொங்கு பரமா னந்தமெனும் பொருளை நினைந்து தவம்புரிந்தான். 15

அற்றைத் தினம்போற் பலநாளங் களகைப் பெருமான் வழிபாடு
முற்றப் புரிந்து வருகாலை முகிலை னுருவச் சிலைராமன்

வெற்றிப் படையா லரக்கனுயிர் விளிப்ப விழுந்த புட்பகமு
மற்றைப் பொருளுங் கைக்கொண்டு வாழ்ந்தான் றனது பதிசார்ந்து.

மேனை ருடற்றும் பெரும்பகையும் பிறவிப் பகைமெய் யாணவமு
மானை வினையு மாயைகளும் வறுமை பிணியா திகள்பலவும்
வீனை யழிய கேட்டவரம் கேட்டாக் கருளு மெந்நான்றன்
கோனை வளருங் கொடைத்தருக்கு குபேர லிங்கம் வழிபடினே.

வடமா திரத்துத் தலைவன்றிக ழுபிரா டாற்றும் திறமொழிந்தாந்
திடமா மதில்க ளொருமூன்றுஞ் சிந்த மிறையே யடியாராய்த்
தடமா மதிலொன் றினிதிசைத்த தன்மை தெரிந்த வாறுரைப்பாந்
தொடமா தவத்தீர் கேண்மினெனச் சூத முனிவ னோதுமால்.





௨

# திருநீற்றுத் திருமதிற் படலம்.

செங்கட் சோழருந் தெம்முனை வேந்தரு, மங்கட் கூடி யருட்பணி செய்யுகாட்
டோங்கக் கோயிலிற் சூழ்மதி லியாவையும், பங்கிற் கோலிப் படைக்க முயன்றனர். 1

ஆங்கு நாத னருளினு லோர்மொழி, யீங்கு நீர்பணி யாவையுஞ் செய்மினோ
வோங்கி யாவையு முள்ளடக் கும்மதி, னீங்க வென்று நிவந்தது வானிடை. 2

ஓது வான்மொழி யொண்செவி யேறலு, நாத னூரு ளீதெனி னன்றென,
நீதி வேந்தரந் நீண்மதில் செய்திலா, ராதி யேயிழைப் பாயென் றகன்றனர். 3

திருமால் பிரமன் புரகூதன் றேவர் முனிவர் போற்றிசைப்ப
வொருமா வலின்கீழ் வீற்றிருக்கு முமையாள் கணவன் மதிசூடி
மருவார் கொன்றை மலரலங்கல் வயங்கும் தடந்தோ ளமுதேசன்
பெருவாழ் வுலகுக் கருளுவான் பிறங்கு மதில்செய் திடநினைந்தான். 4

பணியா திடினு மதுவேற்றுப் பயனைப் பெறயா லயன்முதலோர்
தணியா விழைவி னருட்கடைக்கண் டன்னை நோக்கி யெதிர்நிற்ப
வணியார் நகர மெவற்றினுஞ் மதிக வுரிமை தனக்காமிம்
மணியார் நகர்க்கு மதிறனை வகுப்பித் திடுமா மதித்திட்டான். 5

தாழ்ந்து பழிச்சு மடியார்க்குத் தனதின் னருளைத் தன்னேயே
வீழ்ந்து வழங்கும் பெருங்கருணை விமல னித்தப் பணியொருவர்
வாழ்ந்த மனத்திற் செயவிரப்பின் மறக்க மாட்டா மையைக்குறித்தே
போழ்ந்த மதியா திகள்கரந்து பொற்ப வேறு வாநினைந்தான். 6

அருளிற் கலந்த திருவேட மல்லாற் றனக்குப் பேருவகை
தருவ திலையென் பதுமதுவே பணிக்குத் தகுவ தென்பதுவு
மருளிற் கலந்தார் களுமறிய வார்செஞ் சடையுங் கற்கலையுந்
தெருள்கண் மணியு நீற்றணியுந் திகழு முருவத் தொடும்போந்தான். 7

தவத்தால் வருந்த திருப்பணியாற் சால வருந்த லவைகளே
யவத்தாம் வினைகண் முழுதகற்றி யருள்சேர் கதிக்கு வித்தாதல்
பவத்தாற் சுழல்வோர் களுமறிந்து பணியே புரிய வவர்தொழிலு
நவத்தா ரணியா திகட்கெற்று நம்பன் சாத்தாற் செயமதித்தான். 8

அவுரு வைகா லதுதன்ஞு லனைத்தும் புரியுந் தனதியல்பைப்
புவிமே லெவர்க்கு மறிவிக்கும் பொருட்டும் புவியோர்க் கலதுபணி
தவவா யாமை யறிவிக்கும் பொருட்டுந் தச்சர் முதலோரைத்
துவர்வார் சடிலப் பெருமானுர் தொழிலுங் குரிய ராக்கினுர்.

எல்லாம் வல்ல தனதியல்பு மீண்டும் கருமந் தமக்கியைய
வெல்லார் தமக்கும் பயனுதவு மியல்பும் விபூதி யெனும்பெயரைப்
புல்லா நின்ற திருநீற்றின் பெருவியும் விளங்கக் கூலிக்கு
நல்லா தரவி னீறளிப்ப நயத்தார் நாகற் பெருமானுர்.

தெளிக்குந் திருநீ றேகத்தந் செய்கைக் கேற்பச் செழும்பொன்னுய்க்
களிக்கும் வகைசெய் தறன்கடைகள் கதவா தொழிக்கும் பெருஞ்சிறப்பால்
வெளிக்க ணுருசித் தரைப்போல விளையாட் டயரு மழுதேசர்
கொளிக்கும் வகையின் குயிலருமறுதி யோடு பணிபுரிவார்.

சிலைபெ றப்பல துளைதுளைத் தாணிக ளறவித்
கொலைமு கத்தவு செனப்படை குடங்கையி னேச்சி
மலையி னத்தவன் பூணியிற் கொணர்குந ரொருபாற்
சிலையி னத்தரிந் திணங்குறச் சேர்க்குந ரொருபால்.

பொருப்புக் கொப்புறப் புதுமணல் குவிக்குந ரொருபா
னெருப்புக் கொப்புற முலைத்திர ளீற்றின ரொருபா
லிருப்புக் கட்டிக ளெரியின்வைத் தடிக்குந ரொருபாற்
கருப்புக் கட்டிக ணிறைகளிற் கரைக்குந ரொருபால்.

ஏறு மிட்டிகை வேறுவே றியற்றின ரொருபாற்
கூறு மிட்டிகை குழைதழற் படுக்குந ரொருபா
லூறு கொட்டிழுண் மணல்விராய் நுணுக்குந ரொருபால்
வேறு பட்டவல் வினைகளு மொறுக்குந ரொருபால்.

இன்ன வாறுபல் வினைகளு மீண்டின சிலைப்பக்
கன்னி மாமதில் களர்தொறுங் கண்டுறத் பார்த்து
மன்னர் வேட்டமோ டெடுத்தவெண் ணுலவி னிழலா
ரன்ன மாமதில் வரிசையே லடிமிதித் திவர்ந்து.

முற்று மோர்முறை சூழ்தரும் மலப்பகை கடந்து
பற்றி லாருயிர்ப் போதர்தன் பாதரா மரைக்கீ
ழுற்று வேற்றுத் தோன்றுரு தொடரித்தென நிலத்தி
னற்ற மேதமி லாவகை யகட்டினர் மாதோ.

மண்ணிடை வரிசை யெல்லாம் வைகலு மழத்திப் பின்னர்
விண்ணிடை நிவந்து தோன்ற வியன்மதி லிழைத்துத் தம்பா



னண்ணிய வரிட்ட நீக்கி நலத்தரு மிட்ட மெய்த
வண்ணினர் தம்மை நோக்கி யருளிறு லருளிச் செய்வார். 17

சித்தெல்லா முடைய நம்மாற் றிகழ்தரு பொருள்க ளெல்லாம்
வைத்தநா னிலத்தி ரிந்தப் பாந்தமா மதிலி னுக
வைத்தன மாத லாலே வரங்களை வேட்டோ ரெல்லாம்
மெத்திய வன்பா லிந்த வியன்மதில் சூழ்க் வென்றுர். 18

அன்றுதொட் டவனி யுள்ளோ ரருமகப் பேறு வேட்டும்
வென்றியை விழைந்து மாறு வெறுக்கையை விழைந்து மின்ப
நன்றியை விழைந்துஞ் சால நாட்டினை விழைந்து மிங்கா
ரொன்றிய மதில்சூழ் போந்திட் டுலப்பிலா வரங்கொள் கின்றுர். 19

மதிலினைச் சூழ்வா ரென்று மனையகந் தன்னை நீங்கிற்
பொதிதரு பாவ மாதிப் புல்வினை யவனை நீங்கு
மெதிர்கொளின் வரங்க ளெல்லா மெதிர்கொளுங் கதவின் ஞானங்
கதவுறுஞ் சூழிற் சூழுங் கரிசறு முத்தி தானும். 20

வலம்புரி கின்றோர் மெல்ல வைக்குமோ ரடிக்குக் கோடி
நலம்புரி பரிமே தக்க ணவையறப் புரிந்த பேறுஞ்
சிலம்புறழ் மதிலை யந்தோ சிறிதவ மதித்தா ரேனுங்
குலம்புரி சுற்றத் தோடுங் கொடுநர குழப்ப ரென்றும். 21

தடநெடு மதிலை யோர்காற் றம்மியல் பானே சூழின்
மடவர்க ளேனும் பாவ வல்வினை முழுதுந் தீர்ந்து
கடவுள ராவ ரென்னிற் கரிசறு முனிவ ரந்த
விடவிய மதிலின் மேன்மை யாவரே யியம்பு நீரார். 22

தண்ணிய தாகி யெல்லார் தமக்குமின் புதவித் தானு
நண்ணிய வுணவ தாகு நறும்புன லுருவா நின்ற
வண்ணலே யானுந் தாழா தவமதித் தவரை முன்னர்ப்
பண்ணிய முறையுங் கேண்மி னெனப்பகர் கின்றுன் சூதன். 23



௯.

# அமுதலிங்கேசருண்முறைசெய்தபடலம்

குவலயத்துச் சிவம்பெருக்குங் கோச்செங்க ணுரிறைத்த
தவலில்பெருஞ் சிவத்துவிசர் சகலகலை வல்லவரா
யுவமையிலா கமக்கடலி னுளமுழுதுந் தோய்ந்தவராய்க்
கவளமத கரியுரியார் கழலருச்சித் துறநாளில். 1

மன்னவரும் பணிகேட்ப மறைபுலத்தி னுள்ளவரு
மென்னவினை புரிந்திடினு மின்றியமை யாதுதமை
நன்னயத்தி னுடன்படுக்கு நலத்தகைமை யுடைமையினு
லன்னசிவத் துவிசரெலா மகமதித்துத் தருக்கினரால்.

ஒப்பற்ற ஞானதலத் தொழியாத வாழ்க்கையினு
மப்புற்ற திருமேனி யமுதலிங்கர் பூசையினுஞ்
செப்புற்ற பெருமையெலாந் திகழ்ந்தனவென் றறியாமே
தப்புற்ற வசமதிப்பாற் றவறுகளே புரிந்திட்டார்.

கணிகையர்த நலநுகர்ந்துங் கன்னுதலார் பொருள்கவர்ந்தும்
பணிபுரிதல் பாணித்தும் பயிலொழுக்க நனிவிடுத்து
மணிதுளக்க வியமியம்பல் வருத்தலிவை யல்லாது
பிணிதுளங்க வுபசாரம் பேணுது பிழைத்திட்டார்.

உள்ளந்தஞ் சிபகாவே யுடையவரா யிவர்நடப்பக்
கள்ளந்தங் குறினவர்க்குக் கள்ளந்தங் குதற்குரிய
வெள்ளந்தங் கியமுடியார் விளங்குதிரு வுளக்கறுத்துப்
பள்ளந்தங் கியநதியிற் படுத்துமென வினைந்திருந்தார்.

பிழைதீர்க்கும் பிச்சாட னாயகர்க்குந் றெப்பெய்தத்
தழைநாவ லுடையார்க்குந் தனியவொரு வினைவைத்து
விழைவோடு மனைவோரும் வெளிக்கொண்டு கொள்ளிடத்துக்
கழையாடாப் பெருநீத்தங் கட்பதற்குக் கலந்திவர்ந்தார்.

முருகுவிரி வெண்ணாவன் மொய்நிழலின் வீற்றிருந்தார்
திருவருளா லொருநுறை சென்றலைப்பக் கலக்கவிழ்ந்து
பெருகுபுன லிடைமடவார் பின்னையுட னனைவோரும்
பருவாறுற் றுயிர்மடிந்தார் பார்முழுதும் பனிப்பெய்த.



அருளினுக் குவமை யில்லா வமுதலிங் கேசர் தாமே
திருவுளங் கறுத்துச் சார்ந்த சிவத்துவி சரையுங் கொன்று
ரொருவர்கண் மாட்டுங் குற்ற முணுற்றுறு திருத்த னன்றென்
றிருசிலத் தவர்க ளெல்லா மெண்ணின ருறுதி கொண்டார். 8

வெறுப்பறு தாயின் மிக்க வெறுப்பறு தாயே யுான
வெறுத்தமென் சாயை நாவல் விரிநிழ லிறைவர் தம்மால்
வெறுப்பன செய்தா ரெல்லாம் விளிந்தன ரென்று லந்தோ
வெறுப்பன யாவர் மாட்டும் விளைத்திடா திருத்த லேயாம். 9

இரும்புன னதியிற் செல்லா தெஞ்சிய சிறுவன் றன்னைப்
பெரும்பெயர்ப் பொருளா யுள்ளார் பேரருட் கிலக்க மாக்கி
யரும்பொருட் கலைகள் வேதா கமங்களு மருளி மேன்மை
தரும்பணி விடையின் வைத்தார் சகமெலா மிறும்பூ தெய்த. 10

வெற்றிவேற் குமரப் புத்தேள் வெள்ளிமால் வரையி னின்றும்
பற்றிகல் கடந்தார் பூசை பயிற்றுதற் குரியா ரென்று
செற்றிய வளத்தின் மிக்க திருப்பிட வூரின் மேஞட்
குற்றமின் மறையோர் தம்மைக் கொணர்ந்துதா பித்திட் டாரால். 11

அத்தகு மறையோர் தம்முள் ளறிவினிற் பெரிய ராகிப்
பத்தியின் வழுவாச் சிந்தை பரித்தவர் சிலரைக் கூவி
யுத்தம பூசை யாதி யுஞற்றுதற் குரிய ராக
வைத்தன ரொருவெண் ணாவன் மணிநிழ லமர்ந்த வள்ளல். 12

தொல்வினைத் தொடரா மேன்மைத் தூயவே தியர்க டாமுங்
கொல்வினைக் குரிய சூலங் குடங்கையிற் கொண்ட செம்ம
னல்வினைக் கருளு மாறு நல்லன வல்ல வான
புல்வினைக் கொறுக்கு மாறும் புந்தியிற் றேர்ந்து தேர்ந்து. 13

அச்சமு மன்புந் தாங்கி யண்ணலார் மகிழ்ச்சி கூர்ப்ப
வெச்சமில் லாத சைவம் வைதிக மிரண்டி னுறு
நிச்சலும் பூசை யாதி நின்மலப் பணிக ளெல்லா
முச்சகம் வியக்கும் வண்ண முற்றுறப் புரியா நின்றார். 12

உமையொரு பாகர் பூசை யுஞற்றுமந் தணரை யந்த
வமுதலிங் கேச ரென்றே யகமதித் திறைஞ்சி னேரு
மிமையவ ராதி யோரா லிறைஞ்சிடப் படுவ ரென்றற்
றமதருட் பெருமை யாரே சாற்றுதல் வல்லு நீரார். 15

பரிந்துபின் னிரக்கஞ் செய்த பரமனார் சரிதந் தன்னைத்
தெரிந்தவர் தெரித்தோ ரெல்லாந் தீவினை முழுது நீங்கி

விரிந்தபல் கதிக டம்முள் வேட்டநற் கதியுண் மேவிப்
புரிந்தபே ரின்ப வெள்ளப் புணரியுட் டிளைத்து வாழ்வார்.

பொய்வினை யறுக்கு ஞான பூமியில் வசிக்கும் பேறும்
கொய்யலர் மலருந் தீர்த்த மொன்பதுங் குடையும் பேறுஞ்
செய்யரு ளமுத லிங்கர் தெரிசனப் பேறு மெய்தும்
பையலிப் புராணந் தன்னைப் படித்தவர் கேட்டோர்க் கெல்லாம்.

விழுமிய வமுத லிங்கர் வியத்தகு சரிதந் தன்னை
யெழுதினோ ரெழுது வித்தோ ரெழுதியீந் தவர்க ளெல்லாம்
வழுவறு மெழுத்தொவ் வொன்றுக் கோரோரொரு கற்ப மான்ற
செழுவிய சிவலோ கத்திற் சென்றுவாழ்ந் திருப்ப ரன்றே.

என்றுயர் ருத மேலோ னிலகிய ஞான பூமித்
தொன்றிய சரித மெல்லா முரைத்தன னுரைத்த லோடு
நன்றியின் மலர்ந்த சிந்தை நைமிச முனிவ ரெல்லாம்
வென்றிகொள் பரமா னந்த வெள்ளத்துட் டிளைத்து வாழ்ந்தார்.

அருள்வளர் சம்பு மூலத் தமுதலிங் கேசர் வாழ்க
வருமகி லாண்ட வல்லி வாழ்கவே தாக மத்தின்
பொருணிலை வழாது வாழ்க புகழ்திரு வானைக் காவாக்
கிருசர் வாழ்க வாழ்க தேயங்க ளனைத்து மாதோ.

120

உ

# செய்யுள் அகராதி.


அ.
அகத்தியதீர்த்தப்பாங்கர் 62
அகன்மாநிலத்தை 120
அகிலகாரணர் 125
அகிலமுமுயிர்த்ததாயே 78
அகிலமுமுயிர்த்தநின்னல் 86
அகிலலோகமும் 117
அகோரமனுவால் 114
அக்கினிதீர்த்தப்பாங்கர் 62
அங்கணகன்று 111
அங்கணொருசார் 181
அங்கண்வாழ்தரு 28
அங்கதன்றன்னை 104
அங்கிகரத்து 137
அங்கிசம்பந்தமாகி 63
அங்கிநேர்சடை 179
அங்கிமேற்றிசை 156
அங்கியினுத்தரத்தில் 151
அங்குசகரமெதிர்நோக்கி 181
அங்குரம்புரி 141
அங்குவிளங்கும் 67
அசித்துமுப்புரம் 127
அச்சமுமன்புர் 187
அச்சுதத்தோடு 148
அஞ்ஞானவிருளோட 50
அஞ்சலெனு 107
அஞ்சனமெழுதி 25
அடங்கிநோற்ற 72
அடரும்வல்வினை 107
அடிமையானவர் 3
அடியவர்செய்திடும் 73
அடியவர்தமக்கெய்தாத 164
அடியவர்வேட்டமோடு 162
அடியனேமக்கட்பேறு 136
அடியனேனுய்ந்தனன் 91
அடியனேன்சிவ 60
அடியானும்விழியானும் 123
அடியேன்மதியா 74
அடுத்துநோக்கிய 71
அணர்ந்தபூண் 18
அணியிலராயினும் 41
அண்டர்கற்பக 66
அண்டர்போற்றிட 72
அண்டமீரடி 70
அண்ணலாருளி 178
அதிவளம்பெற 61
அதுமாத்திரமன்று 74
அத்தகுமறையோர் 187
அத்திரசந்தி 149
அத்திரமனுவை 149
அந்தணர்தமக்கு 148
அந்தப்பதினேழ் 98
அந்தவாவிக்கெதிரே 57
அந்திவண்ணர்தம் 173
அந்நாண்மாலைமுதலாக 98
அந்நாண்மாலையெழ 99
அப்புத்தலமது 46
அமரர்நாயகன் 8
அமுதநாயகர் 134
அமுதமென்றதண் 65
அமுதேசமெனப்படும் 90
அமையாக்காதல் 176

அம்பிகைபவானி 116
அயிர்வரித்தரால் 122
அயிலுறுகுற்படை 163
அயில்கொள்குலி 35
அயின்முற்றிய 42
அரசர்முதல் 140
அரசகூவினம் 59
அரதனத்தசம்பை 79
அரிக்குரற்கிண்கிணி 103
அரிதவனைகன்று 162
அரியயாதவம் 7
அரிவையைக்கோடற்கு 155
அருக்கல்ம்புத்திரன் 158
அருட்லைக்கொண்டுசென்று 162
அருட்லைக்கொண்டுவில்லே 76
அருந்தவக்குறமுனி 84
அருந்தவப்பேறு 38
அருந்தவமன்னவன் 71
அருந்தவசிட்டன் 110
அருந்துதிக்கற்பின் 110
அருமைமகவின் 145
அருவாயுருவாய் 44
அருவிபற்பல 6
அருளிபவருட்லை 75
அருளிற்கலந்த 183
அருளிற்பெரிய 175
அருளினுக்குவமை 187
அருளெல்லாம் 96
அருளேதமிலா 87
அருள்சிவத்தின் 169
அருள்வளர்சிவபோ 153
அருள்வளர்சம்பு 188
அருள்வளர்காவல் 68
அலர்முலை 17
அல்லதாவமிருள் 94
அல்வரைச்தமலர் 88
அவத்தினுண்றவர் 30
அவரவர்மகிழ்ச்சியின் 91
அவற்றனுபவிதம் 150
அவாறலவளால் 184
அவியிருங்கொடை 36
அழிக்கப்பட்டபின் 7
அழுங்கையெயிருமல் 142
அளவிடுதுறு 127
அளகையாககராருழி 180
அளகையாகர் 28
அளவில்சித்ரமணி 41
அளிக்கத்தக்கன 171
அளிசெய்தின்னலே 169
அளியிளிக்க 13
அள்ளிலேவேல் 73
அறக்களாருக 159
அறமுதனான்கும் 68
அறல்படிந்தகத்தை 142
அறிஞர்தம்மை 120
அறிவுவளரும் 53
அறுசுவைகொழிக்கும் 87
அறுசுவைசால்வளை 47
அறுவகைமதத்திரேர்க்கு 34
அறையுமத்தகு 57
அறையுருவின் 126
அறைவியாதிருதி 156
அற்புதமெய்தி 69
அற்குரர்க்கலது 133
அற்றாற்றும் 56
அற்றைத்திருநாள் 100
அற்றைத்தினம்போற் 181
அற்றைநாள்காறு 178
அற்றைநாளிரவில் 143
அற்றைநாளென்பெயர் 91
அனகர்வதியும் 66
அனகன்கயிலே 83
அனையகாலையில் 124
அனையதீர்த்த 53
அனையதுகேட்டலோடும் 38
அனையபெருந்தவ 166
அனையவாகிய 66
அன்பரன்பினுக்கு 126


131




அன்பினைந்தினை 170
அன்றதொட்டவன் 58
அன்றதொட்டவளியுள்ளோ 185
அன்னசெய்வினைகள் 149
அன்னதானம் 90
அன்னதீர்த்தத்தகன்கரை 55
அன்னதமின்றுகாறும் 42
அன்னவன்வழிபாட்டுக்கு 56
அன்னவாறுநீர் 126

ஆ.

ஆகையான்மல 92
ஆக்கையின்வலியில்லார் 57
ஆங்கணில்லாதென்று 30
ஆங்கவரிருந்து 45
ஆங்கவற்கதனை 163
ஆங்கவற்கிரங்கி 71
ஆங்குநாதனருளினு 183
ஆங்குமந்திரங்கள் 64
ஆங்குவைகிய 55
ஆங்குளதீர்த்தம் 176
ஆங்குறுங்காலம் 75
ஆசைநீட்சியின் 23
ஆடலினரவம் 26
ஆடவர்குழாங்கள் 121
ஆடுமாமயில் 7
ஆணவமகன்ற 1
ஆணிப்பொன் 77
ஆண்டுதோறும் 118
ஆண்மகவினுக்கு 146
ஆண்மையின்மிக்க 104
ஆதலாலடியேனது 125
ஆதலினுங்கு 163
ஆதலினீங்குரு 103
ஆதலற்கும் 170
ஆதனமூர்த்தி 87
ஆதிப்பிரமன் 100
ஆதிப்பெருஞ்செல்வ 113
ஆம்பலுந்தாமரை 10
ஆயகாலே 57
ஆயதண்பனி 122
ஆயதோரமையர் 178
ஆயதோர்செல்வி 43
ஆயதோர்தவறு 54
ஆயவேலையின்மலமென 95
ஆயவேலையின்முன்னரே 126
ஆயிடையிருந்தவர்றே 165
ஆயிடைவதிவதே 118
ஆயிரங்கண் 129
ஆயிரத்தெட்டே 142
ஆயிரத்தெட்டொரு 148
ஆரணங்கடந்த 80
ஆரந்தேக்கதில் 127
ஆரந்தொடையான் 114
ஆருயிர்த்தொகை 72
ஆலவென் 131
ஆழ்ந்தபெருநூல் 16
ஆளும்விண்ணழுகு 31
ஆறுடியவேணி 113
ஆறுந்திருநாள் 98
ஆற்றரிய 74
ஆற்றுந்தருமம் 43
ஆனவேனிலின் 122
ஆனேறுயர்த்த 111

இ.

இசைமொழியாதி 121
இச்சைஞானமும் 95
இடியெனப்பிளிறும் 132
இட்டகாமியம் 140
இதமெனப்படு 93
இத்தகுஞான 78
இத்தகுவளம் 34
இத்தகையதீர்த்தத்தள் 52
இத்தகையவிளையாட்டின் 161
இந்தமாதகர் 31
இந்தமாயையும் 94
இந்தவடியேன் 106
இந்திரகோபம் 79
இந்திரதீர்த்தப்பாக்கர் 61

| | | | |
|---|---|---|---|
| இந்திரனகர் | 84 | இருமதிநான்கு | 144 |
| இந்திரனிறைஞ்ச | 5 | இருமதியில் | 158 |
| இந்திரனேகமை | 167 | இருமுதகுரவர் | 2 |
| இந்திரன்பதம் | 40 | இரும்புனைதியிற் | 187 |
| இந்திரன்விடணம் | 168 | இருளுந்தானவர் | 169 |
| இமையமால்வரை | 57 | இருளுமாமலம் | 93 |
| இமையார்கள் | 89 | இருளொறுப்பகை | 175 |
| இம்மையிலேறர் | 16 | இறைநாக்நிதி | 127 |
| இயக்குநாயகன் | 28 | இலகொருமருப்பன் | 156 |
| இயம்பியவாமத்து | 157 | இலகொளிமணி | 79 |
| இயற்கைமெய்யெழில் | 32 | இலக்கைமாசர் | 116 |
| இரக்குமாந்தர் | 28 | இலஞ்சிபொய்கை | 122 |
| இரண்கோடி | 36 | இலம்பகமிலைத்த | 20 |
| இரதமொடெழில்வேழம் | 27 | இல்லவன்குல் | 143 |
| இரந்தபல்வரங்களும் | 90 | இவ்வகைப்பணிகண்முற்ற | 85 |
| இரந்தவர்வரியர் | 42 | இவ்வகைப்பணிகளெல்லாம் | 165 |
| இரவிமரு | 160 | இக்கனையிரவி | 174 |
| இரவினூர்தயிலற | 132 | இவ்வாறுதி | 100 |
| இரவையகற்றி | 175 | இவ்வாறுயர் | 53 |
| இராக்குறி | 174 | இவ்வாறமைஞ்செறித்த | 135 |
| இராசதவன் | 106 | இவ்வாறெவரும் | 42 |
| இராதந்திர | 176 | இவ்வுலகே | 160 |
| இராமதீர்த்தத்தின் | 62 | இழிந்தயோனி | 133 |
| இராமசீயெல்லை | 107 | இழுமென்றோதை | 6 |
| இராவணனை | 56 | இளங்குழவி | 2 |
| இருங்கண்ணிற்சிறந்த | 88 | இளமரக்காவிருங் | 15 |
| இருசடரெதிராத | 79 | இளமைபெரும் | 72 |
| இருடிகேசன் | 141 | இளமையுஞ்செல்வமும் | 48 |
| இருட்பிழம்பெடுத்து | 34 | இறைவனொத்த | 15 |
| இருண்டகேவலத்து | 170 | இறைவன் யாவரும் | 24 |
| இருண்மலவலியை | 37 | இனமலர்சிந்தும் | 177 |
| இருதிங்கள் | 136 | இனிப்தாய் | 62 |
| இருதசங்கமம் | 142 | இனிவெற்றிய | 128 |
| இருதயின்சங்கமம் | 143 | இனையபுன்மாலை | 172 |
| இருநிதியினிடை | 20 | இனையவெள்ளியம்கிரி | 40 |
| இருந்தருந்தவர்கள் | 78 | இனையனைய்ப்ல் | 94 |
| இருப்பிற்றெறழ்த்தோளினி | 180 | இன்பமாகிமை | 55 |
| இருப்புலக்கை | 135 | இன்றசிறுவ | 111 |
| இருப்பையிருண்மலர் | 18 | இன்னனைஞ்சாலி | 15 |





| | | | |
|---|---|---|---|
| இன்னணஞ்சிலபகல் | 71 | உயிர்நீத்த | 73 |
| இன்னணமாடிய | 124 | உரிமையிற்சிலம்பி | 20 |
| இன்னணமிறைவனோர் | 84 | உருக்கியபசும்பொன் | 30 |
| இன்னதாகிய | 37 | உருக்கிளர்புரமூன்று | 75 |
| இன்னபல்வளங்கள் | 79 | உருக்கும்வெய்யவர் | 170 |
| இன்னஃகெட | 89 | உருத்திரப்பெயராண் | 115 |
| இன்னவாறபல் | 184 | உருத்திரப்பெயர் | 39 |
| இன்னவாறிபம் | 128 | உருத்திரமந்திரத்தினல் | 147 |
| இன்னவாறியம்பு | 53 | உருப்பவிர்பருவத்து | 81 |
| இன்னவாறிருங்கிரியை | 157 | உருப்பவிர்வேனிலின் | 9 |
| இன்னவாறுரைக்கும் | 156 | உருவத்தாற்கருமம் | 93 |
| இன்னவான | 19 | உருவுநாற்கோயிலை | 132 |
| ஈ. | | உருவவார்சிவிறி | 31 |
| ஈங்கிதுவும் | 159 | உருவெளித்தோற்ற | 172 |
| ஈங்குரைத்த | 143 | உரைசெய்மாமறை | 70 |
| ஈங்குவாழ்தலே | 117 | உரைத்தபெரும் | 130 |
| ஈசனுடைய | 104 | உரைத்தலேவேதம் | 153 |
| ஈண்டுதேவர் | 31 | உரோகிணிதானம் | 155 |
| ஈந்தனேனென்னு | 113 | உலகமளித்தல் | 2 |
| ஈரிருமதியின் | 144 | உலகமாட்டுவைகிய | 65 |
| ஈன்றருள்புதல்வி | 52 | உலகமியாவையும் | 92 |
| உ. | | உலகம்யாவையும் | 39 |
| உக்கிரமாய் | 105 | உலகேழுமொருங்க | 87 |
| உடக்குநின்றதன் | 102 | உலப்பறுதீர்த்தம் | 37 |
| உடக்குமாதொடு | 125 | உழுதியாவரும் | 27 |
| உடக்குறுசேனை | 77 | உழுவலன்பின் | 114 |
| உடைந்தசார் | 116 | உளதுகொலிலதுகொல் | 27 |
| உடையநாயகன் | 7 | உளத்திற்றேக்கிய | 3 |
| உடையினுமணியினும் | 25 | உள்ளகக்கமலத்து | 105 |
| உண்டதுமூட்டலும் | 47 | உள்ளந்தங்கி | 186 |
| உதரவீசி | 35 | உள்ளம்யாவையும் | 28 |
| உத்தமகுணத்தோர் | 65 | உள்ளவாறுரையென | 168 |
| உத்தமஞ்சத்தமி | 149 | உறநாள்கோளே | 66 |
| உத்தமவசிட்டனும் | 109 | உறநாலின் | 130 |
| உத்தராயணத்தில் | 154 | உறபவத்தினுக்கு | 148 |
| உர்தொளி | 5 | உறப்பினுற்றம்மை | 11 |
| உமையொருபாகர் | 187 | உறம்பொறை | 9 |
| உயிரினுக்குலவா | 86 | உறைந்தசோழநாடே | 159 |
| உயிரொன்றிரண்டு | 52 | உற்றதோர்வினை | 161 |

| | | | |
|---|---|---|---|
| ஊ | | எழுங்கனம் | 104 |
| ஊடியமகளிரை | 174 | எற்றமிலானராகி | 38 |
| ஊதவுகு | 130 | எனத்துதிசெய்ம்பி | 178 |
| ஊழிபிதமோ | 66 | எனமாதவத்து | 114 |
| எ | | என்றிராமன் | 107 |
| எக்கறும் | 6 | என்றுகூறதுயமிழ்த்து | 92 |
| எக்கண்மிட்றிசை | 17 | என்றகூறாவிருடியர் | 176 |
| எக்குகிறைந்த | 2 | என்றதோத்திரம் | 133 |
| எஞ்ஞானமில்லாமல் | 160 | என்றநாயகன் | 126 |
| எடுத்தசாங்கரத்து | 27 | என்றுபல்வரங்களும் | 91 |
| எடுத்தமேனிலத்து | 31 | என்றுபணியால் | 64 |
| எட்டுறுப்பினும் | 125 | என்றுமறைகள் | 44 |
| எண்ணிரண்டாண்டே | 177 | என்றுமிக்குரைத்த | 165 |
| எண்ணிலுயிர்க்கும் | 104 | என்றுயர்சுருத | 188 |
| எண்ணில்பாவமும் | 61 | என்றுயர்மூர்த்தி | 68 |
| எண்ணிறந்த | 1 | என்றவரு | 135 |
| எண்ணிறந்தன | 93 | ஏ | |
| எதிரெதிரொருவர் | 124 | ஏகநாயகமேனி | 132 |
| எத்தவுயிர் | 130 | ஏகநாயகனருள் | 126 |
| எம்பிரான்றிரு | 39 | ஏத்தவூறந்தீக்கை | 139 |
| எம்பெருமான்றிருவடி | 107 | ஏத்தியசிமத்திரத்த | 87 |
| எய்தியகுதன் | 37 | ஏத்துபாயனம் | 148 |
| எரிக்குங்கண்ணன் | 172 | ஏந்திணைக்கொள்கை | 121 |
| எரியழல்வடபால் | 157 | ஏந்திசழ்க்கமல | 110 |
| எல்லாம்வல்ல | 184 | ஏர்த்தவத்தடம் | 55 |
| எல்லுருக்கரத்தலும் | 172 | ஏழுகோடிமா | 140 |
| எவ்வழிமும்பன்றபூசை | 34 | ஏறுமிட்டிகை | 184 |
| எவ்வளறும் | 9 | என்றத்துடல் | 95 |
| எவ்வாயுந்திருமுடிகள் | 107 | ஏனைவைப்பினட | 117 |
| எவ்வுயிர்க்கும் | 88 | ஐ | |
| எழிலமுதீச்சரம் | 91 | ஐம்புலனீர்க்கப்பட்ட | 112 |
| எழில்வளரும் | 56 | ஐயிருகன்மதி | 159 |
| எழுகோமுகமலை | 46 | ஐயிருமதியும் | 110 |
| எழுதருமறையும் | 83 | ஐயைந்தெசை | 99 |
| எழுந்தவெண்ணுவல் | 71 | ஒ | |
| எழுந்தகுழ்ந்து | 123 | ஒக்கவுமந்திரம் | 152 |
| எழுந்துபரந்து | 64 | ஒண்டொடியாய் | 51 |
| எழுந்தமாமதி | 170 | ஒப்பறுமுத்தங்கள் | 80 |
| எதிர்தவண்டேர் | 21 | ஒப்பற்றனரான்தன | 186 |


133




| | | | |
|---|---|---|---|
| ஒப்பாருயர்வானை | 74 | கடலுவர்பருகும் | 77 |
| ஒப்பிலேனுடு | 3 | கடவுளர்சூழ்ந்தனர் | 168 |
| ஒருதங்கை | 129 | கடவுளானுதவும் | 85 |
| ஒருகணந்தாழ்க்கின் | 113 | கடவுளீரறிவன் | 109 |
| ஒருகொம்பானையுமீ | 40 | கடவுள்வெண் | 112 |
| ஒருசிறையிருந்து | 63 | கடிகமழும் | 129 |
| ஒருஞான்றும் | 22 | கடித்துமென்று | 172 |
| ஒருத்தலாக்கை | 133 | கடிமலர்க்கொம்பர் | 82 |
| ஒருநிலத்தன | 17 | கடுத்தெதிர்விளவி | 165 |
| ஒருபன்னிரண்டாம் | 98 | கணங்கள்காதலில் | 40 |
| ஒருவயிற்றுதித்தோர் | 154 | கணவர்வைகிய | 171 |
| ஒருவர்பாற்பிறந்தார் | 177 | கணிகையர்காதலின் | 48 |
| ஒருவரொருவரை | 165 | கணிகையர்தலநுகர்ந்து | 186 |
| ஒழுகுஞ்சுடர்வாள் | 22 | கண்டகண்கள் | 107 |
| ஒழுக்கமறிவு | 52 | கண்டமொன்பதிற்றினும் | 84 |
| ஒளிக்கொளியாய் | 105 | கண்டவருயிரை | 25 |
| ஒளிதிதொருமருங்கு | 132 | கண்டவனெழுந்து | 176 |
| ஒளிசைகயுற | 142 | கண்டனரிறைவனுரை | 133 |
| ஒளிமிகுந்தவன் | 170 | கண்டனனெழுந்தனன் | 113 |
| ஒள்ளிதாகிய | 141 | கண்டுபணிந்த | 176 |
| ஒள்ளிதாங்குழை | 13 | கண்ணளியடுத்து | 79 |
| ஒற்றைவெண்மருப்பு | 60 | கண்ணிலமெனும் | 158 |
| ஒன்பானிரட்டி | 98 | கண்ணுதலமர்ந்த | 115 |
| ஒன்பான்றிருநாள் | 98 | கண்ணெனுங்கயல் | 124 |
| ஓ | | கதழ்ந்துபுகு | 131 |
| ஓங்குமுபாயன | 161 | கந்தமலிபொழில் | 48 |
| ஓதியுணர்ந்தனர் | 48 | கந்தமாறுறு | 106 |
| ஓதுவான்மொழி | 183* | கந்தமூலம் | 72 |
| ஓவியவுருவமெல்லாம் | 25 | கமலமெல்லணையினுன் | 91 |
| க. | | கயல்கண்ணேடும் | 12 |
| கங்குனிசர்த்த | 64 | கயல்விருப்பின் | 51 |
| கங்கைகொழிப்ப | 43 | கயிலைநெடுவரை | 165 |
| கங்கைநதியும் | 105 | கரண்டமேவிய | 171 |
| கங்கைநதிபொரு | 20 | கரிசொழிய | 144 |
| கங்கையணிந்தது | 130 | கரியகுஞ்சினும் | 173 |
| கங்கையீரைந்தும் | 78* | கரியவாணவம் | 95 |
| கங்கைவான்மதி | 115 | கருங்கயற்கண் | 32 |
| கஞ்சகமணிந்த | 77 | கருணைக்கடலாகிய | 21 |
| கடகரிமருப்பு | 81 | கருணைப்பெருமான் | 114 |

| | | | |
|---|---|---|---|
| கருணைநாயகன் | 40 | கற்பகத்திழையும் | 85 |
| கருதலர்போரிறுல் | 167 | கற்பகத்துக்கவினிழை | 36 |
| கருந்துணர்க்கடுக்கை | 79 | கற்பிலர்பொய்யினர் | 25 |
| கருப்பரியைந்தமை | 143 | கற்புமேம்படு | 9 |
| கருப்புவில்லோடு | 78 | கற்றகல்வியும் | 173 |
| கருப்புவிற்குழைக்கும் | 81 | கற்றைவெண்கதிர் | 39 |
| கருமத்தாலறுசுவை | 106 | கனவினைநனவென | 118 |
| கருமமென்பது | 93 | கனிவொடுங்கோயிலை | 103 |
| கருமமேவிரும்பி | 14 | கா. | |
| கருமவகையை | 176 | காசிகேதாரம் | 165 |
| கருவாய்ந்து | 158 | காசினிமிலகிய | 91 |
| கருவிடத்துநீறிடுதல் | 158 | காட்டலாற்கமலப்பகை | 12 |
| கருவிநாளும் | 37 | காதன்மொட்டரும்பி | 168 |
| கருவிற்கொருமூன்று | 117 | காத்துப்பன்மணி | 122 |
| கரையறுகருணை | 14 | காப்பணிந்ததற்பின் | 154 |
| கலங்கிப்புலவோர் | 88 | காமருகற்பகநாட்டின் | 48 |
| கலதிபுரி | 129 | காமருதாறக்க | 121 |
| கலவிதுய்த்து | 168 | காமருபிரம | 54 |
| கலிங்கமோரிரண்டு | 154 | காமர்சதி | 45 |
| கலைச்செழுங்கரத்தவர் | 163 | காமவேளெரித்த | 82 |
| கலைத்தொழிற்சுவை | 25 | காமவேளெனும் | 122 |
| கல்லதரியங்குநர் | 18 | காமனுருவம் | 79 |
| கல்லுருவொழித | 178 | காமனோர்மதயானை | 172 |
| கவசமந்திரத்து | 141 | காமனையுயிர்த்த | 174 |
| கவரிகளெள்ளின | 41 | காமர்குழல் | 123 |
| கவர்மணிவிளக்கு | 33 | கார்த்தபூம்பொழில் | 116 |
| கவலையுற்றவன் | 116 | காலமுற்றுறதி | 43 |
| கழிகாதல் | 129 | காலமோராறும் | 165 |
| களத்துறப்போர்கள் | 15 | காவலர்கள் | 175 |
| களமலி | 6 | காவிரிக்கரை | 125 |
| களித்தவர்துயின்றோர் | 156 | காளகண்டமல | 93 |
| களிறுபண்ணியும் | 122 | கானனையின் | 160 |
| களிற்றிற்றீர்ந்தவன் | 134 | கான்றதீஞ்சுவை | 29 |
| களைகட்டோறும் | 12 | கி. | |
| கள்ளம்படரும் | 111 | கிழவனிறந்திடல் | 144 |
| கள்ளுமிழ்ந்தலர் | 117 | கு. | |
| கறைகொண்ட | 128 | குங்குமக்குளிர் | 7 |
| கறையடிகெங்கயம் | 168 | குங்குமம்விரவிய | 124 |
| கற்பகஞ்சுரபி | 37 | குட்டந்தொழுநோய் | 52 |





| | | | |
|---|---|---|---|
| குதலைமென்மொழி | 124 | கொய்யுநறு | 123 |
| குமரியினல்லது | 18 | கொழுகொம்பிழந்த | 111 |
| குமுதவாவி | 23 | கொழுநர்கொங்கை | 23 |
| குருகியுமிழ் | 107 | கொழுந்துகொண்டெழு | 39 |
| குருமணிக்கலனும் | 156 | கொள்ளுநர்தமக்கெலாம் | 27 |
| குருமணியிழைத்த | 33 | கொன்னிராவண | 102 |
| குலங்களோரிரண்டும் | 154 | கோ. | |
| குலமிக்குயர்ந்தோர் | 67 | கோடாதபெரு | 179 |
| குவலயத்துச்சிவம் | 186 | கோட்டமிலெமதருள் | 71 |
| குவளைவண்டு | 12 | கோட்டம்வைத்திடு | 60 |
| குறங்கின்மீமிசை | 65 | கோழிவிட்டெறி | 19 |
| குறிகுணங்கரணம் | 106 | ச | |
| குறிஞ்சியை | 9 | சகத்திறுபொருள்கள் | 43 |
| குறுகுறநடந்து | 77 | சங்கரநாத | 55 |
| கூ. | | சஞ்சிதத்தொடு | 13 |
| கூம்புகையவாய் | 39 | சதமாகுதி | 145 |
| கூர்த்தநதி | 9 | சத்தியுஞ்சிவமும் | 156 |
| கூறுமானுடை | 61 | சத்தியோசாதத்தான் | 157 |
| கே. | | சத்தியோசாதத்தின் | 144 |
| கேட்டமெய் | 10 | சத்தியோசாதம் | 153 |
| கேழ்த்தபூங்குழலார் | 14 | சத்தியோசாதர் | 105 |
| கை. | | சத்தியமாய் | 105 |
| கைத்தளிரும் | 123 | சந்தவான்மதி | 92 |
| கைபழக | 21 | சந்தனமலய | 174 |
| கைம்மலையுரித்த | 61 | சந்திரதீர்த்தப்பாங்கர் | 63 |
| கையர்சாலை | 108 | சந்திரனி | 160 |
| கையணி | 33 | சந்திரனெனுமொரு | 175 |
| கையெனக்கில்லை | 131 | சந்துகாரகில் | 69 |
| கொ. | | சம்புகேசுரம் | 49 |
| கொங்குமலி | 45 | சம்புதீர்த்தத்தின் | 62 |
| கொங்குமிர்த்த | 160 | சம்புநாயகன் | 118 |
| கொங்கையன்றிது | 172 | சம்புமாதவனந்தி | 92 |
| கொண்டலாடிய | 3 | சம்புமாதவன்பராசரன் | 117 |
| கொண்டல்படிந்திடும் | 158 | சம்புமாமுனியாற்று | 70 |
| கொண்டல்வாய்திறந்து | 40 | சம்புமாமுனிவன் | 71 |
| கொண்டனீர்முகந்து | 54 | சம்புமுனி | 72 |
| கொம்பரிலா | 73 | சம்புமூலத்தின் | 126 |
| கொம்பனொ | 123 | சம்புவினீழல் | 164 |
| கொம்பரேமலர் | 13 | சம்புவின்மூலம் | 67 |

சப்புரோக்கணகபனம் 141
சரியையாற்றுநர் 29
சருமன்வருமன் 145

சா.

சாதகன்ம 138
சாப்பறை 17
சாம்பல்புரிநெய் 146
சாலுங்கூத்தினி 71
சாலுமெய்யன்பின் 113
சாற்றுமளவில் 83
சாற்றுவந்தனை 151
சான்றவர் 6

சி.

சித்திரக்கோயில் 164
சித்தெல்லாமுடைய 185
சிமையமால்வரைத்தையல் 8
சிமையமால்வரையென 92
சிம்புளாயெனையடும் 41
சிலம்பிசிறு 131
சிலம்பியாக்கை 134
சிலம்புகிண்கிணி 82
சிலம்புசிறுகிண்கிணி 45
சிலையுயிர்த்தவன் 93
சிலைமரமென்னவே 168
சிவங்கியில் 90
சிவபுரத்தண்மை 84
சிறப்பப்புவி 46
சிறந்தபொன்னி 120
சிறந்தமன்னவ 107
சிறுகுகாருடல் 59
சிறுபுறத்தின் 123
சிறுமையாளரில் 11
சிறுவிதிபுரிந்த 177
சிறைபடுபூவை 80
சிற்பநூல்விதி 104
சின்னுளிக்கெமை 74
சின்னுளில் 161
சின்னுள்சழிய 181

சீ.

சீமத்தீர்த்தத்தின் 62
சீரங்ககமென 118
சீரியவப்பெரும் 58
சீவன்முத்தியே 96

சு.

சுடரும்வெண்ணீற்றெரு 47
சுடர்விடுமவையகம் 26
சுண்ணமுகறுமலர் 124
சுந்தரமிகுந்த 109
சுரந்துசூழ்மேகம் 54
சுரர்க்குமாற்றலன் 102
சுரும்புகிள்ளைகள் 70
சுருள்படும் 8
சுவையதாய்விமலன் 62
சுவையாது 158

சூ.

சூதுபொய் 25
சூத்திரர்க்கு 150
சூலியுண்மகிழ்பெற 10
சூழ்ச்சியின்மிகுந்தவர் 162

செ.

செங்கட்சோழரு 183
செஞ்சுடரோன் 129
செந்தழலாகுதி 112
செந்தாதுகுக்கு 101
செம்பொன்மணித்தேர் 97
செம்பொன்னு 128
செயலைமாவிருன் 171
செய்யகோனுடை 160
செய்யதளிரின் 113
செய்யதாமரை 80
செய்யித்தை 103
செருத்தலான்பல 29
செழுநீர்த்திரளே 133
செழுந்தண்மாமணி 24
சென்னிவேரெரு 29

சே.

சேணருமணி 129
சேமவீட்டில் 12





சேயிடைப்பொருள் 27

சோ.

சோதிமல்கிய 66
சோர்விலொன்பது 60

ஞா.

ஞானகேத்திரத்திருந்தருள் 125
ஞானகேத்திரமான 133
ஞானகேத்திரமானைக்கா 134
ஞானகேத்திரமென்று 44
ஞானதலத்தினமுதலிங்கத்தை 67
ஞானபூமியின் 54
ஞானபூமியை 127
ஞானமிக்களிக்கும் 65
ஞானமுநினக்காங்கு 74

த.

தகரவார்குழல் 59
தகுமீரெண்கிரியை 141
தக்கபவமுறுங்காலம் 159
தக்கனுர்பெறுந்தையல் 57
தங்கணுயகன் 6
தங்கனுக்கிறைவனீன்ற 33
தங்குபன்மலர் 81
தஞ்சமறை 109
தடநெடுமதிலை 185
தணிவிலாத 55
தண்டமேந்திய 102
தண்டமொரு 151
தண்டரளப்புனல் 73
தண்ணங்கமலத்தயன் 74
தண்ணுர்மதி 21
தண்ணியதாகி 185
தத்துதிரை 55
தந்தையேவலில் 102
தமனியத்தகடு 30
தமியர்வாண்முக 171
தம்பிரானதுகூற 44
தம்பிரானுருவம் 33
தம்மைப்பொன்மலர் 13
தம்மைவணக்கும் 120
தயங்குபேரொளி 170
தயிலமாமலகம் 85
தரங்கவார்நதி 116
தரங்கவார்புனல் 125
தருகவிழியினை 106
தருக்கமல 135
தருக்கியிருவரும் 166
தருமமாதி 144
தருமமுந்தவமும் 165
தருமந்திசழும் 135
தருமவிடையும் 99
தருமனுயினும் 27
தருமுதற்பேதம் 63
தருவுருவாக 78
தரையவர் 10
தலத்தினுயர் 49
தவத்தால்வருந்த 183
தவத்துயர்வலிமை 38
தவந்தானவிரதம் 49
தவமலியோகருள் 167
தவமாதிபுரிகுநர்க்கு 49
தவளவிரசிதம் 90
தவறதாகலால் 58
தழங்கியகிண்கிணி 41
தழலையல்லது 116
தளவவாணகை 59
தளிர்துழாய்புளி 59
தள்ளுமசற்சூத்திரனை 139
தனதுசேனையை 173
தன்குடித்தமனுகிய 180
தன்னிகர்வசிட்டமேலோன் 110
தன்னுப்மறுகி 111
தன்னுருவந்தோற்றுமல் 158

தா.

தாங்களேயருள் 29
தாக்கியபெரும்புகழ் 103
தாய்முகநோக்கி 111
தாரணியின்கடை 85
தாவிலருந்தவத்து 55

தாழ்ந்தபழிச்ச 183

தி.

திகழுநஞ்சந்திஇக்கு 56
திசழ்தருதசமி 146
திங்கட்கடவுள் 100
திங்களென 51
திங்கள்சூடிய 73
திங்கள்சூடினர் 117
திங்கள்பயிர் 141
திங்கள்வெண்கதிர் 14
திண்ணமாகிய 180
திப்பியமாகிய 89
திரண்மணி 23
திருமறுமார்பத்தண்ணல் 115
திருமாலைப்பதிட்டை 90
திருமால்பிரமன் 183
திருமாறனது 98
திருவுருநோக்கினர் 162
திருவிளங்கிய 35
திருவின்மாதராள் 118
திரைக்கும்புனல் 83
திரைசெயுக்காவிரி 103
திரைதவழ்பொன்னி 164
திலதானம்புரிந்தவர் 89
திறைகொடாது 159
தினந்தொறு 112

தீ.

தீக்கையிலை 137
தீக்கையில்லார்க்கு 10
தீங்கரும்பும் 37
தீங்கனிகாய் 128
தீங்குசெய்மினைவி 178
தீம்பாளிதத்தின் 147
தீம்புனல்குடைந்து 177
தீயவினைகள் 66
தீர்த்தத்தெழில் 53
தீர்த்தமாடினன் 58
தீர்த்தமுடி 21

து.

துங்கஞ்சேர் 139
துணிநீர்ப்பாங்கர் 100
துலக்கமுறும் 138
துறவினர் 9
துய்வாதவமிழ்தனை 123
துறவர்களின்னணம் 103
துன்புறினல்லது 18

தூ.

தூங்குவீக்கிரு 24
தூயநீர் 159
தூயமறை 4
தூயவுபயன 137
தூலதேகம் 115

தெ.

தெண்ணீருள் 16
தெளிக்குந்திருநீரே 184
தெள்ளடியாரிலும் 41
தெள்ளித்தெளிந்து 16

தே.

தேங்குநறும் 51
தேங்குபேரொளி 94
தேசத்துள்ளவர் 122
தேசார்மணி 53
தேயுநீர்வினை 173
தேவதேவதிகம்பர 180
தேவதேவனை 152
தேவருக்காசாவுண்டு 8
தேவரும்விழைய 38
தேவர்கடமக்கொராம் 56
தேவர்கள்விழைவதாகி 63
தேவருடம் 181
தேனூர்பலர 120
தேனைக்காதலித்து 134

தொ.

தொல்வினை 187
தொகையாநாவலூராளி 3
தொடர்சிர்மாமன் 147
தொலைக்குயன்புடைய 78
தொலைத்தநின்பெரும் 95





தொண்டகந்துடி 85
தொண்டையங்கனிவாய் 82

தோ.

தோழனின்னணம் 181

ந.

நகுகதிர்ப்பிழம்பு 32
நங்கைசங்கர 60
நங்கைபாகற்கு 103
நஞ்சேந்தி 76
நடக்கலுற்றமை 12
நடனம்புரியும் 67
நடுநிலைபிழையார் 26
நடைமாமலை 22
நதிக்கோட்டம் 135
நந்தியின்னணம் 74
நமதுவாயின 70
நம்பனுரடிப்பூசை 29
நம்பிரானினிது 33
நரகவெந்துயர் 116
நல்லஞானம் 36
நல்லவர்க்கிடரே 174
நல்வினைபுரிவோர் 15
நவதீர்த்தமும் 114
நவமணிதீர்த்தம 58
நவின்றவருண்மொழி 74
நறக்கிளர் 5
நறுங்கனிதூங்கு 131
நறுமலர்ப்புனல் 57
நன்முகுர்த்தம் 159
நன்றுநன்றென 57
நன்னிழற்பரப்புற 90

நா.

நாடொருக்கடகரி 132
நாரணர்நான்முகர் 42
நாரணர்பிரமர் 20
நாரணன்முதலோர் 30
நாலிருவயது 155
நால்வகைப்பெரு 25
நாள்வரையறையே 14

நாறுமென்பனிநீர் 85

நி.

நிசளாபுரி 120
நிச்சமுமென்றாழ் 121
நிச்சலுங்காலம் 87
நிதியின்மன்னவநீ 180
நித்தியகைமித்திகமே 141
நிரஞ்சனப்பொருளாய் 81
நிரம்புகல்வி 52
நிருதிதன்பூத 113
நிலம்போற்றும் 1
நிலைபெறப்பல 184
நிறைமலர்ச்சம்பு 85
நினக்குநேரிலை 57
நின்மலன்சால 62
நின்மலர்மணி 125
நின்றழுகின்றே 149
நின்னடித்தரிசன 118
நின்னையன்றி 53

நீ.

நீக்கமில்லாமல் 86
நீங்கரிதாம் 56
நீங்கரும்வளத்தில் 25
நீடியபரையாய் 83
நீடுமத்தட 58
நீட்டிவார் 128
நீட்டுசிறு 131
நீருருவமாகி 21
நீலமேகநிமிர்ந்து 31
நீலவிண்டு 108
நீறுதரித்து 69
நீறுமெய்யினி 54
நீற்றின்வெள்ளொளி 40

நு.

நுழையிழைத்துகிலால் 87
நுன்குலம்விழுப்பமெய்த 110

நெ.

நெகிழன்புருக்க 97
நெகிழ்ச்சிமிக்குடை 34

நெஞ்செலாமழிதர 112
நெடியவன்வழிபடு 119
நெடும்புழைக்கை 131
நெருநனூற்றிரளின் 131
நெருப்பவிர்ந்தன 6
நெறியிடை 77

நொ.

நொதுமல்காட்டின 170
நொறில்வெள்விடையின் 111

ப.

பகர்ந்தபாத்தியம் 87
பகுத்தநானிலம் 18
பகைமைமீக்கொளும் 28
பக்குவமே 49
பங்கயனின்னணம் 91
பஞ்சுநொடித்து 48
படிநெளியும் 162
படியில்வேறுபற்று 36
படைத்தலும் 94
பட்டமாடுவார் 23
பணியாதிடினும் 183
பண்டறியாத 69
பண்டுவெண்ணீறு 21
பண்டைவல் 128
பண்டையவூழ்வினை 167
பண்ணவர்க்கரியாய் 42
பண்ணவர்சூழும் 67
பண்ணையாட்டயர்பாவைநல்லார் 13
பண்ணையாட்டயர்பாவைமார் 23
பதிவிரதையரு 177
பதினேழென 98
பதுமைநன்கியற்றிடும் 118
பத்தாமிடம் 146
பத்தியினால் 49
பத்தினில் விசுவதேவர் 157
பந்தமகற்றுங் 181
பயந்தருஞானமாபதி 47
பயிலியவுலகம் 83
பயிலுபநயனம் 153
பயில்வானவர்கள் 99
பரத்துத்தரிக்கும் 11
பரந்தவுலகம் 43
பரந்துநிறைந்த 16
பரவிவிண்ணவர் 58
பராவிப்பணியாது 88
பரிதிமுன்னிருள் 95
பரிதியினீர்த்தப்பாங்கர் 63
பரிதிவானவன் 72
பரிந்தபின்னிரக்க 187
பருமக்கலனை 22
பருவநோக்கி 12
பலர்வியப்புறும் 22
பல்லவங்கை 70
பல்வகை 5
பவதிமொழி 152
பவளச்சடிலத்திளம்பிறை 11
பளிக்குக்குன்றமும் 22
பறந்தலை 161
பற்றுபருவம் 11

பா.

பாங்கர்நின்ற 83
பாசவறிவும் 175
பாடகப்பசும்பொன் 32
பாடியம்புனை 23
பாயிரும்புவியிடை 71
பாயிருள்பருகுபு 58
பாலனுக்காக 112
பாலையேகொள்ளும் 121
பாவகாரியர் 169
பாவநோய்முதல் 61
பாவமும் 47
பாவிக்கப்படுவானும் 105
பாழிவையகத்து 60
பாளையுட்பொதிந்து 80

பி.

பிணர்படுவடிவின் 82
பித்துமிகுந்த 67
பிரசம்வார்கலை 171


137




பிரணவஞ்செங்கனல் 150
பிரமசாயை 55
பிரமசிரமந்திரத்து 147
பிரமதீர்த்தத்தின் 60
பிரமமேபிரசாபத்தியம் 155
பிரமலிங்கத்திற் 178
பிரமனைமாயன் 112
பிரமன்மாதவங்கள் 86
பிரமாங்கமந்திரத்தால் 152
பிரமீசவெனும் 179
பிரிவுறுதவெம் 95
பிரிவில்சண்டாளி 142
பிழைதீர்க்கும் 186
பிறந்ததம் 8
பிறந்தவுடனல்லறனின் 145
பிறவியெனும் 161
பிறவியொப்பினும் 36
பிறன்மனைவிழைவுற்ற 56
பின்னரிந்நூல் 136

பு.

புடவிநாயகி 6
புடைபெயர்ந்திடும் 94
புணருமிடனும் 98
புண்ணியாவாசனத்து 142
புதியவத்திரங்கள் 144
புந்திவாக்குரு 93
புரந்தரனும் 47
புரிசையாதி 97
புரிந்தபுண்ணியா 140
புரிந்தவன்பரை 171
புருடமனுவால் 145
புரையகற்றும் 138
புரையறுசிற்பநூல் 163
புலந்துநிற்கும் 32
புலனுகராப்பொறி 73
புல்லியமெல் 130
புழுக்கணெளிய 64
புவனபோகம் 11
புறவினறலர் 19
புறவுகோட்டம் 16
புற்புதமெழுந்தால் 164
புன்னைகூவிளம் 69

பூ.

பூசைசெய்து 140
பூசைமுற்றுற 116
பூணிருதுசங்கமணம் 136
பூதகணம்புடைசூழ 88
பூதமுநிருதியும் 113
பூதலமருங்கு 109
பூதேச 76
பூத்தவள்வதுவை 155
பூத்துநீராடி 143
பூந்துகள்விரவி 121
பூமடந்தைமார்பிலிட்ட 32
பூமேவுபசும்பொழில் 20
பூவிருநறுந்தொடை 46
பூவினுட்கமலமும் 5
பூவையுங்கிளியும் 77

பெ.

பெண்ணணிநாயகி 40
பெண்ணுமை 15
பெண்ணுருவெடுத்து 82
பெயருறுத்தியபின் 146
பெரியராற்பெறும் 169
பெருகியவன்பு 33
பெருகுமத்தடம் 61
பெருகுமன்புடன் 72
பெருஞ்செல்வராயிடினும் 17
பெருந்தவமுனிவரன் 174
பெருந்தவன்காமநோய் 169
பெருமானே 89

பே.

பேணுங்கழை 120
பேரூருடற்றும் 182
பேதமாகிய 95
பேதைமையே 73
பேதையாருழை 23

பை.

| | |
|---|---|
| பைத்தபாம்பணை | 130 |
| பையவந்து | 13 |
| **பொ.** | |
| பொங்கெழிற்றிருவிழா | 91 |
| பொத்தனுக்கு | 44 |
| பொய்யினையறுக்கு | 188 |
| பொருநுதன்னிலை | 24 |
| பொருதெறுழ்வலி | 112 |
| பொருந்தவபாகம் | 146 |
| பொருந்துபுண்ணியா | 110 |
| பொருப்புக்கொப்புற | 184 |
| பொருள்விழைந்தணங்கை | 155 |
| பொழிந்துதண்டலம் | 140 |
| பொழியுங்கிரண | 84 |
| பொறிவண்டுழக்க | 97 |
| பொறிவழி | 10 |
| பொறுமையன் | 10 |
| பொற்பமர்பொன்னம் | 82 |
| பொன்பூத்த | 1 |
| பொன்பூத்து | 76 |
| பொன்னங்கடுக்கை | 2 |
| பொன்னணி | 2 |
| பொன்னுலகாள்பவன் | 167 |
| **போ.** | |
| போகபூமியும் | 24 |
| போகமேநுகராநிற்கும் | 15 |
| **ம.** | |
| மகட்பயந்தவனை | 155 |
| மக்கட்பவத்தின் | 115 |
| மங்கலச்சிறப்பு | 32 |
| மங்கலந்தவன்றி | 86 |
| மங்கலமருளும் | 105 |
| மடங்கல்வாரணம் | 35 |
| மடமாதிடமா | 133 |
| மட்டலர்கோதை | 8 |
| மணந்துளாருயிர் | 169 |
| மணிபூத்த | 1 |
| மணிமல்கிய | 46 |
| மண்டபப்பிராகாரங்கள் | 164 |
| மண்டபமேடை | 85 |
| மண்டிலை | 132 |
| மண்டுபெரும் | 48 |
| மண்டுமுப்பநா | 60 |
| மண்ணையந்ததன் | 35 |
| மண்ணுறுய்மண்ணி | 43 |
| மண்ணிடைச்சிலம்பி | 133 |
| மண்ணிடையிழிந்து | 77 |
| மண்ணிடைவரிசை | 184 |
| மண்ணிடைவருதற்கு | 148 |
| மண்ணிடைவிழு | 131 |
| மண்ணிலரசன் | 11 |
| மண்ணிலேபல | 28 |
| மண்ணுலகம் | 161 |
| மண்ணைப்பிரமக்கொலை | 52 |
| மண்விராய்புனல் | 170 |
| மதிமுடித்தருள் | 36 |
| மதிலினைச்சூழ்வா | 185 |
| மதிவளம்படைத்த | 1 |
| மதுவார | 20 |
| மதுசெய்நறும்பால் | 147 |
| மதுமலர்ப்பொழில் | 127 |
| மதுவிதழின் | 123 |
| மந்தணமாய் | 44 |
| மந்திரமாகுமால் | 47 |
| மந்திரமாதிதம்மால் | 63 |
| மந்திரவச்சிட்டன் | 109 |
| மந்திரவாசம் | 156 |
| மயாறவொருவர் | 8 |
| மயிசெறிகருவி | 80 |
| மரகதமணிக்கிரு | 26 |
| மரபுளிச்சவுளம் | 148 |
| மருத்தகற்பக | 55 |
| மருத்தகுநாவல் | 86 |
| மருத்துவருத்திரர் | 45 |
| மருந்துதரு | 135 |
| மருமலரொன்று | 67 |
| மருமலிகின்ற | 177 |
| மருவியதொழும்பின் | 86 |





| | |
|---|---|
| மருவியவந்தரானர்க்கு | 156 |
| மருளினுன்முதல் | 95 |
| மலடெனக்கொழி | 18 |
| மலர்க்கணத்தால் | 123 |
| மலர்தொறும்வண்டு | 124 |
| மலர்பலகொண்டெமை | 58 |
| மலையடுத்த | 16 |
| மலையவெற்பிடையே | 78 |
| மல்குந்தவத்து | 114 |
| மல்குவைகறை | 142 |
| மழலையின்னமு | 3 |
| மழலைவண்டிமிரும் | 80 |
| மழுங்கியதிந்து | 175 |
| மழைமுகிலடுப்ப | 54 |
| மறநவிலும் | 21 |
| மறந்திகழ்வேல் | 46 |
| மறப்பெருஞ்சேனை | 15 |
| மறியுடம்புதைவந்து | 35 |
| மறுவறுதிருவோணம் | 149 |
| மறுவறுமோமம் | 157 |
| மறைகளின்முடிக்கும் | 47 |
| மறைகுத்திரமே | 100 |
| மறைமுடிதனக்கு | 177 |
| மறையவன்றேற்ற | 110 |
| மறையவர்மூன்றுவர்க்குந்தீக்கை | 137 |
| மறையவர்மூன்றுவர்க்குமுரிய | 138 |
| மறையிவெறுழக்கம் | 64 |
| மறையின்வார்புனல் | 117 |
| மறையாகமத்தால் | 83 |
| மறையோர்கொலை | 52 |
| மனைக்குரியாள் | 157 |
| மனையவளின்றியே | 169 |
| மன்மகிழ்சிறப்புடை | 84 |
| மன்றல்கமழும் | 45 |
| மன்றவடியார் | 99 |
| மன்றவடியேன் | 114 |
| மன்றினடிக்கும் | 99 |
| மன்னர்மன்னரும் | 125 |
| மன்னவர்திறை | 136 |
| மன்னவரும்பணிகேட்ப | 186 |
| மன்னவற்கு | 136 |
| **மா.** | |
| மாகாயவாசுகி | 105 |
| மாசறுபுண்ணியா | 143 |
| மாதராலளிக்கப்படும் | 14 |
| மாதர்பாலமர் | 172 |
| மாதவங்களத்தகு | 89 |
| மாதனமெய்து | 37 |
| மாதாவயிற்றில் | 147 |
| மாதிரத்தென் | 51 |
| மாதிரக்களிற்றின் | 84 |
| மாதொடுமடிகள் | 42 |
| மாநிலம்விளக்கும் | 79 |
| மாந்தளிர்மருட்டும் | 81 |
| மாயவனெமதருள் | 58 |
| மாயனுதிப்பல் | 115 |
| மாயிரும்புவி | 65 |
| மாயைகாரியம் | 94 |
| மாயைசுத்தமே | 93 |
| மாயையாலிறந்திடு | 102 |
| மாயையின்வேறுவேறு | 9 |
| மாயையெனும் | 160 |
| மாரவேண்மலர்க்கணை | 167 |
| மாரவேண்முதற்கணை | 158 |
| மாரனுந்தனதுகை | 172 |
| மாலொடுபொருதனொன்று | 178 |
| மாலைகால்யாத்த | 79 |
| மாருதபெருஞ்சாப | 166 |
| மானேகுயிலே | 83 |
| மான்மதமீந்த | 68 |
| **மி.** | |
| மிக்கொளிதிகழங்கி | 57 |
| **மீ.** | |
| மீளாவடிமை | 181 |
| மீனம்பாய்ந்தெழு | 19 |
| **மு.** | |
| முகிலுறழ்கருங்குழல் | 167 |
| முடங்கலேற்று | 97 |

| | |
|---|---|
| முடியில்வான்செழும் | 24 |
| முஞ்சியெனும் | 151 |
| முதல்கெடாவகை | 28 |
| முந்திடத்தெய்தி | 163 |
| முந்திடவெழிற்பந்தர் | 26 |
| முந்தியபவர்தொழு | 161 |
| முந்தியபூப்பே | 142 |
| முந்துபகை | 21 |
| முந்துமந்தணர் | 59 |
| முப்புரம்பொடித்தமேருமுரிவார்சிலை | 54 |
| முப்புரம்பொடித்தமேருமூரிவெஞ்சி | 112 |
| மும்மதிவரைப்பில் | 146 |
| மும்மலர்தாட்பட | 90 |
| மும்மலம் | 2 |
| மும்மைப்பொருட்டும் | 3 |
| முரசம்விண்முகில் | 33 |
| முருகுசொந்தம் | 69 |
| முருகுவிரிவெண்டிரவன் | 186 |
| முருந்திளஞ்சாயல் | 80 |
| முல்லைமிகர் | 51 |
| முழுத்தபொன்பில் | 81 |
| முள்ளரைப்பசந்தாள் | 21 |
| முற்றுமோர்முறை | 181 |
| முன்செய்த | 128 |
| முன்னர்மண்டப | 59 |
| முன்னைத்தவத்தான் | 64 |
| முன்னவாருணிஞன் | 163 |
| **மூ.** | |
| மூரன்மூர்தெரடு | 7 |
| மூர்க்கருயப்பிறந்த | 49 |
| மூர்த்திமேன்மை | 117 |
| மூவருக்கும் | 139 |
| மூவருமுலகம் | 11 |
| மூவரையடக்கி | 81 |
| மூவர்தாடொழு | 29 |
| மூவாமுதல்வன் | 100 |
| மூவுலகு | 4 |
| மூன்றிரட்டிய | 30 |
| மூன்றுதலைப்பெய் | 99 |
| மூன்றுதினைத்தும் | 145 |
| **மெ.** | |
| மெத்தியகாரிருள் | 174 |
| மெய்விதிர்ப்புற | 127 |
| **மே.** | |
| மேகமண்டலம் | 39 |
| மேக்கெழுந்த | 70 |
| மேதகுசிவத்து | 153 |
| மேதகுதீர்த்தம் | 33 |
| மேதகுநயிட்டிக | 153 |
| மேதகைய | 49 |
| மேலணவகப்பொருள் | 26 |
| மேவியகொண்டல் | 162 |
| மேனிலத்தின் | 31 |
| **மை.** | |
| மைக்கண்மாதரார் | 23 |
| மைந்தரிழந்து | 64 |
| **மொ.** | |
| மொழிதருமறையோர் | 149 |
| மொழிதருமுபாக | 154 |
| மொழிந்தசண்டன் | 100 |
| மொழிந்ததென் | 164 |
| மொழியுமாமொழி | 36 |
| **மோ.** | |
| மோனமுறு | 100 |
| **யா.** | |
| யாரிவனென்று | 168 |
| யாரொருவன் | 106 |
| யாவரும்பழிக்கம் | 8 |
| **வ.** | |
| வகுத்தாம் | 147 |
| வடமாதிரத்து | 182 |
| வடவைக்கனலும் | 22 |
| வணக்கரில்லார்க்கெளாம் | 14 |
| வண்டாடிய | 22 |
| வண்மொழியும் | 13 |
| வண்டுவரிபாட | 45 |
| வத்திரதானம் | 89 |
| வந்தெதிர்பணியும் | 82 |





| | |
|---|---|
| வம்புவிரியும் | 97 |
| வயங்குகிள்ளை | 32 |
| வயங்குமணி | 46 |
| வயங்குமாதேவன் | 146 |
| வயமடுசொரதர் | 41 |
| வரநிலாவிய | 53 |
| வரந்தருமெம்மொடும் | 51 |
| வரமலிதேவர் | 63 |
| வரமலியுமன்னது | 46 |
| வரன்மலி | 17 |
| வரிந்தசாதகத்தான் | 154 |
| வரியளிமுரல | 54 |
| வருடைகொல்லையின் | 18 |
| வருடைசாமரை | 127 |
| வருணநிலை | 138 |
| வருத்தம்பலகால் | 11 |
| வருந்துமெல்லடி | 12 |
| வரையால்வேலை | 66 |
| வரையினுக்கரையன் | 68 |
| வரையென | 26 |
| வரைவளம் | 26 |
| வலநிலாவிய | 7 |
| வலம்புரிகின்றோர் | 185 |
| வலனைமாட்டினேன் | 6 |
| வலைவரம்பதிந்த | 81 |
| வல்விசன்பாகனார் | 18 |
| வல்லைவென்றெளிரும் | 65 |
| வழிநடையினேரிரவு | 48 |
| வழிகாளடுத்த | 97 |
| வழுக்கிக்கரை | 53 |
| வழுவிலாதமெய் | 127 |
| வழுவுறு | 10 |
| வளங்கொள்வெண் | 31 |
| வளருத்தாபனம் | 160 |
| வளர்தீந்தமிழ்முனிவன் | 46 |
| வளர்ந்துவண்டு | 69 |
| வறுமையகற்று | 52 |
| வன்மையுறு | 17 |
| வன்றிவலம் | 48 |
| **வா.** | |
| வாதனை | 19 |
| வாய்மையடுத்த | 16 |
| வாரணத்திரளும் | 30 |
| வாரணத்தழுனி | 175 |
| வாரணிமுரசு | 76 |
| வாரற்கவென | 42 |
| வார்ந்தகைநுதி | 132 |
| வார்ந்ததண்கரை | 61 |
| வாரொளி | 14 |
| வாளவுணர் | 106 |
| வானநாடரும் | 166 |
| வானநாட்டவர்க்கு | 174 |
| வானவர்க்கிடையூறு | 115 |
| வானளவு | 129 |
| வானெழுகியவொளி | 124 |
| வான்மருந்திலக்குமி | 173 |
| **வி** | |
| விஞ்சுபுயன்மொழியும் | 27 |
| விஞ்சுமீசான | 154 |
| விடங்கனிந்த | 173 |
| விடிந்தபினமைச்சரை | 163 |
| விடியலடுப்ப | 176 |
| விடுத்தமந்திரம் | 35 |
| விடைதந்தருளும் | 181 |
| விடையவன்றிருமுன் | 76 |
| விடைமிதானம் | 150 |
| விண்ணர்தாமம் | 31 |
| விண்ணவர் | 8 |
| விண்ணாடர் | 2 |
| விண்ணாடு | 88 |
| விண்ணோர்புருகூதன் | 42 |
| விமலரையாயிடை | 163 |
| வியப்பொடுபெட்டத்து | 43 |
| வியவரும்வினைஞரை | 162 |
| விரவுமாயையெம் | 94 |
| விரிந்தபூதலம் | 116 |
| விரியும்வித்தை | 104 |
| விரும்பித்தேனுகர் | 12 |

விரைசெறி 110
விரைத்தபொன்மலர் 92
விரோதமொர்குறும் 77
விலகிவில்லுமிழ்மணிகளும் 40
விலகிவில்லுமிழ்மணிவீற்று 41
விலக்கற்கரசன் 99
விலக்கற்கரியன்பெறு 88
விலக்கற்கரியனென்று 176
விலக்குறாக்கை 150
விழாமுதற்சிறப்பின் 118
விழாவகத்தில் 151
விழுமியமுக்கண் 87
விழுமியவமுதவிக்கர் 188
விழுமியகுருத்தன் 168
விழைதகுகணவன் 86
விழைந்தவன்பிறை 60
விழைந்திரந்த 14
விளங்கழலை 153
விளக்குவேத 36
விளைத்துவந்தன 27
விளையாடிப்பருவத்தை 161
விற்பயில் 5
வினைபுரிந்து 148
வினைஞரைக்கடவி 164
வினையிரிந்தெய 70
வினையொகுடன்றொடர் 103

வீ.

வீங்குகண்புனல் 171
வீங்குநீர்க்கலை 70
வீதிகட்கழகு 30

வெ.

வெச்சென்ற 73

வெண்ணாவல்
வெண்ணெயிறப்ப
வெம்புலின்றவல்
வெம்புசாபமுன்
வெய்தருள்கழங்கும்
வெருவருதோற்றம்
வெலற்கரும்பகை
வெல்லசுறவெய்
வெல்லமர்விழைந்த
வெள்ளநீர்ச்சடை
வெள்ளிமால்வரை
வெறியகானம்
வெறுக்கைகல்வி
வெறுப்பறுதாயின்
வெற்றிவேலரசன்
வெற்றிவேற்குமர

வே.

வேட்டவவ்வுளத்திளை
வேதாவினர்
வேதமுடியும்
வேதவேதியும்
வேத்தெருழு
வேழமென்கரும்பு
வேள்விமுற்றிய
வேள்விபயுத்திரம்
வேறுருவத்தோன்றுது
வேறுவேறின்வாறு
வேற்றெருமால்

வை.

வைகறையொழுங்கு
வைகிசந்திரமாதமெய்
வையகத்தர்